ஸ்ரீ ராமஜெயம்.

# இராஜேந்திர சுந்தரி

அல்லது

## தியாகச் செல்வனின் தீரச் செயல்.

ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியாரவர்கள்

எழுதியது

சரஸ்வதி புத்தகசாலை

ஜிந்துப்பிட்டித் தெரு,

கொழும்பு.

1934.

காபிரைட். [ விலை ரூபாய். 1-50

ஸ்டான்லி பிரஸ் கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி சனசமூக நிலையம் * பாண்டிருப்பு - 01, கல்முனை *
பொது நூலகம்
பதிவு இல: 46
02-10-1948
570

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியாரவர்கள்.

மூலக்கரைப்பட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமஜெயம்.

# இராஜேந்திர சுந்தரி

அல்லது,

## தியாகச் செல்வனின் தீரச் செயல்.


ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியாரவர்கள்

எழுதியது.



சரஸ்வதி புத்தகசாலை

ஜிந்துப்பிட்டித் தெரு,

கொழும்பு.

1934.


காபிரைட்.]

[விலை ரூபாய் 1.50

30/-

ஸ்டான்லி பிரஸ் கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜேந்திர சுந்தரி

அல்லது

# தியாகச் செல்வனின் தீரச் செயல்.

பொது நூலகம் பதிவு இல: AH CC 46 02-10-1948 570

## அத்தியாயம்—1.

### விவாஹ மனஸ்தாபங்கள்.

"நாதா! நான் எவ்வளவு கூறினாலும் சுந்தரி கேட்பதாயில்லை. அவள் 'தனபாலனுக்கு மனைவியாக வாழ்வதைப் பார்க்கிலும் தற்கொலை புரிந்துகொள்வது மேல்' என்று ஒரே பிடிவாதமாயிருக்கிருள். நாதா! நமக்கு குழந்தை இல்லையென்று வெகு வருத்தத்துடன் ஈசனிடம் மன்ருடிக் கேட்டுக்கொண்டதற்கு அத்தயாள நிதி ஓர் ஆண் மகனைக் கொடுத்தார். நமது துர்ப்பாக்கியம் அவன் கொள்ளைத் தொழிலிலும் கொலைத் தொழிலிலும் ஈடுபட்டு நம்மையும், விட்டுப் பிரிந்திருக்கிருன். இதுவும் ஈசன் செயல். என் செய்வது! அதனால் ஏற்பட்டுள்ள தாங்கவியலாத துக்கத்தை நீக்க சாக்ஷாத் எம்பெருமான் ஓர் அழகு சுந்தரியை நமக்குஅன்புடனளித்தார். நாமும் முன்கொண்ட துக்கத்தையகற்றி நம் சுந்தரியை நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்தோம். அவள் நல்ல கல்வி யறிவுடையவளாகவும், நல்லொழுக்கமுடையவளாகவும், மேன்மையான குணங்களையுடையவளாகவும் திகழ்ந்து நம்மை ஆனந்தக் கடலில் ஆழ்த்திவருகிருள். நாம் இன்றே நாளையோ கடவுளின் பாதார விந்தத்தையடையப் போகிறோம். இந்நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையில் நாம் உயிருடன் இருக்கும்போதே நமது சுந்தரிக்கு மணம் முடித்துவைத்து, அன்னவள் வைபவத்தையும், அவள் தனது கணவருடன் நடத்தும் இல்லற தருமத்தையும் நாம் கண்ணுரக் கண்டானந்திக்க வேண்டுமென்றே? தாங்கள் 'யாருக்கு வந்த விருந்தோ' என வாளா விருக்கிறீர்கள். நான் குறிப்பிடும் மணுளனுகிய தனபாலன் யோக்கியன். அவனிடம் ஏராளமான செல்வமிருக்கிறது. அவனை சகலரும் போற்றுகின்றனர். நாம் நமது குழந்தையை அவனுக்கு மணம் செய்வித்தால் நமது மகள் யாதொரு கஷ்டமுமின்றி வாழ்வாள். ஆனல் ஏது காரணத்தாலோ அவள் தனபாலனை வெறுக்கிருள். இதற்கென் செய்வது!" என்று பத்மாவதி தனது கணவரிடம் கூறினுள்.

இராமநாதர்:- "பத்மா! நான் என்செய்வது. இருதலைக் கொள்ளி எறும்பு போலானேன்! சுந்தரி சிறு பிள்ளையென்றுலும் அவளுக்கு சகலருடைய குணங்களும் நடத்தையும் தெரியும். தனபாலன் எத்தகையவன் என்பதை நம் அருங் குணபூஷணியாகிய சுந்தரி நன்கறிவாள். அவன் எத்தனை முறை சிறைக்கூடத்திற்கு சென்றிருக்கிருன் என்பதையும், எத்தனை உத்தம—பதிவிரதா பெண்களைக் கற்பழித்திருக்கிருனென்பதையும், எவ்வளவு பேர்களை கொலைபுரிந்திருக்கிருனென்பதையும் அறிந்திருக்கிருள். நீயோ "அவனுக்குத் தான் சுந்தரியை கொடுப்பேன்" என்று விடாப்பிடியாக பிடிக்கிருய். உன் கூற்றை நான் ஆக்ஷேபித்தால் உடனே ஒப்பாரிவைத்த வண்ணமாயிருக்கிருய். நீ பிடித்த முயலுக்கு மூன்றேகால் எனச் சாதிக்கும் உன்னிடம் நான் என்ன சொல்லியும் பிரயோஜனப்படமாட்டாது. ஆனல், தனபாலனுக்கு சுந்தரியை மணஞ்செய்விக்க எனக்கு எள்ளளவும் பிரியமில்லை. அவனுக்கு மணம் செய்வித்து கொல்லாமல் கொல்வதைப் பார்க்கிலும் நமது அழகு சுந்தரியை கொலைசெய்தாலும் நன்மையுண்டாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மா:- நாதா! ஏழைசொல் அம்பலமேறுதல்லவா? நான் எவ்வளவு கூறினும் தங்களுக்கு என்மீது நம்பிக்கை தினையளவேனுமில்லை யென்பது நன்ருய் விளங்குகிறது. ஒரே புத்திரியாகிய எனது சுந்தரியை நான் படுகுழியில் வீழ்த்த முற்படுவேனு என்பதை தாங்கள் சற்று சிந்தனை செய்து பார்த்தால் கௌரவமாய் இருக்கும். தங்களுடைய மனதிற் தோன்றியவைகளை யெல்லாம் பிதற்ற முற்பட்டு விட்டீர்கள்போலும். பேஷ்! நன்ருயிருக்கிறது. எனதன் புள்ள தனபாலன் கொலை செய்தானென்றும், பெண்களை கற்பழித்தானென்றும் எத்தனையோ முறை சிறைசென்றுள் ளானென்றும் தாங்கள் கூறுவது தங்களுடைய அறியாமை யை புலப்படுத்துகிறது. தனபாலனுடைய வடிவழகைக் கண்ட பெண்கள் அவ்வுத்தமன் மீது மோகங்கொள்ளலா ஞர்கள். அப்பெண்களின் இழிந்த நோக்கத்திற்கா அதி புத்திசாலியான தனபாலன் உடன்படுவான்? அவர்களின் இஷ்டத்தை பூர்த்திசெய்ய உடன்படாததால் அப்பெண் பேய்கள் இவன்மீது பொய்க் கேஸ்களை உற்பத்திசெய்து இவனைச் சிறைக்குள்ளடைத்துவிட்டனர். எவர் எவ்விதம் செய்தாலும் ஈசன் ஒருவன் யாரிடத்தில் நீதியுளது என்று பார்த்துக்கொண்டே இருக்கிறன். "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்பதுபோல இவனது உண்மையான நடையுடைபாவனைகளை நன்ருய் அறிந்த பலர் இன்றும் அவனைச் சுற்றியலைகின்றனர். இவைகளையெல்லாம் நன் குணர்ந்த தாங்கள் இவ்விதம் கூறுவதையிட்டு நான் வருந்து கிறேன்.

இராமநாதர்:- "பெண்ணே! நீ வீட்டிலேயே இருக்கி ருய். உனக்கு மற்றவர்களின் குணுகுணங்களை எவ்விதம் அறியமுடியும்? பிறர் உன்னிடம் கூறியவைகளையே நீயும் என்னிடம் பாடம் ஒப்புவித்துவிட்டாய். அவனது குணங் களை நான் நன்குணரவில்லை யென்றும் குற்றப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துவிட்டாய். என்றாலும் உன்னிடம் நான் சீற்றங் கொள்ளவில்லை. அவனுடைய குணங்களை நான் சுருக்கிவெளி யிடுகிறேன் கேள்! திருட்டில் பேர்போனவன். முரட்டுத் தனத்தில் முதன்மையானவன். உருட்டுப்புரட்டு செய்வ தில் பட்டம்பெற்றவன். மோசத்தில் முழுத்தேர்ச்சி உள் ளவன், அடுத்துக்கெடுப்பதில் அஞ்சாவீரன். சிநேக துரோ கம் செய்வதில் பின்வாங்காதவன். கன்னமிடுவதில் பின்ன மில்லாதவன். கஞ்சாக் குடிப்பதில் காதல் மாருதவன். கள்ளுண்பதில் எள்ளளவும் பின்வாங்காதவன். கொலைத் தொழில் புரிவதில் தேர்ச்சியுற்றவன். உண்டவீட்டுக் கிரண் டகஞ்செய்யும் உத்தமன். தீ வைப்பதில் சிறந்தவன். குருத் துரோகம் செய்வதில் குறைவில்லாதவன். பொருமை கூறுவதில் புகழடைந்தவன். பொய்யே இவனுக்கு பூஷணம். மெய்யென்றால் வேப்பங்காய். தர்மம் என்றால் சஞ்சலம் அதிகரிக்கும். அதர்மம் என்றால் ஆனந்தம் மேலிடும். பெண் வேட்டையாடுவதில் திறமையுள்ளவன். தன்னுடைய காம இச்சையை பூர்த்திசெய்யவே பெண்களிருக்கிறார்கள் என எண்ணி பெண்களை கற்பழிப்பதில் முழுத் தேர்ச்சியுள்ள வன்.ஒவ்வொரு விலைமாதருக்கும் கணவராயுள்ளவன்.பத்துப் பணம் கொடுத்தால் பதிவிரதா பத்தினிப் பெண்களும் தன் னுடைய காம இச்சைக்குடன்படுவார்கள் என எண்ணி தந்திரமாக அவர்களை தன்னுடைய இச்சைக்குடன்படுத் துவதில் தேர்ச்சியுள்ளவன் அல்லவா?"

பத்மா:– நாதா! தாங்கள் எனது அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாருக இருக்கிறீர்கள். இதெல்லாம் எனது அறி யாமையின் பயனேயாகும். தங்களுடைய குமாரத்தி தங்க ளுடைய உணவில் ஏதேனும் மசக்கை மருந்தை செலுத்தி விட்டாள் போலும். சரி! உங்களது குமாரத்தியின் மனம் போலவே நீங்களும்பேசஆரம்பித்துவிட்டீர்கள். அவ்விதமே நடந்துகொள்ளுங்கள். நான் தற்கொலைபுரிந்து மாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறேன். இப்பாவி இருந்தால்தானே உங்களுடைய கோரிக்கைகளுக்கு இடைஞ்சல் உண்டாகும்? நீங்கள் உங்கள் மகளை கொலைபுரிந்தாலும் சரிதான். அல்லது என்ன செய்தாலும் சரிதான். அதைப்பற்றி வினவ எனக்கு யாதொரு பாத்தியதையுமில்லை. எனக்கு அப்பெண் பிறக்கவில்லையென்றே எண்ணிவிடுகின்றேன்'' என்று கூறிவிட்டு சரேலென பத்மாவதி அறையினின்றும் வெளிப்பட்டாள். எவ்வளவோ இராமநாதர் கூவியும் திரும்பிப் பார்க்கவேயில்லை. தமது மனைவியின் கோபாவேசத்தைக்கண்ட இராமநாதர் "கிரியைக்கண்ட பாம்புபோல்'' நடுநடுங்கி ஆழ்ந்த யோசனையி லீடுபட்டார்.

"இதேதடா தர்மசங்கடமாயிருக்கிறது! இவள் கோபித்துக்கொண்டு போய்விட்டாளே. இவளை சந்தோஷப் படுத்த என்செய்வது! சுந்தரியோ தனபாலனை மணக்க ஒருப்படாள் என்பது வெளிப்படை. இதற்கிடையில் நான் யாரை சந்தோஷப்படுத்துவது? பத்மாவின் காலடி—கால் சிலம்பின் சப்தம் கேட்டமாத்திரத்தில் எனது தைரிய லெக்ஷிமி என்னிடமிருந்தும் சிலவு பெற்றுக்கொண்டு போய்விடுகிருள். நான் எனது மனைவிக்கு அடிமைப்பட்டு விடுகிறேன். அவளிடம் ஏது மாயாஜாலம் இருக்கிறதோ அறியேன்! கடவுளே! மனைவியர்கள் புருஷர்களை சந்தோஷப்படுத்த வல்லவர்கள் என்றும், அவர்கள் கஷ்டமடையும் போதும் துக்கசாகரத்தில் ஆழ்ந்தபோதும் தேற்றக்கூடியவர்கள் என்றும், படித்த மேதாவிகள் கூறுவது என்செயலளவில் பொய்த்து விட்டனவன்றோ! என் வாழ்க்கைக்கே இடையூறு விளைவிக்கும் எனது மனைவியை நான் என்செய்வது! ஒரு குடும்பவாழ்க்கை எவ்வளவு சிக்கலானது என்பதை நான் இப்போதே தெரிந்துகொண்டேன். எனது எண்ணங்களுக்கு முற்றிலும் மாறுக நடந்து என்னை துக்கசாகரத்தில் எனக்கு வாய்க்கும் மனைவி ஆழ்த்திவிடுவாள், என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை நான் ஏற்கனவே அறிந்திருந்தால் நான் பிரமச்சாரியாய் இருந்திருப்பேனே" என்று இராமநாதர் பற்பலவாருக எண்ணி வருந்தினர்.

இராமநாதருக்கும் பத்மாவதிக்குமிடையில் நடந்த நீண்ட சம்பாஷணையையும் வாக்குவாதத்தையும் அடுத்திருக்கும் தனது அறையிலிருந்தவாறே உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த இளஞ்சிறுமி சுந்தரி திடீரென இராமநாதரின் முன் தோன்றினள். சற்றும் எதிர்பாராத விதமாகத் தனது குமாரத்தி தன்முன் தோன்றியதை யறிந்த இராமநாதர் திடுக்கிட்டு பறக்கப் பறக்க விழித்தார். சற்றுநேரம் கழிந்து, "சுந்தரி! திடீரென நீ இவ்வறை வந்து சேர்ந்ததின் காரணம் யாதென்பதை விளக்குவாயாக" என்று வினவி தமது அருகில் அமரச் செய்தார்.

சுந்தரி:—தந்தையவர்களே! தாங்களும் எனது அன்னையும் நடத்திய சம்பாஷணையை நான் உற்றுக்கேட்டுக்கொண்டுதானிருந்தேன். பாவியாகிய எனது விவாக விஷயத்தில் நீங்கள் தலையிட்டு இவ்வாறு ஒருவருக்கொருவர் தர்க்கிப்பது முறையன்று. தாங்கள் எனது அன்புமிக்க அன்னையாரின் சொல்படி நடக்கவில்லையென்றால் அன்னையார் தற்கொலை புரிவார்கள். ஆதலால் அவர்களின் மனம்போலவே நடந்துகொண்டாலும் தாங்கள் எனது மனப்பான்மையை நன்கறிவீர்கள். இதுநாள் பரியந்தம் நான் தங்களுடைய மனம்போலவே நடந்துவந்தேன். இப்போது அவ்விதம் நடப்பது முடியாத காரியம். எனது எதிர்கால வாழ்க்கையை கவனிக்கவேண்டிய முக்கிய பொறுப்பு என்னைச் சார்ந்ததாகவே காணப்படுகிறது. ஆதலால் தங்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது எனக்கே வெட்கமாயிருக்கிறது. என் செய்வது! தான்சாக யாரும் மருந்துண்ணுவார்களோ! மாட்டார்களன்றோ! மகா கொலைக்கஞ்சாப் பாதகனுகிய தனபாலனுக்கு மனைவியாக—இல்லக்கிழத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக வாழ்வதைப் பார்க்கிலும் மாண்டு போவது எவ்வ ளவோ மேல். ஐயா! தனபாலனுடைய குணங்களை தாங் கள் நன்கறிவீர்களாதலால் நான் அதைப்பற்றி விவரிக்க விரும்பவில்லை. அரக்கனாகிய தனபாலன் ஓர் கொலைக்குற்றத் திற்காக நான்கு வருட கடுங்காவல் தண்டனை அனுபவித்து விட்டு சமீபத்தில் தான் வெளியே வந்தான். இப்போதும் அவன்மீது ஓர் கொள்ளை வழக்கு நடைபெற்று வருகிறது. செல்வவந்தர்கள் அநேகர் தங்கள் பொருட் செருக்கால் அகங்காரக் கிரந்தர்களாகி அக்கிரம காரியங்களி லீடுபடுகின் றனர். உலகத்திலுள்ள பெண்மக்கள் எல்லோரும் தங்க ளுடைய மிருகஆசையைப் பூர்த்தி செய்வதற்காகவே சர்வே சுவரனால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனர் என்று தன பாலன்போன்ற கயவர்கள் எண்ணி பதிவிரதாப் பெண்கள் சிரோமணியைக் கற்பழித்து வருகின்றனர். தரும இயல் போடு இல்லறத்தில் வாழக்கூடிய மணாளனன்றோ மாண் புடையவன். பிற தெய்வத்தை வணங்காளாகித் தனது கணவனைத் தெய்வமெனத் தொழுதெழ வேண்டுமென்று கற் புடைய மங்கையர்க்கு அறம் விதித்திருக்கின்றது. ஒரு கணவனைத் தெய்வமெனத் தொழவேண்டின் தக்க குணம் அமைந்தவனா யிருத்தல் வேண்டுமன்றோ! அக்குணங்கள் அமைந்துள்ள புருஷனை யல்லவோ யான் எனது கணவனாக வரிக்கவேண்டும். அத்தகைய புருஷன் கிடைக்காவிடில் கன்னிகையாயிருந்து கடவுள் பாதசேவையில் என் வாழ் நாளைக்கழிக்க மனமுள்ளேன்! தந்தையாரே! எனக்கு எவ்விதத்திலும் மகா கொடிய பாதகனாகிய தன பாலனையே மணஞ்சூட்டித் தரவேண்டுமென்ற ஆவல் கொண்டிருக்கிறீர்கள். எனக்குக் கணவனாக நியமிக்கப் படும் ஆடவன் இல்லற தருமத்தைப் பிறழாது நடத் துவதற்குத் தகுந்த குணங்களை யுடையவனா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டியது தங்களின் கடமை. இல்லற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமத்தைப் பிறழாது நடத்தக்கூடிய கணவனுல் நான் இன்புற்று வாழவேண்டுமென்னும் எண்ணத்தை மனதிற் கொள்ளாது, மகா கொடிய அரக்கன் தனபாலன் என்ற பதருக்கு—அவன் எவ்வளவு துர்க்குணங்களை யுடையவனுயினுஞ்சரி, மருமகனுனல் போதுமென்று எனது அன்னையவர்கள் நினைக்கிறுர்கள் போலும்! நான் இறுதியாகக் கூறுவது யாதெனில் இல்லறத்தைச் சரிவர நடத்தும் துணையையளிக்கக் கூடிய கணவனையே நான் தெரிந்தெடுப்பேன்'

**இராமநாதர்:**— "குழந்தாய்! நீயோ சிறு பெண். உனது விவாகத்தைப் பற்றி நீ ஏன் கவலையடையவேண்டும். உன்னை நல்ல ஒழுக்கமுடைய ஒருவனுக்கே மணம் முடிக்க வேண்டுமென்றிருக்கிறேன். தனபாலனுக்கு உன்னை நான் மணம் செய்விப்பேனு? இது என்ன அநியாயம்! நினது அன்னை ஏதோ பிதற்றினுளென்று நீ என்னிடம் கடிந்து பேசுகிறுய். நீயோ எனக்கு ஒரே பெண். அவ்விதமிருக்க உன்னைத் தக்கவோர் மணளனுக்கு மணம் செய்வித்து, அவ்வைபவத்தை நான் கண்ணுரக் கண்டு ஆனந்திக்கவேண்டுமன்றே! பாழுங்கிணற்றில் பிடித்து உன்னைத் தள்ளியதைப்போன்று அப்பதருக்கு உன்னைக் கட்டிக்கொடுக்க மாட்டேன்! இது நிச்சயம். இனி உனது மனதை அதைரியப் படுத்திக்கொள்ளாதே. எனது எண்ணத்தை ஒருவராலும் மாற்றமுடியாதென்பது உறுதி".

**சுந்தரி:**—"தந்தையவர்களே! தாங்கள் உறுதிமொழி கூறுவதில் சமர்த்தர் என்பதை நான் அறிவேன். இப்போது என் அன்னை வந்து தனபாலனுக்கே நமது குமாரத்தியைக் கொடுக்க வேண்டுமென்றுல் உடனே "சரி" என விடையளித்து விடுவீர்கள். இது ஒரு ஆச்சரியமல்ல. தங்களின் வாழ்நாளில் தினந்தோறும் நடக்கும் வைபவமே இது. பசுவின் வயிற்றில் புலி பிறந்ததைப் போன்று எனது அன்னையின் வயிற்றில் பாவி நான் ஜெனித்து விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேன். பேராசை பிடித்த எனது அன்னை தனபால னுக்கே என்னை தாரை வார்த்து விடவேண்டுமென்று முரண்டுபிடிப்பது திண்ணம். தாங்களும் அவ்விதமே என்னை அவருக்கு மணம் செய்விப்பீர்களென்பது உறுதி. நானும் தனபாலனின் இல்லக்கிழத்தியாக வாழ மனமின்றி உயிரை மாய்த்துக்கொள்வது உறுதி. இதுவே எனது முடிவான அபிப்பிராயம்.''

இராம:—''குழந்தாய்! நான் சத்தியமாகச் சொல்லு கிறேன். உன்னை தனபாலனுக்கு மணம் செய்விக்க நான் ஒருப்படவேமாட்டேன். உனக்குத் தக்க ஓர் வரனைத்தேடி உன்னை அவனுக்கு மணம் செய்வித்து உனது இன்பவாழ்க் கையை நான் கண்டானந்திக்கும்நாளை வெகு அன்புடன் எதிர்பார்க்கிறேன். கண்மணி! நீ ஒன்றுக்கு மஞ்சவேண் டாம். வருந்தவேண்டாம்''. என்று இராமநாதர் பலவித மாகத் தேறுதல் கூறியும் சிறுமி சுந்தரிக்கு மனம் சாந்த மடையவில்லை யென்றாலும் ஒருவாறு தனது மனதைத் திருப்திசெய்துகொண்டு தந்தையிடம் விடைபெற்றுச் சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—2.

## குடும்பபாரம் ஏற்றுக்கொண்ட இராஜேந்திரன்.

பம்பாயிலுள்ள ஓர் பிரதான வீதியில் அலங்காரமாக மாளிகையொன்று கட்டப்பட்டிருந்தது. அம்மாளிகையின் முன் நந்தவன மொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அந்நந் தவனத்தில் ரோஜாமலர்கள் சிவப்பும் வெள்ளையுமாக மலர் ந்து கொத்துக் கொத்தாய் தொங்கிக்கொண்டிருந்தன. தேவ தாரு மரங்கள் முக்கோணமாய் வளர்ந்து கரிய நிழலைச் செய்கின்றன. சண்பகப்பூவும், முல்லை மலர்களும், அடுத்து நெருக்கி இடையீடின்றி மலர்ந்து கிடக்கும் மல்லிகையும், இன்னும் பற்பலவிதமான புஷ்பச்செடிகளும் அந்நந்த வனத்தின் இயற்கை யழகை பன்மடங்கு அதிகரிக்கச் செய்தன. அந்நந்தவனத்தின் மத்தியில் "ஸ்ரீ" என்று அழகாக புல்லில் வெட்டி விடப்பட்டிருந்தது. அது பச்சை நிறமுடையதாகவும், வெகு நேர்த்தியாகவும், செழிப்பாகவும் வளர்ந்து காக்ஷி யளித்தது. ஜனங்கள் தங்கள் தலைமயிரை (கிராப்) வெட்டிக்கொள்வதைப் போன்று அதற்கும் வெட்டப்பட்டிருந்தது. அதன் அரு கில், "இராஜேந்திரன்" என்றும் புல்லினல் வெட்டப் பட்டிருந்தது. மோட்டார் வாகனங்கள் உள்ளே செல்ல வும் வெளியே செல்லவும் இருவழிகள் அமைக்கப்பட் டிருந்தன. அதற்கு முறையே ஆங்கிலத்தில் IN (இன்) OUT (அவுட்) என்று இருபலகைகளில் எழுதப்பட்டு இருவழிகளிலும் வைக்கப்பட்டிருந்தன. அவ்வழியாக செல் லுகையில் அவ்வழியின் ஓரங்களில் நடப்பட்டிருக்கும் பிச்சிச்செடியின் வாசனையானது எவரையும் சந்தோஷப் படுத்த சக்திவாய்ந்ததாக இருந்தது. இவ்வழியாகச் சென்று வீட்டின்முன் நின்றல் அங்கு ஓர் மண்டபம் போன்று கட்டப்பட்டிருந்தது. அதன் மத்தியில் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமமா
Roufamu



இலக்ட்ரிக் (Electric) லைட் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. வாயிலின் இருபக்கத்திலும் (ஓரங்களில்) தெங்குபோன்ற ஓர்வித (கெயின்பாம்ஸ்) செடிகள் இரண்டு தொட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறுள்ள நந்தவனத்தைக் கொண்டுள்ள "சுந்திர விலாஸ்" மாளிகையின் மேன்மாடியில் உல்லாச அறை யொன்று அமைக்கப்பட்டிருந்தது. அவ்வறை ஆடம்பர மற்றவிதமாக அமைக்கப்பட்டிருந்தது. சுவரில் சில முக் கியமான படங்களே காணப்பட்டன. அவைகளில் பெரும் பாலானவை சுதந்தர வீரர்களின் படங்களேயாகும். வீரன் ஜவஹர்லால்நேரு தாயின் மணிக்கொடியை தனது கரத்தி லேந்தி வாயுவேகம் மனோவேகமாய் புரவியின்மேல் சவாரி செய்யும் படத்தைக்காணும்போது • உண்மையிலேயே அவ் வறையினின்றுதான் அவர் செல்வதாக எண்ணநேரிடும். உலகம் போற்றும் உத்தமர் காந்திமகானும் அவருக்கருகில் பண்டித மதன்மோஹன் மாளவியா நிற்கிறதும் அவர்களுக் கருகில் "ரஜபுதனம்" கப்பல் காணப்படுகிறதும், அவர்களு க்கு "பாரததேவி" தனது கரத்தில் ஜெயக்கொடி யேந்தி விடையளிப்பதும், பார்ப்போர் மனதை உற்சாகப்படுத்தக் கூடியதாயிருந்தது. அதிகார அகந்தையுள்ள கனவான்க ளால் "அரைநிர்வாணப்பக்கிரி" என்றும், "பொக்கை வாயன்" என்றும், "மொட்டைத்தலையன்" என்றும் "சாதா ரணக்கைதி" என்றும் அழைக்கப்படும் ஏர்வாடா தவமுனி வர் காந்திமகானும், அவரது சிஷ்யைகளில் ஒருவராகிய "மீராபென்"னும் இராஜபுதனத்தில் உலவும் காக்ஷி கண்டோ ரை கவரக்கூடியதாயிருந்தது. உப்பு சத்தியாக்கிரகத்தில் மகாத்மாஜீ தமது மிதியடிகளை அணிந்துகொண்டும் தமது கரத்தில் கொடியை தாங்கிக் கொண்டும் கால்நடையாக டாண்டிக்கு (சுமார் 210 மைல்) யாத்திரை செய்து ஈற்றில் ஸ்தலத்தை யடைவதும் அங்கே தொண்டர்கள் உப்புகாய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்போகும் படமானது மேற்காட்டிய படங்களைப் பார்க்கி லும் இதைக் கண்ணுருவோரின் மனம் உருகுமென்பது திண்ணம். இவைதவிர, நாம் முன் நந்தவனத்தில் "இரா ஜேந்திரன்" என்று புற்களால் வெட்டப்பட்டிருந்ததாகக் கூறினேமல்லவா? அவ்வாலிபனின் புகைப்படமொன்றும் (Photo) காணப்பட்டது. சுவரின் மத்தியில் நிலைக்கண் ணுடி ஒன்றும் தொங்கவிடப்பட்டிருந்தது. அறையின் மத்தியில் வட்டவடிவமான மேசையொன்றும் போடப்பட் டிருந்தது. அதன்மேல் வெண்மையான—அழுக்கில்லாத— சுத்தமான கதர் துணியொன்றும் விரிக்கப்பட்டிருந்தது. அவ்வஸ்திரத்தில் காந்திஜீயின் உருவமொன்றும் தீட்டப் பட்டிருந்தது. அம்மேசையில் கண்ணுடிபாத்திரம் (கிளாஸ்) ஒன்றும் வைக்கப்பட்டு, அதில் பாதியளவு தண்ணீரும் இட ப்பட்டு, அப்பாத்திரத்தில் பற்பலவிதமான புஷ்பங்கள் வைக்கப்பட்டு அலங்காரமாய் காணப்பட்டது. அதனரு கில் "சுதேசமித்திரன்" பத்திரிகை யொன்றும் தென்பட் டது. அவ்வறையின் ஓர் மூலையில் சிறிய அழகிய அலமாரி ஒன்றும் காணப்பட்டது. அதனுள் பற்பலவிதமான புஸ் தகங்கள் வைக்கப்பட்டிருந்ததையும், அறையின் மத்தியில் (இலக்ட்ரிக்) காற்றுடி ஒன்றும் அதன்கீழ் இலக்ட்ரிக் லைட் ஒன்றும் அமைக்கப்பட்டிருப்பதையும், நந்தவனத்தின் வன ப்பை கண்ணுறுவோரும் அம்மாளிகை பெரிய கோடீஸ்வர ரின் மாளிகையென எண்ணக்கூடும். ஆனுல் நாம் அம் மாளிகை கோடீஸ்வரரின் மாளிகையா? அல்லவா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென் றே கருதுகிறேம். ஆதலால் எல்லாம் வரவர அறிந்து கொள்ளலாம்.

இவ்விதமாக உள்ள அலங்கார—உல்லாச அறையில் ஓர் சுந்தரவாலிபன் துக்கமே வடிவாயமைந்தாற்போல சாய் மான நாற்காலி (ஈச்சர்)யில் சயனித்திருந்தான். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைமக்களால் நெய்யப்பட்ட சுத்தக் கதராடையையும், அங்கியையுமே தரித்திருந்தான். அவனது நெற்றியில் திருநாமமுமிடப்பட்டிருந்தது, என்றாலும் அவனது நெற்றியிலிருந்து வெளிப்பட்ட வெயர்வையினால் அது மங்கலாய்த் தென்பட்டது. 18 வயது மதிக்கத்தக்க அச்சுந்தர வாலிபன் ஆழ்ந்த யோசனையிலீடுபட்டு சாய்ந்திருந்தான். இதையறிந்த சூரிய பகவானும் அவனை சந்தித்து அவனை எழுப்ப முயன்றானென்றாலும், தூங்குவதைப் போன்றிருக்கும் அவனை எழுப்ப மனமில்லாமல் தனது கிரணங்களை காலையில் 8½ மணிக்கு அவனது முகத்தில் செலுத்தினான். என்றாலும் அவ்வாலிபன் சூரிய பகவான் தனது கிரணங்களை தன்மீது செலுத்துவதை அறியான்போல சயனித்திருந்தான். அவன் "நாகமேல் பள்ளியாகி யோகநித்திரை செய்யும் ராகவனை"ப்போன்று தோன்றினான். அவனது வலதுகரத்தில் ஓர் தந்தியும் காணப்பட்டது.

இவ்விதம் சயனித்திருக்கும் வாலிபனின் பின்னால் "முற்றத்துறந்த ஞானியரும் கண்டு காதலுறத்தக்க வனப்போடு" கூடிய ஓர் மாது நிற்கின்றாள் (நாம் முன் நந்தவனத்தின் அழகையும் சுந்தர விலாஸ் மாளிகையின் உல்லாச அறையையும், சுந்தரவாலிபரின் நிலையைப் பற்றியும் சிறிது விளக்கினோம். ஆதலால் இப்பெண்மணியின் இயற்கை அழகையும் கூடியமட்டும் சுருக்கி வெளியிடுவோம்) கருமேகம்போன்ற அவளது கூந்தல் நன்றாக பின்னிவிடப்பட்டிருந்தது. அவ்வாறு பின்னிவிடப்பட்ட சடையின் நுனியில் அழகிய பட்டுக்குஞ்சங்கள் தொங்குகின்றன. அவளது தலையில் நம்மால் விவரிக்கமுடியாத பல ஆபரணங்கள் ஜடையுடன் சேர்த்து பின்னப்பட்டிருந்தன. அவளது நெற்றியோ இளம்பிறைச் சந்திரனையும் பழிக்கத்தக்கதாய் காணப்படுகிறது. புருவங்களிரண்டும் மாரனின் கைவில்போல் தோன்றுகின்றன. கண்களோ அம்மாரனின் கரும்பு வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் பூட்டத்தக்க புஷ்பபாணங்களைப் போன்றன. மற்றும் முகத்தின் மத்தியில் அமைந்துள்ள மூக்கும் சிவந்த இதழ்களும் அம்முகத்திற்கென்றே சிருஷ்டிக்கப் பட்டவை போன்று விளங்குகின்றன. தோள்கள் மூங்கிலைப்பழிப்பன. கழுத்தில் அணிந்திருக்கும் முத்தாரங்களும், ரத்னமாலைகளும் மின்னல்போல ஒளியை வீசுகின்றன. இன்னும் தங்கக் கலசங்கள் போன்ற அவளது ஸ்தனங்களும், நுண்ணிய இடையும், அரையில் அணிந்திருக்கும் நீலநிறப் பட்டாடையும், மெலிந்து நீண்ட கால்களும் கண்டோர் மனதைக் கொள்ளை கொள்ளும் கவின்வாய்ந்தவைகள். அவளது இயற்கையழகும், செயற்கை ஆபரணங்களின் ஒளியும் நம்மால் சிறிது விளக்கவே முடிந்தது.

14 வயது மதிக்கத்தக்க இம்மங்கை அவ்வாடவனின் பின்னால் நின்றுகொண்டு அவனையே உற்று நோக்குவதைப் பிறர்கண்டால், அம்மங்கையின் கணவர் துயில்கொள்வதாகவும், துயிலும் அவரை எவ்வாறு எழுப்புவது என ஆலோசிப்பதாகவும் எண்ணக்கூடும். ஆனால் இது சமயம் அவர்கள் கணவன், மனைவி என்றில்லை என்றே கூறுதல் வேண்டும். அவரின் பின்னால் ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருந்த இளஞ்சிறுமி மெதுவாக நடந்து சென்று அங்கு சுவரில் பதிக்கப்பட்டிருந்த பொத்தானை அமுக்கினாள். உடனே காற்றாடி கிறுகிறென்று சுழன்று குளிர்ந்த காற்றை அறையில் பரப்பிற்று. நமது இளஞ்செல்வி, வாலிபன் சாய்ந்திருந்த சாய்மான நாற்காலியில் அமைக்கப்பட்டிருந்த கையிருப்புப் பலகையில் உட்கார்ந்துகொண்டு தனது முந்தானையினால் அச்சுந்தர வாலிபனின் முகத்திலிருந்து வெளிப்படும் முத்துப்போன்ற வியர்வையைத் துடைக்கவும், அவ்வாலிபன் தனது மூடின கண்களைத் திறந்துபார்த்தான். சற்றும் எதிர்பாராத விதமாகத் தன் முன் ஓர் பெண் அமர்ந்திருப்பதை யறிந்து வாலிபன் திகைத்துப் போயினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேந்திரா! எனதுயிர் நண்பா! ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் தங்களைச் சிறுமியாகிய நான் கெடுத்துவிட்டேன். (கலைத்தேன்) சிறியாள் நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். துயில்கொள்ளும் ஒருவரை எழுப்ப எனக்கு மனமில்லையென்றாலும், தங்களின்பால் உள்ள அன்பினாலும், பற்றுதலாலும், நான் எனது மூந்தாணையால் தங்களின் அழகிய திருமுகத்திலிருந்து வெளிப்படும் வியர்வையைத் துடைக்கத் துணிந்தேன். ஆனதால் தங்களின் நித்திரைக்குப் பங்கமேற்பட்டுவிட்டது. இப்போதாவது என்னை மன்னிக்கக் கூடாதா?'' என்று இளஞ்சிறுமி வினவியபடியே அவ்வாலிபனது இரு கரங்களையும் பற்றித் தனது மார்போடணைத்துக் கொண்டாள். அப்போதுதான் அவனது கையில் தந்தியொன்று இருப்பதாக அவளுக்குத் தெரிந்தது. உடனே திடுக்கிட்டு அதைப்பிரித்துப் பார்த்தாள். அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

பாவநாசம்.

நமது பஞ்சாபீசில் நெருப்புப் பற்றிக்கொண்டது. அதிக நஷ்டம். உடனே புறப்படவும்.

"மானேஜர்".

"சுந்தரீ! நீ யாதொரு குற்றமும் புரிந்துவிடவில்லை. எதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்? இனிமேல் இவ்விதமாக—எனது மனதைப் புண்படுத்தக் கூடிய வார்த்தைகளை உபயோகிக்காமலிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று இராஜேந்திரன் மெல்லிய குரலில் கூறியபடியே அவளது முகத்தை நோக்க, அவள் தந்தியைப் பார்த்துவிட்டு சித்தப்பிரமை கொண்டவளைப்போல் அசைவற்றிருப்பதைக் கண்டு மனம் வருந்தினான். புன்னகை தவழ்ந்த அவளது அழகிய முகத்தில் துக்கம் குடிகொண்டிருப்பதை யறிந்த இராஜேந்திரனது மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டற்ற வேதனை யடைந்தது. எவ்வாறு அம்மடமயிலாளைத் தேற்றுவதென்று வகையறியாது அவன் மௌன விரதம் அனுஷ்டிக்கலானான்.

"இராஜேந்திரா! இதென்ன? பாவநாசம் பஞ்சாபீசில் நெருப்புப் பற்றிக் கொண்டதா? இடிமேலிடி இடித்தாற் போல அடிக்கடி உனக்கு இத்தகைய நஷ்ட மேற்பட்டுவிடுகின்றதே! இதுவும் ஈசன் செயல்தான். நண்பா! இந்தச் சிறு பிராயத்திலேயே உனக்குக் குடும்ப பாரத்தை ஏற்க வேண்டிய கடமை ஏற்பட்டுவிட்டது. எதிர்பாராதவிதமாக உந்தன் தந்தை காலஞ்சென்றார். அவர் இன்னும் சிறிது காலம் உயிரோடிருந்தால் நன்றாயிருக்கும். அவர் இருப்பாராகில் இவைகளையெல்லாம் மேல்பார்த்துக் கொள்வார். நீ யாதொரு கவலையுமின்றி கல்வி பயின்று வரலாம். நமது துர் அதிர்ஷ்டவசமாக உனது தந்தை உயிர் நீத்ததும், குடும்பபாரம் உன்னைச் சேர்ந்ததும், இவ்விதம் அடிக்கடி கஷ்டநஷ்டங்களேற்படுவதையும் சிந்திக்கும்போது உனது எதிர்காலம் எனக்கு என்றுமில்லாத் திகிலை உண்டாக்குகிறது. பள்ளிக்கணக்குப் புள்ளிக்குதவாது என்பது போன்று வியாபாரப் போக்கு சிறிதும் அறியாத நீ தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பாயோ அறியேன்! ஆருயிர் நண்பா! ஊக்கமது கைவிடேல் என்ற பழமொழியைக் கடைப்பிடித்து நடக்கும் உந்தனை நான் என் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறேன். இராஜேந்திரா! உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் கஷ்டநஷ்டங்களேற்படத்தான் செய்யும். அவைகளையெல்லாம் நம்மவர்கள் 'நன்மைக்கே இவைகளெல்லாம் உண்டாகின்றன' என்று பொறுமையுடன் சகித்துக்கொள்ளவேண்டியது கடமை. இவ்வகையில் நீ தேர்ச்சியுடையவன் தான். நண்பா! எதுவரினும் வருக! அஞ்சாமல் அவைகளை எதிர்கொண்டழை. கடவுள் உந்தனைக் காப்பாற்றுவார்" என்று சுந்தரி இராஜேந்திரனுக்குத் தேறுதல்மொழி கூறித் தேற்றினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி சொல்லும் வார்த்தைகள் அவனுக்கு தேறுதலை உண்டாக்கவில்லை. தந்தையைப் பற்றி சுந்தரி கூறியதும் அவனுக்கு பழைய நினைவுகளேற்பட்டு, கண்ணீர் ஆறாக ஓடத்தலைப்பட்டது. "சுந்தரி! எனக்கு துக்கம்மேலிடும் நேரங்களிலெல்லாம், கடவுள் துக்கசாகரத்திலாழ்ந்திருக்கும் என்னைத் தேற்றும்படி உன்னை அனுப்பிவிடுகிறார். மாதரசே! எனது தந்தையார் காலகதியடைந்தாரென்ற செய்தியைக் கேள்வியுற்ற நான் பட்டபாட்டை என்னென்பது! அச்சமயம் நீ என்னை தேற்றினாய். ஔவையார் பாடிய "ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ" என்ற கவியையும் இன்னும் அநேக நீதிமொழிகளையும் என்னிடம் கூறி என்னை துக்காதேவியினிடமிருந்தும் விடுதலை செய்வித்தாய். தவிரவும் நான் அதற்குமேல் செய்யவேண்டிய விதங்களையும் தெளிவாக உரைத்தாய். இதைப் போன்று அநேக முறைவந்து என்னை பிடித்த துக்காதேவியை விரட்டினாய். இந்த முறையும் துக்கசாகரத்திலிருக்கும் என்னைத் தேற்ற வந்துள்ளாய். நீ கூறியபடியே எனது எதிர்காலத்தை சிந்திக்கும்போது நான் தாங்கமாட்டாத வேதனையை அனுபவிக்கிறேன். சுந்தரி! இவ்விதம் அடிக்கடி கஷ்டமேற்பட்டால் எனது தந்தை பிறருக்கு கொடுக்கவேண்டிய கடனை நான் எவ்விதம் செலுத்துவது! எனது துர்அதிர்ஷ்டம் அவருக்கு (தந்தைக்கு) கொடுக்க வேண்டிய புள்ளி விபரங்களை எழுதிவைக்காமல், தான் கொடுக்கவேண்டிய கடனை விபரமாக எழுதி வைத்திருக்கிறார். இப்போதுள்ள வரவு செலவு கணக்கை ஒழுங்குபண்ணிப் பார்த்தால் எனது வயிறு பற்றி எரிகிறது. இந்த ஆபத்தான நிலைமையிலிருந்தும் என்னைக் கடவுள் காப்பாற்றமாட்டாரா? வெளியில் கவலையில்லாதவனாக நான் தோன்றினாலும், எனது மனதிலிருக்கும் கவலையை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேடனாலும் கூறமுடியாது போய்விடும். என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட ஜென்மம்! ஒருவன் பிறந்ததுமுதல் இறக்கும்வரை யும் அவனுக்கு பலவிதமான கஷ்டங்கள் நேரிடுகின்றன.

(பொருளில்லார்க் கின்பமில்லை புண்ணியமில்லை யென்று மருவிய கீர்த்தியில்லை) மைந்தரிற் பெருமையில்லை. கருதிய கருமமில்லை. கதிபெறவழியுமில்லை. பெருநிலந்தனிற் கஞ் சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே என்ற கவி பொய்த்து விடுமோ? நீ கூறியபடி, எல்லாம் நன்மைக்கே யாகும். என பொறுத்திருக்கலாம். ஆனல் பொறுக்கமுடியாத கஷ்டங் கள் நேரிடின் என்செய்வது?" என்று கூறி இராஜேந்திரன் கண்ணீர் வடிக்கலானன்.

இராஜேந்திரனின் கண்களினின்றும் வெளிப்படும் நீரைக் கண்ணுற்றதும் சிறுமி சுந்தரிக்கு மனம் பதை பதைக்கலாயிற்று. என்னதேறுதல் கூறுவதென்று வகை யறியாது திகைத்தாள் தன்னையறியாமலே தன்னுடைய கண்களினின்றும் வெளிப்படும் நீரை அவன் கண்ணுற்றல் அதிக மனம் வருந்துவானென்று கருதி அவனுக்குத் தெரி யாமலே துடைத்துக் கொண்டாள். "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது" போன்றுதான் அவனுடன் இனிமை யாகச் சம்பாஷணை செய்து அவனிடமிருந்தும் சில வாக்கு மூலங்களைப் பிடுங்கலாமென்றெண்ணி வரவும், அவன் துர்க் காதேவி வசம் அகப்பட்டுக் கொண்டதையும் கண்டு மனங் கசிந்தாள். ஒருவாறு தனது மனதைத் திடப்படுத்திக் கொண்டு இராஜேந்திரனின் கண்ணீரைத் துடைத்து மெது வான குரலில் அவள் பேசத் தொடங்கினள்.

"ஆருயிர் நண்பனே! எதற்காக வருந்தவேண்டும்? வருந்துவதால் பயன் யாதுளது? பணம் ஒருவரிடம் எப் போதும் இருப்பிடமாயிராது. "சிறப்புஞ் செல்வமும் பெருமையுடையோர் அறக்கூழ்ச்சாலை (தருமத்திற்கு என்று ஏற்படுத்தப்பட்ட உணவுச்சாலை) யையடையினு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைவர்'' என்று அதிவீரராமபாண்டியன் இயற்றிய வெற்றிவேற்கையில் நீ படித்திருக்கிறாயல்லவா? அவ்வாறிருந்தும் நீ இவ்விதம் வருந்துதல் எனக்கு அதிக விசனத்தைக் கொடுக்கிறது. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்றபடி நீ உனது மனதைத் தளர்வடைய விடாமல் வியாபாரத்தை நடத்தினால் நீ யாதொரு கவலையுமின்றி வாழலாம் என எனது மனம் கூறுகின்றது. நண்பா! இவ்வுலகில் உன்னைப்போல ஆயிரமடங்கு அதிகமாக கஷ்டநஷ்டங்களை ஜனங்கள் அனுபவித்து வருகின்றனர். இராஜேந்திரா! அமெரிக்க நாடு எத்தகையநாடு? செல்வம் கொழிக்கும் நாடென மக்களால் போற்றப்படும் அந்நாட்டைப் பற்றி சமீபத்தில் ஸர் பிரடரிக் ஒயிட் என்பவர் ஓர் பத்திரிகையில் வியாசம் எழுதியிருந்தார். அதை உன்னிடம் நான் காண்பித்தேனல்லவா? அது இப்போது உனக்கு ஞாபகமிருக்காது. ஆதலால் அதில் முக்கியமானதைச் சொல்கிறேன். கேள்.

"அமெரிக்கா செல்வத்தில் புரளும் நாடென நாமெல்லோரும் எண்ணியிருக்கிறோம். மாரிகாலத்தில் பூக்கள் பூப்பதுபோல அமெரிக்காவிலும், செல்வர்களும், லக்ஷாதிபதிகளும் மலிந்திருக்கிறார்கள் என நாம் நினைக்கிறோம். ஆனால் அந்தக்காலமெல்லாம் மலையேறிவிட்டது. அமெரிக்கா இன்று பொருளாதாரச் சேற்றில் முழுகிவிட்டது. அமெரிக்காவில் பிரிட்டனிலும் பார்க்க மும்மடங்கு குடிஜனங்களிருக்கிறார்கள். ஆனால் பிரிட்டனிலும் பார்க்க அங்கேதான் வேலைப்பஞ்சம் அதிகம். பண நெருக்கடியினால் அமெரிக்க சர்க்காரின் கடன் பாரம் 800,000,000 பவுனாகக் கூடிவிட்டது. அத்துடன் வரவு செலவுத் திட்டத்திலும் 180,00,0000 பவுன் விழுக்காடிருந்தது. அதுமட்டோ. பிரபல நகரங்கள் எல்லாம் முறிந்துவிட்டன. சிக்காகோவில் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதக்கணக்காகச் சம்பளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படவில்லை. பிற்ஸ்பர்க்கென்ற பிரபல நகரத்தில் தொழிற்சாலைகளெல்லாம் மூடப்பட்டுவிட்டன" என்று அவர் வரைந்திருந்தாரன்றோ!

ஜெர்மனி அயல் நாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன் மொத்தம் 1,000,000, 000 பவுன்கள் என்று ஜெர்மன் சர்க்கார் வங்கித் தலைவர் டாக்டர் ஷாக்ட் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இவ்விதமாகப் பெரிய தேசங்களுக்குக் கூட பண நெருக்கடிக் கஷ்டங்கள் உண்டானதைப் பார்க்கும்போது அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட உனக்கு நேரிட்டுவிடவில்லை யென்றே கருதுகிறேன். "அழுதாலும் பிள்ளையை அவள்தானே பெறவேண்டும்" என்று நாடோடியாகச் சொல்லிக் கொள்வார்கள். அதைப் போல நமது கஷ்டநஷ்டங்களை நாம்தானே அனுபவிக்கவேண்டும். முடியாதென்றால் விடுகிறது யார்? நீ உனது மனதைக் கலங்கவிடாதே. இன்னும் ஒரு வருடத்திற்குள் உனது கஷ்டங்களெல்லாம் பறந்துபோய்விடும் என்று எனது மனதிற்குள் யாரோ ஒருவர் கூறுவதுபோலிருக்கிறது. என்னுயிர் இராஜேந்திரா!

> வாழ்வது வந்தபோது மனந்தனில் மகிழவேண்டாந்
> தாழ்வது வந்ததானாற் தளர்வரோ தக்கோர் மிக்க
> ஊழ்வினை வந்ததானா லொருவரால் விலக்கப் போமோ
> ஏழையாயிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ!

நண்பா! நேரமாகிறது. யான் போகவேண்டும். விடையளிக்கமாட்டாயா?" என்று கூறியவாறே அவனது கரங்களை எடுத்துத் தனது கண்களில் ஒத்திக்கொண்டாள்.

"யான் போகவேண்டும்" என்ற சொல்லைக் கேட்டதும் இராஜேந்திரன் இடியோசை கேட்ட அரவம் போன்றானான். இன்னது செய்வதெனத் தோன்றாது தவித்தான். "சுந்தரி! துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கும் என்னை விட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிய உனது மனம் இடங்கொடுத்ததா? சுந்தரமாதே! உன்னை நான் எவ்விதம் நேசித்து வருகிறேன் என்பதை என்னாலேயே சொல்லமுடியாது. எனக்குச் சிறிது கவலை உண்டாகவும்கூட எனது அன்னை சம்மதியார். எனக்கு எவ்வளவோ கதைகளைச்சொல்லி என்னைச் சந்தோஷப் படுத்துவார். அவர் காலஞ் சென்றபின் நீயும் எனது துக்கத்தைப் போக்க வெகு பிரயாசப்பட்டு வருகிறாய். உனக்கு நான் என்ன பிரதியுபகாரஞ் செய்யப்போகிறேன். மாதே! நான் எவ்வாறு மனதைரியத்துட னிருக்கமுடியும்? எனது கஷ்டகாலம் நீங்குவதெப்போது?" என்று கூறிக் கண்ணீர் வடித்தவாறே அம்மட மயிலாளின் மடியில் சாய்ந்தான்.

"நண்பனே! சத்தியமாகச் சொல்கிறேன் கேட்பாயாக உன்னை விட்டுப்பிரிய என் மனம் துணியவில்லை. என்றாலும் பற்பல காரணங்களைக்கொண்டு பிரியவேண்டியதாயிருக்கிறது. என் உயிரே! நான் அடிக்கடி உன்னைச் சந்தித்துப் பேசிவருகிறேனல்லவா? எதற்காக? உன்னை விட்டுப் பிரிய எனது மனம் துணியவில்லையன்றோ? "உடல் உள்ள வரையில் கடல்கொள்ளாக்கவலை" என்றதுபோல நாம் சாகுமளவும் கவலை நம்மைவிட்டகல மாட்டாதுபோலும். அன்பனே! "காட்டுக்குப் புலி ஆதரவு, புலிக்குக் காடு ஆதரவு" என்பது போன்று உனக்கு நான் ஆதரவாகவும், நீ எனக்கு ஆதரவாகவும் இருக்கிறோம். அவ்விதமிருக்கும்போது ஏன் கவலைப்படவேண்டும்? கவலையை விட்டொழி. என் மனங் குளிரும்படி என்னுடன் பேசி விடைகொடுத்தனுப்பு. என்னைக் காணாமல் என் பெற்றோர்கள் சந்தேகிக்க நாம் நடந்துகொள்ளக் கூடாதன்றோ! நண்பா! இராஜேந்திரா! என் உயிர் மாணிக்கமே! இன்னும் உந்தன் மனம் இரங்கவில்லையா?" என்று கூறித் தனது மடியில் அடியற்ற மரம்போல் சாய்ந்திருக்கும் இராஜேந்திரனின் முகத்தைத் தூக்கி அவனது கண்ணீரைத் துடைத்தாள். எவ்வளவு சமாதானஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினும் அவனது மனம் சாந்தமடையவில்லை. நீண்டநேரம் சுந்தரி அவனுக்குத் தேறுதல்மொழி கூறினள். மறுநாள் பாவநாசத்திற்குச் செல்லவேண்டுமென்றும், அங்குள்ள நிலைமையைத் தனக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள். ஈற்றில் இராஜேந்திரனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் மாளிகையை யடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—3.

## காதலரின் சிறை வாழ்க்கை.

சுந்தரி இராஜேந்திரனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்ற சிலமணி நேரங்களுக்குப் பின் டெலிகிராம் சைக்கிளின் மணி (Bell பெல்)யின் சப்தம் கேட்கவே இராஜேந்திரன் வீட்டின் வாயிலையடைந்தான். டெலிகிராமை (தந்தியைப்) பிரித்துப் பார்த்ததும் திடுக்கிட்டான். இன்னது செய்வதெனத் தோன்றாது "இடி மேலிடி இடித்தாற்போல" தனக்கு அடிக்கடி நேரும் கஷ்ட நஷ்டங்களை எண்ணிக் கண்ணீர் வடிக்கலானான். இவனிடமிருந்து ஏதேனும் சந்தோஷம் பெறலாமெனக் காத்திருந்த சேவகன் இவனுடைய நிலையைக் கண்டதும் ஏமாற்றமடைந்து திரும்பிப் போகவேண்டியதாய்விட்டது. மறு நிமிஷமே இராஜேந்திரன் சென்னைக்குப் போக ஆயத்தமாகிவிட்டான். அவனுடைய மனோவேகத்தைப் போன்று ரெயில் புறப்படுநேரமும் ஆகிவிட்டது. ரெயிலும் புறப்பட்டுச் சென்றது.

இடைவழியில் ரெயில் செல்லும்போது நமது இராஜேந்திரனிருந்த வண்டியில் உள்ளவர்களில் ஒருவன் எழுந்து அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுக்கவும் ரெயில்வண்டி நின்றது. உடனே அவன் துண்டுப் பிரசுரங்களை வினியோகஞ்செய்தான். மறு நிமிஷம் போலீஸ் வீரர்களால் கைதுசெய்யப் பட்டான். அப்போது போலீஸ் கான்ஸ்டபிள்களில் ஒருவன் "ஐசே! அங்கு வீற்றிருக்கும் மனிதன் முன் ஒருமுறை சிறை சென்றுள்ளான். அவன் காங்கிரஸ் தொண்டன். முன் நம்மை அவன் இழிவாகப் பேசினனல்லவா? உமக்கு ஞாபகமிருக்கிறதா? அவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சேர்த்து அரெஸ்டு பண்ணுவோமே" என்று கூறி இராஜேந்திரனைச் சுட்டிக்காட்டினான். மற்றவரும் "எஸ் ஐசே! தேட்ஸ் ரைட். அவ்விதமே செய்வோம்" என்று கூறி இராஜேந்திரனும் காங்கிரஸ் துண்டுப்பிரசுரங்கள் வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைதுசெய்யப்பட்டான். விசாரணையில்லாமலே அவனைச் சிறையிலடைத்தனர். இராஜேந்திரனோ சிறிதும் கவலையின்றிச் சந்தோஷமாய்ச் சிறைச்சாலைக்குச் சென்றான்.

நமது இராஜேந்திரன் முன்பொரு முறைச் சென்னைச் சர்வகலாசாலையில் கல்வி பயின்று வருங்காலையில் காங்கிரஸில் ஈடுபட்டுச் சட்டமறுப்பு செய்ததாக 6 மாதச் சிறைத் தண்டனை அனுபவித்திருக்கிறான். அங்கு நடக்கும் அட்டூழியங்களையும் கண்ணாரக்கண்டு, அனுபவித்திருந்தும் இப்போது அவன் சிறை செல்வதைப்பற்றி சிறிதும் கவலை கொள்ளவில்லை. என்றாலும் தனக்குக்கிடைத்த தந்தியை எண்ணும்போது மாத்திரம் அவனது முகம் சிறிது மாற்றமடைந்தது. தனக்கு நேரிட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் ஈசனிடம் ஒப்புவித்துவிட்டு சிறைச் சாலையில் சதா கடவுளைத் தியானித்தவண்ணமாகவே சிறைத் தண்டனையை யனுபவித்தான்.

இராஜேந்திரன் கைதுசெய்யப்பட்டுச் சிறைத்தண்டனை அனுபவிக்கிறான் என்று பத்திரிகை வாயிலாக அறிந்த சுந்தரி ஒருபுறம் சந்தோஷமும் மறுபுறம் துக்கமும் அடையலானாள்.

"இராஜேந்திரா! என் ஆருயிர்க்காதலா! இன்பநாதா! என்னிடம் யாதொன்றும்—ஒரு வார்த்தைகூடச் சொல்லாது சென்றுவிட்டாயே! இது உந்தனுக்கழகல்ல. நான் உன்மீது கொண்டுள்ள மட்டற்ற அன்பு முற்றி நாளடைவில் காதலாக மாறி என்னை வதைக்கலாயிற்று. எனது மனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையை உன்னிடம் தெரிவித்து உனது எண்ணத்தை (விருப்பத்தை) அறியலாமென நான் உன்னுடைய உல்லாச அறைக்கு வந்தேன்! காதல் மனோஹரா! அப்போது உனது நிலைமையைக் கண்டதும், நான் எண்ணிவந்த கோரிக்கை என்னிடமிருந்தும் செலவு பெற்றுக்கொண்டு பறந்துவிட்டது! நான் உன்மீது கொண்டுள்ள காதலை உன்னிடம் மொழிந்து உனது அபிப்பிராயத்தை யறியலாமென நான் மனப்பால் குடித்துக்கொண்டு வந்ததற்குமாறுகச் சம்பவங்கள் நடந்துவிட்டன. அன்பா! இப்போது நீ திடீரென என்னை விட்டுப் பிரிந்ததும் என் உயிரே என்னை விட்டுப் பிரிந்ததுபோல் தோன்றுகிறது. விசாரணை செய்யாமலே உன்னைக் காருண்யமிகுந்த சர்க்கார் சிறையிலடைத்து வைத்திருக்கின்றார்கள். சட்டமறுப்பியக்கத்தில் ஈடுபட்டு முன் ஆறுமாதச் சிறைத்தண்டனை அனுபவித்தாய்! இப்போதும் நீ உனது பழைய இடத்தை மறக்காமல் சென்றுவிட்டாய்! இராஜேந்திரா! நாமிருவரும் கணவன் மனைவி என்றே நடக்கிறோம். நீ தாய்நாட்டின் விடுதலைக்காகச் சிறைவாசம் செய்யும்போது உனது மனைவியாகிய நான் சுகமாகவும், சந்தோஷமாகவும் வெளியில் உலாவலாமா? கூடாதன்றோ? பதிவிரதாப் பத்தினிப் பெண்கள் தங்களின் கணவருக்கு எத்தகைய இடுக்கண் வந்துற்றபோதிலும் தாங்களும் அதில் பங்கெடுத்துக் கொள்வார்கள். அதேபோன்று நானும் உம்மைப்போலத் தாய்நாட்டின் விடுதலைக்காக எதை வேண்டுமாயினும் தியாகஞ்செய்யச் சித்தமாயிருக்கிறேன். இராஜேந்திரா! இதோ நான் பயணமாகிவிட்டேன்! கணவராகிய உம்மையே நான் பின்பற்றி நடக்கிறேன்" என்று அரிவை சுந்தரி தீர்மானித்தபடியே புறப்படலானாள். அவள் எண்ணியபடியே சட்டமறுப்பியக்கத்தில் ஈடுபட்டு ஈற்றில் காங்கிரஸ் துண்டுப் பிரசுரங்களை வழங்கிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு மூன்று மாதச் சிறைத் தண்டனையனுபவித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நாம் இராஜேந்திரனுக்குக் கிடைத்த தந்தியைப் பற்றி ஆராய்வோம். அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

சென்னை

உடம்புக்கு சுகமில்லை, ஆ ப த் தா ன நி லை மை உடனே புறப்பட்டு வரவும்.

சகோதரி, "சீதாலெக்ஷிமி"

இந்தத் தந்தியைப் பார்த்ததும் இராஜேந்திரன் "கடன் கொண்டார் நெஞ்சம்போலும் கலங்கினன் இலங்கை வேந்தன்" என்றது போலானன். "மின்னுமல் இடி" விழுவதைப் போன்று தனக்கு நேரிடும் எதிர்பாராத சம்பவங்களை—செய்திகளைச் சிந்தித்து ஆறாத் துயரமடைந்தான். தான் பள்ளியில் பயின்ற ஓர் கவியைப்போன்று தன்னுடைய நிலைமையும் இருப்பதைக் கண்டு மனங்கசிந்தான். அக்கவி பின்வருமாறு:—

ஆவினமழைபொழிய இல்லம்வீழ அகத்தடியாள்
மெய்நோவ அடிமைசாவ
மாவீரம்புலர்வதெனவிதைகொண்டோட வழியிலே
கடன்காரர் மறித்துக்கொள்ள
கோவேந்தருழுதுண்டகடமைகேட்கக் குருக்கள்
வந்து தெட்சணைக்குக்குறுக்கே நிற்கப்
பாவாணர்கவிபாடி பரிசுகேட்கப் பாவிமகன்
படுந்துயரம் பார்க்கொணுதே.

பிறர் சிறிது கவலையோ, வாட்டமோ, கஷ்டமோ அடைந்தால் எவ்வாறு அவர்களைச் சந்தோஷமடையச் செய்யத் தான் அவர்களுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்யப் பாடுபடுகிறுனே, அவ்விதம் தற்போது தனக்கு நேரிடும் கஷ்டநஷ்டங்களை—முக்கியமாகக் கவலையைப் போக்கி தன்னைச் சந்தோஷமடையச்செய்ய ஒருவருமில்லையே என்று நமது இளவல் இராஜேந்திரன் வருந்தினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கவலையோடிருக்கும்போது தன்னருகிலமர்ந்து தனக்குத் தேறுதல் மொழிகளைக்கூறித் தன்னைச்சந்தோஷப் படுத்தியும், தனக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறியும் வருகிற இளஞ்சிறுமி "சுந்தரி" என்ற ஓர் அருங்குண பூஷணி இருக்கிறுள் என்பதையும் அடியோடு மறந்தான் தான் மனிதரால் மட்டுமல்ல சர்வேசுவரனுலுங்கூட கைவிடப்பட்டுவிட்டதாக நமது சுந்தர வாலிபன் ஏங்கு கிறுன். அவன் என் செய்வான்? பாவம்! கவலை—கஷ்டம் என்பது யாது? என்றறியாமல் பள்ளியில் பயின்ற அவனுக்கு, மின்னுமல் இடி விழுந்ததைப்போன்று அவனது தந்தை மரித்ததும், குடும்பபாரம் தன்னைச்சார்ந்ததும், பற்பலவிதமான கஷ்டநஷ்டங்கள் உண்டாகுவதையும் எண்ணி எண்ணி பித்தம் பிடித்தவன் போன்றுனுன்.

நாளடைவில் நமது இராஜேந்திரனின் சகோதரி சீதாலெக்ஷிமி சுகமடைந்தாள். தன்பொருட்டு உயிரையும்கூடத் தியாகஞ்செய்யச் சித்தமாயிருக்கும் தனது சகோதரன் தனது அபாய நிலைமையைத் தந்திமூலம் தெரிவித்தும் அவர் வராததைக்கண்ட சீதாலெக்ஷிமி மனம் வருந்தினுள். தனது சகோதரனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டதோ எனவும் அஞ்சினுள். தந்தியடித்த அன்று எழுதிய கடிதமும் (Return) திரும்பத் தன் கைக்கு வந்துவிட்டதால் அவளது சந்தேகம் பன்மடங்கு அதிகரிக்கலாயிற்று. பின் தனது சிநேகிதைகளுள் ஒருவளுக்கு நடந்த விபரங்களையும், தன் சகோதரனைப்பற்றிய அபிப்பிராயத்தையும் தெரிவித்துக் கடிதம் ஒன்றைப் பம்பாய்க்கு அனுப்பினுள். அவளிடமிருந்து, தந்தி கிடைத்ததும் ரெயில்மூலமாகப் பிரயாணப்பட்டதாகப் பதில் கிடைத்தது. என் செய்வாள் பாவம்! அவளது மனம் ஒரு நிலையிலில்லை.

சிலநாள் சென்றபின் முன் சீதாலெக்ஷிமிக்குக் கடிதம் வரைந்தனுப்பிய சிநேகிதை தற்போது இராஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருப்பதாகத் தான் கேள்விப்படுவதாகவும், அதைத் தீர விசாரித்துப் பதில் எழுதுவதாகவும் ஓர் கடிதம் வரைந்து சீதாலெக்ஷிமிக்கு அனுப்பினுள். அதைப் பார்வையிட்டபின்தான் சீதாலெக்ஷிமிக்கு மனசிம் மதி ஏற்பட்டது. இந்தக்கடிதம் கிடைத்த மறுநாள் ஓர் கடிதம் சீதாலெக்ஷிமிக்குக் கிடைத்தது. அது பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

சரஸ்வதி விலாஸ்.
கொழும்பு.

அன்புள்ள சகோதரி!

உனது தந்தி கிடைக்கப் பெற்றேன். உடனே பிரயாணப்பட்டு ரெயில்மூலமாக வருகையில், நான் ஏறியிருந்த வண்டியில் உள்ள சுதந்தர வீரர்கள் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்திழுத்துத் துண்டுப்பிரசுரங்களை வழங்கினுர்கள். போலீஸ் புலிகள் என்னையும் சந்தேகித்துக் கைது செய்து விசாரணையில்லாமலே சிறையிலடைத்தனர். பின் அவர்கள் மனம் மாற்றமடைந்து என்னைச் சமீபத்தில்தான் (19–ம் தேதி) என்னை விடுதலை செய்தனர். விடுதலைசெய்ததும் நான் எனது நண்பரொருவரைச் சந்தித்துப்பேசியபின் அவசரமாக இலங்கைக்குப் பிரயாணமாகி இன்று வந்து சேர்ந்தேன்.

சுகவீனமுற்றிருக்கும் உன்னைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்காததையிட்டு வருந்துகிறேன். ஈசன் உன்னைக் காப்பாற்றுவார்! உனது தேக நிலைமையை எனக்குத் தந்திமூலமாகத் தெரிவி. தவிரவும் குணமடைந்துவிட்டால் இவ்விடம் வந்து சேரவும். உன்னைக் காண ஆவலாயிருக்கிறேன். பதில் அவசியம்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள சகோதரன்,
இராஜேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கடிதத்தைப் பார்வையிட்டதும் அவளுக்குண்டான மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுண்டோ? சகோதரனின் வேண்டுகோளின்படி இலங்கை செல்ல உத்தேசித்தாள்.

இவள் சென்னையில் கல்விபயிலுங்காலை தனது மாளிகையிலிருந்து பாடசாலைக்கு நடந்து செல்வதே வழக்கம். இவ்விதம் இவள் நடந்துசெல்லுந்தோறும் ஓர் ஆடவன் அன்னநடையைப் போன்று நடந்து செல்லும் இப்பெண்மணியைக் கண்ணுற்றதும் இவள்மீது மோகங்கொள்ளலானான். தன்னைக்கண்டு தன்னிடம் அவள் மோகங்கொள்ள வேணுமென்ற கருத்தோடு அவ்வாலிபன் தன்னை நன்றாக அலங்கரித்து, விலையுயர்ந்த பட்டாடைகளையும், ஆபரணங்களையும் அணிந்துகொண்டு அவளின் முன்னால் செல்வான். ரோட்டின் குறுக்கே நடந்து அவளின் முன் ஒய்யாரமாக நடந்து செல்வான். எவ்விதம் சென்றாலும் சீதாலெக்ஷிமி கவிழ்ந்த தனது தலையை நிமிர்த்தவேயில்லை.

இதையறிந்த வாலிபன் தனது மாயவலையில் எவ்வாறு அம்மங்கையைச் சிக்கவைக்கலாமென ஆராயலானான். எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. இவ்வாறிருக்கையில் நமது சீதாலெக்ஷிமிக்குத் தேக அசௌக்கியமுண்டாயிற்று. தான் பள்ளிக்கூடம் செல்வதையும் நிறுத்திவிட்டாள். ஆதலால் காமப்பித்துக்கொண்ட ஸ்ரீனிவாஸன் என்ற அவ்வாலிபனுக்கு சீதாலெக்ஷிமி தென்படவில்லை. தன் உயிரைக் கொள்ளைகொண்ட சுந்தராங்கியின் மாளிகை எங்குளது என்பதையறிய ஸ்ரீனிவாஸன் உன்மத்தம் பிடித்தவனைப் போன்று ஒவ்வொரு வீதியாகச் சுற்றியலையலானான். இவ்வாறு அநேக நாட்களாகிவிட்டன.

"லெக்ஷிமிவிலாஸ் மாளிகை" என்று ஓர் மாளிகையின் முன்னால் சுவரில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தகடுகளில் வெட்டிப் பதிப்பிக்கப் பட்டிருந்தது. "மாடு தப்பவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவனுக்கு செடிகளிலெல்லாம் கண்'' என்றது போல ஸ்ரீநிவாஸன் ஒவ்வொரு மாளிகையையும் உற்றுநோக்கிய வண்ணமாகவே நடந்தான். இவ்வாறு வருகையில் சீதா லெக்ஷிமி வசிக்கும் லெக்ஷிமி விலாஸ் மாளிகையில் அவனது பார்வை பட்டது. ''லெக்ஷிமி'' என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்ணுற்றதும் ஆனந்தசாகரத்திலாழ்ந்தான். தான் கட்டியணைய விரும்பும் அணங்கின் மாளிகை அதாகத்தானிருக்கும் என்று ஊகித்துக்கொண்டு பக்கத்திலுள்ள ஓர் வேலைக்காரனிடம் ''இது சீதாலெக்ஷிமியின் வீடுதானோ'' என்று வினவினான்.

வேலைக்காரன்:—''ஆம் ஐயா! இது சீதாலெக்ஷிமி என்ற சீமாட்டியின் வீடுதான்.''

ஸ்ரீநிவாஸன்:—''அவர்கள் அயலூருக்குச் சென்றுள்ளனரோ?''

வேலை:—''இல்லை. அவர்களுக்குத் தேக அசௌக்கியமாயிருக்கிறது. ஆதலால் வெளியில் நடமாட்டமில்லை''.

ஸ்ரீநிவா:—''இப்போது நல்ல சுகம்தானா? எப்போது பள்ளிக்கூடம் செல்ல உத்தேசித்திருக்கிறார்கள்?''

வேலை:—''தற்சமயம் பாடசாலைக்குச் செல்வதாக உத்தேசமில்லை. அவர்கள் இலங்கை செல்ல உத்தேசித்திருக்கிறார்கள். அங்கே அவர்களின் சகோதரர் ஒருவர் இருக்கிறார்களாம். ஏதோ அவசர ஜோலியினிமித்தம் நாளையே செல்ல உத்தேசித்திருக்கிறார்கள்.'' என்று கூறியவுடன் ஸ்ரீநிவாஸன் ஒரு பக்கம் சந்தோஷமும், ஒரு பக்கம் துக்கமும் கொள்ளலானான். தான் இன்று இம்மாளிகையைக்கண்டு இவளைச் சந்திக்காமல் போனால் தனது இன்பக்கிளி பறந்துபோய்விடுமென்றும், தனக்கு நற்காலமிருப்பதால்தான், தான் இன்று வந்து விசாரிக்க நேர்ந்ததென்றும், இதிலிருந்து தனது எண்ணம் ஈடேறிவிடுமெனத் தெரிகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றும் மனப்பால் குடித்துக்கொண்டான். தானும் மறுநாள் அவளுடனேயே இலங்கை செல்ல உத்தேசித்தான். தான் சென்று வருவதாக அவனிடம் (வேலைக்காரனிடம்) கூறிவிட்டு வீடு சென்று மறுநாள் புறப்படவேண்டிய சௌகரியங்களைச் செய்யலானான். விலையுயர்ந்த பட்டாடைகளையும், ஆபரணங்களையும் அன்றே அணிந்துகொண்டான். அவனது மனோவேகத்தைப் போன்று மறுநாள் ரெயில் ஏறும் நேரமும் நெருங்கியது.

சீதாலெக்ஷிமி தேன்மொழிப்பாவை. அவளை அழகு இராணி என்றுதான் சொல்லவேண்டும். அவ்வனிதை ஆடம்பரமான ஆபரணங்களைக்கொண்டு தன்னை அழகுபடுத்திக் கொள்ளவில்லை. இயற்கையன்னை அவளிடத்து மிகுந்த கருணை கூர்ந்து அவளுக்குக் கண்டோர் உள்ளத்தைக்கவரத் தக்க வனப்பு வாய்ந்த உறுப்புகளை யளித்திருந்தாள். அவளது எழில்மிக்க மந்தகாசமான முகம் அலர்ந்த புஷ்பத்தைப்போலிருந்தது. சீதாலெக்ஷிமி என்ற அம்மாதரசிக்கே பொருந்தும். அவள் அழகிற்கேற்ற குணம் வாய்ந்தவளாயிருந்தாள். முற்றத்துறந்த ஞானியரும் கண்டு காமமுறத் தக்க வனப்பு வாய்ந்த அக்குணபூஷணியைக் காமப்பித்தன் ஸ்ரீனிவாஸன் மோகித்தது ஆச்சரியமன்று.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே ஸ்ரீனிவாஸன் ரெயில்வே நிலையத்தின் முன் நின்று இந்திரனின் இந்திராணியைப்பழிக்கும் பேரெழில் வாய்ந்த அழகு இராணியை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான். ரெயில் புறப்பட ஐந்து நிமிஷங்களே இருந்தன. இவ்வளவு நேரமும் வராத மங்கை இன்று பயணத்தை நிறுத்திவிட்டாள் போலும் என்று ஸ்ரீனிவாஸன் ஐயமுற்றான். மறுநிமிஷம் ஓர் குதிரைவண்டி வந்து நின்றது. அதிலிருந்து சீதாலெக்ஷிமி இறங்கி அங்கு முன்னமேயே காத்துக்கொண்டிருந்த வேலைக்காரனிடம் இரண்டாம் வகுப்பு டிக்கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை வாங்கிக்கொண்டு தன்னுடன் வந்துள்ளவர்களிடம் வழியனுப்பிவிட்டு ரெயிலை நோக்கிச் சென்றனள். அம்மா தரசியின் பின்னால் ஸ்ரீனிவாஸன் சுணங்கனைப்போன்று நடந்து சென்று அவள் ஏறிய வண்டியிலேயே ஏறிக்கொண்டனன். ரெயிலும் புறப்பட்டுச்சென்றது.

வண்டியில் இருவரும் ஏறி அமர்ந்தபின் ஸ்ரீனிவாஸன் முதலாவது சம்பாஷணையைத் துவங்கலானான்:—

ஸ்ரீநிவாஸன்:—"அம்மா! தங்களின் பெயர் சீதா லெக்ஷ்மி அல்லவா? தங்களை எங்கேயோ பார்த்ததுபோல் தோன்றுகிறதே."

சீதாலெக்ஷ்மி:—"ஆம். ஐயா! என் பெயர்தான் சீதா லெக்ஷ்மி. நான் தங்களையறியமாட்டேன். ஆனால் தாங்கள் என்னைக் கண்டிருக்கலாம்."

ஸ்ரீனி;—"ஆம். தாங்கள் இலங்கை செல்ல உத்தேசித்திருக்கிறீர்களா? அவ்விதமாயின் தாங்கள் யாதொரு துணையுமின்றி இவ்விதம் தனிமையாகச் செல்லலாமா?"

சீதா:—"ஆம். நான் இலங்கைக்கே செல்கிறேன். எனக்கு யாதொரு துணையும் அவசியமில்லை."

ஸ்ரீனி:—"அது நன்றாயில்லை. நானும் இலங்கைக்கே செல்கிறேன். நானும் துணையின்றித் தனியாகவே பிரயாணஞ்செய்கிறேன். ஆதலால் நாமிருவரும் ஒன்றாகச் செல்லலாமே! தங்களைப் பார்த்தால் பெரிய தனவந்தரின் குடும்பத்தில் உதித்தவர்கள் போற் றோன்றுகிறதே! தாங்கள் ஏன் முதல் வகுப்பு வண்டிக்கு டிக்கட் எடுக்கக் கூடாது?"

சீதா:—"வேண்டாம். வீணாகப் பணத்தை விரயஞ் செய்ய நான் விரும்பவில்லை. "அவ்விதமாயின் மூன்றாம் வகுப்பு வண்டி டிக்கட் பெற்றிருக்கலாமே" என்று தாங்கள் வினவக்கூடும். மூன்றாம் வகுப்பில் ஜனக்கூட்டம் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் இரண்டாம் வகுப்பிலேயே பிரயாணஞ்செய்யத் துணிந்தேன்."

ஸ்ரீனி:—"அதுவும் சரிதான். பொதுவாகப் பெண்கள் இவ்விதமே இருக்கவேண்டும். இவ்வித மேன்மையான குணங்களையுடைய ஓர் லெக்ஷ்மியையே நான் மணக்க விரும்புகிறேன். ஈசன் எனக்கு உதவியளிப்பார். அதிருக்கட்டும். நான் இரண்டு முதலாம் வகுப்பு டிக்கட் எடுத்து விட்டேன். ஆதலால் நாமிருவரும் முதல் வகுப்பு வண்டியிலேயே பிரயாணஞ் செய்வோமே?"

சீதா:—"வேண்டாம். வேண்டாம். தாங்கள் என் பொருட்டு எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு நன்றி பாராட்டுகிறேன். நான் இந்த வகுப்பு வண்டியிலேயே பிரயாணஞ் செய்ய அவாவுகிறேன். தாங்கள் வேண்டுமாயின் முதல் வகுப்பில் பிரயாணஞ் செய்துகொள்ளுங்கள்."

ஸ்ரீனி:—"சரி. தங்களிஷ்டம். தங்களுக்கு மணமாகி விட்டதோ?"

சீதா:—"தாங்கள் அதைப்பற்றி வினவவேண்டிய காரணம் யாதுளது?"

ஸ்ரீனி:—"இல்லை. தாங்கள் சினங்கொண்டுவிடக் கூடாது. அதாவது மணமாகியிருந்தால் தங்களின் கணவரும்கூடப் பிரயாணஞ்செய்யலாமே! என்றுதான் வினவினேன்."

சீதா:—இல்லை. மணமாகவில்லை."

ஸ்ரீனி:—"சரி. இவ்வளவு வயதாகியும் தங்களுக்கேன் திருமணம் நடைபெறவில்லை? காமன் தனது அம்பு ராசிகளைத் தங்கள்மீது தொடுக்கவில்லைபோலும்! அதுவும் தங்களின திர்ஷ்டமே!"

சீதா:—"சகோதரரே! வீணாக என் பிதற்றுகிறீர். நீர் யார்? நான் யார்? அன்னிய ஸ்திரீயிடம் தகாத வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உச்சரிக்கவேண்டாம். எங்களுக்கு விருப்பமிருந்தால் நாங்கள் எங்கள் மனதிற்குகந்தவரை மணந்துகொள்வோம். இதில் நீர் சிறிதும் கவலைப்படவேண்டாம்".

ஸ்ரீனி:—"அம்மா! சிறியவன் ஏதோ கூறிவிட்டே னென்று என்னிடம் சீற்றங்கொள்ளாதீர்கள். தங்களை நான் சகோதரியென்றே எண்ணி இவ்விதம் வினவினேன். உங்களுக்கு இஷ்டமில்லையானால் நான் வற்புறுத்த விரும்பவில்லை."

சீதா:—"தாங்கள் வற்புறுத்திக் கேட்க விரும்பவில்லை என்றால் ஏன் வினவவேண்டும். வாயைப் பொத்திக்கொள்கிறதுதானே" என்று கூறியவுடன் ஸ்ரீனிவாஸன் யாதொன்றும் கூறவியலாது மௌனஞ்சாதித்தான். சிறிதுநேரஞ் சென்றபின் மீண்டும் பேசலானான்.

ஸ்ரீனி:—"அம்மணி! தூத்துக்குடியில் எனது உறவினர் வீடு ஒன்றுள்ளது. அங்கு போய் உணவருந்திவிட்டுச் செல்லலாம். தாங்களும் என்னுடன் வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்."

சீதா:—"அங்கு உமது உறவினரின் வீட்டுக்கு வர நான் தயாராயில்லை. மன்னிக்கவும்."

ஸ்ரீனி:—"இல்லை. இல்லை. அவ்விதம் சொல்லக் கூடாது. தாங்கள் என்மீது தப்பான அபிப்பிராயங்கொள்வதாக எண்ணுகிறேன். இது இயல்புதான். அன்னிய ஆடவனிடம் யாரும் அதிகமாக நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். நான் சத்தியமாகச் சொல்கிறேன். தங்களை நான் வித்தியாசமாக எண்ணவேயில்லை. இதை நம்புங்கள். அபலையான ஓர் பெண்ணை வற்புறுத்தி மனச்சஞ்சலமடையச் செய்ய நான் பிரயத்தனப்படமாட்டேன். இவ்வுலகில் சுதந்தரமாகத் திரியும் பெண்மக்களை அநேகர் தப்பான அபிப்பிராயங்கொண்டு நாய்களைப்போன்று பின்னாலேயே அலைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக்கெடுக்க சமயம் பார்க்கின்றனர். இத்தகைய கொடியவர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் தாங்கள் தப்பிவிட வேண்டுமென்பதே எனது அவா. அதனால்தான் நான் இவ்விதம் தங்களிடம் சம்பாஷிக்க முயன்றேன். பதிவிர தாப்பத்தினிப் பெண்களின் விலைமதித்தற்கரிய பொக்கிஷமாகிய கற்பைக்காக்க நான் மட்டுமல்ல, எங்கள் குடும்பமே பிரயாசைப்பட்டு வருகிறது. இதைத் தாங்கள் அறியமாட்டீர்கள்போலும். இவைகளையெல்லாம் தாங்கள் சிந்தனை செய்து பார்த்திருந்தால் தாங்கள் என்னிடம் அடைக்கலம் புகுவீர்களென நம்புகிறேன். அழகான பெண்களுக்கு இவ்வுலகில் நிம்மதியான வாழ்க்கை இருக்கமுடியாது. அவர்களைக் கெடுக்க நூற்றுக்கணக்கான காமப்பேய்கள் சூழ்ந்து கொண்டிருக்கும். இது இன்றைய உலகில் நடக்கும் சம்பவங்களில் ஒன்று. இவைகளையெல்லாம் தாங்கள் தீர்க்காலோசனை செய்யவேண்டியது மிக மிக அவசியம். எங்களூரில் ஸ்ரீனிவாஸன் என்றால் ஒவ்வொரு பெண்களுக்கும் தெரியும். அவர்களிடம் கேட்டால் எனது மேன்மையான குணங்களையறிந்துகொள்ளலாம். நான் இப்போது குறிப்பிடும் நண்பரின் குணங்களும் என்னைப்போன்றதே. அவரும் பெண்கள் விஷயத்தில் காருண்யம் மிகுந்தவர். ஆதலால் நான் தங்களை அழைக்க முற்பட்டேன். தயவுசெய்து எனது வேண்டுகோளை அங்கீகரிப்பீர்களாக!" என்று ஸ்ரீனிவாஸன் வேண்டிய புத்திமதிகளையும், உலக சம்பவங்களையும் கூறி முடித்தான். ஒவ்வொரு புலவர்கள் பாடிய கீதங்களையும் ஒப்புவித்துவிட்டான். "ஆயிரம் பொய் சொல்லியாகிலும் ஓர் கல்யாணத்தை முடிக்கவேண்டு' மென்று அநேக கனவான்கள் கூறிக்கொள்வார்கள். அதே போன்று லெக்ஷக்கணக்காக அண்டப்புளுகுகளையும் ஆகாயப் புளுகுகளையும் அள்ளிச்சொரிந்து அவளுக்கு நம்பிக்கையை உண்டாக்கிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சகோதரி! புத்தர் பெருமான் எவ்வளவு உபதேசங்களை கூறியிருக்கிறார். அவர் பெண்களிடம் ஆண் மக்கள் நடந்துகொள்ளவேண்டிய விதங்களையும் நன்றாய் விவரித்திருக்கிறார். "சகோதரர்களே! நீங்கள் எந்தப் பெண்களையும் ஏறிட்டுப்பார்க்கக் கூடாது. வீதிவழியாகச் செல்லுகையில் பூமியை நோக்கியவாறே நடந்து செல்லுங்கள். தற்செயலாக உங்கள் கண்கள் ஓர் பெண்ணை நோக்கின் "ஏ! மனமே! என்ன எண்ணுகிறாய்? அவள் எனது அன்னைக்கொப்பானவள் அன்றோ! நீ உனது துர் எண்ணத்தை விட்டுவிடு" என்று நீ உனது மனதினிடம் கூறு. அவ்விதமாகில் துர் எண்ணம் உன்னிடம் உதயமாகாது" என்று புத்தர் முழக்கியதாக நான் ஓர் பத்திரிகையில் படித்ததானது அவர் என்னருகிலிருந்து எனக்கு உபதேசஞ் செய்வதுபோல் தோன்றுகிறது. அதன்படியே நான் நடக்கப் பிரயாசைப்படுகிறேன். ஓர் பெண்ணைப்பற்றி ஒருவன் துர் அபிப்பிராயங்கொண்டால் அது மகா கொடிய பாவம் அன்றோ! அவன் அப்பாவத்தைத் துலைக்க ஈசனிடம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளவேண்டும். நானும் இவ்வழியில் நன்னடத்தையுள்ளவனாகவே இருக்கிறேன் என்பதை நாளடைவில் நீங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்வீர்கள். நீங்கள் என்னிடம் சீற்றங்கொண்டதையிட்டு வருந்தவில்லை. ஆனால் உங்களைப்போன்றே ஒவ்வொரு பெண்கள் நாயகமும் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்" என்று மேலும் ஸ்ரீனிவாஸன் கூறியதும் அவனைச் சீதாலெக்ஷ்மி முற்றிலும் நம்பிவிட்டாள். பெண் புத்தி பின் புத்திபோலும்! அவனுடைய வேண்டுகோளின்படி தூத்துக்குடிக்கு ஸ்ரீனிவாஸனின் நண்பர் வீட்டுக்குச்செல்லச் சம்மதித்தாள். வழிநெடுக இராமாயணத்தை ஓதிக்கொண்டே போகலானான்.

வாட்டமுற்றும் ஒரு கால் முடமாகியும் ஒரு கண் குருடடைந்தும், காதறுப்புண்டும் நீண்டு வளையும் வால் அறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டும் உணவின்றி வயிறு முதுகோடொட்டியும், அழகு கெட்டு முதுமை வாய்ந்ததும், அகன்ற வாயினுடைய கல வடையைக் கழுத்தில் மாட்டிக்கொண்டும், திரியும் ஆண் நாயானது ஒரு பெண் நாயின் பின் காமத்தாலோடித்திரியு மாகில் மற்ற எவர்களை மன்மதன் துன்பஞ்செய்யான்?

குறிப்பிட்ட நேரத்தில் ரெயிலும் தூத்துக்குடி வந்து சேர்ந்தது. ஸ்ரீனிவாஸனின் பின்னால் சீதாலெக்ஷிமி நடக்கலானாள். ஏதும் அறியாத—வெளுத்ததெல்லாம் பால் என எண்ணக்கூடிய—மாதை ஓர் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவ்வீட்டில் வெளிச்சமில்லை. அவ்வீட்டினருகில் ஜனநடமாட்டமில்லை. அவ்வீட்டை மரங்கள் மறைத்துக்கொண்டிருந்தன. பகல்நேரமென்றாலும் அவ்வீட்டை நோக்குகையில் இரவைப்போன்றே தோன்றும். அதைக் கண்டவுடன் ஒவ்வொருவருக்கும் ஓர் விதமான திகிலே உண்டாக்குமென்பது திண்ணம். இவ்விதமாகவுள்ள ஓர் பயங்கரமான இடத்திற்கு இருவரும் நடந்து செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்—4.

### பொருத்தமற்ற விவாகத்தின் பலன்.

"ஐயோ! காதலா! உம்மை விட்டுப்பிரிய என் மனம் சற்றும் இடங்கொடுக்கவில்லை. என் செய்வது! நமது காதல் யாதொரு பயனையு மளிக்காமல் போய் விட்டது. என் ஆருயிர்காதலா! நமது பழைய கதைகளை எண்ணும்போதும் தற்போதிருக்கும் நிலைமையையும் சிந்திக்கையில் நான் படும் பாட்டை என்னென்றியம்புவது! நாமிருவரும் பள்ளியில் கல்வி பயிலும்போது ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் அன்போடிருந்தோம். நாளடைவில் அந்த அன்பு முற்றி காதலாக மாறிவிட்டது. மெய்க்காதலினால் நாம் பிணைக்கப்பட்டோம். நமது காதல் விருக்ஷத்திலிருந்து கனியும் கனிகளைப் புசிப்பதெக்காலம் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். அவைகளெல்லாம் வீணாகிவிட்டன. எதிர்பாராதவிதமாக எனது தந்தை மதனகோபாலனென்னும் அரக்கனுக்கு என்னை மணம் செய்வித்துவிட்டார். என்னை மதனகோபாலனுக்குத் திருமணம் செய்விக்கப்போகிறதைக் கேள்வியுற்ற நான் உன்னைக் கண்டு எனது வாழ்க்கையைப் பாழாக்கிவிடக்கூடாதென மன்றாடினேன். அப்போது உன் மனம் பட்டபாட்டை நான் உன் மதிமுகத்திலிருந்து கண்டுகொண்டேன். என்றாலும் எனக்குத் தேர்தலாவது அன்றி ஒரு யுக்தியாவது நீ கூறவில்லையே! "சகோதரி! நீ உன் தந்தையின் சொற்படியேதான் நடக்கவேண்டும் தந்தை சொன்மிக்க மந்திரமில்லை. என்பது ஆன்றோர் பழமொழியல்லவா? நானோ ஓர் ஏழையுமன்றி ஓர் குடும்பத்தை நடத்த சக்தியற்றவன். உனது தந்தை குறிப்பிடும் மணாளன் கோடீஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை நீ மணந்தால் யாதொரு குறைவுமின்றி வாழலாம். ஆதலால் இனி நாம் சகோதரன் சகோதரியைப்போல நடந்துகொள்ளவேண்டும்'' என்றல்லவா கூறினாய். "என் பிராணநாதா! நாம் உலகமறிய மணம் செய்துகொள்ள வில்லை யென்றாலும் நாமிருவரும் கணவன் மனைவி என்றல்லவா நடந்து வருகிறோம். அவ்வாறிருக்க என்னை மதன கோபாலனை மணந்துகொள்ளும்படி நீ சொல்வது உன் போன்றவர்களுக்கு அழகல்ல. காதலீ! என் இன்பக் களஞ்சியமே! உன்னை விட்டுப்பிரிய எனக்கு ஒரு நிமிஷ நேரமாகிலும் மனமில்லை. நான் உன்னையே எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்கிறேன். இது சத்தியம்'' என்று நீ எனக்கு எத்தனை முறை உறுதிமொழி கூறி இருக்கிறாய். அவ்வாறிருக்க இப்போது நீ என்னை சகோதரியென்று ஒதுக்கித் தள்ளுவதைக்கண்டு நான் தாங்கமுடியாத வேதனையை யடைகிறேன். என்னைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு உன்னைச்சார்ந்தது. நான் உன் மனம்போலவே நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் மதனகோபாலனை மாத்திரம் மணந்துகொள்ளமுடியாது. என்னை உனது இல்லற வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளாவிடில் என்னைப் பழிவாங்கிவிடு. அதற்கு உனது மனம் ஒருப்படுமா?'' என்று நான் கூறியதும் எனது கண்களினின்றும் வெளிப்பட்ட கண்ணீர் வடிந்து, உனது கரத்தின் வழியாக பூமாதேவியை நோக்கிச் செல்ல உனது கரங்களை நான் பற்றிக்கொண்டேனல்லவா? அப்போதாவது உனது மனம் இளகிற்றா? இல்லையன்றோ! நான் எப்போதேனும் சிறிது மனவாட்டமுற்றவுடன் எனது உயிரரகிய நீ என்னைத் தூக்கி மடியில் கிடத்தி "காதலீ! உனக்கு என்ன குறை வந்துவிட்டது? ஏன் விசாரத்துடனிருக்கிறாய்? ஹா! ஹா! நான் இன்று உனக்கு முத்தாரங்களை யணியவில்லை என்று நீ வருந்துகிறாய் போலும். அவ்விதமாயின் உனது விருப்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ பூர்த்திசெய்து விடுகிறேன்'' என்று கூறியபடியே எனது அதரங்கள் சிவக்கும் வரை முத்தங்களைச் சொரிவா யல்லவா? ஆனால் அன்று நான் கண்ணீர் வடியவிடும் போது உனது மனம் இளகவில்லையே! எனது கண்ணீரை நீ துடைக்கவில்லையே என்று நான் வருந்தும்போது நீ செய்ததென்ன? அன்பு மிகுதியினால் என்னை ஆலிங்கனம் செய்த உனது அழகிய கரங்களை நான் பற்றியிருக்கும் போது என்னை நீ உதறித்தள்ளினாயல்லவா? அப்போதும் நான் "காதலா! என்னை உதறித்தள்ளவும் உனது மனம் துணிந்துவிட்டதா? இது நான் செய்த பூஜாபலன்தான். உன்னை நான் கணவன் என்று மனதார ஏற்றுக்கொண்டும், நீ என்னை உனது வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக் கொண்டும் இப்போது என்னை ஏற்றுக்கொள்ள நிராகரித் ததால் இனி என் உயிர் இவ்வுலகில் இருக்கமாட்டாது. நான் தற்கொலை புரிந்து மாண்டுபோகிறேன்'' என்று கூறி கண்ணீர் வடித்தவாறே வெளிப்பட்டேன். அப்போதா வது நீ என்னை உனது மனைவியாக ஏற்றுக்கொள்ளக் கூடாதா? உனது இன்பக்காதலியாகிய என்னை நோக்கி "சகோதரி! நீ தற்கொலை புரிந்தால் நானும் தற்கொலை புரி வேன். இது சத்தியம். நீ என்னைக் கணவனென எண்ணி யிருந்தால், நான் சொல்லுகிறபடி பதிவிரதாப் பத்தினிப் பெண்களில் ஒருவளாகிய நீ நடக்கவேண்டுமல்லவா? ஆம் அதன்படியே நான் சொல்லுகிறபடியே நீ மதனகோபா லனை மணந்துகொள்'' என்று கூறினாயல்லவா? "என் இன்பக்காதலா! இப்பிறவியில் நான் உன்னை உலகமறியக் கணவனாக ஏற்றுக்கொள்ளாவிடினும் மறு பிறவியிலாவது உன்னை நான் என் பிராணநாதனாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் அனுபவிக்கவேண்டிய இன்பமெல்லாம் பாழாய்ப்போய்விடுகிறதே என்றுதான் வருந்துகிறேன். என் செய்வது? கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது! பாழுங்தெய்வம் உனது மனதையும் மாற்றி என்னை வெறுக்கும்படியும் செய்துவிட்டது! நீயும் சத்தியம் செய்கிறாய். நான் தற்கொலை புரிந்தாலும் நீயும் தற்கொலை புரிவாயென்பது திண்ணம். ஆதலால் நான் சிறைச்சாலைக்குச் செல்கிறேன்" என்று கூறியவாறே உன்னைப் பிரிந்தேன். அன்று முதல் இன்றுவரை உனது அழகான முகத்தைக்காண முடியவில்லையே! என் செய்வது! உனது மனதை மாற்றமடையச் செய்த இறைவன் எனது மனதையும் மாற்றியிருந்தால் நன்றாயிருக்கும். ஆனால் அவ்விதமில்லை.

சிலர் நீ சகலதையும் துறந்து புண்ணியஸ்தலங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டாயென்றும் கூறுகின்றனர். அது உண்மையானால் உனது புத்தியினாலேயே நீ இவ்விதமானாய் என்று நான் துணிந்து கூறுவேன். அன்று நீ என்னை உனது இன்பக்காதலியாக ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வித நிலைமை நமக்கு நேர்ந்திருக்காது. காதலா! உனது இன்பக்காதலியாகிய நான்தான் இன்பவாழ்க்கையைப் பெறத்தக்க பாக்கியமில்லையென்றாலும் நீயாவது (வேறொரு பெண்மணியை மணந்து) இன்ப மனுபவிக்கக் கூடாதா? அதுவுமில்லையே! ஜெயசீலா! உன்னையே கணவனென எண்ணி, கடவுளைத்தொழுவதற்குப் பதிலாக உன்னையே நித்தியமும் தொழுதுவரும் பத்தினியாகிய என்னை நீ உன் மனம்போல முத்தங்களைச் சொரிந்தவாறே "உன்னையே நான் என் இன்பக்காதலியாக ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறிய நீ இப்போது என்னை வெறுத்து எனது வாழ்க்கையை பாழாக்கிய பாவம் உன்னைச் சேராமல் என்னைச்சேரும்படி இறைவனை நித்தியமும் துதித்தவண்ணமாயிருக்கிறேன். உன் பெற்றோர் உன்னை ஜெயசீலன் என்று பெயரிட்டழைப்பதற்கிணங்க நீ சகல தொழிலிலும், நடத்தையிலும் ஜெயம்பெற்றாய். ஆனால் எனது துர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ஷ்டம் என்னைப் பீடித்துள்ள துன்பவாழ்க்கையை ஜெயிக்கமுடியாமற் போய்விட்டதே! நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று 18 வயதுசென்ற ஓர் யௌவன மங்கை தனது அறையில் பிரலாபித்துக் கொண்டிருந்தாள். அப்போது அம்மாளிகையின்முன் ஓர் மோட்டார்கார் நின்றதும் அக்காரை ஓட்டிக்கொண்டு வந்தவர் "பம், பம்" என்று (Horn) சப்தம் கொடுத்தார். இதைக்கேட்டதும் அம்மங்கை சித்தங்கலங்கி அறையினின்றும் வெளிப்பட்டு முன்பக்கம் வந்தாள்.

அப்போது அங்கு வந்துள்ள அழகிய நியூ போர்ட் காரையும், அதை ஓட்டிக்கொண்டு வந்த வாலிபரையும் கண்டு திடுக்கிட்டாள். இவர் இங்கு வரக்காரணம் என்ன? என்று தன்னுள்ளேயே வினவிக்கொண்டு அக்காரின் பின்புறமுள்ள சீட்டை (இருப்பிடம்) ப்பார்க்க அங்கு ஓர் மனிதன் படுத்துக்கொண்டிருப்பதும், அவருடைய மண்டைகளில் ஏதோ சில கட்டுகள் கட்டப்பட்டிருப்பதையும் கண்டு மனங்கலங்கி ஒரே பாய்ச்சலில் அக்காரினுள் சென்று அவ்வாடவனைத் தூக்கித் தனது மடியில் வைத்துக்கொண்டு "நாதா! இதென்ன கட்டுகள்? என்ன ஆபத்து நேரிட்டது" என்று வெகு பரிதாபத்துடன் வினவினாள்.

அவ்வாடவன் மூர்ச்சை தெளிந்திருந்தானெனினும் அவனால் பேசமுடியவில்லை. அவனுடைய கண்கள் அடிக்கடி திறந்து பார்த்துக்கொண்டிருந்தன. "சகோதரரே! தங்களுக்கு வந்தனம்! இவருக்கு என்ன ஆபத்து நேரிட்டது? இதென்ன மண்டைக்கட்டுகள்? தாங்கள் இவரை எங்கு சந்தித்தீர்கள்? இவர் எங்கு ஆபத்துக்குள்ளானார் என்பதை தயவு செய்து எனக்கு விளங்க உரைக்கமாட்டீர்களா? தாங்கள் இவருக்கு உதவியளிக்காவிடில் இவருடைய நிலைமை மிகமோசமாகிவிடும் என்று யூகிக்கிறேன். எனக்கு மாங்கல்யப்பிச்சை யளித்த தங்களின் நன்றியை நான் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் மறக்கமுடியாது" என்று சரோஜினி யென்ற அம் மங்கை அக்காரை ஓட்டிவந்தவரிடம் தயவாகக்கேட்டாள். காரை ஓட்டிக்கொண்டு வந்தவர்:—"அம்மா! ஆபத்து ஒன் றும் நேரிட்டுவிடவில்லை. இவர் ஆயாசமாயிருக்கிறார். ஆத லால் இவரை வீட்டுக்குள் எடுத்துக்கொண்டு போய்ப் படுக்கவைப்போம். அதன்பின் நடந்ததைச் சொல்கிறேன். நீங்கள் வீணாய்க்கவலைப்படவேண்டாம்" என்று கூறிய வாறே காரினின்றும் இறங்கி அவ்வாலிபரைத் தூக்கி வீட் டுக்குள் கொண்டு சென்றார். அம்மங்கையும் அவ்வாடவ னின் கால்களைப் பிடித்தவாறே வீட்டுக்குள் சென்று அங் குள்ள ஓர் மஞ்சத்தில் படுக்கவைத்தாள். அதன்பின் அந்த டிரைவர் சொல்லியபடியே சில மருந்துகளைத் தயார்பண்ணி அவ்வாடவனின் உட்செலுத்தினாள். பின்பு அங்கு போடப் பட்டிருந்த நாற்காலியில் அமரும்படி டிரைவரைக் கேட்டுக் கொள்ள அவரும் அமர்ந்தார்.

சரோஜினி:—"சகோதரரே! இவருக்கு நேரிட்ட ஆபத்து என்ன? தாங்கள் யார் என்பதையும் எனக்கு விளக்கக்கூடாதா?"

டிரைவர்:—"அம்மா! நான் சீக்கிரம் பள்ளிக்கூடத் திற்குச் செல்லவேண்டும். அதிக நேரம் தாமதித்தல் கூடாது. இன்னும் 15 நிமிஷங்களே உள்ளன. ஆதலால் நான் மறுமுறை வந்து தங்களைக் கண்டுகொள்கிறேன். எனக்குப்போக விடை தாருங்கள்."

சரோஜினி:—சகோதரரே! பள்ளியில் பயிலும் தங்க ளுக்கு இவ்வளவு தயாள குணம் உள்ளதைப் பாராட்டுகி றேன். தாங்கள் சீக்கிரம் செல்லவேண்டுவது அவசியமென் றாலும், இந்த விபத்தை அறிவிக்காமலும், எனக்கு மாங்கல் யப் பிச்சையளித்த தங்களின் வரலாற்றைக் கூறாமலும் செல் வது சரியல்ல. ஆதலால் என் மனம் நிம்மதியடையுமாறு நடந்தவைகளைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிரைவர்:—"சகோதரி! நீ கேட்டுக்கொண்டதற்கிணங்க எனது வரலாற்றையும் நடந்தவற்றையும் கூறுகிறேன். கேள். என் பெயர் இராஜேந்திரன். நான் லெக்ஷ்மி விலாச மாளிகையில் வதிந்து வருகிறேன். நான் பிறந்தது பம்பாய் நகரம். நான் இவ்விடம் கல்லூரியில் கல்வி பயின்று வருகிறேன். நான் கல்லூரிக்குச் செல்லப் புறப்படும் போது எனது மாளிகைக்கு அருகில் இவர் இரத்த வெள்ளத்தில் உருண்டுகொண்டிருந்தார். இதைக்கண்டதும் நான் திடுக்கிட்டுப்போனேன். அங்கு ஒரு மனிதனுகிலும் அந்த நிமிஷமில்லை. நான் உடனே என் வீட்டுக்கு வந்து எனது காரை எடுத்துக்கொண்டு இவரையும் அக்காரில் ஏற்றி வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு வேண்டிய சிகிச்சைகளெல்லாம் செய்வித்து, காயங்களுள்ள இடங்களில் மருந்துகளை வைத்துக்கட்டினேம். இவருக்கு மூர்ச்சை வந்தபின் இவர் எங்குள்ளவர் என்பதைத் தெரிந்துகொண்டு இவ்விடம் கொண்டுவந்தேன். போலீசுக்கும் இது விஷயத்தைத் தெரிவித்திருக்கிறேன். நீ வீணுக வருந்தவேண்டாம். நான் செல்லலாமா?"

சரோஜினி:—"இராஜேந்திரா! நான் உமது விலையேறப்பெற்ற நேரத்தை வீணுக்க விரும்பவில்லை. நீங்கள் இப்போது சென்றுவிட்டு இன்று மாலையில் வந்து என்னைக் கண்டுகொள்ளுங்கள். நான் எனது விருத்தாந்தத்தை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது நீங்கள் செல்லலாம். மாலையில் தவருமல் வருவீர்களா?"

இராஜே:—"சரி, அவ்விதமே வருகிறேன். நான் சென்று வருகிறேன்" என்று கூறியவாறே இராஜேந்திரன் வெளிப்பட்டான். அன்று பள்ளிக்கூடம் செல்ல 5 நிமிஷங்களே உள்ளன. ஆதலால் அக்காரில் ஏறிக்கொண்டே சென்றுன். காரும் வாயுவேகம், மனேவேகமாய்ப் பறந்து சென்று குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர்ந்தது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுபகல் நேரமாகியதும் மதனகோபாலன் வெளிச் செல்லமுயன்முன். அப்போது சரோஜனி அவனது இரு கரங்களையும் பற்றி மெதுவாக பேசலானுள். "நாதா! தங்களுடைய மண்டைக்கட்டுகள் இன்னும் சரியாக காயவில்லை. அதற்குமுன் வெளிச்செல்ல முயலுகிறீர்களே! அநேக சோம்பேறிகள் தங்களை சூழ்ந்துக் கொண்டு மதுபானம் அருந்தி தங்கள் கையிலிருக்கும் பணத்தை சூரையாடிக் கொள்வது மன்றி தங்களை ஆபத்திற்குள்ளும் ஆக்கிவிடுகிருர்கள். இவ்விதமே இன்று காலையும் நடந்திருக்கிறது. இராஜேந்திரன் என்ற உத்தமர் தங்களுக்கு உதவிசெய்திருக் காவிடில் தக்களுடைய கதி என்னவாகும்? நாதா! வேசையரின் ஆசையை அறவே ஒழியுங்கள். அவர்களால் தான் தங்களுக்கு அடிக்கடி அபாயமேற்படுகிறது. அவர்களிடமிருந்து வித விதமான நோய்களையும் பெற்றுக் கொண்டு கஷ்டப்படுகிறீர்கள். என்னைப் பார்க்கிலும் அவர்கள் எவ்வகையில் வெற்றி பெற்றிருக்கிருர்கள். அவர்களைப் பார்க்கிலும் நான் என்ன அழகிலாவது, நடத்தையிலாவது, குணத்திலாவது தாழ்ந்தவளா? நானும் ஓர் பெண்தானே. என்னை எதற்காக தாங்கள் மணந்து கொண்டிருக்கிறீர்கள்? என் மனதை இவ்விதமும் துன்பப் படுத்தலாகுமோ? தங்களை மணந்து ஒருவருட காலமாகியும் நான் என்ன சுகத்தை அனுபவித்திருக்கிறேன்? வேலைக்காரியைப் பார்க்கிலும் இழிவாக அன்றோ நடத்தப் படுகிறேன். தங்களுக்கு எதற்காக பெண்சாதிவேண்டும்? தாங்கள் என்னை மணக்காமலிருந்து விட்டால் நான் இவ்வாறு துன்பம் அனுபவிக்க வேண்டியதிருக்காது. வேண்டுமானுல் நான் என் ஜீவிய நாள்முழுவதும் தங்களுடைய வேலைக்காரியாக இருந்திருப்பேனே. எனது தாய் தந்தையர்கள் அனியாயமாக என்னைக் கெடுத்து விட்டார்கள். பிராணநாதா! போனது போகட்டும். இனிமேலாவது நாம் ஒற்றுமையுடன் இல்லறத்தை நடத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோம். வேசைகளின் எண்ணத்தை தங்களின் மனதி லிருந்து அகற்றி விடுங்கள். என்னைச்சந்தோஷப்படுத்த என் னுடன் வாழ்க்கையை நடத்துங்கள்" என்று கண்ணீர் வடிய விட்டவாறே புலம்பியழுதாள்.

இவளுடைய கண்ணீரைக் கண்டதும் மதனகோபால னுக்கு கோபம் மண்டி எழுந்தது. தனது கரத்தைப் பிடித் திருந்த சரோஜனியை உதறித் தள்ளினன். "அடி! நீ உனது குணத்தைக் காண்பித்துவிட்டாயே! நாய்போல மூலேயில் கிடக்காமல் இல்லாததெல்லாம் பேசுகிருயே. ஐயோ பாவ மின்னு கொஞ்சம் சோறுபோட்டா எனக்கு உபதேசமா செய்றே. நன்னுயிருக்கு. ஏழையாச்சே நாமாவது சோறு போட்டு வளப்பமின்னு கொண்டுவந்தேன். நீ இல்லாத உபதேசம் பண்ணுறேயே. ஏதோ இரண்டு மூன்று எழுத் தைப் படித்தாளாம். திருத்தமாக தைரியமாக ஓர் ஆண் பிள்ளை முன்னுக்கபேசுகிரு, உன்னை நான் செய்றேன் பாரு. உன் சொல்படியாகவா நான் நடக்கணும். நல்லது நடக் கிறேன். என் ஆசைக்கண்ணுட்டிகளை வேசயன்னு சொல்றேயே. உனக்கு அவ்வளவு தைரியமா? பிச்சைக் காரகழுதை. அடுப்பூதத்தானே உன்னைக் கொண்டுவந்தேன். நீ பெரிய ராணியா இருக்கலாமென்னு நினைச்சயோ. மரி யாதையாக வீட்டு வேலையைபாரு. போ மூதி" என்று உதைத்து தள்ளியதும் பொத்தாரென்று சரோஜனி கீழே விழுந்தாள். என்றாலும் மறுபடியும் எழுந்து பேசலுள்.

"நாதா! தாங்கள் என்னைக்கொல்லாமல் கொல்கிறீர்கள். ஏழைசொல் அம்பலமேராதல்லவா? தாங்கள் இன்று வீட்டி லிருந்து இந்தக் காயங்களை குணப்படுத்திக்கொண்டு செல் லுங்களேன். இன்று ஒரு நாளாவது தங்களுடைய கண் ணுட்டிகளைப் பார்க்காமலிருக்க முடியாதா? அல்லது அவர் களை வேண்டுமாயினும் இவிடம் அழைத்து வருகிறேனே. நீங்கள் இருங்கள். நான் செய்ததவப்பயனைநான் அநுபவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேன்" என்று கூறி வெளிச்செல்ல முயன்ருள். "ஏ! உன்னை இலையெடுக்கச் சொன்னேனு? எத்தனைபேரு சாப்பிட்டாங்கண்ணு கணக்கெடுக்கச் சொன்னேனு? போகிருயா உள்ளுக்கு அல்லது உதை வேண்டுமா? நீ போய் அவர்களை கொலை செய்யவா எண்ணுதே? அது முடியாதம்மா முடியாது. அவர்களும் நானும் இன்று இரவு இங்கு வருவோம். நல்ல சாப்பாடு சரிகட்டு. அழாதே. இல்லேன்னு உங்கப்பன் வீட்டுக்குப்போ." என்று கூறியவாறே மதனகோபாலன் சரோஜனியை வீட்டினுள் தள்ளி கதவைசாத்திக்கொண்டு வெளிச் சென்ருன்.

"ஐயோ! ஈசா! என்னை நீ என்னபாடுதான் படுத்துகிருய்? நான் ஏழையாகப் பிறந்தேன். ஏழையை காதலித்து, ஏழையையே மணக்க நிச்சயித்திருந்தேன். மகானுபாவர்கள் என் தாய் தந்தையர்கள் என்னை இப்பதருக்குக் கட்டிக் கொடுத்துவிட்டனர். நான் எக்கேடு கெட்டாலுஞ் சரி. எனது பெற்ருேரின் முகத்தையும் கூட பார்க்கக்கூடாது. தலைவிதிக்கு தலையை சிரைத்தால் போதுமா?" என்று பல வாறு எண்ணமிட்டுக் கொண்டே வீட்டுவேலையை சரோஜனி பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலைநேரமும் சமீபித்தது. 5 மணி சுமாருக்கு இராஜேந்திரன் கல்லூரியினின்றும் வீடுதிரும்பினுன். தான் காலையில் கண்ட கோரக்காக்ஷி அவனுக்கு ஞாபகம் வரவே சரோஜனியின் வீடுசெல்ல உத்தேசித்தான். அவ்விதமே சரோஜனியின் வீடு வந்துசேர்ந்தான். இவனது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சரோஜனி புன்னகை தவழ்ந்த முகத்தோடு இராஜேந்திரனை வரவேற்ருள். அப்போது இராஜேந்திரன் "சகோதரி! எனது நண்பரின் சுகம் எப்படி? அவர் எங்கே இருக்கிருர்?" என்று வினவினுன்.

"இராஜேந்திரா! அவருடைய வழக்கம்போல் அவர் வெளியே சென்றிருக்கிருர். நீர் இப்போது பார்க்கவேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றால் தாசி சுந்தரவேணியின் வீடு சென்றால் பார்க்கலாம். அல்லாவிடில் இதற்கு அடுத்துள்ள வீதியிலிருக்கும் மதுபானக்கடையில் காணலாம். என்செய்வது நான் எவ்வளவோ நீதி மொழிகளைக் கூறினேன். குடியால் வரும் கேடுகளை ஒருமுறை யல்ல பன்முறை விளங்க உரைத்தேன். தாசியின் நேசத்தினால் ஜனங்கள் பொருளை இழந்து, சுய அறிவற்று, பலர் நகைக்க நடந்துவருவதையும் கூறினேன். என்ன சொல்லியும் என்ன? செவிடன் காதில் ஊதியசங்கு நாதம் போலாயிற்று" என்றுகூறி அவள்கண்ணீர்வடித்தாள்

வீட்டுக்கு சொந்தக்காரர் இல்லாத நேரத்தில் அவருடைய மனைவியுடன் அன்னியனாகிய ஒருவன் சம்பாஷணை செய்வதை இராஜேந்திரன் விரும்பவில்லை. தான் வெளியே சென்றால் தன் மீது கொண்டுள்ள அன்பினால் அம்மங்கை தடுப்பாள் என்பதையும் அறிந்தான். ஈற்றில் அப்பெண் மகள் துக்கத்தோடிருக்கும் இதுசமயம் செல்வது சரியல்லவென்று எண்ணி பேசலானான்.

"சகோதரி! உனது கணவருடைய செய்கையையும் நடத்தையையும் கேள்வியுற்று நான் உண்மையிலேயே வருந்துகிறேன். இனி என்செய்வது? யாரை நொந்து என்ன செய்ய? இவ்வுலகில் நல்ல பத்தினிப் பெண்களுக்கு குடிவெறியிலும், கொள்ளையிடுவதிலும், கொலைசெய்வதிலும், வேசையர்களுடன் நட்புக்கொள்வதிலும், பேர்பெற்று விளங்கும் மணாளனும், ஒழுக்கமுள்ள ஆடவருக்கு—நன்றாய் படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்கு, வீண் ஆடம்பரச் சிலவு செய்வதிலும், வீண்சண்டை உண்டாக்குவதிலும், பிறஆடவர்களிடம் சோரநட்பு வைப்பதிலும், அக்கினிசாக்ஷியாக மணந்தவரை வேலைக்காரனிலும் தாழ்வாக எண்ணி அவமதிப்பதிலும் பிரியமுள்ள பெண்கள் மனைவியாக திகழுகின்றனர். இவ்விஷயங்களில் அடிக்கடி தற்கொலைகளும் நடக்கின்றன என்பதை பத்திரிகையில் வாசிப்பதுமன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிலும் காண்கிறேமல்லவா? ஓர் யௌவன மங்கையும், ஓர் வாலிபனும் கருத்தொருமித்து, காதலர்களாகி மணம் புரிந்துகொண்டாலும், அத்தம்பதிகளுக்குப் பற்பலவித மான இடையூறுகள் சேர்ந்துவிடுகின்றன. எல்லாம் ஈச னின் திருவிளையாடலே. இதனால் நாம் வருந்துவதில் பிர யோஜனமில்லை. "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணு தல் (கணவனைக் காப்பாற்றுதல் நல்ல வம்சத்தில் பிறந்த பெண்ணுக்கு அழகாகும்) என்ற பழமொழியைப் பின்பற்றி பெண்கள் நடக்கவேண்டும். சகோதரி! நீ கண்ணகியின் கதையைக் கேட்டிருப்பாயன்றோ! அவளது காதலனாகிய கோவலன்

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற்பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ
யாளிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங்கூந்தல் தையால்! நின்னை!"

என்று இவரைப் பாராட்டிச் சீராட்டி உலவாக்கூறுகின்றான். இவ்விதம் புகழ்ந்து கூறிய கோவலனே கற்பின் கொழுந்தா ளாகிய கண்ணகி தேவியைக் கைவிட்டுப் பொய்யை மெய் யெனக் காட்டி ஒழுகும் மாதவி என்னும் பரத்தையை விரும்பி அவள் மையலில் மூழ்க தன் செல்வம் முழுவதை யும் சிந்தினனன்றோ! ஈற்றில் மாதவி என்னும் பரத் தைக்குக் கொடுக்கப் பணமில்லாமல் திரும்பி வரவும், கண் ணகி "நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டி" மாதவிக்குக் கொடுக்கப் பொருள் பெறுவதற்குத் தன் சிலம்பைக் கொடுத்தாளன்றோ! பதிவிரதாப் பத்தினிகளுக்கு இது வன்றோ அழகு. புருஷன் மனங்கோணுமல் நடந்த கண் ணகிதேவி கொடுத்த சிலம்பை கோவலன் விற்கச் சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் சிலம்பு திருடினன் என்று குற்றஞ் சாட்டப்பட்டு பிராணதண்டனை விதிக்கப்பட்டான். இதைக் கேட்டதும் கண்ணகிதேவி என்ன நிலைமையை அடைந்திருப்பாள் என்பதை சிந்திக்கும்போது என்னையறியாமலே எனது கண்களினின்றும் நீர் பெருக ஆரம்பித்துவிடுகின்றது. அம்மங்கை வீட்டில் ஒப்பாரி வைத்துக்கொண்டு அழுதனளா? அன்றி தனது கணவன் மாண்டபின் தான் உலகில் உயிரோடிருப்பது நன்றன்று என எண்ணி தற்கொலை புரிந்தனளோ? இல்லை. அதி புத்திசாலியான கண்ணகி தகுந்த ஆதாரங்களுடன் அரசனிடம் சென்று அவருடன் விவாதம் செய்தாள்.

"பெண்ணணங்கே! கணவனைக் கொன்றல் கடுங்கோலன்று; வெள்வேற் கொற்றங்காண்" என்று கண்ணகியை நோக்கி அரசன் கூற, கண்ணகி அவனது அறியாமையை நோக்கிக் குறுநகை கொண்டு "எனது சிலம்பின் பரல் இரத்தினம்" என்க, அரசன் தனது சிலம்பின் பரல் முத்து என்கவும் கோவலனிடமிருந்து பெறப்பட்ட சிலம்பைக்கொண்டு வரும்படி அரசன் கட்டளை பிறப்பிக்கவும் சிலம்பு கொண்டு வரப்பட்டது. சபையில் உடைத்ததும் அதினின்றும் மாணிக்கப்பரல் தெறித்து விழுந்தது. இதைக் கண்ணுற்ற அரசன் மயங்கி, "பொன் செய்யுங் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்? யானே கள்வன். மன்பதைத் தாக்குந் தென்புலங்காவல், என் முதற் பிழைத்தகெடுக என்னுயுள்" என்று அலறி வீழ்ந்து அலமந்து உயிர் நீத்தானும். அத்துடனும் அவள் நில்லாது அவனுக்குக் கெடுபுத்தி கூறி அவனைத் தூண்டிவிட்ட அமைச்சர் முதலிய ஏனையோர் மீது அவளுடைய நாட்டஞ்சென்று தனது இடது ஸ்தனத்தைக் கையால் திருகி "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவியெனும் இவரைக்கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்று கூறி அதனை நகரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிய நகர் தீவாய்ப்பட்டது என்று கூறப்படுகின்றது. சகோதரி! கோவலனின் நடத்தையைக் கண்ட கண்ணகி மனம் எவ்வாறு இருந்திருக்கும்? அவள் தனது கணவனின் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய என்ன பாடுபட்டாள் பார்த்தாயா? அங்ஙனமிருக்க நீ வருந்துதல் கூடாது. கடவுள் உன் கணவருக்கு நல்ல புத்தியைச் சீக்கிரத்தில் அளிப்பார். எனக்கு நேரமாகிறது. நான் சென்று மறுமுறை வந்து உன்னைக்கண்டுகொள்கிறேன்'' என்று மொழிந்தான்.

இராஜேந்திரன் கூறிய மொழிகள் அவளுக்குச் சிறிது ஆறுதலளித்தன. என்றாலும் தன் உண்மைக்காதலன் ஜெயசீலனைப்பற்றிய நினைவு வரவும் முன்னினும் பார்க்கப் பன்மடங்கு அதிகமாக வருந்தலானாள். தனது மனதைச் சற்று தைரியப் படுத்திக்கொண்டு மெதுவாகப் பேசலானாள். ''இராஜேந்திரா! எனது துர் அதிர்ஷ்டம் இவ்விதம் இருக்கிறது. என்னால் ஓர் சுந்தர வாலிபர் துறவியாகவும் மாறிவிட்டார். இந்தப் பாவங்களை நிவர்த்திக்க நான் காசியாத்திரை செல்ல உத்தேசித்திருக்கிறேன். நான் உயிருடன் இருக்குமளவும் ஒவ்வொரு புண்யஸ்தலங்களையுங் கண்டு சேவிக்க விரும்புகிறேன். சகோதரா! எனக்கு மாங்கல்யப் பிச்சை யளித்த உமக்கு யாதாவதொரு இடைஞ்சல் நேரிட்டாலும் அன்றி உமது பந்துக்களில் யாருக்காகிலும் இடைஞ்சல் அன்றி அபாயம் நேரிட்டாலும் நான் அச்சமயத்தில் பிரசன்னமாகி உதவிசெய்த பின்தான் எனது ஆவி என் உடலைவிட்டுப் பிரியும். இது நிச்சயம்'' என்று சரோஜினி கூறினாள்.

இராஜேந்திரன்:—''சகோதரி! உன்னால் ஓர் வாலிபர் துறவியாகிவிட்டார் என்றனையே அதன் விபரம் யாது?''

சரோஜினி:—''அதையெல்லாம் எண்ணும்போது எனக்குத் துக்கமேலிடுகின்றது. என்றாலும் நீங்கள் அதையறிய விரும்புகிறபடியால் நான் சுருக்கிக்கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளுங்கள். நான் கல்விபயின்ற பள்ளியில் ஜெயசீலன் என்ற ஓர் வாலிபன் கல்விபயின்றான். நாங்களிருவரும் ஒரு வகுப்பிலேயே படித்தோம். எங்களுடைய வகுப்பில் முதலாவது (தேர்ச்சியுள்ள) மாணுக்கன் அவராகவும், இரண்டாவது நானுமாக திகழ்ந்தோம். அவருடைய அழகையும், சாந்த குணத்தையும், பேச்சு, எழுத்து வன்மையையும், பிறர்பால் செலுத்திய அன்பையும் கண்ணுற்ற நான் அவரைக் காதலிக்கலானேன். நாங்கள் வீடு செல்லும்போதும், பள்ளிக்குச் செல்லும்போதும் ஒன்றுகவே செல்வோம். என்றாலும் நான் அவர்மீது கொண்டுள்ள காதலை அவரிடம் தெரிவிக்க ஐயமுற்றேன். எனது கருத்தை வெளியிட்டால் அவர் என்மீது தப்பான எண்ணங்கொண்டு விடுவாரோ என்று பயந்தேன். இவ்வாறிருக்கும்போது, ஒரு நாள் பள்ளிக்கூட விஷயமாக நான் அவர் வீடு சென்றேன். அவர் தனது அறையிலிருப்பதாக வேலைக்காரச் சிறுமி சொன்னதால் நான் அங்கு சென்றேன். அவ்வறையின் நடுவில் ஓர் வட்ட வடிவமான மேசை ஒன்று போடப்பட்டு அதன்மேல் கிராமபோன் பெட்டி ஒன்று வைக்கப்பட்டு, அது சுப்பையா பாகவதர் பாடிய "காதலின் பாக்கியம் கிதரும் யோக்கியம்" என்னும் சங்கீதத்தைப் பாடிக்கொண்டிருந்தது. "பேதலிக்காதே உன்னைப் பிரிந்திடேன் சத்தியமிதே" என்ற அடியைப் பாடும்போது நான் அவ்வறையினுள் சென்றேன். அங்கு அவர் எனது போட்டோப் படத்தைக்கையில் வைத்துக்கொண்டு, அதை உற்று நோக்கியவாறே இருந்தார். அப்போது நான் "ஹா! ஹா! உன்னுடைய கரத்திலிருக்கும் போட்டோப் படத்திலுள்ள பெண்ணை—சரோஜினியை விட்டு நீ பிரியமாட்டாயென்பது சத்தியம்தானு?" யென்று வினவியவாறே நான் அவர் அருகில் சென்றேன். சற்றும் எதிர்பாராதவிதமாக நான் அவ்வறையினுள் வந்ததை யறிந்த ஜெயசீலன் தனது கரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்த படத்தை மேசைமீது எறிந்துவிட்டு என்னை ஆலிங்கனம் செய்தவாறே "சரோஜினி! நான் உன்னை மறக்க மாட்டேன் என்பது சத்தியம்தான். நீ என்னை மறந்துவிடு வாயோ" என்று கூறி பக்கத்தில் போடப்பட்டிருந்த மஞ்சத்தின்மீது அமர்ந்து என்னையும் அவர் தமது மடியில் வைத்துக்கொண்டு அவர் என்னைக் காதலிப்பதாகவும், நான் அவரது காதலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார். நானும் அவரைக் காதலிப்பதாகத் தெரிவித்து ஆனந்தங்கொண்டோம். அன்று முதல் நாங்கள் காதலர்களானோம்" என்று சரோஜினி கூறியதும் இராஜேந்திரன் ஆழ்ந்த யோசனையிலீடுபட்டான். அப்பெண்ணின் காதல் சரித்திரத்தைக் கூறியதும் இவருக்குத் தனது கதை ஞாபகத்திற்கு வந்துவிட்டதுபோலும்!

சரோஜனி:—"சகோதர! உன்னிடம்—பள்ளிச்சிறுவனுகிய மாணுக்கனிடம் நான் இவ்விதமொழிகளை கூறுவது தகாது. எனினும் எனது துக்கமேலீட்டினுலும், நீ எனது சரித்திரத்தை யறிய விரும்பியதாலும் தான் கூறினேன். நானும் ஜெயசிலனும் காதலர்களாகி மனமொத்து வாழும் போது எனது தந்தை, மதனகோபாலனென்னும் புண்ணியவானுக்கு என்னை மணஞ்செய்விக்க கருதினர். இதைக் கேள்வியுற்ற நான் ஜெயசீலனை அணுகி என்னைக் கைவிட்டு விடக்கூடாதென்றும், எனது சுகவாழ்வில் மண்ணையள்ளி போட்டு விடக்கூடாதென்றும் பணிந்து கேட்டுக்கொண்டேன். அவர் அப்போது என்னை சகோதரி என்றழைத்து என் தந்தையின் பிரியப்படியே நடக்கவேண்டுமென்றும், நான் மதனகோபாலனுக்கு மனைவியாக வாழ்வதைப்பார்க்கிலும் தற்கொலைபுரிந்து மாண்டுபோவதே மேல் எனக்கருதி உயிர் நீத்தால்தானும் உயிரை மாய்த்துக்கொள்வதாக சத்தியம் செய்தார். அந்தோ! அப்போது நான் நெருப்பில் விழுந்தபுழுப்போல் துடித்தேன். கண்ணீரை ஆருய்ப்பெருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன். என்றாலும் அப்புண்ணியவானின் மனம் இளக வில்லை. அன்று அவர் கூறியபடியே மதனகோபாலனை மணந்துகொண்டேன். இப்போது நான் படும் பாட்டை இவ்வுலகிலிருக்கும் பஞ்சுகூட பட்டிருக்காது. என் செய்வது! காதலரது புத்தியால் நான் கெட்டேன். ஜெயசீலர் என்னையே மணந்து கொள்வதாகவும், மணக்க முடியாவிட்டாலும் தான் பிரமச்சாரியாக விருந்து கடவுளின் பாதார விந்தத்தை யடைந்து விடுவதாகவும் எனக்கு ஏற்கனவே உறுதி மொழி கூறியிருக்கிறார். அவர் சொன்ன சொல்படி நடப்பவர். தனது வாக்குறுதியை நிறைவேற்ற தனது உயிரையும் கூட தியாகஞ்செய்வார். அவ்விதமே, இப்போது என்னை மணக்கவில்லையாதலால் அவர் இவ்வுலகவாழ்க்கையில் வெறுப்புற்று, சகலதையுந்துறந்து சந்நியாசியாய் சென்று விட்டதாகவும் கேள்விப்படுகிறேன். நானும் எனது உண்மைக் காதலரை பின் பற்றிச்செல்ல உத்தேசித்திருக்கிறேன். எல்லாம் ஈசன் செயல்! உயிருள்ளவரையும் கடல்கொள்ளாக் கவலைதான்.''

இராஜேந்திரன்:—"சகோதரி! நான் சீக்கிரம் வீடு செல்ல வேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால் நான் கல்வி பயிலும் கல்லூரியில் சுந்தரி என்னும் ஓர் பெண் கல்வி பயின்றுவருகிறாள். அவள் கல்லூரிக்கு செல்லும்போதும் என்னையும் அழைத்தே செல்வாள். கல்லூரியினின்றும் வீட்டுக்குத்திரும்பும்போதும் ஒன்றாகவே வருவோம். இன்று நான் ஒவ்வொரு நாளும் புறப்படும் நேரத்திற்கு முன்னதாகவே புறப்பட்டு வந்துவிட்டேன். அவள் எனது வீட்டுக்குப் போயிருப்பாள். நான் கல்லூரிக்கு சென்றுவிட்டதாக அறிந்து ஏமாற்றமும், திகிலும், ஐயமும் கொண்டிருப்பாள். நான் கல்லூரியிலும் அவளைச்சந்திக்கவில்லை. ஆதலால் அவள் மனம் சஞ்சலமடைந்து இப்போது வீட்டுக்குவந்து என்னை எதிர் நோக்கிக் கொண்டிருப்பாள். நான் சீக்கிரம் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ருே! நீ உனது காதலரை பின்பற்றி தேசசஞ்சாரம் செய்வதை நான் விரும்பவில்லை. மதனகோபலனை நான் கூடிய சீக்கிரம் நல்வழிப்படுத்த பிரயாசைப்படுகிறேன். பழையகதைகளை யெல்லாம் மறந்துவிடு. இல்லறமல்லது நல்லறமன்று. நான் நாளை மதனகோபாலர் வீட்டிலிருக்கும்போது வந்து அவரைக் கண்டுகொள்கிறேன். நீ வருந்தவேண்டாம். நான் சென்று வருகிறேன்" என்று விடைகேட்கவும், சரோஜினி விடைதர வீடு செல்லலானுர்.

இராஜேந்திரன் வீடு சென்றதும் இவர் எண்ணிய படியே அங்கு சுந்தரி தலைவாயிலில் நின்று கொண்டிருந்தாள். இராஜேந்திரனைக் கண்டதும் சிறுமி சுந்தரி ஆனந்தக்கடலில் மூழ்கியவளாய் "நண்பரே! என்னை விட்டுப்பிரிய உமது மனம் இடங்கொடுத்துவிட்டதா? ஏது இன்று அதிகாலையில் பிரயாணப்பட்டு விட்டீர்? பாடசாலையிலும் உம்மைக் காண முடியவில்லை. ஏதோ இரகசியமான ஜோலிகளுக்கு சென்று விட்டீர்போலும்!" என்று கூறினுள்.

இராஜேந்திரன்:—"சுந்தரீ! உன்னை விட்டுப்பிரிய என் மனம் எவ்விதம் இடங்கொடுக்கும்? நீ சிறுபிள்ளை யாதலால் உலக சுபாவங்களும், ஒருவருடைய குணதிசயங்களும், நடத்தையும் உனக்கு தெரியவராது. மதனகோபாலன் என்னும் ஓர் வாலிபர் இன்று காலையில் நமது மாளிகையின் அருகே இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அக்கோரக்காக்ஷியை எண்ணுந்தோறும் எனது மனம் பதைபதைக்கிறது. அவரை வைத்தியசாலைக்கு கொண்டுபோய் மருந்துகளை உட்செலுத்தி மூர்ச்சை தெளியவைத்து, அதன்பின் அவர் இருப்பிடத்தையறிந்து அவருடைய வீட்டில் அவரைச்சேர்த்துவிட்டு கல்லூரிக்கு செல்லலானேன். அப்போது 5 நிமிஷங்களே இருந்தன. உடனே நான் காரிலேயே கல்லூரிக்குவந்து விட்டேன்." என்றுகூறி முடியுமுன் தந்திச்சேவகன் அவ்விடம் வந்து சேர்ந்தான். "தந்தி" யென்றவுடன் நம்மவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் அநேகர் பயப்படுவது இயல்பல்லவா? அத்தன்மை போல இராஜேந்திரனும் சுந்தரியும் மனசஞ்சலத்தோடு தந்தியை பிரித்துப் படித்தனர். மறுநிமிஷம் இராஜேந்திரன் அடியற்ற மரம்போல சாய்ந்தான். சுந்தரி அவனைத் தூக்கி பக்கத்து அறையிலுள்ள மஞ்சத்தின் மீதுவைத்து மூர்ச்சைதெளிய வைத்தனள். சிறிதுநேரம் சென்றபின் மூர்ச்சை தெளிந்து தான் கல்வி பயின்றுவரும்போதே 'தனது தந்தை காலகதியடைந்தார்' என்று தந்தியில் குறிப்பிடப் பட்டிருப்பதையும், குடும்பபாரத்தை இச்சிறுவயதிலேயே ஏற்கவேண்டியதாய் விட்டது, என்றும் பலவாறாக சுந்தரியிடம் கூறி கண்ணீர் வடிக்கலானான். சுந்தரிக்கு இராஜேந்திரனைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாக துக்கமேலிட்டது. தனது இன்பக்காதலன் இச்சிறுவயதிலேயே கஷ்டப்பட நேர்ந்ததே என வருந்தினாள். இராஜேந்திரனின் கண்களிலிருந்து வெளிப்படும் முத்துப்போன்ற ஒவ்வொரு துளி நீரையும் கண்டு, அவனுடைய உடலிலிருந்து இரத்தம் தான் சிந்துகிறது என்று மனம் வருந்தினாள். பின் மனந்தேறி, இராஜேந்திரனுக்கு ஆறுதல் மொழிகள்கூறி அவனைத் தேற்றினாள். ஒளவைபாடிய 'ஆண்டாண்டுதோறும்' என்ற கவியையும் இன்னும் அநேகர் உடற் கூற்றைப்பற்றி பாடியவற்றையும் கூறி ஒருவாறு சிறிது துக்கத்தைப்போக்கினாள்.

இதன் பின்தான் நாம் இரண்டாம் அத்தியாயத்தில் கூறியபடி இராஜேந்திரன், தனது பம்பாயிலுள்ள சுந்தரவிலாச மாளிகையில் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அது சமயம் சுந்தரியும் அங்குசெல்ல இராஜேந்திரன் தனது நிலைமையை அவளிடம் கூறிவருந்தினான் என்பது சொல்லாமலே விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—5.

## மதனகோபாலனின் ஞானோதயம்.
## கண் குருடானபின் சூரிய நமஸ்காரம்.

இவ்விதமாகச் சில நாட்கள் சென்றபின் சரோஜினி தான் கோரியபடி விசேஷ ஸ்தலங்களைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்று நிச்சயித்துவிட்டாள். அவள் தனது கணவருக்குப் பின்வருமாறு ஓர் கடிதம் வரைந்தாள்:—

......வந்தனம்!

எனது எண்ணத்திற்கு மாறாக என்னை எனது பெற்றோர்கள் தங்களுக்கு மணம் செய்வித்துவிட்டனர். பொருத்தமற்ற விவாகத்தினால் நன்மையுண்டாகமாட்டாது என்பதை எனது தந்தையருக்கு நான் எவ்வளவோ எடுத்துக்கூறியும் பயன்படவில்லை. நான் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரையே காதலித்தேன். எனது துர் அதிர்ஷ்டம் அவரை மணக்க முடியாமற் போய்விட்டது. கேவலம்! பணப்பேராசை எனது பெற்றோரைப் பிடித்ததினால் எனது வாழ்க்கைப் பாழாய்விட்டது.

என்றாலும் எனது மனதைத் திருப்தி செய்துகொண்டு தங்களை நான் கணவராக ஏற்றுக்கொண்டேன். தங்களைக் கடவுள் என நான் நித்தியமும் துதித்தவண்ணமாயிருக்கிறேன். தாங்கள் வேசையர் வலையில் கட்டுண்டு தவிக்கிறீர்கள். நான் தங்களுக்கு எத்தனையோ முறை புத்திமதிகளைக்கூறியும் அவை "விழலுக்கிறைத்த நீரைப்போல்" ஆகிவிட்டன. தங்களுடைய தந்தையவர்கள் அரும்பாடுபட்டுச் சேமித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த திரண்ட செல்வமெல்லாம் காலியாகிவிட வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது.

நான் இங்கு இருப்பதால் தங்களுடைய காமக்கிழத்திகளுக்கு அதிக இடைஞ்சலாக இருக்கும்—இருக்கிறது. என்னைக் கொலை செய்யவும் அவர்கள் எத்தனையோ முறை பிரயாசைப் பட்டிருக்கிறார்கள். எனது துர் அதிர்ஷ்டம் நான் அக்கொலைகளிலிருந்தும் தப்பிவிட்டேன். ஆதலால் என்மீது அவர்கள் எல்லையற்ற வெறுப்பு—சினங்கொண்டுள்ளனர். அவ்விதம் தங்களுடைய காமக்கிழத்திகளுக்கு என்மீது கொண்டுள்ள கோபத்தைத் தணிக்க ஓர் வழி இப்போது தோன்றுகிறது. தங்களுடைய சோரநாயகிகளுக்கு அடிமையாக நான் நின்று அவர்கள் காலாலிடும் கட்டளையை நான் சிரமேற்கொண்டு ஒரு நிமிஷத்திற்குள் செய்வித்து அவர்களைச் சந்தோஷப்படுத்த முயன்றும் பயன் படாமற்போனது விசனிக்கத்தக்கது. எஜமானிக்குப் பிரியமில்லாத ஓர் வேலைக்காரியை வைத்திருப்பதில் எஜமானிக்கும் மனத்திருப்தி உண்டாகமாட்டாது. வேலைக்காரிக்கும் நற்பெயருண்டாகாது. ஆதலால் எனது கோரிக்கையின்படி நடக்கச் சித்தமாகிவிட்டேன்.

அதாவது, நான் இவ்விடமிருந்தும் வெளிப்பட்டுப் போய்விட்டால் தங்களுக்கும் சௌகரியமுண்டாகும். தங்களுடைய காதலிகளும் அவர்களிஷ்டம்போல இவ்விடம் வந்து போய் இருந்துகொண்டு எஞ்சியுள்ள திரவியத்தையும் சூரையாடலாம். நான் இவ்வுலகில் ஜெனித்ததுமுதல் இன்று வரை கணக்கிலடங்காத பாவங்களைச் செய்துவிட்டேன். என்னால் ஓர் சுந்தர வாலிபரும் சகலத்தையும் துறந்து சந்நியாசியாகிவிட்டார் என்பதைத் தாங்களும் அறிந்திருக்கலாம். அவ்வுத்தமருடைய பெற்றோர்களும், உற்றார் உறவினரும் இதையறிந்து எவ்வித நிலையிலிருந்தனரென்பதைச் சற்று சிந்திக்கும்போது எனது மனம் பதைபதைத்து வெடிப்

பதுபோல் தோன்றுகிறது. இப்பாவங்களை யெல்லாம் நான் விசேஷ புண்ணியஸ்தலங்களைச் சுற்றிப்பார்த்து, சேவித்துக் கொண்டேனும் போக்கிவிடலாம் என்றுன்னி பிரயாணப் பட்டுவிட்டேன்.

"காசிக்குப்போனாலும் கருமந்தீராது" என்று நாடோடியாகச் சொல்லிக்கொள்வார்கள். அதுபோல நான் எண்ணிய விதம் புண்ணியஸ்தலங்களைச் சுற்றிச் சேவித்தாலும் எனது பாவங்களெல்லாம் முற்றிலும் நீங்கிவிடுமென்று நிச்சயமாக எண்ண இடமில்லை. இவ்வழியில் நான் தங்களுடைய உதவியை வேண்டுகிறேன். எல்லாம் வல்ல இறைவனிடம் மன்றாடிப் பெண் பேதையாகிய என் பாவங்களைப் போக்கும்படி தாங்கள் கேட்டுக்கொண்டால், நான் செய்த பாவங்கள் நீங்கக்கூடும். ஆதலால் இவ்வழியில் எனது வேண்டுகோளை ஆதரிப்பீர்களென நம்புகிறேன்.

இவ்வுலகிலுள்ள பெரியோர்கள் எனது நடத்தையிலிருந்து ஓர் இரகசியத்தைத் தெரிந்துகொள்வார்கள். எந்தப் பெண்ணாவது அவள் காதலித்த ஆடவனுக்கன்றி பிறிதொருவனுக்கு—அதிலும் அவளுடைய மேன்மையான குணங்களுக்கு முற்றிலும் மாறான குணங்களுடையவனுக்கு மணம் செய்விக்கப் பட்டால் அம்மண வைபவத்தினால் அவள் யாதொரு நன்மையையாவது—இன்பத்தையாவது அடைய முடியாது. அவள் தன்னுடைய உயிரைத் தனது இன்பக் காதலனிடம் ஒப்புவித்துவிட்டு—நிலையில்லாத ஊனத்தைச் சடலத்தைத் தன்னுடன்—தனது மனதிற்கு மாறான கணவன் இல்லத்தில் வைத்திருப்பாள். இது உண்மையன்றோ! எப்போது ஓர் ஆடவனைத் தனது மனதிற்குள் ஓர் பெண்ணானவள் புக இடங்கொடுத்தாளோ—அதிலும் காதலனாக ஏற்றுக்கொண்டாளோ அன்றே அவளுக்கு விவாகமாகி விட்டதென்றே கூறலாம். இதையெல்லாம் உணராமல் நமது பெற்றோர்கள் விபரீதமாக நடந்துகொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியாவது அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொள் வார்களென நம்புகிறேன்.

நாதா! இல்லை; இல்லை; எஜமானரே! என் உயிர் இவ் வுடலைவிட்டுத் தங்களின் பாதாரவிந்தத்தில்தான் பிரியு மென்று எனக்கு யாரோ ஒருவர் கூறுவதுபோலிருக்கிறது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் வந்தனம்! நான் சென்று வருகிறேன்.

இங்ஙனம், தங்களின் அடிமை
வேலைக்காரியும் மகா கொடிய பாதகியுமாகிய,
"சரோஜினி"

இவ்வாறு சரோஜினி கடிதம் எழுதி அங்குள்ள மேசையின்மீது வைத்துவிட்டு வெளிச்சென்றனள். "ஈசா! எல்லாம் உன் திருவிளையாடலேயன்றி வேறில்லை! உன்னால் ஆகாத காரியம் ஒன்றுண்டோ? நான் இந்தப்பெண் ஜென்ம மெடுத்ததில் யாது பிரயோஜனம்? பூமாதேவிக்குப் பார மாகவும், உத்தமர் ஜெயசீலரின் இன்ப வாழ்க்கைக்கு எம னாகவும், மகானுபாவர் மதனகோபாலரின் காதலிகளுக்கு இடைஞ்சலாகவும், ஆய்விட்டேன்! நான் செய்த பாவங் களைப் போக்கவேண்டியே இவ்வாறு நான் யாத்திரை செல் கிறேன்! இனியாகிலும் நினது மனம் இளகாதா? என் மீது இரக்கங்கொள்ளாயா? எனது பாவங்களை எல்லாம் மன்னித்து என்னை உன்னிடம் சேர்த்துக் கொள்ளும் காலம் எப்போது கிட்டும்!" என்று பலவாறு எண்ணமிட்டுக் கொண்டே ஒவ்வொரு ஸ்தலங்களையும் சுற்றிப்பார்த்துக் கொண்டும் அங்கு எழுந்தருளியிருக்கும் சாக்ஷாத் எம்பெரு மானைத் தெரிசித்துக்கொண்டும் சுற்றி வந்தாள்.

இவ்வாறு இவள் வரும்போது "இராமேஸ்வர" த்தி லுள்ள ஆலயத்தின் கண் ஒருநாள் சுவாமிதெரிசனம் செய்து கொண்டிருக்கும்போது, இவளுக்கு சற்று தூரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் காவிவஸ்திரமணிந்து உருத்திராக்ஷம் பூண்டு தாடிகளை நீளமாக வளர்த்துவிட்டு, தலையில் சடைகள்தொங்க, ஓர் வாலிபன் சகலதையும் மறந்து ஒரே நினைவாக சுவாமியின் மேல் கொண்டுள்ள பக்திமிகுதியினால் தன்னை யறியாமலே சுவாமியை பலவாறு புகழ்ந்து பாடிக்கொண்டு நின்றான். இவ்வாலிபனைப்போன்றே நமது சரோஜினியும் எல்லாம் வல்ல இறைவனைப்பற்றி பாடிய வண்ணமாயிருந்தாள் என்பதை நாம் விளக்கவேண்டியதில்லை. ஆனால் சரோஜினி தனது மனதிற்குள்ளேயே பாடினாளென்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதமாக சுமார் அரைமணி நேரம் சென்றபின் நமது சரோஜினி கண்ணை விழித்துப்பார்த்தாள். இதே நிமிஷம் அவ்வாலிபனும் கண்ணைத் திறந்துபார்த்தார். இருவரது கண்களும் எவ்விதமாகவோ ஒன்றாய்ச் சந்தித்துவிட்டன. தாம் யாரென்பதை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டனர். "ஹா! ஈசா! இதென்ன செய்கை? இது புண்ணில் கோலிடுவது போலிருக்கிறதே! பிரிந்த எங்களிருவரையும் —சகலமும் துறந்து நாடு சுற்றித்திரியும் எங்களை ஏன் மீண்டும் சந்திக்கச் செய்தாய்! இத்துடனாவது உனது திருவிளையாடல் நின்று கொள்ளட்டும்! இனி எங்களை சந்திக்கசெய்யாதே!" என்று இருவரும் ஈசனிடம் கேட்டுக்கொண்டு பிரிந்தனர். (இவ்வாலிபர் சரோஜினியின் உயிர்க்காதலன் ஜெயசீலன் என்று சொல்லாமலே விளங்கும்.)

இவ்விதமாக ஒவ்வொரு ஸ்தலங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது தூத்துக்குடியை கடந்து செல்லுகையில், அங்கு நாம் முன் ஒரு அத்தியாயத்தில் கூறியபடி பயங்கரமான ஓர் மாளிகையை நோக்கி ஸ்ரீநிவாஸனும், சீதாலெக்ஷிமியும் நடந்து செல்வதை சரோஜினி காணவும் திகைத்துப்போனாள். சீதாலெக்ஷிமியை சரோஜினி அறியாளென்றாலும் ஸ்ரீநிவாஸனையும், அவனது நடத்தையையும் சரோஜினி நன்றாக அறிந்திருந்தாள். ஆதலால் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய மனதில் பலதிறப்பட்ட எண்ணங்கள் உதிக்க லாயின. ஈற்றில் அப்பெண்ணைக் கெடுப்பதற்காகவே அவன் அவ்விதம் கூப்பிட்டுச் செல்லுகிறனென்றும், அவளை மீட்க வேண்டியது தனது கடமையென்றும் எண்ணி அதிவிரை வாய் நடந்து அடுத்த வீதியிலுள்ள போலிஸ் நிலையத்திற்கு சென்று செய்தியை அறிவித்தாள். உடனே மூன்று கான்ஸ் டபிள்களும், ஒரு இன்ஸ்பெக்டரும், பயங்கரமான மாளி கையை யடைந்தனர். சரோஜினியும் கூடவே சென்றனள். அம்மாளிகை பூட்டப்பட்டிருந்தது. எங்கும் இருள்மய மாகவே இருந்தது. ஒருவாராக பேட்ரி லைட்டின் உதவி யால் வாயிலண்டையில் சென்றனர். வீட்டினுள் வெளிச்ச மாயிருந்தது. என்ருலும் சந்தடி செய்யாமல் இவர்கள் உட் செல்ல முடியாதென அறிந்தனர். கதவை உற்று நோக்க அது பழைய கதவெனவும், ஒரேமிதியில் சில்லு சில்லாக உடைந்து போகுமெனவும் கண்டு சிறிது ஆறுதலடைந் தனர். உள்ளே என்ன நடக்கிறதென்பதை அறியவேண்டி ஓர் ஜன்னலை மெதுவாகத் திறந்து உள்ளே கூர்ந்து நோக்கி னர்.

உள்ளே நடந்த சம்பாஷணையின் சுருக்கம்:—

ஸ்ரீநிவாஸன்:—"சீதாலெக்ஷிமி! என்கண்ணே! நான் சொல்வது உனக்கு விளங்கவில்லையா? என்னை மணஞ்செய்து கொள். உனக்கு யாதொரு குறைவும் ஏற்பட்டுவிடாது! லெக்ஷாதிபதியின் மனைவியாக நீ சந்தோஷமாய் வாழலாம். கண்மணி! கோடீஸ்வரனுகியநான்—ஓர் ஆண்மகன் உன்னி டம் தாழ்மையாகப்பேசுகிறேன். உன்னிடம் கெஞ்சி மன்ருடு கின்றேன். நீ என்னை மிருகமென்றும், அரக்கனென்றும் இகழுகிருய். என் செய்வது? உனது அழகு என்னை உன் வசப்படும்படி செய்துவிட்டது. மயில்போன்ற பெண்ணே! பூரணசந்திரனைப் போன்று ஒளியைவீசும் உனது முகம் என்னை மயக்கிவிட்டது! உனது கமலக்கண்கள் என் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயத்தை ஊடுருவிப் பாய்ந்துவிட்டன உனது இருமார்புகளும் என்னுடைய நெஞ்சத்தை பிளந்தன! உன்னுடைய அழகிய—சிவந்த அதரங்கள் என்னுடைய சித்தத்தைக் கலக்கிவிட்டன! உனது அழகு—ஒய்யாரம்—மனோஹரமான தோற்றம்—யௌவனம் உன்னை ஆர்வத்துடன் அணைய வேண்டுமென்று என்னைத் தூண்டிவிட்டன! உன்னையே நான் எனது மனைவியாக ஏற்றுக்கொள்ள அவாவுகிறேன். நீ எனது அவாவை பூர்த்தி செய்யத்தான் வேண்டும். எப்படியும் ஏமாற்றி என்னிடமிருந்தும் தப்புவித்துக்கொண்டு போய்விடலாமென நீ சொப்பனங்கூடக் காணுதே. இந்த இருளடைந்த மாளிகையினின்றும் எவ்வளவு சப்தம் போட்டாலும் ஒருவருக்கும் கேட்காது. இதனருகில் ஜனங்கள் நடமாடவும் அஞ்சுவார்கள். ஆதலால் நீ வீணுகக் கூக்குரலிடுவதில் பிரயோஜனமில்லை. வீணுக என்னைக் கோபத்திற்குள்ளாக்காமல் எனது மனதைத் திருப்திசெய்ய உடன் இணங்கு.”

சீதாலெக்ஷ்மி:—“நீ ஓர் ஆண்மகனல்லவென்று நிச்சயமாக ஒரு முறையல்ல பன்முறை கூறுவேன். மணம் என்பதின் கருத்தென்ன என்பதை முழு முட்டாளாகிய நீ அறியாய். பெண்களை எதற்காக படைத்திருக்கிறதென்பதையும் அறியமாட்டாய். உன்போன்ற விஷமிகளுடைய காமஇச்சையைப் பூர்த்திசெய்வதற்காக பெண்கள் சிருஷ்டிக்கப் படவில்லை. உன்னைப்போல் மோசக்காரர்கள் இவ்வுலகில் உன்னைத் தவிர வேறொருவருமில்லை யென்றே துணிகிறேன். சிறுமியாகிய என்னிடம் நீ பகட்டான வார்த்தைகளையும் அண்டப்புளுகுகளையும் அள்ளிச் சொரிந்து, நீ நல்லவனென்றும், தருமபாலனென்றும், பிறருக்கு உதவி செய்வதில் பின் வாங்காதவனென்றும், பெண்களின் உயிர்நிலையாகிய பொக்கிஷத்தை (கற்பை) காப்பாற்ற உனது குடும்பமே தமது உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்றி வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்களென்றும் கூறி என்னை ஏமாற்றி இவ்விடம் கூட்டிக்கொண்டுவந்து விட்டாய். இது ஓர் ஆண்மகனுக்கு அழகல்ல. நீ என்னை மணக்க விரும்பினால் நீ எனது பெற்றோரையாவது, அன்றி எனது சகோதரனையாவது, உற்றார் உறவினர்களையாவது கலந்துபேசி அவர்களுடைய விருப்பத்தை யறியவேண்டும். அவ்விதமின்றி அபலையான ஓர் பெண்ணை இவ்வாறு வஞ்சித்து மோசஞ்செய்வது எவ்வளவு இகழ்ச்சியான செய்கை என்பதை நீ உணர்ந்துபார். பகுத்தறிவுள்ள ஒருவன் இவ்வித அருவருக்கத்தக்க வழிகளில் தலையிடமாட்டான். எனது உயிரேபோனாலும் உன்னுடைய காமஇச்சைக்கு நான் உடன்பட மாட்டேன். இது சத்தியம்.

"மானமுள்ளோர்க ளன்னோர் மயிரறியினுயிர் வாழாத
கானுறு கவரிமான்போற் கனம்பெரு புகழேபூண்பார்,
மானமொன்றில்லார் தாமு மழுங்கலாய்ச் சலங்களாகி,
ஈனமாங் கழுதைக்கொப்பா யிருப்பரென் றுரைக்க
லாமே."

என்ற கவியை உனக்கு அப்படியே அர்ப்பணஞ் செய்கிறேன். கவரிமானின் நடத்தையைப்போன்றே நானும் எனது கற்பை காக்கமுடியாவிடில் உயிர் துறப்பேன். மூடனே! எல்லாம் வல்ல ஈசன் ஒருவன் உளன் என்பதை சற்று நிதானித்துப்பார். அவன் உனக்குகந்த தண்டனையை அளிக்காமற்போகான். இது நிச்சயம். நீ அத்தண்டனையின்றும் தப்பவேண்டுமாகின் என்னை விட்டு விடு."

ஸ்ரீநிவாஸன்—:"ஈசனைப்பற்றி நீ என்னிடம் பிரசங்கம் செய்யவேண்டாம். உன்னைப் பிரசங்கஞ்செய்வதற்காக நான் இங்கு கொண்டு வரவில்லை. தங்களுடைய மனைவிமார்களை தங்களுடன் சமஅந்தஸ்தில் வைத்து, சம ஆசனங்கொடுத்து, அவள்பாடுவதை இனிமையாக கேட்டானந்திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பேரிக் கணவர்களைப் போலல்ல நான். பெண்கள் தங்க ளிஷ்டம்போல் சுய அதிகாரத்துடன் நடக்கவிட்டு விடும் பேடி நானல்ல. நீ ஓர் சிறியபெண். அழகிற் சிறந்தவள். புத்தியில் மேன்மையானவள். ஆதலால் நீ ஆர்வத்துட னும் ஆனந்தத்துடனும் என்னை ஆலிங்கனஞ் செய்வா யென்றும் நான் எண்ணி இதுவரையும் உன்னிடம் மரி யாதையாக வார்த்தையாடினேன். இனி நான் பொறுக்க முடியாது. நீ எனது மனோபீஷ்டத்தை பூர்த்திசெய்வ தாகத்தோன்றவில்லை. புத்திசாலியான நான் எனது விருப் பத்தைப் பூர்த்திசெய்யவேண்டியதுதான். பலாத்காரத்தை பிரயோகித்தால் நீ உயிரை மாய்த்துவிடுவாயென்றும் கூறு கிருய். உனது வீண்மிரட்டலுக்கு ஆண் ஏறுகிய நான் அஞ்சமாட்டேன். பொதுவாக ஓர் பெண் ஓர் ஆடவன் மீது இச்சித்தாலும், தெவிட்டாத இன்பத்தை அவன் மூலமாக ஈட்டிக்கொள்ளவேண்டுமென்று அவாவினுலும், திடீரென அவ்வாலிபன் அப்பெண்ணைத் தற்செயலாகச் சந்திக்கவும், அவனுக்கு ஓர் நவீன உணர்ச்சி தென்படவும், அவன் அவ்வனிதையினிடம் தனது கருத்தை வெளியிட்டுத் தன்னைச்சேருமாறு அழைத்தாலும் அப்பெண் உடனே இணங்கிவிடமாட்டாளன்றே! இது அநேக பெண்களிட முள்ள சாமர்த்திய குணம் என்பதை நான் அறிவேன். அவர்களில் நீயும் ஒருத்தி. ஆதலால் நான் உன்னை வலியச் சென்று அணைந்தபின்னுவது உடன்படுவாயல்லவா?" என்று கூறியவாறே எழுந்து அவளைப்பிடிக்க முயன்ருன். இதைக் கண்ட சீதாலெக்ஷ்மி பாம்பை மிதித்தவள்போலானுள். தனக்கு இறுதிக்காலம் வந்துவிட்டதென்றே நிச்சயித்து விட்டாள். தனக்கு இதுகாலை உதவிசெய்ய ஈசனைத்தவிர வேறு ஒருவருமில்லை என்பதை யுணர்ந்த அரிவை சீதா லெக்ஷ்மி ஈசனைத் தன்னுள் துதித்துக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு தனது மனதைத் திடப்படுத்திக்கொண்டு சரேலெனப்பாய்ந்து அவனுடைய பிடியில் அகப்படாமல் தப்பி அங்குள்ள கதவைத் தனது காலால் ஒரு உதை உதைத்தாள். கதவும் படீரென உடைந்து அப்பால் விழுந்தது. சீதாலெக்ஷிமி பாய்ந்ததும் தங்கத்தைப் போன்ற—பளபளப்பான அவளுடைய திரேகம் வெளிச்சத்தினால் பளீர் என மின்னல் மின்னுவதைப் போன்றிருந்தது. இதையறிந்த ஸ்ரீனிவாசன், திகிலும், ஆச்சரியமும், ஏமாற்றமும் கோபமுமடைந்தவனாய் அவளைப் பின்தொடர்ந்தான். இதற்கிடையில் ஜன்னல் வழியாக உற்றுநோக்கியவர்களும் மாளிகையினுள் வந்து சேர்ந்தனர். இதைக்கண்ட ஸ்ரீனிவாஸன் என்றுமில்லாத் திகிலடைந்தான். என்செய்வான் பாவம்! அங்குமிங்கும் பார்த்தான். தப்ப வழியில்லை. தன்னைச் சுற்றி நாலைந்து பேர்களிருப்பதைக் கண்ணுற்றதும் அவனுடைய உயிர் பாதிக்குமேல் போய்விட்டது. இதற்கிடையில் போலீஸ் சேவகனும் ஸ்ரீனிவாஸனின் கரங்களில் விலங்கிட்டான்.

"ஹா! ஹா! லெக்ஷாதிபதி என்று—இப்படிப்பட்ட பெரிய சங்கிலிக்காப்பை அணிந்திருக்கிறீர்கள். பேஷ்! நன்றாயிருக்கிறதே!" என்றான் ஒருவன். "எங்களுடைய முகத்தைக் கோடீஸ்வரனாகிய தாங்கள் பார்த்தால் கௌரவக் குறைவென்று எண்ணி இவ்விதம் தலையைக் குனிகிறீர்கள்" என்றான் மற்றொருவன். இவ்விதமாக ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறி ஸ்ரீனிவாஸனைப் பரிகசித்தனர். "இந்தக் கைதானா அந்த அம்மாளைக் கட்டியணைக்க முன் வந்தது" என்று கூறி இன்ஸ்பெக்டர் ஸ்ரீனிவாஸனது கரங்களில் இரண்டு மூன்று முறை படீர் படீர் என சவுக்கால் நீட்டினார். ஸ்ரீனிவாஸனோ மூச்சுவிடவில்லை. "ஐயா என்னை விட்டுவிடுங்கள். இனி நான் ஒன்றும் செய்யமாட்டேன். உங்களுக்கு வேண்டியதை நான் கொடுக்கிறேன்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி கண்ணீர் வடித்து ஸ்ரீனிவாஸன் இன்ஸ்பெக்டரின் கால்களில் விழுந்து பணிந்தான். "அடே! நீ எப்படியும் தப்பிவிடலாமென்று எண்ணுகிருய். உனக்குத் தகுந்த தண்டனையைக் கொடுத்து இம்மாளிகையையும் உடைக்க நான் உத்தரவு பெறுகிறேன். நீ எத்தனை பெண்களைத் துன்புறுத்தியிருக்கிருயோ! பாவம்! பெண் பாவம் பொல்லாதது. நான் என்ன சொன்னுலும் உனக்கு விளங்காது. ஆதலால் போலீஸுக்கு வா" என்று கூறி அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்.

சீதாலெக்ஷிமி இந்நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ணிமை கொட்டாமல் பார்த்துக்கொண்டே வந்தாள். அவளுக்கு என்றுமில்லா ஆச்சரியமும் ஆனந்தமுமுண்டாகி அவளைப் பேசமுடியாமற் செய்துவிட்டது. சரோஜினியும் சீதாலெக்ஷ்மியும் இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்துசென்றனர். போலீஸ் நிலயத்திற்கருகிலுள்ள அவருடைய மாளிகையில் தங்கும்படி இருவரையும் இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டார். அவர்களிடமிருந்தும் வாக்குமூலம் வாங்கப்பட்டது. ஸ்ரீனிவாஸன்மீது வழக்கும் தொடரப்பட்டது. ஓர் பெண்ணை ஏமாற்றி அழைத்து வந்ததாகவும் அவளைக் கற்பழிக்க முயன்றதாகவும் ஆகிய இரு குற்றங்களுக்கும் 5 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்குமுன் இவ்விதமான குற்றங்களுக்கு தான் அநேக முறை சிறை சென்றதாக ஸ்ரீனிவாஸன் ஒப்புக்கொண்டான். பயங்கரமான அம்மாளிகையைத் தகர்க்கும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

"சகோதரி! நீ யாரென்பதையும் நான் அறியேன். ஒருவேளை நான் யாரென்பதை நீ அறிவாய்போலும். நீ அந்நிமிஷம் அம்முயற்சி செய்யாவிடில் அவ்வரக்கன் என்னைத்தீண்டுவான். நான் தற்கொலை புரிந்து மாண்டுவிடுவேன். எனக்கு உயிர்ப்பிச்சை யளித்த உனக்கு யாதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கும் இடைஞ்சலும் நேரிடாது. எல்லாம் வல்ல இறைவன் உன்னைக் காப்பாற்றுவானாக!" என்று சீதாலெக்ஷ்மி, சரோஜினியை நோக்கிக் கூறினாள்.

சரோஜினி:—"நீ யாரென்பதை நான் அறியாவிட்டாலும் ஸ்ரீனிவாஸனை நான் நன்கறிவேன். அவன் பெண் வேட்டையாடும் பித்தன். உன்னை அவன் அழைத்துச் செல்வதைக் காணவும் எனக்கு என்னை யறியாமலே திகிலுண்டாகிவிட்டது. உனக்கு யாதொரு தீங்கும் நேரிடாதவாறு காப்பாற்றவேண்டியது எனது கடமை எனத் துணிந்தேன். சகோதரி! நீ எனது வரலாற்றை அறிய விரும்புகிறாய். அதைக்கூறவும் யான் வெட்கமடைகிறேன். என்றாலும் நீ விரும்புகிறபடியால் கூறுகிறேன். கேள். நீ எனது வாழ்க்கையின் போக்கைக்கண்டு வருந்தவுங்கூடாது. இப்போது நான் கொண்டிருக்கும் வைராக்கியத்தைக் கைவிட்டுவிடும்படி தூண்டவுங்கூடாதென்பதே எனது வேண்டுகோள்" என்று கூறி, ஆதி முதல் அந்தம்வரை தான் பள்ளியில் கல்வி பயின்றதும், ஜெயசீலனைக் காதலித்ததும், பின் தன்னை மனைவியாக ஏற்க மறுத்ததும், அவன் சகலமும் துறந்து ஞானியாகச் சென்றதும், மதனகோபாலனை மணந்ததும், அவனது நடத்தையையும், இராஜேந்திரன் தனக்கு மாங்கல்யப்பிச்சை யளித்ததும், தான் தனது கருத்தை இராஜேந்திரனிடம் வெளியிட்டதும், அவன் அதை மறுத்து வேண்டிய நீதிமொழிகளைக்கூறித் தன்னைத் தேற்றியதும், அன்று முதல் இன்று வரை அவனைச் சந்திக்காததும், தற்போது தனது கருத்துப்படி சகலதையும் துறந்து விசேஷ ஸ்தலங்களைக் கண்டு சேவித்துத் தனது கருமத்தைத் தீர்ப்பதாகவும் ஆகியவற்றை விபரமாகக் கூறிக்கண்ணீர் வடித்தாள்.

"ஹா! ஹா! இதென்ன ஆச்சரியம்! எனது அண்ணாவா மதனகோபாலரைக் காப்பாற்றியது? அவர் இதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி ஒன்றுங்கூறவில்லையே. சகோதரி! அவ்விதம் உனக்குப் பெரிய உபகாரம் செய்தவர் உன்னை ஏன் மீண்டுங் கண்டுகொள்ளவில்லை. சகோதரி! தற்போது அவர் கொழும்பு நகரில் இருக்கிறாராம். அவரைக் காணவே நானும் செல்கின்றேன். நீயும் என்னுடன் வா. அவரைக் கண்டு கொள்ளலாம். உனது கோரிக்கையைக் கைவிட்டுவிடுமாறு யான் வற்புறுத்த விரும்பவில்லை. வெய்யிலென்றும், மழையென்றும், பாராது இவ்விதம் நாடுசுற்றித் திரிவதை நான் விரும்பவில்லை. எனது சகோதரரை நீ பலவாறு புகழுகிறாய். மாங்கல்யப் பிச்சையளித்த புண்ணியவானென்கிறாய். அவ்விதமாயின் நீ அவருடைய மனதைப் புண்படுத்தக் கூடாதல்லவா? நீ என்னுடன் வந்து அவரைக் கண்டுபேசி அவருடைய விருப்பம்போல் நடந்துகொள்'' என்று கூறி சீதாலெக்ஷ்மி அவளது கண்ணீரைத் துடைத்தாள்.

சிறிதுநேரம் சென்றபின் சரோஜினி மெதுவாகப் பேசலானாள். ''சகோதரி! நான் கொழும்பு நகருக்கு வர சவுரியமில்லை, நீ கூறியபடி நான் நாடுசுற்றித் திரிவதை நீ விரும்பாததால் நான் இன்றுடன் நிறுத்திக் கொள்கிறேன். நான் இப்போதே பிரயாணமாகி எனது கணவரைக் கண்டு கொள்ளவேண்டும். நான் உன்னிடம் ஒரு கடிதம் வரைந்தனுப்புகிறேன். அதை உனது சகோதரரிடம் கொடு, ஆனால் நீ இந்தக் கடிதத்தை இடைவழியில் பிரித்துப் பார்க்க மாட்டாயென்றே நம்புகிறேன்'' என்றுகூறி பின் வருமாறு ஓர் கடிதம் வரையலானாள்.:—

எனக்கு மாங்கல்யப்பிச்சை யளித்த உத்தமருக்கு, உம்முடைய நல்வரவை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தும் நீர் குறிப்பிட்ட தினத்தில் வரவும் இல்லை. அதன் பின் ஒருநாளும் வந்து என்னைக் காணவுமில்லை. உம்மை மீண்டும் சந்தித்து பேசும் பாக்கியம் எனக்கு கொடுத்துவைக்கவில்லை. நீர் கூறிய நீதிமொழிகளை எண்ணி எனது கண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் இஷ்டப்படியே நடந்து அவரைத் திருத்த முயன்றும் பயன்படாமற் போய்விட்டது. ஆதலால் நாடு சுற்றித் திரிகிறேன்.

நான் ஓர் வாலிபரை நேசித்ததாகவும், அவரும் துறவியாக சென்றதாகவும் உம்மிடம் நான் கூறியதை நீர் மறந்திருக்க மாட்டீர் யென்றே நம்புகிறேன். அவரும் துறவியாகவே சென்றுவிட்டார். நாங்கள் இருவரும் எதிர்பாராதவிதமாக இராமேஸ்வரத்திலுள்ள ஆலயத்தில் சந்தித்தோம். "ஹர! ஈசா! இதென்ன கொடுமை! இந்த (கெட்டழுகிய) புண்ணில் கோலிடுவதைப் போலிருக்கிறதே! பிரிந்த எங்களிருவரையும்—சகலமும் துறந்து நாடு சுற்றித்திரியும் எங்களை ஏன் மீண்டும் சந்திக்கச் செய்தாய். இத்துடனாவது நினது திருவிளையாடல் நின்று கொள்ளட்டும். இனி எங்களை சந்திக்கும்படி செய்யாதே" என்று நாங்களிருவரும் சாக்ஷாத் எம்பெருமானிடம் கேட்டுக் கொண்டு—முறையிட்டுக்கொண்டு பிரிந்தோம்.

நான் இப்போது நாடு சுற்றித் திரிகிறேனென்பதை அறிந்து நீர் வருந்தக் கூடாது. இவ்விதம் நான் விசேஷஸ்தலங்களை சுற்றி வரும்போது தூத்துக்குடியில் உம்முடைய தங்கையை நான் சந்தித்தேன். ஸ்ரீநிவாஸன் என்ற கொள்ளைக்காரனால் ஏமாற்றப்பட்ட நம் சகோதரி சீதாலெக்ஷ்மியை நான் தப்புவித்துவிட்டேன். இதன் விபரங்களை நீர் சகோதரியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

நான் உம்மிடம் ஒரு வாக்குறுதி கூறியதை நீர் மறந்திருக்கமாட்டீர் யென்றே நம்புகிறேன். அதாவது எனக்கு மாங்கல்யபிச்சை யளித்த உமக்கு அல்லது உமது உற்றார், உறவினர்களில் யாருக்காவது ஏதேனும் ஒருபெரிய உபகாரம் செய்த பின்தான் என் உயிர் இவ்வுடலை விட்டுப் பிரியுமென்பதே. அதைப்போல இப்போது உமது சகோதரிக்கு ஒரு உபகாரம் செய்துவிட்டேன். இனி நான் இவ்வுலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் பிரிந்துபோகிறதை வெகுசந்தோஷத்துடன் உமக்குத் தெரிவிக்கிறேன்.

இந்தக் கடிதம் கண்டவுடன் நீர் என்னைக் காப்பாற்ற விரைந்து வருவீர். ஆனால் இந்தக் கடிதம் உம்கையில் கிடைத்த நிமிஷமே எனது உயிர் பிரிந்துவிடும். ஆதலால் நீர் வீண் செலவுசெய்து சிரமத்திற்குள்ளாகாமல் இவ்விடம் வாரிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நான் முக்கியமான ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நான் ஊரைவிட்டு வெளிப்படுகையில் எனது கணவர் மதனகோபாலருக்கு ஒருநிருபம் வரைந்து மேஜையின் மீது வைத்திருந்தேன். அதில் "நான் இவ்வுலகை விட்டுப் பிரியும்போது உங்களது பாதார விந்தத்திலேயே எனது உயிர் பிரியும்" என வரைந்திருந்தேன். ஆதலால் இந்த நிமிஷமே நான் பிரயாணமாகி சென்னையிலிருக்கும் பார்த்தசாரதி கோவிலுக்கு சென்று, அங்கு எனது கணவர் (தமது வைப்பாட்டியுடன்) வந்திருப்பாராதலால் அவரின் பாதாரவிந்தத்திலேயே உயிரை விட நிச்சயித்து விட்டேன்.

எனது முடிவைப்பற்றி நீர் சிறிதும் கவலைப் படவேண்டாம். உமக்கு என்மீது அனுதாபமுண்டானால் நீர் எனக்கு ஒரு சிறு உபகாரம் தான் செய்யவேண்டும். அதாவது எனது பாவங்களை யெல்லாம் மன்னித்து எனக்குமோக்ஷத்தை யளிக்கும்படிக்கும், எனது கணவர் நல்வழியில் நடந்து கொள்ளும்படிக்கும் எல்லாம் வல்லஇறைவனை நித்தியமும் நீர் தொழவேண்டியதே. இவ்வுதவியை நீர் செய்வீர் யென்றே நம்புகிறேன்.

உமது விவாக வைபவத்தை நான் கண்ணாரக்கண்டு களிக்க ஈசன் அருள் புரியவில்லை. என்செய்வது? எல்லாம் அவன் செயல்! உமக்கு வாய்க்கும் மனைவி கல்வியறிவுடையவளாகவும், அதிரூபசவுந்தரியாகவும், கற்பே மேலென எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணக் கூடியவளாகவும்—கணவன் சொல்லைத் தட்டி—மீறி நடக்காத மங்கையாகவும், ஒழுக்கம்—பொறுமை—சாந்தம் முதலிய உயர்குணம் படைத்தவளாகவும் இருக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல ஈசனை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம், உம் அன்புள்ள சகோதரி,
"சரோஜினி"

"சகோதரி! நீ இக்கடிதத்தை இராஜேந்திரனிடம் கொடு, நான் சென்னைக்குச் செல்கிறேன். இனிமேல் இவ்விதம் நீ கொள்ளைக்காரரிடம் அகப்பட்டுக் கொள்ளாதே. அகப்பட்டாலும் உன்னை ஈசன் காப்பாற்றுவார்" என்று கூறி சரோஜினி சீதாலெக்ஷ்மியிடம் கடிதத்தைக் கொடுத்தாள். சீதாலெக்ஷ்மியும் அக்கடிதத்தை வாங்கி பெட்டகத்தில் வைத்துக் கொண்டாள்.

சிறிது நேரஞ் சென்றதும் ஓர் கான்ஸ்டபிள் வந்து இருவரிடமும் "இன்ஸ்பெக்டர் அவர்கள் தாங்களிருவரும் எங்கு செல்ல உத்தேசித்திருக்கிறீர்கள் என கேட்டுக் கொண்டு வரச் சொன்னதாகக்" கூறினன். சீதாலெக்ஷ்மி இலங்கைக்கு செல்லவேண்டுமென்றும், தான் சென்னைக்கு செல்ல வேண்டுமென்று சரோஜினியும் விடைபகர்ந்தார்கள். கான்ஸ்டபிளும் அவ்விதம் இன்ஸ்பெக்டருக்கு தெரிவிக்க இருவருக்கும் இரண்டு டிக்கட்டுகள் வந்து சேர்ந்தன. அதற்குரிய கட்டணத்தை செலுத்தியபின் இருவரும் பெற்றுக் கொண்டு ஒருவரை விட்டொருவர் பிரிய மனமில்லாதவர்களாய் பிரிந்து, சீதாலெக்ஷ்மி கப்பல் ஏறினள். சரோஜினியும் சென்னைக்கு போக புகைவண்டி ஏறினள்.

குறிப்பிட்டநேரத்தில் புகைவண்டி சென்னைபோய்ச் சேர்ந்தது. சரோஜினி ரயிலை விட்டிறங்கி நேராக பார்த்தசாரதி கோவிக்கு சென்றுள். அங்கு சுவாமியை தெரிசித்துக் கொண்டும், தனதுபாவங்களை மன்னித்தருளும் படியும், தனது கணவருக்கு நற்புத்தி யளிக்கும்படிக்கும் சுவாமியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டு கோவிலின் முன் வாயிலை யடைந்தாள். மறுவினாடியில், முன் சரோஜினி எண்ணியபடி மதனகோபாலன் தாசி கிருஷ்ணவேணியுடன் ஆலயத்திற்குள் பிரவேசித்தான்.

இதைக் கண்ணுற்றதும் சரோஜினி ஆனந்தமடைந்தவளாகி "நாதா! நான் வரைந்தபடியே தங்களின் பாதாரவிந்தத்தில் எனது உயிர் பிரியப்போகின்றது! இன்னும் சர்வேசுவரன் உங்களுக்கு நற்புத்தி யளிக்கவில்லையா? பாவியாகிய எனது சடலத்தை தாங்கள் கண்ணாரக் காண நேர்ந்ததே என்று வருந்தாதீர்கள். நான் வரைந்தபடி எனது பாவங்களை மன்னித்து எனக்கு மோக்ஷத்தை நல்கும்படி வைகுண்டவாஸனை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுங்கள். அதோ வந்துவிட்டார்! எனது நண்பர் எமன். எனது உயிரைக் கொண்டுபோக வந்துவிட்டார். நான் செல்கின்றேன். ஜெயசீலா! என்னை மன்னிக்கவும். அநியாயமாக உன்னை நான் கெடுத்துவிட்டேன். வருந்தாதே! நான் சென்று வருகிறேன்" என்று கல்லுங்கரையும் வண்ணம் மொழிந்து மதனகோபாலனின் பாதங்களில் விழுந்தாள். மறு வினாடியில் உயிர் அவளுடைய உடலிலிருந்தும் பிரிந்தது.

சரோஜினியின் உடலை இப்போது காணவும் மதனகோபாலனுக்கு ஞானோதயம் பிறந்துவிட்டது. தனது இன்பக்காதலி—இல்வாழ்க்கைத் துணைவி சரோஜனிதான் அப்பெண் என்பதை அறிந்துகொண்டான். ஆர்வத்தோடு அவன், தன்னைக் கைகூப்பித் தொழுதவண்ணம் தன் முன் படுத்திருக்கும் சரோஜினியைத் தூக்கித் தனது மடியில் வைத்துக்கொண்டான். "இன்பக்காதலீ! உனக்கு நான் செய்த இடர்களையெல்லாம் மன்னித்துக்கொள். அறிவிருந்தும் அறிவில்லாதவனாகிவிட்டேன். கண் இருந்தும் குருடனாகிவிட்டேன். நீ எனக்கு இனிய மெல்லிய குரலில் கூறிய புத்திமதிகளை நான் அலக்ஷியமாக எண்ணிக் கவனிக்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு உன்னையும் நான் எத்தனையோ முறை உதைத்துத் தள்ளினேன். மாதரசே! இனி நான் மனம்போல் நடக்கிறேன். கண்மணி! உனது அழகிய கண்களைத் திறந்து, அம்ருத கலசம்போன்ற உனது வாயால் 'நீ என்னை மன்னித்துவிட்டதாகக்' கூறமாட்டாயா?" என்று புலம்பியழுது கண்ணீர் வடிக்கலானான்.

உயிர் உடலில் இருந்தால்தானே அவள் கண்ணைத்திறந்து பேசுவாள். அவள்தான் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தனளே. இது மதனகோபாலனுக்குத் தெரியவராது. புன்னகை தவழ்ந்துகொண்டிருக்கும் அவளது வதனத்தில் பலமுறை முத்தங்களைச் சொரிந்தான். உயிருடன் இருக்கும்போது தனது கணவனால் முத்தாரங்களைப் பெறப் பாக்கியமில்லாத சரோஜினிக்கு, அவளுடைய உயிர் உடலைவிட்டுப் பிரிந்த பின் அப்பாக்கியம் இருந்து—கிடைத்து என்ன செய்ய? அவளுக்குக் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்.

கண்ணைச் சிறிதுகூட விழித்துப் பார்க்காததால் மதன கோபாலனுக்குச் சந்தேகம் அதிகரித்தது. அவளுடைய திரேகம் வர வரக் குளிர்ந்ததினால் பன்மடங்கு அதிகமாக ஐயங்கொள்ளலானான். கூர்ந்து நோக்க, அவள் உயிர் பிரிந்துவிட்டது எனக் காணவும் நெருப்பில் விழுந்த புழுப் போலத் துடித்தான். "ஹா! சரோஜினி! இவ்விதம் என்னைவிட்டுப் பிரிந்து செல்லலாமா? நான் இனி இவ்வுலகில் உயிருடன் தங்கியிருக்க முடியாது. எனது உயிரையும் ஈசனிடம் சேர்த்துக் கொள்கிறேன். பாதகனாகிய எனக்கு வாழ்க்கைப்பட்டு, இன்பம் நுகராமல் துன்பத்தையனுபவித்து, ஈற்றில் உயிர் பிரிந்தனையே! இப்பாவம் என்னையன்றோ சாரும்! இப்பாவத்தைத் துலைக்க உன்னைப் பின்பற்றி ஸ்தலங்களைச் சுற்றிச் சேவிக்க இப்போதே பயணமாகிறேன். உனது பாவங்களை யெல்லாம் என்மீது சுமத்தி உனக்கு மோக்ஷத்தை யளிக்கும்படி இறைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைஞ்சுகின்றேன்" என்று கூறி பலவாறு புலம்பியழுது அவளைத் தூக்கித் தனது காரில் வைத்துக்கொண்டு டிரைவரைக் காரைச் செலுத்தச் சொன்னான். காரும் மதனகோபாலனின் இல்லம் நோக்கிச் சென்றது. வழிநெடுகத் தனது மடியில் சரோஜினியின் தலையை வைத்துக்கொண்டு அவன் பலவாறு புலம்பியழுதான். என்ன செய்துமென்ன? மாண்டவள் மீளுவாளோ!

இச்சம்பவத்தைக் கண்ணுற்ற அனைவரும் துடிதுடித்தனர். மதனகோபாலனையும் தாசியையும் பலவாறு இகழ்ந்து காரி உமிழ்ந்தனர். சரோஜினியின் பெற்றோரைக் கடிந்துகொண்டனர். பின் எல்லோரும் சாக்ஷாத் எம்பெருமானை நோக்கி அவளுக்காகப் பிரார்த்தனை நடத்தினர். ஊர் முழுவதும் இவ்வருங்குணபூஷணியைப் பற்றிய பேச்சே நடைபெற்றது. சாஸ்திரமுறைப்படி சகல கிரியைகளும் செய்வித்து சரோஜினியின் உடலைத் தகனஞ் செய்தனர். மறுநாளே காவிவஸ்திரமணிந்துகொண்டு மதனகோபாலன் தேசயாத்திரை செல்ல உத்தேசித்து, அவ்விதமே சென்றான்.

ஆலயத்திற்கு மதனகோபாலனுடன் சென்றிருந்த தாசி கிருஷ்ணவேணி, மதனகோபாலன் சரோஜினியைப் பற்றிப் பிரலாபிப்பதையும், பின் அவளைத் தூக்கிக் காரில் வைத்துக்கொண்டு சென்றதையும், தன்னைக் கடைக்கண்ணாலுங்கூடப் பார்க்காததால் தன்மீது அவனுக்கு வெறுப்பு உண்டாகிவிட்டதென்று கருதிவிட்டாள். அவனுடைய பொருளையெல்லாம் அபகரித்துப் பாப்பராக்கி முடிந்ததாதலால் இனி அவனைச் சமாதானப்படுத்துவதில் பிரயோஜனமில்லையென்றுன்னி வேறு ஒரு பெரிய கோடீஸ்வரனை அணுகி அவனையும் தொலைத்து—வெட்டவெளியாக்கத் தொடங்கினாள். இவளுடைய நடத்தையே இதுவாதலால் இது ஆச்சரியப் படத்தக்கதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நாம் சீதாலெக்ஷ்மியை ஆராய்வோம். சீதாலெக்ஷ்மி மறுநாள் கப்பலை விட்டிறங்கி துறைமுகத்தினின்றும் வெளிப்பட்டாள். இவளுடைய வருகையைத் தூத்துக்குடியிலிருந்து இன்ஸ்பெக்டர் தந்தி மூலமாக இராஜேந்திரனுக்குத் தெரிவித்திருந்தாராதலால், இராஜேந்திரன் தனக்கு அதிக ஜோலியிருப்பதால் தனது கார் டிரைவரைத் துறைமுகத்திற்குச் செல்லும்படிக்கும், தனது சகோதரி சீதாலெக்ஷ்மி இன்று கப்பல் மூலம் வருவாளென்றும், முன்பின் வந்தறியாத அவள் திகைத்துவிடக்கூடாதென்றும், கவனமாக அவளைப்பார்த்து அழைத்து வரும்படியும் கூறி அவனிடம் ஓர் கடிதத்தை ஈந்தான். அவ்விதமே கடிதம் பெற்றுக் கொண்டு துறைமுகத்திற்கு அவன் சென்றான்.

சீதாலெக்ஷ்மியை முன்பின் கண்டறியாத டிரைவர் எந்தப்பெண் சீதாலெக்ஷ்மி என்றறிவான்? என்றாலும் புத்திசாலியான அவன் அங்கு செல்லும் ஜனங்களில் யாரேனும் பெண்மணி ஒருத்தி தனியாகச் செல்கின்றனளா? வழிதெரியாமல் திண்டாடுகின்றனளா? என்று கூர்ந்து ஒவ்வொருவரையும் நோக்கினன். துறைமுகத்தின் வாயிற்படியில் ஓர் பெண் தன்னந்தனியாக நின்றுகொண்டு அங்குமிங்கும் சுற்றிச் சுற்றிப் பார்ப்பதைக் கண்ணுற்ற டிரைவர் அவளிடம் சென்று, "அம்மா! தாங்கள் யார்? யாரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். தாங்கள் இதற்குமுன் இலங்கைக்கு வந்திருக்கிறீர்களா?" என்று வெகு வணக்கத்துடனும் மரியாதையுடனும் வினவினன்.

அவளும் தனது பெயர் சீதாலெக்ஷ்மி என்றும் இதற்கு முன் இலங்கைக்கு வரவில்லையென்றும் விடை பகர்ந்தாள். உடனே டிரைவர் சந்தோஷித்து, தான் கொணர்ந்த கடிதத்தை அவளிடம் கொடுத்தான். அவளும் அதைப்பிரித்துப் படிக்கலானாள். தனது சகோதரன் இராஜேந்திரன் இன்ஸ்பெக்டர் மூலம் தனது வருகையைத் தெரிந்து அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ அவசர ஜோலியிருப்பதால் அவரது கார் டிரைவரை அனுப்பியிருப்பதாகவும் கடிதத்தின் மூலம் அறிந்து கொண்ட சீதாலெக்ஷ்மி கடிதத்தில் கண்ட நம்பருள்ள காரில் ஏறிக்கொண்டாள். காரும் ஸ்டார்ட் (start) பண்ணி புறப் பட எத்தனிக்கையில் ஓர் ரிக்ஷா வண்டி வந்து காரினருகில் நிற்கவும் அதினின்றும் இராஜேந்திரன் இறங்கினுன். இரா ஜேந்திரனைக்கண்டவுடன் சிறுமி சீதாலெக்ஷ்மி காரினின்றும் இறங்கித் தனது அண்ணுவை வணங்கினுள். பின் இருவ ரும் காரில் ஏறிக்கொண்டனர். காரும் புறப்பட்டுச் சென் றது.

வழி நெடுக ஊர் விஷயங்களைப் பற்றியும் ஒவ்வொரு வருக்கும் நேரிட்ட கஷ்டங்களைப்பற்றியும் பேசிக்கொண்டே சென்றனர். சீதாலெக்ஷ்மியிடமிருந்து சரோஜினி வரைந் தனுப்பிய கடிதத்தை வாங்கிப் பிரித்துப்பார்க்கவும், மறுநிமி ஷம் இராஜேந்திரன் மூர்ச்சையாஞன். காரணம் தெரியாது சீதாலெக்ஷ்மியும் கார் டிரைவரும் திகைத்துப்போயினர். இதற்குள் இராஜேந்திரனுடைய சரஸ்வதிமாளிகையின் முன் போய் கார்நின்றது. சீதாலெக்ஷ்மி இராஜேந்திரனின் முகத் தில் குளிர்ந்த நீரை தெளித்தாள். சிறிது நேரஞ் சென்ற பின் இராஜேந்திரன் மூர்ச்சை தெளிந்தெழுந்தான்.

கடிதத்தைப் பார்வையிடவும் இவ்வாறு மூர்ச்சையடைய வேண்டியதின் காரணம் என்னவென்று இருவரும் வினவ இராஜேந்திரன் தான் மதனகோபாலனைக் கண்டதும், பின் சரோஜினியிடம் சம்பாஷித்ததும், அவளுடைய துக்ககர மான வரலாற்றையும், பின் அவனைக்காண சந்தர்ப்ப மில்லா ததின் காரணத்தையும், இப்போது அவளுடைய முடி வைப் பற்றியும், தன்னுடைய கடமை யாதென்பதை கடி தத்தில் சரோஜினி வரைந்திருக்கிறுள் என்றும் விபரமாக கூறியபடியே கண்ணீர் வடிக்கலாஞன். இவ்வரலாற்றை செவிமடுத்த இருவரும், முக்கியமாக சீதாலெக்ஷ்மி ஆறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரடைந்தாள். இனி என்செய்வது! அவள் வரைந்த படியே தாங்கள் சாக்ஷாத் ஜெகதீசனை துதிக்கவேண்டு மென்று முடிவுசெய்துகொண்டு அவ்விதமே ஈசனிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—6.

## எதிர்பாராத சந்திப்புகள்.
## பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

ஒரு நாள் மாலை சுமார் 5-30 மணிக்கு சற்றேறக் குறைய 40 வயதுள்ள ஓர் ஆடவரும், 16 வயது மதிக்கத்தக்க ஓர் பெண்மணியும் கடற்கரையிலுள்ள ஓர் சாய்மான பீடத்தில் அமர்ந்திருந்தனர். அவர்களிருவரும் ஆழ்ந்த சிந்தனையி லீடுபட்டிருந்தனர். அப்பெண் ஆடம்பரமற்ற சில முக்கியமான ஆபரணங்களையே அணிந்திருந்தாள். அவ்வணிதாரத்தினம் நீல நிறப் பட்டாடையை உடுத்திருந்தாள். அவளது வலதுகரத்தின் விரல் ஒன்றில் அணிந்திருந்த அழகிய சிறியமோதிரம் பழையதென காணப்பட்ட போதிலும் சூரிய வெளிச்சத்தினால் மின்னிக் கொண்டிருந்தது. அம்மோதிரத்தில் ஆர் (R) என்ற ஆங்கில எழுத்து வெட்டப்பட்டிருந்தது. அவளுடைய அழகிய நீண்ட கரியகூந்தல் அழகாக சடை பின்னப் பட்டிருந்தது. அம்மங்கையின் நெற்றியில் இடப்பட்டிருக்கும் குங்குமத் திலகம் அவளுடைய இயற்கை யழகை பன்மடங்கு அதிகப்படுத்தியது. தேவருலகத்துப் பெண்ணே என பிறர் ஐயமுறும்படி அவ்வாரணங்கு அழகாக வீற்றிருந்தாள். அம்மட மயிலாளின் அழகியவதனத்தில் தனது கிரணங்களைச் செலுத்தினால் அவளுடைய வதனம் வாடி விடுமெனஎண்ணி கதிரவன் தனது கிரணங்களை ஒடுக்கிக் கொண்டவாறு போல மறைந்தான்.

இவ்வாறு இப்பெண் வீற்றிருக்கும்போது பூமியை நோக்கியவாறு ஓர் வாலிபன் நடந்து சென்றான். அவன் கடற்கரையிலுள்ள மணலில் நடந்து கொண்டே போகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் "ஒருமையுடன் உனது திருமலரடிகளை நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்." என்று திருவருட்பா கீர்த்தனையை இனிய இராகத்தில் மெதுவாகப் பாடிக்கொண்டே சென்றான். 20 வயதுள்ள அவ்வாலிபனைக் கண்ட நமது 16 வயதுள்ள யுவதி திடீரென எழுந்து அவனுடைய பக்கலில் சென்றாள். கடற்கரையிலுள்ள மணலை உற்று நோக்கியவாறே செல்லும் அவ்வாலிபன் இருகண்களையும் தனது கரத்தால் பொத்திக்கொள்ள வேண்டுமென்ற அவா மிகுதியினால் சென்ற இம்மாது அவனுடைய கீதத்தை செவியுற்றதும் தான் கோரியபடி செய்யத்துணியவில்லை. அந்த கீர்த்தனையைக் கேட்டுக்கொண்டே அவ்வாலிபனுக்குத் தெரியாமல் பின்னால் நடந்து செல்லுகையில் "மருவுபெண்ணாசையை மறக்கவேண்டும்" என்ற அடியை பாடியதும் இம்மங்கை அவ்வாலிபனின் இரு கண்களையும் தனது இரு அழகிய—மெல்லிய—சிறிய கரங்களினால் பொத்திக் கொண்டாள். இதை யறிந்த வாலிபன் திடுக்கிட்டு தன் கண்களைப் பொத்தியது தனது நண்பர்களில் ஒருவனாகத்தானிருக்க வேண்டுமென்று கருதி, "சுந்தரா! இது உனது செய்கை தானே! நாம் இருவரும் சந்திக்கும் நேரங்களிலெல்லாம் என்னுடைய கண்களை பொத்திக் கொள்வது உனது வாழ்க்கையில் ஓர் அதிசயமான செய்கையென நினைக்கிறாய் போலும்! உன்னுடைய இருகைகளும் இன்று மிருதுவாய்த் தென்படுகிறதே! காரணம் என்ன? கைகளை எடு" என கூறிக்கொண்டே அவ்விருகரங்களையும் தன் கண்களினின்றும் எடுத்தான்.

கைகளைவிடாமல் சுந்தரனை நோக்கி பேசவேண்டுமென்று எண்ணித் திரும்பிப்பார்க்க, அங்கு ஓர் பெண் நிற்பதைக் கண்டதும் என்றுமில்லா ஆச்சரிய மடைந்தான். இப்பெண் இவ்வளவு துணிவுடன் என் கண்களைப் பொத்த வேண்டியதின் காரணம் என்ன? என்று தன்னுள்ளேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணவிக்கொண்டு தான் பிடித்திருந்த இரு கரங்களேயும் விட்டு விட்டான். அவனது இருதயம் டக் டக் என்று அடித் துக் கொண்டிருந்தது. அழகிய அவனுடைய முகம் ஒரு வகையான மாறுதலடைந்தது. அவனுடைய மனம் கட்டுக் கடங்காத சஞ்சலத்தை அனுபவித்தது. பின்பு ஒருவாறு மனதைத் திருப்தி செய்து கொண்டு, இந்திரனின் இந்தி ராணியைப் பழிக்கும் பேரெழில் வாய்ந்த அழகு சுந்தரியை நோக்கி சம்பாஷிக்கலானான்:—

வாலிபன்:—சுந்தரி! என்ன தொழிலைச் செய்தாய்? இவ்வளவு ஜனங்கள் நடமாடும் இவ்விடத்தில் நீ செய்த செய் கையை பிறர் கண்ணுற்ருல் நம்மை எவ்வாறு இகழ்வார்கள்! நீ என்னுடன் சம்பாஷிக்க விரும்பினுல் என் மாளிகைக்கு வந்து கண்டு கொள்ளலாம். அவ்வாறின்றி திடீரென நீ அடாதகாரியம் செய்து விட்டாய். இதைக் கண்ணுற்றவர் கள் உன் பெற்ருேரிடம் கூறிவிடில் நமக்கு எத்தகைய வெகுமதி கிடைக்குமெனவும், அவர்கள் எத்தகைய அபிப் பிராயங் கொள்வார்களெனவும் சற்றும் சிந்திக்காமல் பின் புத்தியுடன் நீ நடந்து கொண்டதை யறிய எனது மனம் வருந்துகிறது.

சுந்தரி:—"இராஜேந்திரா! நான் யாதொரு குற்றமும் செய்துவிடவில்லை. இதற்குமுன் நடவாதவிதமாக நடக்கவு மில்லை. ஏதோ சிநேகிதப் பான்மையிலும், உன்னைக்கண்டு வெகுநாளாய் விட்டதாலும், உன்மீதுள்ள அன்பின் பெருக் காலும் நான் உன் கண்களை எனது கரங்களால் மூடிக்கொண் டேன். இது ஓர் குற்றமாயின் என்னை மன்னித்துக்கொள். இனிமேல் இவ்விதம் ஜனங்கள் நடமாடும் ஸ்தலத்தில் அநா கரீகமாய் நடந்துகொள்ளமாட்டேன். தங்கள் கையில் "தமிழ்நாடு" பத்திரிகை இருக்கிறதுபோல் தோன்றுகிற தே. நான் அதைப் பார்வையிடலாமா?" என்று வேண்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அப்பத்திரிகையை அவனுடைய கரத்திலிருந்தும் பிடுங்கிக்கொண்டாள்.

அவ்வாறு பிடுங்குகையில் அவளுடைய கைவிரலில் அணிந்திருந்த மோதிரம் பளீர் என மின்னியதையும், அம் மோதிரத்தில் R. என்ற அக்ஷரத்தைப் பார்வையிட்டதும் நமது இளவல் வெட்கித் தலை குனிந்தான். தானும் அப் பெண்ணும் ஒரே கலாசாலையில் கல்விபயிலும் காலை ஒரு விடு கதைப் போட்டியில் இருவரும் கலந்துகொண்டு, அந்த விடு கதையை முதலாவது பூர்த்தி யார் பண்ணுவார்களோ அவர்களுக்கு மற்றவரின் மோதிரத்தைப் பரிசிலாக யளித்து விடவேண்டியது எனப் பேசிக்கொண்டதுபோல அப் பெண் முதலாவது அக்கதையைப் பூர்த்தி செய்ததினால், தான் தன் மோதிரத்தைக்கொடுக்க நேரிட்டது என இப் போது இராஜேந்திரனுக்கு ஞாபகம் வரவும் வெட்கினான் போலும்!

சுந்தரி அவனது நிலைமையைக் கண்ணுராமல் பத்திரி கையைத் திருப்பித் திருப்பிப் பார்த்து 2ம் பக்கத்தில் "பொதுஜனவாக்கு" என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டே வந்தாள். பின் அவ்வாலிபனை நோக்கி ஏதோ பேச எண்ணி அவ்வாலிபனை நோக்கினாள். ஏது காரணத்தாலோ அவ்வாலிபன் தலை குனிந்தவாறே நிற்ப தைக் கண்ணுற்ற சுந்தரியின் மனதில் கடலின் அலைகளைப் போன்று பற்பல எண்ணங்கள் தோன்றி மறையலாயின. அலர்ந்த புஷ்பத்தைப்போன்றுள்ள அவ்வாரணங்கின் வத னம் சிறிது மாறுதலடைந்தது. அவனுடைய தடுமாற்ற மான நிலையைக்கண்ட சுந்தரி மனங்கசிந்தாள். அவனுடைய மௌனம் சுந்தரியின் சித்தத்தைக் கலக்கிவிட்டது. அவ ளதுமனம் ஒரு நிலையிலில்லை. சிறிது நேரஞ் சென்றபின் மெதுவாகப் பேசலானாள். ஆனால் அவளுடைய நாவு அசையவும் மறுத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ! சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல நாம் வந்து இவருடைய கீர்த்தனையை நடைபெருது தடுத்ததுமல்லாமல் அவருடைய மனதையும் குழப்பிவிட்டோமே! இனி இதற்கென் செய்வது? நூற்றுக்கணக்கான ஆடவர்கள் தங்களுடைய காதலிகளுடன் உல்லாசமாக உலாவிப் பொழுதுபோக்கும் இக்கடற்கரையில் எனது ஆருயிர் நண்பரின் கண்களைச் சிறுமியாகிய யான் மூடியது அவருக்கு வெட்கமாயிருக்கிறதே யொழிய எனக்கு ஆனந்தமாகவே இருக்கிறது. இனி இவரை எவ்வாறு சமாதானப்படுத்துவது" என எண்ணி மனம் வருந்தி, ஒருவாறு தேறி, அவனுடைய மோவாய்க் கட்டையை ஒரு கையால் பிடித்துக் கொண்டும், மற்றக்கையை அவனுடைய தோளின்மேல் வைத்துக்கொண்டும் மெல்லிய குரலில் பேசத்தொடங்கினாள்:—

"இராஜேந்திரா! சிறியாள் நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்படி கேட்டுக்கொண்டும் உனது மனம் இரங்கவில்லையா? நீ இவ்வாறு மௌனஞ் சாதிப்பதைக்கண்டு என் மனம் படும்பாட்டை நான் என்னென்றியம்புவது? என்னுடைய புத்தியையும், சுபாவத்தையும், இயற்கை குணங்களையும் அனுபவ பூர்வமாய்க் கண்டறிந்த நீ இவ்வாறு என்னிடத்துச் சினங்கொள்வது உன்போன்ற கல்வியறிவுடையவர்களுக்கு அழகல்ல. "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே" என்ற நம்முன்னோர்களின் வாக்கை மறந்துவிட்டாய்போலும்! நாமிருவரும் கல்விபயிலும்போது இருந்த பிரியா சிநேகத்தை இப்போது மறந்துவிட்டது எனது துர் அதிர்ஷ்டமே. நான் யாரோ அன்னிய ஸ்திரீ யென நினைத்து என்மீது சினங்கொண்டு என் மனதைப் புண்படுத்துகிறாய். நீ இவ்வளவு சீக்கிரத்தில் என்னை மறந்து விடுவாயெனவும், என் மீது கொண்டுள்ள அன்பு வெறுப்பாக மாறிவிடுமெனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமாகவே நான் எதிர்பார்க்கவில்லை. என்மீது உனக்கு எத்தகைய வெறுப்பு ஏற்படினும் உன்மீது நான் கொண்டுள்ள அன்பு சற்றும் மாறுதலடையாது. இது நிச்சயம். நண்பா! இன்னுமுனது மனமிரங்கவில்லையா?" என்று சிறுமி சுந்தரி பணிவாக மிருதுவான குரலில் கேட்டுக் கொண்டாள்.

நமது இராஜேந்திரன் தன்னுடைய கண்களை முன் மூடும்போது அவளைக்கடிந்து பேசினானெனினும் இப்போது சந்தோஷித்தான். சுந்தரீ! நீ சிறு பிள்ளையாதலால் முன் நாம் விளையாடியதுபோல் இப்போதும் விளையாடுகிறாய். இது எனக்கு முன் குற்றமெனத் தோன்றியபோதிலும் உன்னை நான் நோகவில்லை. இப்போது நான் பூமியை நோக்கியவாறே நின்றவுடன் நீ தப்பான அபிப்பிராயங் கொள்வது சகஜம்தான். ஆனால் நான் உன்மீது சினமோ வெறுப்போ கொண்டு இவ்விதம் நிற்கவில்லை. நீ அணிந்திருக்கும் எனது மோதிரத்தைக் கண்டதும், பழைய நினைவுகள் எனக்குத் தோன்றலாயின. நான் உனக்கு ஒருவகையில் தாழ்ந்தவனென அறிந்து வெட்கினேன்." என்று இராஜேந்திரன் கூறிக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தான். தன்னை யாராவது பார்த்துவிட்டார்களோவென ஐயமுற்று நோக்கினான். அவ்விதமே 40 வயதுள்ள ஓர் ஆடவர் தானும் சுந்தரியும் சம்பாஷிப்பதை உற்று நோக்குவதைக் காணவும் அவனது மனம் மட்டில்லா வேதனையை யடைந்தது. சிறிதும் களங்கமில்லா மனமுடைய சிறுமி தன்னுடன் சம்பாஷணை செய்வதை அவர் என்ன அபிப்பிராயங் கொண்டுவிடுவாரோ எனக் கலங்கினான்.

சுந்தரி:—"இராஜேந்திரா! நீ எழுதும் கட்டுரைகளை நான் வாசித்துக்கொண்டே வருகிறேன். எவ்வளவு சுதந்தர உணர்ச்சியாகவும், இனிமையாகவும் தென்படுகிறது. இந்தத் தமிழ்நாட்டிலும்கூட ஓர் வியாசம் எழுதியிருக்கிறாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காக—உனது வியாசங்களை வாசிப்பதற்காகவே முக்கியமாக நான் தமிழ்நாடு, சுதேசமித்திரன், வீரகேசரி, தினகரன், பாரதவீரன், சுயராஜ்யம், ஜெயபாரதி, அமிர்தகுணபோதினி, ஆனந்தவிகடன், கலைமகள் முதலிய பல பத்திரிகைகளை வரவழைக்கிறேன். உனது வியாசத்தை எனது தந்தையிடம் காண்பித்தவுடன் அவர் அதை வாசித்துவிட்டு உன்னை மெச்சிக்கொள்வார். அவர் உன்னைப் பார்க்கவேண்டுமென்று வெகு அவாவுடையவராயிருக்கிறார். ஆதலால் நீ என்னுடன் வரவேண்டும். உனது பாடங்களை வாசிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் உனது காலத்தை வீணுக்காமல் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதிலும் நாவல் கதைகளை வரைவதிலும் நீ கவனத்தைச் செலுத்துவதை நான் மெச்சுகிறேன். பொதுவாக ஒருவன் சகல துறைகளிலும் மேன்மை பெற்று விளங்கவேண்டுமென்பதே எனது விருப்பம். நீயும் அவ்விதமே சகல துறைகளிலும் மேன்மை பெற்று பேரும் புகழும் அடைந்திருக்கிறாய். சாக்ஷாத் எம்பெருமான் உனக்கு யாதொரு குறைவும் கொடுக்கமாட்டார். என்போன்ற பெண் பேதைகளுக்கு நின்போன்றவர்களின் நேசம் கிடைப்பது—அன்பைப்பெறுவது மிகவும் அபூர்வம். ஆனால் நான் முன் ஜென்மத்தில் செய்த தவப்பயனால்தான் உன்னுடைய நேசம் கிட்டியது. அன்பா! நீ என்னிடம் யாதொன்றையும் கூறாமல் சென்னைக்குச் சென்றனை. பின் சிறைத்தண்டனை யடைந்தாய். இச்செய்தியைப் பத்திரிகை வாயிலாக அறிந்த யான் பட்ட பாட்டை என்னென்றியம்புவது? உன்னைப் பின்பற்றி நானும் சிறைத்தண்டனை யடைந்தேன். எனது விடுதலையை யறிந்த எனது தந்தை என்னை அழைக்கச் சிறைவாசலுக்கு வந்திருந்தார். நான் இவ்வுண்மைகளை வெளியிடாமல் ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி அவரைச் சமாதானப் படுத்தினேன். அதன் பின் இவ்விலங்கைத் தீவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்தோம். இங்கு நாங்கள் வந்து இவ்வளவு நாட்களாகியும் உன்னைக்கண்டு பேசமுடியாமற் போய்விட்டது. உனது இருப்பிடமும் தெரியாது. அதிருக்கட்டும். என் தந்தையைக் காணப்போவோம் வா."

இராஜேந்திரன்:—"சுந்தரி! நான் இப்போது அவசரமாக ஒரு இடத்திற்குப் போகவேண்டியதிருக்கிறது. ஆகலால் உனது தந்தையைக் காணமுடியாததைப் பற்றி வருந்துகிறேன். நாளை நான் உனது இல்லத்திற்கு வருகிறேன். அப்போது கண்டு கொள்ளலாம்."

சுந்தரி:—"நண்பா! எனது தந்தை எனது இல்லத்திலில்லை. அதோ அந்த பெஞ்சியில் உட்கார்ந்து இருக்கிறார்கள். நாங்களிருவரும் ஒன்றாகத்தான் வந்தோம். உன்னைக் கண்டதும் நான் உன்னை நோக்கி வந்து விட்டேன்" என்றுகூறினாள்.

இராஜேந்திரன் இம்மொழிகளைக் கேட்டதும் திடுக்கிட்டான். என் செய்வான் பாவம்! இது புண்ணில் கோலிடுவதைப் போலிருந்தது. முதலாவது சுந்தரி தன்னுடைய கண்களை மூடியதும், பின்பு தனது தோளில் கையைப் போட்டுக்கொண்டு மோவாய்க் கட்டையை பிடித்ததையும் அவர் கண்டிருப்பாராதலால் தன்னைக் கண்டிப்பாரெனவும் அஞ்சினான். சுந்தரியால் அவளுடைய தந்தையின் கோபத்திற்கும் தான் ஆளாக நேரிட்டதை யறிந்து மனம் வருந்தி பேசலானான்:—"சுந்தரி! அங்கு வீற்றிருப்பவர் உனது தந்தைதானா? உனது தந்தையின் முன் நின்றுதான் இவ்விதம் என்னிடம் பெண்ணாகிய நீ நடந்து கொண்டாய் போலும்! உனது மதி வன்மையை நான் என்னென்று கூறுவது? அவருடைய சினத்திற்கு நான் ஆளாகிறதுமன்றி நீயும் அகப்பட நேர்ந்ததே என்று தான் வருந்துகிறேன்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி:—"இராஜேந்திரா! எனது தந்தை உன்னை மெச்சிக் கொள்வாரே யொழிய உன்னிடம் அவர் கடிந்து கொள்ளமாட்டார். அவர் சினங்கொள்ளும்படி நானோ நீயோ ஒன்றும் செய்துவிடவில்லை. உனது வியாசங்களை யும், நாவலையும் வாசித்தவுடன் நீ இப்போது சிறிதும் பய மின்றி யாருடனும் எதிர்த்து நியாயம் பேசுவதில் சமர்த் தனாயிருப்பாயென்று நம்பினேன். ஆனால் உன்னிடம் அத் தகைய வீரம் உளதென்று இப்போது என்னால் நம்பமுடிய வில்லை. எதற்காக இப்போது நீ அஞ்சுகின்றாய்? என் புதை எவ்வளவு சிந்தனைசெய்து பார்ப்பினும் எனது புல் லறிவிற்கு ஒன்றும் தோன்றவில்லை. பயப்படவேண்டாம். உன்னிடம் அவர் சிற்றங்கொள்ள மாட்டார். இது திண் ணம். என்னுடன் வா" என்றுகூறினாள்.

இவளுடைய பேச்சு வன்மையையும் தேறுதல் மொழி யையும் கேட்டு இராஜேந்திரன் ஆனந்த மெய்தினான். அவ ளுடைய வேண்டுகோளின்படி அவளின் பிதாவிடத்தில் சம் பாஷிக்க இணங்கினான். பின் சுந்தரியுடன் இராஜேந்திரன் நடந்து சுந்தரியின் தந்தை இராமநாதரிடம் சென்றதும், இராஜேந்திரன் தனது இருகைகளையும் கூப்பி அவரை வணங்கினான். முன்பின் கண்டறியாத அவ்வாலிபன் தன்னை வணங்கியதைக் கண்ட இராமநாதர் அவனைத் தன்னுள் மெச்சிக்கொண்டு, இருவரையும் அமரும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க இராஜேந்திரனும் சுந்தரியும் அமர்ந் தனர்.

சுந்தரி:—"ஐயா! இவர் யாரென்பதைத் தாங்கள் அறிய மாட்டீர்கள். இவர்தான் இராஜேந்திரன் என்பவர். இவர் அதிபுத்திசாலி. இவருடைய நாவல்களையும் கட்டுரைகளை யும் தாங்கள் வாசித்திருக்கிறீர்கள். ஆதலால் தாங்கள் இவ ருடைய மேன்மையான குணங்களையும், பிறர்பால் உள்ள அன்பையும், தேசவிடுதலைக்குள்ள ஆர்வத்தையும் தாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அறிந்திருக்கலாமென நம்புகிறேன். இவர் என்னுடனேயே வாசித்தார் என்பதையும் நான் தங்களுக்கு முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். தாங்கள் இவரைக் காண ஆவலுடையவர்களா யிருக்கிறீர்கள் என்று தெரியப்படுத்தியிருப்பதால் இவரை இவண் கூப்பிட்டு வந்தேன்''

**இராமநாதர்:**—"இவர்தான் இராஜேந்திரரோ! இராஜேந்திரா! நீ எழுதிய கட்டுரைகளையும் நாவலையும் நான் வாசித்து அதிக மகிழ்ச்சியடைந்தேன். உன்போன்ற கல்வியறிவுடைய—உத்தமகுணம்படைத்த ஒருவன் எனக்கு மகனாக பிறவாமல் போனதையிட்டு மனம் வருந்துகிறேன். ஈசன் எனக்கு ஓர் ஆண்மகவை கொடுத்தார் எனினும், ஈசன் அவனை நல்வழியில்கொண்டு நடத்தவில்லை. "பிள்ளையை போற்றிவளர்" என்றபடி அவனை நான் அவன் மனம்போல நடக்கவிட்டதினால் தற்போது அவன் மதுரையில் ஓர் கொள்ளைக் கூட்டத்திற்கு தலைமை வகித்திருக்கிறான். சென்றகால பயனை எண்ணி வருந்துவதினால் பயனென்ன? அக்கவலையைத் தீர்க்கவேண்டி அநுதரக்ஷகர் இவ்வழகு சுந்தரியை எனக்கு அளித்திருக்கிறார். ஆதலால் அக்கவலை என்னை விட்டொழிந்ததென்றாலும் எனது குமாரனைப்போன்ற வடிவழகுடைய உன்னைக் கண்டதும் பழைய எண்ணங்கள் உதிக்கலாயின. ஏதோ எனக்கு கொடுத்து வைத்தது அவ்வளவுதான்."

**இராஜேந்திரன்:**—"ஐயா! இவ்விதம் வருந்துவதால் பயன் யாதொன்றுமில்லை. பொதுவாக ஒருவன் சிறுவயதாயிருக்கும்போதே அவனுக்கு நல்ல புத்திமதிகளைக் கூறியும், நன்னடத்தையில் நடக்கவும், செய்விக்கவேண்டியது பெற்றோர்களின் முக்கியமான கடமை. "முளையில்கிள்ளா தமரம் முற்றினால் கோடரிக்கொண்டு வெட்டவேண்டும்" என்று நாட்டோடியாகச் சொல்லிக்கொள்வார்கள். அதைப்போல தங்களுடைய குமாரனை சிறுவயதிலேயே நன்னடத்

தையில் நடக்கப்பழக்காத பெருங்குற்றம் தங்களைச் சேர்ந்ததே. சிறுவர்களின் மனம்போல நடக்க விட்டுவிட்டாலும் அவர்களுடன் நல்லொழுக்கமுள்ள சிறுவர்கள் பழகினால் திருந்திவிடுவார்கள். அவ்விதமின்றி துன்மார்க்கத்தில் ஈடுபட்டவர்களுடன் சேர்ந்தால், "பன்றியுடன் சேர்ந்த பசுங்கன்றும் மலந்தின்னும்" என்பதற்கொப்ப நல்ல குணமுடைய சிறுவர்களும் வெகு சீக்கிரத்தில் துன்மார்க்க செய்கையில் ஈடுபட்டு விடுவார்கள். இதை நாம் கண்கூடாகக் காண்கிறோமல்லவா? இப்பொறுப்பு முக்கியமாக பெண் மக்களைச்சேர்ந்ததே. சிறுவர்கள் பெண்களிடமே தந்தையரிடம் பழகுவதைப் பார்க்கிலும் அதிகமாகப் பழகுகின்றனர். ஆதலால் பெற்றவளாகிய அவர்களது தாய் பிள்ளைகள் விஷயத்தில் அதிக கவனமாயிருக்கவேண்டும். இதற்காகத்தான் பெண் கல்வி அவசியம் என்பது. ஒரு பெண் கல்வியறிவுடையவளாக விருந்தால், அவளிடம் மற்ற கல்வியறிவில்லாதவர்களைப் பார்க்கிலும் விசேஷமான குணம் அமைந்திருக்கும். ஒவ்வொரு நூல்களினின்றும் குழந்தைகளை வளர்க்கும் விதங்களையும் அறிந்து, பிள்ளைகளை நல்வழிப்படுத்தப் பிரயாசைப்படுவர். இங்ஙனமிருக்க நாம் தெய்வத்தை நோவதால் யாது பிரயோஜனம்? தற்போது தங்களுடைய மாளிகை எங்கு இருக்கிறது? அதிகநேரம் ஆகிறது. நான் ஒரு நண்பரைக்காணச் செல்லவேண்டியதாயிருக்கிறது. தங்களுடைய குமாரரை ஈசன் நல்வழிப் படுத்துவாராக!"

சுந்தரி:—"ஓஹோ! எங்களுடைய மாளிகை தங்களுக்குத் தெரியாதோ? வெகு விநோதமாயிருக்கிறதே. இப்போது தான் பொய்சொல்லப் பழகுகின்கிறீர்கள் போலும்! ஆம்! ஆம்!! களவையும் கற்று மற" என்பது பழமொழியல்லவா? அதன்படியே தாங்கள் நடக்க உத்தேசித்து விட்டீர்கள்போலும்! பேஷ்! நன்றாயிருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேந்திரன்:—"இல்லை. சுந்தரி! உனது மாளிகை எங்குளது என்பதை நான் அறியேன். ஆனால் இங்கு உங்களுக்குச் சந்திரவிலாசம் என்ற ஓர் அழகிய மாளிகை இருக்கிறது என்று நீ என்னிடம் ஒருமுறை சொல்லியிருக்கிறாய். ஆனால் இப்போது அதில்தானிருக்கிறீர்களோ? அன்றி வேறு எங்கேனும் இருக்கிறீர்களோ என்பதே சந்தேகம். அதனால்தான் அவ்விதம் வினவலானேன்."

இராமநாதர்:—"இராஜேந்திரா! முன் உன்னிடம் சுந்தரி குறிப்பிட்டதாகக் கூறும் சந்திரவிலாச மாளிகையில் தான் வசிக்கிறோம். கால்பேஸ் ஹோட்டல் வழியாகச் செல்லும் காலி ரோட்டில்தான் இருக்கிறது. உனக்கு ஜோலி இருந்தால் சென்றுவிட்டு எங்களது மாளிகைக்கு வந்துசேர். உன்னிடம் இரண்டொரு செய்திகளைத் தெரிவிக்க வேண்டியதிருக்கிறது".

இராஜேந்திரன்:—"சரி. அவ்விதமே வருகிறேன். நான் சென்று வரலாமா?"

இராமநாதர்:—நல்லது. உனது வேலை முடிந்தவுடன் இரவு 7 மணி சுமாருக்கு என்னை வந்து கண்டுகொள். சுகமே சென்றுவா."

இராஜேந்திரன்:—சுந்தரி! சென்று வரலாமா?"

சுந்தரி:—"சுகமாக—க்ஷேமமாகச் சென்று வாருங்கள். எங்களை மறந்துவிடாதீர்கள்" என்று கூறி அவனை அவனது கார் வரையும் வழி அனுப்பினாள். சிறிது நேரஞ் சென்றபின் இராமநாதரும் சுந்தரியும் தங்களது காரில் ஏறிச் சென்றனர்.

மாலை சுமார் 6 மணிதானிருக்கலாம். சுந்தரி இராஜேந்திரனின் மாளிகை சரஸ்வதி விலாசத்திற்குச் செல்லலானாள். (இராஜேந்திரனை கடற்கரையில் கார் வரையும் வழியனுப்பும்போது சுந்தரி அவனது பங்களா எவ்விடமுளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டுத் தெரிந்துகொண்டாள்). சரஸ்வதி விலாசத்தையடைந்து இராஜேந்திரனுடைய வாசிப்பு அறை (Reading room) யை யடைந்தாள். அங்கு அவனைக்காணவில்லை. அவனுடைய கார் வாயிலண்டையி லிருப்பதால் அவன் மாளிகையிலேயேதான் இருப்பான் என நம்பியே உள் பிரவேசித்தாள். முன்பின் அறியாத ஒருவருடைய பங்களாவிற்கு வழி தப்பிச் சென்றுவிட்டால் அவர்கள் யாது எண்ணுவார்கள்? ஆதலால் அவ்வறையைக் கூர்ந்து நோக்கினாள். அவ்வறையின் மத்தியில் ஓர் வட்ட வடிவமான மேசையொன்றும் அதன்மீது கிராமபோன் சங்கீதக் கருவியொன்றும் இருந்தது. அறையின் மத்தியில் காற்றாடி கிர் கிர் என்று சுழன்று அறை முழுவதையும் குளிர்ந்த காற்றைப் பரப்பிய வண்ணமாயிருந்தது. இராஜேந்திரனின் போட்டோப் படம் ஒன்றும் தொங்கவிடப்பட்டிருந்தது. (இந்தப் படத்தைக்கண்ணுற்ற சுந்தரி ஆனந்த சாகரத்திலாழ்ந்து அதனை எடுத்து ஓர் முத்தம் கொடுத்தாள். என்னே! இச்செய்கை! ஒருவன்மேல் மட்டற்ற அன்பு உதயமானால் அவனுடைய படத்தையுமா முத்தமிடவேண்டும்? அது அவளுக்கு மட்டற்ற ஆனந்தத்தை யளித்தது போலும்!) ஆடம்பரமற்ற அவ்வறையின் ஓர் பாகத்தில் தரையில் கம்பளி விரிக்கப்பட்டு அதன்மேல் ஆர்மோனியப் பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

ஆர்மோனியத்தைக் கண்ணுற்ற செல்வி சுந்தரி மட்டற்ற மகிழ்ச்சியுடன் அக்கம்பளியில் அமர்ந்து ஓர் இனிய சங்கீதத்தைப் பாடலானாள். கடற்கரையில் இராஜேந்திரன் பாடிய "ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்ற கீர்த்தனையைப் பாடியபின், சங்கீத வித்வான் பிரம்மஸ்ரீ S. V. சுப்பையா பாகவதர் பாடிய "காதலின் பாக்கியம் கதி தரும் யோக்கியம்" என்னும் கீதத்தை இனிய குரலில் மெதுவாகவும் இராகமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் பாடி அவ்விதமே ஹார்மோனியமும் வாசித்தாள். அவளுடைய குரலும் ஹார்மோனியத்தின் ஒலியும் ஒத்திருந்தது. கலைமகளும்கூட இவ்வழகு சுந்தரிக்கு நிகராவாளோ என்பது ஐயமே.

அம்மாளிகையினுள்ளிருந்து வந்த இராஜேந்திரன் "தனது வாசிப்பு அறையில் இனிய குரலில் யாரோ ஒருவர் "காதலின் பாக்கியம்" என்னும் சங்கீதத்தைப் பாடுகிறாரே இவ்வளவு துணிவாக நம்மாளிகையினுள் வந்தவர் நமக்குத் தெரிந்தவராகத்தானே இருப்பார். ஆனால் இவ்விதமான இனிய குரலில் பாடக்கூடியவர் எனக்குத் தெரிந்தமட்டில் இல்லையென்றே கூறலாம். இது ஒரு பெண் குரலாகவன்றோ தோன்றுகிறது. எனது சகோதரியோ மாளிகையின் மேன் மாடியில் "மனோகர திலகவதி" என்னும் நாவலை வாசித்துக் கொண்டிருக்கிறாள். பின் இது யாராக இருக்கலாம். நாம் சென்று பார்ப்போம்" என்று எண்ணமிட்டவாறே அறையை யடைந்தான்.

தனது ஆருயிர்க்காதலி சுந்தரி என்பதை அறிந்ததும் மெய் மறந்தவனாகித் திகைத்துவிட்டான். "இவள் எவ்வாறு இங்கு வந்துற்றாள்? ஆஹா! என்ன வடிவழகு! என்ன ஒய்யாரம்! என்ன காந்தி! என்ன இராகம்! எவ்வளவு இனிமை! இப்பெண்ணை யல்லவோ யான் வரிக்கவேண்டும்! ஈசன் எனக்கு உதவி யளிப்பாரா? அப்பெண்ணின் மனதை எனக்குச் சாதகமாகத் திருப்புவாரா? அப்பெண் என்னை ஏற்றுக்கொள்வாளா? ஏன் ஏற்றுக்கொள்ளமாட்டாள்?" என்று பற்பலவாறு எண்ணியவாறே, அம்மங்கை நல்லாள் இனிய கீதத்தைப் பாடிக் கொண்டிருக்கிறாள் என்பதையும் அடியோடு மறந்து அவளருகில் யாதொரு சந்தடியும் செய்யாது சென்று, கம்பளியில் அமர்ந்து அப்பெண் மணியைத் தூக்கித் தனது மடியில் வைத்துக்கொண்டு அவளுடைய மந்தகாசமான முகத்தை நோக்கியவாறே "பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலே! சற்றும் எதிர்பாராதவிதமாக நீயும் இவ்விடம் வந்து சேர்ந்தாய். எனது அறையில் அநாகரீகமாய்ப் புகுந்தது மன்றி ஆர்மோனியத்தையும் உபயோகித்துக் கொண்டு உனது சொந்த மாளிகையைப் போன்று எண்ணி வெகு இனிமையாகப் பாடிக்கொண்டிருக்கிறுயே. உனக்கு இவ்வளவு துணிவா?" என்று கூறி அவளுடைய அதரங்களில் முத்தங்களைச் சொரிந்தான்.

இராஜேந்திரன் தன்மீது கொண்டுள்ள அன்பின் பெருக்கால் தனக்கு முத்தாரங்களை அணிவித்துச் சந்தோஷப்படுத்துகிறுன் என்று அறிந்துகொண்ட செல்வி சுந்தரி ஆனந்தமெய்தினு ளென்றுலும், நாணமிகுதியால் தன்னிரு கண்களையும் மூடிக்கொண்டாள். சிறிதுநேரம் சென்றபின்பே இராஜேந்திரன் அருங்குணபூஷணியாகிய சுந்தரியை விடுவித்தான்.

"சுந்தரமாதே! ஏதோ தெரியாத்தனமாக—அநாகரீகமாக நடந்துகொண்டதை மன்னிக்கவேண்டும். உன்மீது கொண்டுள்ள அன்பின் பெருக்கால் ஏதோ ஒரு தெய்வீக உணர்ச்சி தென்படவும், உனது அழகிய மெல்லிய அதரங்கள் சிவக்கும்படி அநாகரீகமாய் நடந்துகொண்டேன். இதையிட்டு என்மீது சீற்றங்கொள்ளமாட்டா யென்றே நம்புகிறேன். அம்ருத கலசம்போன்ற உனது வாயால் நீ என்னை மனப்பூர்வமாய் மன்னித்துவிட்டதாகக் கூறிவிடு. நான் அதிக சந்தோஷமடைவேன்" என்று அவளது மெல்லிய கரங்களைப் பற்றித் தனது மார்போடணைத்துக் கொண்டு வேண்டினுன் இராஜேந்திரன்.

சுந்தரி:—"இராஜேந்திரா! நீ முதலாவது வினவியதைப் பார்த்தால் எனக்கு இம்மாளிகையில் பாத்தியதை இல்லை யென்று எண்ணுகிறுய்போலும்! அவ்வெண்ணத்தை அடியோடு விட்டுவிடு. இம்மாளிகை என்னுடைய ஆருயிர்க் காதலரின் மாளிகை—ஏன்? எனக்குச் சொந்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகை. ஆதலால் நான் இதில் பிரவேசிக்கப் பிறரின் உதவியையோ—அன்றி தயவையோ எதிர்பார்க்கவேண்டியதில்லை. இம்மாளிகை எனக்குச் சொந்தமானதாக இல்லையென்றும், ஆதலின் பிரவேசித்தது குற்றம் என்றும் வைத்துக்கொள்வோம். பிறருடைய மாளிகையில் பிரவேசித்த அந்நியப் பெண்ணாகிய என்னிடம், மாளிகையின் சொந்தக்காரனாகிய நீ இவ்விதம் நடந்துகொள்வது நியாயமா? இவ்விதம் என்னிடம் நடந்துகொள்ள உனக்கு என்ன பாத்தியதை உளது? என்று உன்னைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். என்மீது கொண்டுள்ள அன்பு முற்றிக் காதலாக மாறிவிட்டதால் நீ இவ்விதம் நடந்துகொண்டாயென்று நம்புகிறேன். அது உண்மையாயின் என்னைப் போலும் அதிர்ஷ்டசாலி இப்பூவுலகில் வேறொருவர் இருக்க முடியாதென்பது நிச்சயம். உன்னை நான் "காதலா" என்று அழைக்கலாமா? காதலா! நீ தப்பிதமான—அநாகரீகமான ஒரு செய்கையையும் செய்துவிடவில்லை. ஆதலால் நீ என்னிடம் மன்னிப்புக் கேட்டதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று தேன்மொழியாள் சுந்தரி கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

இராஜேந்திரன்:—"சுந்தரி! உன்னை வெல்ல ஒருவராலும் முடியாது. எத்தனை விதங்களிலெல்லாம் என்னை நீ மடக்கிவிடுகிறாய்? ஆதலால் நான் மன்னிப்புக் கேட்டதை வாபஸ் வாங்கிக்கொண்டேன். சுந்தரி! நீ என்னைக் காதலிப்பதாக உனது மதுரமான வார்த்தைகள் தெளிவுறுத்துகின்றன. அது மெய்தான்போலும்! அவ்விதமாயின் நான் பரம சந்தோஷமடைய யாரிடம் கேட்கவேண்டும்? பெண்ணே! என்னை நீ மனப்பூர்வமாகக் காதலிப்பதாக வாக்குறுதி அளி. அவ்விதமாயின் நான் நம்புகிறேன். நான் உன்னையே வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று, நாமிருவரும் பள்ளியில் கல்வி பயிலும்போதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயித்துவிட்டேன். பற்பல இடையூறுகள் நேரிட்டதின் பயனாக எனது அபிப்பிராயத்தை—நோக்கத்தை உன்னிடம் வெளியிடமுடியாது போயிற்று. "கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல்" நீ என்னைக் காதலிப்பதாகக் கூறிவிட்டாய். ஒரு வேளை எனது விபரீதச் செய்கையைக் கண்ணுற்று என்னை மயக்கவேண்டுமென்றும், பரிகாசஞ் செய்யவேண்டுமென்றும் இவ்விதம் கூறினையோ? அவ்விதமாயின் நான் ஏமாற்றமடைய வேண்டியதாகும். "காதலா" என்று நீ கூறிய ஒரு சொல், எனது மனதில் பலவித எண்ணங்களை உண்டாக்கி என்னை வருத்துகின்றது. என் செய்வது? உனது அறிவின் முயற்சி என்னைப் பிரமிக்கும்படி செய்துவிடுகின்றது. உனது உண்மையான அபிப்பிராயமென்ன என்பதைத் தெரிவிக்கமாட்டாயா" என்று தனது மடியில் ஒய்யாரமாக வீற்றிருக்கும் சுந்தரியிடம் இராஜேந்திரன் வினவினன்.

சுந்தரி:—"இராஜேந்திரா! கடவுள் சாக்ஷியாக நான் உன்னையே காதலித்து, உன்னையே கணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்து நாட்கள் பல ஏன் மாதங்கள் பல கடந்துவிட்டன. என்னைத் தனபாலனுக்கு விவாகஞ் செய்ய என் பெற்றோர்கள் நிச்சயித்தார்கள். இதையறிந்து நான் எனது தந்தையிடம் தனபாலனுக்கு மனைவியாக வாழ்வதைப்பார்க்கிலும் தற்கொலை புரிந்து மாண்டுவிடுவேன் எனக் கூறினேன். அவரும் ஒரு விதமாக எனது வேண்டுகோளை ஆதரித்து இணங்கினரென்றாலும் எனக்கு முற்றாக நம்பிக்கையில்லை. பணப்பேய் பிடர் பிடித்துவந்த அவர்கள் தான் என் செய்வார்கள். எவ்விதமும் எனக்கு மணம் செய்விக்க வேண்டுமென்றே எனது அன்னை நிச்சயித்துவிட்டாள். ஆதலால் இந்த விபரங்களை உன்னிடம் கூறி உன்மீது கொண்டுள்ள மட்டற்ற—தெய்வீகத் தன்மையான காதலை உன்னிடம் தெரிவித்து உனது அபிப்பிராயத்

தை யறியவே உன் மாளிகையை யடைந்தேன். அப்போது தான் 'பஞ்சாபீஸ் நெருப்புப் பற்றியதைப் பற்றி' தந்தி ஒன்று உனக்கு வந்திருந்தது. நீ துக்காதேவியிடம் அகப்பட்டுத் தத்தளிக்கின்ற கோலத்தைக் கண்டு நான் உன்னைத் தேற்றினேன். எனது காதலை உன்னிடம் கூற அது சமயம் நான் விரும்பவில்லை. தாடி தீப்பற்றி எரியும் போது ஒரு புண்ணியவான் சுருட்டுப் பற்றவைக்க ஓடிவந்ததைப் போலிருந்திருக்கும். மறுநாள் கூறி உனது சம்மதத்தைப் பெறலாமென்று எண்ணி உன்னை விட்டுப் பிரிந்தேன். மறுநாள் உன்னைக்காணவில்லை. நீ எங்கேயோ அவசரமாகச் சென்றுவிட்டதாக அறிந்து நான் பட்ட பாட்டை என்னென்பது. மூன்றாம் நாள் நீ கைது செய்யப் பட்டதாக பத்திரிகையின் மூலமாக அறிந்து ஏமாற்றமும் துக்கமு மடைந்தேன். தாய் நாட்டின் விடுதலைக்கு ஆர்வமுற்ற நீ முன்பொரு முறை சிறை சென்றுள்ளாய். அதில் அதிக சுகவீனமுற்றாய். அதைப்போன்று இப்போதும் நீ அசௌக்கியமடைய நேரிடுமே என்ற கவலை ஒரு புறமும், தாய் நாட்டின் விடுதலைக்கு நீ மீண்டும் சிறை சென்றதை எண்ணி ஆனந்த மொருபுறமும் உதிக்க நானும் உன்னைப் பின்பற்றி நடந்து கைது செய்யப் பட்டேன். தனபாலனை மணக்க எனக்கு விருப்பமில்லையாதலால், உனக்குச் சொந்தமான இவ்வுயிரை உன் மனம்போலத் தாய்நாட்டிற்கே தியாகஞ் செய்ய முற்பட்டேன்." சிறைவாயிலில் என்னை அழைக்க வந்திருந்த எனது தந்தையிடம் "தனபாலனை மணக்க விருப்பமில்லை. ஆதலால் என்னிஷ்டம்போல் நடக்கத் தீர்மானித்துள்ளேன்" என்று விடை பகர்ந்தேன். அப்போது எனது தந்தை "சுந்தரி! நீ எதற்கும் வருந்தாதே. ஒரு பெண் குழந்தையாகிய உன்னை நான் கெடுக்க முற்படுவேனா! அதைப்பற்றி நீ மனக்கிலேச மடையவேண்டாம். உன் மனதிற்குகந்த மணாளனுக்கே உன்னை நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணஞ்செய்விக்கிறேன். பாவி தனபாலன் உன் அண்ணனை யையும் கொலை செய்து, தற்போது அவன் தீவாந்திர சிகைஷ யனுபவிக்கிறான். எனது கெட்ட—குறுகிய புத்தி யினால் உனது அன்னையையும் பறி கொடுக்க நேர்ந்தது" என்று கண்ணீர் வடித்தார். எனது அன்னை கொலை செய் யப்பட்டாள் என்று கேட்டவுடன் நான் என்ன நிலைமையி லிருந்திருப்பேன் என்பதை நீயே யூகித்துக்கொள். பின் நாங்கள் இவ்விலங்கைத்தீவை யடைந்தோம். உன்னைக்காண எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. பத்திரிகைகளில் வெளியாகும் தினது கட்டுரைகளையும் நாவலையும் வாசித்த வாறே உன்னை என்னிடம் சேர்க்கும்படி நாக மேல் பள்ளி யாகி யோக நித்திரை கொள்ளும் ராகவனை வேண்டிக் கொண்டேன். அவ்விதமே உம்மை என்னிடம் சேர்த்து எனது காதலையும் ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டார்" என்று மெல்லிய குரலில் தனது காதலனிடம் சுந்தரி மொழிந்தனள்.

இவைகளையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக்கொண் டிருந்த இராஜேந்திரன் மனம் வருந்தினான். தனது காதலி பலவித இடையூறுகளுக்கு ஆளாகி விட்டனளே என வருந்தினான். தன்னால் தனது காதலியின் அன்னை கொலை செய்யப்பட்டதை எண்ணி எண்ணி ஆராத்துயர மடைந் தான். பின் இருவரும் தங்களிடமிருந்து துக்காதேவி யை விரட்டிவிட்டனர். "சுந்தரி! உனது குரல் வெகு இனி மையாக இருக்கிறதே. ஹார்மோனியத்தில் ஒரு கீதத் தைப் பாடேன். பார்ப்போம்" என்று இராஜேந்திரன் வினவினான்.

அவ்வனிதை இராஜேந்திரனுடைய மடியிலிருந்தும் எழ விருப்பமில்லாதவளாகி, பின் ஒருவாறு எழுந்து தனது காதலன் வேண்டுகோளுக்கிணங்கி சுப்பையா பாகவதர் பாடிய "ஸ்ரீரகுவர சுகுணாலய" என்னும் சங்கீதத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியபின் "காதல் மனோஹரரைக் கண்டேன் கண்டேன் மிக ஆதரவான மையல் கொண்டேன் கொண்டேன்" என்ற சங்கீதத்தை—பாட்டைப் பாடியதைக் கேட்டதும் இராஜேந்திரன் ஆனந்தமடைந்து "பெண்ணே! உனக்கு நான் என் ஞாபகார்த்தமாக, இல்லை. இல்லை. என்னை நேசித்ததினால் உனக்கு ஒரு பட்டம் வழங்க விரும்புகிறேன். ஆதலால் உனக்கு "கவியரசி" என்னும் பெயரை உனக்குச் சூட்டுகிறேன்" எனக் கூறினான்.

"காதலா! நீ என்ன கட்டளை பிறப்பித்தாலும் அடியாள் நான் செய்யத் தயாராயிருக்கிறேன். அதுபோல எனக்கு நீ என்ன பட்டத்தை யளித்தாலும் நான் மனமுவந்து வந்தனத்துடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்று சுந்தரி விடை பகர்ந்தாள். மணியும் ஏழு அடித்தது. இருவரும் சுந்தரியின் தந்தையைக் காணவேண்டி இராஜேந்திரனின் காரிலேயே பிரயாணமாகி சந்திரவிலாசம் வந்து சேர்ந்தனர்.

இவனது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராமநாதர் அன்புடன் வரவேற்றார். இவனுடன் வந்த சுந்தரி தனது அறைபோய்ச் சேர்ந்தாள். இராஜேந்திரனும் இராமநாதரும் வேறொரு அறை போய்ச் சேர்ந்தனர்.

**இராமநாதர்:**—"இராஜேந்திரா! உனக்கு பதினெட்டு, இருபது வயதாகியிருக்கும். உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா? நான் திடீரென இவ்விஷயத்தைப்பற்றி வினவியதை நீ தப்பான அபிப்பிராயங் கொள்ளமாட்டாயென்றே நம்புகிறேன்".

**இராஜேந்திரன்:**—"ஐயா! எனக்கு இன்னும் விவாகமாகவில்லை எனக்கு சீதாலெக்ஷ்மி என்ற ஓர் சகோதரி இருக்கிறாள். அவளுக்குத் தக்க ஓர் வாலிபனைத்தேடி மணம் முடிக்கவேண்டியது அவசியம். அவளுக்கும் தகுந்த வயதாகிவிட்டது. ஆதலால் அவளுக்கு மணமானபின் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றக் காரியாதிகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். ஏதோ தாங்கள் பெரியவர்களாயிற்றே. எனக்குத் தந்தையுமில்லை. தாயுமில்லை. ஆதலால் தாங்களே என் விஷயத்திலும் என் சகோதரி விஷயத்திலும் கொஞ்சம் சிரத்தையெடுத்தால் மெத்த உபகாரமாகவிருக்கும். தாங்கள் இவ்வேண்டுகோளை அங்கீகரிப்பீர்களென்றே நம்புகிறேன்.”

இராம:—“சரி. அதற்கென்ன? நான் உனக்குத் தக்க ஓர் பெண்ணைக் கண்டுபிடித்தே உனது அபிப்பிராயத்தை அறிய விரும்பினேன். அப்பெண்ணும் உன்னையே கணவராக வரிக்கவேண்டுமென்ற திடமான மன உறுதியோடிருப்பினும் அதை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ளவில்லை. என்றாலும் உன்னுடைய நாவல்களையும் கட்டுரைகளையும் வாசித்துவிட்டு அதைப்பற்றி அவளுடைய அபிப்பிராயத்தை என்னிடம் கூறும்போது நான் அவளுடைய மனப்பான்மையை ஒருவாறு யூகித்தறிந்துகொண்டேன். ஆதலால் அவளுடைய விவாகத்தைப்பற்றி இரண்டொரு முறை நான் அவளிடம் வினவியபொழுது, பெண்களுக்கு இயற்கையாகவுள்ள நாணம் அவளைத் தலை குனிந்து மௌனம் சாதிக்கும்படி செய்துவிடுகிறது. பொறுமை, சாந்தம்' நற்குணம் ஒழுக்கம் முதலிய மேன்மையான குணங்களையுடைய ஓர் ஆண்மகனுக்கு, அவனைப்போன்று நற்குணம், நன்னடத்தையுள்ள ஓர் பெண்ணை மணமுடித்தலே உண்மையான மணம். அதுவே பொருந்தும். தம்பதிகள் இருவரும் ஊசியும் நூலும் போன்று இல்லறத்தை நெறிதவராது நடத்துவார்கள். இப்பொறுப்பு முக்கியமாக ஒவ்வொரு பெற்றோரையும் சார்ந்தது. அவர்கள் தங்களுடைய மக்களுக்கேற்ற துணைவர்களையே தேடி அவர்களின் மனம்போலவே மணத்தை முடிக்கவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அவர்களின் வாழ்நாட்களெல்லாம் வீண் நாட்களாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரியும் பாம்பும் போன்று நடந்து, தங்களின் இஷ்டம்போல் சோரநாயகியையோ, அன்றி சோரநாயகனையோ விரும்பி அவர்களுடன் வாழ்ந்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோமல்லவா? இவைகளை யெல்லாம் உத்தேசித்து உங்களிருவரையும் இல்லறவாழ்க்கைத் துணைவர்களாக்கி விட வேண்டுமென்று எண்ணலானேன். உனது அபிப்பிராய மென்ன?"

இராஜே:—"ஐயா தாங்கள் கூறியபடியே மேன்மையான குணங்களையுடைய ஓர் பெண்மணியை வரிக்கவேண்டுமென்று அவாவுகிறேன். எனது அவாவை எல்லாம் வல்ல இறைவன் நிறைவேற்றுவாரென்றே நம்புகிறேன். தாங்கள் குறிப்பிடும் பெண்கள் திலகம் யாரென்பதை நான் அறியலாகுமோ?"

இராம:—"ஆம்! அறியலாம். இதற்கென்ன தடையுளது? நான் குறிப்பிடும் பெண் உனக்கு அறிமுகமானவளே. உன்னுடனேயே கல்வி கற்றவள். அவளுடைய குணாதிசயங்களை நீயே அறிந்திருப்பாய். ஆதலால் நான் விவரித்துக் கூறவேண்டியதில்லை. அப்பெண்தான் "சுந்தரி" என்ற எனது புதல்வி.".

இராஜே:—"ஹா! ஹா! சுந்தரியா? அவளா என்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறாள்? இது உண்மை தானா?"

இராம:—"ஆம். இது உண்மை. ஒருவன் அல்லது அல்லது ஒருத்தி தனது மனதிற்கிசைந்த மனையாளையே—மணாளனையே முறையே விரும்புவது இயல்பன்றோ! அத்தன்மைபோல சுந்தரியும் தனது குணங்களுக்கொப்பான—ஏன் அதற்கும் மேலான குணங்களையுடையவனை ஏற்றுக் கொண்டனள். "கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" என்பது பொய்த்துவிடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

இராஜே:—"தாங்கள் கூறுவது உண்மையாயின் நான் ஓர் அதிர்ஷ்டசாலியே."

இராம:—"அதென்ன அவ்விதம் கூறுகிறாய்? "உண்மையாயின்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "உண்மையே" என்று கூறக்கூடாதோ? நான் கூறுவது உனக்கு நம்பிக்கையாகவில்லையோ? உனது அபிப்பிராயம்தானென்ன?"

இராஜே:—"சரி. தாங்கள் கூறுவது உண்மையே! எனக்கும் நம்பிக்கைதான். ஆனால் எனது சகோதரியைப் பற்றி...—__?"

இராம:—"ஆம். அதையும் கவனிக்கவேண்டியதுதான். உனக்குத் தெரிந்தமட்டில் யாரேனும் நல்லவர்களிருக்கிறார்களோ?"

இராஜே:—"ஆம். இருக்கிறார். எனது தோட்டங்களையெல்லாம் மேல்பார்த்து வருகிற ஒருவர் மேன்மையான குணங்களையுடையவர். கல்வியில் சீமான். நம்பிக்கையுள்ளவர். அவர் என்னிடம் வந்ததுமுதல் தோட்டங்களைப் பற்றிய கவலையே எனக்குக் கிடையாது. அவருடைய செய்கை—நடத்தை முதலியவைகளையும் குணவிசேஷங்களையும் அறிந்தே அவருக்குக் குணசேகரன் என்ற பெயரை அளித்திருக்கின்றனர். ஆதலால் அக்குணசேகரருக்கே தங்கை சீதாலெக்ஷ்மியை முடித்துவிடலாமென்று எண்ணுகிறேன்."

இராம:—"சரி. அதற்கென்ன? அவருடைய அபிப்பிராயத்தையும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்"

பின்பு ஒரு மணிநேரமாக விவாஹ விஷயங்களைப் பற்றியும், இராஜேந்திரனின் குடும்ப வாழ்க்கையைப் பற்றியும், தற்கால வரவு செலவுகளைப் பற்றியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். பின் எல்லோருமாக இரவு போஜனமருந்தினர். வெகு நேரமாகிவிட்டதால் இரவு சந்திரவிலாசத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே தங்கும்படி கேட்டுக்கொண்டும் இராஜேந்திரன் தனது இல்லத்தை யடைந்தான்.

இராஜேந்திரனுக்கு அநேக தோட்டங்களிருந்தன. ரப்பர் தோட்டங்களும், தேயிலைத் தோட்டங்களும், நெல், வாழை, சுக்கு, திப்பிலி, வால்மிளகு, கடுக்காய், பஞ்சு, காய்கறி, மின்னரம், ஜாதிபத்திரி, ஏலம் கிராம்பு, கடுகு, காப்பி, கொக்கோ, ஜாதிக்காய், தெங்கு, பாக்குமரம், பலா, முதலியவைகளடங்கிய தோட்டங்களும் இருந்தன. இவைகளினால் ஏராளமான லாபம்பெற்று தன் தகப்பனார் கொடுக்கவேண்டிய கடனை ஒரு செம்புக்காசுகூட பாக்கியில்லாமல் கொடுத்துவிட்டான். விலைவாசிகளும் இவனுக்கனுகூலமாக இருந்தன. இவைகளையெல்லாம் மேல்பார்க்க நம்பிக்கையுள்ள குணசேகரனை சொற்ப சம்பளத்தில் அமர்த்தியிருந்தான். இராஜேந்திரனும் மாத மும்முறையாவது சென்று அவைகளைச்சுற்றிப்பார்த்துவிட்டு, கணக்குகளையும்பரிசீலனை செய்துவிட்டு வருவது வழக்கம். இவனுடைய தோட்டங்களில் வேலைசெய்யும் கூலி ஜனங்கள் பசியென்பதே இன்னதென்று அறியமாட்டார்கள். அவன் அவர்களுக்குப்போதிய சம்பளம் கொடுத்துவந்தான். அவர்களுக்கு தனது தோட்டங்களில் விளையும் நெல்லையே குறைந்த விலைக்குக்கொடுத்து வந்தான். அவர்கள் வசிக்க வீடுகளும் (சுகாதார விதிகளின்படி) போதிய சவுகரியமாக அமைத்துக் கொடுத்திருந்தான். தொழிலாளரின் குழந்தகள் கல்விபயில இரண்டு பெரிய பாடசாலைகளும் அமைத்து, அதில் ஒன்றில் ஆண் குழந்தைகளுக்கும், ஒன்றில் பெண் குழந்தைகளுக்கும் கல்விபோதித்து வந்தான். அப்பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் தங்களுடைய கடமை யாதென்பதை அறிந்து அதன்படி நடந்து இராஜேந்திரனையும் மற்றவர்களையும் மகிழ்வித்தனர். சிறுவர்கள் விளையாட மைதானங்களும் அமைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தன. ஒவ்வொரு தோட்டங்களிலும் ஒவ்வொரு வைத்தியசாலை அமைக்கப் பட்டிருந்தது.

இந்தத் தோட்டங்களை யெல்லாம் மேல்பார்க்க நம்பிக்கையுள்ள, குணசேகரனை நியமித்திருந்ததாக முன் கூறினேனல்லவா? ஆம். அவன் சென்னையிலுள்ள ஓர் இன்ஸ்பெக்டரின் குமாரன். இன்ஸ்பெக்டருக்கும் இராஜேந்திரனுடைய தந்தைக்கும் உள்ள சிநேகிதப்பான்மையில் சொற்ப சம்பளத்தில் இந்தத்தோட்டங்களை மேல்பார்க்கும்படி தமது குமாரனை இன்ஸ்பெக்டர் கூறினர். அவ்விதமே இன்ஸ்பெக்டரின் குமாரன் குணசேகரன் தனது சொந்தத் தோட்டங்களைப்போன்று மேல்பார்த்து வருகின்றன். இவ்வாறிருக்கையில் ஏதோ அவசர காரியமாக குணசேகரன் சரஸ்வதி விலாச மாளிகைக்கு வந்துசேர்ந்தான்.

சீதாலெக்ஷ்மி தனது அறையில் மாலையொன்றை தொடுத்துக் கொண்டிருந்தாள். அறையெங்கும் மலரின் மணம் நிறைந்ததாயிருந்தது. குணசேகரன் இவ்வறைவந்து சேர்ந்தான். அங்கு ஓர் பெண் மாலைதொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். என்றுமில்லா ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்தான். "இப்பெண் இவ்விடம் எவ்விதம் வந்துற்றுள். ஒருவேளை இராஜேந்திரனின் காதலியோ. அவன் இப்பெண்ணை மணக்க விரும்புகிருனே" என்று தன்னுள் வினவியவாறே உள் செல்லலானன். குணசேகரன் வருவதை சீதாலெக்ஷ்மி அறியாளாதலால் அவள் பூமாலை தொடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள்.

"பெண்ணே! நீ தனித்திருக்கும் இவ்வறையில் அந்நியனுகிய நான் பிரவேசித்ததை மன்னிக்கவும். ஓர் அவசர ஜோலியினிமித்தம் இராஜேந்திரனை—எனது எஜமானரைக் காண வந்துள்ளேன். அவர் எங்கே வெளியில் சென்றுள்ளாரோ" என்று கூறியவாறே அவளருகில் சென்றன். சற்றும் எதிர்பாராதவிதமாக எழுந்த ஒருவரின் குரலைக்கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாலெக்ஷ்மி திடுக்கிட்டு பின்புறம் நோக்கினாள். அங்கு வந்துள்ள குணசேகரனைக் கண்ணுற்றதும் அவளுடைய முகத்தில் சந்தோஷக்குறி தென்பட்டது. "வாருங்கள்! வாருங்கள்!! குணசேகரரே வாருங்கள். தாங்கள் என்னை சோதிக்கிறீர்கள் போலும்! க்ஷேமலாபங்களெப்படி? தங்களைக் கண்டு வெகு நாளாய்விட்டதே" என்று புன்னகை தவழ்ந்த முகத்துடனும், சிறிது நாணத்துடனும் தலை கவிழ்ந்தவாறே வரவேற்றாள்.

**குணசேகரன்:—** "நல்ல க்ஷேமம் தான். நீ இம்மாளிகையில் இருக்கவேண்டிய காரணம் என்ன?"

**சீதா:—** "தங்களுக்குத் தெரியாதோ? இது என் சகோதரரின் மாளிகை. இராஜேந்திரன் எனது சகோதரர். இதை தாங்கள் அறியமாட்டீர்கள் போலும். நன்றாயிருக்கிறதே நான் வந்து இவ்வளவு நாட்களாகியும் தங்களிடம் என்னைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையா?"

**குணசே:—** "இல்லை என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. இராஜேந்திரருக்கு ஓர் சகோதரி உண்டென்பதை நான் அறியேன். நீ இராஜேந்திரனின் சகோதரி யென்பதை அறிந்து மட்டற்ற ஆனந்தமடைகிறேன். இராஜேந்திரனிடமுள்ள உயர்ந்த குணங்களையெல்லாம் ஈசன் உன்னிடமும் அமைத்திருக்கிறார். சீதாலெக்ஷ்மி என்றால் உனக்கே தகும். அருங்குண பூஷணியாகிய நீ சகல துறைகளிலும் பெயர் பெற்று விளங்குகிறாய். களங்கமற்ற மனமுடைய நீ எல்லாரிடமும் சகோதரியைப் போல் நடந்துகொள்கிறாய். பிறருக்கு உதவிசெய்தலையே உனது வாழ்க்கையின் லக்ஷியமென எண்ணி நடந்துகொள்கிறாய். இவ்வுலகில் உன்னைப் போன்று சகல மேன்மையான குணமும், வடிவழகும் ஒருங்கே யமையப்பெற்ற மங்கையைக் காண்பதரிது என்பதே எனது அபிப்பிராயம். செங்கமலத் திருவனைய (செந்தாமரைப் பூவில் இருக்கின்ற இலக்குமியைப் போன்ற)வளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய உனக்கு சகல பாக்கியமும் உண்டாகி நீ நீடூழிவாழ்ந்து என்னை களிப்பிக்க ஈசன் அருள்புரிவாராக."

சீதா:— "நண்பரே! தாங்கள் என்னை வெகுவாய்ப்புகழ்ந்துவிட்டீர்கள். தங்களுடைய புகழ்ச்சியை நான் ஏற்றுக்கொள்ள முற்றிலும் அருகதையுடையவள் அல்ல, என்றாலும் அப்புகழ்ச்சியை தினந்தோறும் ஏற்றுக்கொண்டிருக்கும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

குணசே:— "லெக்ஷ்மி! நான் உன்னைக் கண்டதும் இராஜேந்திரனுக்கும் உனக்கும் விவாகமாகிவிட்டதோ என்று தப்பபிப்பிராயங்கொண்டதை மன்னிக்கவேண்டுகிறேன். நீயார் என்பதை நான் அறிவேனாயினும் இராஜேந்திரன் உனதுசகோதரர் என்பதை அறியேனாகையால் இவ்விதம் எண்ண நேரிட்டது. அதிருக்கட்டும். நான் உன்னிடம் ஓர் விஷயத்தை கூற எத்தனையோ முறை முயன்றும் பயன்படாமற் போய்விட்டது. நான் எனது தந்தையுடன் நீ கல்விகற்ற பாடசாலைக்கு பரீக்ஷையினிமித்தம் வந்திருந்தேனல்லவா? அப்போது என் பார்வை உன்மீது பட்டது. உடனே எனக்கு ஒருவித புதிய உணர்ச்சி தென்பட்டது. எனது மனம் ஒரு நிலையிலில்லை. நான் உனது அருகில் நின்றதை யறிந்த நீ உனது பாடபுஸ்தகத்தால் உனது மதிமுகத்தை மறைத்துக் கொண்டாய். அது எனக்கு கொஞ்சம் நற்புத்தியை யளித்தது. உன்னையே உற்றுநோக்கும் என்னை நீ அலக்ஷியமாய் எண்ணி எனது முகத்தைப் பார்க்கவும் வெட்கமடைந்து உனது அழகான திருமுகத்தை மறைத்துக்கொண்டாயெனக் கருதி எனக்கு உண்டான புது உணர்ச்சியை எனது மனத்தினின்றும் அகற்ற முயன்றேன். இவ்வாறிருக்கையில் நீ கடைக்கண்ணால் புன்சிரிப்புடனும், ஆனந்தமான பார்வையுடனும் என்னை நோக்கியதும் எனது முயற்சி தோல்வியடைந்தது. எனக்குத் தோன்றிய நவீன உணர்ச்சி பன்மடங்கு அதிகரித்தது. ஒருவாறு எனது மனதைத்திடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக்கொண்டு அங்கு போடப்பட்டிருந்த நாற்காலி யொன்றில் பித்தம் பிடித்தவனைப் போன்று வீற்றிருந்தேன். ஒவ்வொரு பாடமும் முடிந்து மார்க்குகள் கொடுக்கப்படும் நேரத்தில் உனக்கு எத்தனை மார்க்குகள் கிடைத்தன என்பதை நன்கு கவனித்துவந்தேன். ஒவ்வொன்றிலும் நீ முதன்மையாக தேர்ச்சி பெற்றிருந்தாய் என அறிந்த நான் அடைந்த மகிழ்ச்சிக்கும் ஓர் எல்லையுண்டோ? உனது புஸ்தகங்களில் ஒன்று என் கைவசம் கிடைத்தது. அதன் மேல் உனது விலாசம் அழகான எழுத்துக்களில் வரைந்திருந்ததைக் கண்டவுடன் ஒருவருக்கும் தெரியாமல் எனது பாக்கெட் டைரியில் அவ்விலாசத்தை குறித்துக்கொண்டேன். சுமார் 10 தினங்கள் சென்றபின் உனது மாளிகைக்கு வந்தேன். அப்போது நீ தேக அசௌக்கிய முற்றிருந்தாய். ஆதலால் எனதுகருத்தை உனக்குத் தெரியப்படுத்தவில்லை. அவ்வுணர்ச்சி "காதல்" என்பதை நாளடைவில் தெரிந்துகொண்டேன். இப்போது உனது சகோதரனைக்காண இவ்விடம் வந்தேன். எதிர்பாராதவிதமாக உன்னைச் சந்தித்தேன். நான் வெகு நாளாய் உன்மீது கொண்டுள்ள காதலை இன்று உனக்கு தெரியப்படுத்தினேன். நான் கூறுவது உனக்கு வேடிக்கையாகவுமிருக்கலாம். தவிரவும் என்னை ஓர் பித்தன் என்றும் எண்ணுவாய். "தெய்வீகத் தன்மையான காதல்" என்னும் உணர்ச்சி உனக்கு ஏற்பட்டிருந்தால் நான் கூறுவது உண்மையென உனக்குப் புலப்படும். எனது காதலை நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. ஓர் ஆண்மகனும், பெண்மணியும் மனமொருமித்து காதலித்தலே உண்மைக் காதல். தன்னை இச்சிக்காத ஓர் பெண்ணை ஓர் வாலிபன் காதலித்தால் அதனுல் இருவருக்கும் யாதொரு நன்மையும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் நீ என்னை காதலனுக—இல்வாழ்க்கைத் துணைவனுக ஏற்றுக்கொள்ள விரும்பினுல் எனக்குத் தெரிவி" என்று ஏதேதெல்லாமோ பிதற்றினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை யெல்லாம் தலைகுனிந்தவாறே மௌனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த சீதாலெக்ஷ்மி ஆனந்தமடைந்தாள். தான் விரும்பியபடி அவரும் ஓர் உத்தம குணம்படைத்தவராதலால் அவரையே தனது ஆருயிர்க் காதலராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவாவினுள். அவளை யறியாமலே அவளது பார்வை குணசேகரனின் மீது பாய்ந்தது. இதுவரையும் எங்கேயோ நோக்கிக்கொண்டு பேசிய குணசேகரன் திடீரென சீதாலெக்ஷ்மியை நோக்க இருவரது கண்களும் ஒன்றுய்ச் சந்தித்தன. ஒருவரது அழகை ஒருவர் பருகினர். குணசேகரனைப் பார்த்துக்கொண்டே இருப்பது அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்ததெனினும் சில நிமிஷங்களுக்குள் தன்னிருகரங்களாலும் கண்களை மூடிக்கொண்டாள். அவள் என்செய்வாள் பாவம்! பெண்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள நாணம் அவளை இவ்விதம் கோலம் செய்கின்றது.

குண்சே:— "சீதாலெக்ஷ்மி! என்னை ஏற்றுக்கொள்ள மனமில்லை யெனின் கூறிவிடு. அதற்காக நான் வருந்தமாட்டேன். நீ என் விருப்பத்தை நிறைவேற்றுவிடில் நான் உன்னை என் உடன்பிறந்த சகோதரியைப் போல எண்ணி நடந்துகொள்வேன். உனது அபிப்பிராயத்தை தாராளமாய் வெளியிடலாம்."

சீதாலே:— "அன்பரே! தங்களுடன் இரண்டொரு நாள் பழகியிருப்பினும், தங்களுடைய சாமர்த்தியத்தையும் நடத்தையையும், குணத்தையும் முற்றிலும் அறியாதிருப்பினும் சிறிதளவாகிலும் அறிந்துள்ளேன். தாங்கள் என்னிடம் காட்டிய அன்பு என்னை பிரமிக்கச் செய்துவிட்டது. நான் சுகவீனமாயிருக்கும்போது என்னைச் சந்தித்து, என்னுடன் இனிமையாக சம்பாஷணை செய்யும் பொழுதே நான் தங்களை எனது பிராணநாதராக ஏற்றுக்கொண்டேன். தங்களைக் கண்டதும் நான் என்படுக்கையினின்றும் எழுந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்க முயன்றேன். பலவீனத்தினால் எழுந்திருக்கமுடியா மல் தத்தளித்த என்னை நோக்கி தாங்கள் "சீதாலெக்ஷ்மி! ஏன் எழுகின்கிறாய்? நீ என்மீது கொண்டுள்ள அன்பே போதுமானது. நீ பிறர் முன்னிலையில் என்னிடம் மரியா தையாக—கண்ணியமாக நடந்துகொள்ளும் சமயம் வேறு உளது. ஆதலால் நீ படுத்துக்கொள்" என்று கூறியவாறே எனது பக்கலில் அமர்ந்தீர்கள். அப்போதே தங்களுடைய மனப்பான்மையை ஒருவாறு அறிந்துகொண்டேன். தங்க ளுடைய சாமர்த்தியத்தினால் தாங்கள் என்னை தங்கள் வசப் படுத்திக்கொண்டீர்கள். இனி தப்பமுடியாது. நான் தங்களை யே கணவராக நியமித்துக்கொண்டேன். அவ்விதமே தாங் களும் என்னை மனைவியாக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்."

குணசே:— "சீதாலெக்ஷ்மி! நீ கூறுவது உண்மை தானா? நீ என்னை காதலிக்கிறாயா? அவ்விதமாயின் நான் அதிர்ஷ்டசாலி தான். நீ என்னைக் காதலிப்பதாக—என்னைக் கணவராக ஏற்றுக்கொள்வாயென்று எவ்வாறு நம்பமுடி யும்?"

சீதாலே:— "காதல் மனோஹரா! தாங்கள் கூறுவது— கேட்பது முற்றிலும் நியாயமே. தங்களை எனது பிராண நாதராக ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக எனது கை யால் தொடுக்கப்பட்ட இவ்வழகிய மலர் மாலையை தங்க ளுக்கு அணிவிக்கின்றேன்." என்று கூறியவாறே குண சேகரனின் கழுத்தில் மாலையை அணிந்துவிட்டு பூமியை நோக்கியவாறே அவள் நின்றாள்.

பூமாலை தனது கழுத்தில் விழுந்ததும் குணசேகரன் ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்தான். தன் மனதிற்குகந்த மனையாளை ஈந்த ஈசனை பலவாறு தன்மனதில் துதித்துக் கொண்டான். பூமியை நோக்கியவாறே நின்றுகொண்டி ருக்கும் அரிவை சீதாலெக்ஷ்மியின் கழுத்தில் "மாதரசே! உன்னை நான் என் இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதற்கு அறிகுறியாக இம்மாலையை உனக்கு அணிவிக்கிறேன். நீ ஏற்றுக்கொள்வாயாக'' என்று அம்மாலையை முத்திக்கொண்டு அவள் கழுத்தில் அணிந்தான். பின்பு அவளது வலக்கரத்தைப்பற்றி தன்னருகில் அமரும்படி கேட்டுக்கொள்ள, அருங்குண பூஷணியும் தனது காதலரின் பக்கலில் அமர்ந்து இனிய குரலில் சம்பாஷித்தனர்.

(முன் இராஜேந்திரனும் இராமநாதரும் [illegible]வாக விஷயங்களைப்பற்றிப் பேசுகையில் இராஜேந்திரனின் சகோதரி சீதாலெக்ஷ்மிக்கு கணவராக குறிப்பிட்டது இந்த குணசேகரனே என்பது சொல்லாமலே விளங்கும்.)

சிறிதுநேரஞ் சென்றபின் இராஜேந்திரனது மோட்டார் வாகனத்தின் சப்தம் கேட்டது. இராஜேந்திரனைக் காணவேண்டி குணசேகரன் முன்னும் சீதாலெக்ஷ்மி பின்னுமாக அறையினின்றும் வெளிப்பட்டு முன்பக்கம் வந்தனர். "ஹல்லோ! வாருங்கள் குணசேகரரே! ஏது காரணம் திடீரென இவ்விடம் வந்தீற்றது? ஏதேனும் விசேஷமுண்டோ?'' என வினவிக்கொண்டே இராஜேந்திரன் குணசேகரரை மத்தியஹாலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு போடப்பட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் இருவரும் அமர்ந்தனர்.

**குணசே:**—"விசேஷமொன்றுமில்லை. எனது சகோதரருக்கு சுகமில்லையென்றும், வைத்தியசாலையில் அபாய நிலைமையிலிருப்பதாகவும் எனக்குத் தந்தியொன்று கிடைத்தது. அதன்பேரில் நான் தங்களுக்குத் தெரிவிக்காமலே அவசரமாக இவ்விடம் வந்துவிட்டேன். மன்னிக்கவும். தங்களிடம் தெரிவித்து தங்களின் அனுமதி பெற்றுக்கொண்டு, பின்பு எனது சகோதரரைக் காணலாமென்று எண்ணியே இவ்விடம் வந்துற்றேன்'' என்றார்.

இதற்குள்ளாக சீதாலெக்ஷ்மி இரண்டு டம்ளரில் தேநீர் கொணர்ந்து மேசையின் மீது வைத்துவிட்டு அங்கு நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜே:—"குணசேகரரே! அன்றே நான் தங்களிடம் கூறினேனல்லவா? தங்களுக்கு ஏதேனும் அவசர ஜோலி இருந்தால் என்னை எதிர்பார்க்காமலே தங்களுடைய ஜோலியை முடித்துக் கொள்ளுங்கள் என்று கூறினேனே. அவ்விதமிருக்க இவ்விதமான விஷயங்களுக்கு என்னை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? நேராக வைத்தியசாலைக்குச் சென்று அவரது நிலைமையை அறிந்து என்னிடம் தெரிவித்தால் நான் எவ்வளவோ மகிழ்ச்சியடைவேன். தாங்கள் முக்கியமான விஷயங்களில் தங்களது மூளையை சிதரடித்து விடுகிறீர்கள் என்பதையறிய எனது மனம் துக்கப்படுகிறது. நடந்தது போகட்டும். இனிமேலாவது அவசர காரியங்களுக்கு என்னை எதிர் பார்க்கவேண்டாம்"

சீதாலே:—"சரி. இனிமேல் நடக்கவேண்டியதைப் பாருங்கள். ஒரு எஜமானரிடம் வேலைக்கமர்ந்தால் அவருடைய அனுமதியின்றித் தனது மனம்போல் நடப்பதென்பது ஒழுக்கமுள்ள ஒருவருக்கு அழகல்ல. ஆதலால்தான் நமது நண்பர் குணசேகரரும் தங்களிடம் விடை கேட்க வந்தார்போலும்! அதுவும் சரிதான். சீக்கிரமாக நீங்களிருவரும் தேனீர் அருந்துங்கள். நாம் வைத்தியசாலைக்குச் செல்வோம்" என்று கூறினாள். அவ்விதமே அவர்கள் தேனீர் அருந்தியபின் மூவரும் இராஜேந்திரன் காரிலேயே வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

குணசேகரரின் சகோதரருக்குச் சற்று குணமடைந்திருந்ததைக்கண்டு யாவரும் மகிழ்ந்தனர். பின்பு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மூவரும் சரஸ்வதி விலாச மாளிகையை வந்தடைந்தனர். அன்று குணசேகரரைக் கொழும்பிலேயே தங்கும்படி இராஜேந்திரன் கூறியதால் அன்று தங்கியிருந்துவிட்டு மறுநாள் அவர் தோட்டங்களுக்குச் சென்றார்.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—7

## கொள்ளையரிடம் அகப்பட்ட இராஜேந்திரன்.

விவாக விஷயங்களைப்பற்றி குணசேகரரின் தந்தையைக் காண்பதற்காகச் சென்னைக்கு இராஜேந்திரன் பிரயாணமானான். குணசேகரரும் சீதாலெக்ஷ்மியும் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து அவர்கள் மெய் அன்பினால் இணைக்கப் பட்டிருக்கவேண்டுமென்று இராஜேந்திரன் தீர்மானித்துக்கொண்டான். இராஜேந்திரன் சென்னை ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்தும் காரில் செல்லலாமென்ற கருத்தோடு ஸ்டேஷனின் முன்பக்கம் வந்தான். இராஜேந்திரன் தூய கதராடையையும், அங்கியையும் அணிந்திருந்தான். அவனது விரலில் அணிந்திருந்த மோதிரத்தின் ஒளி கண்டோர் மனதைத் திடுக்கிடச் செய்யக்கூடியதாயிருந்தது. காலில் மிதியடிகளை மாட்டியபடியும், ஒரு கையில் குடை ஒன்றையும், மற்றொரு கையில் அழகிய சிறு டிரன்க் பெட்டி ஒன்றையும் ஏந்திக்கொண்டு நடந்தான். இவனைக் காண்போர் இவன் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் என்றே கருதுவர். ஆனால் அவனுடைய நடையுடை பாவனைகளைக் கூர்ந்து நோக்குவோர், அவன் ஓர் கண்ணியமான குடும்பத்தில் அவதரித்தவன் என்றே யூகிப்பர்.

இராஜேந்திரன் நடந்து வருவதைக் கண்ணுற்ற ஓர் மோட்டார் சாரதி தனது காருடன் அவரருகில் சென்று "தாங்கள் எங்கு போகவேண்டும்? நமது காரில் ஏறுங்கள். போகலாம்" என்று கூறினான். இராஜேந்திரன், "நான் இன்ஸ்பெக்டர் வேணுகோபாலரைப் பார்க்கவேண்டும்" என்று விடை பகர்ந்தார். "அப்படியா? நானும் அங்குத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டியதிருக்கிறது. ஆதலால் இக்காரில் ஏறிக்கொள்ளுங்கள். செல்வோம்" என்று டிரைவர் கூற, இராஜேந்திரன் காரில் ஏறினன்.

கார் வாயுவேகம் மனோவேகமாய்ச் சென்றது. இடைவழியில் ஓர் நபர் காரை நிறுத்துமாறு கையைக் காட்டினர். காரும் நின்றது. அவரும் காரிலேறிக்கொண்டார். கார் மறுபடியும் சென்றது.

காரில் ஏறியவர்:—"ஐயா! தாங்கள் எங்கு செல்லுகின்றீர்கள்?"

இராஜே:—"இன்ஸ்பெக்டர் வேணுகோபாலரின் மாளிகைக்குச் செல்லவேண்டும்."

கா. ஏ:—"தாங்கள் இலங்கையிலிருந்து வருகிறது போல் தோன்றுகிறதே. அங்கு தங்களுக்கு என்ன பிஸ்னஸ் (வேலை)?"

இராஜே:—"ஆம். கொழும்பில் எனக்கு அநேக தோட்டங்களிருக்கின்றன. அவைகளை மேல் பார்த்துக்கொண்டு வருகிறேன்."

கா. ஏ:—"அப்படியா? நல்லது. தேயிலைத்தோட்டங்களில் தொழிலாளிகள் பலவித கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள் என்றும், சம்பள வெட்டினால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். அது உண்மைதானா?"

இராஜே:—"அதைப்பற்றி நான் திட்டமாக ஒன்றும் கூற விரும்பவில்லை. அநேக தோட்டங்களில் தாங்கள் கூறுவதைப் போலிருக்கலாம். ஆனால் என் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு யாதொரு குறைவும் ஏற்படாது. நாம் எத்தகைய வசதிகளை விரும்புகிறோமோ அதைப் போல நம் சகோதரர்களாகிய தொழிலாளர்களுக்கும் அளிக்கவேண்டியது இன்றியமையாதது. தொழிலாளரின் முயற்சினாலன்றோ—அவர்களின் உழைப்பினாலன்றோ நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் இருக்கிறேன். அவர்கள் அல்லவோ எனக்கு உணவை அளிக்கின்றனர் என்று கூறவேண்டும். அவ்விதமிருக்க நாம் அவர்களின் மனதைப் புண்படுத்துவது முட்டாள் தனமான செய்கை"

கார் ஏ:—"மெத்த சந்தோஷம். தொழிலாளர்களுக்கு ஏதேனும் குறைகளிருப்பின் எவ்வாறு தங்களுக்கு தெரிவிப்பது?"

இராஜே:—"ஒவ்வொரு (எனது) தோட்டங்களிலும் தொழிலாளர் சங்கங்கள் நியமித்திருக்கிறேன். மாதமும் முறையாவது நான் தோட்டங்களுக்குச் செல்வேன். அப்போது அந்த சங்கத்தைக் கூட்டிக்குற்றங் குறைகளை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்வேன். அதுகாலை ஏதேனும் குறைகளிருப்பின் அவர்கள் வெளியிடுவார்கள். உடனே நான் அதை நிறைவேற்ற முயற்சித்து அவர்களையும் மகிழ்ச்சியுறச் செய்வேன். தவிரவும் பொதுஜனங்கள் அதாவது தொழிலாளர்களுக்குக் கடிதப் போக்குவரத்துக்கு வேண்டிய சவுகரியம் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் கடிதம் மூலமாகவும் தங்களுடைய குறைகளை வெளியிடலாம்"

கார் ஏ:— "தங்களுடைய செய்கையைப் பற்றி மகழ்ச்சியடைகிறேன். உலகம் முழுதும் கொள்ளையடிப்பதிலேயே மூழ்கியிருக்கும் இந்நாளில் தாங்கள் பெருந்தொகையைக் கொண்டு தனியாக வரலாமா? "அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்" என்று நமது பாட்டிசொல்லியிருக்கிறுளன்றே? தாங்கள் காரில் பிரயாணஞ் செய்தால் ஆபத்து நேரிட மாட்டாது என எண்ணலாம். ஆனல் அது தப்பிதம். தாங்கள் பத்திரிகைகளை வாசித்து வரலாம். அதில் டிரைவர்கள், தனியாக பிரயாணஞ்செய்யும் பிரயாணிகளை இம்சித்து அவர்களுடைய பொருளையும் ஆபரணங்களையும் அபகரித்து, ஈற்றில் கொலையும் புரிந்துள்ள செய்திகள் சில தினங்களுக்கு முன்கூட வெளிவரவில்லையா? அவ்விதமிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம குணம் படைத்தவராகிய தாங்கள் இவ்விதம் தனித்து வருதல் கூடாது.”

இராஜே:—“அன்பரே! தாங்கள் கூறுவது உண்மை தான். நம்முடைய பொருள் என்றால் நம்மிடமிருந்தும் அப்பாற்படாது. (பிறரால் அபகரிக்கப்பட மாட்டாது) வரும்வினை இராத்தங்காது என்று சொல்லிக்கொள்வார்கள். அதுபோல நமக்கு இடர் விளைவிக்கவேண்டுமென்று ஈசனுக்கு விருப்பமிருந்தால் அது நிச்சயமாகவே—எவ்வளவு பாதுகாப்பு நியமிப்பினும் விளைந்தே தீரும். தாங்கள் என் பொருட்டு வருந்தவேண்டாம்.”

கார்வ:— “நண்பரே! தாங்கள் இவ்வூருக்கு புதியவராதலால் தான் நான் உண்மையைக் கூறினேன். தங்களுடைய மனோதைரியத்தை நான் மெச்சுகிறேன். தங்களிடம் சுமார் எவ்வளவு ரூபாய் இரு......”

இராஜே:— “எவ்வளவு ரூபாய் இருந்தாலும் உமக்கென்ன? நீர் உம்முடைய ஜோலியைப் பாரும். என் பணத்தைப் பற்றிய கவலை எனக்கல்லவோ இருக்கவேண்டும்.

கார்வ:— “நண்பா! மன்னிக்கவும் பணத்தைப் பற்றி உன்னிடம் யாதொன்றையும் நான் கேட்கவில்லை. என்று கூறி வேறு விஷயங்களைப் பற்றி பேசலானான்.

வழிநெடுக இருவரும் சம்பாஷணை செய்த வண்ணமாய் சென்றனர். காரில் ஏறிய புதிய மனிதரின் பேச்சுகளிலிருந்தும் வெளிப்படும் சிலவற்றை இராஜேந்திரன் பரிசீலனை செய்துபார்த்தான். அவன்மீது பலத்த சந்தேகம் உண்டாகி விட்டது. என்றாலும் தைரியத்துடனும் ஜாக்கிரதையாகவும் இருந்துகொண்டான்.

கார் செல்லும் வேகத்தையும் திக்கையும் அறியாத— பார்க்காத இராஜேந்திரன் கார் நின்றதும் சுற்றும் முற்றும் பார்த்தான். கார் பழையபடி ரயில்வே ஸ்டேஷனுக்கே வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தது. இதையறியவும் இராஜேந்திரனது கண்கள் தீப் பொறி பறக்க பல்லை நெறநெற வென்று கடித்து டிரைவ ரையும் புதிய மனிதனையும் நோக்கினன். இதற்குள் காரில் ஏறியவர் தமது பாக்கெட்டுக்குள்ளிருந்து ஓர் டப்பியை எடுத்து அதனுள்ளிருந்து கொஞ்சம் மையை கத்தியினல் எடுத்து இராஜேந்திரனது முகத்தில் பொட்டிட்டார். அம் மனிதன் காரினின்றும் இறங்கி ரயில்வே ஸ்டேஷனில் நின்ற ஓர் புகைவண்டியில் ஏறினன். இராஜேந்திரன் யாதொன்றையும் பேசாது அம்மனிதன் பின்னல் நடந்து சென்றன். அவனின் அருகிலேயே ரயிலில் அமர்ந்தான்.

இராஜேந்திரனுக்கு சுயஅறிவே இல்லை. இராஜேந்தி ரன் ரயிலில் ஏறியதும் கார் சென்றுவிட்டது. சிறிது நேரம் சென்றதும் ரயில் புறப்பட்டுச்சென்றது. இராஜேந்திரனுக்கு வெயர்வை உண்டாகாமல் இருக்க அடிக்கடி அம்மனிதன் விசிறிக்கொண்டே இருந்தான். வண்டியும் ஹாமத்நகர் என்ற ஸ்டேஷனில் நின்றது. அம்மனிதன் முதலாவதாகவும், அதன்பின் இராஜேந்திரனும் தொடர்ந்து இறங்கினர். அங் குள்ள ஸ்டேஷனில் நின்ற கார்களை யெல்லாம் உற்று நோக் கியவாறே அம்மனிதன் சென்று, ஓர் மூலையில் இருந்த கார் ஒன்றில் ஏறிக்கொண்டான். இராஜேந்திரனும் பின் தொடர்ந்து ஏறிக்கொண்டான். ஓர் பெரிய மாளிகையின் முன் கார் நின்றதும் அம்மனிதன் இறங்கி அம்மாளிகையி னுள் செல்ல இராஜேந்திரனும் பின் தொடர்ந்தான். காரும் சென்றது. இராஜேந்திரன் ஓர் இருட்டறையில் அடைத்து வைக்கப்பட்டான்.

சிறிது நேரஞ்சென்றபின் இராஜேந்திரனுக்கு சுய அறிவு வரலாயிற்று. புதிய மனிதனல் இடப்பட்ட பொட்டு வெயர்வை மிகுதியினல் கரைந்து, கீழே விழுந்ததால் அதன் சக்தி அத்துடன் போய்விட்டது. தான் ஓர் இருட் டறையில் இருப்பதையறிந்த இராஜேந்திரன் திடுக்கிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். இன்னது செய்வதெனத் தோன்ருது தவித்தவனுக அவ்வறையைச் சுற்றிச் சுற்றி வருகையில் அங்கு மாட்டப் பட்டிருந்த ஓர் கருவி அவனது கைக்குத் தென்பட்டது. அதை இழுத்தவும் அறை முழுவதும் வெளிச்சமாய்விட்டது. அதன் அருகிலும் பிறிதொரு கருவி இருந்தது. அதையும் சுற்றினுன். அறையின் நடுவே மாட்டப்பட்டிருந்த காற்ருடி கிறுகிறென்று சுழன்றது. குளிர்ந்த காற்று வீசியது. தான் ஒரு பெரிய குகையில் இருப்பதாக முதலில் இராஜேந்திரன் எண்ணியபோதிலும் இப்போது அதை மாற்றிக்கொண்டான். தனது திரேகத்திலிருந்து வெளியாகும் வியர்வையை நன்ருய்த் துடைத்துவிட்டு அங்குள்ள ஓர் நாற்காலியிலமர்ந்து ஆழ்ந்த யோசனையிலீடுபட்டான்.

சிறிதுநேரஞ் சென்றபின் நான்கு பேர்கள் அவ்வறைக்கு வந்தனர். அவர்களுடைய பயங்கரமான தோற்றம் எவரையும் திடுக்கிடச் செய்யத் தக்கதாயிருந்தது. கருத்த திரேகமும், நீண்ட மீசையையும் விகாரமான முகத்தையு முடையவர்களாகிய அக்கொள்ளையர் மதயானையைப் போன்று நடந்து வந்தனர். அவர்களை நோக்கி இராஜேந்திரன் பேசலானுன்.

**இராஜே:**—"அன்பர்களே! யாதொரு காரணமுமின்றி என்னை இவ்வாறு அடைத்து வைத்திருப்பது சரியல்ல. தங்களுக்கு ஏதேனும் தேவையாயின் என்னிடம் கூறவும். அதை நான் கொடுக்கிறேன்."

**வந்தவர்களில் ஒருவன்:**—"நாங்கள் ஓர் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குப் பணந்தான் தேவை. பணம் கொடுத்தால் உம்மை விட்டுவிடுகிறேம்."

**இராஜே:**—"அப்படியா? என்னிடம் சொற்பப் பணமே உள்ளது. அதை நான் என் டிரன்க் பெட்டியில் வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறேன். அதை வேண்டுமாகில் எடுத்துக் கொள்ளுங்கள். அன்பர்களே! நான் உங்களுக்கு ஓர் வார்த்தை கூற விரும்புகிறேன். தாங்களோ வாலிபர்களாக இருக்கிறீர்கள். கஷ்டமான வேலைகள் செய்து ஜீவனம் செய்ய உங்களால் இயலும். அவ்விதமிருக்க அருவருக்கத்தக்க இத்தொழிலை ஏன் நடத்தவேண்டும்? இது அநியாயமல்லவா? எத்தனை ஏழை மக்களை துன்புறுத்தி யிருப்பீர்களோ அறியேன். இப்பாவங்களை யெல்லாம் மன்னித்தருளும்படி சாக்ஷாத் எம்பெருமானை நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இனியாகிலும் நல்வழியில் நடவுங்கள்".

வ. வேறொருவன்:—"ஓய்! உம்மகிட்ட நாங்க பாவ புண்ணியத்தைக் கேட்க உம்மை இங்க கொண்டுவரவில்லை. கையை விரித்தாலும் பாகம்தான். மரியாதையாக எங்ககிட்ட இரண்டாயிரம் ரூபா கொடுக்கோா? இல்லேன்னே உம்மைக் காணும ஆக்கிவிடவா? சீக்கிரம் சொல்லும்."

இராஜே:—"நேயர்களே! கொள்ளையிடவேண்டுமென்ற கருத்துடனிருக்கும் உங்களுக்கு நான் பாவ புண்ணியங்களைப்பற்றிக் கூறுவது வீணே. என்றாலும் என் மனம் இசையாமல் கூறிவிட்டேன். உங்களுடைய எண்ணத்தை நான் பூர்த்தி செய்கிறேன். எனது டிரங்கிலிருக்கும் ஐந்து நூறு ரூபாய்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் என்னுடன் வாருங்கள். உங்களைத் தகுந்த வேலையிலமர்த்தி உங்களை நல்வழிப்படுத்துகிறேன். இந்தப்பயங்கரமான தொழில் அதிக நாள் நீடிக்க—நடக்கமுடியாதென்பது திண்ணம். வீணாய் நீங்களே உங்களைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம்."

பிறிதோருவன்:—"ஐயா! மகாப் பெரியவரே! மண்டையில் புழுத்தவரே! செவ்வாய்க் கிழமை சந்தையில் செருப்படி பட்டவரே! கேளும். நாங்கள் பயங்கரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நடத்துகிறேருமென்றும் இது அதிகநாள் நீடிக்கமாட்டாதென்றும், நாங்கள் நாய்களைப் போல உம்முடைய பின்னுல் நடந்துவரவேண்டுமென்றும் பைத்தியம் பிடித்தவனைப்போல ஏதேதோ பிதற்றுறேரு. பின்னுலே உமக்கு என்ன நடக்குமின்னு யோசித்துப் பேசும். நீரு என்ன செய்வேரு. சாக்காடு உம்மை எதிர்கொண்டு அழைக்கி. இந்த உண்மையை அறியாம நீர் ஏன் பிதற்றமாட்டேரு. நீரு இன்னும் கொஞ்ச நிமிசத்திலே வழிக்கு வரல்லன்னே உமது பாடு அதோகதிதான் இலையை எடுக்கச் சொன்னு எத்தனை பேரு சாப்பிட்டாங்கன்னு கணக்கு எடுத்தாணும். அதுபோல உம்மகிட்ட இரண்டாயிரம் கேட்டா ஐந்நூறு தாரேன்னு சொல்றேரு. நன்ருயிருக்கு. நீரு சாகவேண்டியதுதான் வரும்."

மற்றவன்:—"ஏலே! அண்ணு! நீ சொல்லுறதெல்லடா ஐந்நூறு ரூபாயின்னு அதை ஒருவன் தூக்கிக்கின்னு பூட்டான். அந்த மேனி எங்க நாலு பேருக்கும் இரண்டாயிரம் ரூபாய் தா. இனி அந்த ரூபாயைப்பற்றிப் பேசாதே. நாங்க கேட்கிறதைக் கொடுக்கலன்னே உன்னை விடமாட்டோம். இது நிச்சயம். வீண் காலதாமதம் செய்யாதே சொல்"

இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இராஜேந்திரன் சற்றுத் திகிலடைந்தான். வேடன் கையிலகப்பட்ட பக்ஷியைப் போன்ருனன். தன்னிடம் பணமும் இல்லை. பணம் செலுத்தாவிடில் தப்பவும் முடியாது என்று ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டான். தான் எக்கேடு கெட்டாலும் அக்கொள்ளைக் கூட்டத்தினரை நல்வழிப்படுத்தவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். தனக்கு இது ஒரு சோதனைக் காலமென்றே எண்ணி மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு பேசலானுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுசமயம் அந்த மாளிகையிலுள்ள ஒருவன் அவ்வறை வந்து சேர்ந்தான். அவன் கொண்டுவந்த கடிதத்தை பிரித்துப் பார்த்தான். இவரும் கூடி ஆலோசித்தனர். பின் ஓர் முடிவுக்கு வந்தவர்களாய் எல்லோரும் (இராஜேந்திரன் நீங்கலாக) அறையினின்றும் வெளிப்பட்டனர். அறையை நன்ருகப் பூட்டிவிட்டனர். இராஜேந்திரன் மட்டும் தனியே அறையில் இருந்தான்.

திடீரென அவர்கள் வெளிச் சென்றதும் அறையை பூட்டியதையும் கண்ணுற்ற இராஜேந்திரன் இன்னது செய்வதெனத் தோன்ருது தவித்தான். அவ்வறையினுள் வந்த ஐந்தாம் மனிதன் கொணர்ந்த கடிதத்தை சகலரும் வாசித்தபின் அவசரமாக வெளிச் சென்றதால், அக்கடிதத்தை அவ்வறையிலேயே வைத்துவிட்டுச்சென்றனர். ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பது பழமொழி யல்லவா? நமது இராஜேந்திரன் அவர்கள் சென்றபின் அவ்வறையை சுற்றிச்சுற்றி வந்தான். அப்போது மேற்படி கடிதம் அவனுக்கு தென்பட்டது. உடனே எடுத்து பிரித்து வாசிக்கலானுன்.

"ஸ்அ லாஅ விஅ ரஅ ஹஅ ஜேஅ மஅ"
டிஅ குஅ க்அ துஅ த்அ தூஅ

ம்அகஅயஅநாஅரஅதுஅமஅ ளஅள்அபுஅன்அஅஅ
ன்அாமஅசீ ர்அஓஅ ம்அறுஅன்அனிஅயிஅகைஅங்அலஅஇ
இஅ கஅக்அதஅத்அபஅம்அநஅ கஅதாஅறஅகிஅருஅவஅ
ள்அகஅஅதிஅய்அசெ அதுஅங்அருஅலிஅளிஅகஅங்அடஅ
ஙிஅன்அஎ .னஅறஅன்அகிஅக்அருஅ:கிஅத்அடைஅகிஅ
அஈவஅலஅசிஅள்அகஅதுஅங்அருஅமஅளஅள்அமுஅடஅ
கஅக்அயஅமஅ ல்அலாஅதஅஆஅ .னஅடஅட்அவிஅகிஅ
வஅ துஅங்அஅருஅமஅ றஅற்அமஅ ,ம்அயுஅயைஅமைஅ
டுஅண்அாகடெஅக்அதுஅத்அடுஅஎஅ ம்அயுஅளேஅகஅகைஅ
துஅங்அவஅஅ டுஅட்அபஅப்அறஅபுஅ ன்அடஅஉஅ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்அர் அுாப அுர் அதி அள அ் . து அுய அடி அண் அவே அர அசே அு
.ன் அறே அகி அு

ம் அண அங அங் அஇ அ
"ம் அத அயு அலா அவே அ"
.ர் அவ அலெ அத அ க அலீ அகா அற் அத அ

இக்கடிதத்தின் பொருளை யறியமுடியாமல் தத்தளித்தான். மெய்யெழுத்துடன் உயிரெழுத்தைச் சேர்த்தால் (ஸ் + அ = ஸ) உயிர்மெய்யெழுத்தாகும் அல்லவா? அதைப் போன்று இதிலும் மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்தைச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று எண்ணவும் முடியவில்லை. உயிர்மெய் யெழுத்துடன் மீண்டும் உயிர் எழுத்து சேருவது எவ்விதம்? எவ்விதம் வாசித்தாலும் ஒன்றும் விளங்கவில்லை. வேறு ஏதேனும் பாஷைகளைத் தமிழில் எழுதப்பட்டிருக்கிறதோ என்றும் அறியமுடியவில்லை. இதற்கென் செய்வது என்று அவனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

சிறிதுநேரம் சென்றபின் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். ஒருவன் ஒரு கடிதம் எழுதினால் அதில் "அ" என்ற எழுத்தை அடிக்கடி பிரயோகிக்கவேண்டியதின் நோக்கமென்ன? இதில்தான் ஏதோ மர்மமிருக்கின்றது. இதைத்தான் நன்றாக அறியவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். தான் சிறு பிள்ளையாக விருக்கும்போது தனது மாமனார் ஒரு கடிதத்துண்டில் சில வசனங்களை எழுதச் சொன்னார். அவ்வசனங்களை அவரே சொன்னார். அதாவது:—"எழுமீன் தினமீன் வன்மீன் கழுமீன் தைமீன்" என்பனவாம். இவைகளை எழுதியபின் வாசிக்கச் சொன்னார். அப்போது, தான் அவ்வசனங்களை வாசித்துவிட்டு "மாமா! மீன்களில் எத்தனையோ ஜாதிகளிருக்கின்றன. அவைகளில் தாங்கள் கூறிய மீன் ஜாதிகள் இல்லையே" என்று வினவினதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர் "அப்படியா? இருக்கலாம். அவ்வித மாயின் நீ கெட்டிக்காரன்தானே. மீன் ஜாதிகளையெல்லாம் மனதில் பதியவைத்திருக்கிறயே. சரி. மீன் ஜாதிகளில் இல்லாததை நாம் எழுதக்கூடாது. ஆதலால் அந்த "மீன்" என்ற சொற்களையெல்லாம் எடுத்துவிடு பார்ப்போம். இனி யாகிலும் ஏதேனும் வசனங்களாகிறதா பார்ப்போம்" என்றதும், , தான் அவ்விதமே "மீன்" என்ற சொற்களை நீக்கிவிட்டு, "எழுதினவன் கழு......" என்று அறையுங் குறையுமாகச் சொல்லிவிட்டு வெட்கித் தலைகுனிந்ததும் இப்போது ஞாபகத்திற்கு வந்தது. ஆதலால் இக்கடிதத் தில் ஒவ்வொரு எழுத்திற்குப் பின்னல் "அ" வருகிறதை யெல்லாம் எடுத்துவிட்டு வாசிப்போம் என்று தீர்மானித்து வாசிக்கலானன்.

அவ்விதமும் சரிவரவில்லை. "இது ஏதடா இக்கள்வர் கள் வெகு சாமர்த்தியமாயிருக்கிறர்களே. இக்கடிதத்தை என்னல் வாசிக்கமுடியாமல்தான் போய்விடுமோ. முயற்சி யுடையோர் இகழ்ச்சியடையார் அன்றே? ஈசன் நமக்கு எவ்விதக் கஷ்டநஷ்டங்களைக் கொடுத்தாலும் அதனல் நமக்கு நன்மையே உண்டாகிறது. நான் இக்கொள்ளைய ரிடம் அகப்படாவிட்டால் இந்தக் கடிதத்தைப் பார்க்கமுடி யுமா? முடியாது. இத்தகைய கடிதத்தையே யான் பார்த்ததில்லையன்றே? இல்லை. ஆம். இவ்விதமான கடி தத்தைப் பார்த்திருக்கிறேன். எனது காதல் தெய்வம் சுந்தரி ஒரு முறை என் பெயரை மாற்றி அதாவது முன் வரவேண்டிய எழுத்துக்களைப் பின் எழுதியும் பின் வர வேண்டிய எழுத்துக்களை முன் எழுதியும் (=ன்ரதிந்ஜேரா இ) என்னை வாசிக்கும்படி கேட்டுக்கொள்ள நான் பரக்கப் பரக்க விழித்தேனல்லவா? ஆம். பின் அவள் என்னைப் பரி கசித்து முன்னுள்ளதை எல்லாம் பின்னும் பின்னுள்ளதை யெல்லாம் முன்னுமாக வரிசையாக எழுதி வாசிக்கச் சொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னல்லவா? ஆம். அம்மாதரசியின் தந்திரத்தைப் போன்று இதுவும் இருக்கலாம். இதையும் அவ்விதம் மாற்றி வாசிப்போம்" என்று இராஜேந்திரன் முடிவு செய்து கொண்டு ஓர் கடிதத்தில் எழுத்துக்களை மாற்றி எழுதலானன். அது பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"மனோஹர விலாஸ்"
தூத்துக்குடி.

அன்புள்ள மதுரநாயகம்!

இலங்கையினின்றும் ஓர் சீமான் வருகிறதாக நம்பத்தக்க இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்திருக்கின்றன. என்னிடமுள்ள மருந்துகள் சிலவாகிவிட்டன. ஆதலால் மயக்க மையையும், மற்ற மருந்து வகைகளையும் எடுத்துக் கொண்டு உடன் புறப்பட்டு வந்து சேரவேண்டியது. எதிர் பார்க்கிறேன்.

இங்ஙனம்
"வேலாயுதம்"
தற்காலிக தலைவர்.

இவ்விதமாகவுள்ள கடிதத்தை வாசித்ததும் இராஜேந்திரன் பேரிடி விழுந்தாற்போலானன். தன்னைப் போன்று ஒருவர் அகப்படப் போவதை எண்ணவும் நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்தான். அவரை எவ்விதம் கொள்ளையரிடம் அகப்படாமல், தப்புவிப்பது என்று யோசித்தான். வேடன் கையில் சிக்கிய பக்ஷியைப் போன்றிருக்கும் தன்னால் ஒன்றும் செய்யமுடியாதென்று கருதிய இராஜேந்திரன், அக்கொள்ளையரிடமிருந்தே சில ரகசியங்களை யறியவேண்டுமென்று தீர்மானித்தான். "இலங்கையிலிருந்து எவர் வருகிருரோ. அறியேனே! ஆபத்பாந்தவா! அனுதாரக்ஷகா! இப்பாவிகளையும் ஏன் இவ்வுலகில் படைத்தாய். இப்பதர்களால் எத்தனை பெயர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு இடையூறு—கஷ்டநஷ்டங்களேற்படுகின்றன. இவர்களிடமிருந்தும் எங்களை எவ்விதம்—எப்போது விடுவிக்கப் போகின்றாய்? எல்லாம் உந்தனது திருவிளையாடலேயன்றி வேறல்ல. என்போன்றவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பதே எனது அபிப்பிராயம். ஆதலால் நீ உன் திருவிளையாடலை நடத்து" என்று எல்லாப் பாரத்தையும் சர்வேசுவரனிடம் ஒப்புவித்துவிட்டான்.

வெகுநேரஞ் சென்றபின் ஒருவன் கையில் ஓர் தட்டுடன் அறை வந்து சேர்ந்தான். கொள்ளைக்காரனைக் கண்டதும் இராஜேந்திரன் அடக்க ஒடுக்கம்போன்று நடிப்பதாகப் பாசாங்கு பண்ணினான். அறையினுள் வந்த மனிதன் கையிலுள்ள தட்டை மேசைமீது வைத்து "அடே! இதைச்சாப்பிடு. நீ இரண்டாயிரம் ரூபா கொடுக்கல்லேன்னே உன்ன விடமாட்டோம். நீ என்ன நினைச்சின்னு இருக்கே. உன்னால் தப்பமுடியுமா? முடியவே முடியாது. இது நிஜம்" என்று சீறினான்.

இராஜே:—"சகோதரா! என்னிடமோ சல்லி தற்சமயம் கிடையாது. நான் ஓர் கடிதம் வரைந்து கொடுக்கிறேன். அதை எங்கள் சுற்றத்தாரிடம் காண்பித்தால் நீ கேட்கிற ரூபாயைக் கொடுப்பார்கள். இவ்விதம் அடைத்து வைத்திருந்தால் பிரயோஜன மென்ன?"

வந்தவன்:—"அடே! பாசாங்கு பண்றயா? நீ கடிதம் எழுதி தருவயாங்கும், நான் கொண்டுபோனுமாங்கும். அவன்க என்னை சந்தேகிச்சி பிடிக்கனுமாங்கு. நல்லாருக்கு. நாங்கள் ஒன்றும் தெரியாத பேடியா? நீ ரூபா தரல்லன்னு உன்னை கொன்னுப் போடுவோம். இங்கே ஒரு பத்திரகாளியம்மா இருக்கா. அவளுக்கு உன்னை கொடுத்துப் பூட்டா அவள் தின்னுபோடுவா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜே:—"அதனால் உங்களுக்கு என்ன பிரயோஜனம். என்னை பலிகொடுத்தால் பணம் கிடைத்துவிடுமோ?"

வங்:—"உன்னை சாப்பிட்டுட்டு எங்களுக்கு நல்ல வரம் கொடுப்பாள். உன்னைப்போல எத்தனைப் பணக்காரர் தெரியுமா எங்ககிட்ட அகப்பட்டிருக்காவிய."

இராஜே:—"ஆம். நான் ஒன்றும் தெரியாதவனல்லவா? வேறு யாரையும் இவ்வறையில் அடைத்துவைத்திருந்தால் அவர்கள் தப்பிவிடமாட்டார்களா? இதில் ஏதேனும் இரகசிய வழி.........?"

வங்:—"அடே! போச்சி! போச்சி! எல்லாத்தையும் ஏமாத்திட்டான். அடே! நீ எந்த வழியையடா பார்த்துக் கொண்டாய்? படவா! எங்க தலைவருக்குத் தெரிஞ்சா எங்களைக் கொன்னு பூட்டுருவாரே! ராசுக்கோலு! பத்திரம்" என்று கூறியவாறே அங்கு ஓர் மூலையில் போய்க் கட்டை போன்றிருக்கும் ஒன்றைச் சுற்றிச்சுற்றிப் பார்த்தான். அது ஒன்றும் சேதமாகவில்லை. மற்றவர்களின் கையும் பட்டிருக்கவில்லை. ஆதலால் மனம் தேறி, "அடே! பத்திரம்! ஒன்னும் தொடாதே. தொட்டா உன்னைக்கொன்னு பூடுவேன். நீ தப்பமுடியாதுன்னு நிச்சயமா நினைச்சுக்கோ" என்று கூறிவிட்டுக் கதவை அடைத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

இராஜேந்திரனுக்குப் பசியின் கொடுமையைச் சகிக்க முடியவில்லை. அவ்வுணவின் அருகில் வந்தவுடன் வாந்தி எடுத்துவிடும்போன்றிருக்கிறது. என்றாலும் இரண்டொரு வாழைப்பழங்களை உட்கொண்டான். பின்பு அவ்வறையில் பிரவேசித்தவன் சுற்றிச்சுற்றிப் பார்த்த இடத்தை ஆராய்ச்தான். ஒன்றும் அதிசயமாகத் தோன்றவில்லை. அக்குச்சியைச் சுற்றினன். உடனே ஓர் பெரிய வழி தென்பட்டது. அதன் வழியாக மெதுவாய் இறங்கினன். அங்கிருந்தும் ஓர் சிறு துவாரம் சென்றது. அதன் வழியாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல அங்கு ஓர் கோவிலும் அதன் முன்பு சில பிரேதங் களும் தென்பட்டன. இவைகளைக் கண்டதும் இராஜேந்திர னின் மெய் நடுக்கலுற்றது. அவனால் நிற்கமுடியவில்லை.

"ஹா! ஹா! ஈசா! இது என்ன அநியாயம்! உனக்குக் கண்ணில்லையா? இந்த அக்கிரமங்கள் செய்வதைக் கண் ணாரக்கண்டும் வாளாவிருக்கிறாயே! இதுதான் உனது நீதி பரிபாலனமா? பரிசுத்த மனமுடைய இக்கனவான்கள் எங்குள்ளவர்களோ? இவர்கள் எவ்விதம் இங்கு இவர்க ளிடம் அகப்பட்டுக்கொண்டனர். நெஞ்சிரக்கமற்ற பாதகர் களை ஏன் இவ்வுலகில் படைத்தாய்? எனக்கும் இந்தக்கதி தானோ? நான் சாக்காட்டிற்கு அஞ்சவில்லை. ஆனால் என்னைப்போன்று எல்லாரும் இவர்களிடம் அகப்படாம லிருக்க யான் வேண்டிய பிரயத்தனஞ் செய்யவேண்டும். இல்லாவிடில் நானும் பாவியாகுவேன். ஆஹா! இவர்கள் எவ்வளவு அழகாயிருக்கிறார்கள்! இவர்களைப்பெற இவர் களின் பெற்றோர்கள் என்ன தவமியற்றினரோ. இப் போது அவர்கள் இங்கு கொலைசெய்யப் பட்டுக்கிடக்கிற வர்களைக் காணுமல் என்னபாடு படுகிறார்களோ! இவர்களது உயிர் பிரியும்போது இவர்கள் என்னபாடு பட்டனரோ! இளைஞர்களுமன்றோ பலி கொடுக்கப் பட்டிருக்கின்றனர். இவர்கள் இவ்வயதிலேயே இவ்வுலகைவிட்டுப் பிரிய யாது கருமம் செய்தனரோ" என்று பற்பலவாறாக எண்ணிக் கொண்டு அக்கோவிலின் சுவரில் சாய்ந்தான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பைத்தியம் பிடித்தவனைப் போன்று தரையில் உட்கார்ந்தான். அவனுக்கு சுய அறிவு சிறிதாகிலும் கிடையாது. தான் நரக லோகத்தில் வீற்றி ருப்பதாக எண்ணினான். பின்பு பத்திரகாளியம்மன் முன் படுத்துக்கொண்டான். பின் என்னதான் செய்வது? செல் லாக்கோபம் பொறுமைக்கழகு என்பது ஆன்றோர் வாக்கிய மன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—8

## கொள்ளைத்தலைவனின் அதிசய மாற்றம்.

## கனவினால் உண்டான காதலர்

“ஈசா! ஜெகதீசா! இதுவும் உந்தன் திருவிளையாடலோ! கண்ணிருந்தும் நான் குருடனாகிவிட்டேன்! செல்வவந்தனின் குமாரனாகப் பிறந்தேன். செல்வந்தனாகவே வளர்ந்தேன். யாதொரு கவலையுமின்றி சந்தோஷமாக வாழலானேன். கல்வி கற்கவேண்டி பாடசாலைக்கும் அனுப்பப்பட்டேன். கல்வியறிவு எனக்கு விருத்தியடைந்துகொண்டே வரும்போது நான் துஷ்டர்களுடன் சிநேகித்து, அவர்களுடைய துர்ப்போதனைகளைக் கேட்டு அதன் படியே நடக்கவும் முயற்சித்து, பாடசாலைக்கு செல்லாது கெட்டுப்போனேன். கொள்ளையடிப்பதில் சிறிது காலத்திற்குள் மிகவும் தேர்ச்சிபெற்று ஒவ்வொரு ஊர்களிலும் கொள்ளையடிக்கலானேன். ஐயோ! அவைகளை யான் எண்ணுந்தோறும் எனது வயிர் ப ட ெ ர ன வெடிக்கிறது போன்றிருக்கிறது. எத்தனை பெண்களை வழிமறித்து, தாலி முதல் சகலவைகளையும் கொள்ளையடித்தேன். என்னுடன் எதிர்த்து நின்று வார்த்தையாடும் பெண்டிரை கொலையும் செய்தேனே. என்னால் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் கொள்ளையடிக்கப் பட்டனர். அவர்களுடைய மனம் அச்சமயம் என்ன பாடுபட்டிருக்கும்! அத்துன்பங்கள் எல்லாம் ஓரே உருவெடுத்துவந்து, நான் சிறைச்சாலையில் கைதியாயிருக்கும்போது என்னை வாட்டி வதைத்தது. அத்துன்பங்களையெல்லாம் அனுபவித்ததின் பின்தான் எனக்கு பாவபுண்ணியங்கள் தென்படலாயின!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையின் அதிகாரி என்னை பலவிதத்திலும் கஷ்டப்படுத்தினர். துன்புறுத்தினர். என்றாலும் என்மீது அவர் அளவற்ற அன்புடையவர் என்பதை நாளடைவில் தெரிந்துக் கொண்டேன். எனக்கு அவர் பற்பல புத்திமதிகளைக் கூறினர். எனக்கு கல்வியும் போதித்து வந்தார். இவைகளையெல்லாம் கண்ணுற்று நான் ஆச்சரியமும், திகைப்பும் அடைந்தேன். இக்கனவானுக்கு என்மீது இவ்வளவு பற்றுதல் இருக்கவேண்டியகாரணம் யாதாயிருக்கலாம் என்றெண்ணி, ஒருநாள் நான் என் அட்டூழியங்களையும், எனது முழுவரலாற்றையும் கூறி "தாங்கள் என் மீது இவ்வளவு அன்புடையவர்களாயிருக்கவேண்டியதின் காரணம் என்னவென்பதை யான் அறியலாகுமோ?" என்று வினவினேன். அப்போது அவர், எனது தாய் தந்தையரை தான் அறிவதாகவும், எனக்கு ஓர் தங்கை இருப்பதாகவும், அவள் கல்வியில் தேர்ச்சிப்பெற்று, நல்லொழுக்க முள்ளவளாகவும், மேன்மையான குணங்களையுடையவளாகவும், பேரும் புகழும் பெற்று திகழ்வதாகவும், இராஜேந்திரன் என்ற ஓர் வாலிபர் மகா யோக்கியரென்றும் அவர் மூலமாகவே தான் எனது தந்தையையும், தங்கையையும் அறிவதாகவும், எனது தங்கைஇராஜேந்திரன் என்ற உத்தமருடனேயே பாடசாலைக்கு செல்வதாகவும், நாளடைவில்இருவருக்குமிடையில் ஏற்பட்ட அன்புமுற்றி காதலாகமாறி, தெய்வீகத் தன்மையாக உண்மைக்காதலால் பிணைக்கப்பட்டு ஒருவரை விட்டொருவர் பிரிய மனமில்லாமல் ஒற்றுமையுடன் வாழுகிருர்களென்றும் கூறினர். நான் இனிமேலாகிலும் நல்வழியில் நடக்கவேண்டுமென்றும், எனது தந்தை என்னைக்காணுமல் தவிக்கின்ருர் என்றும் கூறினர். அன்றுமுதல் எனக்கு ஞானேதயம் பிறக்கலாயிற்று.

ஈசா! என்னுல் பல பெண்கள் பொருளை இழந்தனர். என்ருலும் அவர்களுடைய ஒப்புயர்வற்ற—பெண்மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்நிலையாகிய கற்பு என்ற பொக்கிஷத்திற்கு யாதொரு தீங்கையும் யான் செய்துவிடவில்லை. மகா கொடியவனுகிய—உடல் இல்லாத காமன் என்றகொடியை அரக்கன் தனது அம்புராசிகளை என் மீது தொடுக்காமலிருக்கும்படி நீர் எனக்கு காவலாக இருந்திருக்கிறீர். உம்மை நான் ஒரு போதும் மறக்கமுடியாது. ஒருவனை நல்வழிப்படுத்தவோ அன்றி அவனைக் கெடுக்கவோ உம்மால் இயலும். நான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன், சிறையதிகாரி என்னைத் தமது வீட்டிலேயே வைத்துக்கொண்டார். அன்று முதல் நான் இம்மாளிகையிலேயே தங்கிவருகிறேன். தமது மகளைப்போன்று என்னை நேசித்து எனக்குச் சகல உரிமைகளையும் அளித்திருக்கிறார். அவருடைய மகளோயும் என்னையும் ஒன்றாகக் கல்விகற்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். பெரும்பொருளை சிலவழித்தேனும் எனது கல்வியறிவை பன்மடங்கு அதிகரிக்கவேண்டுமென்று அவாவுகிறார். கலைமகளும் என்மீது அன்புகூர்ந்து சகலகலைகளையும் குறைவின்றி போதித்துவருகின்றாள். இது இங்ஙனமாக, என்னைப்பெற்ற பெற்றோரை யான் பார்க்கவேண்டுமென்று அவாவினேன். எனது கருத்தைப் பூர்த்திசெய்யக் கருதி அவர் என் தந்தைக்கு கடிதம் எழுதியுள்ளார். என்றாலும் இந்நாள்வரை யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. பற்பல வேலைத்தொந்தரவினால் இவ்வதிகாரியும் எனது தந்தையைக் காணச்செல்ல முடியாது போய்விடுகிறது. என்னையும் அனுப்ப மனமில்லாதவராயிருக்கிறார். இவ்விதமாயின் நான் எனது தாய் தந்தையரைக் கண்டுகளிக்கும் காலம் எப்போது கிட்டும்? நான் எனது பெற்றோரைக்கண்டதும் அவர்களின் முன்—கால்களில் விழுந்து எனது குற்றங்களை மன்னிக்கும்படியாக வேண்டிக்கொள்வேன்.! அவரும் என்னை மன்னித்துவிட்டதாகக்கூறி, என்னைத்தூக்கி மார்போடணைத்துக் கொண்டு புத்திமதிகளைக் கூறுவார். நான்—என் உயிரேபோனுலும் அவர் கூறுகிறபடி நடந்து அவரை சந்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷிக்கச் செய்வேன். ருக்மணிநேசா! பக்தர்களின் மனோல்லாசா! நம்பியவர்க்கபயம் நயந்தளிக்கும் சர்வேசா! நான் எண்ணுகிறபடி நடக்குங்காலம் சமீபத்தில் கிட்டுமா? நின் மனமிருந்தால் அடுத்த விநாடியிலேயே எனது கோரிக்கை நிறைவேறும். என்னுடன் சேர்ந்த கொள்ளைக் கூட்டத்தினரை ஒவ்வொருவராக இவ்வதிகாரி பிடித்துத் தண்டித்து வருகின்றார். அவர்களை வேரறக்களைய வேண்டுமென்று வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துவருகிறார். என்றாலும் இன்னும் நாலைந்து நபர்கள் ஒளிந்திருக்கின்றனர். அவர்களையும் ஈசன் அதி சீக்கிரத்தில் காட்டிக் கொடுப்பாரென்றே நம்புகிறேன்.'' என்று சுமார் 22 அல்லது 23 வயதுடைய ஓர் வாலிபன் "ஜெயராமன்" என்ற சிறையதிகாரியின் மாளிகையில் ஓர் அறையில் ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருந்தான்.

சிறிதுநேரஞ் சென்றபின் "பாலகிருஷ்ணன்" என்ற அவ்வாலிபன், மாளிகையின் முன் பக்கமுள்ள நந்தவனத்தை யடைந்தான். நந்தவனத்தையடைந்த மறு நிமிஷம் அங்கு எதையோ கண்டவுடன் சித்தங்கலங்கினான். பற்பல எண்ணங்கள் கடலின் அலைகளைப்போன்று மனதில் தோன்றி மறைய, அசைவற்று அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். காந்தம்போன்ற ஓர் சக்தி அவனை இழுப்பதாக எண்ணிக்கொண்டான். தான் நேற்றுவரைக் கண்டறியாத நவீனமான ஓர் சக்தி இன்று, ஏன் நேற்று இரவிலேயே தோன்றியதைக் கண்டு ஆச்சரியமுற்றான்.

அந்நந்தவனத்தில் ஓர் புன்னைமரத்தின் கீழ் அழகே உருவெடுத்து வந்தாற்போல ஓர் கன்னிகை ஒய்யாரமாக வீற்றிருந்தாள். முற்றத்துறந்த ஞானியருங்கூட கண்டவுடன் சித்தங்கலங்கும் விதமாக அம்மங்கை அமர்ந்திருந்தாள். அவளைச்சுற்றி அநேக அழகிய சிறு மான்குட்டிகள் விளையாடிக்கொண்டிருந்தன. வானத்தில் பிரகாசிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற சந்திரனைப்போன்று அவள் அம்மான்களின் நடுவில் அமர்ந்து கண்டோர் மனதைக் கவர்ந்தாள். அம்மட மயிலாளின் மடியில் ஓர் மான்குட்டி படுத்திருந்தது. மிருதுவான தனது தொடையில் அதன் தலையை வைத்துக்கொண்டு, மெல்லிய தனது கரங்கொண்டு தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். மற்றொரு பெண் மான் அலர்ந்த புஷ்பத்தைப் போலிருக்கும் அவ்வனிதையின் எழில் மிக்க மந்தகாசமான மதிமுகத்தை உற்று நோக்கியவாறே அம்மாதின் முன்னணியில் வீற்றிருந்தது.

இதைக் கண்ணுற்ற அம்மட மயிலாள் "ருக்மணி! ஏன் விசனத்துடன் இருக்கிறாய்? உனது கணவர் கிருஷ்ணனைக் காணவில்லையென்று வருந்துகிறாயோ?" என்று கூறியவாறே, தன் முன்னணியில் வீற்றிருந்த "ருக்மணி" என்ற பெண்மானை எடுத்துத்—தூக்கித் தனது மார்போடணைத்துக்கொண்டு அதனை முத்தினாள். ஏற்கனவே மடியில் படுத்திருந்த மான் இதைக்கண்ணுற்றதும், தன்னைப் பார்க்கிலும் ருக்மணி என்ற மானிடத்தில் தனது எஜமாட்டி அதிக அன்பு செலுத்துகிறாள் என்று அறிந்து அவளுடைய மடியினின்றும் துள்ளிக்குதித்து மற்ற மான்களுடன் கூடி விளையாடியது. அப்போது நமது செல்வி, ருக்மணி என்ற மானை நோக்கி இனிய கீதம் ஒன்று பாடலானாள்.

### பாட்டு.

ஐங்கரனுக்கிளையோன் ஆறுமுக வேலவனை
(என்ற மெட்டு)

1. இருபது வயதான இளைஞன் ஒருவனை
கனவிலே கண்டு நான் காதலித்தேன்—மானே
கடுகியே வந்திடுவாரோ.

2. பதினைந்து வருடங்களாய்ப் பார்த்தறியாத சக்தி
பாய்ந்தது எந்தனுள்ளே—மானே
சோருதே எந்தன் உள்ளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கல்வி மாணுக்கனைக் காதலித்தமாது
மங்கையர்க் கரசியல்லோ—மானே
மகிழ்ந்திட உரைத்திடுவாய்.

4. கொள்ளைக் கூட்டத்தலைவன் கொள்ளை கொண்டான் [எந்தனை
தப்ப வழியுண்டோ—மானே
தந்திரமாய் உரைத்திடுவாய்.

5. கனவிலே கண்ட வுந்தன் கணவனு மெந்தனை
காதலிக்கலாமோ—மானே
கருத்துடன் உரைத்திடுவாய்.

6. கிருஷ்ணனு மெந்தனைக் கட்டியணைத்திட்டே
அதரம் சிவக்கும் வரை—மானே
அருமை முத்தம் தந்திடலாமோ.

7. மங்கையர்க் கரசியை மணக்க உந்தன் கணவர்
மகிழ்ச்சி யடைவாரோ—மானே
மகிழ்வுடன் உரைத்திடுவாய்.

8. உந்தன் கணவரை யான் மணந்தாலும்
உந்தன் மனம் இசைந்திடுமோ—மானே
உண்மையுடன் உரைத்திடுவாய்.

9. மாயகிருஷ்ணனும் மங்கையர்க் கரசியை
மணந்து இவ்வுலகில்—மானே
மகிழ்வுடன் வாழ்வாரோ.

இவ்வாறு அம்மாது சிரோன்மணி பாடிக்கொண்டே யிருக்கும்போது மான்குட்டிகளெல்லாம் ஒரு திக்கையே நோக்கின. தங்களுடைய எஜமானி, ருக்மணியின் கவலையைப்போக்க பாலகிருஷ்ணனை வரவழைத்துவிட்டாள் என்று எண்ணி ஆனந்தமடைவதைப்போல் அங்குமிங்கும் துள்ளிக் குதித்து விளையாடின. மான்களெல்லாம் ஒரே திக்கை நோக்கியவுடன் அம்மங்கை சிறிது கலக்கமுற்று மான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய திசையை நோக்கினாள். பாலகிருஷ்ணன் என்ற வாலிபன் தன்னையும் மான்குட்டிகளையும் கூர்ந்து கவனிப்பதை அறிந்தாள். உடனே அவள் அடைந்த ஆனந்தத்திற்குமோர் எல்லையுண்டோ. மறு விநாடியில் அவ்விடமிருந்தும் எழுந்து அவனை நோக்கி விரைவாக நடந்து வந்தாள். ஆனால் மான்களும் அவளுக்கு முன்னால் சென்றன. ருக்மணி என்ற மான், தனது எஜமாட்டி கிருஷ்ணனை நோக்கி விரைவாக நடந்து செல்வதை அறிந்ததும், கோபாவேசங்கொண்டு, எல்லாவற்றிற்கும் முன்னால் ஓடி பாலகிருஷ்ணன் அருகில் சென்று விளையாடியது. தனது உயிருக்குயிரான மணாளனை மற்றவர்கள் தொடுதல் கூடாது என்று எண்ணி இவ்விதம் முன்னதாகவே சென்று அவருடன் விளையாடியது போலும்.

நந்தவனத்தின் சுவர்களின் மருங்கே தோடை மரங்கள் வளர்ந்து காக்ஷியளித்தன. ரோஜா மலர்கள் சிவப்பும் வெள்ளையுமாக மலர்ந்து தலை மயங்கிக் கிடக்கின்றன. தேவதாரு மரங்கள் முக்கோணமாக வளர்ந்து கரிய நிழலைச் செய்கின்றன. முல்லை மலர்களிடையே தேனுண்ட வண்டுகள் அடுத்து நெருங்கி இடையீடின்றி மலர்ந்து கிடக்கும் மல்லிகையிடையே தேனுண்ணச் செல்கின்றன. வண்ணாத்திப் பூச்சிகள் பறக்கவிட்ட காகிதத்துண்டுபோல ரோஜாப் புஷ்பத்திலிருந்து பறந்தவை சண்பகப்பூவில் போய்த் தங்குகின்றன. இயற்கை வளஞ்செறிந்த அந்நந்தவனத்தின் மத்தியில் சலவைக் கற்படிகள் அமைந்த தடாகமானது, வானத்தின் மத்தியில் ஓர் வெள்ளி உதயமானதைப்போன்று தோன்றியது. இவ்விதமான நந்தவனத்தில் பச்சிளங் கொடிபோன்ற செல்வி விரைவாக நடந்து வந்தாள். பளிங்கைப்போன்ற பளபளப்பான அவள் தேகத்தில் சூரிய வெளிச்சம் பட்டதும் மின்மினிப் பூச்சியைப் போன்று வெட்டியது. அவளது காதிலும் மூக்கிலும் அணிந்திருந்த விலையுயர்ந்த வைரக் கற்கள் காண்போரின் கண்களைக் கூசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி செய்துவிடுகின்றன. வானத்தின் மத்தியில் சந்திரன் பிரகாசிப்பதைப் போன்று அம்மட மயிலாளின் நெற்றியில் இடப்பட்டிருந்த திலகம் அவளின் இயற்கை அழகைப் பன் மடங்கு அதிகரிக்கச் செய்தது.

பாலகிருஷ்ணனைக் கண்டதும் ஆனந்தசாகரத்தி லாழ்ந்த சிறுமி அவனை அணுகியதும் ஏதோ ஓர்வித எண் ணம் மனதில் தோன்ற, நாண மிகுதியினால் பூமியை நோக் கியவாறே அவன் முன்னால் நின்றாள். பாலகிருஷ்ணனும் அம்மங்கையைக் கண்டதும் என்றுமில்லா ஆனந்தமடைந் தான். ஒருநாளுமில்லாத விதமாக அவ்வணிதையின் முகம் பிரகாசிப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்தான். என்றாலும், தன்னைக்கண்டதும் ஆனந்தப் பரவசமடைந்து தனது கரங் களைப்பற்றி இழுத்து தன்னருகில் அமரச்செய்து சம்பா ஷணை செய்யும் அக்காரிகை இன்று மாத்திரம் பூமியை நோக்கியவாறு மௌனஞ் சாதிப்பானேன் என்று திகைத் தான். தான் ஏதும் குற்றம் செய்துவிட்டதனால் இவ்விதம் தன்னுடன் பிணங்கிக்கொள்கின்றனளோ என்று கலக்கமும் திகிலுமடைந்து மெதுவாகப் பேசலானான். என்றாலும் அவனால் பேசமுடியவில்லை. அவ்வணிதையின்மீது செலுத் திய கண்ணை பெயர்த்தெடுக்கவும் சக்தியற்றவனாகி ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டான்.

ஆஹா! இதென்ன ஆச்சரியம்! ஒருநாளுமில்லாத திருநாளாயிருக்கிறதே. நேற்று நான் கண்ட கனா உண்மை தானா! நான் இந்நந்தவனத்தை யடைந்ததாகவும், இவளைக் கண்டதும் நான் அப்படியே நின்றுவிட்டதாகவும், இப் பெண் என்னைக் கண்டதும் தனது உயிருக்குயிரான மான்க ளுடன் என்னை அணுகியதாகவும், பூமியை நோக்கியவாறே மௌனஞ்சாதித்ததாகவும், பின் என் பக்கலில் அமர்ந்த தாகவும், ஒருநாளுமில்லாத ஓர் புதிய—தெய்வீக உணர்ச்சி எங்களிருவருக்கும் தென்பட்டதாகவும், ஈற்றில் எங்களிருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிடையிலும் ஏற்பட்ட அன்பு கறையில்லாக் காதலாக மாறி விட்டதெனக் கண்டதாகவும், என்னை இவ்வழகு இராணி தனது காதலனாக—மணாளனாக ஏற்றுக்கொண்டதாகவும், நானும் அவளை எனது இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ள இணங்கி ஏற்றுக்கொண்டதாகவும், பின் ஏதேதோ வெல்லாம் செய்து நெடுநேரம் இனிய சம்பாஷணை நிகழ்த் தியதாகவும், அதுசமயம் இவளின் தந்தையாகிய ஜெயராமர் எங்களை நோக்கி வந்ததாகவும் கண்ட கனு உண்மைதானு? இதென்ன புதுமை! கனுக்காண்பதெல்லாம் வீண் எண் ணங்கள் என்றல்லவோ மனிதர் கூறுகின்றனர். அது எனது செய்கையில் பொய்த்துவிடும்—பொய்த்துவிட்டது போலும்! ஏதோ இதுவரையும் நடந்த நிகழ்ச்சிகள், நான் கண்ட சொப்பனத்தில் நடைபெற்றவைகளேயாகும். என் ருலும் இன்னும் பார்ப்போம். அம்மங்கை மௌனஞ் சாதித்தவுடன் நானும் மௌனஞ்சாதித்தால் ஏதேனும் விப ரீதங்கள் நேரிடக்கூடும். இவளுடைய தந்தையாலல்லவோ இவ்விதமான நன்னடத்தைக்கு வந்துள்ளேன். ஆதலால் இவளுடன் நான் பிணங்கிக்கொள்வது நன்றன்று," என்று ஏதேதெல்லாமோ எண்ணியவாறே அருகிலிருந்த பென்ச் (Bench) ஒன்றில் அமர்ந்தான்.

ஒருவாறு தனது மனதைத் திடப்படுத்திக்கொண்டு அருகில் நிற்கும் மங்கையின், தாமரைமலரினும் மிருதுவான கரங்களைப்பற்றி தனது அருகில் உட்காரவைத்துப் பேச லானுன். "மங்கையர்க்கரசி! என் இன்று நீ ஒருமாதிரி யாக நிற்கின்ருய்? நான் ஏதேனும் குற்றமிழைத்து விட் டேனு? அன்றி உனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட் டதா? என்னைக் காணும்போதெல்லாம் வெகு அன்பாக சம்பாஷணைசெய்யும் நீ ஏன் இன்று என்னிடம் வித்தியாச மாய் நடந்து கொள்ளவேண்டும்? ஒருவேளை நமது உபாத் தியாயர் கற்பித்தபாடங்களை நான் கவனமாகப் படிக்காமல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண் சோம்பேரியைப்போல சுற்றி யலைகிறேனென்று எண்ணி, வருந்தி என்னிடம் இவ்வாறு நடந்து கொள்கிறாயா? உன்மனம் கோணாமல் நடந்துவரும் நான் இன்று உன் மனதிற்குப் பிடியாதவிதமாக நடந்ததாகத்தெரியவில்லை. அங்ஙனமிருக்க, நீஎன்னிடம் சீற்றங்கொண்டு மௌனஞ் சாதிப்பது எனது துர்அதிர்ஷ்டமேயாகும். உனது மௌனம் என் சித்தத்தைக் கலைத்துவிட்டது. உண்மை என்ன என்பதைத் தெரியப்படுத்தமாட்டாயா? பெண்ணே! உன் மனம்போல நடக்க யான் சித்தமாயிருக்கிறேன்" என்று பாலகிருஷ்ணன், மங்கையர்க்கரசி என்ற அம்மாதிடம் கேட்டுக் கொண்டான்.

பாலகிருஷ்ணனின் உண்மையான தடுமாற்ற நிலைமையைக் கண்ணுற்றதும் மங்கையர்க்கரசி என்ற அப்பெண் யாதொன்றையும் பேசினாளில்லை. பாலகிருஷ்ணன் தனது கரத்தைப் பற்றியதும் அவளுக்கு மயிர்ச் கூச்சலுண்டாயிற்று. வியர்வைப் பெருக்கெடுத்தது. மார்பு படபடவென்றடித்தது. இந்நிமிஷம் தைரியலெக்ஷிமி அவளிடமிருந்தும் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டாள் போலும்! அவளது மனம் ஒரு நிலையிலில்லை. தனது இருகண்களையும் அப்பெண்கள் திலகம் மூடிக்கொண்டாள். எனினும் சிற்சில சமயங்களில் கண்களைவிழித்து அவனை நோக்குவாள். இவைகளைக்கண்ணுற்ற பாலகிருஷ்ணனின் மனதில் பல திறப்பட்ட எண்ணங்கள் கடலின் அலைகளைப் போன்று ஒன்றன் பின்னொன்றாய்த்தோன்றின வென்றாலும் அறவேஅவ்வெண்ணங்களை அவன் ஒழிக்க முயன்றான். இச்சமயத்தில் அப்பெண் புன்முறுவலுடன் அவனது மடியில்சாய்ந்து கொண்டாள். அம்மங்கையின் இயற்கைஅழகைபாலகிருஷ்ணன்காண வேண்டி கதிரவன் தனது கிரணங்களை அம்மங்கையின் மீது செலுத்த முயன்றான். அங்கு அடர்ந்திருந்த மரங்களும் அதற்கிணங்கி தங்களது கிளைகளை அங்குமிங்கும் அசைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரணங்களைச் செலுத்த உதவியளித்தன. தன்னுடைய மனதில் ஏற்படும் எண்ணங்களை அறவே களைய முற்படும் பாலகிருஷ்ணனுக்கு, அம்மங்கையின் முகத்தில் கிரணங்கள் பட்டது பளிங்கைப்போன்று பிரகாசிப்பதானது, அவனது முயற்சியை தோற்கடித்தது. அழகுமிகுந்த—கண்ணாடிப்போன்ற பளபளப்பான கன்னத்தைப் பார்த்ததும் உடனே அதில் ஓர் அருமையான முத்தமிடவேண்டுமென்ற ஆசை பிடர்பிடித்துந்த தலையை சிறிது வளைத்தான். எனினும் மறுநிமிஷம் தலையை நிமிர்த்திக் கொண்டான்.

இவனது தடுமாற்ற நிலையைக்கண்டு மனமிறங்கி தைரிய லெக்ஷ்மி மங்கையர்க்கரசியினிடம் வந்தடைந்தாள். உடனே மங்கையர்க்கரசி மெதுவாக பேசலுள்:—"நண்பரே! நான் தங்களிடம் பேச எவ்வளவோ முயன்றும் பயன் படாமற் போய்விட்டது. தைரிய லெக்ஷ்மி என்னிடமிருந்தும் விலகு பெற்றுக்கொண்டு போய்விட்டாள் போலும்! பெண்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள நாணம் என்னை தலைகுனியும் படி செய்துவிட்டது. ஏதோ எனக்கு ஒருமாதிரியா யிருக்கிறது. ஒருநாளுமில்லாத ஓர் புதிய—நவீன உணர்ச்சி உண்டாகி என்னை வாட்டுகின்றது. எனதுயிர்த்தோழரா கிய தங்களிடம் கூற முற்படுகையில் எனது நா எழமறுக் கிறது. நான் தங்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்பு கிறேன். அவ்வினுக்களுக்கு தாங்கள் அளிக்கும் பதிலை ஆராய்ந்து பார்த்தபின் நான் எனது நோக்கத்தை தங்க ளுக்கு தெரிவிக்கின்றேன்." என்று மொழிந்தாள்.

பாலகி:—மங்கையர்க்கரசி! நீ கேட்கும் எந்தக் கேள்வி களுக்கும் நான் விடைபகரவேண்டியது அவசியமல்லவா? நாமிருவரும் ஒன்றாகக் கல்விபயிலுகின்றோம். ஒருவருக்குத் தெரியாத விஷயத்தை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். பாடவிஷயங்களன்றி மற்ற உலக விஷயங் களைப் பற்றியும் ஒருவரை ஒருவர் வினவிக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமிருவரும், நீ கேட்கும் வினுக்களுக்கு நானும், நான் கேட்கும் வினுக்களுக்கு நீயுமாக விடைபகர்ந்து எதுசரி? எதுசரியல்ல? என்பதை சீர் தூக்கிப் பார்த்துவருகின்ரும். அல்லவா? அவ்வாறிருக்க நான் ஏன் விடையளிக்கமாட்டேன்?"

ம. அ:—"பாலகிருஷ்ணு! நான் இப்போது கேட்கப் போகும் கேள்வி இதற்கு முன் தங்களிடம் ஒருபோதும் வினவவில்லை. இவ்விதமான கேள்விகளை யான் வினவுவே னென்று தாங்கள் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. இது சற்று கஷ்டமாகவே தோன்றலாம். "நல்லஞாலமும் வானமும் பெறினும், எல்லாமில்லை யில்லில் லோர்க்கே (அதாவது:—மனவியில்லாதவர்கள் பூவுலகத்தையும் வானுலகத்யும் பெற்றிருந்தாலும் அவையாவும் இல்லாமை போலாகும் என்பதே) என்றசெய்யுளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?"

பா கி:—"நேற்றுவரை நான் இதை ஆக்ஷேபித்தே வந்தேன். ஆனல் நேற்றுமுதல் இதை ஆதரிக்க வேண்டியதாகிவிட்டது."

ம அ:—"(சற்றுயோசித்து) அப்படியா? அவ்விதமாயின் தாங்கள் யாரைமனைவியா......க்க்..... கொள்...ள விரும்புகிறீர்களென்பதை யான்... அறியலாகுமா?"

பா கி:—"அதை நான் இப்போது வெளியிட விரும்பாததையிட்டு மன்னிக்கவும். இதன் விடையை நோக்குங்கால் "வளர்த்தகடா மாரிற்பாய்ந்தாற்" போலிருக்கும். அதைவெளியிட்டாலும் தற்காலமுள்ள எனது வாழ்க்கைக்கு ஏதேனும் ஹானி ஏற்பட்டுவிடுமென்றே அஞ்சுகிறேன் எனக்கு ஏற்ற இல்வாழ்க்கைத் துணைவி இவள்தான் என்று என்னிடம் அறிவித்த ஈசன் அப்பெண்ணிடமும் "உனது வாழ்க்கைத் துணைவன் பாலகிருஷ்ணன்தான்" என்றுகூறி, எங்களிருவரையும் இணைத்துவிடும் காலம்வரை நான் அதை வெளியிட விரும்பாமல் பொறுமையுடனிருப்பேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம அ:—"பிறருக்கு சொல்ல விருப்பமில்லாத ஓர் செய்தியை வற்புறுத்துவதும் நன்றன்று. ஆனால் எவ்வித இரகசியத்தை என்னிடம் கூறினாலும் அது என் உயிர்போவதானாலும் என் வாயிலிருந்தும் (சொன்னவருக்கு அபாயம் விளைவிக்க) வெளியாகாது. இது நிச்சயம். ஆதலால் தங்களுடைய கருத்தை சிறிதும் கிலேசமின்றி என்னிடம் கூறிவிடலாம். தங்களின் உயிருக்குயிரான என்னிடம் தாங்கள் இவ்விதம் நடந்துகொள்வது வருந்தத்தக்கது, எனது மனம் புண்படாமல் காக்கவேண்டியது உங்களின் கடமை. தங்களுடைய மனோபாவம் யாது என்று தெரியப்படுத்த மாட்டீர்களா?" என்று, அவனது இருகரங்களையும் பற்றி தனது மார்போடணைத்துக்கொண்டு கொஞ்சம் கிளியைப் போலக் கேட்டாள்.

தன்னுயிரைப் போன்று நேசித்து வந்த மங்கையர்க்கரசி மனம் வருந்துவதைப் பாலகிருஷ்ணனால் சகிக்கமுடியவில்லை. தனது கருத்தை வெளியிடவும் பிரியமில்லை. "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" என்று நாடோடியாகச் சொல்லிக்கொள்வதைப் போன்று தன்னுடைய செய்கை இருப்பதையறிந்து தன்னுள்ளேயே நகைத்துக்கொண்டான். ஒருவாறு தன்னைத்தானே திருப்திசெய்து கொண்டு பேசலானான்.

பா. கி:—"கண்மணி! அநேகர் தாங்கள் செய்யும் குற்றங்களையும் பழி பாதகங்களையும் சற்றும் சிந்திக்காமல் பிறரைக் குறை கூறுகின்றனர். அவ்விதப் புல்லறிவாளர்களில் நீயும் ஒருத்தி. நீ எனது உயிருக்குயிரான சிநேகிதையாயிற்றே என்று உன்னை நான் மடக்காமலிருக்க முடியவில்லை. நீ என்னை அணுகியதும், பூமியை நோக்கியவாறே மௌனஞ்சாதித்ததின் காரணம் யாதென்பதை நான் அறிய விரும்புகையில், 'உனது கேள்விகளுக்கு நான் விடை பகர்ந்தபின் அதை ஆராய்ந்து பார்த்து நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது இரகசியத்தை வெளியிடுவாயென்றும், கூறினாய். நான் எத்தகைத்தவனென்பதை அநுபவ பூர்வமாய்க் கண்டறிந்த நீ என்னிடம் உனது மௌனத்தின் காரணத்தைக் கூறுவிடில் நான் எவ்விதம் உன்னிடம் கூறுவேன் என்பதை நீ சற்று சிந்தனை செய்து பார்த்திருந்தால், "தங்களின் உயிருக்குயிரான என்னிடம் தாங்கள் இவ்விதம் நடந்து கொள்வது வருந்தத்தக்கது" என்று கூறியிருக்கமாட்டாயன்றோ? ஓர் பெண்ணாகிய உனக்கு இவ்வளவு சாமர்த்தியமிருந்தால் ஓர் ஆண்மகனுக்கு எவ்வளவு சாமர்த்தியமிருக்கும் என்பதை நீ ஆராய்ந்து பார். இனிமேலாவது உனது வீண் முரட்டுப்பிடிவாதத்தைக் காட்டாது உனது இரகசியத்தை உனது உயிர்த் தோழனாகிய என்னிடம் கூறிவிடு" என்றான்.

தன்னைப்பற்றி பாலகிருஷ்ணன் கூறியவை அனைத்தும் உண்மையென மங்கையர்க்கரசி அறிந்துகொண்டாள். இன்றில்லாவிட்டாலும் நாளைக்காவது தனது இரகசியத்தைப் பாலகிருஷ்ணனிடம் கூறாமல் தனது மனம் திருப்தியடைய மாட்டாது என்பதை நன்றாய்த் தெரிந்துகொண்டாள். என்றாலும் "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று சாதிப்பதைப்போன்று யாதொன்றையும் கூறினாளில்லை. பலதிறப்பட்ட எண்ணங்கள் அவளுடைய மனதில் தோன்றி வதைத்தன. கோடீஸ்வரனின் ஏக புத்திரியாகிய தனக்கு இன்னும் ஓர் குறை இருப்பதாக நேற்று முதல் அறியலானாள். அவளுடைய மார்பு படபடவென்றடித்தது. தலை சுழல ஆரம்பித்தது. முத்துப்போன்ற வியர்வை அவளுடைய மேனியிலிருந்தும் வெளியானது. வியர்வை நீரால் பாலகிருஷ்ணனின் வஸ்திரம் பாதிக்கு மேல் நனைந்துவிட்டதெனலாம். பாலகிருஷ்ணன் தனது முகம் துடைக்கும் துணியால் அவளது நெற்றியிலிருந்தும் வெளிப்படும் வியர்வையைத்துடைத்தான். அவளது மதி முகத்தை உற்று நோக்க, நோக்க, அவனை அறியாமலே ஆனந்தக் கடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்தான். பொறுமையை இழந்தவனாகிப்பேசலானான்:—"மங்கையற்கெல்லாம் அரசியே! இன்னும் உன் மனம் திரும்பவில்லையா? மந்தகாசமான உனது அழகிய வதனத்தைக்காணவும் இன்று எனக்கு ஏதோ ஓர் புதுமையாக இருக்கிறது. ஒருநாளுமில்லாத ஜொலிப்பு உன்னிடம் தென்படுகிறது. காந்தம்போன்ற ஓர் சக்தி உன்னிடமிருந்தும் உற்பத்தியாகி என்னைக்கலங்கச் செய்கின்றது. இதன் காரணத்தை என் உயிராகிய நீ தான் சொல்லவேண்டும்" என்று கூறியவாறே அவளை வாரியணைத்து முத்தாரங்களைச் சொரிந்தான்.

சற்றும் எதிர்பாராத இச்செய்கையை அறிந்ததும் மங்கையர்க்கரசி திடுக்கிட்டாள். பாலகிருஷ்ணனின் முத்தங்களைப் பெற்ற சிறுமி ஆனந்தமெய்தினளெனினும் நாண மிகுதியினால் கண்களை மூடிக்கொண்டாள். சிறிது நேரஞ் சென்றபின் மெதுவாகப் பேசலானாள்:—"நண்பரே! தாங்கள் இன்று என்னிடம் இவ்வாறு நடந்ததற்குக் காரணம் என்ன? ஒரு நாளும் நான் அனுபவித்தறியாத இன்பத்தையன்றோ யான் இப்போது அனுபவித்தேன். ஒரு பெண் மகளிடம் ஆண்மகனாகிய தாங்கள் இவ்வாறு நடந்துகொள்வது நியாயம் தானா?"

பா. கி:—"ஆம். இது நியாயம் தான் என்று நான் கூறுகிறேன். ஓர் ஆண் மகன் சுகமாக வாழவேண்டுமாகில் ஓர் பெண் மகள் அவனுடன் சந்தோஷமாக இல்லறத்தை நடத்தவேண்டும்."

ம. அ:—"தாங்கள் கூறுவதை நோக்குகையில் தாங்கள் என்னையே மணக்க முடிவு செய்து விட்டீர்கள் போல் தோன்றுகிறதே. அது உண்மை தானா?"

பா. கி:—"பொதுவாக மணத்தம்பதிகள் ஊசியும் நூலும்போல் வாழவேண்டியது அவசியம். அவற்றில் ஊசியோ, அன்றி நூலோ பிணங்கிவிடில் அதனால் தீமையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்றி நன்மை உண்டாகமாட்டாது. அதுபோல இப்பூந் தோட்டத்தில் சம்பாஷிக்கும் இருவருள் ஆணோ அன்றி பெண்ணோ மன அதிருப்தி கொண்டுவிட்டால் அதனால் மகத்தான கேடுகள் விளையக்கூடும்."

ம. அ:—"என் இன்பக்காதலா! தங்களுடைய சம்பாஷணையிலிருந்து தாங்கள் என்னை மணக்க இணங்கிவிட்டீர்கள் என்று திட்டமாக அறிகிறேன். தங்களுடன் இங்கு சம்பாஷணை செய்யும் பெண்ணைத் தாங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்வீர்களா என்பதையறிய பெண் பேதையாகிய நான் எவ்வளவோ முயன்றும் ஆண் சிங்கமாகிய தங்களிடம் பலிக்கவில்லை. என் செய்வது? நான் எனது இரகசியத்தை வெளியிடுகிறேன். அதைக் கவனமாய்க் கேட்டுக்கொள்ளுங்கள். நான் நேற்று இரவில் ஆச்சரியமான ஓர் கனாக் கண்டேன். நான் வழக்கம் போல இந்நந்தவனத்தில் எனது மான்குட்டிகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததாகவும், அது சமயம் என்னுடன் கல்வி பயின்றுவரும் உத்தமராகிய பாலகிருஷ்ணன் என்ற வடிவழகு மன்னர் இந்நந்தவனத்தை யடையவும், நான் அவரைக்கண்டதும் அவரை அணுகியதாகவும், எனக்கு ஒருபோதுமில்லாத நவீன உணர்ச்சி உதித்ததாகவும், சுந்தர வாலிபர் பெஞ்சியில் அமரவும், நானும் அமர்ந்ததாகவும், அது காலை ஏதேதோ சம்பாஷணை செய்ததாக்வும், எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியைப்போன்று அவ்வாலிபருக்கும் உண்டாகியதென்றும், ஈற்றில் அது தெய்வீகத் தன்மையான காதல் என்றறிந்ததாகவும், சொப்பனங் கண்டேன். "கண்மணி! எனதருமைக் காதல் கிளியே! நானும் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறேன். எத்தனையோ மங்கையரைத் தாலி முதல் சகல ஆபரணங்களையும் கொள்ளையடித்துள்ளேன். என்றாலும் உன்னிடத்து ஏற்பட்ட நவீன உணர்ச்சி இதற்கு முன் ஒருபோதும் ஏற்படவில்லை. இப்போது நாமிருவரும் உண்மைக்காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பந்தத்தினால் இணைக்கப்பட்டுள்ளோம். கருத்தொருமித்த காதலர்களாகிய நாம் இணைபிரியாமல் ஊசியும் நூலும் போன்று நடப்போம். தெவிட்டா இன்பத்தை அனுபவிப்போம்” என்று கூறியவாறே என்னை ஆலிங்கனஞ் செய்தார். எனது அதரங்கள் கோவைப்பழம் போன்று சிவக்கும் வரை முத்தங்கொடுத்தார். இது சமயம் யாரோ ஒருவர் நந்தவனத்தினுள் பிரவேசித்தார். அவர் யாரென்பதையும் கூட கவனியாது எனது காதலர் அளித்த இன்பத்தை அனுபவித்தேன். இது சமயம் அங்கு வந்தவர் எனது தந்தை என அறிந்ததும் நான் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். நான் கண்டது கனு என்பதை யறிந்து வெட்கினேன்.

“தேனுகர்வண்டு மதுதனை யுண்டு தியங்கியே
கிடந்ததைக் கண்டு

தானதைச் சம்புவின் கனியென்று தடங்கையா
லெடுத்து முன் பார்த்தாள்.

வானுறு மதியம் வந்த தென்றெண்ணி மலர்க்கரங்
குவியு மென்றஞ்சிப்

போனது வண்டோ பறந்தது பழந்தான் புதுமையோ
வது வெனப் புகன்றாள்.” (வி-ணி)

என்ற கவி எனது நினைவிற்கு வந்ததால் இதை ஒருவரிடமும் கூறவில்லை. ஆனால் இதுகாலை செயலளவில் நிரூபணப்படுத்தப்பட்டுவிட்டது. நான் தங்களின் மனோபாவங்களை யறிந்தபின்பே, நான் எனது கனவை வெளியிடலாமென்று எண்ணினேன். ஆனால் எனது குட்டு தங்களிடம் பலிக்கவில்லை யென்றாலும் தங்களுடைய வார்த்தைகளிலிருந்தும் தங்களுடைய மனப்பான்மையை ஒருவாறு அறிந்துகொண்டேன். இது உண்மைதானா? தங்களுடைய விருப்பம் யாது? என்று மெல்லிய குரலில் வினவினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்விழியினளான செல்வி மங்கையர்க்கரசி கூறியவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பாலகிருஷ்ணன் ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்தான். அவளது இயற்கை அழகைப் பருகிக்கொண்டே யிருந்தான். அவளது கண்களின் ஒளி பாலகிருஷ்ணனின் கண்களைக் கூசம்படி செய்கின்றது.

"நட்பிடைக்குய்யம் வைத்தார் பிறர் மனை
நலத்தைச் செய்வார்
கட்புடைக் காமத்தீயாற் கன்னிகை
விலக்கினோரும்,
அட்டட னஞ்சு தின்றோ ராயுளுங்
கொண்டு நின்று,
குட்ட நோய் நரகில் வீழ்ந்து
குளிபவரிவர்கள் கண்டாய்."

என்ற கவி அவனது நினைவிற்கு வந்தது. மீண்டும் ஒருமுறை அவளை முத்தினான். தான் கண்ட கனவையும் கூறினான். இவருடைய கனவும் ஒரே விதமாயிருப்பதைக்கண்டு இருவரும் ஆச்சரியமடைந்தனர். தங்களிருவரையும் காதலராக்க வேண்டியே கடவுள் கனவின் மூலமாக இருவருக்கும் செய்தியைத் தெரிவித்ததாகவும், கடவுளினால் இணைக்கப்பட்ட தம்மிருவருக்கும் யாதொரு குறைவும் ஏற்படாதென்றும் ஆனந்தக் கூத்தாடினர். கருத்தொருமித்த காதலரின் சம்பாஷணையைக் கேட்க மான்கள் இவர்களுக்கு முன்னால் நின்றன. ருக்மணி என்ற மான் பாலகிருஷ்ணனின் காலடியில் படுத்துக்கொண்டு அவனுடைய இயற்கை அழகை உற்றுநோக்கியவாறே படுத்திருந்தது.

"காதலா! நமது காதல்மொழிகளை செவியுற எறும்புங் கூடத் தங்களுடையமார்பில்சுற்றிய வண்ணமாயிருக்கிறதே," என்றுகூறி அந்த எறும்பை எடுத்து விட்டு அவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பைத் தடவினுள். அப்போது பாலகிருஷ்ணன் "காதல் கிளியே! நீ, உனது தாமரைமலரினும் மெதுவான அழகிய கரங்கொண்டு எனது மார்பைத் தடவியதும் ஒன்று எனது நினைவிற்கு வருகின்றது. அதாவது:—

துப்புறச் சிவந்தவாயே பஞ்சணையின் மீதில்
ஒப்புறக்கணவனோடே யோர்லீலை செய்யும்போது
கற்பகஞ் சேர்ந்தமார்பிற் கனதனமிரண்டுங்கைதத்தே
அப்புர முருவிற்றென்றே யங்கையாற்றடவிப்பார்த்தாள்

என்ற கவியேயாகும். சிறிது நேரத்திற்குமுன் நான் உன்னை எனது மார்போடணைத்தேனல்லவா? ஆதலால், பருவத்திற்கேற்ப விம்மிப் பொற் கலசங்களைப்போன்று குரும்பையள்வாக அமைந்திருக்கும் உனது ஸ்தனங்களிரண்டால் எனது மார்பில் ஏதேனும் துவாரம் ஏற்பட்டு விட்டதென்று அஞ்சி தடவுகின்ருயோ. மாதரசே! அவ்விதம் நீ அஞ்ச வேண்டாம்" என்றுகூறி தனது மார்போடணைத்துக் கொண்டான்.

இவ்விதமாகச் சிறிது நேரஞ்சென்றபின் அழகிய மான் குட்டிகள் பின் தொடர, காதலர்களிருவரும் மாளிகையை நோக்கி நடக்கலாயினர். மாளிகையினின்றும் மங்கையர்க்கரசியின் தந்தை ஜெயராமர் நந்தவனத்தை நோக்கிவந்தார். அவருடைய முகத்தில் ஆனந்தம் பொங்கிவழிந்தது. காதலர்களிருவரும் கைகோர்த்து வருவதைக்கண்ட ஜெயராமர் தப்பான அபிப்பிராயங்கொண்டு விடவில்லை. மங்கையர்க்கரசியும், பாலகிருஷ்ணனும் சகோதர சகோதரியைப்போல் நடப்பதையும், உணவருந்தும்போதும், வெளிச்செல்லும் போதும், சயனிக்கும்போதும் ஒருவரைவிட்டொருவர் பிரிவதில்லை என்பதை அனுபவபூர்வமாய்க் கண்டறிந்திருந்தாராதலால் அவர் தப்பபிப்பிராயங் கொள்ளாதது ஆச்சரியமன்று. என்ருலும் காதலர்களுக்குச் சிறிது வெட்கமாயிருந்தது. நேற்றுவரை உண்டாகாத வெட்கம் இன்று ஏன் உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாகியது என்று இருவரும் தம்முள் வினவிக்கொண்டனர். ஜெயராமரின் பக்கலில் வந்ததும் பாலகிருஷ்ணன் "என்ன செய்தி? தாங்கள் என்னைத்தேடியும் வரவேண்டுமோ? ஒரு வேலையாளிடம் கூறி எனக்குத் தெரிவித்தால் நான் ஓடோடியும் வந்து தங்களைக் கண்டுகொள்வேனே. என்னுல் ஆக வேண்டியதைச் சொல்லுங்கள். நான் கூடியமட்டும் பிரயாசைப்பட்டு அதை நிறைவேற்றுகிறேன்" என்று பணிவாக மரியாதையாகக் கேட்டுக்கொண்டான்.

ஜெயராமர்:—"அப்பா! உனது தந்தை இலங்கையினின்றும் புறப்பட்டுக் கப்பல்மார்க்கமாக வருவதாய் லட்டர் எழுதியிருக்கிருர்கள். அதைத் தெரிவிக்கவே இவண் வந்துள்ளேன்" என்றுகூறித் தமது கரத்திலிருந்த கடிதத்தை அவனிடம் ஈந்தார்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தவுடன் பாலகிருஷ்ணனுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்குமோர் எல்லையுண்டோ? தனது தந்தை தன்னருகில் நிற்பதாகவும், தனக்குவேண்டிய நற்புத்திமதிகளைக் கூறுவதாகவும், தான் தனது தந்தையின் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து தனது குற்றத்தை மன்னிக்கும்படி கேட்பதாகவும், தன் குற்றத்தை மன்னித்துத் தன்னை அன்பு மிகுதியினுல் வாரியணைப்பதாகவும் அவனுக்குத் தோன்றி மறையலாயிற்று. "அன்புள்ள ஐயா! எனது விருப்பத்தை நிறைவேற்றிய தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். தங்களின் உதவியை—என்மீது காட்டியுள்ள அன்பை யான் ஒருபோதும் மறக்க முடியாது" என்றுகூறி ஜெயராமரைப் பாலகிருஷ்ணன் வணங்கினுன். அப்போது ஜெயராமர் "பாலகிருஷ்ணு! நீ எனக்குப் பிரதியுபகாரமாக, நான் உனக்குச் சொல்லியபடி நன்னடத்தையில் நடந்து, என்னையும் இதோ உனதுடன் நிற்கும் மங்கையர்க்கரசியையும் மகிழ்விப்பதே உனது கடமை" என்ருர். "அவ்விதமே நடக்க யான் முயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்து வருகின்றேன்" என்று பாலகிருஷ்ணன் விடை பகர்ந்தான்.

தனது காதலனின் தந்தையைக்காணும் பாக்கியம் தனக்கும் தனதுயிர்த்துணைவருக்கும் எப்போதுகிடைக்கும் என்று மங்கையர்க்கரசி ஈசனிடம் கேட்டுக்கொண்டனள். பாலகிருஷ்ணனைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாக மங்கையர்க்கரசி ஆனந்தங்கொள்ளலானள். பின் மூவருமாகத் தமது மாளிகையை யடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—9

## துறவியாகச் சென்ற சரோஜினியின் காதலன்.

ஜன சஞ்சாரமற்ற ஓர் காட்டில் முற்றத்துறந்த ஞானி யொருவர் கண்களை மூடியவாறு அவர் மனம் போனவாறு நடந்து செல்கின்றார். அவரின் பின்னால் 14 வயது மதிக்கத்தக்க ஓர் யுவதி நடந்து செல்கின்றாள். அவளைக்கூர்ந்து நோக்குவோரும் அவளுடைய இளைப்பைக் கண்ணுறுவோரும் அப்பெண்மகள் அதிக—நீண்ட தூரம் அம்மகானைப் பின்பற்றி நடந்து வருவதாக எளிதில் யூகித்தறிந்து கொள்ளலாம். வெய்யிலின் கொடுமையால் அவளுடைய மேனி வியர்வை பெருகி, கறுத்திருந்தது. அம்மாது தங்க நகைகளை அணிந்து தன்னை அழகுபடுத்திக் கொள்ளவில்லை யென்றாலும், இயற்கை யன்னை அவளிடத்து அன்பு கூர்ந்து அவளுக்குக் கண்டோர் மனதைக் கவரக்கூடிய வனப்பு வாய்ந்த உறுப்புகளை அளித்திருந்தாள். அவளுடைய நடையுடை பாவனைகளிலிருந்து அவள் மேன்மையான குணங்களையுடைய குடும்பவழித் தோன்றலா யிருக்க வேண்டுமென்று எளிதில் அறிந்துகொள்ளலாம். மனித சஞ்சாரமற்ற காட்டில் அழகு இராணி யொருத்தி, 22 வயதில் யாவற்றையும் வெறுத்துத் துறவிக் கோலம்பூண்ட ஓர் வாலிபனின் பின்னால், அன்னத்தையும் பின்னிடத்தக்க விதமாக நடந்து செல்லவேண்டியதின் காரணம் யாதாயிருக்கலாம்? ஒருவேளை அத்துறவி அப்பெண்ணை ஏதேனும் மாந்திரீகத்தினால் வசப்படுத்தித் தன்னுடன் அழைத்துச் செல்கின்றாரோ? அவ்விதம் இருக்கமுடியாது. அம்மகானைக் காண்பவர்கள் அவர் இவ்விதம் நடந்திருக்க முடியுமென்று சொப்பனங்கூடக் காணமாட்டார்கள். பின் எதற்காக அப்பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் திலகம் அவருடன் செல்கின்றனள் என்பதை வரவர ஆராய்வோம்.

இவ்விதமாக இருவரும் நெடுந்தூரம் சென்றனர். அத்துறவி தமது கண்களை மூடிக்கொண்டு நடந்து செல்கின்றாரெனினும், அக்கானகத்தில் நடக்கும் ஒவ்வொரு செயலும் அவருக்குச் சினிமாப்படத்தைப் போன்று தமது அகக் கண்ணில் தென்படுகிறது. ஆதலால் நாம் முன் குறிப்பிட்ட மாது தன்னைப் பின்தொடர்ந்து நீண்டதூரம் வருவதையும் அறிந்துகொண்டார். ஓர் சிறுமி தன்னைப் பின்தொடருவதின் காரணம் யாதாயிருக்குமென்று எண்ணி அவளிடம் பேசலானார்:—

துறவி:—"குழந்தாய்! மாடு மேய்த்துக் கொண்டிருந்த நீ என்னை விடாது பின் தொடர்ந்து வரவேண்டியதின் காரணம் யாது? உனக்கு என்ன வேண்டும்?" என்று வினவினார்.

"நெடுந்தூரம் கண்களை மூடிக்கொண்டு, நடந்து வரும் இம்மகான் நான் பின்தொடருவதை எவ்விதம் அறிந்தார்? நான் மாடு மேய்த்துக்கொண்டிருந்ததையும் இவர் எவ்விதம் கண்டிருக்கக் கூடும்! இது புதுமையிலும் புதுமையாயிருக்கிறதே" என்று அச்சிறுமி தன்னுள் எண்ணமிட்டுத் திகைத்துப் பேசலானாள்:—"சுவாமி! நமஸ்காரம்! தங்களுக்கு அடியாள் பணிவிடை செய்ய விரும்பியே தங்களைப் பின்தொடர்ந்தேன்" என்று வெகு பணிவாகவும், மெதுவாகவும் அடக்க ஒடுக்கத்துடனும் விடை பகர்ந்தாள்.

இவளுடைய அடக்க ஒடுக்கத்தைக் கண்ணுற்ற அவர் மனம் பூரித்து "பெண்ணே! என்னிடம் பணி செய்து நீ யாதொன்றையும் சம்பாதித்துக் கொள்ள முடியாது. ஆதலால் நீ செல்லலாம்" என்றார்.

பெண்:—"சுவாமி! நான் பொருள் சேகரிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தங்களுக்குப் பணிவிடை செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வரவில்லை. நான் ஓர் செல்வந்தனின் குமாரி யென்றாலும் நான் ஓர் பிச்சைக்காரி தான். நான் பூர்வ ஜென்மத்தில் கொடிய பாவங்களைச் செய்திருக்கவேண்டும். ஆதலால் தங்களுக்குப் பணி செய்து தங்களின் மூலமாக எனது பாவங்களை யெல்லாம் போக்கிவிடலா மென்ற எண்ணத்துடன்தான் நான் பின்தொடர்ந்து வருகிறேன். தாங்கள் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்".

ஞானி:—"பெண்ணே! நானோ வன சஞ்சாரி. நான் கந்தமூல பலாதிகளை (கிழங்கு, வேர், பழங்கள் ஆகியவற்றை) உணவாக உட்கொள்கின்றேன். தவிரவும் யான் கடும்புலிகள் வாழும் மலைகளையே வாசஸ்தலமாகக் கொண்டிருக்கிறேன். ஆதலால் நீ என்னுடன் வருவது உன்னுடைய வாழ்நாட்களெல்லாம் வீண் நாட்களாகிவிடுவது மன்றி, வன விலங்குகளுக்கும் இரையாக நேரிடும்."

பெண்:—"சுவாமி! தாங்கள் எதை உணவாகக் கொள்கிறீர்களோ அதையே நான் உட்கொள்கிறேன். எங்கு தங்குகிறீர்களோ அங்கு நான் தங்குகிறேன். எவ்வித இடையூறுகள்—என் உயிருக்கே ஆபத்து நேரிட்டாலும் நான் தங்களை விட்டுப் பிரியமாட்டேன். தாங்களே எனக்குக் குரு. நான் தங்களின் சிஷ்யை. தங்களின் கட்டளையை நான் சிரமேற் கொண்டு நிறைவேற்றத் தயாராயிருக்கிறேன்."

ஞானி:—"சரி. இச்சிறு வயதிலேயே இவ்விதம் நீ உலக வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளவேண்டியதின் காரணம் யாது? உனக்கு என்ன இடர் நேரிட்டது?"

பெண்:—"ஐயா! எனது தாயார் எனது சிறுவயதிலேயே என்னை விட்டுப் பிரிந்து உயிர் நீத்தாள். எனது தந்தையவர்கள் மறு விவாகஞ் செய்துகொண்டனர். என் சிற்றன்னை எனக்கு இயற்றும் கொடுமைகளை என்னால் சகிக்க முடியவில்லை. நான் ஓர் ஜமீன்தாரின் புதல்வி யெனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், சாதாரணமான வேலைக்காரியைப் பார்க்கிலும் கேவலமாக நடத்தப்படுகிறேன். வெய்யிலென்றும், மழையென்றும் பாராது இரவும் பகலும் அலைந்து திரிந்தேன். இவைகளை யெல்லாம் நான் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தேன். என்றாலும் நாளடைவில் வயிற்றிலும் அடிக்கப்பட்டேன். எனக்கு உணவு சரியாகக் கொடுப்பதில்லை. எமது வீட்டவர் உண்டு எஞ்சிய எச்சிலேயே எனக்குக் கொடுக்கப்பட்டது. அந்தோ! அது என் கால்வயிற்றுக்குக் கூடக் காணாது "அம்மா! இந்த எச்சில் உணவு எனது கால் வயிற்றைக் கூட நிரப்பவில்லையே. இன்னும் கொஞ்சம் உணவு கொடுத்தால் உங்களுக்குக் கோடிப் புண்ணிய முண்டாகும்" என்று நயந்து கேட்டுக்கொள்வேன். உடனே அவள் சர்ப்பம் போன்று சீறி விழுவாள். பல்லை நெற நெற வென்று கடிப்பாள். தலையை விரித்துக்கொண்டு பேயாட்டம் ஆடுவாள். கடைசியில் வெண்சாமரத்தைக் (தும்புக் கட்டை) கொண்டு எனக்கு அபிஷேகம் செய்துவிடுவாள். சுவாமி! அடிமையைப்போன்று நடத்தப்படும் எனக்கு விமோசனமே கிடையாது போலும்! நான் செய்த கர்ம வினைப்பயனால்தான் நான் இவ்வித நிலையை யடைந்து, துன்பம் அனுபவித்து வருகிறேனென்றும், இவர்களிடமிருந்தும் நான் விடுதலைசெய்யப் படவேண்டுமென்றும் சாக்ஷாத் எம்பெருமானிடம் எஞ்ஞான்றும் துதித்து வருகின்றேன். எனது பரிதாபகரமான மன்றாடுதலுக்கு இரங்கித் தங்களை எனக்கு ஒரு வழிகாட்டியாகக் கருணை வள்ளலான கடவுள் இங்கு அனுப்பியுள்ளார். தங்களின் மூலமாகவே யான் விமோசனமடையவேண்டும்!"

ஞானி:—"சரி! உனது எண்ணம் ஈடேறவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். என்னுடன் வந்தே தீரவேண்டுமென்ற ஒரே தீர்மானங் கொண்டுள்ள உன்னை நான் என்னுடன் வரக்கூடாதென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்க விரும்பவில்லை. சாகத்துணிந்தவருக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்தான் என்பதை நீ செயலளவில் நிரூபணப் படுத்திவிட்டாய். ஆதலால் நீ என்னுடன் வரலாம்" என்று கூறினார்.

பின்பு இருவரும் சிறிதுதூரம் நடந்து சென்றதும் இவர்களுக்கு ஓர் மனிதஉருவம் தென்பட்டது. இருவரும் அதன் பக்கலில் சென்றனர். அம்மனிதனின் உயிர் இவ்வுலகினின்றும் சிலவு பெற்றுக்கொண்டு சென்றுவிட்டது. பிரேதத்தைக் கண்ணுற்றதும் ஞானி திடுக்கிட்டார். அம் மனிதனைத்தான் எங்கோ பார்த்ததாகதென்பட்டதெனினும் அவர்யார் என்பதைத் திட்டவட்டமாக கூறமுடியவில்லை. அப்பிரேதத்தின் கையில் ஓர் கைக்குட்டைத்துணி தென் பட்டது. அதைப் பிரித்துப்பார்க்க அதில் "சரோஜினி" என்று ஓர்விதப் பட்டுநூலால் தைக்கப்பட்டிருந்தது. அம் மனிதனின் அங்கியிலும் ஓர் சிறு துண்டுக்கடிதம் காணப்பட்டது. அதையும் நமது துறவி பிரித்துப்பார்த்தார். உடனே அவரதுதலை சுழல ஆரம்பித்தது. மெய் நடுங்கலுற்றது. நிற்கவும் சக்தியில்லை. அடியற்ற விருக்ஷம் போன்று சாய்ந்தார். சற்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்டுள்ள இம்மாறுதலைக் கண்ணுற்றசிறுமி, துறவி கீழே விழுந்துவிடாமல் ஏந்திப் பிடித்துக்கொண்டாள். அவள் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக அத்துறவியின் உடல் காற்றுப்போலிருந்தது. நமது துறவி தன்னுடன் கொணர்ந்திருந்ததோலை சிறுமி பூமியில் விரித்து அதில் அவரை உட்காரவைத்தாள். துறவியின் நெற்றியிலிருந்து வெளிப்படும் வெயர்வைநீரை எவ்விதம் துடைப்பது என்று திகைத்தாள். அவருடன் கொண்டுவந்திருந்த ஓர் சிறு விசிறியினால் வீசினாள். காற்றும் மெதுவாக அடிக்கலாயிற்று. சிறிதுநேரஞ் சென்றதும் ஞானி மூர்ச்சைதெளிந்தார். சிறுமி தன்னை விழாமல் ஏந்தி, தோலைவிரித்து, அதில் அமரச்செய்து, விசிறியினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை மூர்ச்சை தெளிவிக்க முயலுவதையும் கண்டு தன்னுள் மெச்சிக்கொண்டார். அவளுடைய அன்பை உணர்ந்து தம்முள் வியந்தார். மறுநிமிஷம் துக்காதேவியின் வசம் அகப்பட்டுக்கொண்டார். இறந்த மனிதனிடமிருந்து நமது துறவி பெற்றகடிதம், முன்பு நாம் கூறியவண்ணம் சரோஜினி நாடு சுற்றித்திரியப் புறப்படும்போது எழுதியகடிதம் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கடிதத்தை நாம் முன் 5-ம் அத்தியாயத்தில் பிரசுரித்துள்ளோம். அதன்கீழ் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

இந்தக் கடிதத்தைக் கண்ணுறுவோர்
களுக்கு ஓர் விண்ணப்பம்!

மேலே வரைந்திருக்கும் கடிதம் என்னை மணந்து கொண்டபெண்ணால் எழுதப்பட்டது. என்னை மணக்கச் சிறிதும் விரும்பாத அவளை நான் கடிமணஞ் செய்துகொண்டேன். அவளிடம் மூர்க்கத்தனமாய் நடந்து அவளுடைய மனதைப் புண்படுத்தினேன். ஹிம்சித்தேன். கேவலமாக நடத்தினேன். அடிமைபோன்று கொடுமைப் படுத்தினேன். இவைகளை எல்லாம் சகித்துக்கொண்டு "கணவனே கடவுள்" "கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்" என்ற பழமொழிகளைப் பின்பற்றி என்னுடன் வாழ்ந்து வந்தாள். நான் ஓர் தாசியின் நேசத்தால் கெட்டொழிந்துபோனேன். என்னை மணந்த சாந்தசொரூபியாகிய— அருங்குண பூஷணியாகிய சரோஜினி போதித்த புத்திமதிகளை யான் கேட்காமல், தங்க விக்கிரகம் போன்ற சரோஜினியைக் காலால் உதைத்துத் தள்ளினேன். காரி உமிழ்ந்தேன். கொடூரமான வார்த்தைகளினால் அவளைச்சுட்டேன். அந்தோ! இவ்விதமான சங்கடங்களை அனுபவித்துவந்த நல்லாள் என்னிடம் சீற்றங்கொண்டனளா? தன்னுள் கடிந்து கொண்டனளா? இல்லையன்றோ! இப்போது உதித்திருக்கும் இந்த ஞான—புத்தி—சூரியன் அப்போது உதித்திருப்

பின்—அவளுடைய சொற்படி நடந்திருப்பின் எவ்வளவோ மேன்மையாயிருந்திருக்கும். என்னுடைய நிலைமை இவ்வளவு கேவலமாயிருந்திருக்காது. அந்தப் பைங்கொடியாளின் முடிவும் இவ்விதம் நேர்ந்திருக்காது. என்னிடம் அடிமையாயிருந்த அம்மங்கை மேற்காட்டிய கடிதத்தை வரைந்து வைத்துவிட்டு என்னைவிட்டுப் பிரிந்தனள். இச்சீதேவி என்னில்லம் விட்டுச் சென்றுவிடவே மூதேவி இவ்விடம் குடிகொள்ளலானாள். கற்பின் கொழுந்தாலாகிய சரோஜினி தனது கடிதத்தில் குறிப்பிட்டவண்ணம், வெகு சீக்கிரத்திலேயே எனது திரண்ட செல்வங்களெல்லாம் மாயமாய்மறைந்துவிட்டன. இரவும் பகலும் கிருஷ்ணவேணி என்ற பரத்தையின் மோகவலையில் கட்டுண்டு தவித்தேன். இதன் பயனாக நாளடைவில் என்னிடமுள்ள கைப்பொருளெல்லாம் போய் கடனும் வாங்கலானேன். எனது பொருளெல்லாம் வீணாக விரையஞ்செய்யப்படுகின்றதே என்றகவலை எனக்குச் சிறிதும் கிடையாது. அநேக மாதங்கள் சென்றபின் நானும், சரோஜினியின் இன்பவாழ்க்கைக்கு இடையூறுசெய்விக்கவே ஜெனித்த—பிறந்து வளர்ந்த தாசியும் பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றோம். அச்சமயம் சரோஜினியாகிய என் குலதெய்வம் திடீரென என் முன் பிரசன்னமாகி ஏதேதோ இரண்டொரு வார்த்தைகளை மொழிந்துவிட்டு எனது பாதாரவிந்தத்தில் வீழ்ந்தாள். அந்நிமிஷமே அவ்வனிதாரத்தினத்தின் உயிர் தென்றிசைக்கோனால (எமன்) கைப்பற்றப் பட்டது. அச்சமயம் தான் எனக்கு ஞானோதயம் பிறக்கலாயிற்று. பிறந்து என்ன செய்ய? கண் குருடானபின் சூரியநமஸ்காரம் ஏன்? நான் அம்மாதரசியிடம் நடந்துகொண்ட இரக்கமற்ற விதத்தைச் சினிமாப் படம்போன்று என் மனதில் யாரோ காண்பிப்பதுபோல் தோன்றியது. அக்கொடிய செய்கையை இதில் வரைய என் கரம் நடுங்குகிறது. எனதுயிராகிய இன்பக்கிளி மாண்டபின் யான் இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுலகில் சுகத்துடனிருப்பது எங்ஙனம்? என்று சிந்தித்தே இவ்வாறு காடுசுற்றி யலைகிறேன்.

இதிலிருந்தும் என்போன்ற கயவர்கள் ஓர் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். வேசையரின் மோசவலையில் சிக்குண்டு தமது வாழ்நாட்களை வீண்நாட்களாக்கிவிடக் கூடாது. அப்பாவிகளை நாம் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது. அவர்களை நஞ்செனக் கருதி வெறுத்தல் வேண்டும். வேசையரின் மாயவலையில்சிக்குண்டு மயங்குகிறவர்களுக்கு உத்தமிகளைப் போன்ற இல்வாழ்க்கைத் துணைவிகளை—மனைவிகளைப்—பெற யோக்கியதை சற்றும் கிடையாது. என்போன்ற—அவர்களுக்கும் இல்லற தர்மத்திற்கும் வெகுதூரம். பெரியோர்கள், அழகிற் சிறந்த அணங்குகளை என்போன்ற கயவர்களுக்கு மணம் செய்வித்து அக் கன்னிகைகளின் இன்ப வாழ்க்கையைப் பாழாக்கிவிடுகின்றனர். சற்றும் முன்பின் யோசியாது பணத்தையே பெரிதெனக் கொண்டு திரியும் பெரியவர்களாகிய ஆஷாடபூதிகளுக்குக் கன்னிகைகளின் வாழ்க்கையில் குறுக்கிட்டு அவர்களைத் தம்முடைய மனம்போல் நடக்கும்படி, அதாவது தாம் நியமிக்கும் மணாளனை (அவன் குஷ்டரோகம் முதலிய கொடிய வியாதிகளை யுடையவனாயினும்) மணந்துகொள்ளும்படி வற்புறுத்தச் சிறிதும் பாத்தியதை கிடையாது. அநேகம் கன்னிகள் இவ்வித மூடர்களின் வாக்கைத் தேவவாக்காக மதித்து, அதன்படி நடந்து தமது வாழ்க்கையைப் பாழ்படுத்துவது மிகவும் வருந்தத் தக்கது. தம்முடைய எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து அதன்படி நடக்கப் பெண்மகளிற்கு பூர்ண சுதந்திரமுண்டு. தம்முடைய பெற்றோரின் மனம்போல நடந்துதான் தீரவேண்டுமென்பது சித்தாந்தமல்ல. தம்முடைய வாழ்க்கையில் பற்பல இடையூறுகளும், கஷ்ட நஷ்டங்களும் நேரிடின் அதை அனுபவிக்க வேண்டியவர்கள் தாங்கள் தானே தவிர தம்பெற்றோர்க

ளல்ல என்பதைப் பெண்மக்கள் ஒவ்வொருவரும் முக்கிய மாகக் குறித்துக்கொள்ள வேண்டும். பெண்மக்களின் முயற்சியினுலேயே நம் சமூகம் முன்னேற்றமடைய வேண் டியதிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நான் முக்கியமாக கரடி, புலி, யானை முதலிய மிருகங் கள் சஞ்சரிக்கின்ற வனங்களிலேயே சுற்றித்திரிவேன். ஆத லால் என்னை யாதாவதொரு மிருகம் கொன்றுவிடில், எனது பிரேதத்தைக் காண்பவர்கள் என்னைத் தகனஞ் செய்ய வேண்டாம். முற்றத் துறந்த ஞானி ஒருவரால் (அவர் பெண்மக்களிடம் இன்பம் நுகராதிருப்பின் நலம்) கங்கா ஸ்நானம் செய்விக்கப் பட்டபின், என்னை மலையடிவாரத்திற் கொண்டுபோய்ப் போட்டுவிடவேண்டியது. இப்பூமியில் யான் ஜெனித்தது முதல் இன்றுவரை ஒரு பிராணிக்கும் என்னுல் உதவி—பிரயோஜனம் ஏற்பட்டிருக்கமாட்டாது. ஆதலின் இக்கானகத்தில் வாழ்ந்துவரும் விலங்கினங்களுக் காகிலும் என் உடல் உணவாகப் பிரயோஜனப்படவேண் டும். இந்த உதவியைச் செய்பவருக்கு எனது வந்தனம் உரித்தாகுக.

இங்ஙனம்

சரோஜினியின் வாழ்க்கைக் கூற்றுவன்,

"மதனகோபாலன்"

இவ்வாறு சரோஜினி முன் எழுதியிருந்த கடிதத்தின் கீழ் மதனகோபாலனுல் வரையப்பட்டிருந்தது. பாவம்! உலக இன்பம் சிறிதும் நுகராமல் மரித்த சரோஜினியின் துர் அதிர்ஷ்டம் என்னே! இந்நூற்றுண்டிலும் பால்ய விவா கம் குறைந்தபாடா யில்லை. பால்ய விவாகத்தில் ஈடுபட்ட அநேகம் பெண்கள் பற்பல துக்கங்களுக்கும் இலக்காகி, குடும்ப பாரம் ஏற்று, அங்கஹீனமாகிக் கெட்டொழிந்து போகின்றனர். பால்ய விவாகத்தின் பயனுக அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர்களுக்குத் தென்றிசைக்கோன் வெகு விரைவில் முடிவு கொண்டுவந்துவிடுவானென்றும் தக்க வயது வந்தபின் மணம் முடித்துக்கொண்டால் அவர்களின் கணவர்களுக்கு ஈசன் நீண்டநாள் உயிருடன் இருக்க வரமளித்து விடுகிறுனென்றும் நாம் கூறவில்லை. ஆனால் சிறு வயதிலேயே அவர்களுக்கு நாம் தாங்கவியலாத பாரத்தை அளிக்கக் கூடாதென்றும், உலக வாழ்க்கை என்பது யாது? மணம் என்பது யாது? கணவன் என்பவன் யார்? தமது கடமை யாது? என்பவைகளை சிறிதும் உணருவதின் முன்பே நாம் அவர்களுக்கு மேற்படி கடமைகளை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாதென்பதே எமது அபிப்பிராயம். அறுபது வயதுசென்ற கிழவர்களுக்கு இப்போது 14 வயது கூட நிரம்பாத ஓர் பெண் மகளை விவாகம் செய்விக்கப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறேமன்றே? ஆம். (மணமகனுகிய 60 வயதான வரை "நாதா" என்றழைப்பதா? அல்லது "தாத்தா"= "பாட்டா" என்றழைப்பதா என்ற கேள்வியே முதலாவது மணமகளின் மனதில் எழும். அதற்கு விடை நாமே தீர் மானித்துக் கொள்ளவேண்டியதுதான்.) இவ்விதக் கிழவரை மணந்தவளுக்கு என்ன உற்சாகம் உண்டாகக்கூடும்? உலக இன்பத்தைக் கிழட்டு மாப்பிள்ளையின் மூலமாக அனுபவிக்க முடியுமா? இரண்டொரு வருடத்தில் அவர் இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டால் அம்மாதின் எதிர்காலம் எவ்வளவு மோசகரமானது? உடலற்ற காமன் தனது அம்பு ராசிகளை எவர்மீது தான் பிரயோகிக்காமல் விட்டுவிடுவான்? எவர் தான் அவனிடத்து அகப்படாது தப்பித்துக்கொள்ள முடியும்? முடியாதன்றே! அவன் வயப்பட்ட நாம் முன் குறிப்பிட்ட 14 வயதுள்ள சிறு மங்கை தனது கிழட்டு மணாளன் இருந்தாலும் சரி, அல்லது இறந்தாலும் சரி. அவள் அந்நிய புருடனை—வாலிபனை இச்சிக்காம லிருக்கமுடியாது. அவ்விதமாயின் அவள் அவ்வாலிபனை நேசித்ததின் விளைவாக ஓர் மகவு அவளுடைய வயிற்றில் ஜெனித்துவிடின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எவ்வித நிலைமையை யடைவாள்? உலகம் முழுவதும் பரிகசிக்குமன்றோ? (ஆனால் அவளுடைய பரிதாபகரமான மண வைபவத்தையும் இதுகாலை நேர்ந்துள்ள நிகழ்ச்சியையும் கண்டு வருந்துபவர் ஒரு சிலரே யாவர்.) உலகம் முழுவதும் சிரிக்க, ஓர் மகவை ஈன்று தனக்குத் தற்போது கணவனாக வந்துள்ளவனுடன் வாழ அவள் தீர்மானித்துவிடுவாளா? (இதற்கிடையில் இவளுடன் நட்புக் கொண்டவன் இவளை ஏற்காவிடிலோ.........) அவ்விதமும் தீர்மானிக்க மாட்டாள். "மானமழிந்தபின் வாழாமை முன்னினதே" என்ற பழமொழியைப் பின்பற்றி அவள் தற்கொலை புரிந்துவிடுவாளன்றோ! ஆஹா! ஒருயிருடன் பிறிதொரு உயிருமன்றோ போய்விடுகிறது!

கிழவனுக்குச் சிறுமியை மணமுடித்ததால், அவளுடைய இன்ப வாழ்க்கையும் கெட்டு, காமன் அம்புசாசிகளுக்காற்றாது பிற வாலிப னொருவனுடன் கள்ள நட்புக்கொண்டு, அதன் பலனாக ஓர் மகவையும் வயிற்றில் உற்பவிக்கச் செய்து, இதையறிந்த உலக ஜனங்கள் பரிகசித்துக் காரி உமிழ, இந்த அவமானத்தைப் பொறுக்கமுடியாது தற்கொலை புரிவதுடனும் நில்லாது, அப்பெண்ணால் அவள் பிறந்த இல்லத்திற்கும், புகுந்த இல்லத்திற்கும் நீக்கமுடியாத வசை ஏற்பட்டுவிடுகிறது. அந்தோ! இவ்விதம் நிகழும் என்று அப்பெண் முதலாவது கிஞ்சிற்றும் எண்ணியிருக்க மாட்டாள். தான் தனக்குக்கணவராக நியமிக்கப்படுபவருடன் இன்பமாக காலங்கழிக்க வேண்டுமென்று ஆனந்தக் கோட்டை கட்டியிருப்பாள். பலவகையிலும், தனது பிராணபதியை திருப்தி செய்யவேண்டுமென்று மனப்பால் குடித்திருப்பாள். எல்லாவற்றிற்கும் கூற்றுவனாகக் கிழவன் அவளுக்கு மணாளனாக வந்துவிடுகிறான். அன்றே அவளது வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளிபோட்டுவிட வேண்டியதுதான். அப்பெண்ணின் தாய் தந்தையரை இது விஷயமாக வினவினால் "ஏதோ அவளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய விதி அவ்வளவுதான். அவள் என்னபாவம் செய்தனளோ! விதி யாரை விட்டது? இவ்விதம் நேரிடுமென்று யார் தான் எதிர் பார்ப்பார்கள். எல்லாம் அவன் செயல். நம்மால் ஒன்றும் செய்யமுடியாது" என்று கண்ணீர் வடித்தவாறே கூறிவிடுவார்கள். "விதி! விதி!" என்று கல்லில் முட்டிக் கொண்டால் அதன் பயன் யாது நேரிடும்? பணம் ஏராளமாயிருக்கிறது என்றுதான் குழந்தையை—பெண்ணைக் கொடுத்தார்கள். அதனால் அப்பெண் திருப்தியடைந்து விடுவாளா? ஒருவனுடைய வாழ்க்கைக்கு ஏராளமான செல்வம் தான் அவசியம் போலும்? அதனால் அவள் சகல இன்பத்தையும் அனுபவித்து விடலாம்போலும்? இவ்விதக் குருட்டு நம்பிக்கையைக் கொண்டே நமது கற்பரசி சரோஜினியின் தாய் தந்தையர் அவளை மதனகோபாலனுக்கு மணமுடித்து வைத்தனர். லெக்ஷாதிபதியாகிய மதனகோபாலன் வேசையரின் மோசவலையில் சிக்குண்டும் பற்பலவிதமான நோய்களுக்கும் ஆளாகி, லாகிரி, மதுபானம், வஸ்துக்களை அருந்துபவனாய் இருப்பினும் சரோஜினியை மணந்தால் நல்ல நடத்தைக்கு வந்துவிடுவானென்பதே அவர்களது அபிப்பிராயம். துர் அதிர்ஷ்டவசமாக எழுந்த இவ்வபிப்பிராயம் சரோஜினியின் வாழ்க்கைக்கு இறுதியை—சமாதியை நியமித்துவிட்டது. இனி நாம் கதையை ஆராய்வோம்.

"ஹா! ஈசா! நான் எதிர் பார்த்ததற்கு முற்றிலும் நேர்விரோதமாக வன்றோ யாவும் நடைபெற்றுவிட்டன. எனது சகோதரி சரோஜினி காடு சுற்றித்திரிகிருள், சகலத்தையும் வெறுத்துத் துறவிபோலானுள் என்பதை நான் இராமேஸ்வரத்திலுள்ள ஆலயத்தின் கண் அவளைக் கண்டதும் அறிந்துகொண்டேன். அவளுடைய மன வைராக்கியத்தை நான் என்னென்பது? எனது வாக்கைத் தெய்வ வாக்கென மதித்து நான் கூறியவண்ணம் ஓர் ஆடவனை மணந்து அவருடன் இல்லறத்தை நடத்த எவ்வளவோ

முயன்றும் பயன்படாமல் போயிருக்கிறது என்பதை அவ ளுடைய கடிதத்தின் மூலம் யான் தெரிந்துகொண்டேன். துர் அதிர்ஷ்டவசமாக அவள் மனதிற்குகந்த மணாளன் அகப்படாமல் அவளுடைய இன்பவாழ்க்கை யெல்லாம் துன்பவாழ்க்கை யாகிவிட்டது. என் செய்வது? அதுவும் உன் செயலே யன்றி வேறல்ல. காமன் என்னும் அரக்கன், சரோஜினியின் கணவரை நீதிநெறி தவறி நடக்கும்படி செய்துவிட்டான். பாவியாகிய என்னால் ஒன்றிரண்டு பேருக்கல்ல நாலைந்து பேருக்கு இடையூறு சம்பவித்து விட்டது. சரோஜினியின் தாய் தந்தையர் எவ்வாறு வருந்துகின்றனரோ! இதற்கெல்லாம நானன்றோ காரணஸ் தன்? இல்லை. இல்லை. நீதான் ஜவாப்தாரி. ஒருவனை நல் வழிப்படுத்தவோ, அன்றி கெடுக்கவோ உன்னால்தான் ஆகும். அங்ஙனமிருக்க சரோஜினியின் கணவரை நீ ஏன் நல்வழியில் நடத்தி யிருக்கக்கூடாது? சர்வலோக சரண்யா! அவள் இறக்குந்தறுவாயில் என்னை எவ்வாறு நினைத் தனளோ! "நீ எனக்குத் தஞ்சமென்றடைந்த ஓர் பெண்ணை ஏற்றுக்கொண்டு, பின் அகாரணமாய் அவளைக் கைவிட்டு விட்டு அவளைக்கெடுத்த பாவி!" என்று இகழ்ந்திருப்பாளோ! "எனது வாழ்க்கையைப் பாழ்ப்படுத்திய உன்னைத் தெய்வம் தண்டிக்காமல் விட்டுவிட மாட்டாது" என்று அம்மாதரசி சபித்திருப்பாளோ! தன்னால் ஒருவருக்கும்—அருகம்புல் லுக்கும் கூட யாதொரு கெடுதலும்—இடைஞ்சலும் உண் டாகக் கூடாதென்ற ஒரே தீர்மானங்கொண்டுள்ள அப் பெண்கள் நாயகத்தின் இயற்கையான குணத்தை நான் நன்ருய் அறிந்திருக்கிறேன் அன்றோ? அவள் என்னைச் சிறிது கூடக் கண்டித்திருக்க மாட்டாள். தன்னால் ஒருவரின் வாழ்க்கை கெடுக்கப்பட்டுவிட்டது என்றும், அவருக்கு நல்ல குணமுடைய—நல்லொழுக்கமுடைய இல்வாழ்க்கைத் துணைவி கிடைக்கவேண்டுமென்றும் ஜெகதீசனாகிய உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிடம் கேட்டிருப்பாள். "என்னுல் ஒரு சுந்தர வாலிபரும் சகலத்தையும் துறந்து சந்நியாசியாகிவிட்டார். அவருடைய பெற்றேர்களும் உற்ருர் உறவினரும் எவ்விதம் கவலை கொண்டிருந்தார்களோ—கொண்டிருக்கிருர்களோ என்பதை யறிய எனது மனம் திடீரென வெடிக்கிறது. இப் பாவங்களை யெல்லாம் போக்க யான் விசேஷ ஸ்தலங்களைச் சுற்றிப் பார்க்கப் பிரயாணமாகிவிட்டேன்" என்று அவள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதினின்றும் உண்மை தெளிவாகிறது. நான் அவளைச் சகோதரி என்றெண்ணும் படியாகச் செய்த நீர், அவளையும் என்னைச் சகோதரன் என் றெண்ணும்படி செய்துவிடக்கூடாதா? எல்லாம் உன் திரு விளையாடலே!

எனது வாழ்க்கைச் சரிதை அதிருசிகரமானது. ஏழைக் குடும்பதில் பிறந்த நான் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றேன். கலைமகளும் என்மீது அன்புகூர்ந்து எனக்கு சகல கலைகளையும் கற்பித்தாள். ஆரம்பத்தில் நாவல்களையும் பத்திரிகைகளையும் வெகு அன்பாகப் பார்வையிட்டுவந்தேன். ஒருவனுக்கு இவ்வுலக வாழ்வில் ஏற்படக்கூடிய கஷ்டங் களை யெல்லாம் நாவலின் மூலமாக அறிந்த நான் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளலானேன். இல்வாழ்க்கை என்பதை எனது அகராதியில் கல்வாழ்க்கை என்று பதித் துக் கொண்டேன். பகவத்கீதை, இராமாயணம், போன்ற ஆதி நூல்களையும், திருவள்ளுவர், பட்டினத்தார் போன்ற வர்கள் பாடிய நீதிநெறிகளையும், விவேகானந்தரைப் பற்றிய செய்திகளையும் கற்றுவரலானேன். மெய்ஞானத்தையடைய நான் பிரயாசைப்பட்டு வருங்காலையில், "வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்ததைப் போன்று" எனது வாழ்க்கையில் சரோஜினி குறுக்கிட்டாள். துறவு பூண்டு வாழ்வதே எனக்கு இன்பவாழ்க்கை என்ற திடமான எண்ணங்கொண்டு—விரதம் பூண்டு அவ்விதமே நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த என்னை—என் மனதைத் திருப்பிவிட்டாள். "இல்லற மல்லது நல்லறமன்று" என்ற பழமொழியை எனது மனதில் ஆழப் பதியும்படி செய்துவிட்டாள். அன்பு என்ற கவசத்தால் என்னைப் போர்த்துக் கொண்டாள். காதல் என்னும் அபூர்வசக்தியைப் பிறப்பிக்க முயன்றாள். எனது மனதை முற்றிலும் புது மாதிரியாக மாற்றிவிட்டாள். ஒரு நாளும் அனுபவித்தறியாத ஓர் தெய்வீக உணர்ச்சியை என் மீது பிரயோகித்து என் சித்தத்தைக் கலக்கிவிட்டாள் அவளுடன் சேர்ந்து ஓர் வாழ்க்கையை நடத்த வேண்டு மென்று என்னை யறியாமலே என்னுள் கற்பித்தாள். நானும் அவளை என் உயிரைப்போன்று நேசித்தேன். அவளுடைய மனம்போல நடக்கலானேன். அவளுடன் சம்பாஷித்துக்கொண்டே யிருக்கவேண்டுமென்ற ஆவல் என்னை வாட்டியது. இவ்விதமிருக்கும் காலையில் தான் ஒருநாள் அவள் என்னிடம் வந்து, தன்னை வேறொருவனுக்கு மணம் செய்விக்கத் தனது பெற்றோர் நிச்சயித்திருப்பதாக சரோஜினி என்னிடம் கூறினாள். அந்நிஷமே எனது மனம் முற்றிலும் மாறியது. நான் ஏற்கனவே கைவிட்ட துறவற வாழ்க்கை எனது அகக்கண்ணில் தோன்றி என்னை மகிழ்வித்தது. பல்லாண்டாகத் தனது மைந்தனைவிட்டுப் பிரிந்த தாய் மீண்டும் அவனைக்காணும்போது எவ்வளவு ஆனந்தமடைவாளோ அவ்வளவு நானும் அனுபவித்தேன். நிலையில்லா உடல் இன்பம் எனக்கு மன அதிருப்தியை அளித்தது. அதுகாலை நான் ஏதேதோகூறி அவளை விட்டகன்றேன். என்னை விட்டுப் பிரிந்த சரோஜினி பலவிதக் கஷ்டநஷ்டங்களை அனுபவித்திருக்கிறாள். எனது ஒரு வேண்டுகோளை நிறைவேற்ற அரும்பாடு பட்டிருக்கிறாள். ஏன்? தனது உயிரையே தியாகஞ் செய்துவிட்டாளன்றோ? தான் முழு மனதுடன் நேசித்த வாலிபன் தன்னை மணக்க மறுத்ததும் அம்மாது சிரோன்மணி உயிரை மாய்த்துக்கொள்ள எத்த

னித்தாளெனினும், அவனுடைய சொற்படி பிறிதொருவனை மணந்து தனது வாழ்க்கையில் மண்ணையள்ளிப் போட்ட செய்கை எவ்வளவு மேன்மையானது? உத்தம ஜாதிப் பெண்ணென்றால் அவளன்றோ! அவளல்லவோ கற்பரசி! "ஒருவன் இவ்வுலகில் செய்யவேண்டிய கருமங்கள் முடிந்தவுடன் அவன்—அவ்வாத்மா நிலையில்லா உடலை விட்டுப் பிரிந்துவிடுகிறது. அதன்பின், நாம் கந்தையான துணிகளைக் கழித்துவிட்டுப் புதிதாயுமழகாயுமிருக்கிற வஸ்திரங்களை உடுத்திக்கொள்பவர்களைப் போல் தர்மமான யுத்தத்தில் சரீரத்தை விடுபவர்கள் விடப்பட்ட சரீரங்களைக் காட்டிலும் மிகவும் அழகான சரீரங்களை யடைவார்கள் என்பது சாஸ்திரத்தால் அறியப்படுகின்றது" என்று "பகவத்கீதை" யில் படித்தது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. கணவர் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவதென்பது பெண்மக்களின் கடமையன்றோ? அதைப்போன்று சரோஜினி என்ற அப்பழுக்கற்ற புனிதவதி தன் மனதில் கணவர் என்று நியமித்துக்கொண்ட ஓர் வாலிபன் கூறிய மொழியை நிறைவேற்றத் தனது உயிரையும் தத்தம் செய்தனளன்றோ? ஆம். இதுவும் தர்ம யுத்தத்திற்குச் சமமாக ஒப்பிடலாமன்றோ? ஆம். ஆயின் சரோஜினியின் முடிவு மேன்மையானதன்றோ! ஈசா! ஜெகதீசா! சர்வேசா! சர்வலோகசரண்யா! ஆபத்பாந்தவா! அனுதரக்ஷகா! நினது திருவிளையாடலைச் சிறியேனாகிய என்னால் செப்ப முடியாது. நீ எவ்வித ஆக்கினைகளைச் செய்யினும் நான் அனுபவிக்கிறேன். உனது லீலா விநோதங்களை நான் கண்டு ஆனந்தித்த வண்ணமாயிருக்கிறேன். என்னை ரக்ஷிக்கவேண்டும்! என்னப்பனே!" என்று பற்பலவாறாகத் தன்னுள் எண்ணமிட்டவாறு நமது துறவி தன்னுடன் கொணர்ந்திருந்த ஜலத்தினால் அவரைத் (மதனகோபாலனை) தெளித்து அங்கு பக்கத்திலுள்ள மலையடிவாரத்தில் கிடத்தினர். அவனுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவ விமோசன மளிக்கும்படியாகச் சாக்ஷாத் யெம்பெருமானிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்ணுற்ற சிறுமி திகைத்தாள். அவளுக்கு உண்மை யாதென்பதை யறியும் சக்தி சிறிதுகூடக் கிடையாதென்றாலும், இம்மனிதனுக்கும் ஞானிக்கும் ஏதோ சம்மந்த மிருக்கக் கூடுமென்றும், அம் மனிதனின் பிரிவைப்பற்றிச் சிறிது வருந்துகிறாரென்றும் ஓர் முடிவுக்கு வரலானாள். பின் இருவரும் அம்மலையடிவாரத்தினின்றும் பிரயாணமாகிக் காட்டு மார்க்கமாக நடந்து செல்லலாயினர்.

மனோஹரபுரம்.

சிங்கவனம் என்றோர் வனமிருக்கிறது. அதைக் கொடிய வன மிருகங்களே தமது வாசஸ்தலமாகக் கொண்டிருந்தன. எங்கு நோக்கினும் பயங்கரமான மிருகங்களின் கர்ஜனையே எழும். பிரதானமான ஓர் நகரில் திருவிழாக் காலங்களில் ஜனங்கள் நடமாடுவதைப் போன்று அவ்வனத்திலும் மிருகங்கள் கூட்டம் கூட்டமாக அலைந்து திரிகின்றன. அவைகளைக் கண்டவுடன் ஒருவனுடைய உயிர் பாதிக்குமேல் பிரிந்துவிடும் என்பது நிச்சயம். அவைகளின் பார்வையைக் காணவும் குடல் நடுங்கிவிடும். என்றாலும் அவைகளின் இயற்கைக் குணங்கள் அவைகளிடம் சிறிதும் கூடக் காண்பதரிது. அவைகளிடம் மேன்மையானகுணங்கள் அமைந்திருக்கின்றன. சாந்தம், பொறுமை, மகிழ்ச்சி, ஒற்றுமை சுறுசுறுப்புப் போன்ற குண விசேஷங்கள் அவைகளிடமே குடிகொண்டிருந்தன. எவ்வித அற்ப காரணங்களைக் கொண்டும் அவைகளில் ஒன்றுக்கொன்று பிணங்கிக் கொள்வது கிடையாது. எங்கு சென்றாலும் ஒன்றுபோலவே செல்லும். வழியில் யாரையாவது ஓர் மனிதனைக் கண்டால் பயங்கரமான கர்ஜனையோடு அவன் பக்கலில் ஒரே பாய்ச்சலில் வந்து சேர்ந்துவிடும். சந்தோஷ மிகுதியினால் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ஜித்தாலும் அம்மனிதனுக்கு இவ்வுண்மை தெரியாமல் தன்னைக் கொல்வதற்காகவே பாய்கிறது என்று எண்ணிப் பதறுவான். அலறுவான். ஆனால் அவன் பக்கலில் வந்து சேர்ந்த அம்மிருகம் அவனுடைய கால்களில் விழுந்து பணியும். ஆனந்த மிகுதியினால் அவனைச் சுற்றிச் சுற்றி வந்து விளையாடும். சிறு குட்டி முதல் அதாவது பிறந்ததுமுதல் ஓர் ஆடவனால் பழக்கி வளர்க்கப்பட்ட மிருகமும்கூட இவ்விதம் பணிந்து நடக்குமோ வென்பது சந்தேகமேயாகும். அம்மிருகங்கள் பயங்கரமானவைகளாகத் தென்பட்டபோதிலும் அவை மிகவும் சாதுவானவை என்ற முடிவுக்கு அம்மனிதன் வரப் பலமணி நேரங்கள் சென்றுவிடும். பின் அவன் அம்மிருகத்தைத் தடவிக் கொடுத்துவிட்டு சந்தோஷத்துடனும் ஆச்சரியத்துடனும் சென்றுவிடுவான்.

இவ்விதமான அதி யற்புத மிருகங்கள் வாழும் சிங்க வனத்தில் ஓர் பெரிய மலை யுண்டு. அதன் பக்கலின் வழியாக ஒரு ஆறு இருக்கிறது. தெள்ளிய நீர் எப்போதும் ஓடிக்கொண்டே யிருக்கும். சிறு சிறு மீன்கள் துள்ளி விளையாடுவது மின்னல் மின்னுவதைப் போன்று தோன்றும். சூரிய வெளிச்சம் சந்திர வெளிச்சம் அவ்வாற்று ஜலத்தில் பட்ட மாத்திரத்தில் அந்நீர் பளிங்கைப் போன்று காக்ஷியளிக்கும். அவ்வாற்றின் இயற்கை வனப்பைக் கண்ணுறுவோர் தாங்கள் என்றும் கண்டறியாத ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே அநுபவிப்பர். இந்நதியோரத்தில் "மனோஹரபுரம்" என்ற ஓர் சிறு கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தைச் சுற்றி நாற்புறமும் சுமார் ஒரு மைல் தூரத்திற்குள் எப்போதும் சிலர் சுற்றிவந்த வண்ணமாயிருப்பர். அவர்கள் இரவும் பகலும் அலைந்து திரிந்து கொண்டே யிருப்பர். அவ்வனத்தில் அந்நியர் எவரேனும் பிரவேசித்தால் அவர்களைப் பிடித்துக்கொண்டு அவ்வூர் இளவரசரிடம் ஒப்புவிக்க வேண்டியதே அவர்களின் தொழில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன் குறிப்பிட்ட மிருகஜாதிகளின் கூட்டங்களைக் கண்ணுற்றதும் "தலை பிழைத்ததே தம்பிரான் செயல்" என்று தங்களின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு வாயுவேகம் மனோவேகம் பின்னிடத்தக்க விதமாக ஒரே ஓட்டமாக ஓடித் தப்பிவிடுவார்களே யன்றி அம்மிருகங்களின் பக்கலில் செல்வது அரிது. இவ்விதமிருக்க—கொடிய பயங்கரமான விலங்கினங்கள் எனத் தோன்றும் மிருகங்கள் வாழும் காட்டில் எவர்தான் மனத்துணிவுடன் செல்வர்? தான் சாக யாராவது மருந்துண்ணுவார்களா? இவ்வனத்திற்குள் அந்நியர் எவரும் பிரவேசிக்க மாட்டார்கள் என்பதைத் திட்டமாக அறிந்திருந்தும் பிரஸ்தாப நண்பர்கள், யாரேனும் பிரவேசிக்கின்றனரா என்பதை வெகு கவனத்துடன் ஆராய்ந்து பார்த்து வருகின்றனர். யாவரேனும் பிரவேசித்துவிடில் நாம் முன் குறிப்பிட்ட வண்ணம் அந்நபரைப் பிடித்து இளவரசரிடம் அழைத்துச் செல்வர். அதுகாலை அந்நபருக்கு முகமூடி அணிவிக்கப்படும். இளவரசரின் மாளிகையை யடைந்ததும் முகமூடி அகற்றப்பட்டு ஆஜர் செய்யப் படுவான். அதுகாலை இளவரசர் அந்நபரிடம் சில முக்கியமான கேள்விகளைக் கேட்டுவிட்டு, அவரைத் தமது மாளிகையிலேயே சில தினங்கள் தங்கும்படி செய்து அந்நபரின் குண விசேஷங்களை வெகு நுணுக்கமாய் ஆராய்ந்தறிந்து கொள்வார். அந்நபரின் இயற்கையான நடையுடை பாவனைகளையும், குண விசேஷத்தையும் கண்டபின்,—அவர் இளவரசரின் மனதிற்கு நல்லவராகத் தென்பட்டால் அவ்வந்நியருக்கு மனோஹரபுரத்தில் வசிக்க இடமளிப்பார். இதற்கு மாறாக அந்நபர் துர்க்குணங்களையும், கெட்ட நடத்தைகளையும் கொண்டவனாக இருப்பின் அவனை அக்கிராமத்தினின்றும் வெளியேற்றி விடுவர். இவ்விதமாக இளவரசரின் மேன்மையான குணங்களையொத்த நூற்றுக் கணக்கானவர்களைச் சேர்த்து, இளவரசர் அம்மலையடிவாரத்தில் பிறருக்கு எளிதில் தெரியா வண்ணம் மனோஹரபுரம் என்ற கிராமத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துள்ளார். ஆஹா! எவ்வளவு மேன்மையான நடத்தை இது! தன்னைப்போன்றே தனது குடி ஜனங்களும் இருக்கவேண்டும் என்ற ஒரே தீர்மானங்கொண்டு நடந்து வருவது போற்றத்தக்கது.

மனோஹரபுரத்தின் வீதிகளின் இருமருங்கிலும் விருக்ஷங்கள் வளர்ந்து காக்ஷியளித்து கரிய நிழலைக் கொடுத்தன. அங்கு அமைக்கப்பட்டிருந்த வீடுகளில் முன்னால் சிறிய நந்தவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்நந்தவனத்தில் பற்பலவிதமான பூஞ்செடிகள் வைக்கப்பட்டு அழகுபடுத்திக் கொண்டிருந்தன. வீண் ஆடம்பரமின்றி சுகாதார விதிகளுடன் அவ்வீடுகள் கட்டப்பட்டிருந்தன. இளந்தென்றல், பளிங்குபோன்ற சுத்தஜலம், நானாவிதப் புஷ்பங்கள், பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற புல்தரைகள், நல்ல ஜாதிகனிவகைகள் தென்பட்டு ஜனங்களை ஆனந்திக்கச் செய்கின்றன. காலையிலும், மாலையிலும் கழுத்தில் மணிகளும், காலில் சதங்கைகளும் கட்டியுள்ள பசுமாடுகள் கலகலவென்று நடந்து லக்ஷிமியின் கூட்டம்போல, ஒய்யாரநடையும், இனிய ஒலியும் மக்களின் மனத்தைப் பரவசமுறச் செய்யும் வண்ணம் செல்கின்றன. பந்தாட்டமைதானங்களும், மாடுகள் மேய்வதற்கென்று புல்தோட்டங்களும், பெண்மக்கள் பொழுது போக்குவதற்கும் உல்லாசமாக ஆடிப் பாடி விளையாடுவதற்கும் காற்றோட்டமுள்ள இடங்களில் பூந்தோட்டங்களும் அழகாக அமைக்கப் பட்டிருந்தன. நாம் முன் குறிப்பிட்ட நதிக் கரைகளிலும் உல்லாசமாக வீற்றிருப்பதற்கும் சுத்தமான குளிர்ந்த காற்று வாங்கிக் கொள்ளவும் சாய்மான நாற்காலிகள் பதிப்பிக்கப்பட்டிருந்தன. ஆற்று நீரோடும்போது ஏற்படும் இனிய ஒலியும், மரங்கள் ஜனங்களை வரவேற்பதைப் போன்று தனது கிளைகளை அசைப்பதும், கண்ட எவர்தான் அந்நதிக்கரைக்குச் செல்லார்? ஆண் பெண் இருபாலாரும் குழந்தைகளும் அங்கு அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் செல்வது ஆச்சரியப்படத் தக்கதல்ல. இயற்கை யன்னை அக்கிராமத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்தாள். அங்கு குடியேறிஇருக்கும் ஜனங்களுக்கு சகல தொழிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆகாரத்திற்கு வேண்டிய உணவும், உடுக்க உடையும் மற்றும் மனிதவர்க்கத்திற்கும், பிற உயிர்ப்பிராணிகளுக்கும் இன்றியமையாத பொருட்களும் அக்கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. எவ்வித அற்ப பொருட்களுக்கும் கூட அடுத்த கிராமங்களை எதிர்பார்க்க வேண்டியதில்லை. பிற நாட்டவர்களைப்போன்று மோட்டார் எமன்களையும் (துவிச்சக்கர வண்டி) சைக்கிளையும் பாவிப்பதில்லை. அவசரமாக அவ்வனத்தில் எங்கேனும் செல்லவேண்டியதிருப்பின் வில்வண்டியிலேயே செல்வர். அவ்வண்டிகளில் பூட்டப்பட்டிருக்கும் இரு (காளை) மாடுகள் வெகு கெம்பீரமானவைகளாயிருக்கும். அவை நடந்து செல்லுகையில் அவைகளின் கழுத்திலும் கொம்பிலும் கட்டப் பட்டிருந்த மணிகள் சப்திக்கும். அதன் ஓசை அதில் பிரயாணம் செய்பவரை உற்சாகப்படுத்தும். இக்கிராமத்தை சற்றேறக்குறைய 16 வயதுள்ள "மனோஹரன்" என்ற சிறுவனே அரசாண்டு வந்தான். குரூர குணமும், பேராசையும், அவநம்பிக்கையும் அக்கிராமத்தில் மருந்துக்கும் கூட கிடைப்பது—காண்பது அரிது. பணம் என்ற கொடிய பேயை சிறிதும் அவர்கள் விரும்புவதில்லை. எல்லாம் தானியவகைகளையே ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வர்.

இவ்விதமாகவுள்ள நவீனகிராமத்தில் எங்குநோக்கினும் லெக்ஷ்மீகரம் தென்பட்டது. அவ்வூர் ஜனங்கள் அங்கு நடைபெறும் சில்லரை சிலவுகளுக்காக சிறிது தானியவகைகளையே வரியாக செலுத்தி வருகின்றனர். அச்சிறுவன்—இளவரசன் அக்கிராமத்தை நீதிமுறை வழுவாது பொது ஜனங்களுக்கு கட்டுப்பட்டு நடத்திவந்தான். எப்பொழுதும் பொதுஜனங்களின் சுகதுக்கங்களைப்பற்றிய சிந்தனையாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பட்டான். கஷ்டம், வறுமை, பிணி, கொடுமை என்பதை சிறிதும் கூட அனுபவியாத அக்கிராம ஜனங்கள், தம்மை ஆண்டுவரும் சிறுவனை ஓர் குலதெய்வம்போன்று எண்ணி, அவன் என்றும் சிரஞ்சீவியாக வாழவேண்டுமென்றும், தாம் அவனது ஆட்சியில் யாதொருகுறைவுமின்றி வாழ்ந்துவர வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனிடம் சதா மன்றாடிக் கேட்டுக்கொண்ட வண்ணமாயிருப்பர். அக்குடிமக்கள் அன்பு, ஒற்றுமை, சாந்தம், தூயமனசாக்ஷிஎன்ற உயரிய குணங்கள் படைத்தவர்களாகவும், சுதந்தர வீரர்களாகவும் வாழ்ந்து வரலாயினர். பொது ஜனங்களுக்கு ஏதேனும் குறைகளிருப்பின் அவர்கள் அரசிளங் குமாரனை நேரில்சென்று தங்களின் குறைகளை வெளியிடலாம். அதற்கு யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தில்லை. எவருடைய ஆதரவும் தயவும் வேண்டியதில்லை. தவிரவும் வாரமொருமுறை மகாஜனங்களின் கூட்டமொன்று நடைபெறும். அதுகாலை இளவரசனும் அவருடன் வாழ்ந்துவரும் இளவரசியும் விஜயஞ் செய்வார்கள். அதுசமயம் அவர்களிருவரும் பற்பல உபந்நியாசங்கள் நிகழ்த்துவர். ஜனங்களுக்கு ஏதேனும் அசௌகரிய மிருக்கிறதா என்று கேட்டு அதை நிவர்த்திப்பர். ஜனங்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் ஒற்றுமையையும் கைத்தொழில் பயிர்த்தொழில் முதலியவைகளையும் வெகு விரிவாகவும் நேர்த்தியாகவும் கூறுவார்கள். சிறுவர்கள் நன்னடத்தையில் நடக்கவும், நல்லொழுக்கம் மேன்மையான குணங்கள், வீரம், அஹிம்சா முதலிய விசேஷங்களையும் வெளியிடுவார். இரவு நேரங்களில் மாறுவேடத்துடன் இவ்விருவரும் அக்கிராமத்தை சுற்றிவருவர். எவருடைய நடத்தையிலாவது சந்தேகங்கொண்டால் மறுநாள் ஓர் கூட்டம் கூட்டி பொது ஜனங்களிடம் தமது சந்தேகத்தைத் தெரிவித்து அந்நபரை நாடு கடத்திவிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் பயிர்த்தொழில் முதலிய உத்தமத் தொழில்களையுடைய இவர்கள் பகல் முழுவதும் தங்களுடைய தொழில்களைக் கவனித்துவிட்டு இரவில் யாதொரு கவலையுமின்றி இல்லத்தில் தங்குவர். இரவு சுமார் ஏழு மணிக்கு ஒவ்வொருவரும் தங்கள் இல்லத்தின் முன் அமைத்துள்ள நந்தவனத்தில் தங்களுடைய பெண்டு பிள்ளைகளுடன் ஆனந்தமாகப் பொழுதுபோக்குவார்கள். இதைக் கண்ணுற்று இளவரசர் மனோஹரரும், அவருடன் வாழ்ந்து வரும் இளவரசியும் ஆனந்தமடைவார்கள். தங்களுடைய சுகதுக்கங்கள் அக்குடியானவர்களிடமே இருக்கின்றன என்பதே அவ்விருவரின் நம்பிக்கை. சிறு குழந்தைகள் இனிமையாகவும் வீரம் ததும்பும் சொற்களுடனும் விளையாடுவதைக்கண்டு இவ்விருவரும் மனம் பூரித்து அவர்களுக்கு நற்புத்தியையும் வீரத்தையும் யுக்தியையும் புகட்டக்கூடிய புஸ்தகங்களைப் பரிசிலாக வழங்குவார்கள். வாரமொரு முறை தமது அரண்மனையில் சிறுவர்கள் யாவருக்கும் ஒரு விருந்து நடத்தி அவர்கள் எதிர்காலத்தில் எவ்வாறு நடக்க வேண்டுமென்றும், பெரியோர்களிடம் எவ்வாறு நடக்க வேண்டுமென்றும் போதிப்பார்கள். சிறுவர்களும் அவர்களின் போதனையின்படி நடக்க முயற்சித்து இருவரையும் மகிழ்விப்பர். இளவரசனின் மாளிகை அக்கிராமத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்தது. அம்மாளிகை அவ்வூர் ஜனங்களாலேயே வெகு அழகாகக் கட்டப்பட்டிருந்தது. அக்கிராமத்திற்கு அம்மாளிகை விசேஷ அழகை யளித்தது. அம்மாளிகைக்கு "மனோஹர விலாஸ்" என்று பெயரிடப் பட்டிருந்தது. அம்மாளிகையின் மேன்மாடியி லிருந்து அக்கிராமம் முழுவதையும் கண்ணுறலாம். அதன் முன்னும் ஓர் நந்தவனம் அமைக்கப் பட்டிருந்தது. அதன் அழகை என்னென்பது? பற்பல விதமான புஷ்பச் செடிகள் ஆங்காங்கு தோன்றி காக்ஷியளித்தன. பற்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனி வகைகள் மரங்களில் தொங்கி காண்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. அதன் மத்தியில் ஓர் தடாகமும் அமைக்கப் பட்டிருந்தது. தாமரைச் செடிகள் அத்தடாகத்தில் வளர்ந்து காக்ஷி யளித்தன. மரங்களில் அமர்ந்து பற்பல பக்ஷிகள் கீதங்கள் பாடி மகிழ்வித்தன. அந்நந்தவனத்தில் செல்பவருக்கு ஓர் ஐயப்பாடுதானெழும். அதாவது தாங்கள் தற்போது இருப்பது தெய்வலோகமா? அன்றி பூலோகமா? என்பதே. இயற்கைவளஞ் செறிந்த நந்தவனத்தை மனோஹரன் என்ற அக்கிராமத்து இளவரசனும் அவனுடன் வாழ்ந்துவரும் புவனேசுவரி என்ற மங்கையும் சுற்றிச் சுற்றி இயற்கை வனப்பைக் கண்டானந்தித்தனர். அம்மங்கையின் இயற்கை யழகை ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனாலும் கூடக் கூறமுடியுமோ என்பது சந்தேகத்திற் குரியதேயாகும். என்றாலும் நாம் சில முக்கியமானவற்றை இங்கு ஆராய்வோம்.

உயர்குடிப் பிறப்பும், நுண்ணிய அறிவும், இளகிய மனதும், தூய்மையான மனச் சாக்ஷியும் பெற்ற நங்கை அவள் என்பதை அவளுடைய மதிமுகம் தெளிவுறுத்தியது. பத்தரைமாற்றுத் தங்கத்தை யுருக்கிவார்த்தாற்போல் அவளது திருமேனி பளபளவென்று ஜொலிக்கின்றது. களங்கமற்ற அவளது வதனம் சந்திரனை வெட்கும்படி செய்யாநின்றது. புஷ்ப இதழ்கள்கூட உறுத்துமோ வெனக் கொள்ளும்படி அவளுடைய பாதங்கள் அத்துணை மிருதுவானவைகளாகக் காணப்பட்டன. முருக்கம் இதழ் போன்ற அதரங்களும், முத்துக்கள் போன்று வரிசையான பற்களும், கண்ணாடி போன்ற கபாலங்களும், அகன்று மறுவற்ற நுதலும், மாவடு போன்ற நாசியும், புன்னகை தவழ்ந்த முகமும், மன்மதனுடைய வில்லைப்போலும் வளைந்த இரு புருவங்களும், கருணையைப் பொழிகின்ற இரு கண்களும், கார்க்

கூட்டமோ வென்னத்தக்க கூந்தலும், துடி இடையும், பருவத்திற் கேற்ப சிறிதே திரண்டு உருண்டு குரும்பை போன்று குவிந்து சொர்ணக் கலசங்கள் போன்ற மார்பு களும் அப்பெண்கள் நாயகத்தை தேவருலகத்தவ ளென்றே வற்புறுத்திய வண்ணமாயிருந்தன. அன்னத்தைப் போன்ற நடையுடையவளாகிய அம்மாதரசி ஒய்யாரமாக நடந்து செல்லுகையில் "பெண்கள் திலகமே! விரைந்து நடக்காதே. நடக்கும்போது உனது இரு ஸ்தனங்களும் அசையும். ஸ்தனங்கள் அசைவதால் உந்தன் மெல்லிய இடை ஒடிந்து விட்டாலும் ஒடிந்துவிடும். ஆதலின் நடையை ஒழிமின்! ஒழிமின்!!" என்று காற் சிலம்புகள் மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றன. என்றாலும் அவள் அதைப் பொருட்படுத்த வில்லை. "எனதுயிர்க் காதலர் என்னுடன் வருகையில் எனக்கு யாதொரு தீங்கும் நேரிட்டு விடாது. ஆதலால் உனது கிலேசத்தை விட்டொழிமின்!" என்று அவள் சமா தானங்கூறுவதைப் போன்று, தாமரை மலரினும் மிருது வான கரங்களால் சைகை செய்தவண்ணமாய் நடந்தாள். இத்துணை அழகு வாய்ந்த பெண்மகளைச் சிருஷ்டித்த நான் முகன் எங்கு அவளிடத்துக் காதல்கொண்டு தன்னை மறந்து விடுவானோ வென்ற ஐயமேலீட்டினால் கலைமகள், அவளைப் பூவுலகத்திற்குத் துரத்திவிட்டாளோ என்ற ஐயப்பாடு மெழுகின்றது. 14 வயதெனமதிக்கக் கூடிய இவ்வனிதை யுடன் செல்லும் மனோஹரன் இவளைத் தன் காதலியாகப் பெற்றுக்கொண்டது அவனது பூஜாபலனேயாகும். கம் பீரமான தோற்றத்தோடும், கட்டுமஸ்தான தேகத்துடனும், எழிலும் முகக் காந்தியும் தேக வனப்பும் ஒருங்கே பொருந் திய சுந்தர வாலிபனாகிய மனோஹரன், புவனேசுவரி என்ற மாதரசியுடன் நறுமணங் கமழ்ந்த பூஞ்சோலையில் ஓர் சித் திய மல்லிகைச் செடியின்கீழ் அமர்ந்தான். அதுகாலை இரு வருக்கு மிடையில் நடந்த சம்பாஷணையாவது:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேசுவரி:—"மனோஹரா! என் உயிரைக் காப்பாற்றிய தங்களை நான் "பிராணநாதர்" என்றழைக்கலாமோ"

மனோஹரன்:—"புவனேசுவரி! நானா உன்னைக் காப்பாற்றியது? அல்ல என்றே கூறுவேன். பெண்ணே! இவ்வுலகில் ஜனங்களின் பாவ விமோசனத்திற்காக—மெய்ஞானத்தைப் போதித்து நல்வழிப்படுத்த அவ்வப்போது இயேசுகிறிஸ்து நாதர், புத்தர் பெருமான், நபிகள் நாயகம் போன்ற புண்யாத்மாக்கள் அவதரித்தார்களன்றோ! அதைப் போன்றே நீயும் என்னிடம் வந்தடைந்திருக்கிறாய். சுறுங்கக் கூறுமிடத்து என்னை உற்சாகப் படுத்தும் பொருட்டே நீ நான்முகனால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறாய். இக்கிராமத்தை 16 வயது கூட நிரம்பப்பெறாத என்னால் பரிபாலிக்கச் சிறிது கஷ்டப்படுமென்றும் அதனால் நான் சலிப்படையக் கூடுமென்றும், எனக்கு மந்திரியைப் போன்று—என்னையொத்த குணங்களையுடைய புண்யாத்மாவை என்னுடன் சேர்த்து இருவரும் நீதிநெறி வழுவாது இராஜ்ய பரிபாலனம் பண்ணவேண்டுமென்ற கருத்தோடு கருணைவள்ளலான கடவுள் உன்னை எனக்குத் துணையாக அனுப்பியுள்ளார். ஆதலால் உன்னை நான் காப்பாற்றவில்லை. உனக்கு யாதொரு தீங்கும் ஏற்பட்டுவிடவில்லை. இக்கானகத்தில் வாழும் விலங்கினங்கள் பார்வையளவில் பயங்கரமானவைகளாகத் தென்பட்டபோதிலும், அவை உண்மையிலேயே வெகு சாதுவானவை என்பதை இப்போது நீ தெரிந்துகொண்டிருப்பாய். என் குணத்தையொத்த ஓர் மங்கையை யளித்த சாக்ஷாத் எம்பெருமானை நான் நித்தியமும் தொழவேண்டியது எனது கடமை."

புவனே:—"அன்பரே! நான் கேட்ட கேள்விக்குப் பதில் கொடுக்காமல் ஏதேதோ சொல்லிக்கொண்டு போகிறீர்களே. மனோஹரரே! ஓர் ஆடவனை ஓர் பெண்மகள் உலகமறிய மணந்தபின்புதான் "நாதா" என்றழைக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது நியதியல்ல. எப்பொழுது ஒரு பெண் பிற ஆடவனைத் தன் மனதில் செல்ல இடமளித்தாளோ அன்றே அவளுக்கு மணமாகி விட்டது என்பதுதான் என் கருத்து. அவ்வாடவனை "நாதா" என்றழைப்பதில் யாதொரு பிசகுமில்லை. ஆதலால் நான் தங்களை நாதா என்று விளிப்பதில் என்ன ஆக்ஷேபணை? நண்பரே! எனது மனங்குளிரும்படி அன்பான விடையைப் பகருங்கள்."

மனோ:—"புவனா! உன்னைக் கண்டதுமுதல் நான் ஓர் நவீன உணர்ச்சியை அனுபவித்து வருகிறேன். அதுதான் நாவலர்கள் "காதல், காதல்" என்று வரைவது என்பதைத் தெரிந்து கொண்டேன். என் உள்ளத்தை முற்றுகக் கொள்ளைகொண்ட உத்தமியாகிய உன்னை நான் அன்றே என் இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டேன். எனது உடல், பொருள், ஆவி முதலிய சகலத்தையும் உனக்கே நான் அர்ப்பணம் செய்து விட்டேன். எனக்கு ஒவ்வொரு சமயங்களிலும் மனோதைரியத்தையும், ஊக்கத்தையும், யுக்தியையும் ஊட்டும் உந்தன் சொல்லை—வேண்டுகோளை நிராகரிக்க யான் வல்லேனல்லேன். ஆதலால் உனது வேண்டுகோளை யான் அங்கீகரிக்கின்றேன்."

புவனே:—"காதலா! நாமிருவரும் முறையே 16—14 வயதுடையவர்களாகவே இருக்கிறோம். என்றாலும் உடலற்ற காமன் தனது அம்புராசிகளை சிறுவர்களாகிய நம் மீது சிறிதும் இரக்கமின்றித் தொடுக்கின்றானே! அதுதான் விந்தை. ஒருவேளை தெய்வீகத் தன்மையான காதலால் நாம் கட்டப்பட்டால்தான் ஒற்றுமையுடன் வாழ்வோமென்று சரவலோக சரண்யன் அறிந்து நம்மை இவ்வாறு பிணைத்து விட்டானோ என்றும் ஐயமுறுகிறேன். காதல் மனோஹரா! மனமொத்த காதலர் இருவரின் சேர்க்கையின் விளைவாக ஊற்றெடுத்தோடும் இன்பத்திற்கு ஈடாக எதைத் தான் கூறமுடியும்? நாதா! தங்களுடைய உடல், பொருள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவி மூன்றையும் எனக்கு அர்ப்பணம் செய்து விட்டதாகக் கூறினீர்களல்லவா? ஆம். நானும் எனது உடல், பொருள், ஆவி சுகதுக்கங்கள் முதலியவற்றை இக்கிராம ஜனங்களின் நன்மைக்காக அர்ப்பணஞ் செய்துவிட்டேன்."

மனோ:—"ஆஹா! எவ்வளவு மேன்மையான குணங்கள்? காதலீ! உன்னைப்படைத்தவன் அழகையுமன்றி, நுண்ணிய அறிவையும் அன்றோ படைத்திருக்கிறான். உன்னை என் இன்பக்கிளியாகப் பெறும் பாக்கியம் எனக்குக் கிட்டியது எனது நல்லதிர்ஷ்டமே யாகும். நீ என்னிடம் வந்து சேர்ந்ததுமுதல் எனக்கு எவ்வளவோ கவலை தீர்ந்தது. என் வேலைகளையெல்லாம் நீயே செய்துமுடித்து விடுகிறாய். எனது வாழ்க்கையினின்றும், "ஓர் ஆண்மகனுக்கு ஓர் பெண்மகள் துணையாக இருக்கவேண்டுவது இன்றியமையாதது" என்பது புலனாகின்றது. நம்மைப்போன்றே இக்கிராமத்திலுள்ள அனைவரும் அன்பு என்ற பந்தத்தினால் பிணைக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். "அரசன் எவ்விதமோ அவ்வழியே குடியும்" என்பது பொய்த்துவிடுமா? நமது சுகவாழ்வும் சந்தோஷமும் குடிஜனங்களிடமே உள்ளன.

"வாழ்வதும் பெண்ணாலே தாழ்வதும் பெண்ணாலே" என்பது பழமொழி. இப்பழமொழியை நிரூபிக்க உலகந் தோன்றியது முதல் பல சம்பவங்கள் நடந்துகொண்டுதான் வருகின்றன. ஆரம்பத்தில் தாழ்ந்த நிலைமையிலிருந்த ஓர் ஆண்மகன் உயர்நிலையடைவதற்கு ஓர் பெண்ணே ரகசிய மூல காரணமாக இருந்து வருகின்றாள் என்பது உலகங் கண்ட உண்மை. உலகம் புகழும் ருஷியசர்வாதிகாரியான "ஸ்டாலின்" தம்பதிகளின் சரிதமும் பெண்ணால் மாக்ஷியுற்றதற்குத் தகுந்த ஆதாரமாக இருந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருஷியசர்வாதிகாரியாயிருக்கும் ஸ்டாலினின் ஆதி பெயர் ஸோஸோ ஜுகஷ்விலி. இவரை "நாடியா" என்றழைக்கப்பட்ட "நாடேஜ்தா அலில்யூவா" என்ற குமரி காதலித்தாள். ருஷிய யுத்த காலத்தில் ஸ்டாலின் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். காதலியான நாடேஜ்தா ஆண் வேடம் பூண்டு பனிப்பிரதேசமான சைபீரியாவுக்குச் சென்று, தன் காதலனைக்கண்டு களித்தாள். பின்னர் விடைபெற்றுக் கொள்ளும்போது ஸ்டாலின் தன் காதலியை ஆர்வத்துடன் அணைத்து முத்தாடி "எனக்காக இன்னும் சிறிதுகாலம் பொறுத்திருப்பாய்" என்று கூறி வழியனுப்பினர்.

ருஷியாவைக் காத்துநின்ற ரோமனுப் மறைந்தான். நாடு கடத்தப்பட்ட அரசியல் தலைவர்கள் ருஷிய தலைநகரான பெட்ரோகிராடைத் தாக்கிப் பிடித்துக்கொண்டனர். இந்நகரைத் தாக்கியவர்களுள் லெனின், ஸ்டாலின், ட்ராட்ஸ்கி இம்மூவரும் பிரதானமானவர்கள். ருஷியதேசத்தின் தலைநகர் பெட்ரோகிராடிலிருந்து மாஸ்கோவிற்கு மாற்றப்பட்டது. அலெல்லூவி குடும்பத்தினரும் மாஸ்கோ சென்றடைந்தனர். ஆங்கு நாடியா ஸ்டாலினின் காரியதரிசியாக அமர்ந்தார். அவ்வமயம் அவ்விருவரும் தங்கள் காதல் நடவடிக்கைகளை ஒதுக்கிவைத்து, தேச ஊழியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். நிர்வாக விஷயங்கள் பற்றி இருவரும் அளவளாவி சம்பாஷித்து முடிவுகட்டி அதன்படி நடப்பதே கடமையாகக் கொண்டனர். இருவருள்ளத்திலும் காதல் பொங்கி எழுந்து ததும்பித்தது. ஆனல் ஸ்டாலினே காதல் பேச்சே எடுப்பதில்லை. நாடியாவுக்கோ அவரே முதலில் கூறட்டுமென்ற எண்ணம். பின்னர் உணவு பகிர்ந்தளிக்கும் நிர்வாகியாக நியமிக்கப்பட்டு ஸ்டாலின் வால்கா சென்றார். இந்நகரை அடைந்த பின்னர்தான் அவருக்குத் தமது எதிர்காலம் பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. இந்த நம்பிக்கைக்கு நெய்யிட்டு சுடர் விட்டெரியும்படி செய்து வந்தவள் காதலி நாடியா.

இந்நகரில் தான் இருவருக்கும டிராட்ஸிக்கும் அதிகார வேட்கைமீது பகிரங்கப் போராட்டம் நிகழ்ந்தது. இங்குள்ள செம்படையைக் கைக்கொள்ளவும் அங்கிருந்த ஜனங்களைக் கைவசப் படுத்தவும் முயற்சித்தனர். இத்துறையில் ஸ்டாலின் கொண்ட முதல்ஏற்பாடாக தன் உத்தரவை குறை கூறுபவர்களைத் தண்டிக்க ஒருவிசேஷ இலாக்கா நியமித்தார். ஆனால் இச்சமயத்தில டிராட்ஸ்கியே அதிகார பதவியிலிருந்தார். அவர் சர்வாதிகாரி லெனினையுற்று 'தான் அல்லது ஸ்டாலின்' அப்பிரதேசத்தை விட்டுச் செல்லும்படி செய்யவேண்டுமென்று மனுச்செய்து கொண்டார். இந்த வேண்டுகோளுக்கு லெனின் இணங்கி, ஸ்டாலினை மாஸ்கோவுக்கு அழைத்துவரும்படி ஸ்வெர்ட்லோ எள்பவரை அனுப்பினார். ஸ்வெர்ட்லோ ஆங்கு செல்லுவதன் முன்னரே நாடியா சமாசாரத்தை அறிந்துகொண்டு டிராட்ஸ்கி உம்மை அழிப்பதற்கு முன்னர் நீர் அவரை அழித்துவிட வேண்டுமென்று தன் காதலனுக்கு உபதேசஞ் செய்தாள். ஆனால் அவர் அதுகாலை தமது காதலியின் உபதேசத்தை அதிகமாகப் பொருட்படுத்தாது லெனினின் உத்தரவுப்படி மாஸ்கோ சென்றடைந்தார். அங்குச் சென்றதும் ஸ்டாலினின் நடவடிக்கைக் குணபாவனைகளில் பெரும் மாற்றமேற்பட்டது. சதா சிடுமூஞ்சியும் முன்கோபமும் காட்டியெவரிடமும் குற்றம் காண்பதுவும், தன்னை நெருங்குபவர்கள் யாவரும் துரோகம் செய்யக் கூடுமோ என்ற சந்தேகமும் கொண்டு நடந்தும் வந்தார். இதற்குக் காரணம் இவர் நாடியா பால்கொண்ட காதலும் தனக்குப் போட்டியாக வேறுயாராவது அவளை வசியப்படுத்தி விடுவார்களோ, அவள் வேறு யாரையாவது காதலிக்கின்றாளோ என்ற சந்

தேகமும் பயமுமே என்பதனை யாரும் அறிந்துகொள்ள வில்லை. இந்த சந்தேகமே அவர் தன் காதலை நாடியா விடம் வெளிப்படுத்தத் தடையாக இருந்தது. இக்காதல் வேட்கையை இன்னும் கட்டுப்படுத்தி மறைத்துவைத்திருப் பது அசாத்தியமென்று தோற்றியவுடன் அவர் நாடியா விடம் தன் மன ரகசியத்தை வெளிப்படுத்தினார்.

ஸ்டாலின் முன்னமே மணம் செய்துகொண்டிருந்த முதல் பெண்சாதியை விவாக ரத்துச் செய்துவிட்டு நாடி யாவை மணந்துகொண்டார். திருமணம் நடந்த காலத்து நாடியாவுக்கு 18 வருடங்களும் பூர்த்தியாகவில்லை. இவ் விவாகமானது முதல் நாடியாவின் ஜீவிய வாழ்க்கையில் புதிய தோர் சகாப்தம் ஆரம்பமாயிற்று. அதுவரை பயத்தையும் ஆபத்தையும் கண்டு பயப்பட்ட பெண் திடீரென்று வீர உணர்ச்சியும் தைரியமும் கொண்டு விளங்கினாள். அவள் ஸ்டாலின்பால் அளவிடற்கரிய காதல் கொண்டிருந்தாள். ஆனால் குடும்ப நிர்வாக விஷயத்தில் அவருடைய கை ஓங்கி நிற்க இவள் இடமளிக்கவில்லை. அவள் தனது கணவனுக்கு உற்ற நேயனாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இயக்கச் சக்தியாகவும் ஆபத்திலுதவும் ஊன்றுகோலாகவும் இருந்து வந்தாள். இவர்கள் கிரிம்லின் மாளிகையில் ஏகாந்தமாக வசித்து வந்தனர். இங்கிருந்தபடியே உலக நடவடிக்கை களை அறிவது முடியாத காரியம். ஆனால் அவருடைய வீரவுள்ளமோ சோம்பிக்கிடக்க இடமளிக்கவில்லை. ஆகவே அவள் மாஸ்கோ கைத்தொழில் கலாசாலையில் சேர்ந்து உலக மக்களுடன் ஒன்றாக இருந்து தாராளமாகப் பழகி அனுபவம் பெற்றாள்.

கணவன் உளமும் குறிப்பு மறிந்த பத்தினி நாடியா வாகும். தன் கணவனின் குணகுணங்களை அறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளுவதில் உன்னைப் போன்று நாடியா ஒப்பற்ற சாமர்த்தியம் காட்டி வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவன்பால் தோற்றிய பிற்போக்கான குணங்களையும் தெளிவுற அறிந்தாள். இவளுடைய புத்திமதியாலும் இயக்கச் சக்தியாலுமே ஸ்டாலின் தன் பகைவர்களை வெல்லும் சக்தியைப் பெற்றார்.

நாளாவட்டத்தில் லெனினின் கை ஓய்ந்து வரத் தொடங்கியது. லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. இதற்கிடையில் ஸ்டாலின் டிராஸ்கி முதலிய பல தலைவர்களைத் தன்கைவசப் படுத்திக்கொண்டார். ஸடாலின் தனக்குப் பின்னால் சர்வாதிகாரியாவதைத் தடுக்கும்படி லெனின் தமது மரணப் படுக்கையிலிருந்தவாறே டிராட்ஸ்கிக்கு ஓர் கடிதம் எழுதினார். இதனை எப்படியோ அறிந்த நாடியா அக்கடிதம் ஸ்டாலின் கைக்கு அதிகாரம் வரும்வரை வெளியில் வருவதிற்கில்லாமல் தடுத்துவிட்டாள். ஸ்டாலின் சர்வாதிகாரப் பதவி நிரந்தரமான பின்னரே லெனின் எழுதிய கடிதம் வெளிவந்தது. நாடியாவின் சாமர்த்தியம்பற்றி வெளியுலகத்தினர் சற்றும் அறியார். இவள் தனது கணவனின் தோன்றா சக்தியாக இருந்து மந்திரோபசாடனம் செய்து வருவது யாருக்கும் தெரிய வராது. சர்வாதிகாரியாக வரப்போகும் ஓர் மகா புருஷர் தன் மனைவியின் மடியின்மீது தலையை வைத்துச் சயனித்தவாறாகவே அவளுடைய யோசனைகளை அனுதினமும் மணிக்கணக்காகக் கேட்டு வருவது பரம ரகசியமாக இருந்தது.

சிற்சில சமயங்களில் இக்காதல் தம்பதிகளுக் குள்ளும் மனஸ்தாபம் ஏற்படாமலில்லை. நாடியா பிறவுயிர் பலியிடப்படுவதையும் எதிர்க்கக்ஷிக்காரர்களைச் சுட்டுக்கொல்வதையும் அவள் மனம் சகியாமல் எதிர்த்தாள். ஒரு நாள் பேர் பெற்ற கைதியை ஸ்டாலின் உத்தரவின்றிச் சிறை மீட்டாள். இதைக் கேள்விப் பட்டதும் ஸ்டாலினுக்குக் கோபம் பொங்கிற்று. ஆனால் நாடியா சற்றும் கலங்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவன் மார்பின்மீது சாய்ந்தவளாக, "நான் உங்களைப் பொரின் போலீசாரிடமிருந்து தப்புவித்தேன். அப்போது உங்களது மனம் என்ன நிலைமையிலிருந்ததென்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். உங்களைக் காப்பாற்றிய அதே ஜீவகாருண்யம் இந்த ஜீவன்கள்பாலும் தோற்றி நிற்கின்ற" தென்றாள். இதைக்கேட்ட ஸ்டாலின் மன அமைதியுற்றுத் தன் மனைவியை ஆர்வமுடன் முத்தாடினார். ஒரு நாள் பகல் சூரியன் செங்கதிர் பாய்ந்த கிரிம்லின் மாளிகை இன்ப வாவிபோல் தோற்றுகின்றது. ஸ்டாலினும் நாடியாவும் தமது மாளிகையில் நின்று இயற்கைக் காட்சியின் ஒப்பில்லாத அழகைக் கண்டு களித்து நின்றனர். அவ்வமயம் ஓர் மனிதன் அம்மாளிகையின் பின்புறம் நுழைய, அவன் மீது சந்தேகித்த ஸ்டாலின் அவனை உடனே சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டான். ஆனால் இது நாடியாவிற்குப் பொறுக்க முடியவில்லை. இப் படுகொலையை நிறுத்தும்படி தன் கணவனின் காலில் விழுந்து மன்றாடினாள். ஆனால் ஸ்டாலின் மனம் இளகாது அவளை உதறித் தள்ளிவிட்டு அப்புறம் சென்றார்.

இச் சம்பவம் நடந்து சிறிது காலத்தில் ஸ்டாலினை ஆட்டிவைத்த இரகசிய சக்தியான நாடியா தன் காதலனையும் உலக வாழ்க்கையையும் விட்டு மறைந்தாள். புவனேசுவரி! சோவியத் ருஷ்யாவை அடக்கியாண்டு வெற்றிபெற்ற சர்வாதிகாரி ஸ்டாலினா? அல்லது உன்னையொத்த வீரச் செல்வி நாடியாவா? பெண்ணே! நாடியாவைப் போன்று நீயும் எனக்கு இரகசிய சக்தியா யிருக்கிறாய். எனது சுக துக்கங்களை நீயும் பகிர்ந்தனுபவிக்கிறாய். ஆனால் ஸ்டாலின் பகைவர்களையும், பிற உயிர்களையும் கொல்லுவதில் ஆர்வம் உள்ளது, என்னிடத்திலில்லை. நீ என்னிடத்து வெறுப்புக் கொள்ளவும் வழியில்லை. இவ்வழியில் நம்மிருவரையும் ஈசன் ஒரே மனதினை யுடையவர்களாக ஆக்கிப்—படைத்து விட்டார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனே:—"நாதா! தாங்கள் என்னை அதிகம் புகழ்ந்துவிட்டீர்கள். ஒரு வழியில் நான் தங்களுடைய புகழ்மாலையைப் பெற அருகதையுடையவள் தான். என்றாலும் என்னை இவ்விதம் செய்யத்தூண்டியது ஓர் சக்தி மறைவாயிருக்கிறது. அதுதான் கடவுள் என்பவர். "கலை கடலி னாழத்தைக் கணித்தல் கூடுமாயினும், கர்த்தனின் கருணைக்கடலினாழத்தைக்கணித்தல் கஷ்ட சாத்தியமே!" 'மனோஹரரே! நான் சிறு வயதிலிருந்தே இவ்விதமான ஓர் கிராமத்தை அரசாக்ஷி செய்ய வெண்டுமென்றும் குடி ஜனங்களின் நன்மைக்காக நமது உயிரையும்கூடத் தியாகஞ் செய்து அவர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்றும் அவாவினேன். மனம்போல் வாழ்வு என்பதற்கிணங்க, நான் எண்ணியதைப் போன்ற வாழ்க்கையை நடத்தி வருகிறேன். என் மனதிற்குகந்த மணாளனையும் பெற்றேன். அவர் மனம்போல் நடந்து அவருடைய அன்பையும் பெற்றுக்கொண்டேன். ஸ்டாலினைப் போன்றவரை எனக்கு நாதராக நியமிக்காமல் விட்டுவிட்டதைப் பற்றி நான் ஈசனுக்குத்துதி கூறுகிறேன். நான் இவ்விதம் வினவியதின் காரணம், தாங்கள் என்னை நாடியாவுக்குச் சமமாக வைத்ததால்தான். அவ்விதமே—ஸ்டாலினைப் போன்ற ஒரு புருஷரையே என் பிராணநாதராக ஏற்றுக் கொண்டிருப்பினும் நான் அவரை எளிதில் மாற்றிவிடுவேன். புத்தரின் போதனைகளை இரவும் பகலும் அவருக்குப் போதிப்பேன். பிறரை இம்சிக்க முற்படுகையில் வேண்டிய புத்திமதிகளைக் கூறுவேன். கறைப்பார் கறைத்தால் கல்லுங் கரையுமன்றோ? அவ்வளவு சக்தி பெண் மகளாகிய என்னிடத்து உளது என்பதே எனது கருத்து. பிராணேசா! நாம் பிற விஷயங்களைப் பற்றி நீண்ட நேரம் சம்பாஷித்து விட்டோம். இவ்விதம் நாம் நடந்துகொள்ள நமக்கு சுதந்திரம் கிடையாது. நமது தொழில் குடி ஜனங்களின் க்ஷேம லாபங்களை ஆராயவேண்டியதே யாகும்! அன்பரே! இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர் மக்களுக்குச் சகல வசதிகளையும் அளித்திருக்கிறோம். சிறுவர்களின் கல்விக்காக வேண்டிய முயற்சி செய்து வருகின்றோம். பசு பக்ஷி பதினாயிரம் ஜாதிகளையும் பாதுகாத்து வருகின்றோம். கைத்தொழில், பயிர்த்தொழில் நமது கிராமத்தில் முன்னேற்றமடைந்து, நம்மக்களை வறுமைப்பிணியினின்றும் தப்புவிக்கின்றது. மக்களின் அறிவை விர்த்தியடையச் செய்யவும், ஊக்கத்தை யளிக்கவும், குடும்ப வாழ்க்கையை சரிவர நடத்தும் விதத்தையும் நாம் காலை மாலை பத்திரிகைகளின் மூலமாக, அநேக கட்டுரைகளையும், நவீன கதைகளையும் வெளியிட்டு வருகின்றோம். புத்தகசாலையொன்றையும் நிறுவியுள்ளோம். இன்னும் ஏதேனும் குறைகளிருக்கின்றனவா என்பதை நாம் ஆராயவேண்டும். அக் குறைகளை நாம் உடனே நிவர்த்திக்கவேண்டும்.''

மனோ:—''புவனா! நான் என்னுடைய சரித்திரத்தை உன்னிடம் இதுவரையும் கூறாமலிருந்ததற்கு என்னை மன்னித்துக்கொள். என் சரித்திரத்தை இன்று உனக்கு கூறப்போவதால் நமது கிராமவிஷயங்களை இன்றுமாத்திரம் சிறிதுநேரம் ஒத்திவைக்க உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு நீ சம்மதிப்பாயென்றே நம்புகிறேன். என்னை ஈன்ற பெற்றோர்களிடமிருந்தும் பிரிந்து இப்போது...... இன்றுடன் ஐந்து வருடங்களாகின்றன. எனக்கு ஓர் சகோதரரும் உண்டு. அவர் நாடுபிடிக்கும் பித்தன். சுய நலம் ஒன்றையேகருதி நடந்துகொள்பவர். அவருக்கு இப்போது 23 வயதாகின்றது. தானே இராஜ்ஜிய பரிபாலனம் செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணத்தால் தூண்டப்பட்டவராகி என்னுடைய தந்தையைக் கொலைசெய்யவும் முயற்சித்திருக்கிறார். எனது நல்லதிர்ஷ்டம் அவர் அக் கொலை முயற்சியினின்றும் தப்பிவிட்டார். ஒருநாள் வேட்டைக்குச் சென்ற எனது பெற்றோர்கள் திரும்பி வரவேயில்லை. கனநேரமாய் விட்டது. இச்செய்தி ஊர்முழுவதும் பரவவே குடிஜனங்களிடையில் பரபரப்புண்டாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் கூக்குரலிட வாரம்பித்தார்கள். எமது அரண்மனையைச்சுற்றிப் பல்லாயிர ஜனங்கள் சூழ்ந்து விட்டார்கள். உடனே சேனைகளை நாலாபக்கங்களிலும் செல்லவேண்டுமென்றும் ஆரவாரித்தனர். பெண்ணே! அதுகாலை நான் எந்நிலைமையி லிருந்திருப்பேனென்று நீயே யூகித்தறிந்து கொள்ளலாம். ஆனால் எனது சகோதரரோ சிறிதுகூட வாட்டமடையவில்லை. தன்னைப்பீடித்த சனியன் தொலைந்ததென்றெண்ணி ஆனந்தக் கூத்தாடினார். எனது சகோதரர் தவிர அன்றுமுதல் நாளும் அவ்வூர் மக்களும் துக்காதேவிக்கு அடிமையானோம். பொதுமக்களின் கிளர்ச்சியினால் எமது சகோதரர் சில வீரர்களை நாலாதிக்கிலும் அனுப்பினார். என்றாலும் எனது துர் அதிர்ஷ்டம் அவர்களால் எனது பெற்றோரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனது சகோதரரால் தான் ஏதேனும் அபாயம் எமது பெற்றோருக்கு நேர்ந்திருக்க வேண்டுமென்று பல்லோர் கருதினர். நானும் அவ்விதம் நம்பவேண்டிய நிலைமையிலேயே இருந்தேன்—இருக்கிறேன். என்செய்வது! எல்லாம் வல்ல இறைவனிடம் எங்களது ஆறாத் துயரத்தைத் தெரிவித்து, எங்களது குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று பிரார்த்தனைகள் அனுதினமும் நடைபெற்று வருகின்றன. மாதரசே! எமது பெற்றோர் எம் ஜனங்களை விட்டுப் பிரிந்த அன்றே எமது சகோதரர் சிம்மாசனத்திலேறினார். பழைய சட்டதிட்டங்களை எல்லாம் தகர்த்தெறிந்து, தனக்குச் சாதகமான திட்டங்களைத் தயாரித்துக்கொண்டார். அனுதினமும் நடனக் கச்சேரிகளும், விருந்துகளும், மது பானவகைகளை உபயோகித்தலும் நடைபெறாமலிருக்க முடியாது. அத்தேசத்தில் அழகுள்ள மங்கையரும் வாழ முடியாது. தனது மிருக—இழிந்த—உடல் இன்பத்தையே பெரிதாகக் கருதி பெண்மக்களின் கற்பிற்குக் கூற்றுவனாகத் திகழ்ந்தார். ஒவ்வொரு சமயங்களிலும் நவீனமான வரிகள் ஏற்பட்டு ஜனங்களின் குரல்வளையை நெறித்தவண்ணமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கின்றன. பொதுஜனங்கள் வரிப்பளுவைத் தாங்கமாட்டாது திகைக்கின்றனர். இவை யெல்லாவற்றையும் கண்ணுற்ற நான் அடைந்த விசனத்திற்கு ஓர் அளவில்லை. "பகவத்கீதையில் பற்பலவிதமான தியாகமுறைகளும் புனித சேவைகளும் கூறப்பட்டிருக்கின்றன. ஆதரவற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்வதைத்தவிர வேறு சிறந்த தியாக சேவை இருக்கமுடியாதென்பதே கீதையின் முடிவான உபதேசம்" என்று எமது பெற்றோர் இடையுறாது கூறிக்கொண்டு செங்கோல்—அரசாக்ஷிசெய்த தேசத்தில் துர்அதிர்ஷ்ட வசமாக இதுகாலே தர்மத்திற்கும் நியாயத்திற்கும் முற்றிலும் மாறாக நடந்துகொள்வதை யறிந்து எவர்தான் மனம் சகிப்பார்கள். இரண்டொருமுறை நான் அவருக்கு புத்திமதிகளை கூறுகையில் பலாத்காரமாக வெளியில் தள்ளப்பட்டேன்.

அந்தோ! கொடுமை! கொடுமை!! தங்களின் ஒப்புயர்வற்ற கற்பை இழந்து பரிதவிக்கும் பெண் சகோதரிகள் என்னிடம் வந்து முறையிட்டனர். நான் என்செய்வேன்! அவர்களுடன் நானும் சேர்ந்துகொண்டு துக்காதேவி வசம் சரண்புகுந்தேன். என்னதேறுதல் மொழிகளைத்தான் யான் கூறமுடியும். "கொடுங்கோல் மன்னர் வாழும்நாட்டிலும் கடும்புலிவாழும் காடுநன்றே" என்ற முன்னோர் சொற்படி நான் இக்கானகத்தில் வந்து குடியேறலானேன். அவ்வூரிலுள்ள—என்மனதிற்குகந்த ஜனங்களை இவ்விடம் வரவழைத்து இக்கிராமத்தை ஏற்படுத்தினேன். இக்கிராமத்திலுள்ள வீடுகளை நாங்களே கட்டிக்கொண்டோம். அதுவரையிலும் மரங்களின் கீழ்தான் குடியிருந்தோம். இரவும் பகலும் மரங்கள்தான் எமது இல்லம். வெகு சீக்கிரத்தில் வீடுகளைக் கட்டிவிட்டோம். மரம் செடிகளை வளர்த்தோம். எங்களுடைய நல்லதிர்ஷ்டம் இக்கிராமத்திற்கு அருகாமையில் ஓர் ஆறும் செல்கின்றது. எங்களுக்குத் தண்ணீர்வசதியும் ஏற்பட்டுவிட்டது. தானியவகைகளையெல்லாம் பயிரிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோம். மனிதவர்க்கத்திற்கு இன்றியமையாத உணவு முதல் சகலத்தையும் இங்கேயே விளைவித்துக்கொண்டோம். வரிப்பளுவினாலும் கொடிய சட்டதிட்டங்களினாலும் சகிக்கொணு கஷ்டத்தையனுபவித்து நமது சகோதர சகோதரிகள் இப்பொழுது சுதந்தரர்களாகவும், சுகஜீவிகளாகவும் வாழ்க்கை நடத்தி இன்புறுகின்றனர். துன்பமடைவோர் இன்பமடைவார் என்பது செயலளவில் நிரூபணப் படுத்தப் பட்டுவிட்டது. பெண்மக்களின் உயிர் நிலையாகிய கற்பைக் காக்கவேண்டிய முக்கியமான பொறுப்புவாய்ந்த இராஜாங்கம்—வேலியே பயிரைக் கெடுத்தாற்போல அந்த இராஜாங்கமே—அரசனே அவர்களைக் கெடுத்தால் அப்பெண்கள் யாது செய்வார்கள்! சாதாரணமான ஓர் ஆடவன் அக்கிரமங்களியற்றினால் கோர்ட்டுமூலமாக நியாயத்தைப் பெறலாம். ஆனால் ஒரு தேசத்தை ஆளும் மன்னன் நீதிக்கு விரோதமாக—பிறரைத் துன்புறுத்தினால் யாரிடம்போய் முறையிடுவது?

பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு மாறாக—அவர்களின் நீங்கா வெறுப்புக்காளாகிய ஓர் அரசன் நீடித்த நாள் அரசாளமுடியாது என்பதை முற்றிலும் எனது சகோதரர் மறந்துவிட்டது வருந்தத்தக்கது. மனிதவர்க்கத்தவரால் யாதொரு தண்டனையும் விதிக்கப்படாமற் போயினும் "உன் அத்தானவர்களுக்கு" தெய்வதண்டனை அகப்படாமற் போகாது. பெண்ணே! சர்வலோக சரண்யனின் அற்புத லீலாவிநோதங்களை யாரால்தான் அறியமுடியும்? எனது தாய் தந்தையரை பிரித்துவிட்ட ஈசன், அதனால் ஏற்படும் துன்பத்தை—வருத்தத்தை—விசனத்தை நீக்குவான்வேண்டி, இச்சிறு கிராமத்தை உண்டாக்கி இவ்வூர் மக்களின் சுக வாழ்வை கண்டானந்திக்கும்படி செய்துள்ளார். புவனேசுவரி! சிற்சில சமயங்களில் எனது பெற்றோரை எண்ணுந் தோறும் எனக்கு மட்டற்ற விசனமுண்டாகின்றது. எனது தாய் தந்தையரிடம் நான் அன்பாக சம்பாஷிக்கும் பாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் எனக்கு முற்றாக இல்லாமலே போய்விட்டது. எனது வாழ்க்கையைக் கண்டானந்திக்கும் பாக்கியமும் அவர்களுக்கில்லாமலே போய்விட்டது. பெண்ணே! நீயும் நானும், ஊசியும் நூலும்போன்று ஒற்றுமையுடன் இக்கிராமத்தை— பொதுஜனங்களின் அபிப்பிராயத்திற்கு கட்டுப்பட்டு நடத்தி வருவதையும், நம்முடைய கிராமத்தில் ஜனங்கள் இன்பகரமான வாழ்க்கை நடத்திவருவதையும் கண்டு ஆனந்தமடைந்து நம்மை எமது பெற்றோர்கள் புகழும் காலம் எப்போது கிட்டும்!'' என்று கூறியவாறு கண்ணீர் வடித்தான்.

தன் காதலரின் சரிதையைச் செவிமடுத்த புவனேசுவரி ஆச்சரியமும், திகிலும், விசனமும் அடைந்தாள். மனோஹரன் கண்ணீர் வடிப்பதைக் கண்ணுற்ற புவனேசுவரியின் மனம் எந்நிலைமையிலிருக்கும்! அவளுடைய முகத்தில் கவலைக்குறி தோன்றியது. புன்னகை தவழ்ந்துகொண்டிருந்த அவளது மதிமுகம் சோர்ந்தது. ஒளியை வீசிக்கொண்டிருந்த கண்கள் சற்றுக் கலங்கின. மனோஹரனின் கண்களினின்றும் வெளிப்படும் ஒவ்வொரு துளி ஜலமும் இரத்தமென்றே கருதினாள். அவளால் வெப்பத்தைத் தணிக்க முடியவில்லை. அவளுக்குக் கண்ணீர் ததும்பிற்று. முத்து முத்தாக அவளது கண்ணாடி போன்ற கன்னங்கள் வழியாக கீழ்நோக்கிப் பாய்ந்தது. தனது பர்த்தா விசனமுறுங் காலையில்தான் அவருக்குத் தேறுதல் மொழி கூறி தேற்றுவதற்கின்றி தானும் துக்காதேவி வசம் சிக்கினாள். சிறிது நேரம் எங்கும் நிச்சப்தமாயிருந்தது. இளவரசனும் இளவரசியும் இனிமையாகச் சம்பாஷிப்பதைக் கண்ணுற்று ஆனந்தமடைந்து இனிமையான கீதங்கள் பாடிக்கொண்டிருந்த பக்ஷி ஜாதிகள் இதுகாலை நிகழ்ந்துள்ள விசனத்தைக் கண்ணுற்றதும் தங்களின் இனிய கீதத்தை நிறுத்திக் கொண்டன. அவைகளும் ஆச்சரியமும் திகிலும் கொண்டன போன்று இவ்விருவரையுமே உற்றுநோக்கிய வண்ணமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தன. அந்நந்தவனத்திலுள்ள மான்குட்டிகள் முயல் குட்டிகள் முதலியவைகளும் தங்களின் விளையாட்டை நிறுத்திக்கொண்டன. எங்கு நோக்கினும் துக்ககரமாகவே தென்பட்டது. இந்திரனின் இந்திராணியைப் பழிக்கும் பேரெழில் வாய்ந்த மங்கை யொருத்தியும், அவளது காதலனும் துக்காதேவிக் கடிமைப் பட்டு வருந்துவதைக் கண்டு தானும் வருந்துவதைப் போன்று—வருந்துதலைக் கண்டு மனம் சகியாமல் ஆதித்தனும் மேற்குத் திசையில் மறைந்தான். இவ்விதமாக, லெக்ஷ்மீகரம் தென்பட்ட மனோஹர புரத்தில் துக்காதேவி தாண்டவமாடினாள். துக்காதேவியி னின்றும் விடுதலையாக நீண்டநேரம் ஆகியது.

பின் புவனேசுவரி மனந்தேறி தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, மனோஹரனின் கண்களினின்றும் வெளிப்படும் கண்ணீரைத் துடைத்தாள். அதுகாலை அவளது கரத்தில் அணிந்திருந்த கொலுசுகள்—காப்புகள் ஆனந்தத்துடன் சப்தித்தன. பக்ஷிகளும் பாட ஆரம்பித்து விட்டன. சந்திரனும் பிரகாசிக்கத்தொடங்கினான். துக்கா தேவியை விரட்டி யடிக்க ஓர் புயல் காற்று வீசியது. துக்கா தேவியும் செலவு பெற்றுக்கொண்டு ஓடோடியும் சென்று விட்டாள். மனோஹரன் சிறிது தேறுதலடைந்தான் கவலைக்குறி தோன்றிய அவனது முகம் மாறியதைக் கண்ணுற்ற புவனேசுவரி மனம் பூரித்து "மனோஹரரே! நான் பிறந்து இதுநாள் வரையும் பட்டனுபவியாத ஓர் கஷ்டத்தை இதுகாலை அனுபவித்துவிட்டேன். துக்காதேவி யின் சக்தியை இப்போதுதான் அறியலானேன். அதிருக்கட்டும். எனது மாமனார், மாமியார் பிரிவால் நாம் வருந்துவதில் பிரயோஜனமில்லை. அநுதினமும் நாம், எல்லாம் வல்ல இறைவனிடம் நமது குறையை—விசனத்தைத் தெரிவித்து மன்றாடுவோம். நமது எதிர்கால சுகதுக்கங்கள் அவர்களிடமே யுளது. நாம் வருந்தி நடப்ப தொன்று

யில்லை. நமக்குச் சகல பாக்கியங்களையும் ஈந்த ஜெகதீசன் இப்பாக்கியத்தையும் சமீப காலத்திற்குள் அளித்துவிடுவா ரென்றே நம்புகிறேன். ஆதலால் கவலையை விட்டொழியுங் கள். தங்களின் மாமியார், மாமனுரையும் அதி சீக்கிரத்தி லேயே காணலாம். சிறு பிராயத்திலேயே என்னை விட்டுப் பிரிந்த எனது பெற்ருேர் இதுகாலை எங்கு வசிக் கின்றனரோ? எல்லாம் வரவரத் தெரியும். ஒழுக்கத்தி லும், கல்வியறிவிலும், அபிப்பிராயத்திலும், தங்களையும் என்னையும் ஒன்றுபோல் சேர்த்து வைத்தது போன்று நம்மிருவரின் பெற்ருேரையும் ஒன்ருகவே பிரித்து வைத்து விட்டார்போலும்!"

மனுேஹரன்:—"புவனு! எனது வாழ்க்கையைப் போன்றே நினது வாழ்க்கையும் இருக்கின்றது. அழகுச் செல்வியாகிய உன்னைவிட்டுப் பிரிய உனது தாய் தந்தையர் எவ்வாறு மனம் சகிப்பர்? இதில் ஏதோ மர்மமிருக்கவேண் டும். உன்னைப் பத்து மாதம்—300 நாள் சுமந்து கஷ்டப் பட்டு ஈன்ற அன்னை உன்னைக் காட்டில் விட்டுப் பிரிய எவ் வாறு முற்படுவாள்? உனது பெற்ருேர் உன்னுடன் தனி யாக வேட்டையாட வந்திருப்பார்கள் என்று, நீ சந்தே கிக்கிருயல்லவா? அவ்விதமே இருக்கலாம். உன்னை மர நிழலில் விட்டு விட்டு ஏதோ ஓர் பிராணியைக் கைப்பற்ற அதன் பின்னல் தொடர்ந்து சென்றிருக்கவேண்டும். அது காலை அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டிருக்கவேண் டும். அல்லாவிடில் அவர்கள் வழி தப்பியிருக்கவேண்டும். அவ்விதம் இருப்பின் அவர்கள் உனது தேசத்தை விசாரித் தறிந்து வந்திருக்கலாம். உன்னைத் தேடிப்பிடிக்க ஒற்றர் களை அனுப்பியிருக்கலாம். ஆனல் அவ்விதம் நிகழ்ந்திருப்ப தாக நமக்குத் தோன்றவில்லை. ஆதலால் அவர்கள் எவர்க ளிடமாவது அகப்பட்டிருக்கவேண்டும். நல்லதிர்ஷ்ட வச மாக நீயும் உனது பெற்ருேரைத் தொடர்ந்து செல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்துவிட்டாய். ஏனெனில் அவர்கள் துரத்திக்கொண்டு செல்லும் பிராணியைப்பிடிக்கும் கவனத்திலிருப்பார்களே யன்றி நீ பின்தொடருவதை அவர்கள் கவனிக்க மாட்டார் கள். ஆனால் நீ மரத்தடியிலேயே வீற்றிருப்பதாக எண் ணிக்கொள்வர். சிறிது நேரஞ் சென்றதும் அவர்கள் உன் கண்களுக்குத் தென்படாத தூரத்திற்குச் சென்றுவிடுவர் அவ்விதமாயின் அவர்களைப் பின்தொடர்ந்த உனது கதி என்னவாகும்? சுற்று முற்றும் விழிக்கவேண்டியதே. ஆபத் பாந்தவன் உன்னை மரத்தடியிலேயே இருக்கும்படி செய்து விட்டான். தவிரவும் என் மனதிலும் ஓர் எண்ணத்தை எழுப்பிவிட்டான். சாதாரணமாக காலைநேரங்களிலும் மாலைநேரங்களிலும் தேகாப்பியாசத்தை முன்னிட்டு நான் எனது அசுவத்திலேறி சிறிது தூரம் செல்லும் வழக்கம் உண்டு. ஆனால் அன்று நான் என்னை யறியாமலே வெகு தூரஞ் சென்றுவிட்டேன். எனது கண்கள் விருக்ஷங் களையே உற்று நோக்கின. அதுகாலைதான் உந்தனை யான் கண்டது. ஆண்மகனாகிய என்னைக்கண்டதும் சிறு பெண் ணாகிய நீ நாணமிகுதியினால் தலையைக் கவிழ்த்துக்கொண் டாய். ஒரு வார்த்தைகூட பேசினாயில்லை. மெதுவாக எழுந்து நின்று எனக்கு மரியாதை செலுத்தும் விதமாக ஒதுங்கிக்கொண்டாய். நாமிருவரும் சிறிதுநேரம் யாதொன் றையும் பேசினோமில்லை, பின்பு நானே உன்னிடம் பேசலா னேன். நான் கேட்ட கேள்விகளுக்குத் திருப்திகரமான விடையளித்தாய். உனது, குயிலுமினிய குரலைக்கேட்டு யான் ஆனந்தமடைந்தேன். உன்மீது எனக்கு விசேஷ அன்பு சுரக்கலாயிற்று. அதன் பின்பு நான் உன்னை என் அசுவத்தில் ஏற்றிக்கொண்டேன். அதுகாலை நீ யாதொரு ஆக்ஷேபனையும் செய்யவில்லை. உனது மதிமுகத்தில் புன் னகை தவழ்ந்து விளையாடியது. உனது முகக்குறியிலிருந்து நீ என்னுடன் வர அவாவுகிறாயென்பதைத் தெரிந்துகொண் டேன். அதுகாலை நான் அனுபவித்த இன்பத்திற்கு—ஆனந்

கத்திற்குமோர் எல்லையுண்டோ? நானும் ஏறிக்கொண்டு இந்நகர் நோக்கி பிரயாணமாகினேன். சிறிதுநேரம் சென்ற பின் "அன்பரே! எனது தாய் தந்தையர்கள் என்னைத்தேடி யலைவார்களன்றோ! அதற்கு........" என்று நீ கூறி சட்டென நிறுத்திக்கொண்டாய். அப்போது நான் "அதற்கென்ன? எனது காவலாளிகளை இங்கு இருக்கச்செய்கிறேன். உனது பெற்றோரைக் காண்பார்களேயாயின் அவர்களை இக்கிராமத்திற்கு அழைத்துவரக் கட்டளை பிறப்பிக்கிறேன்" என்றுகூறி, எனது காவலாளிகளுக்கும் உத்தரவு பிறப்பித்தேன். எனது காவலாளிகள் உண்மையே—சத்தியமே உருவெடுத்து வந்தவர்கள். தமது உயிருக்கே ஆபத்து நேரிடினும் எனது கட்டளையை நிறைவேற்றத் தவறாதவர்கள். வீரர்கள் அஞ்சாநெஞ்சமும், புத்தி சாதுர்யமும் வாய்க்கப்பெற்றவர்கள். என்றாலும் துர் அதிர்ஷ்ட வசமாக உனது பெற்றோர் அவர்கள் கண்களுக்கு தென்படாமலே போய்விட்டனர். இவ்வளவு காலமும் தென்படாத அவர்கள் இனிமேல் தென்படலாமென எவ்விதம் எதிர்பார்க்கமுடியும்? என் செய்வது? நமக்கு கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நமக்கு நேரிடும் கஷ்டநஷ்டங்கள் எலலாம் ஒருவழியில் நன்மையாகவே முடிகின்றன. எனது தந்தை காணாமற் போகாவிடில் நான் இன்று இவ்விதம் இருக்கமுடியாது. என் மனதிற்குகந்த குடிஜனங்களைக்கொண்ட இராஜ்ஜியத்தை ஸ்தாபித்திருக்கமுடியாது. உனது பெற்றோர் உன்னை விட்டுப் பிரிந்திராவிடில் எனக்கு நீ உற்றதுணைவியாக—மந்திரியாக வாய்த்திருக்க முடியாது. நாமிருவரும் சந்தித்திருக்கவும் முடியாது. என்னை நீ உனது பிராணநாதராகவும், நான் உன்னை என் இன்பக்கிளியாகவும் பெற்றிருக்கமுடியாது. ஆதலால் எல்லாம் விளைகிறது நன்மைக்கேயாகும். நம்மிருவரையும் சேர்த்து, நம்மிடையில் தெய்வீகத் தன்மையான காதலை புகுத்தி ஒற்றுமையுடன்—சந்தோஷகரமான—இணைபிரியாது வாழும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த சர்வலோகசரண்யன், இப்போது நமக்கு இருக்கும் மகத்தான விசனத்தை அதிசீக்கிரத்திலேயே முடித்து விடுவார். ஆதலால் நாம் கவலையை விட்டொழித்துச் சாக்ஷாத் எம்பெருமானைப் பிரார்த்திப்போமாக."

**புவனே:**—"மனோஹரரே! எனது முடிவான தீர்மானமும் தங்களைப் பொருத்ததே. தங்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டிய நான், என்னதான் சொல்லப்போகிறேன். ஆதலால் நான் தங்களுடைய கூற்றை ஆதரிக்கிறேன். எல்லாம் வல்ல இறைவனிடம் நமது விசனத்தைத் தெரிவித்து நிவர்த்திக்க வேண்டுவதைத் தவிர வேறு வழியிருப்பதாக எனக்குத் தோன்றவுமில்லை. தங்களைப்போன்றே நானும் நமது குறை வெகு சமீபத்தில் ஜெகதீசனால் தீர்க்கப்படும் என்று நம்புகிறேன்" என்று புவனேசுவரி கூறிக்கொண்டிருக்கையில் ஓர் காவலாளி ஓடோடியும் வந்தான். அவன் வரும் வேகத்தைக் கண்டு திகைத்த மனோஹரனும் புவனேசுவரியும் அவனையணுகினர்.

**மனோஹரன்:**—"காவலா! என்ன விசேஷம்? அதிக வேகமாய் ஓடிவந்திருக்கிறாயே! சீக்கிரம் சொல்"

காவலாளி:—"மஹாராஜாவே! நமது எல்லைக்கு சிறிது தூரத்திற்கப்பால் ஓர் ஞானி வீற்றிருக்கிறார். அவர் தமது இரு கண்களையும் மூடிக்கொண்டு ஜெபஞ்செய்கிறார். அவரது பக்கலில் சுமார் 14 வயதென மதிக்கக்கூடிய ஓர் யுவதி நின்றுகொண்டிருக்கிறாள். அந்த ஞானிக்குச் சுமார் 22 வயதுதானிருக்கலாம். அவரது நீண்ட தாடியையும், சடையையும், உடையையும், முகவசீகரத்தையும் காண்போர் அவர் முற்றத்துறந்த ஞானியென எண்ணுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவருடன் இருக்கும் பெண்ணைப்பற்றி சிந்திக்கையில் தான் சிறிது ஐயமுண்டாகிறது. தங்களுடைய கட்டளைப்படி அவரை நாங்கள் கண்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை கால்களையும் கட்டி தூக்கிக்கொண்டு வரவேண்டியது தான் கடமை. என்றாலும் அம்மகானது அருகில் சென்றதும் எங்களது மனம் மாற்றமடைகின்றது. ஆதலால் மன்னிக்கவும். தங்களிடம் இதுவிஷயத்தைத் தெரிவித்து ஆவன செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் நான் ஓடோடியும் வந்தேன். தங்களுடைய கட்டளைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றான்.

இதைச் செவிமடுத்த இருவரும் ஆச்சரியமும், ஆனந்தமுமடைந்தனர். திகிலும் ஒரு சிறிது உண்டாயிற்று. "இதில் ஏதோ மர்மமிருக்க வேண்டும் ஏதேனும் சதியாலோசனை நடைபெற்று நம்மை கவிழ்க்க முயற்சித்திருக்க வேண்டும்'' என்று இருவரும் அஞ்சலாயினர். தாம் இக்கானகத்தில் வாழ்ந்து வருவதை மனோஹரனின் சகோதரர் அறிந்துதான் இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டனர். முற்றத் துறந்த ஓர் முனிவரிடம் 14 வயதான ஓர் இளம்பெண் இருக்கவேண்டியதின் காரணம் யாதாயிருக்கலாம். தவிரவும் 22 வயதான ஓர் வாலிபர்தான் எவ்விதம் துறவுகோலம் கொள்ளக்கூடும் என்ற வினாவிற்கு அவர்களால் பதில் கூறமுடியாது மௌனம் சாதித்தனர். மனோஹரன் சிறிது நேரஞ்சென்றபின் புவனேசுவரியை நோக்கவும் அவள் மெதுவாக பேசலானாள்.

புவனே:—"காவலா! நீ குறிப்பிடும் பெண் உண்மையான பெண்தானா? உனக்கு எவ்விதம் தோன்றுகிறது. ஏதேனும் சந்தேகத்திற் கிடமிருக்கிறதா?''

காவ:—"அவ்விதமொன்றுமில்லை. உண்மையான பெண்தான். ஆனால் இருவருடைய வயதையும், கோலத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது தான் சந்தேகமேற்படுகிறது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனே:—"அப்பெண் ஞானியிடம் எவ்வாறு நடந்து கொள்கிறுள்?"

காவ:—"வெகு வணக்கத்துடனும், மரியாதையுடனும், பயபக்தியுடனும் அவரது கட்டளையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறுள்."

புவனே:—"அந்த ஞானி எவ்விதம் இருக்கிறுர்? அவர் தமது கண்களைத்திறந்தாரா? அப்போது அவர் எவ்விதமான பார்வையை உபயோகித்தார்."

காவ:—"நாங்கள் வெகுநேரம்வரை காத்திருந்தோம் ஆனுல் அவர் கண்களைத் திறக்கவேயில்லை. ஒரே நிஷ்டையிலிருக்கிறுர்."

புவனே:—"சரி. நீ போகலாம். நாங்கள் இருவரும் இதோ புறப்பட்டு வருகிறேம். (மனேஹரனை நோக்கி) காதலா! இதில் ஏதும் சதி நடந்திருக்கமுடியாது. காவலன் மொழிவதை நோக்குகையில் அவர் எல்லாவற்றையும் துறந்தவர் என்பது நிச்சயப்படுகிறது. ஆனுல் பருவம் வாய்ந்த ஓர் பெண்மகள் அவருடன் இருப்பதைப்பற்றித் தான் ஆலோசிக்க வேண்டியதிருக்கிறது. எதற்கும் நாம் நேரில் சென்று விசாரிப்போம்—பார்வையிடுவோம். 22 வயதில் ஒருவர் உலகவாழ்க்கையில் வெறுப்புற்று துறவி கோலம் பூண்டது ஆச்சரியமே. ஒருவேளை அவர்கள் கணவனும் மனைவியாகவும் இருக்கலாம். பணக்கஷ்டத்தினுலும், பசிக்கொடுமையினுலும் அவர்கள் உலகவாழ்க்கையை வெறுத்து, காடுசுற்றித்திரிந்து, கனிவகைகளை உண்டு பசியாறி காலங்கழிக்கவும் நிச்சயித்திருக்கலாம். அவ்விதமாயின் அவர்களை நமது கிராமத்திலேயே தங்க இடங்கொடுத்து, அவர்களின் வறுமைப்பிணியை யகற்றி மகிழ்விப்போம். நாதா! சீக்கிரம் பிரயாணப்படுங்கள்!"

மனே:—"ஆம்! அவ்விதம் தான் இருக்கலாம். பாவம்! ஏழைகள் என்னதான் செய்யமுடியும்? கல்விகற்ற—பட்டங்

களை நிறையப்பெற்ற சகோதரர்களும் கூட நூற்றுக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். கல்வியின் மூலமாக தாங்கள் சம்பாதிக்கலாம். சுகத்துடனிருக்கலாம் என்று நம்பி, தமது விளைநிலங்களையும் வீடுவாசல்களையும் கூட விற்று கல்விகற்ற கனவான்கள் பல்லோர் வேலையில்லாது வருந்தி உணவுக்கும் கூட அந்தரடிக்கிறார்கள். படித்துப் பட்டம்பெற்ற சகோதரர்கள் வேலையில்லாது கஷ்டப்பட்டாலும், பயிர்த்தொழில் போன்ற தொழில்களைச் செய்வது அகௌரவம் என்று கருதி வாளாவிருக்கின்றனர். 20 ரூபாய் சம்பளத்திற்காகிலும் பிறருக்கு அடிமையைப் போன்று குமாஸ்தா வேலை பார்ப்பது அவர்களுக்கு கௌரவம்போல் தோன்றுகிறது. அந்தோ! பாவம்! வேலைதான் கிடைக்க மார்க்கமில்லையென்றாலும் சிலவாவது குறைகிறதா? அதுவுமில்லை. எங்காவது வேலை காலியாயிருக்கிறதா என்று அறிய ஒவ்வொரு பத்திரிகையையும் வாங்கிப்பார்க்க வேண்டும். எங்காவது வேலை காலியிருப்பின் அதற்கு மனுச்செய்து கொள்ள வேண்டும். அல்லது நேரில் சென்று பார்வையிடவேண்டும். இவரைப்போன்று பல்லோர் அங்கு விஜயஞ்செய்திருப்பார்கள். அவர்களெல்லாரினும் தனக்குத்தான் அதிர்ஷ்டம் வரும் என்று எவ்விதம் தான் எதிர்பார்க்க முடியும்? இவ்விதமாக பணச்சிலவும், வீண் சிரமமும்பட்டு வாடும் சகோதரர் நூற்றுக் கணக்கானவர்கள். "அட கெடுவாய், பலதொழிலுமிருக்கக் கல்வி அதிகமென்றே கற்றுவிட்டேன். அறிவில்லாமல்—திடமுளமோ கன்மாடக்களைக் கூத்தாடச் செப்பிடு வித்தைகளாடத் தெரிந்தோமில்லை; தையலர் தம்மிடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை; தடமுலை வேசையராய்ப் பிறந்தோமில்லை.........." என்று பலவாறாக வறுமை வாய்ப்பட்டப் பழங்காலத்துப் படித்த புலவன் ஒருவன் மனங்கசிந்து உருகினனும். அவர்களின் கூட்டத்தில் சேர்ந்தவராகவும்

நமது துறவி இருக்கலாம். எதற்கும் நாம் விரைவில் சென்று அவர்களைச் சந்தித்து, விசாரித்து இவனை கூப்பிட்டு வருவோம்'' என்று கூறிவிட்டு "புவனேந்திரா'' என்று கூப்பிட்டான்.

மறு நிமிஷம் ஓர் அசுவம் வந்து நின்றது. அந்த அசுவம் சிறு வயதாயிருக்கும்போதே—குட்டியிலேயே மனோஹரனுக்கு அவனது தந்தையரால் அளிக்கப்பட்டது. மனோஹரன் அப்புரவியைத் தன் உயிரைப்போன்றே நேசித்து வந்தான். அதற்குப் பற்பல வித்தைகளையும் கற்பித்தான். வெண்ணிறமும், நிமிர்ந்த தலையும், சற்றேறக் குறைய 6 அடி உயரமுள்ள அவனது அசுவம், அவனைப் போலவே கெம்பீரமாயிருந்தது. இவனது குரலைக்கேட்ட அசுவம் ஓடோடியும் வந்து இவனது பக்கலில் நின்றது. ஆனந்த மிகுதியினால் மனோஹரன் அதனைத் தட்டிக்கொடுத்தான். தனது காதலனுடைய பூர்வீக சொத்தாகிய அசுவத்தை புவனேசுவரி கண்ணுற்றவுடன் மனம்பூரித்தாள். அவ்வசுவத்தின் முகத்தைத்தனது கையால் தடவிக்கொடுத்தாள். அது தனது எஜமானியம்மாளுக்கு வந்தனஞ்செய்வதைப் போன்று நிமிர்ந்திருந்த தனது தலையைச் சிறிது தாழ்த்தி பின் நிமிர்த்திக்கொண்டது. மறு நிமிஷம் இருவரும் அதில் ஏறிக்கொண்டனர். அசுவமும் வாயுவேகம் மனோவேகமும் பின்னிடத்தக்க விதமாக பறந்து செல்லலாயிற்று.

---

முதற்பாகம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—10

## மகாநாட்டில் பிரார்த்தனை.

நாம் முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டவண்ணம் "புவனேந்திரன்" என்ற அசுவத்தின் மீதேறி மனோஹரனும் புவனேசுவரியும் செல்கின்றதை மனோஹரபுரத்திலுள்ள ஜனங்கள் யாவரும் பார்த்து ஆச்சரியமடைந்தனர். அசுவம் செல்லும் வேகத்தால் பூமியிலுள்ள மண் (புழுதி) காற்றினலடிக்கப்பட்டு எங்கும் புகைபோல் தோன்றுகிறது. இவ்விருவரையும் கண்ணுற்ற ஜனங்கள் தமது நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டனர். ஆனல் அநேக, பருவமுள்ள கன்னிப் பெண்கள் மாத்திரம் பற்பலவாருக தம்முள் எண்ணமிட்டுக் கொண்டனர். அவர்களது மனம், புயலிலகப்பட்ட மரக்கலம் போன்று தத்தளித்தது. அவர்களில் சிலருடைய அபிப்பிராயத்தை இங்கு குறிப்பிடுவது நன்று. ஆதலால் அதை ஆராய்வோம்:—

ஒரு பெண்:—"அடீ! இதென்னடீ புதுமையாயிருக்கிறது? நான் இளவரசனின் மனோஹரமான தோற்றத்தைக் கண்டதும் எனது உள்ளம் பூரிக்கின்றது. ஆஹா! என்ன வடிவழகு! என்ன ஒய்யாரம்! என்ன கெம்பீரமான தோற்றம்! இவரன்றே உண்மையான ஆண்மகன்! இவரைத் தனது கணவராக ஏற்றுக்கொள்ளும் பெண்மணி முன் ஜென்மத்தில் மகத்தான சேவைகளை—புண்ணியங்களைச் செய்திருக்கவேண்டும்!"

பிறிதொரு பெண்:—அவரது வசீகரமான தோற்றம் பார்ப்பவருள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றது. நமக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவைத்தது அவ்வளவுதான். அப்பழுக்கற்ற மன திணயுடைய அவர் எல்லாரிடத்திலும் சகோதரனைப் போன்று நடந்துகொள்கிறார். என்றாலும் நம்முடைய மனம் அவ்வாறில்லை. அவருடைய தோற்றம் நம்மைத் துன்புறுத்துகின்றது. அவரை நம் மனதிலிருந்தும் அகற்ற முடியாமல் தத்தளிக்கின்றோம். என் செய்வது?"

மற்றவள்:—"இளவரசருடன் செல்லும் பெண்மணி நல்ல பாக்கியம் பெற்றவள். அவருடன் சம அந்தஸ்தில் வீற்றிருக்கும் காலம் எப்போது யாருக்குக் கிட்டும்? ஒரு வேளை இளவரசர் அம்மட மயிலாளையே மணந்தாலும் மணப்பார். அவ்விதமாயின் அவள் எவ்வளவு மகிழ்ச்சி யடைவாள்? நம்மவர்களுள் இதுகாலை யாதொரு குறைவு மில்லையென்றாலும், இளவரசரின் வசீகரமான முகம் நம்மன தில் எப்போதும் தோன்றி நம்மைப் பைத்தியங்கொண்ட வள்போலாக்குகின்றது. இதை மாற்ற இளவரசரிடம்தான் தகுந்த ஔஷதமுளது. எனக்கு வைத்தியஞ்செய்து நமது பைத்தியத்தை நீக்க அவர் முற்படுவாரா?"

இன்னொரு பெண்:—இளவரசரின் மேன்மையான குணங்களும், வசீகரமான தோற்றமும், வீரமும், புத்தி சாலித்தனமும், தீர்க்காலோசனையும், குடிகள்பால் கொண் டுள்ள அன்பும், சுயநலமற்ற தியாகமும், பேச்சுவன்மையும் என்னை அவருக்கு அடிமைப்படுத்திவிட்டது! இவ்வூர் மக்கள் யாவரும் சுதந்தர வாழ்க்கை நடத்தி வருகின்றனர். நானும் அவ்விதமே. என்றாலும் உத்தமராகிய மனோஹர ருக்கு மாத்திரம் நான் அடிமைப் பட்டுவிட்டேன். இவ் வடிமைத்தனத்தை எவ்வாறு அகற்றுவது? இது முடியாத காரியமென்றே உன்னுகிறேன். இதற்கு விமோசனம் உண் டாக்கும் சக்தி அவரிடமேயுளது! அவரை எண்ணுந்தோ றும் எனக்கு ஓர்வித நவீன உணர்ச்சி எழுகின்றது! மட் டற்ற ஆனந்தம் பொங்கிவழிகின்றது! மறுநிமிஷம் ஏக்க முண்டாகிறது! எல்லாம் அவன் செயல்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு பெண்:—"மனோஹரரே! நீர் பெண்மக்களின் மனதைக் கொள்ளைகொள்ளும் வீரசிகாமணியே யாவர். உம்மைக் கண்டவர் எவராயினும் சரி உமக்கடிமையாகிவிடுவர் என்பது உமது செய்கையில் நிரூபணப் படுத்தப்பட்டுவிட்டது. உம்மை நாங்கள் காதலிப்பது மேன்மையல்ல. என்றாலும் உமது தோற்றம் எங்களைக் கொள்ளைகொள்கின்றது. நீர் எத்தனை பேர்களைத்தான் அடிமைச் சங்கிலியால் விலங்கிட்டீரோ? நான் இவ்விதம் ஏக்கமுறுவதை உம்மிடம் யார் சொல்லப் போகின்றார்கள்? "அக்பர் சக்கரவர்த்தியின்பால் அக்காலத்துப் பெண்மக்கள் மோகங்கொண்டு பெருமூச்செறிந்தனர்" என்று படித்த மேதாவிகள் கூறியது இதுகாலை எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அக்காலத்தைப்போன்றே இக்காலத்திலும் பெண்கள் (உம்மீது) காதல் கொண்டுள்ளனர். ஆதலால் இதில் குற்றமொன்றுமில்லை என்றே கருதுகிறேன். நிரபராதியாகிய என்னை மகிழ்விப்பது உமது கடமையேயாகும்! ஆம். அக்கடமையை நிறைவேற்றும் காலம் வரை என் போன்றோர்க்கு மன நிம்மதி ஏது?

பின்னுமொரு பெண்:—"நமது கஷ்டங்களை நீக்கி நமக்கு சகல பாக்கியங்களையும் நல்கிய மனோஹரர் என்போன்றவர்கள் விஷயத்தில் மாத்திரம் ஓர் குறையை வைத்துவிட்டார். என் செய்வது! உடலற்ற காமன் தனது அம்புராசிகளைத் தொடுக்கின்றதுபோல அதோ செல்லும் வீரகேசரியிடம் தனது சாமர்த்தியத்தைக் காட்டினால் என்ன? அவனது பக்கத்தில் சென்றாலும்கூட காமன் என்னும் நெஞ்சிரக்கமற்றவனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடுவானன்றோ? பாவம். அபலையான பெண்ணாகிய என்னிடத்து நீ உனது சாமர்த்தியத்தைக் காட்டுகிறாய்! பேஷ்! நன்றாயிருக்கிறது! குற்றுயிருடன் தவித்து நிற்கும் சர்ப்பத்தை ஒருவன் பெரிய கோல் கொண்டு தாக்கியதைப் போன்றுதான் உனது செய்

கையும் இருக்கின்றது. எனது துர் அதிர்ஷ்டம் அம்மனோஹரரிடம் குடிகொண்டுள்ள ஆண்மை—வீரம் எனக்குச் சிறிதுகூட இவ்விஷயத்தில் இல்லாதொழிந்தது. தைரிய லெக்ஷ்மி என்னிடமிருந்தும் சிலவு பெற்றுக்கொண்டு அவ் வீரபுருஷரிடம் சென்றுவிட்டாள் போலும்! ஆதலால் நான், என்னைக் கொள்ளைகொண்ட பூமானையே எதிர்பார்க்க வேண்டிய நிலைமையிலிருக்கிறேன். நாங்கள் விரும்பும் சகல வசதிகளையும் மனமுவந்தளித்து எங்களை மகிழ்விக்கும் அவ்வருங் குணபூஷணர் இவ்வழியில் ஏன் எங்களின் குறைகளை—ஏக்கத்தை நிறைவேற்றி எங்களை நிறைவேற்றக் கூடாது?"

மற்றொரு பெண்:—"புவனேசுவரி! நீதான் அதிர்ஷ்டசாலி! மனோஹரரைக் காதலராக ஏற்றுக்கொள்ளும் உனக்கு என்ன கவலை இருக்க முடியும்? என் சகாவாகிய—பெண்ணாகிய நீ எனது மனக்கவலையை உனதுயிர்க் காதலரிடம் தெரிவித்து அக்குறையை நிறைவேற்றக்கூடாதா? நீ கூறின் அவர் அவ்விதமே நடந்து எம்மை மகிழ்விப்பார். பொது மக்களின் க்ஷேமத்திற்காக தமது உயிரையுங்கூட மனமகிழ்ச்சியுடன் தியாகஞ்செய்ய சித்தமாயிருக்கும் அம்மகான் இதில் சிறிதும் பின்னடையமாட்டார். மந்தகாசமான முகத்தின் தோற்றத்தைக் கண்டதும் என்மனம் மகிழ்கின்றது, அவருடைய மெல்லிய ஒலியை செவியுரும்போது நான் தெய்வலோகத்திலிருப்பதாகவே எண்ணுகிறேன். சாந்த சொரூபியாகிய நினது காதலர் எம்குறையையகற்றி எம்மை மகிழ்விக்கும் காலம் வரும்வரை நான் நரகவேதனையையே யடையவேண்டியதாயிருக்கிறது! கருணைவள்ளலான கடவுள் என் விஷயத்தில் மௌனஞ்சாதிப்பது வருந்தத்தக்கது. ஆண்டவன் அருளிருந்தால் அனைத்தும் அரை நிமிஷத்தில் நிறைவேறி விடும்.

கடைசிபெண்:-"மனோஹரா! எனது சுகவாழ்விற்குரிய மருந்து உன்னிடமே உளது. அதை நான் அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவிக்கும் காலத்தை எப்போது நல்கப்போகிறாய்? காதல் மனோஹரா! கன்னிப்பெண்ணாகிய நான் உன்னைக் காதலித்ததினால் எனது கற்புக்குபங்கம்—இழிவு நேர்ந்துவிடாது! உன்னைத்தவிர நான் வேறொருவரையும் இதுநாள் பரியந்தம் எனது மனக்கோட்டையில் புக இடமளிக்கவில்லை. நீ எனது மனதில் புகுந்து என்னை கொள்ளைகொண்டுவிட்டாய்! என் உயிரையே ஒரே கௌவாக கௌவிபற்றிக் கொண்டாய்! ஈசன் என்னிடம் சிற்றங்கொள்ளார். நான் பதிவிரதை என்பதே எனது அபிப்பிராயம். உண்மையாகவே நான் உன்னையே எனது இன்பக்காதலராக ஏற்றுக் கொண்டேனேயன்றி பிறிதொருவரையும் நான் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. இந்த உண்மையை ஈசனே உன்னிடம் பகர்ந்து எனது மனோபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டும். நீயும் நானும் இன்பக்கடலில் மூழ்கி இன்பம் நுகரும் காலம் அதிவிரைவில் கிட்டுமா?'' என்று இவ்வாறெல்லாம் அநேக கன்னிகைகள் தம்முள் மனோஹரனைப் பற்றி சதா சிந்தித்துக்கொண்டு—ஏக்கங் கொண்டனர். இனி நாம் மனோஹரரைப்பற்றி ஆராய்வோம்.

நமது மனோஹரனும் புவனேசுவரியும் முன் காவலன் கூறிய இடத்திற்கு வந்தனர். அங்கு ஓரிடத்தில் துறவி கோலம் பூண்ட ஒருவரும் ஒருபெண்ணும் தென்பட்டனர். அவர்களைக்கண்டதும் இவ்விருவருக்கும் ஆனந்தம் பொங்கி வழிந்தது. அசுவத்தை விட்டிறங்கி இருவரும் கால்நடையாக ஞானியின்பக்கலில் சென்றனர். சென்றதும் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு வணங்கி நின்றனர்.

ஞானியோ மூடினகண்களைத் திறக்கவேயில்லை. அவர் நிஷ்டையிலிருந்தும் கலையவெகு நேரமாய்விட்டது. மனோஹரனுக்கும் புவனேசுவரிக்கும் கால் நோவெடுத்தன. என்றாலும் அதை பொருட்படுத்தாமல் ஞானியரையே தொழுதவண்ணமாயிருந்தனர். எங்கும் நிசப்தம் குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. சிலு சிலுப்பான காற்று மெதுவாக வீச லாயிற்று. இவர்களின் காக்ஷியைக் கண்ணுற்ற பூர்ணசந்திரன் தனது ஒளியை வீசி எறிந்தான். ஞானியாரின் உடலில் சந்திரனின் ஒளிபட்டமாத்திரத்தில் பளிங்கைப்போன்றும் பிரகாசித்தது. 20வயதில் சகலதையும் துறந்து அஞ்ஞானத்தினின்றும் விலகி, மெய்ஞானத்தை கடைபிடித்தொழுதும் அம்மகான் உயர் குடிப் பிறவிபோன்று தோன்றினர். பால்போன்ற நிலவும் கூட அவரது திரேகத்தில் பட்டால் திரேகம் களைத்து விடுமோ என்றஞ்சியவாறு போல அருகிலிருந்த விருக்ஷங்கள் இடையிடையே அங்குமிங்கும் அசைந்து சந்திர ஒளியை மறைத்தன. இளவரசியையும் இளவரசனையும் கண்ணுற்ற வனவிலங்குகள் இருவரையும் அணுகின. இவர்களைக் கண்டதும் துள்ளிக் குதித்து விளையாடும் அவ்விலங்கினங்கள் இன்று இவ்விருவரையும் போன்று நிஷ்டையிலிருக்கும் ஞானியை தொழுவனபோன்று அவர் முன் மண்டியிட்டு அமர்ந்தன.

இவ்விதமாக, நீண்ட நேரஞ்சென்றபின் ஞானி தமது கண்களை விழித்தார். உடனே இளவரசனும் இளவரசியும் முறையே "சுவாமி! நமஸ்காரம்" என்று வணங்கினர். ஞானியும் "மங்களமுண்டாகுக!" என்றுகூறி அமரச் செய்தார்.

இளவரசன் —"சுவாமி! நாங்களிருவரும் இதற்கடுத்துள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள். எமது எல்லைக்குள் அந்நியர் எவரேனும் பிரவேசித்தால் அவரைக் கைது செய்து எம்முன் நிறுத்தும்படி எமது காவலர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளோம். ஆதலால் அவர்கள் இரவும் பகலும் இவ்விடங்களில் சுற்றியலேவார்கள். தங்களைக் கண்டதும் எமது காவலர் எம்மிடம் வந்து தெரிவித்தனர். ஆதலால் நாங்கள் தங்களைக் கண்டு தெரிசிக்க இவண் வந்தோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானி:—"நண்பரே! அவ்விதம் கட்டளை பிறப்பிக்க வேண்டியதின் காரணம் யாது?"

இளவரசன்:—சுவாமி! நான் சிறு வயதாயிருக்கையிலேயே எனது பெற்றோர் மாயமாய் மறைந்துவிட்டனர். எனக்கு ஓர் சகோதரன் உண்டு. அவர் பேராசை, சுயநலம், மூர்க்கத்தனம், இழிந்த நோக்கம் முதலிய தீய குணங்கள் ஒரே உருவெடுத்து வந்தவர்போன்று காணப்பட்டார். எனது பெற்றோர் மாயமாய் மறைந்ததின் விபரம் இன்னாள் வரையும் மர்மமாகவே இருக்கின்றது. சிறு வயது முதலாக எனது சகோதரருக்கு தான் இராஜ்ஜியத்தை ஆள வேண்டுமென்ற எண்ணம் தோன்றி வதைக்கலாயிற்று. ஆதலால் அவரால் எனது பெற்றோர்க்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டிருக்கலாமென்றும் அஞ்சுகிறோம். எனது பெற்றோர் மாயமாய் மறைந்த மறு நாளே எனது சகோதரர் அரசனாகிவிட்டார். அத்தேசத்திலுள்ள பெண்மக்களை எல்லாம் தனது மிருக ஆசையைப் பூர்த்தி செய்யும் கருவியாகவே கருதி நடத்தலானார். அவர் இழிந்த நோக்கத்திற்கு இணங்காத பெண்டிருக்கு தூக்குமரம்தான் கதி. விலைமதித்தற்கரிய கற்பை இழந்து தவிக்கும் பெண்களை நான் காணுந்தோறும் எனது மனம் துடிதுடிக்கலாயிற்று. இவ்வக்கிரமங்களைச் சிறிதும் பயமின்றி இயற்றும் இராஜன் என்ற அந்தஸ்திலுள்ள எனது சகோதரருக்கு நான் வேண்டிய நீதிமொழிகளைக் கூறினேன். மன்றாடினேன். கண்ணீர் வடித்தேன். என்றாலும் அவரது மனம் சிறிதும் கூட இளகவில்லை. காவலரை நோக்கி, என்னை அரண்மனையினின்றும், வெளியில் தள்ளும்படி கட்டளையிட்டார். அக்காவலர்கள் என்னருகில் வந்து எனது முகத்தை நோக்கி வருந்தினர். அவர்களது கண்களிலும் நீர் ததும்பலாயிற்று. என்னை அவர்கள் வெளியில் தள்ள முற்படவில்லையாதலால் அவர்களுக்கு ஏதேனும் தண்டனை கொடுக்கப்படலாமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஞ்சி நானே வெளியில் வந்துவிட்டேன். அரசனது சுக போகங்களுக்கே மக்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின் றனர் என்றும், அரசன் என்ற அந்தஸ்தில் வீற்றிருக்கும் தன் சேர்க்கையை பெண்கள் அன்புடன் ஏற்றுக்கொள்கின் றனர் என்றும், இது பாவமல்ல என்றும், தனக்கு பாவ புண் ணியங்களை யறியும் ஆற்றல் இருப்பதாகவும், ஆதலால் தனக்குச்சிறுவனுகிய நான் உபதேசஞ்செய்யவேண்டிய அவ சியமில்லை யென்றும் மமதையோடு என்னிடம் கூறினர். சிறிதுகாலத்திற்குள் கஜானுவில் எல்லாம் காலியாகிவிட்டது. வரவு சிலவை நேர் செய்யமுடியாமல் விதம் விதமான வரி களை உற்பத்தி செய்தார். நாகரீகமான—கொடிய சட்ட திட்டங்களை இயற்றி மக்களைக் கொல்லாமல் கொன்ருர். தயை, தாக்ஷண்யம், நீதி, தர்மம், என்பன போன்றவை கொழுந்துவிட்டெரிந்த எமது நாட்டில் இதுகாலே மிருக பலம், அதர்மம், அநியாயம், கொடுங்கொன்மை, வறுமைப் பிணி முதலிய கொடிய தொத்து நோய்கள் தாண்டவமாடு கின்றன. இவைகளையெல்லாம் கண்டறிந்த நான் திகைத்துப் போனேன். என்னையறியாமலே திகில் என்னைப் பிடித்துக் கொண்டது. மக்களின் அலறுதலைக்கேட்டு மனம் வெதும் பினேன். கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற் வாழ் வதைவிட கடும்புலி வாழுங் காடு நன்றே என்ற ஆதிமொழி யை உன்னி இக்கானகத்தில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். என் குணத்தையொத்த ஆண் பெண் இருபாலரையும் சேக ரித்து இக்கானகத்தில் ஓர் மலையடிவாரத்தில் கிராம மொன்றை ஏற்படுத்தி வாழ்ந்துவருகிறோம். எமது சகோ தரர் இதையறிந்தால் அவர் ஏதேனும் சூழ்ச்சிசெய்து எங் களைத் தொலைத்துவிடக் கூடுமென்றஞ்சியே இவ்வாறு பலத்த காவலை ஏற்படுத்தியிருக்கின்றோம். இதுவே எங்களின் வரலாறு முற்றத்துறந்த ஞானியரைக்கண்டால் அவர்களை எமது சிறு கிராமத்திற்கு எழுந்தருளும்படி செய்வது எங்

களது இயல்பு. அதைப்போன்று தங்களையும் நாங்கள் எமது கிராமத்திற்கு விஜயஞ்செய்யுமாறு வெகு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஞானி:—"அன்பா! உனது சரித்திரம் மிகவும் உருக்கமானதொன்று. இவ்விதமான ஓர் குழந்தையைப் பெற எவ்வளவு காலம் உனது தாய் தந்தையர் தவமியற்றினரோ! ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக உனது மேன்மையான குணங்களையும், நடத்தையையும், வீரத் தன்மையையும் கண்டு களிக்கும் பாக்கியம் நினது பெற்றோர்க்கு வாய்த்திலது. இதுகாலை நீ ஒன்று மாத்திரம் நித்தியச் செய்கையாக நடத்தவேண்டும். இதை நீ இதுகாலை அனுஷ்டித்து வந்திருப்பாயென்றே நம்புகிறேன். அதாவது உனக்கு இவ்விதமான யுக்தியையும், பரந்த நோக்கத்தையும் அளித்த ஜெகதீசனை அனுதினமும் துதிக்கவேண்டுமென்பதே. என்னை உனது கிராமத்திற்கு அன்புடன் அழைக்கிறாய். உனது வேண்டுகோளுக்கு நான் இணங்கவேண்டியதாயிருக்கிறது. இக்கானகத்தில் மலையடிவாரத்தில் அமைக்கப்பட்ட உனது கிராமத்தில் ஜனங்கள் யாவரும் க்ஷேமந்தானே? அவர்களுக்கு என்னென்ன வசதிகளையளித்திருக்கிறாய். உனது துர் அதிர்ஷ்டம் உனது சகோதரன் தீய நெறியில் பிரவேசித்துவிட்டான். 16 வயதினனாகிய நீ சற்றும் கிலேசமின்றி இக்கானகத்தில் கரந்து வாழ்வதை நான் மனப்பூர்வமாய்ப் பாராட்டுகிறேன். யாதொரு கவலையுமின்றி நீ நீடூழிவாழவேண்டுமென்று எம்பெருமானைத் துதிக்கிறேன்."

மனோ:—"பெரியாரே! தங்களது ஆசீர்வாதம் பெற நான் முன் ஜென்மத்தில் மகத்தான தியாகங்களைச் செய்திருக்கவேண்டும். எமது கிராமத்தில் சகலரும் க்ஷேமமாக இருக்கின்றனர். எனக்கு என்னென்ன வசதிகள்—சௌகரியங்கள் அவசியமோ அவைகளை எல்லாம் எமது குடிஜனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு அளித்திருக்கிறேன். அவர்கள் சுதந்தர வீரர்களாக திகழுவதைக்கண்டு நான் தினமும் ஆனந்தமடைகிறேன். இதோ என்னுடனிருக்கும் செல்வி புவனேசுவரியும் தனது பெற்றோரை விட்டுப்பிரிந்து கானகத்தில் ஓர் மரத்தடியில் இருந்தாள். அதாவது இவள் தனது பெற்றோருடன் கான கத்தில் வேட்டையாட வந்திருக்கிறாள். ஓர் விலங்கைப் பின்தொடர்ந்து சென்ற இவளது பெற்றோர் இதுநாள்வரை யும் மீளவில்லை. அவர்களைத் தேடிப்பிடிக்க அநேக ஒற்றர் களை அனுப்பியும் யாதொரு தகவலும் கிடைக்கவேயில்லை. ஈற்றில் அவர்களால் இவளது தாய் தந்தையரைக்கண்டுபிடிக்க முடியவில்லையென்றே திரும்பி வந்துவிட்டனர். இவள் தனது பெற்றோருடன் வந்திருந்த அன்று மாலை இவளைக் கண்டு நான் எனது கிராமத்திற்குக் கொணர்ந்தேன். எனக்கு இப்பெண்மணி வேண்டிய உதவிசெய்து வருகி றாள். எனது சுகதுக்கங்களைக் கண்ணிமை காப்பதுபோன்று கவனித்து வருகிறாள். தக்க சமயத்தில் வேண்டிய யுக்தி களையும் புகன்று என்னை மகிழ்விக்கின்றாள். கருணைவள்ள லான கடவுள் என்மீது கருணை கூர்ந்து எனக்கு உற்ற துணையாக இப்பெண்கள் திலகத்தை அனுப்பியிருக்கிறார் போலும்! சுவாமி! முற்றத்துறந்த ஞானியரை நாங்களிரு வரும்—ஏன்—எங்கள் கிராமஜனங்களே விசாரிப்பதில் பிரீதி யுடையவர்கள். ஆதலால் எனது வேண்டுகோளுக் கிணங்கி எமது அவாவைப் பூர்த்திசெய்யும்படி கேட்டுக்கொள்ளு கிறேன்.''

புவனேசுவரி:—''சுவாமி! நானும் இரண்டொரு வார்த் தைகளைப் பேசவிரும்புகிறேன். நாங்களும் எமது நாட்ட வரும் ஞானிகளுடைய—துறவிகளுடைய வாக்கைத்தெய்வ வாக்காக மதித்து அதன்படி நடந்து அவர்களுடைய மன தைக் குளிரச்செய்துள்ளோம் என்பதைத் தாழ்மையுடன் எமது நாட்டவரின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன். அதன் பயனாக நாங்கள் மகத்தான ஜெயலாபங்களை அடைந்துள்ளோம். ஆதலால் ஞானியரை நாங்கள் உள்ளன்புடனும் அந்தரங்க சுத்தியுடனும் வரவேற்றுபசரித்து அவர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்றுவருகின்றோம். அதைப்போன்று தங்களையும் நாங்கள் தெய்வம்போல் கருதி தங்களை வணங்குகின்றோம். எங்களது மனதில் உற்சாகத்தை யளிப்பதற்காகவே தாங்கள் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். தாங்கள் எமது நாட்டுக்கு விஜயஞ் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். எமது வேண்டுதலைத் தாங்கள் நிராகரிக்கமாட்டீர்கள் என்பதைத் திட்டவட்டமாக அறிந்திருந்தும் இவ்விதம் வற்புறுத்திக் கூறுவதை மன்னிக்கவும். தங்கள்பால் கொண்டுள்ள பக்தி மிகுதியினாலேயே இவ்விதம் வற்புறுத்திக் கூறுகிறோமென்பதனையும் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு அதிகமாக சிறியாளாகிய என்னால் கூறக்கூடியது யாதொன்றுமில்லையென்றே நம்புகிறேன்" என்று புவனேசுவரியும் கேட்டுக்கொண்டாள்.

நமது துறவியும் இவர்களின் வேண்டுதலுக்கிணங்கி இவர்கள் வாசஞ்செய்யும் மனோஹரபுரம் என்ற கிராமத்திற்கு விஜயஞ்செய்ய உத்தேசித்தார். தமது பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, தம்முடன் பின்தொடர்ந்த சிறுமியுடன் பயணமானார். மறு நிமிஷம் கழுத்திலும், கால்களிலும் கெட்டியமணிகள் சப்திக்க கெம்பீரமான தோற்றமும், நிமிர்ந்த தலையுடனும் கூடிய இருகாளைதள் பூட்டிய வில்வண்டி வந்து நின்றது. மனோஹரனின் வற்புறுத்தலுக்கிணங்கி துறவி அதில் ஏறிக்கொண்டார். பின்பு மற்றவர்களும் அதில் ஏறிக்கொள்ள வண்டியும் புறப்பட்டுச் சென்றது. மனோஹரனின் அசுவமும் இவ்வண்டியைப் பின்தொடர்ந்தே வந்தது. காட்டு விலங்கினங்கள் இவர்களை வழியனுப்பும் முகத்தான் சிறிது தூரம் பின்தொடர்ந்தபின் சென்றுவிட்டன. சிறிது நேரத்திற்குள் மனோஹரபுரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்தனர். இவரைக்கண்டு தெரிசிக்க அக்கிராம ஜனங்கள் யாவரும் வந்துவிட்டனர். எல்லோரையும் அன்புடன் வரவேற்று அவர்களுக்குச் சில முக்கியமான விஷயங்களைக் கூறி அனுப்பினர்.

இவ்விதமாக, அநேக நாட்கள் சென்றுவிட்டன. இவருடைய ஆசிர்வாதத்தைப்பெற தினேதினே (அக்கிராம) ஜனங்கள் இவரைத் தெரிசித்துச் சென்றனர். நமது ஞானி பெரியமாளிகைகளை விரும்பாது வெளியிடங்களிலேயே தங்குவார். நிஷ்டையிலிருப்பதும், சயனிப்பதும் வெளியிடங்களில்தான். அறுசுவை உண்டிகளை விரும்பாது கந்தமூல பலாதிகளையே பிரீதியுடன் உணவாகக்கொள்வார். இவருடைய உத்தரவுப்படி, இவரைப் பின்தொடர்ந்த "பர்வதவர்த்தினி" என்ற பெண் பாடசாலைக்குச் சென்று கல்வி பயின்று வந்தாள். காலையிலும் மாலையிலும் அவ்வூர்வாசிகள், முக்கியமாக, மனோஹரன், புவனேசுவரி, பர்வதவர்த்தினி ஆகிய மூவரும் நமது துறவியைத் தொழுதபின்பே மற்ற அலுவல்களைப்பற்றி சிந்திப்பர். முன் நாம் குறிப்பிட்ட பொது ஜனங்களின் கூட்டம் நடைபெறுங் காலையில் அக்கூட்டத்திற்கு இவரும் விஜயஞ்செய்து பற்பல நீதி மொழிகளை உபதேசிப்பார். பாவபுண்ணியங்களை விளங்க உரைப்பார். பகவத்கீதை, இராமாயணம்போன்ற உயரிய நூல்களிலிருந்தும் பற்பலஉதாரணங்களை எடுத்துக்காட்டுவார் இவருடைய இனிய ஒலியையும்—குரலையும், சுந்தரவடிவையும், புத்திக்கூர்மையையும் பேச்சுவன்மையையும் கண்டானந்தித்த பொதுஜனங்களின் மனதில் இவர் ஏன் இவ் விளம்பிராயத்தில் இக்கோலங் கொள்ளவேண்டும்? என்ற ஐயப்பாடு எழுந்து அவர்களை வதைக்கலாயிற்று. ஒரு நாள் பொதுமக்கள் யாவரும் மனோஹரவிலாஸ் மாளிகைக்கு வந்து தமது ஐயப்பாட்டை மனோஹரனுக்கும் புவனேசுவரிக்கும் தெரிவித்து இதற்குக் காரணம் யாதென்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறிந்து தம்மிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அவ்விருவரும் இதற்குச் சம்மதித்து தாங்கள் அவ்விதமே தெரிவிப்பதாக விடைகூறி அவர்களை அனுப்பிவிட்டனர்.

காதலர் இருவரும் ஆழ்ந்தயோசனையிலீடுபட்டனர். இதை எவ்விதம் அறிவது? பர்வதவர்த்தினியோ இடைவழியில் பின்தொடர்ந்த பெண். அவள் மூலம் யாதொன்றையும் எதிர்பார்க்க முடியாதென்பது வெட்டவெளிச்சம். அவளும் இதையறிய ஆவலுடையவளாகவே இருக்கிருள். அவ்விதமிருக்கையில், தாம் எவ்விதம் இதை ஞானியிடம் வினவுவது? என்ற சிந்தனையிலீடுபட்டு ஒருமுடிவுக்கு வர வெகுநேரமாய்விட்டது. அடுத்த மகாஜனக் கூட்டத்திற்கு ஞானி விஜயஞ்செய்வாரன்றோ? அப்போது தாம் தமது ஐயப்பாட்டை வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்தனர்.

குறிப்பிட்ட நாளில் மகாநாடும் கூடியது. எல்லோரும் ஆண் பெண் இருபாலாரும் விஜயஞ்செய்திருந்தனர். பற்பல விஷயங்களைப்பற்றி பேசியபின் நமது இளவரசன் மீண்டும் எழுந்து பேசலானன். உடனே யாவரும் கைகளைத் தட்டி தமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டனர். மறுநிமிஷம் இவருடைய சொற்பொழிவை செவியுற எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. குடிஜனங்களின் மகிழ்ச்சியையும் தன் மீது கொண்டுள்ள அன்பையும் அறிந்து மனோஹரன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். பின்பு பேசவாரம்பித்தான்:—

“சகோதர சகோதரிகளே! யாதொரு குறைவுமின்றி சந்தோஷமாய் சுதந்தரத்துடன் வாழும் இக்கிராமஜனங்களாகிய நமக்கு இதுகாலை ஒரு கவலை மாத்திரம் இருந்து கொண்டுவருகிறது. அக்கவலையை நீக்க நம்மிடையில் மங்கா புகழ்ச்சியுடன் குன்றின் விளக்குபோன்று ஒளிரும்மகானல் தான் முடியும். நம்மவர்களின் மனதை சந்தோஷப்படுத்த அவ்வப்போது நீதிமொழிகளைக் கூறியும், வேண்டிய யுக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்புகட்டியும் நமது கிராமத்தை வளம்மிக்க நாடாகத் திகழும்படிசெய்த புகழுக்குரியவராகிய அம்மகான் இத்துறையிலும் தமது கருணையைச்செலுத்தி நம்மவர்களின் ஐயப்பாடை நீக்குவார்களென நம்புகிறோம். அதாவது இருபதாம் வயதில் உலகவாழ்க்கையில் வெறுப்புற்று சகலமும் துறந்து சந்நியாசகோலம் கொள்ளவேண்டியதின் காரணம் யாதென்பதே நம்மவர் அறிய விரும்பும் இரகசியம். நமக்கு வழிகாட்டியாக இருக்கும் ஒருவருடைய சரித்திரத்தை நாம் அறியவேண்டியது முக்கியமன்றோ? இவ்விதமான உலக சிரேஷ்டர்களின் வாழ்க்கைச் சரிதையை நம்மவர் அறிந்து அதன்படி நடந்துகொள்ளவேண்டிய அரும்பெரும் செயல்கள் பொதிந்து கிடக்குமன்றோ? நமது ஞானியரின் வாக்கை சிரமேற்கொண்டு நடந்துவரும் நம் கிராம ஜனங்கள் அவருடைய ஜீவிய வரலாற்றையும் அறிந்து அதன்படி நடப்பார்கள் என்று நான் கூறுமலே விளங்கும். புயலில் அகப்பட்ட ஓர் மரக்கலம் நடுக்கடலில் தத்தளிப்பதைப்போன்று நமது கிராம ஜனங்கள் வருந்தும்போது, கருணைவள்ளலான கடவுள் நமக்குத்துணையாக புவனேசுவரி என்ற அருங்குணபூஷணியை அனுப்பித் தந்தார். அப்பெண்கள் நாயகத்தின் விசேஷ குணங்களை நான் இங்கு விளங்கக் கூறுவது வீண் காலதாமதமேற்படுவதுமன்றி பொன்குடத்திற்குப் பொட்டிட்டதுபோன்றாகும். இதைப்போன்று நமக்கு நீதிமொழிகளை உபதேசிக்க, மணிமுடியையும், செங்கோலையும், கனகாசனத்தையும், காமனும் கண்டு காமுறும் காதற்கிழத்தியையும் கடந்த ஞானியரும் கடத்தற்கறிய என்ற மகவிடத்திலுள்ள வாஞ்சையையும் புறக்கணித்துவிட்டு உலகமாந்தர் உய்வதற்குரிய நெறியொன்றை உசாவியறிந்த பகவான் புத்தனைப்போன்று வடிவுள்ள இம்மகானை நமக்கு மனமுவந்து சர்வேசுவரன் அனுப்பியிருக்கிறான். தேவனுல் அனுப்பப் பட்டிருக்கும் தேவ குமாரராகிய இவருடைய ஆசீர்வாதத்தைப்பெற,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் ஜென்மத்தில் நாம் எவ்வளவு தியாகங்களைச் செய்தோமோ அறியோம். சில வருடங்களுக்கு முன், "நாம் இன்று இவ்வித நிலையிலிருப்போம்" என்று கனவிலும்கூடக் கருதியிருக்கமாட்டோம். எனது சகோதரனின் "சுய நலம்" என்ற பலிபீடத்தில் நம்மவர் நிச்சயமாக பலியிடப்படுவோம் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நல்லதிர்ஷ்டவசமாக ஆபத்பாந்தவன்—அனாதரக்ஷகன் எனது மனதில் ஓர் ஊக்கத்தைப்பிறப்பித்துவிட்டான். ஒருநாளுமில்லாத தைரியமும் உற்சாகமும் எனக்கு உண்டாகியது. எனதுடன், சிறு பிராயத்திலிருந்தே வளர்ந்துவரும் அசுவத்தின்மீது நான் ஏறிக்கொண்டு அதன் மனம்போன இடங்களுக்குச் சென்றேன். கடைசியில் அது இவ்விடம் வந்து நின்றது. நண்பர்களே! இவ்வகையில் நாமனைவரும் எனது அசுவமாகிய புவனேந்திரனுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதையும் குறிப்பிடுகிறேன். இந்த மலையடிவாரத்தை அடைந்ததும் இதன் வனப்பைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்தேன். இவ்விடமுள்ள கொடிய விலங்குகள் என்னை அணுகியதும் எனக்குச் சிறிது மனக்கிலேசம் உண்டாகியது என்பதையும் கூறாமலிருக்க முடியவில்லை. என்றாலும் மறு விநாடியில் மனோதைரியமடைந்து அசுவத்தினின்றும் இறங்கி அம்மிருகங்களைத் தடவினேன். குரூர குணங்களையுடைய அம்மிருகங்கள் என்னை ஒரே பாய்ச்சலில் பாய்ந்து கொல்ல எத்தனித்ததென்றாலும், எனது கரம் பட்டதும் அவை சாந்தமாகிவிட்டதைக் காண எனக்கு மட்டற்ற ஆச்சரியத்தை விளைவித்தன. நான் காண்பது கனவோ—நினைவோ என்று ஐயமுற்றேன். பின் சிறிது நேரம் இவ்விடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு இவ்விடத்தில் ஓர் கிராமம் அமைத்து எனது சகோதர சகோதரிகளை குடியேற்ற நிச்சயித்தேன். இத்தீர்மானத்தை மனதிற்கொண்டு எமது நாட்டிற்குச் சென்று இரகசியமாக என்போன்ற குணங்களையுடைய உங்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டி இங்கு வந்து சேர்ந்தேன். நாமனைவரும் இங்கு வந்துற்றவுடன் வசிக்க வீடின்றித் தவித்தோம். சூரிய பக வான் நம்மீது அன்புகொண்டு தனது வெப்பத்தைச் சிறிது தணித்துக்கொண்டார். மரங்களே நமக்கு வீடாக இருந்தன. நமது அன்பர்கள் "ஊக்கமது கைவிடல்" என்றுபாடிய புலவர் வாக்கைக் கைப்பற்றி—மனதில் கொண்டு தீர்த் திடன் உழைத்ததை நான் என் மனப்பூர்வமாக வாழ்த்து கின்றேன். சிலநாட்களுக்குள் இவ்விடத்தை அழகாக ஓர் கிராமமாக உண்டாக்கிவிட்டது பாராட்டத்தக்கது. விதம் விதமான மரம், செடி கொடிகளை உற்பவித்தோம். நமக்கு இன்றியமையாத ஒவ்வொன்றையும் நாமே தயாரித்துக் கொண்டோம். சிலநாட்களில் நாம் எதிர்பார்த்த பலனை யளித்துவிட்டது. அன்பமடைபவர் இன்பமடைவார்கள் என்ற வாக்குப் பொய்த்துவிடுமா? விடா உழைப்பினால் களைத்துப்போன நமக்குத் தேறுதல் மொழிகளையும் ஊக்கத் தையும் செலுத்த புவனேசுவரி வந்தடைந்தாள். இப்போது நமக்கு ஞானத்தைப் போதிக்க நமது ஞானியர் வந்திருக் கிறார்கள். இவர்களுடைய சரிதையை நாம் அறிய விரும்பு வது குற்றமன்று. ஆதலால் நமது ஞானியரைத் தமது வாழ்க்கைச் சரிதையை இச்சபையில் தெரிவிக்கும்படி மகா ஜனங்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு மனோஹரன் பேசியபின் ஆசனத்திலமர்ந் தான். எல்லோரும் ஆவலுடையவர்களாக ஞானியரையே உற்று நோக்கினர். அவருடைய வாயிலிருந்தும் என்ன சொல் பிறக்கப்போகின்றதோ என்று எதிர்பார்த்தவண் ணமே வீற்றிருந்தனர். சிறிதுநேரம் எங்கும் மௌன மாகவே இருந்தது. பின் ஞானி எழுந்து பேசலானார்:—

"அன்பர்காள்! நீங்கள் எனது வரலாற்றை அறிய விரும்புவீர்கள் என்பதை நான் வெகுநாட்களுக்கு முன்பே அறிவேன். என்றாலும் சில முக்கியமான காரணங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அதாவது உங்களின் இல்லறவாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாமலிருக்கும் படிக்கே எனது சரித்திரத்தை வெளியிடத்தயங்கினேன். உங்களுக்கு இது நியாயம், இது அநியாயம், இது தர்மம், இது அதர்மம், இவ்வழியில் நடந்தால் சுகமடையலாம், இவ்வழியில் நடந்தால் நமது வாழ்நாள் வீணுட்களாகிவிடும் என்று அறிந்து நன்னெறியில் நடந்துகொள்ளும் ஆற்றல் உங்களனைவருக்கும் உண்டு என்பதை நான் நன்கறிவேன். என்றாலும் என் விஷயத்தில் நீங்கள் அவ்விதம் நடந்து கொள்ளவில்லை. நான் எதுகூறினும் அவ்விதமே, "ஐயங்கார் வார்த்தையெல்லாம் தீர்த்தம்" என்ற குருட்டு நம்பிக்கை கொண்டவர்களைப்போன்று நடந்து கொள்கின்றீர்கள். எனது வாக்கை தேவவாக்காக மதிக்கிறீர்கள். எனது கட்டளையை நிறைவேற்ற உடல் பொருள், ஆவியாகிய சகலத்தையும் தியாகஞ்செய்ய சித்தமாயிருக்கிறீர்கள். நானும் உங்களைப்போன்று ஒருமனிதன் தான். நான் விசேஷமாக யாதொன்றையும் பெற்றுவிடவில்லை. ஆனால் ஒன்றில் மாத்திரம் வித்தியாசமுளது. அதாவது நீங்கள் இல்லறத்தை நடத்துகிறீர்கள். நான் துறவறத்தை மேற்கொண்டுள்ளேன். நீங்கள் சுகத்தையும் அறுசுவை உண்டிகளையும் விரும்புகிறீர்கள். நான் ஒரே சிந்தனையாகவும், கந்தமூலபலாதிகளை உணவாகவும் கொள்கின்றேன். நீங்கள் வெண்மையான வஸ்திரத்தை யணிகின்றீர்கள். நான் கல்லாடை (காவி வஸ்திரம்) அணிகின்றேன். இவை நீங்கலாக அங்க அமைப்பு முதல் யாவற்றிலும் நான் உங்களைப் போன்றே இருந்து வருகிறேன். என்றாலும் சர்வலோக சரண்யன் உங்களை என்னிடத்து ஈடுபடும்படி—பற்றுதல் உண்டாகும்படி செய்துவிட்டான். அவனது திருவிளையாடலை செப்பத்திறமன்று. எனது சொல்லை மீறி நடந்தறியாத உங்களுக்கு எனது வாழ்க்கையின் கோலத்தைத் தெரிவித்தால் உங்களுக்கு இல்லறத்தில் வெறுப்புண்டாகினும் ஆகும். ஏனெனில் நீங்கள் என்னைப் பின்பற்றி நடப்பதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே யாகும். ஆனால் இதுகாலை நீங்களனைவரும் விரும்பு கிறபடியால் நான் எனது வாழ்க்கையின் நடவடிக்கைகளைத் தெரிவிக்கிறேன். ஆனால் என்னைப் பின்பற்றி நடக்கக் கூடாதென்பதே எனது வேண்டுகோள்," என்று கூறி தமது ஜீவியநாள் செய்கையையும், இளமையிலேயே—உண்டாகிய தமது மனப்போக்கையும், பின் சரோஜினி அதை மாற்றி இல்லறத்தில் புகுத்தியதையும், அதுகாலை இருவருக்குமிடையே ஏற்பட்ட அன்பையும், பின் இல்லறத்தில் வெறுப்புற்று சரோஜினியை விட்டுப்பிரிந்து துறவு பூண்டதையும், சரோஜினியின் மனோவன்மையையும், தன்மீது கொண்டுள்ள காதலின் திண்மையையும், தனது வாக்கை நிறைவேற்ற அவளது சுகவாழ்வைப் பாழாக்கியதையும், பின் அவளது துக்ககரமான முடிவையும், அவளது கணவன் மதனகோபாலனின் முடிவையும், தற்போது தனது போக்கையும் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

(குறிப்பு:—நமது ஞானியாகிய ஜெயசீலர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சத்தை—அவரது சரித்திரத்தை நாம் சிற்சில இடங்களில் விளக்கியிருக்கிறோமாதலால் மீண்டும் அதை வரைந்து பக்கத்தை அதிகமாக்கி நேரத்தை வீணாக்க மனமில்லாமல் இவ்விதம் சுருக்கி வெளியிடப்பட்டுள்ளது.)

சரோஜினியைப் பற்றிய சம்பவத்தைக் குறிப்பிடும்போது ஜெயசீலரின் கண்களினின்றும் கண்ணீர் ததும்பிற்று. வெப்பம் அவர் நெஞ்சை யடைக்கிறது. அவரால் தைரியத்துடன் பேசமுடியவில்லை. சிறிய தொனியிலேயே பேசினார். இவரது விநோதமானதும் உருக்கமானதுமான வாழ்க்கைச் சரிதையைக் கேள்வியுற்ற ஜனங்களனைவரும் மனம் வருந்தினர். 20 வயதிற்குள் ஒருவரின் வாழ்நாளில் இவ்வித மாற்றம் ஏற்பட்டதைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர். அவரது உதார குணத்தைத் தம்முள் மெச்சிக்கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனர். சரோஜினியைத்தவிரப் பிறிதொரு மங்கையையும் மணமுடிக்கக்கூடாதென்ற திடமான நம்பிக்கையைக் கொண்டுள்ளதை அனைவரும் பாராட்டினர். பின்பு புவனேசுவரி எழுந்து பேசலானாள்.

"சபையோர்களே! நான் நீண்டநேரம் பேசுவேன் என்று நீங்கள் எதிர்பார்த்திருப்பீர்கள். அதை இன்று மாற்றவேண்டியநிலைமை ஏற்பட்டு விட்டது. நமது ஞானியவர்கள் சிறிது நேரத்திற்குமுன்பு தமது ஜீவியவர்லாற்றை தெரிவித்தார்கள். அதைச் செவிமடுத்த நாமனைவரும் வருந்துவதால் பயனில்லை. ஆடம்பரமான கூட்டங்களைக் கூட்டி, கடல்மடை திறந்துவிட்டாற்போன்று பிரசங்கமாரி பொழிந்து, விதம் விதமான தீர்மானங்களை நிறைவேற்றி, உபசாரப் பத்திரங்களும், அநுதாபத்தீர்மானங்களும் நிறைவேற்றி விடுவதால் நாம் எவ்விதமான நன்மையையும் அடைந்து விடமுடியாது. அதனால் வீண்சிரமமேயன்றி வேறொன்றுமல்ல. பேசுவதைப்போன்று கிரியாம்சத்தில் நடத்திக் காட்டுவதுதான் மேல். நமது ஞானிஅவர்கள் நம்மனைவருடைய மனப்பான்மையையும் ஒருவாறு நன்றாக அறிந்திருக்கிறார்கள். அதை அவர்கள் ஜீவியசரிதையைக் கூறும்போது ஒருவாறு வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அவருடையவாக்கை நாம் பின்பற்றி அநேக நன்மைகளை அடைந்திருக்கிறோம் என்பதை நான் குறிப்பிடவேண்டியதில்லை. நமது உயிர் போவதாயிருந்தாலும் அவருடைய கட்டளையை நிறைவேற்றாம லிருக்கமாட்டோம். இதை நன்கறிந்த பெரியார் தமதுபிரசங்கத்தின் ஆரம்பத்திலேயே, தமது ஜீவியவரலாற்றைப் பின்பற்றி நடக்கக்கூடாதென்று கேட்டிருக்கிறார்கள். இதைநான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதில் நம்மவர் பின்பற்றி நடக்கவேண்டிய அரிய விஷயங்கள் பொதிந்துகிடக்கின்றன என்பதையும் குறிப்பிடாலிருக்கமுடியாது. அதில் முக்கியமானது, பருவமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்பெண்ணுடைய விருப்பத்திற்குமாருக அதாவது அவள் தனது மனதில் கொண்டகணவனையன்றி பிறிதொருவனுக்கு அவளின்பெற்றோர்கள் அவளை மணஞ்செய்விக்கக் கூடா தென்பது மிக மிக முக்கியம். அவன் எவ்வளவு நன்னடத்தையும், மேன்மையான குணங்களையும் உடையவனுக இருப்பினும் அவளுக்கு மனநிம்மதி ஏற்படுவது அரிது. நமது சகோதரி சரோஜினி படித்த பெண்ணென்றாலும் தன் விஷயத்தில் அசிரத்தையாகவே இருந்திருக்கிருள். அவள் நமது ஜெயசீலரை மனப்பூர்வமாகக் காதலித்திருக்கிருளாதலால், மதனகோபலன் என்பவருக்குதான் மனைவியாக வாழ்வதைப்பார்க்கிலும் தனது உயிரையே மாய்த்துக் கொண்டு விடாலாமெண நிச்சயித்திருக்கிருள். ஆனல் ஜெயசீலர் அந்தமன உறுதிக்கு ஓர் முட்டுக்கட்டை போட்டுவிட்டார்கள். அவள் இறந்து படின் தானும் இறப்பதாகக் கூறியதால் அவள் மதனகோபாலருக்கு மனைவியாக வாழ சம்மதித்திருக்கிருள். என்றாலும் மனதில் கொண்ட கணவரையே தான் இறக்கும் வரையில் பிராணநாதராக பூஜித்து வந்திருக்கிருள். பதிவிரதாபத்தினிப் பெண்ணுகிய—தனது காதலரின் கட்டளையை நிறைவேற்றிய உத்தம ஜாதிப் பெண்மணியின் ஆத்மா சாந்தியடைவதாக! இன்னெரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டியது இன்றியமையாதது. அதாவது நாமனைவரும் சரோஜினி என்ற உத்தமியைப் பின்பற்றி, நமது கணவரின் கட்டளைகளை சிரமேற்கொண்டு—கணவனே கடவுள்—நாதரே நமது பிராணன்—அவருடைய சுகதுக்கங்களே நமது லக்ஷியம் என்று நாம் நடந்துவரவேண்டும். இதற்கு வழிகாட்டிய சரோஜினியை நாம் மனதார புகழவேண்டுமன்ரே? காதலரின் கட்டளைப்படி நடந்த உத்தமி இவ்வுலக இன்பத்தை சிறிதும் நுகராமல் உயிர் துறந்தனளே! என்று எண்ணும் போதுதான் நம்மவர் வருந்தாமலிருக்கமுடியாது. என்று

னும் அவ்வுத்தமியின் உயிர் பூதவுடலைவிட்டுப் பிரியும்போது அவள் சிறிது திருப்தியடைந்திருப்பாளென்பது நிச்சயம். ஏனெனில் அவள் நன்கு கல்வியறிவுடையவள். தனதுஉயிர்க் காதலரின் கட்டளையை நிறைவேற்றிவிட்ட சந்தோஷம் அவளை ஆனந்தக்கடலில் ஆழ்த்தியிருக்கும். நமது ஜெயசீலரின் சரிதையிலிருந்து ஒரு ஆண்மகனின் அல்லது பெண்மகளின் எதிர்காலம் எவ்வளவு சிக்கலாயிருக்கின்றது என்பதனை நாம் தெரிந்துகொண்டோம். சொல்வார் சொன்னுலும் கேட்பவருக்குப் புத்தி இருக்கவேண்டுமன்றோ? தமது தாய் தந்தையர் எவ்விதம் கூறினுலும், எவ்விதம் நடந்தாலும், தமது எதிர்காலப் பிரச்னை தம்மைப் பொறுத்ததே என்று நம்மவர் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளவேண்டும். ஒருவருடைய பிற்கால வாழ்க்கையில்—அதாவது மணமாகியபின் ஏதாவது கஷ்டநஷ்டங்க ளேற்பட்டுவிட்டால் அதை அனுபவிக்கவேண்டியவர் தம்மைத்தவிர வேறு யாருமில்லையென்று மணத்தம்பதிகள் கருதி நடந்துகொள்ள வேண்டும். கேவலம் நிலையற்ற பணப்பேராசை பிடர்பிடித்துந்த விபரீதமாக நடந்துகொள்ளும் பெற்றோரை நாம் எவ்வளவு கண்டித்தாலும் தகும். பெற்றோராயுள்ளவர்களுக்கு இதுகாலை நான் ஒன்று கூற விரும்புகிறேன். தமது மக்களின் விவாக ஏற்பாடுகளை நிச்சயிக்குமுன்பு அவர்களின் மனப்போக்கை அதாவது அவரது மனதை எவராவது கொள்ளைகொண்டனரா என்பதை எவ்விதமாகிலும் அறிந்து அவர்களின் மனம் புண்ணுகாமலிருக்கும்படி நடந்துகொள்ளவேண்டும். இதன்றி தம்முடைய மனப்போக்கின்படி அதாவது பெண்ணின் க்ஷேமலாபங்களைக் கருதாது பிறவற்றை ஆதாரமாகக்கொண்டு விபரீதமாய் நடந்தால் அல்லல்களைத்தவிர பிறிதொன்றையும் நாம் எதிர்பார்க்கமுடியாது. இதுவுமன்றி நாம் மக்களின் வீண் வயிற்றெரிச்சலுக்கும் ஆளாக நேரிடுமென்று எச்சரிக்கை செய்கிறேன். நான் அதிகநேரம் பேசிவிட்டேன். இத்துடன் நான் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கத்தை நிறுத்திக்கொள்கிறேன். சாலி இளவரசர் அசோகாமாலை என்ற ஒரு சண்டாளப் பெண்ணுக்காக சிம்மாசனத்தையும் துறந்தார். அதற்காக அவர் ஒருபோதும் வருந்தியதுமில்லை என்று நான் வாசித்திருக்கிறேன். அதைப் போன்று நமது சரோஜினியும் தனது காதலரின் வேண்டுகோளை நிறைவேற்றத் தனது வாழ்க்கையைப் பாழ்படுத்தியதைப்பற்றி வருந்தியிருக்கமாட்டாள். அவளது ஆன்மா சாந்தியடையுமாறு நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக!'' என்று கூறி முடித்தாள்.

பின்பு எல்லோரும் எழுந்து சிறிது நேரம் சரோஜினியின் பாவங்களை மன்னித்தருளும்படி பிரார்த்தனை நடத்தினர். பின்பு கூட்டம் இனிதே கலைவுற்றது.

# அத்தியாயம்—11

## பெற்ருேரை மீட்கச்செல்லல்

இவ்வாருக சிலநாட்கள் சென்றன. ஒருநாள் மாலை, சுகந்த வாசனைகமழும் பூந்தோட்டத்தையும், மனோஹரபுரத்தின் இயற்கை வனப்பையும் கண்டானந்தித்தவாருக புவனேசுவரி தனது மனோஹரவிலாஸ் மாளிகையின் மேன்மாடியில் உலவிக்கொண்டிருந்தாள். பக்ஷிஜாதிகள் பகல் முழுவதும் இரைதேடிய களைப்பினுல் தமது கூட்டையடைந்தன. கூட்டிலுள்ள தமது குழந்தைகளைக் கண்டதும் அவைகள் சந்தோஷமிகுதியினுல் அணைத்துக்கொள்கின்றன. குஞ்சுகளும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றன. சூரியபகவானும் மனோஹரபுரத்தின் வனப்பைக்கண்டு களைத்ததுபோன்று மேற்கு திசையில் மறையப்போகிருன். என்ருலும் அவனது சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்வதுபோன்று சிவப்பு நிறமான ஒளியை வீசுகிருன். பசுமாடுகள் மேய்ந்துவிட்டு சந்தோஷமிகுதியினுல் துள்ளிக் குதித்து விளையாடியவாறு தமதில்லத்தில் புகுந்தன. ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றும் நேரமும் சமீபித்துவிட்டதால் எங்கும் தீபஒளி காணப்பட்டது. ஹிந்துக்களின் விசேடதினங்களில் ஒன்ருகிய "திருக்கார்த்திகை" யன்றுகூட அவ்விதம் ஒளி தோன்றுமோ என்பதுவும் ஐயத்திற்குரியதே. இவ்வனப்பு வாய்ந்த மனோஹரபுரத்தைக் கண்ணுற பூர்ணசந்திரனும் ஆவலோடு வந்துவிட்டான். தேவருலகமோ என ஐயமுறுவண்ணம் இச்சிறுகிராமம் காக்ஷியளித்தது என்று சுருங்கக் கூறி இதன் வர்ணிப்பை நிறுத்திக்கொள்வோம். குடிஜனங்களைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வீட்டின் முன்னும் ஒவ்வொரு பூந்தோட்டம் அமைக்கப்பட்டிருப்பதாக நாம் முன் குறிப்பிட்டுள்ளோம். அந்தந்த பூந்தோட்டங்களில் பெற்றோர் தமது சிறுகுழந்தைகள் மழலைமொழியாகிய மதுவை அள்ளி இறைப்பதைக் கண்ணுற்று ஆனந்தம்பொங்கிவழிய அச்சிறுவர்களை வாரிஎடுத்து மார்போடணைத்து முத்தமிடுகின்றனர். ஏதும் தெரியாத சிறுகுழந்தைகள் தம்முடைய மெல்லிய கரங்கொண்டு தம்மை முத்தமிடும் பெற்றோரின் முகத்தை தள்ளுவதும், பெற்றோர்கள் மீண்டும் கொஞ்சுகின்றனர். சில குழந்தைகள் தம்முடைய பெற்றோரின் பின்னல் அவர்களுக்குத் தெரியாமல் தந்திரமாய் வந்து பெற்றோரது கண்களை மூடிக் கொள்கின்றனர். சிலகுழந்தைகள் பெற்றோரை அடித்துவிட்டோ அன்றி அவர்களின் வஸ்திரத்தையோ, கார்க்கூட்டம் போன்ற கூந்தலையோ பிடித்திழுத்துவிட்டு மறைந்து கொள்கின்றனர். சிறிது நேரஞ்சென்று மெதுவாக தமது பெற்றோரின் முன்னிலையில் வந்து தமது சாமார்த்தியத்தை புகன்று கைகளைத்தட்டி ஆடுகின்றனர். சிலகுழந்தைகள் பெற்றோரின் மடியில் படுத்துக்கொண்டு மேலேநோக்கியதும் பூரணசந்திரனைப் பார்க்கின்றனர். உடனே பெற்றோரிடம் அந்த (சந்திரனை) புஷ்பம் வேண்டுமென்று முறையிடுகின்றனர். உடனே அருகிலுள்ள செடிகளிலிருந்து சூரியகாந்தி புஷ்பம்போன்றவைகளை பறித்துக் கொடுத்து ஏமாற்றுகின்றனர். இந்தத் தந்திரத்தை அறியாத சிறார் அதைவைத்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடுகின்றனர்.

இவ்வித நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றதும் புவனேசுவரி சிறிது வருந்தலானாள். அவளது மனதில் ஒருகவலை உதிக்கலாயிற்று "ஆஹா! என்ன மனோஹரமான காக்ஷி, இவ்விதமான காக்ஷியை யான் பார்க்கமுடியுமென்று சொப்பனத்திலும்கூட கருதியிருக்கமாட்டேன். இது நான் செய்த பூஜாபலமேயாகும். நம் குடிஜனங்கள் தமது குழந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் நன்ருய்விளையாடி தம் பெற்ரேரை மகிழ்விக்கின்றனர். இவ்வித மகிழ்ச்சியை நான் எப்போது அனுபவிக்கப் போகிறேன்! என்குழந்தை என்னுடன் எப்போது கொஞ்சி விளையாடும்! நான் எப்போது அவர்களை வாரி யணைத்து முத்தமிடுவேன்! ஜனங்களின் சுகதுக்கங்கள், அவர்களின் இன்பமே எனது இன்பம், என்ருலும் இவ் வழியில் நான் அவ்வித அபிப்பிராயங் கொள்ளமுடியாம லிருக்கிறேன். நான் சொந்தமாக இவ்வின்பத்தைஅடைய விரும்புகிறேன். இவ்வித மகவொன்றைப் பெற ஒரேஒரு தடைதானுளது. அதாவது எனது பெற்ரேரையும், என தியிர்க்காதலரின் பெற்ரேரையும் காணுததேயாகும். அவர் களைக்கண்டதும் எனது மனுேபீஷ்டம் நிறைவேறிவிடும். உலகமறிய நானும் எனது துணைவரும் திருமணமென்ற நலு மணவிலங்கைப்பூட்டி இல்லறமென்ற நல்ல சிறையிலடைக்க ப்படவேண்டும். அதன் பின்தான் நானும் எனது காதலரும் எமது குடிஜனங்களனுபவிக்கும் இவ்வின்பத்தை அனு பவிக்கமுடியும். இக்காலம் எப்போது கிட்டும்! சர்வலோக சரண்யா! ருக்மணிநேசா! பக்தர்களின் மனுேல்லாசா! நினது மனமிரங்கவில்லையா! இவ்விஷயத்தில் மாத்திரம் நீ வாளாவிருக்கலாமா? கருணைவள்ளலான நினது மனமிரங் கின் அனைத்தும் நான் பெறக்கூடுமன்ரே! நம்பியவர்க்கபயம் நயந்தளிக்கும் விஸ்வாசா! நின்னடியின்றி இப்பாவிக்கு உய்யும் வழியாதொன்றுமில்லை! நின்னடிகளே எனக்கு அரண்! நின்னுமங்களே எனக்கு உற்றதுணைவர்கள்! வேறு கதிகண்டிலேன்! என்னப்பனே! என்னைக் காப்பதும், மகிழ் விப்பதும் நினது கடமையன்ரே!'' என்று தன்னுள் பற்பலவாருக எண்ணமிட்டுக்கொண்டு மறுபக்கம்—தன்னரு கில் திரும்பிப்பார்த்தாள். காதலனைக் காணவில்லை. உடனே திகைத்துவிட்டாள் எதையோ பறிகொடுத் தவளைப் போன்று, "காதலா! காதலா!" என கூவியழைத் தாள். "காதலா!" என்று கூறிய மறுவிஞடியில் தன்னரு

கில் வந்துநிற்கும் மனோஹரன் அன்று வராததால் சிறிது மனக்குழப்ப முண்டாகியது. இயற்கையன்னையின் காக்ஷியினின்றும் விலகிச்செல்ல மனமில்லை. காதலரையும் பார்க்க வேண்டும். அவரோ மேன்மாடியில் இல்லை. பின்பு எவ் விதம்தான் அவரைக்காண்பது? என்று யோசித்தாள்.

சிறிது நேரஞ்சென்றபின் ஓர் முடிவுக்கு வந்தவளாய் அங்கு வைக்கப்பட்டிருந்த வீணையில் இனிய தொனியுடன் பாடலானாள். "ரகுபதி ராகவ ராஜா ராம்; பதித பாவன ஸீதாராம்" என்கிற ராமநாம ஸ்மரணை செய்தாள். ஏனெனில் சங்கீதத்தில் மனோஹரன் அதிக பிரீதியுடையவன். ஆதலால் இக்கீதத்தை செவியுற்றவுடன் மேன் மாடிக்கு வந்துவிடுவான் என்பதே அவளது நம்பிக்கை. அவ்விதமே மறுநிமிஷம் மனோஹரன் கையில் ஒரு பத்திரிகையுடன் மேன்மாடிக்கு வந்து சேர்ந்தான். "புவனா! இன்று நீ அழைத்தவுடன் வராததை மன்னிக்கவும். இந்தப் பத்திரிகையின் தலையங்கத்தைப் பார்த்துக்கொண்டே இருந்து விட்டேன். ஒருநிமிஷம் கூட உன்னை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாத நான் இவ்வளவுநேரம் பிரிந்திருந்தது ஆச்சரியமே" என்றுகூறியவாறே அவளருகில் அமர்ந்தான்.

"மனோஹரா! தாங்களா என்னிடம் மன்னிப்புக் கேட்பது? நன்றாயிருக்கிறது. தாங்கள் இவ்விதமான வார்த்தைகளை இனிமேல் உபயோகித்தால் எனது தலை வெடித்தாலும் வெடித்துவிடும். அதிருக்கட்டும். பத்திரிகை வந்ததும் என்னையழைத்து வாசிக்கும் தாங்கள் இன்று தனியாக நின்று தலையங்கத்தைப் பார்க்கவேண்டியதின் கருத்தென்ன? நான் பார்வையிடலாமா?" என்று புவனேசுவரி வினவினாள்.

மனோ:—"தாராளமாய்ப் பார்வையிடலாம். உன்னிடம் கூறுமலும் தெரிவியாமலும் உனது அபிப்பிராயத்தை அறியாமலும் நான் என்னதான் செய்துவிடுவேன்? இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைதான் முக்கியமாகப் பார்வையிடவேண்டும். நீ என் சகோதரனைப்பற்றி என்னிடம் கூறியதைப்போன்றே அனைத்தும் நடைபெற்றுவிட்டன" என்று கூறியவாறு பத்திரிகையை அவளிடம் கொடுத்தார். அவளும் ஆச்சரியத்துடன் பத்திரிகையைப்பிரித்துப் பார்க்கலானாள்.

அப்பத்திரிகையின் தலையங்கம் பின்வருமாறு:—

"சரஸ்வதி"

வாரப்பதிப்பு.

ஸ்ரீமுக ௵ வைகாசி ௴ 13 ௳

"நமது அரசரின் தற்கால நிலைமை"

நமது அரசர் தர்மபாலர் அவர்களின் விபரீதப் போக்கை நாம் அடிக்கடி இப்பத்திகளில் கண்டித்து எழுதியதை நமது நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். எதேச்சாதிகாரம்—அடக்குமுறைச் சட்டங்கள் என்ற பயங்கரமான ஆயுதங்களினால் ஒரு தேசத்தை நீண்டகாலம் ஆக்ஷிபுரிய முடியாதென்று நாம் வற்புறுத்திக்கூறியது இதுகாலை செயலளவில் அநேகமாக நிரூபணப் படுத்தப்பட்டுவிட்டது. அரசன் என்பவன் யாவன்? அவனது கடமை என்ன? என்பன போன்றவைகளை நமது அரசர் சிறிதுகூட சிந்தித்துப் பார்த்திருப்பதாக நமக்குத்தோன்றவில்லை. குடிஜனங்களின் க்ஷேமலாபங்களை அனுசரித்தே சட்டதிட்டங்களை நியமிக்கவேண்டுமேயன்றி தனது (அரசன்) சுகத்திற்காக குடிஜனங்களை சித்திரவதை செய்யும் சட்டங்களை ஒரு அரசன் இயற்றுவது எவ்வளவு பயங்கரமானது என்பதை எவ்வளவு கண்டித்தாலும் மிகையாகாது. அரசன் என்ற பெயருக்கு கனம் தர்மபாலர் அவர்களின் அகாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் என்ன பொருள் கொடுக்கப் பட்டிருக்கிறதோ என்பதை நம்மால் அறியமுடியவில்லை. ஆனால், அரசன் என்ற அந்தஸ்தில் வீற்றிருக்கும் தன்னுடைய சுயநலம் என்ற பலி பீடத்தில் பொதுமக்களைப் பலிகொடுக்கும் கர்த்தாவே அரசன்" என்றுதான் அவர்களுடைய அகராதியில் பொருள் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்பது நமது அபிப்பிராயம். இதன்படியே அவர்களும் நடந்து வருகிறார்கள்.

தர்மம், நியாயம் ஒற்றுமை முதலிய உயர்ந்த லெக்ஷியங்கள் தாண்டவமாடிக் கொண்டிருந்த நமது நாடு இதுகாலை பெண்வேட்டையாடுதல், அநியாயம், அதர்மம், நீங்கா வெம்பகை, சகிக்கொணா வறுமைப்பிணி, கொடுங்கோன்மை முதலிய இழிந்த செயல்களுக்கு உறைவிடமா யிருக்கின்றது. சுருங்கக் கூறுமிடத்து நமது மாஜி அரசரும், தர்மபாலர் அவர்களின் தந்தையுமாகிய "குரு குலசேகரா" அவர்கள் மாயமாய் மறைந்தவுடன் மேற்காட்டிய உயர்ந்த நோக்கங்களும் மாயமாய்—எம்மிடமிருந்தும் சிலவு பெற்றுக்கொண்டு மாஜி மன்னர் அவர்களுடன் சென்றுவிட்டனபோலும்! பெண்மக்களின் மானத்தைக்காக்க தமது உயிரையுங்கூட முகமலர்ச்சியுடன் தியாகஞ்செய்யும் மாஜி மன்னர் குருகுலசேகரா வம்சத்தில், துர் அதிர்ஷ்டவசமாக தர்மபாலர் அவர்கள் பிறந்து, தான்தோன்றித்தனமாக நடந்து பெண்களின் உயிர்நிலையாகிய கற்பைச் சிதைத்து வருகின்றார். விலை மதித்தற்கரிய தமது கற்பை இழந்த பெண் சகோதரிகள் பலர் தற்கொலை புரிந்து மாண்டுவிட்டனர். அநேகர் புத்தி சுவாதீனமற்று தெருத்தெருவாகக் கண்ணீரும் கம்பலையுமாகச் சுற்றியலைகின்றனர். வரிப்பளுவைத் தாங்கமாட்டாது குடியானவர்கள் ஓலமிடுகின்றனர். வேலையில்லாப் பஞ்சம் நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. பசிப்பிணி மக்களை வதைக்கின்றது. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டிடப் படுகின்றது. விதம் விதமான சட்டங்களும், நவீனவிதமான வரிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரமான அடக்குமுறைகளும் தலையெடுக்கின்றன. சர்க் கார் கஜானு அநேகமாகக் காலியாகிவிட்டது என்று பொக் கிஷதார் ஒருபக்கம் இடிக்கிறார். இவ்வித நிலைமைக்கு நமது நாடு வந்துவிடுமென்று சில ஆண்டுகளுக்கு முன்புவரை நாம் எதிர்பார்த்ததே கிடையாது. இந்நிலையில் "நமது மேன்மை தங்கிய மன்னர் தர்மபாலர் அவர்கள் எந்நிமிடம் மாயமாய் மறைந்தோடி விடுவாரோ—அவ்வித நிலைமைக்கு வந்துவிட் டது" என்றும் ஊநக்குருவியொன்று அறிந்து நமக்கு செய்தி அனுப்பியிருக்கிறது.

இன்னொருமுக்கியமான விஷயம். நமது அரசரின் சகோதரர் "மனோஹரன்" என்பவர் எவ்விதம் மாயமாய் மறைந்தார் என்பதுவும் இன்னும் மர்மமாகவே இருக்கின் றது. பொதுக்கூட்டங்களில் விஜயஞ்செய்து சொற்பொழி வாற்றுவதில் அதிகப்பிரீதியுடையவர் பிரசங்க மாரிபொழி வதில் அதிநிபுணர். மாஜிமன்னர் குருகுலசேகரர் அவர் களின் குணவிசேஷங்களை பெற்றவர். பொதுமக்களின் அன்புக்குரியவர். மக்களின்பால் விசேஷ அன்புகொண்டு அவர்களின் சுகவாழ்விலேயே கண்ணுங் கருத்துமாயுள்ள வர். இவைகளை எல்லாம் கண்டறிந்த நமது மன்னர் விதம் விதமான தடையுத்தரவுகளைப் பிறப்பித்தார். பொதுக்கூட் டங்களில் சென்று பேசக்கூடாதென்று தடுத்தார். சில குறிப்பிட்ட நபர்களையே பேட்டி காணலாமென்றும் உத்தர விட்டார். பலவிதங்களிலும் மனோஹரரை இம்சித்தார். என்றாலும் மனோஹரர் சிறிதும் சலிப்படையவில்லை. பொதுக்கூட்டங்களுக்கு விஜயஞ்செய்து தமது சகோதர ரைக் கண்டித்தார். பெண்மக்களின் கதியைப்பற்றி கூறும் போது அவர் கண்ணீர் வடித்த உருக்கமானகாக்ஷி இன்னும் நமது அகக்கண்ணின் முன்பு தோன்றுகிறது. சிற்சில சம யங்களில் மனோஹரர் பிரசங்கமேடையி லிருந்தவாறே மூர்ச்சையாகி திடீரென விழுந்திருக்கிறார். அவரது உருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான சொற்பொழிவைப் பிரசுரித்த பத்திரிகைகளுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனோஹரரை அநேக முறை சிறையிலும் அடைத்தார். அரசகுடும்பத்தில் பிறந்து சொகுசாகவாழ்ந்த மனோஹரர் சிறைச்சாலையில் அவரது சகோதரரால் தள்ளப்பட்டதுமன்றி உண்ணவும் கூட உணவு அளிக்காத கோரசம்பவத்தைக் கண்ணுற்று எவர்தான் மனமுருகார்? என்றாலும் மனோஹரரை அடைத்த மறுநிமிஷம் அவரை விடுதலை செய்த சிறைக்காவலரைப் பாராட்டுகிறோம்.

மனோஹரர் கடைசி பிரசங்கத்தில் முழக்கிய சொற்கள் இன்னும் நமதுசெவிகளில் ஒலிக்கின்றன. "சகோதரர்களே! நாம் எவ்வளவு கண்டித்தும் பயனில்லை. பிறவிக்குணத்திற்கு யாரால்தான் மட்டைவைத்து கட்டமுடியும்? சகோதரர் தர்மபாலர் நீண்டகாலம் இவ்வித அட்டூழியங்களையே யியற்றி நம்மவர்களை வதைக்கவேண்டுமென்பது கருணை வள்ளலான கடவுளின் திருவுளச் சம்மதம்போலும்! "கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டைவிட கடும்புலி வாழுங்காடு எவ்வளவோ மேன்மை" என்று நமது பாட்டி காலத்தில் ஒரு பொய்யாமொழிப் புலவர் கூறிய வண்ணம் நாம் இந்த நாட்டினின்றும் அப்பாற்பட்டு வேறு எங்காகிலும் கடும்புலிகள்வாழும் ஆரண்யத்திலாயினும் போய்வாழ்வதே நன்று. கொடிய வனவிலங்கினங்களுக்கு இறையாகினும் பாதகமில்லை. நீங்களனைவரும் என்தயவையே எதிர்நோக்குகிறீர்கள். என்னால் ஒன்றும் செய்யமுடியாது என்பதை நான் கூறவேண்டுமென்பது கட்டாயமில்லை. நீங்களே அறிந்து கொள்ளலாம். உங்களைப்போன்றே நானும் அடிமையாக வாழ்ந்து வருகிறேன். ஆதலால் என்னிடமிருந்தும் நீங்கள் யாதொரு தயவையும் எதிர்பார்க்க முடியாது! உயிரையுங்கூட வெறுத்து வனவாசத்தை மேற்கொண்டு விடுவதைத்தவிர வேறுவழி இருப்பதாக என்னறிவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றவில்லை!" என்றுகூறியதை நாம் ஒருபொழுதும் மறக்கமுடியாது. சொன்ன சொற்படி நடக்கும் ஆற்றல் பெற்ற மனோஹரர் வனவாழ்க்கையை மேற்கொண்டிருப்பினும் இருப்பர். என்றாலும் நமக்கு யாதொரு தகவலும் கிடைக்காதது நமது துரதிர்ஷ்டமேயாகும்.

இவ்வித அலங்கோலமான நிலைமைக்கு வந்துற்ற நமது நாடு இன்னும் சில வருடங்களுக்குள் முன்னிலைக்கு வந்துவிடுமென்று எதிர்பார்க்கமுடியாது. இவ்வூர் மக்களனைவரும் மேற்குறிப்பிட்ட தொத்து நோயினால் உயிர்துறந்தாலொழிய நமது மன்னர் தர்மபாலர் தமது போக்கை மாற்றிக் கொள்ளமாட்டார்போலும்! இது இவ்வாறாக, நாட்டில் பற்பலவிதமான—பயங்கரமான கொள்ளை நோய்கள் தலைவிரித்தாடுகின்றன. தர்மபாலரின் ஆட்சியின்கீழ் வாழும் அனைவரும் கொள்ளை நோயை அன்புடன் எதிர்கொண்டழைக்கின்றனர். இவ்வித பயங்கர நிலைமையில் "இன்னும் சிலநாட்களுக்குள் தர்மபாலர் நாட்டைவிட்டு ஓடிவிடுவார்" என்று கூறும் ஊர்க்குருவியின் மொழியை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். அநேகர்—நூற்றுக் கணக்கானவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் கொள்ளைநோயால் இறந்துபட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் தற்கொலைபுரிந்துகொண்டனர். இனியாவது மன்னர் தர்மபாலர் நேர்மையுடன் நடந்துகொள்வாரா? குடிஜனங்களுக்குச் சகல வசதிகளையும் அளித்து, வரிப்பளுவை அகற்றி, கொடிய சட்டங்களைப்போக்கி, மக்களின் மனதைத் திருப்பிவிடுவாரா? இவ்விதம் நடந்துகொண்டாலும் நாடு சீர்திருந்த அநேக ஆண்டுகள் செல்லும். என்றாலும் தைரியத்தைக் கைவிட்டுவிடலாகாது. மன்னர் தர்மபாலர் தமது போக்கை முற்றிலும் மாற்றிவிடவேண்டும். இன்றேல் இன்னும் சில ஆண்டுகளுக்குள்—ஏன் சிலதினங்களில் என்ன நடைபெறக்கூடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பதை ஆராய்கையில் நமது மனம் படீரென வெடிப்பது போன்றிருக்கிறது. ஆதலால் நாம் அதை இங்கு குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் மன்னர் தர்மபாலாவின் எதேச்சாதிகாரத்திற்கு சமீபகாலத்திற்குள் சாவுமணி அடிக்கப்பட்டு விடுமென்றுமாத்திரம் நாம் எச்சரிக்கை செய்கிறோம்."

புவனேசுவரி:—"மனோஹரா! நாம் எதிர் பார்த்ததுபோன்றே அனைத்தும் நடந்துவிட்டன. இனி என்செய்வது? அநியாயமாக எத்தனைபேர் தற்கொலை புரிந்தனரோ! எத்தனைபேர் கோரமாக இறந்தனரோ! அறியோம். இப்பத்திரிகையினின்றும் பல நூற்றுக்கணக்கானவர் இவ்வுலகவாழ்விலிருந்தும் விடுதலையடைந்திருக்கின்றனர் என்பது நிதர்சனமாகின்றது. தாங்கள் சென்று தங்களின் சகோதரருக்கு நற்புத்தியைப் புகட்டவேண்டும். இல்லாவிடில் கெட்டொழிந்துபோவார்கள். குடிஜனங்களின் பாடு திண்டாட்டமாகிவிடும். அக்கிரமத்திற்கும் ஓர் எல்லை வேண்டுமன்றோ! இவ்வளவு நெருக்கடிக்குள்ளான பின்னுவது அவர்களின் மனம் சிறிதாகிலும் மாறி இருக்கவேண்டும். ஆதலால் நாமிருவரும் செல்வோமே!"

மனோ:—பெண்ணே! நீ கூறுகிறபடி மனம் மாறியும் இருக்கலாம். அவருக்கு எவ்வளவு உபதேசஞ்செய்தாலும் பயன்படாமற்போய்விடுமென்பதே எமது அபிப்பிராயம். ஒருவேளை என்னைச் சிறைப்படுத்திவிட்டு அழகுச் செல்வியாகிய உன்னைக்கெடுத்துவிட்டாலும் கெடுத்துவிடுவார். நம் உயிருக்கே இறுதி காணப்பட்டுவிடும். அவ்விதமாயின் நமது கிராமஜனங்கள் என்ன நிலைமையிலிருப்பார்கள்? அவரது இழிந்த நோக்கத்திற்கு உடன்படாத—சம்மதியாத உன்னை இலகுவில் விட்டுவிடமாட்டார். இதையெல்லாம் எட்டி யோசிக்குமிடத்து நாம் அவரை அணுகவும் கூடாது. எல்லாம் வல்ல இறைவன் தக்க சமயத்தில் அவருக்கு நற்புத்தியைப் புகட்டாமற்போகார். பாம்புக்குப் பால்வார்த்

தாலும் அதன் குணம் மாறிவிடுமோ? கொடிய விஷம் அத னிடமிருந்து நீங்கிவிடுமா? அதைப்போன்றே எனது சகோதரரின் குணவிசேஷங்களும். இனி நாம் அவரைப் பற்றி அதிகநேரம் சிந்தித்து நமது மூளைக்குத் தொந்திரவு கொடுக்கக்கூடாது.''

புவ:—''நாதா! தங்களுடைய வார்த்தைக்கு மறுவார்த்தைபேச எனக்கு அதிகாரம் கிடையாது. தாங்கள் கூறும் நியாயங்கள் உண்மையெனவே எனக்குத் தோன்றுகின்றன. ஆனல் எனது அத்தானவர்களுக்கு நற்புத்தியைப் புகட்ட வேண்டுமென்று ஜெகதீசனை நாம் துதிக்கவேண்டுமென்பதே எனது பேரவா. இதிருக்கட்டும். இன்னெருமுக்கியமான விஷயத்தையும் தங்களிடம் வினவ விரும்புகிறேன். தங்களுடைய பெற்ருேரதும் எனது பெற்ருேரதும் தகவல் யாதொன்றும் நமக்கு இங்கிமிடம்வரை கிடைக்கவில்லையே. நாம் எவ்வளவு காலந்தான் இப்படி. ... ... ...?''

மனே:—''புவனு! ஒவ்வொன்றும் நடக்கவேண்டிய காலத்தில் நடக்கும். அதற்குமுன்பு எவ்வளவு துள்ளிக் குதித்தாலும் முடியாது. நம்மை இரக்ஷிக்கின்ற சாக்ஷாத் எம்பெருமானின் திருவுளம் இருப்பின் இப்போதேயாவும் மங்களமாய் முடிந்துவிடும்.''

புவ:—''அதுஉண்மைதான். நமது ஜெயசீலர் பின் வரும் சம்பவங்களை முன்னரே அறிந்து சிற்சில சமயங்களில் எச்சரிக்கையும் செய்கிருர்களன்ருே! அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்போம். அவர்கள் எப்பொழுது இக் காரியம் கைகூடுமென்று திட்டமாக கூறிவிடுவார்கள்''

மனே:—''ஆம்! ஆம்! அவ்விதம் கேட்போம். அவர் உண்மையைச் சொல்லுவார். வா, நாம் இப்போதே செல்வோம்'' என்று மனோஹரன் கூறி எழுந்தான். புவனேசுவரியும் எழுந்து, இருவரும் ஜெயசீலரின் இருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தை யடைந்தனர். அப்போது ஜெயசீலர் நிஷ்டையி லிருந்தார். நிஷ்டை கலைய வெகுநேரமாய் விட்டது. என் றாலும் காதலர் இருவரும் அவரையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். நிஷ்டைகலைந்து ஜெயசீலர் கண்களை விழித்ததும் இவ்விருவரையும் கண்டு என்னகாரியம் என்று வினவினர். இவர்களும் வணங்கியபின் தமது மனக்கவலை யை தெரிவித்துக்கொண்டனர், அவரும் இதைப்பற்றி தாம் மறுநாட்காலையில் கூறுவதாக விடையளித்து அனுப் பினர் இருவரும் விடைபெற்றுக்கொண்டு தமது மாளிகை யடைந்தனர்.

அன்று இரவு அவர்களின் சந்தோஷத்தை கண்ணுற்ற நித்திராதேவி அவர்களையணுகவும் அஞ்சினாள். அடிக்கடி படுக்கையினின்றும் எழுந்து உலவுகின்றனர். ஒருநிமிஷம் செல்வது ஒருயுகம்போன்று தோன்றியது. அன்று அவர் களுக்கு மனநிம்மதியே கிடையாது. இருவரும் கீழறங்கி பூந்தோட்டத்தில் உலவுகின்றனர். இவ்விருவரையும் கண்ட மாத்திரத்தில் துள்ளிக் குதித்து விளையாடும் அழகிய மான்குட்டிகள் அன்று அயர்ந்து நித்திரை செய்தன. இதைக்கண்ணுற்ற புவனேசுவரி, "மனோஹரா நமதுஉயிர்த் தோழராகிய இம்மான் குட்டிகளையணுகி அவர்களின்மேல் அன்புகொண்டு நித்திரையிலாழ்த்திய நித்திராதேவி இன்று நம்மைமாத்திரம் ஏன் அணுக அஞ்சுகிறுள்!" என மனோ ஹரனை நோக்கி வினவினாள். "பெண்ணே! மனநிம்மதி யுடையவர்களிடம்தான் நித்திராதேவி அணுகுவாள் மனக் குழப்ப முற்றர்களிடம் அணுக அவளுக்கு விருப்பமில்லை." என்றுமனோஹரன் விடைபகர்ந்தான். அன்று அவர்களுக்கு பூர்ணசந்திரனின் ஒளி சூரியவெப்பம்போன்று கொடுமை யாகத் தென்பட்டது. பச்சைக்கம்பளம் விரித்தார்போன் றுள்ள புற்கள் அன்று முட்களைப்போன்று காணப்பட்டன. சிலுசிலுப்பான காற்று வீசியது அன்று பெரும்புயல்காற்

ருகத் தோன்றியது. காற்றின் வேகத்தால் மரம் செடி களின் கொப்புகள் அங்குமிங்கு மசைந்தன. "புத்திரப் பேற்றைப்பெற விரும்பும் நீங்கள் இன்னும் சிலதினங்களில் உங்களின் பெற்றோரைக் காண்பீர்கள். உங்களின் நடத் தையை மெச்சி மனமுவந்து ஆதரிப்பர். பின் உலகமறிய திருமணஞ்செய்விக்கப் படுவீர்கள். அதன்பின் நீங்கள் புத் திரப் பேற்றைப்பெற்று நீடூழி வாழ்வீர்களாக!" என்று வாழ்த்தி வரவழைப்பதைப்போன்று அச்செடிகள் அசைந் தன. என்றாலும் காதலர்களிருவரும், தம்மை செடிகள் நகைப்பதாக எண்ணிக்கொண்டனர். "கூலிக்காரன் மேற்கே பார்ப்பான் கூத்தாடி கிழக்கே பார்ப்பான்" என்ற பழ மொழிக்கிணங்க இவ்விருவரும் சூரிய உதையத்தையே எதிர் நோக்கிய வண்ணமாக தமது மாளிகையை யடைந்தனர். இவர்களின் சஞ்சலத்தைக்கண்டு மனமிறங்கிய நித்திராதேவி அவர்களை தன்வசப்படுத்தினாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. இவர்களுக்கு நற்சுபச் செய்தியை அறிவிப்பான்வேண்டி அருணன் உதயமாகிவிட் டான். இதையறிந்த மனோஹரனும் புவனேசுவரியும் எழுந்து காலைக் கடனைமுடித்து, ஸ்நாநஞ்செய்து காலைப்போ ஜனம் உட்கொள்ளாமலேயே வழக்கம்போல் ஜெயசீலரைத் தெரிசிக்கச் சென்றனர். ஜெயசீலரை வணங்கியபின் அவ ரது சொல்லையே எதிர்நோக்கினர். இவர்களைக் கண்டதும் ஜெயசீலர் அன்புடன் வரவேற்றுப் பின்வருமாறு பேசலானார்:—

"மனோஹரா! உங்களிருவருக்கும் இனிமேல் யாதொரு கவலையும் இல்லை. ஆனால் இதுகாலை சிறிது கஷ்டப்பட வேண்டும். இக்காட்டிலிருந்து சுமார் 12 மைல்களுக்கப்பால் ஓர் வனமிருக்கிறது. அதில் கொடிய வனமிருகங்களே சஞ் சரிக்கின்றன. அவைகளிடமிருந்தும் தப்பி அங்கு இருக்கும் ஒரு மலையினருகில் செல்லவேண்டும். அம்மலையைச் சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 அடி அகலமுள்ள பெரிய குழி ஒன்று தோண்டப்பட்டிருக்கிறது. அதில் விதம் விதமான முட்கள் நிரப்பப் பட்டிருக்கின்றன. அதைத் தாண்டுவதென்பது முடியாத காரியம். அதற்கு மேற்குப் பக்கத்தில் ஓர் சிங்கம் தோன்றும். அதன் முகத்தையும் வாலிருக்கும் மாதிரியையும் முடியையும் காண்பவருக்கு தானாகவே உயிர் பாதிக்குமேல் பிரிந்துவிடுமென்பது நிச்சயம். அது பயங்கரமாகத் தென்பட்ட போதிலும் அச்சிங்கம் மாயா சிங்கந்தான். அது ஒரு மண்ணினால் செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கிழக்குப்பக்கமாக பலமாய்த்திருப்பினால் சுமார் 4 அல்லது 5 அடி அகலமுள்ள ஓர் பலகை மலைக்கும் மேற்குக் கரைக்கும் மாட்டிவிடும். அதில் சாதாரணமாய் ஏறிப்போய்விடலாம். அந்த மலையினருகில் சென்றவுடன் அங்கும் ஓர் சிங்கம் தோன்றும். அதையும் மேற்குப்பக்கமாகத் திருப்பினால் முன் தோன்றிய பலகை ஓர் துவாரத்திற்குள் மறைந்துவிடும். அம்மலையின் கிழக்குப்பக்கத்தில் ஓர் சிறு பாதை தோன்றும். அதைப்பின்பற்றி—அதன் வழியாக உயரே ஏறினால் மலையின் உச்சியில் அகன்ற ஓர் பலகை தென்படும். அதை யகற்றிவிட்டு அதன் வழியாக வெகு ஜாக்கிரதையுடன் கீழே இறங்கவேண்டும். அத்துவாரத்திலிருந்து கீழே வரையும் படிக்கட்டுகள் வெட்டப்பட்டிருக்கும். அதன் வழியாக இறங்கினால் மலையினடிவாரத்தில் ஓர் மாளிகை போன்று காணப்படும். அதில் பல ஜனங்கள் அடைக்கப் பட்டிருப்பார்கள். அவர்களில் ஒருவர் நீங்கலாக மற்றவர்களுக்கு விலங்கிடப்பட்டிருக்கும். ஏனெனில் ஒவ்வொரு நாளும் காலையில் படுக்கையைவிட்டெழுந்ததும் ஓர் மானிடனை ஓர் அரக்கன் பக்ஷிப்பது—புசிப்பது வழக்கம். ஆதலால் ஒருநாளைக்கு முன்பு அவர்களில் ஒருவனுக்கு விலங்கு அவிழ்க்கப்படும். ஒருவரைப் புசித்தவுடன் அவன் கண் முன்பு எவர் தென்படுகின்றனரோ அவரே மறுநாள் சாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்கு நியமிக்கப்படுவார். உடனே கால் விலங்கு அவிழ்க்கப்பட்டு அவருக்கு விசேஷ உணவு அளிக்கப்படும். இவ்விதமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதனைப் பக்ஷித்து வருகிறான். தவிரவும் அவன் (அரக்கன்) எங்கு செல்கின்றானோ அங்கு எவரேனும் அகப்பட்டால் அவர்களை நன்றாய்ப்பிணைத்துக் கட்டி இம்மலைக்குக்கொண்டுவந்து மற்றவர்களுடன் சேர்த்து விலங்குமிடப்படுவார்கள். இவ்விதமாக அவ்வரக்கன் நீண்டகாலமாக வாழ்ந்துவருகிறான்.

அவன் முன் ஜென்மத்தில் ஓர் தவமுனி. இவனதுபக்தியைக்கண்டு வியப்புற்று பரமசிவன் அவனது முன் பிரசன்னமாகி "உனக்கு என்னவரம் வேண்டும்" என்று கேட்டார். உடனே இம்முனி சந்தோஷசாகரத்திலாழ்ந்து பேசலானான்:— "சுவாமி! அடியேனது விருப்பப்படி என்முன் காக்ஷியளித்ததற்கு வந்தனம். நான் வேண்டுவது யாதெனில் "மறுஜென்மத்தில் என்னால் ஜனங்கள் தினந்தோறும் புசிக்கப்படவேண்டும் என்பதேயாகும்" என்று கேட்டான். பரமசிவனும் "தந்தேன்" என்றுகூறி மறுவினாடியில் மறைந்தார். மறுநிமிஷம் அந்த முனிவருக்கு திகைப்புண்டாய்விட்டது. தன்னால் ஜனங்கள் "போஷிக்கப்படவேண்டும்" என்று கேட்பதற்குப் பதிலாக, தான் ஆனந்த சாகரத்திலாழ்ந்தி நாகுழற "புசிக்கப்படவேண்டும்" என்று கேட்டுவிட்டதையறிந்து வருந்தினான். என்செய்வது? சரஸ்வதியை இலகுவில் விட்டுவிடக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான். தான் தப்பிதமாக கூறியதற்கு ஜவாப்தாரி சரஸ்வதிதான் என்பதே அவனது அபிப்பிராயம். தான் பிறர் சொல்லக்கேட்ட ஒரு கதை அவனது ஞாபகத்திற்கு வந்ததும் அவன் பன்மடங்கு தைரியமடைந்தான். அதை நான் சுருங்கச் சொல்கிறேன் கேளுங்கள்.

ராஜசபையில் இராமாயணத்தை ஒட்டக்கூத்தரும் கம்பரும் மொழிபெயர்த்தார்கள். அப்போது கம்பர்பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லே. ஒட்டக்கூத்தர்தான் ஒரு அத்தியாயத்தைக் கூட தலாக சொல்லி, அந்தஇடத்தில் கடல்காண் படலத்தை பாடும்போது, கடலில் அணை தீர்க்க மலேகளேக்கொண்டு வீசி யெறிந்ததாகவும் அதில் தெறித்து (துளிஜலத்திற்கு) "துமி" என்றுபாடி முடித்தார். அந்தபாடலில் "துமி" என்ற அக்ஷரத்தை மற்றவர்கள் எடுத்துக்கொண்டு அந்தசொல் ஒருவசனத்திலும் இல்லேயென்று கூறினர். அவர் தன் சுயாதீனத்தில் பாடியதல்ல. சரஸ்வதியே நாவினின்றும் பாடினுள். ஆதலால் அவர் அந்த அக்ஷரத்திற்கு மறுநாள் தாம் பொருள் கொடுப்பதாகக்கூறி வெளியேறினர். பின்பு அவர் சரஸ்வதியை வணங்கினுர். அப்போது அம்மாள் பிரசன்னமாகி, "இதற்கு அஞ்சவேண்டாம். இதற்குநான் விளங்கச்சொல்கிறேன். நாளேயத்தினம், இரண்டு மூன்று சிறுவர்களுடன் நான் இவ்வூரிலுள்ள ஓர் தெருவில் பாழான வீட்டில் இருந்துகொண்டு தயிர்பானேயில் தயிரை நிறைத்து மத்தியில் வைத்து கடைந்துகொண்டிருக்கிறேன். அவ் வேளேயில் நீ அவர்களுடன் அங்குவந்தால் அந்தவார்த் தைக்கு பொருள் விளக்கப்படும்" என்றுகூறி மறைந்தனள். அதேபிரகாரம் கம்பர் மற்றவர்களுடன் ஒட்டக்கூத்தர் செல்ல, ஒருவீதியில் ஓர் வீட்டில் அம்மாள் தயிர்கடைந்து கொண்டிருந்தாள். அதுசமயம் அம்மாள் தன் பக்கலில் அமர்ந்திருந்த சிறுவர்களே நோக்கி" குழந்தைகாள்! நான் தயிர் சிலுப்புகிறேன். அதிலிருந்தும் துமி உங்களின் மீது தெறிக்கும். ஆதலால் சற்று தூர விலகிஇருங்கள்" என்று கூறினள். அந்த வாக்கியம் கம்பரின் செவிகளுக்கு கேட் டது. உடனே அவர் மற்றவர்களே நோக்கி, "துளிஎன்ப தற்குப் பதில்தான் துமிஎன்றும் அது நாடோடிப் பழக்க மென்றும்" கூறினர். மற்றவர்களும் அவ்விதமே முடிவு செய்துகொண்டு அவ்விடத்தை விட்டும் சென்றார்களாம். இந்த கதைதான் நமது தவமுனிவருக்கு அதுகாலே ஞாப கத்திற்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்போன்று தான் கூறியதற்கும் ஓர் விமோசன முண்டாகக்கூடுமென்று தீர்மானித்தான். "தன் முன் சரஸ்வதி பிரசன்னமானாலொழிய தான் அவ்விடத்தைவிட்டு நகருவதில்லை" என்று தீர்மானித்துக்கொண்டான். இதையறிந்த சரஸ்வதியும் அவனதுமுன் பிரசன்னமாகி அவனது குறை என்னவென்றும், தன்னால் ஏதேனும் உதவிசெய்ய முடியுமாயின் அவ்விதமே செய்வதாயும் கூறினள். தவமுனியும் தனது நோக்கத்தையும் தான் கூறியதையும் வரம் பெற்றதையும் கூறி தனக்கு விமோசனமுண்டாகவேண்டுமென்றும் துதித்து நின்றான். இதைக்கேட்ட சரஸ்வதி திடுக்கிட்டாள். திகைப்படைந்தாள். பின்பு மனந்தேறிப் பேசலானாள். "அப்பா! ஏதோ சொற்பிழையாக நேர்ந்துவிட்டது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போன்று நீ இவ்வளவு நாள் தவமிருந்தும் பயனில்லாமல் போய்விட்டது! பரமசிவனின் வரத்தை நாம் மாற்றமுடியாது. ஆனால் அதற்கு ஓர் முடிவுகாலத்தை நிர்ணயிக்கலாம். நீ மறுபிறப்பில் பிறந்து அநேக ஆண்டுகளுக்குப்பின் "மனோஹரன்" என்ற ஓர் அரசிளங்குமாரனால் கொல்லப்படுவாய். மறு ஜென்மத்தில் உனது உயிர் உனது வலது காலின் பெருவிரலில் அடங்கியிருக்கும். மனோஹரன் என்ற புண்யாத்மாவினால் கொல்லப்பட்டதும் உனது பூவுலக வாழ்க்கை முற்றுப் பெற்றுவிடும். அதுவரையும் நீ மறு ஜென்மத்தில் தினமொன்றுக்கு ஒரு நபரைப் புசிப்பாயாக!" என்று கூறி மறைந்துவிட்டாள். முனிவரும் சற்று மனத்திருப்தியடைந்தார். அந்த முனிவர்தான் இப்போது காட்டில் மலையினுள் வாழும் அரக்கன். அவனது உயிர் போகவேண்டுமாகில் ஒரே ஒருவழிதானுளது. அதாவது அவனது வலதுகாலின் பெருவிரலில்தான் உயிர் அடங்கியிருக்கும் என்று சரஸ்வதி கூறியதாக சற்று முன்பு கூறினேனல்லவா? ஆம். அந்த விரலை பலமாக இறுத்தினால் அவன் கதறுவான். தத்தளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான். அது காலை தந்திரமாக அவனுடைய விரலை வெட்டி விடவேண்டும். வெட்டும்போது சிறிதுநேரம் காலை விட்டு விட்டாலும் உன்னை உடனே பக்ஷித்துவிடுவான். விரலை மிதிக்குமுன்பும் ஜாக்கிரதையாகவே யிருக்கவேண்டும். விரலை மிதித்தவுடன் அவனால் யாதொன்றையும் செய்யமுடியாது. இன்னுமொரு விஷயம். அவன் அவ்விரலை ஓர் இரும்புச் செருப்பால் மூடியிருப்பான். வெளியிலிருந்து மலைக்குள் வந்ததும் அவன் அந்த இரும்புச் செருப்பைக் கழற்றிவிட்டு சாதாரண தோலினாலாக்கப்பட்ட மிதியடிகளையே உபயோகிப்பான். அப்போதுதான் நீ உனது வேலையைத் துவக்கவேண்டும். உனது பெற்றோரும் செல்வி புவனேசுவரியும் பெற்றோரும் அவ்வரக்கனால் கைப்பற்றப்பட்டு விலங்குடன் அம்மாளிகையிலுள்ளவர்களுடனேயே வசித்து வருகின்றனர். நல்லதிர்ஷ்டவசமாக அவர்கள் அநேகமுறை முயன்றும் அரக்கனின் கண்களின் முன் தென்படாததால் அவர்கள் உயிருடனிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால் நீ உடனே பிரயாணப்படு. காலந்தாழ்த்தாதே. சீக்கிரம்'' என்று நமது ஞானியாகிய ஜெயசீலர் மொழிந்தார்.

ஞானி கூறியதை இருவரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஆவேசமும், திகிலும், மகிழ்ச்சியும் அடிக்கடி தோன்றி வதைக்கலாயின. தங்களுக்கு இது ஒரு சோதனைக்காலம் என்றே கருதினர். தங்களுடைய எதிர்காலம் பயங்கரமான மேகங்களால் மூடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டனர். என்றாலும் தைரியத்தைக் கைவிடவில்லை. பின்பு பேசலாயினர்.

மனோ:—"சுவாமி! தங்களது அருள் இருக்கும்வரை எங்களுக்கு யாதொரு அபாயமும் நேரிட்டுவிடாது. இதோ நான் பயணமாகிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானி:—"சகோதரா! நீ சுகமாய்ச் சென்று ஜெயக் கொடியுடனும் பெற்றோர், மாமனார், ஏனையோருடனும் க்ஷேமமாகத்திரும்பிவருக!" என்று வாழ்த்தி விடை கொடுத்தார். மனோஹரனும் புவனேசுவரியும் மகிழ்ச்சியுடன் தம தில்லம் சென்றடைந்தனர்.

காலைபோஜனமும் தயாராகியது. மனோஹரனும் புவனேசுவரியும் உணவருந்தினர். பின்பு அசுவம் கட்டப் பட்டிருந்த இடத்திற்கு மனோஹரன் சென்றான். புவனே சுவரியும் பின் தொடர்ந்தாள். அசுவத்தை அவிழ்த்து வந்து புவனேசுவரியிடம் விடைகேட்டான். அப்போது புவனேசுவரி:—"காதலா! தங்களைப்பிரிந்து நான் எவ்விதம் தனித்திருப்பேன்! நானும் கூடவரலாமோ?" என்றாள்.

மனோ:—"புவனா! வருந்தவேண்டாம். நீ என்னுடன் வருவது நன்றன்று. போனவிடத்தில் ஏதேதெல்லாம் நடை பெறுமோ! என்ன ஆபத்து நேரிடுமோ! அன்ன ஆகார மின்றி எத்தனை நாள் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமோ! ஈசனுக்குத்தான் தெரியும். ஆதலால் நீ என் னுடன் வருவதை நான் விரும்பவில்லை. உன்னை அரை க்ஷணம்கூட விட்டுப் பிரியமனமில்லாத நான் இதுகாலை அனு பவிக்கும் வேதனையை கூறத்திறமன்று. என்செய்வது? துன்பத்தின் வாயிலாகத்தான் இன்பத்தை யனுபவிக்க வேண்டும்போலும்! காதல்மனோஹரி! என் இன்பக்கிளியே! நீ உனது பெற்றோரையும், அத்தை மாமனாரையும் கண்டு களிப்படையவேண்டுமென்றோ! அதை நீ எதிர்பார்த்திரு, நம் விருப்பம் அதி சீக்கிரத்தில் நிறைவேறிவிடும். நான் சுகமேசென்று ஜெயத்துடன் மீள அம்ருதகலசம்" போன்ற உனது வாயால் விடையளிப்பாயாக!

புவ:—"நாதா! தங்களது வார்த்தைக்கு மறுவார்த்தை கூறவிரும்பவில்லை. நான்—என் உடல் இம்மாளிகையி லிருப்பினும், என்னுயிர் தங்களிடமே தங்களருகில் இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். தாங்களும், நான் தங்களுடன் இருப்பதாகவே கருதிக்கொள்ளுங்கள். தாங்கள் இவிடம் வரும்வரை நான் அன்ன ஆகாரம் உட்கொள்ளமாட்டேன். இது நிச்சயம். தங்களுடைய ஞாபகார்த்தமாக தங்களுடைய கணையாழியை யாவது எனக்கு கொடுக்கக் கூடாதா? அதை எப்போதும் பார்த்து ஆனந்தமடைவேனன்றோ!"

மனோ:—"புவனு! நீ என்மீது கொண்டுள்ள அன்பை அளவிட்டறிய முடியாது. உனது விருப்பப்படியே கணையாழியை இதோ கொடுத்து விடுகிறேன். உனது ஞாபகார்த்தமாகஎனக்கு நீ எதைக்கொடுக்கவிரும்புகிறாய்? அதை நான் உன்னிடம் கேட்கவும் வேண்டுமோ? உன்னிடம் கேட்காமலே அநுபவிக்க எனக்கு பத்தியதை உண்டன்றோ" என்று கூறியவாறே அவளை தனது மார்போடணைத்து அவளது அதரங்களில் முத்தாரங்களை அணிவித்தான். செல்வி புவனேசுவரி மனோஹரன் ஆலிங்கனத்தில் ஆனந்தமெய்தினுளென்றாலும் வெட்கத்தினால் தன்னிரு கண்களையும் மூடிக்கொண்டாள். அவளை யறியாமலே அவளது மெல்லிய கரங்கள் மனோஹரனை இருகக்கட்டியது. சிறிதுநேரஞ் சென்றதும் மனோஹரன் அவளை விடுவித்தான். "பெண்ணே உனது ஞாபகார்த்தமாக நான் பெறவேண்டியதைப் பெற்றுவிட்டேன். உனது அழகான கண்ணாடி போன்ற பளபளப்பான கன்னங்களைக் கண்டதும் அதில் ஓர் அருமையான முத்தங்கொடுக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றிவிட்டது. அவ்வெண்ணமே என்னை இவ்விதம் செய்யும்படி தூண்டியது. மன்னிக்கவும். நான் சென்று வரலாமா?"

புவ:—"மனோஹரரே! தங்களுக்குச் சொந்தமான புவனேசுவரியை நீங்கள் என்ன செய்தாலும் தகும், அதற்காக ஏன்? என்றுகேட்பவர் யாருமில்லை. உங்களுடைய இன்பமே அவளது இன்பம். உங்களுடைய சுகமே அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய சுகம். அவ்விதமிருக்க தாங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டிய காரணமில்லை. காதலா! தாங்கள் சுகமாக சென்று ஜெயம்பெற்று அரக்கனைக்கொன்று நமது தாய் தந்தையரையும் எனையோரையும் விடுவித்து இந்நகருக்கு க்ஷேமமாக வந்தடைந்து நமது ஜெயசீலரை வணங்கியபின் தங்களது உயிராகிய காதலி புவனேசுவரியை மகிழ்விப்பீர்களா!" என்று முகமலர்ச்சியுடன் விடைபகர்ந்தாள். மனோஹரனும் அவளிடம் விடைபெற்றுக்கொண்டு தனது அசுவமேறி பிரயாணமாகி சென்று விட்டான். அவனது தோற்றம் கண்களுக்குத் தென்படும்வரை புவனேசுவரி பார்த்திருந்துவிட்டு தனது மாளிகையை யடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—12

## கொள்ளைக்கூட்டத்தாரைப் பிடிக்கத் துப்பறிதல்.

"பெண்ணரசே! எனது தந்தையவர்கள் தாங்கள் பிரயாணமாகிவிட்டதாக எழுதிய கடிதம் நமக்கு கிடைத்து நாட்கள்பல சென்றுவிட்டனவே. இன்னும் இவ்விடம் வந்து சேரவில்லையே. ஆதலால் நமக்கு யாதொரு தகவலும் தெரிவிக்காததாலும் இன்னும் வந்து சேராததாலும் எனக்கு பலத்த சந்தேகம் உண்டாகிறது" என்று நமது பாலகிருஷ்ணன் தனது காதலியாகிய மங்கையர்க்கரசியிடம் மிகவும் விசனத்துடன் வினவினுன்.

மங்கையர்க்கரசி:—அன்பரே! தாங்கள் கூறுவதைப் போன்றே எனக்கும் ஐயமுண்டாகிறது. அவர்கள் பிரயாணப்படவில்லையென்று நம்புவதற்குமில்லை. தூத்துக்குடியிலிருந்தும் ஒரு தந்தி யனுப்பியிருக்கிறுர்களன்றே! இவைகளை யெல்லாம் ஆராயுங்கால் அவருக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டிருக்கலாம். அவ்விதம் நேரிடினும் நமக்கு அறிவித்திருக்கலாமன்றே! அவ்விதமுமில்லை. ஒருவேளை தங்களது பால்ய சிநேகிதர்களாகிய பாழும் கொள்ளைக் கூட்டத்தினரிடம்தான் அகப்பட்டுக் கொண்டனரோ! அறியோம். அவ்விதமிருப்பினும் நமக்கு "இவ்வளவு தொகை கொடுத்தால் அவரை விடுதலை செய்வோம்" என்று கொள்ளைக் கூட்டத்தினர் அறிவிப்பார்களன்றே! அவ்விதமுமில்லை. இதன் மர்மம் ஈசனுக்குத்தான் தெரியும்."

பாலகி:—"ஆம்! அவ்விதம்தானிருக்கலாம். அப்பாதகர்கள் முக்கியமாக தூத்துக்குடியிலும் மதுரையிலும், கல்கத்தாவிலும்தான் அலைந்து திரிகின்றுர்கள். ஒருவேளை அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகர்களால்தான் எனது தந்தைக்கு ஏதேனும் விபத்து நேரிட்டிருக்கலாம். உனது தந்தையவர்கள் கொள்ளைக் கூட்டத்தினரை அறவே யொழிக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டும் இன்னும் சுமார் நால்வர் அகப்படவில்லை. அந் நால்வரால்தான் இது சமயம் நமக்குப் பயங்கரமாயிருக்கிறது. முற்பகல் விளைந்தால் பிற்பகல் அறுக்கவேண்டும் என நாடோடியாகச் சொல்லிக்கொள்வார்கள். அதுபோன்று நான் செய்த அட்டூழியங்கள் என்னையே வருத்துகின்றன. பெண்ணே! இதுகாலை என் மனம் எவ்விதம் தத்தளிக்கின்றதோ அதேவிதம்தான் என் கையில் சிக்கியவரின் உறவினரும் இருந்திருப்பார்கள்! அந்தோ! அக்கொடுமையை எண்ணுந்தோறும் என் மனம் படீரென வெடிப்பதுபோன்றிருக்கிறதே!" என்று கூறி பாலகிருஷ்ணன் கண்ணீர்வடித்தவாறே மங்கையர்க்கரசியின் மடியில் அடியற்ற மரம்போல் சாய்ந்தான்.

எற்கனவே வாட்டமுற்றிருக்கும் அவ்வனிதா ரத்தினத்திற்கு பாலகிருஷ்ணனின் நிலைமையைக்கண்டதும் சொல்லவும் வேண்டுமா? அவளை யறியாமலே முத்துப்போன்ற கண்ணீர் அவளது கண்களினின்றும் வெளிப்பட்டது. துக்கம் நெஞ்சை யடைத்தது. அவளால் பேச முடியவில்லை. பாலகிருஷ்ணனையே நோக்கியவாறு வீற்றிருந்தாள். சிறிதுநேரஞ் சென்றபின் சற்று மனந்தேறினாள். தன் கண்களினின்றும் வெளிப்படும் நீரை பாலகிருஷ்ணன் அறியாதவாறு தனது முந்தாணையினால் மறைத்துக் கொண்டாள். தன் கண்களையும் துடைத்துக்கொண்டு பாலகிருஷ்ணன் கண்ணீரையும் துடைத்துப் பேசலானாள்:—

"நண்பரே! இவ்விதம் தாங்கள் வருந்துவதாற் பயன் யாது? கடவுள் எவ்விதமும் தங்களுடைய தந்தையைக் காப்பாற்றி நமது மனம் களிக்குமாறு இவ்விடம் கொண்டு வந்து சேர்த்துவிடுவார். காதலா! இது திண்ணம். ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றும் முடியவேண்டிய காலத்தில் தான் முடியும். அதற்கு முன்பு குட்டிக்கரணம் போட்டாலும் முடியாது. ஆனால் என் மனதில் ஏதோ ஓர் சக்தி வேலை செய்து கொண்டு வருகிறது. காதலா! இந்த வைகாசி மாதம் 15ம் தேதிக்குள் தங்களுடைய தந்தையை தாங்கள் பார்த்து மகிழாவிட்டால் எனது பெயராகிய "மங்கையர்க்கரசி" என்பதை "மங்கையர்க்கடிமை" என்று அழையுங்கள். காதலா! தங்களைப்பார்க்கிலும் நான் தங்களின் தந்தையை—ஏன்—என் மாமனாரைக் காண வெகு ஆவலோடிருக்கிறேன் என்பதை நான் தெரிவித்து தாங்கள் அறியவேண்டுமென்பதில்லை. தாங்களே செயலளவில் கண்டிருப்பீர்கள். தைரிய லெக்ஷ்மியை கைவிடாதீர்கள். அவள் உங்களைக் காப்பாற்றுவாள். தாங்களும் எனது தந்தையும் இப்போதே பிரயாணமாகி அக்கொள்ளைக்கூட்டத்தினரைப் பிடிக்க முற்படுங்கள். அப்பாதகர்களிடம்தான் எனது மாமனாரவர்கள் அகப்பட்டிருக்கிறார்கள் என்று எனது மனச்சாக்ஷி திட்டமாகக் கூறுகின்றது. ஆதலால் காலந்தாழ்த்தவேண்டாம். மனக்கிலேசம் வேண்டாம். இப்போதே பிரயாணமாகுங்கள்" என்று பற்பலவிதமாக தைரியத்தையும் யுக்தியையும் புகட்டினாள். அதுகாலை ஜெயராமரும் அவ்வறை வந்து சேர்ந்தார்.

மங்கையர்க்கரசி பாலகிருஷ்ணனின் கவலைக்குறி தோன்றிய வதனத்தையே உற்று நோக்கிக்கொண்டு தேறுதல்மொழி கூறுகிறாள். பாலகிருஷ்ணனோ மூடியகண்களைத் திறக்கவேயில்லை. துக்காதேவி அவனை அடிமைப்படுத்தி விட்டனள்போலும். இவ்விருவரின் நிலைமையைக் கண்ணுற்ற ஜெயராமர் திடுக்கிட்டார். சந்தோஷத்துடன் அழகிய சிறு மான் குட்டிகளுடன் விளையாடிப்பொழுதுபோக்கும் சிறுமிக்கு என்ன குறை வந்துளது என்று சிந்தித்தார். பாலகிருஷ்ணனின் கண்களினின்றும் வெளிப்படும் நீரைக் கண்டதும் தனது திரேகத்திலிருந்துதான் ஒவ்வொரு துளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் வெளிப்படுகின்றது என்று துடிதுடித்தார். சரே லென அவன் பக்கலில் சென்று "பாலகிருஷ்ணு! என்ன நடந்தது? என் கவலையுடன் கண்ணீர் வடிக்கிருய்" என்று வினவினுர்.

சற்றும் எதிர்பாராதவிதமாக தனது தந்தை தனது அறையை அடைந்ததைக்கண்ட சிறுமி திடுக்கிட்டாள். தந் தையைக்கண்டதும் தனது ஆசனத்திலிருந்தும் எழும்ப எத்தனித்தாளெனினும் பாலகிருஷ்ணனை நோக்கவும் மீண் டும் உட்கார்ந்து "பாலகிருஷ்ணு! ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஐயா வந்துவிட்டார்கள். இனி நடக்கவேண்டியதை சிந்திப் போம். எழுந்திருங்கள்" என்று கூறினுள். இதை செவி மடுத்த பாலகிருஷ்ணன் தனது கண்களைத்திறந்தான். ஜெயராமனைக்கண்டதும் குய்யோமுறையோவென்று அழுத வண்ணமாக அவரைக் கட்டிக்கொண்டான். காரணம் யாதென்பதை யறியாத ஜெயராமர் இன்னது செய்வதெனத் தோன்ருமல் தவித்தார். இவனுடைய நிலைமையைக் கண் ணுற்ற ஜெயராமருக்கு கண்ணில் நீர் தாரைகவே ததும்பிற்று.

மூவரும் அழுதுகொண்டு கண்ணீர் வடிப்பதால் யாதொரு நன்மையும் ஏற்படாதென்றறிந்த அரிவை மங் கையர்க்கரசி மெதுவாகத் தனது தந்தையை நோக்கிப் பேச லானுள்:—"ஐயா! பாலகிருஷ்ணனின் தந்தையவர்கள் பிர யாணமாகி நாட்கள் பல சென்றும் இன்னும் இங்கு வந்து சேராததால் பாலகிருஷ்ணனுக்குப் பலவித சந்தேகங்க ளுண்டாகிறது. நானும் அவ்விதமே ஐயுறுகின்றேன். கொள்ளைக் கூட்டத்தார் வசமே சிக்கியிருக்க வேண்டுமென் பது எங்களது திடமான நம்பிக்கை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொள்ளையரின் இருப்பிடத்தை யறிந்து அவர்களையும் கைப்பற்றி பாலகிருஷ்ணனின் தந்தையையும் மீட்கவேண்டியது தங்களின் மகத்தான கடமை. ஆதலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே அதற்குப் பிரயத்தனப்படுங்கள்" என்று விபரமாக சகலத்தையும் கூறி முடித்தாள்.

ஜெயராமரும் பாலகிருஷ்ணனுக்கு வேண்டிய தேறுதல்கூறி தேற்றுவித்தார். மூவரும் ஆழ்ந்தயோசனையிலீடுபட்டார்கள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது:— ஜெயராமர் பெரிய கோடீஸ்வரனைப்போலவும், பாலகிருஷ்ணன் ஓர் ஏழைப் பெண்ணைப்போலவும் வேஷம் தரித்து அக்கொள்ளையர் சஞ்சரிக்கும் இடங்களை சுற்றிவரவேண்டுமென்றும். அடிக்கடி நடக்கும் விபரங்களை பாலகிருஷ்ணன் மங்கையர்க்கரசிக்கு தெரிவிக்கவேண்டுமென்றும் முடிவுசெய்தனர். அவ்விதமே இருவரும் அன்றே பிரயாணமாகினர்.

ஜெயராமரின் காதுகளில் அணிந்திருந்த இரு கடுக்கன்கள் பார்ப்போர் மனதை கவரக்கூடியதாய் மின்மினென்று பிரகாசம் கொடுத்தன. கைவிரல்களில் அணிந்திருக்கும் மோதிரங்கள் மதிப்பிடுவதற்கரிது. கையில் ஒரு தங்கச் சங்கிலியும் அணிந்திருந்தார். கழுத்தில் கச்சைப்பாரை போன்ற ஓர் ஆபரணம் காணப்பட்டது. அவருடைய அங்கியில் தங்கச்சங்கிலியில் மாட்டப்பட்ட ஓர் கெடிகாரம் பையில் போடப்பட்டிருந்தது. விலையேறப்பெற்ற சருகை வேஷ்டியையும் சால்வையையும் அணிந்திருந்தார். ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள நகைகளை அணிந்து கொண்டு பிரயாணமாகிய ஜெயராமர் ஓர் பெரிய கோடீஸ்வரன் தான் என்பதை பச்சைக்குழந்தையும் கூட தெரிந்து கொள்ளும்.

ஜெயராமரும் பாலகிருஷ்ணனும் முதலாவதாக தூத்துக்குடிக்குசென்று அங்கு துப்பறிந்தார்கள். தமக்கு அறிமுகமானவர்களையெல்லாம் சந்தித்து வினவினர். ஒன்றும் பலிக்கவில்லை. மதுரை, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி முதலிய ஊர்களையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தனர். அங்கு ஒவ்வொரு வீதியாக அலைந்தும் கொள்ளைக்கூட்டத்தினரை யறியமுடியவில்லை. அவர்களைப் பற்றிய ஓர் வார்த்தையும் கூட எட்டவில்லை. பின் மனம் சோர்ந்தவர்களாய் கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களை சுற்றிப்பார்ப்போமென்றெண்ணி சென்னை ரயில்வேஸ்டேஷனுக்கு கார் ஏறினார்கள். இவ்விருவரும் ஒன்றுபோல் உலவுவதேகிடையாது. ஏனெனில் தாங்கள் ஏறும் கார் கொள்ளைக் கூட்டத்தினரைச் சேர்ந்ததாக இருப்பின் இருவருக்கும் ஆபத்தன்றோ நேர்ந்துவிடும். ஒரேசமயத்தில் இருவரும் ஒன்ருக அகப்பட்டுக்கொண்டு விட்டால் எவ்விதம் தப்புவது? என்றுயோசித்து தான் இருவரும் வெவ்வேருக ஒருவரின் பின் மற்றவராக செல்லுவர். ஆதலால் இப்போது சென்னையில் கார் ஏறியதும் வேறு வேருகத்தான். நமது ஜெயராமரைக்கண்டதும் வெகுபயபக்தியோடு ஓர் டிரைவர் எங்குபோகவேண்டுமென்று கேட்டான். ஜெயராமர் ரயில்வேஸ்டேஷனுக்கு செல்லவேண்டுமென்று பதில் கொடுத்ததும் அவன் தன் காரிலேயே ஜெயராமரை ஏற்றிக் கொண்டான். ஜெயராமர் ஏறியகார்தான் முதலாவதாக செல்கின்றது. குறித்தநேரத்தில் கார்களிரண்டும் முறையே ஒன்றன்பின்னென்ருய் புகைவண்டிஸ்தலத்தை யடைந்தன. டிரைவர்களும் தங்களுடைய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றனர்.

முதற்கார் கொள்ளைக்கூட்டத்தவரைச் சேர்ந்தகார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. அக்காரில் ஜெயராமர் ஏறி சென்ற சிறிதுதூரத்திற்கப்பால் ஓர் இடகாத்திரமான மனிதன் ஏறினன். மறுநிமிஷம் அம்மனிதன் ஜெயராமரிடம் பேசலானன்:— "ஐயா! தாங்கள் எங்கு செல்லவேண்டும்?" என்று வினவினன்.

ஜெய:—"நான் ரயில்மூலமாக ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டும். தங்களுடைய பயணம் எங்கே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனிதன்:—" நான் "வாடி" என்ற ஊருக்குச் செல்கின்றேன். தாங்கள் எங்கு செல்கின்றீர்கள்? அதைத் தெரிவித்தால் என்னாலான உதவி செய்கின்றேன். பொதுவாக பிரயாணிகள்பால் நான் அதிக அன்புடையவன். தாங்கள் சற்றும் கிலேசமின்றிக் கூறலாம்.

ஜெய:—"அவ்விதமாயின் மெத்த உபகாரம். நானும் வாடிக்குத்தான் செல்ல உத்தேசித்திருக்கிறேன். தங்களுடன் நானும் வரலாம். வழித்துணையாளும் அதிர்ஷ்டவசமாகக் கிடைத்துவிட்டது."

அம்:—"ஆம். தங்களது அதிர்ட்டமே அதிர்ஷ்டம்" என்று கூறினன் இவ்வளவில் காரும் ஸ்தலத்தை வந்தடைந்தது நாம் முன் குறிப்பிட்டவண்ணம் கட்டணத்தைச் செலுத்திவிட்டு டிக்கட் வாங்கி வாடிக்குச் செல்லும் ரயிலில் ஏறிக்கொண்டனர். ரயிலும் குறிப்பிட்ட நேரத்தில் புறப்படலாயிற்று. இவ்விருவரிடையிலும் சம்பாஷணை ஆரம்பமாகியது.

அ. ம:—"ஐயா! தாங்கள் வாடிக்குச் செல்வதாகக் கூறினீர்களே. அங்கும் தங்களுக்கு உறவினர்கள் யாருமிருக்கின்றனரோ?"

ஜெய:—"இல்லை. எனக்கு உறவினர் யாருமில்லை. அந்த ஊர் மிகவும் செழிப்பானதென்றும் கேள்விப்படுவதால் அங்கு நிலங்களை விலைக்கு வாங்கலாமென எண்ணியே செல்கின்றேன். தங்களுக்கு அந்த ஊர்தானு?"

அ. ம:—"ஆம். எனக்கு அந்த ஊர்தான். நானும் கொஞ்சம் ஐவேஜு உள்ளவன்தான். எனக்கு ஏராளமான நிலம் அங்குளது. தாங்கள் வேண்டுமானல் எனது விளைநிலங்களையே வாங்கிக்கொள்ளலாம். தாங்கள் தனிமையாகத்தான் பிரயாணஞ்செய்கின்றீர்களோ?"

ஜெய:—ஆம். தனியாகத்தான் பிரயாணஞ் செய்கின்றேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. ம:—"அப்படியா? தாங்கள் எனது இல்லத்திற்கே எழுந்தருளலாம். தாங்கள் காருண்யசீலராகத் தென்படுவதால் எனது இல்லத்தில் தங்களுக்கு ஒருநாள் விருந்தளிக்க அவாவுகிறேன். தங்களிஷ்டம் என்னவோ?"

ஜேய:—"அதற்கென்ன? அவ்விதமேயாகட்டும். தாங்கள் என்பால் கொண்டுள்ள அன்பிற்கு மனமகிழ்கின்றேன். தங்களுக்கு விருப்பமானுல் நான் அவ்விடமிருந்தும் வெளிப்படும் வரையில் தங்களுடைய இல்லத்திலேயே தங்குகிறேன்.

அ. ம:—"மெத்த சந்தோஷம். இதை நான் அப்பொழுதே தெரிவிக்கலாமென்று எண்ணினேன். ஆனால் தாங்கள் சந்தேகங்கொண்டுவிடக் கூடாதென்பதே எனது எண்ணம். தாங்கள் நிலங்கள் வாங்க கைவசம் ரூபாயுடன் வந்திருக்கிறீர்களோ?"

ஜேய:—"ஆம். கொண்டுவந்திருக்கிறேன்."

நமது பாலகிருஷ்ணனும் இவர்களே விடாது பின் தொடர்ந்து வந்திருப்பான் என்பதை நான் கூறுமல் வாசகர்கள் அறிந்திருக்கலாம். பாலகிருஷ்ணனும் இவ்வண்டியிலேயே இவர்களுக்கருகில் குந்தியிருந்தானுதலால் இவர்கள் பேசுவது அவனுக்கு நன்ருய் விளங்கியது. நாம் மேற் குறிப்பிட்டவண்ணம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது பாலகிருஷ்ணன் மெதுவாகத்தனது முக்காடிட்ட தலேயுடன் ஜெயராமரின் முன்வந்து பேசலானுன்.

பா. கி:—"ஐயா! புண்ணியவான்களே! கோடீஸ்வரப் பிரபுக்களே! எனக்கு வயிறு பசிக்குது. உங்க தயவு வேணும். அடியா சத்துப்போகாம காக்கணும். நீங்களுக்கு புண்யமுண்டாவ நா கடவளே கேக்கிறேன். கும்பிடுதேன். நான் சாப்பிட்டு இப்ப நாலுநாளாச்சுதீங்க. நீங்களே பாடுங்க. ஒரு கனவான் எனக்கு டிக்கட் வங்கி தந்தாரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுகளுக்குக் கோடிப் புண்ணியமுண்டாகணும். நீங்க எனக்கு உதவி செய்யணும்."

ஜெய:—"அடீ! என்னபேசுகிறாய்? வேண்டுமானால் தூரஇருந்து கேட்கிறதுதானே. நாங்கயாரென்பதை நீ அறியமாட்டாய்போலும்! பிச்சைக்காரி! நான் உனக்கு சாப்பாட்டிற்கு ஏதேனும் தருகிறேன். பேசாமலிரு. தொந்தரவுபண்ணாதே"

பாகி:—"சரிங்கசாமீ! எனக்கு வயறுதான் பசிக்கி. என்னசெய்ய, ஏழைசொல் அம்பலத்தில் ஏறாது. உங்க புருஷம்"

அம:—"(ஜெயராமனிடம்) தங்களிடம் ஏறக்குறைய ஐயாயிரம்ரூபாய் இருக்கலாமோ?"

ஜெய:—"இல்லை. அதற்கும் கூடுதலாகவே கொணர்ந்திருக்கிறேன்."

அம:—"சரி. தங்களுடைய மனைவியையும் என் தங்களுடன் அழைத்து வந்திருக்கக்கூடாது?"

பாகி:—"ஐயாமாரு! சாமிமாரு! கேடுங்கோ! நா ஏழை இல்லியா? என்னை உங்கவீட்டில் வேலைக்கு வைச்சிக்கிட்டா உங்கபிரியம்போல நடக்கேன். அம்மாள் சொல்படி கேட்டு நடக்கேன். அவுகளும் என்னை பிரியமாவ பார்த்துக்கிடு வாங்க"

அம:—"ஏ! கிழவி! சும்மா இரு. உனக்கு உதவி செய்வதாக முன்னமே இவர்கள் கூறினார்களே. பின்னும் ஏன் தொந்தரவு செய்கிறாய்?"

பாகி:—"இல்லீங்கோ! கோபம்மாண்டாம். உங்களுக்கு ஞாவகப்படுத்தியேன். நான் பாவமில்லீங்க!"

அம:—'சரி, சும்மா இரு"

ஜெய:—"(அம்மணிதனிடம்) நான் என் மனைவியை அழைத்துவரவில்லை. அவளை அழைத்து வந்தால் அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவு உண்டாகும். ஆதலால் அழைத்துவரவில்லை." என்று கூறினர். இவ்விதமாக இருவரும் சம்பாஷித்துக் கொண்டே சென்றனர். இடையிடையே பாலகிருஷ்ணனும் தனது லீலைகளை நடத்தினன் குறிப்பிட்ட நேரத்தில் வண்டியும் வாடியை யடைந்ததும் நிறுத்தப்பட்டது. இருவரும் வண்டியைவிட்டு இறங்கினர். நமது பாலகிருஷ்ணனும் மெதுவாக இறங்கினன். இதற்கிடையில் தவறிவிழுந்து விட்டவனைப்போன்று விழுந்து "ஐயா! கீழே புழுந்திட்டேன். என்னைக் காப்பாத்தனும். ஐயிங்க" என்று பலத்த சப்தமிட்டான்.

இதைச்செவியுற்ற இருவரும் திரும்பிப்பார்த்தனர். "நீ எப்படியும் சாகு. நாங்கள் போகிறோம்" என்றுகூறி அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்களை நோக்கியவாறே சென்றனர். அவைகளில் ஒன்றில் ஏறிக்கொண்டனர். காரும் பிரயாணமாகி வெகுவேகத்துடன் சென்று ஓர்மாளிகையின் முன்பு நின்றது. அம்மாளிகையின் அழகை இங்கு வர்ணிப்பது இயலாது. ஆதலால் அதைவிட்டு விடுவோம். மாளிகையினுள் சென்று ஓர் அறையில் அமர்ந்தனர். மறு நிமிஷம் காப்பிபோடப்பட்டு அவ்வறைக்கு கொண்டுவரப்பட்டது. கொண்டுவரப்பட்ட இரண்டு டம்ளர் காப்பியில் ஒன்றில் ஓர்வித மயக்கமருந்து கலக்கப்பட்டிருந்தது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இருவரும் நீண்டநேரம் பேசியபின் அம்மனிதன் ஜெயராமரை காப்பி அருந்தும்படி கேட்டுக்கொண்டான். அவரும் தனக்கென வைக்கப்பட்டிருந்த டம்ளரை எடுத்தார்.

இதுசமயம் "சாமீ! நமட்காரம்! இது உங்கடுக்கு அடுகுதாணு? நான் ஏழைன்னு அப்பமே சொல்லீன்வில்ல, நானும் உங்களைநம்பி உங்கபின்னுல வந்தேன். கால்தவறி கீழே புழுந்திட்டேன். நான் சத்தம்போட்டேன். நீங்க திரும்பி பார்த்துட்டு போயிட்டீங்க. நான் ஒருவிதமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திருச்சி உங்க காருகிட்டவந்தேன். நீங்க அதுக்கு முந்தி ஸ்டாட்டுபண்ணிட்டு போயிட்டீங்க, நானுமெல்ல உங்ககாருபின்னுலே ஏறிக்கிட்டேன். இங்கே வந்திகிட்டேன். நீங்கமட்டும் சாப்புடுதேளே, நானும் சாப்பிட வேண்டாமா? எனக்கு வயிறு பசிக்கிதிங்க. கொஞ்சம் படகாடம் கொடுங்க." என்று கூறியவாறே முக்காடிட்டுக் கொண்டு இருவரும் இருக்கும் அறையை யடைந்தான் நமது பாலகிருஷ்ணன்.

சற்றும் எதிர்பாராதவிதமாக எழுந்த குரலைக்கேட்ட அம்மனிதன் திடுக்கிட்டு திரும்பிப்பார்த்தான். இவ்விதம் நடைபெறுமென்று ஜெயராமர் எதிர்பார்த்தவராதலால் அவர் ஆச்சரியமடையவில்லை. என்றாலும் சற்று திகைப்பவரைப்போன்று பாசாங்குசெய்தார். பாலகிருஷ்ணனைக் கண்டதும் அம்மனிதன் கோபாவேசங்கொண்டு, "அடீ! கிழவி! உனக்கு இவ்வளவு தைரியமா? வீட்டுக்குள்ளும் வந்துவிடுவாய்போலிருக்கிறதே. மரியாதையாக வெளியே சென்றுவிடு" என்று கூறினான்.

கிழவி:—"சாமி! அப்படிச் செல்லாதீங்க, நான்கிழவியில்லீங்க! பாவம்! எனக்கு ஏண்டு வாயப்பயம் கொடுங்க. நானுபோறேன்"

அம்:—"சரி! இந்தா இரண்டுபழம், வாங்கிக்கொண்டு தொலைந்துபோ" என்றுகூறி இரண்டு பழங்களைக்கொடுத்தார். அதை வெகுவணக்கத்துடன் பெற்றுக்கொண்டு நமது மாயாகிழவி அதன்தோலை உரித்து கையில் வைத்துக் கொண்டு பழத்தை வீசிவிட்டாள். பின்பு தொலியை சாப்பிட எத்தனித்தாள், அதுகாலை அம்மனிதன் "அடகிழவி! பழத்தை சாப்பிடச்சொன்னல் தொலியைச்சாப்பிடுகிறாயே" என்று கூறி நகைத்தான்.

கிழவி:—"சாமி! என்னுங்கோ! எங்கஊரிலே அடுப்படிதா சாப்பிடுது, அதைப்போல நானும் சாப்பிடுறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழத்தையா சாப்பிடணும். இனி எனக்குத் தெரியுங்க, நான் நாப்பதாமாண்டுல்லவோ? நான் அந்த பழத்தை எடுத்து சாப்பிடுறேன்"

அம்:—"வேண்டாம். அதில் மண் ஒட்டியிருக்கும். வேறுபழங்களைக் கொடுக்கிறேன். சாப்பிடு" என்றுகூறி வேறு இரண்டு பழங்களைக் கொடுத்தான். அதைக் கிழவி கையில் வைத்துக்கொண்டு தோலைஉரித்து ஒருகையிலும் பழத்தை ஒருகையிலுமாக வைத்துக்கொண்டு "சாமி! இப்போ எதைச் சாப்பிடசொல்லிங்க." என்று கிழவி கேட்டாள்.

அம். —"அட, சனியனே! இடது கையிலிருக்கும் பழத்தைச்சாப்பிடு," என்று கூறியதும் கிழவி வலது கையி லிருந்த தொலியைச்சாப்பிட வாயினருகில் கொண்டுவந் தாள். இதைக்கண்ட அம்மனிதன் அடங்கா நகைப்புக் கொண்டு அவளருகில் சென்று "இதைச் சாப்பிடு" என்று பழத்தை வாயில் திணித்துவிட்டு தொலியை வீசிவிட்டான். மறுநிமிஷம் கிழவி "தூத்தூ" என்று துப்பிவிட்டு "இதென்ன வழுவழுன்னு இரிக்கி, இது வாணும்" என்று துப்பினாள்.

இது இவ்வாறாக நமது ஜெயராமர் காப்பி அருந்த டம் ளரைத்தூக்கினாரல்லவா? ஆம். அவருக்கு ஓர் பலத்த சந்தேகமேற்பட்டுவிட்டது. தான் எங்கு, எவருடன் இருக் கிறோமென்பதையும் அவர் மறந்துவிடவில்லை. தன்னை எவ் விதமும் மயக்கி தன்னிடமுள்ள பணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் அம்மனிதன் அவ் விதம் நடிப்பதாக ஜெயராமர் மனதில் தோன்றியது. அத லால் ஜெயராமர் மேசையில் வைக்கப்பட்டிருந்த இரு டம்ள ரையும் கூர்ந்து கவனித்தார். இரண்டும் ஒன்றுபோலவே தோன்றியது. உடனே அவர் தனக்கென வைக்கப்பட் டிருந்த டம்ளரை அம்மனிதன் முன்னும் அம்மனிதனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென வைக்கப்பட்டிருந்த டம்ளரைத் தானும் வைத்துக் கொண்டார். கிழவியுடன் அம்மனிதன் சம்பாஷித்துக் கொண்டிருந்ததால் இந்த டம்ளர் மாற்றியதை கவனிக்க வில்லை. மீண்டும் அம்மனிதன் கிழவியை நோக்கி விலாப் புடைக்க சிரித்துக்கொண்டே பழத்தை அவளுடைய வாயில் திணிக்கும்போது, நமது ஜெயராமர் தம்முன் வைக்கப்பட்டிருந்த மேசையை உற்று நோக்கினர். அம் மனிதர் தன் கையில் வைத்திருந்த ஓர் புட்டியை மறந்தாற் போல தன்னிருப்பிடத்தில் வைத்துவிட்டு கிழவியினருகில் சென்றதால், நமது ஜெயராமர் அதை மெதுவாக எடுத்துக் கொண்டார். அதைக்கொஞ்சம் தமது மூக்கினருகில் கொண்டு சென்றவுடன் ஓர்வித மயக்கம் உண்டாவதுபோல் தோன்றியது. ஆதலால் அதை தம்மிடமே வைத்துக் கொண்டார். இதன்பின் அம்மனிதனும் தனது ஆசனத்தி லமர்ந்தான்.

அம்மேஜையில் அம்மனிதனின் முன்னல் சுமார் 10 பொத்தான்கள் பதிக்கப்பட்டிருந்தன. அதையும் ஜெய ராமர் கூர்ந்து நோக்கினர். அது ஏதேனும் பெல்லடிக்கும் கருவியாகவிருக்கலாம் என யூகித்துக்கொண்டார். பின்பு இருவரும் டம்ளரை கையில் எடுத்துக்கொண்டனர். "அன் பரே! அதோ தென்படும் படம் வெகு அழகாக தோன்று கிறதே. அது யாருடையது" என்று கூறியவாறே அதனரு கில் சென்றார். அம்மனிதனும் பின்தொடர்ந்தான். இரு வரும் அதன் வர்ணிப்பைப்பற்றி கூறிக்கொண்டே பருகினர்.

இது சமயம் நமது கிழவி மெதுவாக எழுந்து சந்தடி செய்யாமல் அங்குள்ள—திறந்திருந்த ஓர் அலமாரியை மெது வாகத் திறந்தாள். அங்கு அநேகவிதமான தைலங்களும், விதம் விதமான ஆயுதங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவை களில் ஒன்றை எடுத்துக்கொண்டாள். ஒருவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயவங்களில் மாட்டினால் அவன் மூர்ச்சை யடைந்துவிடுவான் என்பது மாத்திரம் இந்தக்கிழவிக்கு முன்னதாகவே தெரிந்திருந்தது. அதை எடுத்துக்கொண்டு மெதுவாக அம்மனிதன் பின்னால் சென்று அவனது காலில் மாட்டிவிட்டான். மறுநிமிஷம் அம்மனிதன் தடாரென மூர்ச்சையுடன் கீழே விழுந்தான்.

கிழவி முக்காடை நீக்கியதும் வாலிபனாகிவிட்டான். அம்மனிதன் சப்தமிட எத்தனித்தானெனினும் அவனால் முடியவில்லை. கண்களை மூடிக்கொண்டான். மறு நிமிஷம் அங்கு வைக்கப்பட்டிருந்த கயிற்றின் உதவியால் ஜெயராமர் அம்மனிதனைப் பிணைத்தார். பாலகிருஷ்ணனும் அம்மனிதனின் காலி லிடப்பட்டிருந்த விலங்கை—ஆயுதம்போன்றதை எடுத்துவிடவும் அம்மனிதனுக்கு சுய அறிவு பிறக்கலாயிற்று. தன் முன்னிருந்த பாலகிருஷ்ணனை நோக்கியதும் பிரமிப் படைத்தான். தன்னுடன் வந்தவர்களால் தான் தனக்கு இவ்வித அதிர்ச்சி ஏற்பட்டதென்பதை யறிந்ததும் அவனுக்கு அடங்காச்சினம் மண்டிஎழுந்தது. என் செய்வது? செல்லாக்கோபம் பொறுமைக்கழகன்றோ?

அங்குகிடந்த ஓர் பிரம்பை பாலகிருஷ்ணன் தனது கையில் எடுத்துக்கொண்டு அம்மனிதனை யணுகி பேசலானான்:— "அடே! உள்ளதை உள்ளபடி கூறிவிடு. இல்லாவிடில் உனது உயிருக்கு இறுதிகாணப்பட்டுவிடும். உன்னிடம் யாராவது அகப்பட்டிருக்கின்றார்களா? அவ்விதமாயின் அவர்களை எம்மிடம் காண்பி. உனக்கு வேண்டியதைச் செய்கிறோம். சீக்கிரம்" என்று வினவினான்.

அம்:—"நண்பா! நீயே இவ்விதம்கேட்டால் நான் தான் என்னசெய்வது? நீதான் எங்களது தலைவனாயிற்றே. அவ்விதமிருக்க உனது சகாக்களாகிய ஜனங்களில் ஒருவனாகிய என்னை ஏன் வறுத்துகின்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகி:—"அடே, உனது தலைவன் நானல்ல. அவன் வேறு, நான்வேறு, அவன் பாலகிருஷ்ணன். நான் பால கிருஷ்ணன். மரியாதையாக நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுகிறாயா? என்ன?"

அம்:—"நீ கேட்பதைப் பார்த்தால் புதுமாதிரியாகத் தோன்றுகிறதே. முடியாதென்றால் செய்கிறதென்ன? இப் போது நான் சப்தமிட்டால் வந்துவிடுவார்கள் எனது நண் பர்கள் அவ்விதமாயின் உங்களிருவருக்கும் பேராபத்து தான் நேரிடும். உனக்கு நான் பயந்தவனல்ல, நீ எனது தலைவனாயிற்றே என்றுஎண்ணி மரியாதையாக வார்த்தை யாடினால் நீ அதை துஷ்பிரயோகஞ் செய்கின்றாய். மரி யாதையாக வெளியில் சென்றுவிடுங்கள். நீங்கள் ஆண் பிள்ளைகளானால் என்னுடன் எதிர்நின்று மல்யுத்தஞ் செய்ய வேண்டும். அவ்விதமின்றி பேடியைப்போன்று என்னை பிணைத்துவிட்டு வீரவேசத்தோடு வார்த்தையாடு கின்றீர்களே."

பாகி:—"உன்னுடன் மல்யுத்தமா செய்யவேண்டும்? நீ என்னை தலைவனென்றெண்ணி மரியாதையா அளிக்கிறாய்? நாங்கள் வெளியிலா செல்லவேண்டும்? பேஷ். நன்றாயிருக் கிறது." என்றுகூறியவாறே பளீர் பளீர் என பிரம்பால் அடித்தான். இவ்வடியைத் தாங்கமாட்டாது ஐயோ அப்பா என்று அலறினான். ஜெயராமர் அவ்வறையின் கதவை நன் றாய்ச்சாத்தி தாழ்ப்பாளிட்டதினால் இச்சப்தம் வெளியில் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் அம்மனிதனின் கால்களில் மீண்டும் விலங்கிட்டு அவனது மடியிலிருந்து சாவிக் கொத்து களையும் எடுத்துக்கொண்டு அவ்வறையைமீண்டும் ஆராய்ச்சி செய்யலாயினர்.

மேஜையின் மீது பொத்தானைப் போன்றிருந்ததாக நாம் குறிப்பிட்டிருந்தோமல்லவா? அதை ஜெயராமர் பால கிருஷ்ணனிடம் கூறி அதையும் சோதிக்கலாயினர். அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்பர் 1" என்று குறிக்கப்பட்டிருந்த பெல்லை அழுத்தியதும் மறுவினாடியில் ஓர் ஆடவன் வந்து கதவைத் தட்டினான். ஜெயராமர் கதவைத்திறந்தார். பாலகிருஷ்ணனைக் கண்ட அம்மனிதன் சந்தோஷமடைந்து "ஐயா' வாருங்கள். வாருங்கள் க்ஷேமந்தானா?" என்றுகூறி நெருங்கினான். ஜெயராமர் மேஜைமீதிருந்து எடுத்த புட்டியிலுள்ள ஓர் மையை ஓர் குச்சியில் ஏற்கனவே எடுத்து வைத்திருந்தாராதலால் அதைக்கொண்டு அம்மனிதனின் நெற்றியில் பொட்டிட்டார். மறுநிமிஷம் அவனுக்கு பைத்தியம் பிடித்ததைப்போன்று ஒன்றும் பேசாது அவர்களிருவரையும் திரும்பத் திரும்ப பார்த்தவண்ணமாகவே நின்றான். அவனையும் கைகால்களைக்கெட்டிவிட்டு "நம்பர் 2" என்ற பெல்லை இறுத்தியதும் இருவர்வந்து சேர்ந்தனர். அவர்களையும் முன்னவரைப்போன்று ஆக்கிவிட்டு மற்ற நம்பருள்ள பெல்லை இறுத்தினர் ஒருவரும் வரவில்லை. ஆதலால் இவர்கள் மூவரையும் சிறிதுமயக்கம் தெளியவைத்து தாம் அறியவேண்டியதை வினவினர். அவர்கள் எவ்விதமான பதிலையும் கொடுத்தார்களில்லை. பிரம்புப்பூசையாலும் பயனில்லாதுபோகவே திரும்பவும் அவர்களை முன்போல் மயக்கிவிட்டு அம்மாளிகையை சுற்றி வரலாயினர்.

இவ்வாறு அம்மாளிகையிலுள்ள அறைகளையெல்லாம் சோதித்துவரும்போது கடைசி அறையில் ஓர் பலகை சுவரில் மாட்டப்பட்டிருந்ததை இருவரும் கண்டனர். அதை எடுத்ததும் அதன் உள்பாகத்தில் ஓர் பெரிய ஆணி தென்பட்டது. அதையும் பிடுங்கிக்கொள்ளவே சரேலென அவ்வறை கீழ்நோக்கியவாறே சென்றது. சிறிதுதூரம் இறங்கியதும் மீண்டும் தானாகவே நின்றுவிட்டது. அங்கும் அநேக அறைகள் காணப்பட்டன. அவைகளையும் ஒவ்வொன்றாய்த் திறந்துபார்த்தார்கள். இவ்வளவு அறைகளிலும் ஒருவரையும் காணாததால் பாலகிருஷ்ணனும் ஜெயராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அபாரமான திகைப்படைந்தனர். மனம் சோர்ந்தவர்களாய்த் திரும்பினர்,

இவ்விதம் வருகையில் ஓர் மூலையில் சிறு அறை ஒன்று தென்பட்டது. அதனுள் புத்தர் பெருமானின் உருவப் படமொன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அதன் முன்பு ஓர் மனிதர் தமது கண்களை மூடிக்கொண்டு அவரை மனதில் தியானித்துக்கொண்டிருந்தார். அம்மனிதரைக் கண்டதும் நமது பாலகிருஷ்ணன் அகமகிழ்ந்து "ஐயா! இதோ வந்து விட்டேன். கவலைப்படவேண்டாம். நான் சிறுவனாயிருக்கும் போது கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைவனாக இருந்து ஜனங்களுக்குச் செய்த அட்டூழியங்கள் எல்லாம் ஒன்றாய்த் திரண்டு வந்து நமது குடும்பத்தை வதைக்கலாயிற்று. நான் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னிக்கவேண்டும். ஈசன் எனக்கு நற்புத்தியை யளித்துவிட்டார். என்னை இரக்ஷிக்க வேண்டும்." என்று கூறியபடியே அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான். தனது மைந்தனைக்கண்டதும் —பலவருடங்களாக—ஏன் சிறுபருவத்திலேயே தன்னை விட்டுப்பிரிந்த மகனைக்கண்டதும் தந்தையடையும் ஆனந்தத்தைக் கூறவும் வேண்டுமா? அவனை அப்படியே வாரி எடுத்து தமது மார்போடணைத்துக்கொண்டார். ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தார். "பாலகிருஷ்ணா! நீ எமலோகம் சென்றிருப்பா யென்றல்லவா எண்ணியிருந்தேன். இப்போது கடவுளின் கருணையால் நீ என்முன் பிரசன்னமாகி விட்டாய். ஈசனும் உனக்கு இதுகாலை நற்புத்தியைப் புகட்டியிருப்பான். இனிமேலாகிலும் நன்னெறியில் நடந்துகொள்ளு. உனது தீச்செயல்களையெல்லாம் ஜெகதீசன் மன்னித்துக்கொள்வார்" என்று பற்பலவிதமாக புத்தி மதிகளைக் கூறிக்கொண்டேயிருக்கையில் ஜெயராமரும் அவ்வறை வந்து சேர்ந்தார்.

மூவரும் நீண்டநேரம் சம்பாஷித்தனர். ஒவ்வொருவரும் தாம்பட்ட துன்பங்களையும் குடும்பக்ஷேமலாபங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும்பற்றி பேசியபின்பு அவ்வறையினின்றும் வெளிப்பட்டனர். அவ்வறையின் வாயிலில் ஓர் சதுரப்பலகை மண்ணில் புதைக்கப்பட்டு மங்கலாகத் தோன்றியது. இதைக்கண்ணுற்ற மூவரும் அதைத்தோண்டி பலகையையும் எடுத்தனர். அதனுள் பற்பலவிதமான நகைகளும் ஆயிரக்கணக்கான ரூபாயையும் கண்டு அதையும் கைப்பற்றிக்கொண்டு, தம்மை கீழே கொணர்ந்த அறையை யடைந்தனர். அங்கு முன்பு பிடுங்க எத்தனித்த ஆணியை திரும்ப நிறுத்தியதும் மேலே முன்னிருந்த இடத்திற்கு வந்து நின்றுவிட்டது. மூவரும் அதிசயத்துடன் கொள்ளையரைக் கட்டிவைத்திருக்கும் அறைக்குச் செல்லலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—13

---※---

## இராஜேந்திரன் தப்பிய விந்தை.

## காதலனைப் பிரிந்த காதலி.

இ "ஈசா! இதுவும் உனது செயலோ! உன் திருவிளையாடல்களை நான் என்னென்றியம்பு வேன்! ஒருவனுக்கு நற்புத்தியை யளிக்கிறாய். மேன்மை யான குணங்களையும் படைத்துவிடுகிறாய். ஆனால் அவ னுக்கு பணம் என்ற கொடிய பாஷாணம் இல்லாமல் இவ் வுலகில் நடைப்பிணம்போல் அலைந்து திரிகிறான். ஒருவ னுக்குத் திரண்ட ஐசுவரியத்தை அளந்து கொட்டுகிறாய். ஆனால் அவனை ஈயாப்பித்தனாக்கிவிடுகிறாய். அவனுக்கு தருமம், நியாயம், காருண்யசிந்தை என்பன போன்ற உயர்ந்த லக்ஷியங்களைப் போதிக்க மறந்துபோகிறாய்! ஒரு வனுக்கு சகல பாக்கியங்களையும் அளித்தாலோ, அவனைக் கூடிய விரைவில் தென்றிசைக்கோன் தொலைத்துவிடுகிறான். அவ்விதமாயின் அவனது உற்றார் உறவினர்கள்—முக்கிய மாகப் பெற்றோர்கள் அனுபவிக்கும் மனோவேதனையைக் கண்டு நீ வாளாவிருக்கிறாய். இதுதான் உனது தயாளகுணம் போலும். "ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா!" என்று நாங் கள் உன்னைத் தொழுவதற்கு நீ செய்யும் கருணைதான் இது போலும்!

அந்தோ! என்னைச்சிறைப்படுத்திவைத்திருக்கும் கொள் ளையருக்கு நான் எவ்வளவோ புத்திமதிகள் கூறியும்பயன்படா மலே போய்விட்டது. இவர்கள் நல்வழியில் நடத்திவைக்க வேண்டிய—முக்கிய பொறுப்புவாய்ந்த நீ இவ்வாறு மௌனஞ் சாதிப்பதின் நோக்கம்தானென்ன? ருக்மணிநேசா! பக்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் மனோல்லாசா! என்னைப்போன்று எத்தனை பெயர்களை இவர்களிடம் காட்டிக் கொடுத்துவிட்டாயோ? அறியேன். இதெல்லாம் எனக்கு நன்மையாகவே சம்பவிக்கும். துன்பமடைவோர் இன்பமடைவார் என்பது பழமொழியன்றோ! இவர்களைத் தொலைத்துவிடவும் முடியாது. இவர்களிடமிருந்தும் தப்பவும் முடியாது. அங்ஙனமாயின் எனது கதிதான் என்ன? இம்மனிதர் கேட்கிறபடி தற்போது என்னிடம் பணமும் இல்லை. நான் கொணர்ந்திருந்த சொற்பத் தொகையையும் பறிமுதல் செய்துவிட்டனர். யாதொரு—சிறிது தொகையும்கூட வைத்திருக்காத என்னை இவர்கள் கொலை செய்வதால் இவர்களுக்கு என்ன பிரயோஜனம் நேரிடக்கூடும்? இவர்களின் விருப்பத்தின்படி திரவியத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா? முடியாதன்றோ!

நம்பியவர்க்கபயம் நயந்தளிக்கும் விஸ்வாசா! என்னைக் கொலைசெய்ய இப்பாதகர்களைத் தூண்டினால் எனதுயிர்க் காதலி சுந்தரி இனி இவ்வுலகில் உயிருடன் இருக்கமாட்டாளன்றோ! என்னையே தெய்வமெனக் கொண்டாடும் அவ்வனிதையின்மீது நீ பொறுமை கொண்டு அதன் பயனாக எங்களிருவருக்கும் இன்று இறுதிகாணப் போகின்றாயா? சர்வலோகசரண்யா! எனக்கு எத்தகைய கொடுமைகளை இயற்றினாலும்—என் உடலைத் துண்டுதுண்டாகக் கிழித்து தூளாய்ப் பிழித்தாலும் என் உயிர் மாணிக்கம்—இன்பக்கிளி சுந்தரமாதுக்கு மாத்திரம் யாதொரு இடைஞ்சலாவது, கஷ்டமாவது, துக்கமாவது நேரிட்டுவிடக் கூடாதென்பதே எனது அவா. ஆதலால் அவளுக்கு நேரிடவிருக்கும் இடர்களையெல்லாம் என்னிடத்து சேர்த்துவிடு. நான் அதை ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டு அதன் பலனை அடைகின்றேன். அவளுடைய சுகவாழ்விற்காக நான் எனது உயிரையும்கூடத் தியாகஞ்செய்ய சித்தமாயிருக்கிறேன். இப்பிறவியில்லாவிடினும் மறு பிறவியிலாவது என்னை அவள் தனது கணவனாக ஏற்று சந்தோஷமாக வாழட்டும். நான் இவர்க

ளிடம் அகப்பட்டுள்ளேன் என்பதை அவள் எவ்வாறு அறிவாள்? அவ்விதம் அறிந்தால் அப்பெண்கள் திலகம் என்ன பாடு படுவாளோ! என் பிரிவால் சிறிது கவலையுடன் வாழ்ந்துவரும் அம்மடமயிலாளுக்கு கொடிய விஷம்போன்ற தற்கால எனது நிலைமையை கேள்விப்பட்டு அதனால் ஏற்படும் சகிக்கொணு விசனத்தை பொறுக்கமுடியாது தற்கொலையும் புரிந்து விடுவாளோ! ஹா! சுந்தரி! நீ என்ன நிலைமையிலிருக்கிறுய்? நான் உன்னைப்பிரிந்து நாட்கள் பல கடந்தும் என்னிடமிருந்து யாதொரு தகவலும் கிடைக்காததால் நீ எவ்வித மனக்குழப்பமடைகின்றுயோ! உனக்கு அதிர்ஷ்டமிருந்தால் நான் இவ்விடமிருந்தும் தப்பி உன்னை வந்து கட்டியணைந்து கொள்கிறேன். இன்றேல் மறுபிறவியில் தான் நமது அவா பூர்த்தியாகும்.

வைகுண்டவாசகா! நான் இவர்களிடமிருந்தும் தப்ப முடியாமல் தத்தளிப்பதைக்கண்டு நீ என்னை உன்னிடம் சேர்த்துக்கொள்ளலாகாதா? அன்றி நான் இவர்களிடமிருந்தும் தப்பி ஓடிவிட்டால் இவர்களால் இன்னும் எனது சகோதர சகோதரிகளுக்கு (மானிடர்களுக்கு) ஏதேனும் இடர் விளையக்கூடுமன்றே! இவர்களை நல்வழியில் நடத்த—நடக்க முயற்சிக்கவேண்டும். அல்லது இவர்களை வேரோடுதொலைத்துவிடவேண்டும். இதுதான் எனது முடிவான கோரிக்கை. இதற்கு நீர் அருள்புரிவீராக!" என்று பற்பலவாறுக நமது இராஜேந்திரன் புலம்பிக்கொண்டிருந்த அறைக்கு இராமநாதர், ஜெயராமன், பாலகிருஷ்ணன் முதலிய மூன்றுபேர்களும் வருகின்றனர்.

மேற் குறிப்பிட்டவண்ணம் புலம்பிக்கொண்டிருக்கும் போது அவனது கவனம் ஒருபடத்தினிடத்து சென்றது. அவனது முகத்தில் சிறுமாறுதலுமடைந்தது. வெகு ஆர்வத்துடன் அவன் அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த புகைப்படத்தின் (போட்டோ) அருகில்சென்று அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுநோக்கினான். "இந்தப் புகைப்படம் யாருடையது? இது இம்மாளிகைக்கு வரவேண்டியதின் காரணம் என்ன? நற்குடும்பத்தில் பிறந்த ஓர் சுந்தரவடிவான ஆண்மகனைப் போன்றல்லவா தோன்றுகிறது? இளம்வயதினன். ஒருவேளை இவன் இக்கொள்ளையரிடம் அகப்பட்டுக் கொண்டனனோ! அவ்விதமுமிருக்கமுடியாது. இப்படம் வெகு பந்தோபஸ்தாகவும், அலங்காரமாகவும் அன்றோ வைக்கப்பட்டிருக்கின்றது. இதென்ன? நான் காண்பது கனவா? நினைவா? இதென்ன ஆச்சரியம்? எனதுயிர்க்காதல் தெய்வத்தைப்போன்றல்லவா தோன்றுகிறது? ஆனால் இது ஆண்மகனல்லவா? இவ்விளவனுக்கு என் கண்மணியைப் போன்ற களங்கமற்ற—சுந்தரவடிவான வதனம் எவ்வாறு அமைந்துவிட்டது? அன்றி கடைசியாக என் சுந்தரியைக் காணும்பொருட்டு கருணைவள்ளலான கடவுள் இந்த புகைப்படத்தை அனுப்பியுள்ளாரோ? எவ்விதமாயினும் இதில் ஏதோ மர்மமிருக்கவேண்டும். ஒருவேளை என்குல தெய்வம் ஆண்வேடம் பூண்டு ஏதேனும் ஆச்சர்யமான செயல்களை செய்தனளோ? அவ்விதமிருப்பினும் எனது கண்மணி என்னிடம் கூறியிருப்பாளன்றோ! தவிரவும் இந்தப்படம் எவ்விதம் இவர்களிடம் அகப்படும்? எனது வாழ்நாளில் இந்த சோதனையும் பாக்கியிருந்ததுபோலும்!" என்று பற்பலவாறாக எண்ணமிட்டுக்கொண்டே ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந்தான். அப்படத்தின் கீழ் "பாலகிருஷ்ணன்" என்று பொறிக்கப்பட்டிருந்த தென்றாலும் அவனால் அது ஆண்மகன்தான், தனது காதலி அல்லவென்று திட்டமாக நம்புவதற்கில்லை.

இவ்வித நிலைமையில் நமது இராஜேந்திரன் தத்தளித்துக் கொண்டிருக்கும் காலையில் தான் நாம் முன் குறிப்பிட்ட வண்ணம் மூவரும் அறையினுள் நுழைந்தனர். அங்கு இராஜேந்திரன் நிற்பதைக்கண்ட ஜெயராமருக்கும் இராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதருக்கும் எழுந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுமுண்டோ? ஹா! இராஜேந்திரா! நீ எவ்விதம் இக்கொள்ளையரிடம் சிக்கிக்கொண்டாய்? இதுவும் ஈசனின் திருவுளச் சம்மதமா? நான்தான் அகப்பட்டுத் தத்தளித்தேன் என்று எண்ணினேன். நீயுமா அகப்பட்டுக்கொண்டாய்? ஈசன் நம்மிருவரையும் காப்பாற்றி விட்டார். இவ்விதமான பயங்கர விபத்தில் நாம் சிக்கிக்கொள்வோமென்று நாம் எதிர்பார்த்திருக்கவே இல்லையன்றோ? எனது அருமைக் குமாரனையும் கண்டேன். அவனே என்னையும் உன்னையும் இதுகாலை காப்பாற்றினன். உன்னைவிட்டுப் பிரிந்த சுந்தரி என்ன பாடுபடுகிறாள். உன்னைப்பற்றியே சதா சிந்தித்துக்கொண்டிருக்கிறாள். "இந்த நேரத்தில் அங்கு சென்றிருப்பார். அங்கு இவ்விதம் பேசுவார். இந்த நேரத்தில் இங்கு வந்திருப்பார். இன்னும் சில நாட்களுக்குள் என்னை சந்திப்பார், என்றெல்லாம் மனோராஜ்ஜியம் செய்துகொண்டிருந்தாள். அத்தகைய அவளுக்கு உனது தற்போதைய நிலைமை தெரிந்தால் அவளதுமனம் எந்நிலைமையிலிருக்கும்! எவ்விதமும் ஈசன் நமக்கு துணைபுரியாமலா போய்விடுவார்?" என்றுகூறி இராஜேந்திரனை இராமநாதர் கட்டிக்கொண்டார்.

சற்றும் எதிர்பாராத விதமாக எழுந்த இக்குரலைக் கேட்ட இராஜேந்திரன் திகைத்து பின்புறம் நோக்க இராஜேந்திரனையும் ஜெயராமரையும் பிறிதொரு வாலிபனையும் கண்ட இராஜேந்திரன் தன்னைப்போன்று இம்மூவரும் அக்கொள்ளைக் கூட்டத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனரோ என்று அஞ்சினன். என்றாலும் பின்பு இராமநாதர் கூறியவைகளிலிருந்தும் உண்மைதெரியலாயிற்று. ஆனல் அவனல் அதை நம்பமுடியவில்லை. தான் காண்பது கனவே நினைவோ என்றும் ஐயுற்றான். அவனது செவிகளை அவனல் நம்பமுடியவில்லை. பின்பு நால்வரும் தமது க்ஷேமலாபங்களைக் கூறினர். பாலகிருஷ்ணன் யாரென்பதையும் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான் நமது இராஜேந்திரன். பின்பு நால்வரும் அவ வறையினின்றும் வெளியாகி அங்கு சேமித்து வைக்கப்பட் டிருந்த பொருளையும் கைப்பற்றிக்கொண்டு வாடி என்ற இடத்திற்கு வந்தனர். நமது இராஜேந்திரனை அடைக்கப் பட்டிருந்த கொள்ளையரின் மாளிகை "ஹாமத்நகர்" என் னும் நகரிலுள்ளது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

நமது வாசகநண்பர்கள் ஒரு விஷத்தை அறிய ஆவலுட னிருப்பார்கள். அதுயாதெனில்:— நாம் முன் ஏழாம் அத்தியாயத்தின் முடிவில் கூறியவண்ணம் பத்திரகாளியம் மன் முன்பு படுத்திருந்த இராஜேந்திரன் எவ்விதம்—எப் போது திரும்ப தன்னறைக்கு வந்துசேர்ந்தான்? வாடிஎன்ற ஊரிலுள்ள கொள்ளையரின் மாளிகையிலிருந்த இராமநாதர், ஜெயராமர், பாலகிருஷ்ணன் ஆகிய மூவரும், ஹாமத் நக ருக்கு எப்போது வந்தார்கள்? இந்த நகரிலும் ஓர் மாளிகை இருப்பதாக எவ்விதம் அறிந்தார்கள்? என்ற கேள்விகளின் விடையேயாகும். ஆதலால் நாம் அதையும் ஆராய்வோம்.

இராமநாதர், ஜெயராமர், பாலகிருஷ்ணன் ஆகிய மூவ ரும் வாடி என்ற ஊரிலுள்ளகொள்ளையரின்மாளிகையமீண் டும் ஆராயலாயினர். அதுகாலை அவர்களுக்கு பற்பல புஸ்த கங்கள் கிடைத்தன. அதில் எழுதப்பட்டிருந்தது தமிழ் தான். என்றாலும் அதை வாசித்து பொருள் அறிய முடி வதுதான் சிறிது கஷ்டமாயிருந்தது. அதில் ஒரு பக்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

டிஸ்வாஸ்
ச்ஸ்ன்ஸ்ராஸ்பிஸ்

னிஸ்பஸ்ம்ஸ்கஸ்ன்ஸ்ணஸ்ஷ்ஸ்ருஸ்கிஸ்லஸ்ாபஸ் உஸ்3 ஸ்மீ ஸ்சிஸ்காஸ்வைஸ் குஸ்க்ஸ்ணஸ்கஸ்ன்ஸ்ரஸ்திஸ்ந்ஸ்ஜேஸ் வுஸரஸ்வஸ் ன்ஸ்ரஸ்திஸ்ந்ஸ்ஜேஸ்ராஸ்இ ஸ்ராஸ்இஸ் 500ஸ்ய்ஸ்பாஸ்ரூஸ்ல்ஸ்டிஸ்ர்ஸ்வாஸ்ர்ஸ்பஸ்ட்ஸ்நஸ்ம்ஸ்18ஸ்க் ஸ்ருஸ்டிஸ்ட்ஸ்பஸ்ப்ஸ் கஸ்க்ஸ்டைஸ்அஸ்ன்ஸ்றுஸ்ன்ஸ்கிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—:புஸ்ப்ஸ்றிஸ்குஸ்
ந்ஸ்ருஸ்மிஸ்டஸ்ணிஸ்தஸ்ணிஸ்மஸ்ம்இ ஸ்யிஸ்டாஸ்ண்ஸ்ரஸ்இ
ஸ்ய்ஸ்பாஸ்ரூஸ்ம்ஸ்துஸ ம்ஸ்டுஸ்ண்ஸ்வேஸ்றஸ்பெஸ்துஸ்வ
ஸமாஸ்ரஸ்ய்ஸ்செஸ்லைஸ்கொஸ் ல்ஸ்டிஸ்விஸ்லாஸ்ல்ஸ்இஸ்
வஸ்இஸ்ம்ஸ்டுஸ்ண்ஸ்வேஸடஸ்பஸ்ப்ஸ்யதஸ். ன்ஸ்ஸ்னஸ்
ரஸ்திஸ்ந்ஸ்தஸ்ன்ஸ்ஜா. ஸ்ம்ஸ்டுஸ்கூஸ்ட்ஸவுஸ்டஸ்விஸ்பி
ப்ஸ்வேஸ்கஸ்க்ஸ்ருஸ்யிஸ்யா ஸ்னைதஸ்ரன்கிஸ்க்ஸ் அஸ்கஸ்
மிஸ்துஸ்யஸ்டிஸ்ண்ஸ். ம்ஸ்யஸ்சிஸ்வஸ்ர்ஸ்.ஜஸ்னேஸ்மாஸ்

மேற்குறிப்பிட்டிருந்த எழுத்துக்களை எவ்விதம்தான் வாசிப்பது? எஸ் பூஸ் என்று எழுதிக்கொண்டே போயிருக்கிறது. மூவரும் தமது மூளையை மேசையில் எடுத்து வைத்து ஆராய்ச்சி செய்தார்கள். ஒன்றும் பயனில்லை. ஆதலால் அதை எடுத்துக்கொண்டு கொள்ளையரைக் கெட்டி வைத்திருந்த அறைக்குச் சென்றனர். அவர்களிடம் எவ்வளவு கேட்டும் பயனில்லை. வெகுமதிப்பூசையிலும் பலிக்கவில்லை. பின்பு மூவரும் ஓரிடத்தில் அமர்ந்தனர். சிறிது நேரஞ்சென்றபின் பாலகிருஷ்ணன் "இவ்விதம் ஓர் கடிதத்திலோ அன்றி புத்தகத்திலோ "ஸ்" என்ற அக்ஷரம் அடிக்கடி வருவானேன்." என்று வினவினன். மற்றவர்களும் இதைப்பற்றி ஆலோசனை செய்து ஸ் என்ற அக்ஷரத்தை எடுத்துவிட்டு வாசித்தனர். அப்போதும் ஒன்றும் விளங்கவில்லை. சிறுபிள்ளைகள் ஒரு வசனத்தை முரண்பாடாக அதாவது முன்னுள்ள எழுத்தைப்பின்னும் பின்னுள்ள எழுத்தைப் முன்னும் எழுதி பிறரிடம் காண்பித்து அதை வாசிக்கச்சொல்லியது பாலகிருஷ்ணனுக்குத் தெரியலாயிற்று. கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைமை வகித்திருந்த பாலகிருஷ்ணனுக்கு இந்த வாசகம் ஏன் தெரிந்திருக்கவில்லையென்றும் கேட்கலாம். பாலகிருஷ்ணன் தலைவனக இருக்கையில் இவ்விதமான கணக்குகள் இருந்ததென்றாலும் அவன் இவைகளைப் பார்த்திருப்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. கலைமகளும் அவனிடத்து அன்புகொள்ள வில்லை. ஆதலால் தற்போது இதைப் பார்த்தவுடன் அவனுக்கு ஒன்றும் புரியாதது ஆச்சரியமல்ல.

நாம் மேற்குறிப்பிட்ட வண்ணம் பாலகிருஷ்ணனுக்கு நினைவு வந்ததும் அவன் வேறொரு கடிதம் எடுத்து எழுத்துகளைமாற்றி எழுதி வாசிக்கலானான். அது பின்வருமாறு:-

வாடி

பிரான்ச் (Branch)

பாலகிருஷ்ணன் கம்பனி............

வைகாசிமீ 3உ.

இராஜேந்திரன் கணக்கு.

இராஜேந்திரன் வரவு ரூபாய் 500.

18-ம் நம்பர் வார்டில் அடைக்கப்பட்டிருக்கிறான்.

குறிப்பு:—

இம்மனிதனிடமிருந்தும் ரூபாய் இரண்டாயிரமாவது பெறவேண்டும். இல்லாவிடில் கொலை செய்யப்படவேண்டும். இவன் தந்திரமானவன். தப்பிவிடவும் கூடும். ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது மிகமிக அவசியம்.

மானேஜர்.

இவ்வாறு எழுதி வாசித்ததும் மூவரும் ஆச்சரியமும் திகிலுமடைந்தனர். கொள்ளையரின் செயலை மெச்சிக்கொண்டனர். பின்பு அவ்விடமிருந்தும் எழுந்து அம்மாளிகை முழுவதையும் தேடினர். அகப்படவில்லை, அங்குள்ள அறைகளுடைய நம்பரைப் பார்க்கில் பத்தொன்பதிலிருந்துதானிருந்தது. ஆதலால் இதனுடன் சேர்ந்த மாளிகை பிறிதொன்றிருக்க வேண்டுமென்று எண்ணி மற்ற புஸ்தகங்களையும் பிரித்துப்பார்த்துக்கொண்டே வருகையில் அறைகளின் நம்பர் குறிப்பிட்டுள்ள ஓர் புஸ்தகம் தென்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்தும் 1 முதல் 18 வரையுமுள்ள அறைகள் ஹாமத் நகர் என்ற ஊரிலிருப்பதாக அறிந்துகொண்டனர். அதன் பின்புதான் அம்மாளிகையை அடைத்துவிட்டு ஹாமத் நகரிலுள்ள மாளிகைக்கு வந்து நாம் முன் குறிப்பிட்டவண்ணம் இராஜேந்திரனைக் கண்டுபிடித்தனர். நமது இராஜேந்திரன் பத்திரகாளியம்மன் முன்பு படுத்திருந்தானல்லவா? அவனுக்கு தன்னறிவு சிறிதும் கிடையாது. பயத்தினால் அவன் ஸதம்பித்துப் போனான். தன்னறிவு பிறக்க அவனுக்கு நீண்டநேரம் சென்றது. சுயஅறிவு பெற்றெழுந்ததும் அதற்குமேல் அவன் அங்கு இருக்க விருப்பமில்லாமல் பத்திரகாளியைத் தொழுதுவிட்டு தன்னறை வந்து சேர்ந்தான். அதன்பின்பு தான் நாம் குறிப்பிட்டவண்ணம் பற்பலவாறாக புலம்பிக்கொண்டும் பாலகிருஷ்ணனது போட்டோ படத்தையும் கண்டு ஆழ்ந்த சிந்தனையிலுமிருந்து ஈற்றில் உண்மை தெரிந்துகொண்டான்.

பின் நால்வரும் வாடிக்கு வந்து போலீசாரின் உதவியால், முன்பு கட்டிவைக்கப்பட்டிருந்த நால்வரையும் கைது செய்தனர். தாங்கள் கைப்பற்றிய பொருளையும் போலீசாரிடமே ஒப்புவித்து விட்டனர். அவர்களின்மீது வழக்குத் தொடர்ந்து அந்நால்வருக்கும் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டது. நீதிபதி தமது தீர்ப்பின்போது பாலகிருஷ்ணனைப்புகழ்ந்து பேசினார். அவனது கெட்ட தொழிலில் வெறுப்புண்டாகும்படியும் நேர்மையான வாழ்க்கையில் விருப்புண்டாகும்படி செய்த ஜெயராமனின் குணம் போற்றத்தக்கதென்றும், அவர் கொள்ளைக்கூட்டத்தினரை வேறாக் களைய அரும்பாடுபட்டிருக்கிறதற்காக சர்க்கார் அவருக்கு நன்றி செலுத்துவதாகவும், கொள்ளையரைக்கண்டு பிடிக்க அவர்களிருவரும் கையாண்ட வழி மேன்மையானதென்றும் கூறி போற்றிப் புகழ்ந்தார். பின்பு நால்வரும் பூனாவுக்குப் பயணமாகினர்.

ஃ ஃ ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசா! ஜெகதீசா! எனது காதலரின் கதியாது? என் தந்தையின் கதியாது? என்பதை எனக்குத் தெரிவிக்காமலே இருப்பதுன்னழகுதானோ! என்னைவிட்டுப் பிரிந்த எனது இன்பக்காதலர் என்னை அடியோடு மறந்துபோய் விட்டாரோ? எனது காதலர் என்னை ஒருக்காலும் மறக்க மாட்டார் என்று எனது மனம் சாற்றுகின்றதே! "ஒவ்வொரு நாளும் நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? ஏதேனும் துப்பு கிடைத்ததா? என்பதை எனக்கு அடிக்கடி தெரிவிக்கவேண்டும்" என்று எனது தந்தையாரிடமும், காதலரிடமும் நான் பணிந்து கேட்டுக்கொண்டது அவர்களுக்கு ஞாபகமில்லாமல் தான் போய்விட்டதோ? அல்லது யாதொரு துப்பும் அகப்படாத வருத்தமேலீட்டினால் தான் வாளாவிருக்கின்றனரோ? அந்தோ! உனது லீலா விநோதங்களை என்னால் அறிந்துகொள்ளவே முடியவில்லையே!

சகோதர சகோதரியைப்போன்று—யாதொரு வித்தியாசமுமின்றி படுக்கையிலும், உணவருந்துகையிலும், விளையாடுகையிலும், சம்பாஷணை செய்து பொழுதுபோக்குகையிலும், கல்வி பயிலுகையிலும் ஓருயிரும் ஈருடலுமாக ஒற்றுமையுடன்—ஒருவரை விட்டொருவர் பிரியாதிருந்த எங்களிருவரையும் கனவின் மூலமாக நீ காதலராக்கி விட்டாய்! நவீனமான உணர்ச்சியையும் புகுத்திவிட்டாய்! காதல் என்ற பந்தத்தினால் நன்றாய் இறுகப் பிணித்துக்கட்டி விட்டாய்! அவ்விதம் செய்த நீ இப்போது என்னிடமிருந்தும் எனது துணைவரைப்பிரித்த நினது செய்கையை என்னென்றியம்புவது! "காதல் தெய்வமே! நான் எனது தந்தையைக் கண்டு களிக்க எவ்வளவு அவாவுகிறேனோ அதற்கு பன்மடங்கதிகமாக நீ எனது தந்தையைக் காண அவாவவேண்டியதின் காரணம் யாது?" என்று எனது இன்பநாதர் வினவியபொழுது, "காதலா! நான் தங்களின் காதலியாக இன்று தங்களின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியிலிருந்து இனிமையாக சம்பாஷிக்க உதவியவர் தங்களின் தந்தையல்லவோ?'' மங்கையர்க்கரசி என்னும் ஓர் பெண் இவ்வுலகில் அவதரிப்பாள், அவளுக்கு நானே ஓர் கணவனை நல்குகிறேன்'' என்று தங்களை உற்பவித்த தங்களது பெற்றோரை நான் கண்டு எனது நன்றியை நான் அவர்களுக்குச்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேனன்றோ'' என்று கூறினேன். ''கண்மணி! உனது மனோபீஷ்டம் நிறைவேறவேண்டுமென்பதே எனது பேரவா. அவ்விதமான சந்தர்ப்பத்தை நமது இறைவன் அதி விரைவிலேயே யளிப்பாரென்று எதிர்பார்த்திருக்கிறேன்'' என்று என் இன்ப துரை கூறினாரே. எனது பிராணபதி கூறியவண்ணம் இன்னும் அவ்வித சந்தர்ப்பம் வாய்த்திலவன்றோ? எனது மாமா அவர்களைக் கண்டு எனது நன்றியை செலுத்தவில்லையே. எனது காதலனின் வாக்கு பலிக்காமல் தான் போய்விடுமா? அவ்விதம் நேரிடுமென்று திட்டமாக என்னால் நம்பமுடியாது. என்னைப்போலவே என் காதலரும் எண்ணிக்கொள்வார்.

''எனது காதலி மங்கையர்க்கரசி என்னிடம் கூறியவண்ணம் வைகாசி 15க்குள் எனது தந்தையைக் காண்பேனா? அன்றி அவள் கொடுத்த நிபந்தனையைப்போல் அதாவது ''நான் குறிப்பிட்ட தேதிக்குள் தாங்கள் எனது மாமாவைக் காணாவிடில் எனது பெயராகிய மங்கையர்க்கரசி என்பதை மாற்றி மங்கயர்க்கடிமை என்றழையுங்கள்.'' என்று கூறிய வண்ணம் நான் அவளது அழகிய பெயரை மாற்றத்தான் வேண்டுமா? அது என்னால் முடியவே முடியாது. பதிவிரதா பத்தினிப் பெண்களில் ஒருவளாகிய என் கண்மணி கொடுத்தவாக்கு பலிக்காவிடில் இவ்வுலகமே சிதைந்து விடுமன்றோ?'' என்று எல்லாம் என் இன்பதுரை பாலகிருஷ்ணன் தம்முள் எண்ணமிட்டுக் கொள்வார். காதலா! தாங்கள் இவ்விதம்தானே எண்ணிக்கொள்வீர்கள்! ஆம்! தங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய மனோபாவம் நான் அறிந்தது தானே. காதலா! நீங்கள் மனச் சோர்வடையவேண்டாம். எல்லாம் க்ஷேம மாகவே முடிந்துவிடும். ஊக்கமது கைவிடேல் என்பதை மாத்திரம் மறந்து விடாதீர்கள். ஜெகதீசா! ஆபத்துபாந் தவா! உனது கிருபை இருக்கையில் நாங்கள் ஏன் வருந்த வேண்டும்? சிறு குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும்போது அவர்கள் "ஐயோ! உபாத்தியாயர் அடிப்பாரே! நான் ஏன் கஷ்டப்பட்டு படிக்கவேண்டும்? சும்மா இருந்து விடுகிறது தான் நல்லது. பாடசாலைக்கு போகவேகூடாது" என்று தங்களுக்குள் எண்ணிக்கொண்டு பாடசாலைக்குச் செல்ல மறுக்கின்றனர். ஒப்பாரி வைக்கின்றனர். ஆனால் அவர் களின் பெற்றோர்களோ "பிள்ளைகள் நன்றாக கல்வி பயில வேண்டும். அவ்விதமாயின் நல்வழியில் நடந்துகொள்வார்கள். புத்தியும் விசாலமடையும் வழிகளில் கல்விபயிலுவதும் ஒன்றே" என்று எண்ணி அவர்களை பள்ளிக்கு அனுப்பி வைக்கின்றனர். அதுபோன்று நீ எங்களுக்கு உதவி செய் யினும் அது எங்களுக்கு கஷ்டம்போலவே தோன்றும். ருக்மணி நேசா! பக்தர்களின் மனோல்லாசா! என்னருமைக் காதலர் கொள்ளைக்கூட்டத்தில் சேர்ந்து அதன்பயனாக சிறைத்தண்டனையும் அனுபவிக்காவிடில் நான் அவரை எனது பிராணநாதராக இன்று ஏற்றுக்கொண்டிருக்க முடி யாதன்றோ! என் மனதிற்குகந்த வடிவழகரை—மணாளனை எனக்கு நல்கிய எனது மாமா அவர்கள் கொள்ளையரிடம் சிக்காதிருந்தால் எனது நாதரின் பால்ய சிநேகிதர்களை கொள்ளையரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஓர் முடிவை யும் காண முடியாமற் போய்விடுமன்றோ! இவ்வழியில் எனது நாதரின் யுக்தியையும் சமார்த்தியத்தையும் கண்டு நான் அவரைப் புகழ்ந்துபோற்றி மகிழ்விக்கலாமன்றோ? ஆதலின் நீ உனது பக்தகோடிகளுக்கு இயற்றும் எவ்வித மான கஷ்டநஷ்டங்களும் ஈற்றில் நன்மையாகத்தான் முடியு மன்றோ! அவ்விதமே எனது காதலர் பிரயாணம்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள காரியமும் முடியுமன்ருே! பக்தர்களின் மனோல் லாசா! நீ என்னவிதமான கட்டளை பிறப்பித்தாலும் நான் அதை செய்துமுடிக்க தயாராகயிருக்கிறேன். ஆனுல் என் இன்பதுரைமாத்திரம் யாதொரு விபத்திற்கும், விசனத் திற்கும் இலக்காகாது தமது தந்தையுடன் மீளவேண்டு மென்பதுதான் எனது பேரவா. இந்த அவாவை பூர்த்தி செய்வதுன் கடமையன்ருே. காதலா! காதலி நான் உம்மை எண்ணி எண்ணி மனம் வருந்துகிறதை உம்மிடம் யார் சொல்லப்போகிருர்கள். விரைந்து ஓடிவந்து என் மனதைக் குளிர்ச்சிசெய்ய மாட்டாயோ!" என்று பற்பலவாருக கடவுளையும் தன் காதலனையும்பற்றி துதித்துக்கொண்டும் புகழ்ந்துகொண்டும் காலந்தள்ளினுள் நமது செல்வி மங்கை யர்க்கரசி. ஸ்ரீகிருஷ்ணபகவானின் திருவுருவப்படமொன்று அவள்முன்பு வைக்கப்பட்டிருந்த தென்ருலும் தனது காத லரின் போட்டாபடத்தையே தனது மடியில் வைத்துக் கொண்டும் அவனது சுந்தரவடிவைக்கண்டும் பற்பலவாருக மனக்கோட்டை கட்டிக்கொண்டாள். ஸ்ரீ கிருஷ்ண பக வானைப் பார்க்கிலும் தனது காதலர் பாலகிருஷ்ணனே—பெரி யவன்—தனது மனோரதத்தை நிறைவேற்றுபவன் என்று மங்கையர்க்கரசி எண்ணிவிட்டாள்போலும்! எவ்விதமாயி னும் கடவுள்பக்தி அம்மாதரசியிடம் மிகுந்துள்ளது என் பது மறுத்தற்கறிய உண்மை என்பதுவும் குறிப்பிடத் தக்கது.

தினந்தோறும் மாலைசுமார் 6-12 மணிமுதல் 8-12 மணிவரையிலும் மங்கையர்க்கரசி பாலகிருஷ்ணனுடன் பாடங்களை வாசிப்பதும், அதன் பின்பு இருவரும் ஒன்ரு கவே உணவருந்துவதும் பின்படுக்கையறைக்குச் சென்று ஒன்ருகவே சயனிப்பதும் அவளுடைய வழக்கம். தற் போது பாலகிருஷ்ணன் பிறிந்தது முதல் தனது உயிரே தனது உடலைவிட்டுப் பிறிந்தாற்போன்றெண்ணி நடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணமானுள். ஒருநாள் ஒருயுகம்போல் தோன்றியது. நமது மங்கையர்கரசிக்கு ஒரு தோழிப்பெண்ணும் இருந்தாள். அவள் தினந்தோறும் மங்கையர்க்கரசியை நன்கு பேணுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பவள். பாலகிருஷ்ணனும் ஜெயராமரும் சென்றதினம் இரவில் மங்கையர்க்கரசியின் முகவாட்டத்தைக் கண்டு அத்தோழி மனம் வருந்தி காரணம் யாதென்பதை வினவினுள். ஆனால் மங்கையர்க்கரசி யாதொன்றையும் கூறினுளில்லை. தனது தந்தையின் பிரிவால் சிறிது வாட்டம் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று தோழி தீர்மானித்துக் கொண்டாள். பற்பலதேறுதல்மொழிகூறி சிறிது ஆறுதலை உண்டாக்கினுள் தோழி.

மறுநாட்காலையில் படுக்கையை விட்டெழுந்ததும் தனது காதலனைத் தேடினுள். திடீரென அவன் எங்கு சென்றிருக்கக்கூடும் என்று சிறிதுநேரம் மனக்குழப்பமேற்பட்டபின் முந்தியநாள் சமாச்சாரம் நினைவிற்கு வந்து சிறிது ஆறுதலடைந்தாள். பாலகிருஷ்ணனது போட்டோ படத்தை முதலாவது தொழுதுவிட்டு இரண்டாவதாக ஸ்ரீ கிருஷ்ணபகவானை வணங்கிவிட்டு தன்னறையினின்றும் வெளிப்பட்டாள். காலைக்கடன் முடித்து ஸ்நானஞ்செய்த பின்பு தனது மாளிகையின்முன்பு ஒரு நாற்காலியில் அமர்ந்தாள். அவளை சாந்தப்படுத்துவான்வேண்டி சிலுசிலுப்பான காற்று வீசியது. சூரியனும் இவளது அழகைக்கண்டு ஆனந்திக்க கிழக்கு வானத்தில் உதயமானுன். ஸ்நானம் ஆகியவுடன் மாளிகைக்கு வந்து தலை வாரிசீவி சடைபின்னி நெற்றியில் திலகமிட்டு மகாலெக்ஷ்மியைபோன்று காக்ஷியளிக்கும் மங்கையர்க்கரசி அன்று யாதொன்றும் செய்யாமல் நாற்காலியில் அமர்ந்திருப்பதைக்கண்ட தோழி மனங்கசிந்து அவளது தந்தையை சீக்கிரம் தனது எஜமானியிடம் வந்து சேர்க்குமாறு ஈசனை துதித்துக்கொண்டு சீப்பு, குங்குமகம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு மங்கையர்க்கரசியிடம் தோழி சென்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர்க்கரசி:—(தோழியைக் கண்டதும்) "நீலா! இன்று எனக்கு ஒருமாதிரியாயிருக்கிறது. ஆதலால் இன்று எனக்கு எவ்விதமான தொந்திரவும் கொடுக்கவேண்டாம். நீ போ. மற்ற அலுவல்களைப்பார்."

நீலா:—"அம்மா! தங்களுக்கு ஒருமாதிரியாயிருந்தால் ஏன் ஸ்நானஞ்செய்தீர்கள்? என்னிடம் தெரிவிக்கலாகாதோ? தங்களுடைய தந்தை ஊரிலில்லாத சமயத்தில் தங்களுக்கு இவ்விதம் அசௌக்கியம் நேரிட்டது எனது துர்அதிர்ஷ்டம் தான் போலும்! சரி பாதகமில்லை. தலையையாவது சிவி முடிக்கின்றேனே. குளித்தவுடன் தலைவாரி சடைபின்னாவிட்டால் தங்களுடைய அழகே கெட்டுப்போய்விடும் கூந்தலும் ஒருமாதிரியாகிவிடும். ஆதலால் யாதொரு தொந்தரவுமின்றி நானே இன்று தங்களுக்கு சடைபின்னுகிறேன்."

மங்க:—"தோழி! வேண்டாம். தொந்தரவு செய்யாமல் தயவுசெய்து விலகிப்போ."

நீலா:—"அம்மா! வேண்டாமா? நான் போய் விடுகிறேன், ஒருநாளும் கோபித்தறியாத தாங்கள் இன்று கோபித்துவிட்டீர்கள். கோபம் என்ற பொருளுக்கு அர்த்தமே தெரியாத தாங்கள் இவ்விதம் கோபிக்க யாரிடம்—எப்போது கற்றுக்கொண்டீர்களோ தெரியவில்லை. திலகமாவது இட்டுக்கொள்ளக்கூடாதா?"

மங்க:—"தோழி! என்னை மன்னித்துக்கொள்! ஏதோ கோபித்துவிட்டேன். இது என் குற்றம் தான். கோபம் என்பது என்ன என்பதை நான் ஒருவரிடமும் கற்றுக் கொள்ளவில்லை. இன்று எனக்கு தானாகவே உண்டாகிவிட்டது. இதிருக்கட்டும். நீலா! பெண்கள் எதற்காக நன்றாய் சடைபின்னியும், முகத்தில் திலகமிட்டும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும் அணிந்து தங்களை அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக்கொள்கின்றனர்? தங்களது இன்பக் கணவரை மகிழ்விக்கவேண்டியன்றோ? அவ்விதமே எனது கணவர் தற்போது என்னுடன் இல்லை. ஆதலால் நான் என்னை அழகுபடுத்திக்கொள்ள விரும்பவில்லை. நீ செல்லலாம்.

நீலா:—"அவ்விதமா? மெத்தசந்தோஷம். அம்மணி! இதுவரை தாங்களே சம்பாஷணைப் போட்டியில் வெற்றி பெற்று வந்தீர்கள். ஆனால் இன்று தோல்வியடையப் போகிறீர்கள். தாங்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்வது தங்களது கணவரை சந்தோஷப்படுத்த வேண்டியேதானென்றும், தற்போது தங்களது கணவர் தங்களுடன் இல்லையென்றும் ஆதலால் தங்களை அழகுபடுத்திக்கொள்ள விரும்பவில்லையென்றும் கூறினீர்களல்லவா? தங்களுக்கோ இன்னும் மணமாகவில்லை. அது ஒருபுறமிருக்கட்டும். நேற்று வரை தாங்கள் ஏன் தங்களை அழகுபடுத்திக் கொண்டிருந்தீர்கள் என்ற வினவிற்குதகுந்த விடையளிக்க முடியுமா?"

மங்:—"பேஷ்! வெகு கெட்டிக்காரி. நீ நல்ல கேள்விதான் கேட்டாய். நானும் அதற்கு விடையளிக்க வேண்டியதுதான் முறை. எனக்கு இன்னும் மணமாகவில்லையென்று நீ எப்படி யறிந்துகொண்டாய்? உலகமறிய ஓர் ஆடவனை மணந்துகொண்டபின்தான் ஒருபெண்ணுக்கு மணமாகிவிட்டதென்றும் அதன் பின்புதான் அவரை கணவர் என்றழைக்கலாமென்றும், அதுபரியந்தமும் அவர் வேறு மனிதர் என்றும் இல்லை. அவ்வித முறண்பாடான பழக்க வழக்கங்களை நான் ஆதரிக்க முடியாது. எப்போது ஓர் மங்கை பிற ஆடவன் ஒருவனை நேசித்துவிட்டாளோ—காதலித்தாளோ அன்றே அவ்வாடவனைத் தனது பிராணநாதராக ஏற்றுக்கொள்வதுதான் கற்புடைப் பெண்டிர்க்கழகு. நான் ஒருவரையும் கணவனாக ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் ஒரு ஆடவனையும் காதலனாகப் பெறவில்லையென்றும் உனக்கு எப்படி திட்டமாகத்தெரியும்? எனதுமனதிலுள்ளதை அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஆற்றல் உனக்கு உண்டா? இல்லையன்றோ! ஆதலால் நீ முன்பின் யோசியாது பேசினது கண்டிக்கத்தக்கது. இனிமேல் அவ்விதம் பேசாதே! நீ செல்"

நீலா:—"அம்மணி! அடியாளை மன்னிக்க வேண்டும் தங்களைவெல்ல பிரமதேவனாலும் கூட முடியாதுபோலும். நான் தங்களிடம் ஒருகேள்வி கேட்கிறேன். தாங்கள் யாரை கணவராக நியமித்துக் கொண்டீர்கள்? தாங்கள் பெரிய ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்தவரை மணக்கலாமென்று எண்ணலாம். ஆனால் தங்களின் தந்தையின் நோக்கம் வேறு?"

மங்:—"அதென்ன? எனது தந்தையவர்களின் நோக்கம் என்ன?"

நீலா:—"நீங்கள் யாரை கணவராக நியமித்திருக்கிறீர்கள்?"

மங்;—"இதிருக்கட்டும். நீ அதைச்சொல்லேன்"

நீலா:—"நீங்கள் அதைச் சொல்லுங்கள். நான் தங்களின் தந்தையின் கருத்தைக் கூறுகிறேன்"

மங்:—"ஓஹோ! எவ்விதமும் என்னை ஏமாற்றி எனது வாக்குமூலத்தை பதிவுசெய்ய எண்ணியிருக்கிறாய்போலும்! அது மங்கையர்க்கரசியிடம் முடியாது. நீ இவ்விதம் கூறினால் நான் எனது எண்ணத்தைக் கூறி விடுவேனோ! உனது தந்திரமே தந்திரம்"

நீலா:—"இல்லை. அம்மணி! நான் தங்களை அப்படியும் ஏமாற்றி விடுவேனென்று எண்ணுகிறீர்கள்? அவ்விதம் எண்ணவேண்டாம். அது தங்களது குற்றம். நானே முதலில் கூறிவிடுகிறேன். தங்களுடைய தந்தையின் நோக்கம் மிகமிக உயர்ந்தது. நம்முடைய மாளிகையிலிருக்கும் பால கிருஷ்ணனவர்கள் நற் குடும்பத்தில்—கண்ணியமான வம்சத்தில் அவதரித்தவரென்றும், இப்போது மேன்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களுடன் திகழுகின்றார்களென்றும் ஆதலால் அவருக்குத்தான் தங்களை மணமுடித்துவைக்கப்போகிறார்களென்றும் என்னிடம் ஒருநாள் கூறினார்கள். இவ்வளவு நாளும் மேற்படி விஷயத்தை தங்களிடம் தெரிவிக்காததை மன்னிக்கவும். இப்போதாவது தங்களுடைய கருத்தை வெளியிடலாமன்றோ!"

மங்:—"அது உண்மைதானா? அவ்விதமாயின் எனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். நானும் அவரையே கணவராக ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஈசன் எனது தந்தையை எனக்குச் சாதகமாகவே திருத்திவிட்டார். எனது நோக்கம் அதிவிரைவில் சித்தியெய்திவிடுமென்று நம்புகிறேன்"

நீலா:—"நானும் அவ்விதமே யாகவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துகின்றேன். அம்மணி! நீங்கள் மனதைத் தளரவிடவேண்டாம். எல்லாம் ஈசன் செயலேயன்றி வேறல்ல. இன்னும் சில தினங்களில் மீண்டும் தங்களின் தந்தையையும் காதலரையும் காண்பீர்கள்! இனி எனது உதவி தங்களுக்கு அவசியமிராது. தாங்கள் தங்கள் நாதருடனேயே இன்பமாக காலங்கடத்துவீர்களேயன்றி என்னை நினைக்கக்கூடமாட்டீர்கள். தயவு இருக்கட்டும். நான் சென்று வருகிறேன். காலைப் போஜனம் தயாராகி விட்டது. வாருங்கள்."

மங்:—"நீலா! நீ என்னை பரிகசிக்கிறாய் போலும். என் நிலைமையில் நீ இருந்தால் இவ்விதம் கூறமாட்டாய். உன்னையும் காமன் தனது அம்புராசிகளுக்கு இலக்காக்க நீண்டநாள் செல்லமாட்டாது. நான் எவ்வளவு இன்பம் எனது காதலருடன் அனுபவித்தாலும் உன்னை மாத்திரம் நான் மறக்கமாட்டேன். இதை நிச்சயமாக நம்பு. என்னைப்போன்றே எனது காதலரும் உன்னிடத்து அன்பாயிருக்கிறார். நீ மாறான அபிப்பிராயம் கொள்வது சரியன்று. நீ எனது சகோதரியெனவே நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் சம அந்தஸ்தில் வைத்திருக்கிறேன். மனக்கிலேசத்தை விட்டொழி நீ சென்று உனது வேலைகளை கவனி. நான் வருகிறேன்'' என்று கூறி மங்கையர்க்கரசி தனது தோழி நீலாவை அனுப்பிவிட்டாள்.

இவ்வாறு நாட்கள் பல கடந்துவிட்டன. மங்கையர்க்கரசி தனது காதலனுக்கு கொடுத்திருந்த தவணை இன்றுடன் பூர்த்தியாகி விடப்போகின்றது. இவ்வித நிலையில் தனது தந்தையிடமிருந்தும் காதலரிடமிருந்தும் யாதொரு தகவலையும் பெறாத அம்மங்கை எந்நிலைமையிலிருக்கிறாள் என்பதை நாம் மீண்டும் இங்கு ஆராயவேண்டுவதில்லை. இன்று அவள் சரியாக உணவு உட்கொள்ளவேயில்லை. அநேகமாக மங்கையர்க்கரசிக்கு சிவராத்திரி விரதம் இன்றே அனுஷ்டிக்க வேண்டியதாய் விட்டது. கடலின் அலைகளைப் போன்று பற்பல விதமான எண்ணங்கள் அவளது மனதில் ஒன்றன் பின் ஒன்றாக தோன்றி மறையலாயின. நீலா எவ்வளவு தேறுதல் கூறியும் பயனில்லாமல் போய்விட்டது. துர் அதிர்ஷ்டவசமாக மங்கையர்க்கரசியின் அன்னை அவளை விட்டுப் பிரிந்தனள். அவள் உயிருடனிருந்தாலும் தேறுதல் கூறி மகளைத்தேற்றக்கூடும். குடத்தோடு குடம் தண்ணீர் வார்த்துக்குடித்தாலும் தாய் வார்த்த தண்ணீருக்கு ஒப்பாகுமோ? தன்னைவிட்டுப் பிரிந்த அன்னையும்கூட பிரசன்னமாகி வந்து தேறுதல் கூறினும் மனம் திருப்தியடைவது அபூர்வம் என்று கூறினிலும் பொருந்தும்.

இவ்வாறாக இரவு மணி எட்டும் அடித்துவிட்டது. அவளது உயிர் பாதிக்குமேல் அவளிடமிருந்தும் பிரிந்துவிட்டதென்றே கூறிவிடலாம். அவளது துர்அதிர்ஷ்டம் நித்திராதேவியும் அவளை யணுக மறுத்துவிட்டாள். என் செய்வாள் பாவம்! தான் பிறந்ததுமுதல் இதுநாள் வரையிலும் அனுபவித்தறியாத துக்கத்தை அனுபவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஒருவன் சதாகாலமும் மகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் இருக்கமுடியாது என்பதை சிறுமி மங்கையர்க்கரசி இதிலிருந்தும் தெரிந்துகொண்டாள்.

பஞ்சணை மெத்தையின்மீது சாய்ந்தவண்ணம் பற்பல வாறாக எண்ணமிட்ட வண்ணமாகவேயிருந்தாள். பாலகிருஷ்ணன் தன்னருகில் அமர்ந்துகொண்டு அவன் தனது வலதுகரத்தை தோளின்மீது வைத்துக்கொண்டு ஏதேதோ பேசுவதுபோன்று தோன்றுகிறது. மறு நிமிஷம் தற்போதுள்ள நிலைமை ஞாபகத்திற்கு வரவும் திடுக்கிட்டு ஏமாந்து விடுகின்றாள். தனது மாமனாரைக் காண்பதாகவும், உடனே அவரது பாதங்களில் விழுந்துபணிவதாகவும், அவர் அன்பு மிகுதியினால் தன்னை வாரியெடுத்து அணைத்துக் கொள்வதாகவும் காண்கின்றாள். மறுநிமிஷம் ஏமாற்றமடைகின்றாள்.

தனது மனதை சாந்தப்படுத்திக்கொள்ள பூந்தோட்டம் வந்தடைந்தாள். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. பூந்தோட்டத்தின் மத்தியில் இயற்கையாயமைந்துள்ள புல்லின்மீது நமது செல்வி அமர்ந்தாள். பளபளப்பான அவளது மேனியில் பூர்ண சந்திரனின் கிரணங்கள் பட்ட மாத்திரத்தில் அவளது தங்க விக்கிரகம் போன்ற மேனி பளிச்சென்று மின்னிக்கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று மெல்லென வீசியது. அவளது அழகிய கருங்கூந்தல் பின்னிவிடப்படவில்லையாதலால் அவளுக்கு சமாதானங் கூறுவதுபோன்று காற்றில் அங்குமிங்கும் அசைந்துகொண்டிருந்தது. நேரஞ்செல்லச்செல்ல மனோவேதனை அதிகப்படுகின்றதேயன்றி குறைந்தபாடில்லை. காதலனை—தனது உயிரையே பிரிந்த—காதலிக்கு—மனத்திற்கு நிம்மதி ஏற்படுவதெங்ஙனம்?

"சங்குமுழங்குந் தமிழ் நாடன்றன்னை நினைத்தபோதெல்லாம், பொங்கு கடலுமுறங்காது பொழுதோர்நாளும் விடியாது, திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்றலுறங்குஞ் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம், எங்குமுறங்கு மிராக்காலமென் கண்ணிரண்டு முறங்காதே.” என்ற கவியை பாடிக்கொண்டிருக்கும்போது “மங்கையர்க்கரசி” என்று யாரோ ஒருவர் கூப்பிடுவது போன்று ஓர் ஒலி கேட்டது. சற்றும் எதிர்பாராத விதமாக எழுந்த இக்குரலைக்கேட்ட நமது செல்வி பின்புறம் திரும்பிப்பார்த்தாள். ஆஹா! அவளனுபவித்த மகிழ்ச்சி என்னே! திடீரெனஎழுந்து சிறு மான்குட்டியைப்போன்று துள்ளி ஓடி தன்னைநோக்கி விரைந்துவரும் பாலகிருஷ்ணனை இறுகக் கட்டிக்கொண்டாள்.

“காதலீ! உன்னைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டிய சந்தர்ப்பம்—அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஒருநாளை ஒரு யுகம் போன்று தள்ளிவிட்டேன். நீ என்னை விட்டுப்பிரிந்து எவ்வாறு இருந்துவிட்டாய்? உன்னைக்கண்டு வெகு நாளாய் விட்டதால் எனது கண்கள் பூர்த்துவிட்டன. உனக்கு நான் முத்தாரங்களை அணிவித்து வெகுநாட்களாகிவிட்டதால் உனது அதரங்கள் அழகை இழந்துவிட்டன போன்று தோன்றுகிறதே!” என்று பாலகிருஷ்ணன் கூறியபடியே அவளுடைய அதரங்களில் முத்தங்களைச் சொரிந்தான்.

“காதலா! தங்களைவிட்டுப் பிரிந்தபின் நான் என் உயிரையே பறிகொடுத்தவள் போன்றுனேன். அதிருக்கட்டும். தங்களுடைய தந்தை எங்கே? வாருங்கள். அவர்களை நான் காணவேண்டாமோ?” என் மாமாவைக் கண்டு தரிசிக்க வேண்டாமா? என்று கூறி தனது கரத்தால் அவனைப்பற்றி இழுத்துக்கொண்டுவந்தாள். இருவரும் மாளிகையின் மத்திய ஹாலையடைந்தனர். தனது மாமாவைக்கண்ட மங்கையர்க்கரசி அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினுள். இராமநாதர் இப்பெண்மகள் யார் என்பதை யறியமாட்டார் என்றாலும் அவளுடைய முகச்சாயலிலிருந்து அவள் ஜெயராமரின் குமாரத்தியும் தனது மருமகளுமான மங்கையர்க்கரசி என்பதை அறிந்துகொண்

டார். அவளுடைய குணத்தை மெச்சிக்கொண்டு அவளை வாரியணைத்துக் கொண்டார்.

இராமநாதர்:—"குழந்தாய்! நான் யாரென்பதை அறியாதிருந்தும் நீ என்னிடம் நடந்துகொண்ட விதத்தைக் கண்டு மனமகிழ்ந்தேன். உன்னைப்போன்று எனக்கும் ஓர் புத்திரி இருக்கிறாள். நீங்கள் இருவரும் அநேகமாக ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்களைப்போன்றே காணப்படுகின்றீர்கள். ஈசன் உங்களிருவருக்கும் யாதொரு குறைவுமின்றி சந்தோஷமாய் வாழவும், தீர்க்காயுளோடு வாழவும் துணை புரிவாராக! என்று ஆசீர்வதித்தார்.

மங்கையர்க்கரசி:—"மாமா! நான் தங்களை இதற்கு முன் கண்டிருக்கவில்லையென்றாலும் தங்களது குமாரரால் தங்களை யறிந்துகொண்டேன். எனக்கு உற்றதுணைவராயிருக்கும்படி தாங்கள் தங்களது குமாரரை உற்பவித்ததற்காக நான் எனது மனப்பூர்வமான நன்றியை செலுத்திக் கொள்கிறேன். என்னைப்போன்று தங்களுக்கு ஒரு குமாரத்தி இருப்பதாகக்கூறினீர்களல்லவா? அவளைப்பார்க்க விரும்புகிறேன். தாங்கள் அவளையும் உடன் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கலாமன்றோ?

இராம:—"இல்லை. நான் கூப்பிட்டுக்கொண்டுவரவில்லை. அவ்விதமிருந்தது ஒருவழியில் நன்மையாகவே முடிந்தது. அவள் இலங்கையில் இராஜேந்திரனின் சகோதரி சீதாலெக்ஷ்மியுடன் இருந்து வருகிறாள். அவர்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிய மனமில்லாமல் இருக்கிறார்களாதலால் அவளை அங்கேயே இருக்கும்படி விட்டுவிட்டேன்"

மங்:—"ஆண்மக்களில்லாத ஓர் வீட்டில் தன்னந் தனியாக இரு இளம் பெண்களை தனியாக விட்டுவிட்டு வரலாமோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம:—"இல்லே. அங்கு குணசேகரர் என்ருெருவர் இருக்கிருர். அவர் உத்தமர். சற்குணவான். மேன்மையான குடும்பத்தில் உதித்தவர். இராஜேந்திரனின் தோட்டங்களையெல்லாம் அவரே மேல்பார்த்து வருகின்ருர். நம்பிக்கைக்கு பாத்திரமானவர். களங்கமற்ற மனதினையுடையவர். அவருடனேயே நான் குறிப்பிடும் இரு குழந்தைகளும் இருக்கின்றனர்."

மங்:—"அதுவும் சரிதான்! நான் எனது விருப்பத்தை நிறைவேற்ற முடியுமோ? அதாவது தங்களுடைய புத்திரியை இங்கு வரவழைக்க முடியுமோ? அன்றி சீதா லெக்ஷ்மியும் உடன் வரலாமே!"

இராம:—"ஆம். அவர்களையும் இவிடம் வரவழைக்கின்றேன். அதைப்பற்றி இன்று ஒரு கடிதம் இலங்கைக்கு வரையலாமென எண்ணுகிறேன்." என்று இராமநாதர் கூறினர். பின் மங்கையர்க்கரசியும் தனது மாமனரிடம் அன்புடன் விடைபெற்றுக்கொண்டு தன்னறை வந்து சேர்ந்தனள். அங்கு இவளது வருகையை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கும் பாலகிருஷ்ணனின் அருகில் மங்கையர்க்கரசி அமர்ந்துகொண்டாள். பின் பாலகிருஷ்ணன் தனது யுக்தியையும் தான் கண்ட அதிசயங்களையும் கொள்ளையரின் முடிவையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தான்.

இராஜேந்திரன் மங்கையர்க்கரசியைக் கண்ணுற்றதும் தனது காதலி சுந்தரி தான் இவண் வந்துற்றனளோ என ஐயமுற்ருன். சுந்தரியும் மங்கையர்க்கரசியும் அனேகமாக ஒரே உருவம் பெற்றிருந்தார்களாதலால் அவன் எண்ணியது ஆச்சரியமன்று. பின் சம்பாஷணையிலிருந்து அவள் ஜெயராமரின் குமாரத்தி என்பதைத் தெரிந்துகொண்டார். அவளுடைய குணங்களையும், நடத்தையும் பேச்சுத்திறனையும் தன்னுள் மெச்சிக்கொண்டார். அதன்பின் எல்லோரும் உணவருந்தி சயனித்தனர். அன்று வெகுநேரமாய் விட்டதால் மறுநாள் கடிதம் எழுதுவதென முடிவு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் ஜெயராமரும் இராமநாதரும் இராஜேந்திரனும் சம்பாஷணை நிகழ்த்திய பின் இலங்கைக்கு ஓர் கடிதம் வரையலாயினர். அந்நேரத்தில் குணசேகரரின் தந்தையும் அம்மாளிகைக்கு தற்செயலாக வந்துவிட்டார். அவருடனும் கலந்து பேசியபின் ஓர் கடிதம் வரையலாயினர். அக்கடிதத்தை இராஜேந்திரனே வரைந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. கடிதம் பின்வருமாறு.

ஸ்ரீ

வைகாசிமீ 16உ

அன்புள்ள குணசேகருக்கு,

இந்தக்கடிதத்தை பூனாவிலிருந்து வரைகின்றோம் நாங்கள் நேற்றுத்தான் இவண் வந்து சேர்ந்தோம். இது நாள்பரியந்தம் கொள்ளையரிடம் அகப்பட்டு நாங்கள் பட்ட துன்பங்களை வரைய இக்கடிதம் இடந்தரமாட்டாது. ஆதலால் அவைகளை நேரில் பேசிக்கொள்ளலாம். இந்தக் கடிதம் கண்டவுடன் நீயும் சுந்தரியும், சீதாலெக்ஷ்மியும் உடன் புறப்பட்டு வரவேண்டியது அவசியம். தாமதம் கூடாது. அவசரம்! தனது அண்ணனைக்கண்டு கொண்டதாகவும், அவன் மேன்மையான குணங்களுடன் திகழுவதாகவும் அவன் எங்களிடமே இவ்விடம் இருப்பதாகவும் சுந்தரிக்கு தெரிவிக்கவும்.

கடிதம் கண்டதும் புறப்படுவீர்களாதலால் நீங்கள் வந்துதான் இவிடம் மற்ற காரியாதிகளை முடிவு செய்யவேண்டும். யாதொரு காரணமுமின்றி இவ்விதம் எழுதத்துணியமாட்டோம் என்பது தங்களுக்கு தெரியும். உடனே புறப்படுங்கள். யாதொரு களங்கமுமின்றி வந்துசேறவும். பம்பாய் கப்பல் மூலமாகவே பிரயாணப்படுங்கள் வெகு ஜாக்கிரதையுடன் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி எச்சரிக்கை செய்கிறோம். எங்களால் கூடுமானால் பம்பாய் துறைமுகத்திற்கு வந்து உங்களைக் கண்டு கொள்கிறோம். எங்களை எதிர்பார்க்க வேண்டாம். உடனே ரயில்மூலமாக வாருங்கள். ஈசன் உங்களை காப்பாற்றுவாராக!

இதற்குமேல் அதிகமாக நாங்கள் ஒன்றும் எழுத விரும்பவில்லை. ஆதலால் இத்துடன் முடிக்கிறோம். மேற்கட்டியதை நுணுக்கமாக ஆராய்ச்சிசெய்து பார்த்துக்கொள்க. ஈசன் அருள் புரிவானாக!

இங்ஙனம்,

தங்களின் நல்வரவை அன்புடன் எதிர்நோக்கும்.

இராமநாதர்,

ஜெயராமர்,

வேணுகோபாலர்,

இராஜேந்திரன்.

மேற் குறிப்பிட்டகடிதம் காலக்கிரமத்தில் குணசேகரனிடம் தபால் மூலமாக வந்துசேர்ந்தது. அதை எடுத்துக்கொண்டு தனது அறைக்குச் சென்றான். இரண்டு மூன்று முறையல்ல பன்முறை அக்கடிதத்தைத் திரும்பத் திரும்ப வாசித்தான். ஒன்றும் புரியவில்லை. "திடீரென இவ்விதம் எழுதவேண்டியதின் காரணத்தை இதில் ஏன் விளக்கியிருக்கக்கூடாது? இதில் ஏதோ மர்மமிருக்கத்தான் வேண்டும். ஆனால் இதில் எனது தந்தையும் ஜெயராமரும் கூட கையெழுத்திட்டிருக்கின்றனர்! ஒருக்கால் இந்நால்வரும் கடிதத்திற் குறிப்பிட்டவண்ணம் கொள்ளையரிடம் சிக்கி அப்பாதகர்களின் இம்சையை பொறுக்கமாட்டாது இவ்விதம் எழுதியிருக்கின்றனரோ? இவ்விதம் எழுதி எங்கள் மூவரையும் வரவழைத்துக்கொண்டு எம்மிடமுள்ள நகை நட்டு பணம் முதலியவைகளை கைப்பற்றவேண்டுமென்று கொள்ளையர் தீர்மானித்து விட்டனரோ! எதற்கும் தைரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தைக் கைவிட்டு விடக்கூடாது. வந்ததெல்லாம் வரட்டும்" என்று பற்பலவாறாக குணசேகரன் எண்ணியவாறு அமர்ந்திருந்தான்.

சிறிது நேரத்தில் சீதாலெக்ஷிமி அவ்வறைவந்து சேர்ந்தாள். "குணசேகரரே! உலவச்செல்வோமே! எந்நேரமும் வேலையில்தானே ஈடுபட்டிருக்கிறீர்கள். ஏதேனும் ஜோலி பாக்கியிருப்பினும் சொல்லுங்கள். நானும் சேர்ந்து அதை முடிக்கிறேன்" என்று கூறியவாறு அவனது அருகில் அமர்ந்தாள். அமர்ந்ததும் குணசேகரன் தன்கையிலிருந்த கடிதத்தை அவளிடம் கொடுத்தான்.

கடிதத்தைக்கைப்பற்றிய சீதாலெக்ஷிமி அதைப்பிரித்து வாசித்ததும் ஆச்சரியமடைந்தாள். அவளுக்கும் அக்கடிதத்தைப்பற்றி ஒன்றும் தோன்றவில்லை. நன்கு கல்வி கற்று போதிய அனுபவம் பெற்றுள்ள குணசேகரனாலேயே அறிய முடியாத ஓர் விஷயத்தை சீதாலெக்ஷிமி எவ்விதம் அறிந்து விடுவாள்? பறக்கப்பறக்க விழித்ததுதான் எஞ்சியது. இது சமயம் "சீதா" என்று கூவியவாறு சுந்தரியும் அங்கு வந்து விட்டாள். அவள் அவ்விதம் அழைத்ததை இவ்விருவரும் கேட்கவேயில்லை. ஆதலால் அவர்கள் ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருந்தனர். இவ்விருவரது நிலைமையைக்கண்ட சுந்தரி திகைத்தவளாக அருகில் சென்றனள். யாதொன்றும் அறியாத செல்வி சுந்தரி "அண்ணா! என்னவிஷயம்? தாங்களும் சீதாவும் ஆழ்ந்தயோசனையிலிருக்கிறீர்களே! நான் அவ்விஷயத்தை அறியலாகுமோ?', என்று குணசேகரனை நோக்கி வினவினள்.

சற்றும் எதிர்பாராத இக்குரலைக்கேட்ட இருவரும் திடுக்கிட்டனர். சுந்தரியைக் கண்ணுற்றதும் கடிதத்தை அவளிடம் கொடுக்க அவள் பிரித்துப் பார்த்து பிரமிப்படைந்தனள். அதிலுள்ள ஒவ்வொரு வசனத்தையும் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசீலனை செய்தும் பயன் ஒன்றுமில்லை. சிறிதுநேரஞ் சென்றவுடன் ஞானோதயம் உண்டாகிவிட்டது.

அதாவது:—ஒருவன் எதையாவது எழுதுகையில் அவ்வரிகளின் முதலாவது மெய்யெழுத்துக்கள் வரக்கூடாதென்றும், ஒவ்வொருவரியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாகவோ அன்றி உயிர் மெய்யெழுத்தாகவோ இருக்கலாமென்றும் தனது உபாத்தியாயர் வேதமாணிக்கம் என்பவர் கூறியதும், ஒருசமயம் தனது காதலரும்கூட குறிப்பிட்டதும் தற்போது நினைவுக்கு வரலாயின. தனது காதலன் அவ்விதம் கூறியிருக்க அவர் எழுதிய இக்கடிதத்தில் இவ்விதம் அவர் கூறியதற்குமாருக வரியின் முதல் எழுத்து மெய்யெழுத்தாக எழுதப்பட்டிருப்பதின் காரணம் யாதாயிருக்கலாம்? என்று சிந்தித்தாள். இதில்தான் ஏதோ சூக்ஷ்மம் இருக்கவேண்டுமென்று முடிவு கட்டிவிட்டாள். எந்தெந்த வரியில் முதலாவதாக மெய்யெழுத்து வரையப்பட்டிருக்கிறதென்று கூர்ந்து நோக்கினாள். குருவி உட்கார பனம்பழமும் விழுந்ததாம். ஆனால் இதில் குருவியின் சாமர்த்தியம் அதாவது அதற்கு பலம் மிகுந்திருக்கவேண்டுமென்றுதான் சிறுவர்கள் எண்ணிக்கொள்வார்கள். அதைப் போன்று நமது செல்வி சுந்தரி மெய்யெழுத்து எவ்வரிகளிலெல்லாம் வந்திருக்கிறதென்றுபார்க்க அவளது கண்களுக்கு திடீரென ஒருவசனம் தென்பட்டது. கல்யாணம் புறப்படுங்கள்’’ என்பதேயாகும் அவ்வசனம்.

கண் இரண்டும் குருடான ஒருவனுக்கு எவ்விதமோ கண்களிரண்டும் தெரிந்துவிட்டால்கூறவும் வேண்டுமா? அத்தகையவனைப்போன்றே நமது சுந்தரியுமானாள். மேற்காட்டிய வசனங்களைக் கண்ணுற்றதும் அவளுக்கு ஆனந்தம் பொங்கிவழிந்தது. தனது கண்களை அவளால் நம்பவே முடியவில்லை. ஆதலால் வேறொரு துண்டுக்கடுதாசி எடுத்து அந்தக்கடிதத்தின் இரண்டாவது பேரேகிரேப்பின் ஒவ்வொருவரியிலுமுள்ள முதல் ஒவ்வொரு எழுத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துக்கொண்டாள். அதிலும் அவ்விதமே காணப்பட்டது. இதை ஆமோதிப்பதைப்போன்று கடிதத்தின் மூன்றாவது பாராவில் "மேற்காட்டியதை நுணுக்கமாக ஆராய்ச்சிசெய்து பார்த்துக்கொள்க!" என்று குறிப்பிட்டிருந்ததையும் கண்ணுற்றாள். காரணம் இதுதான் என்பதை யறிந்த சுந்தரிக்கு உண்டாகிய மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. அவள் வேறொரு கடிதத்தில் எழுதுவதையும், அதில் "கல்யாணம் புறப்படுங்கள்" என்று எழுதுகிறதையும் சுந்தரிக்கு புத்திமாறாட்டம் உண்டாகி விட்டதெனக் கருதி வயிறு குலுங்க நகைத்தனர்.

ஆம்! ஆம்! ஒருவன் நல்ல தொழிலை நடத்தினாலும் பிறர் அவனைநோக்கி ஏளனைதான் செய்வார்கள். அவன் அத்தொழிலால் கஷ்டநஷ்டங்களை யடைந்தால் "நான்தான் முன்னதாகவே சொன்னேனே. நீ கேட்கவில்லையல்லவா? அதிகப் பிரசங்கித்தனமாய் நடந்துகொண்டதன் பலன் தான் இது" என்றுகூறி விடுகின்றனர். முன் நகைத்த நண்பர்கள் அவன் அத்தொழிலில் லாபமடைந்தாலோ "அவன் கெட்டிக்காரன்தான்" என்று சொல்லி தலையைகவிழ்த்துக் கொள்வர். அவ்விதம் கூறாமல் கதிதான் என்ன? சிலர் பிறர்கூறும் வார்த்தைகளுக்கஞ்சி தாம் துவக்கிய தொழிலை விட்டு விடுகின்றனர். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பது பொய்த்து விடுமோ? ஒருபெண் கெர்ப்பமாக இருக்கும்போதே அவளது பெற்றோர், நமது குழந்தை பெண்மகவைப் பெறுவாள்.—அவளுக்கு மகேஸ்வரி தேவி என்ற பெயரை சூட்டிவிடவேண்டும். அவளுக்கு தெற்கு வீட்டு கோதண்டராமுவை மணம்செய்து விடவேண்டும். பெரிய கோடீஸ்வரர் வீட்டுக்கு வாழ்க்கைப்படும் நமது பேத்தியாதொரு குறைவுமின்றி வாழ்வதை நாம் கண்ணாரக் கண்டானந்திக்கவேண்டும்." என்று பலவாறாக முடிவு கட்டிவிட்டால் அவர்களைப்போலும் பைத்தியங் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் இவ்வுலகிலிருக்க முடியுமோ? அவர்கள் எதிர் பார்த்ததற்கு முற்றிலும் மாறாக ஆண் குழந்தையொன்று பிறந்துவிட்டால் என்செய்வது? அவர்களது விருப்பம் நிறைவேறும்படி ஈசன் பிறக்கும் குழந்தை பெண்ணாகவே இருக்கும்படி சிருஷ்டித்தான் என்று வைத்துக் கொள்வோம். அக்குழந்தை பிறந்ததும் மீண்டும் காலனுக்கு இறையாகிவிடில் என் செய்வது? "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லையே" என்று உள்ளதை உள்ளபடிகூறி மனங்கசிந்து ஒருநண்பர் பாடியிருக்கிறான்றே! இவைகளையெல்லாம் சற்றும் சிந்திக்காமல் அவர்கள் மனக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டு நிச்சய தாம்பூலமும் இட்டுவிடுகின்றனர். என்னே! இவர்களின் விபரீதம்? தாம் எண்ணும் எண்ணங்களெல்லாம் தண்ணீரின் மீது எழுதிய எழுத்துக்களைப்போன்றது என்பதை அவர்கள் எப்போது அறிவார்களோ தெரியவில்லை.

இத்தகையோரைப் போன்றே நமது குணசேகரரும், சீதாலெக்ஷ்மியும் சுந்தரி வரைவதைக்கண்டு நகைக்கின்றனர். இவர்கள் நகைப்பதின் கருத்தென்ன வென்பதை அறிந்துகொண்ட அருங்குண பூஷணியாகிய சுந்தரி அவர்களைநோக்கி பேசலானாள்:—"சீதா! நீங்கள் நகைப்பதின் கருத்து என்ன என்பதை நான் சிறிது அறிந்து கொண்டேன். அதை நான் குற்றமாகக் கருதவில்லை. உங்களது ஸ்தானத்தில் நான் இருப்பினும் ஒருவேளை இவ்விதம் நகைக்கவும் கூடும். நான் எழுதிய ஒன்றும் வியர்த்தமாகி விடவில்லை. இக்கடிதத்தின் இரண்டாவது பாராவில் உள்ள வரிகளின் முதல் எழுத்துக்களை ஒன்றாகச்சேர்த்து எழுதி, அல்லது மேலிருந்துகீழ்நோக்கியவாறே வாசித்தால் இக்கடிதத்தின் இரகசியம் தெற்றெனவிளங்கும்." என்றுகூறி அவளிடம் கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கடிதத்தைப் பெற்ற இருவரும் சுந்தரி கூறியதைக் கேட்டு ஆர்வமுடன் அதை வாசித்தனர். உண்மை தெரியலாயிற்று. உடனே அவர்கள் சுந்தரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவளது யுக்தியை மெச்சிக்கொண்டனர். விவாகம் யாருக்கென்று திட்டமாகக் குறிப்பிடப்படவில்லை. யெனினும் தங்களுடைய காதலர்களையே மணமுடித்துக் கொள்ள வேண்டுமென்று முறையே சுந்தரியும், சீதாலெக்ஷிமியும், தனது காதலியையே தான் வரிக்கவேண்டுமென்று குணசேகரனும் தம்முள் தீர்மானித்துக் கொண்டனர்.

பின்பு தாம் பிரயாணப்படவேண்டிய தேதியையும் குறிப்பிட்டுக் கொண்டனர். அவ்விதமே, தமது வியாபார ஸ்தலங்களையும் விளைநிலங்களையும் அவ்விடமுள்ள நம்பிக்கையான ஓர் குமாஸ்தாவிடம் ஒப்புவித்துவிட்டு மூவரும் கடிதத்தில் குறிப்பிட்ட வண்ணம் பம்பாய் கப்பல் மார்க்கமாக பிரயாணமாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—14

## தர்மபாலாவின் ஆசூஷி முடிவு—
## அரக்கனின் பூவுலகவாழ்வு முடிவு.

மனோஹரபுர கிராமத்திற்கு சற்று அப்பால் ஒரு மரத்தினடியில் ஒரு நாள் காலை ஓர் சுந்தர வாலிபன் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தான். கட்டுமஸ்தான சரீரத்துடன் எழிலும், முகக்காந்தியும், தேக வனப்பும் ஒருங்கே யமையப்பெற்ற நமது சுந்திர வாலிபனை நித்திரா தேவியினிடத்திருந்து விடுவிக்க காலைச் சூரியன் உதயமாகி அவனது மேனியில் தனது கிரணங்களை செலுத்தலானுன். நீண்ட தூரம் பிரயாணஞ்செய்த களைப்பு மேலீட்டினுல் இளைத்துப் போயிருந்தான். அரச குடும்பத்திற் பிறந்தவரைப் போன்று காணப்படும் அவன் எதற்காக தன்னந்தனியாக ஓர் மரத்தினடியில் அதிலும் கானகத்தில் நித்திரை செய்யவேண்டும்? என்ற வினு ஒவ்வொருவருள்ளத்திலும் எழலாம். அதற்கு இனிமே கதையின் மூலமாகவே விடையறிந்துகொள்ளலாம்.

இவ்வாலிபன் சயனித்திருக்கும் இடத்திற்கு சற்று தூரத்தில் கெம்பீரமான தோற்றத்துடன் ஓர் அசுவம் நின்றுகொண்டிருந்தது. அதன்மீது ஓர் இளமங்கை அமர்ந்திருந்தாள். அவள் ஆடம்பரமில்லாத சில ஆபரணங்களை அணிந்திருந்தாள். பூர்ண சந்திரனை நிகர்த்த அவளது வதனத்தில் புன்னகை தவழ்ந்தது. இடையிடையே முகம் சிறிது மாறுதலடைந்தது. அவள் ஏதோ ஓர் ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருப்பவள்போல் தோன்றினுள். அவளது களங்கமற்ற வதனத்தினின்றும் முத்து முத்தான வெயர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிந்தோடியது. தனது முந்தாணையினால் வெயர்வை நீரை துடைத்துக்கொண்டாள். அவளது மனம் ஏதாலோ தாக்கப்பட்டிருந்தது.

சிறிது நேரஞ்சென்றதும் அவள் நமது வாலிபன் சயனித்திருக்கும் விருக்ஷத்தினருகில் வந்து அசுவத்தினின்றும் மெதுவாக இறங்கி வாலிபனின் அருகில் வந்தாள். அவளது மனம் படபடவென்றடிக்கிறது. வெயர்வை நீர் ஆறாய் ஓடத் தலைப்பட்டது. ஏதோ காந்தம் போன்ற ஓர் அபூர்வ சக்தியால்தான் தாக்கப்பட்டதாக அறிந்துகொண்டாள். சயனித்திருக்கும் சுந்தர வடிவழகரின் முகத்தை உற்றுநோக்கிக் கொண்டேயிருப்பது அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை நல்கியது.

“ஹா! ஈசா! இதென்ன உணர்ச்சி! என்றுமில்லாத விதமாக எனது மனம் இச்சுந்திர வாலிபரிடம் ஈடுபட்டு விட்டதே! இவ்வித உணர்ச்சியை நான் இதுநாள் பரியந்தமும் அனுபவித்ததே இல்லை. இவர் யாராயிருக்கலாம்? என்ன வடிவழகு! என்ன நேர்த்தி! இவர் ஏன் இங்கு இக் கானகத்தில் துயில்கொள்ளவேண்டும்? இவர் கண்ணியமான குடும்பத்தின் வழித்தோன்றலாகவன்றோ காணப்படுகிறார். இவருக்கு என்ன குறை நேரிட்டிருக்கலாம்? என் மனதை முற்றிலும் கொள்ளைகொண்ட இப்பூமானை யான் வரித்தாலென்ன? சயனித்துக்கொண்டிருக்கும் இவ் ஆண் ஏறு தூக்கத்திலேயே என் மனதைக்கொள்ளை கொண்டுவிட்டாரே! அவ்வித அபூர்வ சக்திபெற்ற இவர் நித்திரையற்று—விழித்துக் கொண்டிருக்கும்போது என்னை என்னதான் செய்யமாட்டார்? எனது உயிரையே ஒரே கவ்வாக கவ்வி பற்றிஇழுத்து விடுவாரன்றோ! ஓஹோ! காதல்! காதல்!! என்று அடிக்கடி நாவலர்கள் வரையும் சக்தி இதுதான் போலும்! காதலுக்கு இவ்வளவு அபார சக்தியுளதா? காதல் என்ற ஏட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரைக்காயை செயலளவில் நடத்திக் காண்பித்த இப்பூமானை நான் வணங்கவேண்டுமன்றோ!

எமது இராணி புவனேசுவரி எமது அரசனை "காதலா" என்றழைக்கும்போது நான் அவளைப் பரிகசித்தேனே! இதைப்பற்றி ஒருமுறை அவ்வரியையிடம் நான் நேரில் கேட்டதற்கு "பெண்ணே! உருவற்ற காதல் என்னும் தெய்வீக சக்தி—உணர்ச்சி உன்னைத்தாக்கும்போது நீ இதன் உண்மையைத் தெரிந்துகொள்வாய். இப்போது நீ ஏதும் தெரியாத சிறுமி. வெளுத்ததெல்லாம் பால் என்று கருதக்கூடியவள். ஆதலால் நீ என்னைப் பரிகசிக்கிறாய். எப்பொழுதாவது நீ காமனது அம்புராசிகளுக்கு இலக்காவது திண்ணம். அதுவரையும் பொறுமையோடிரு" என்று எமது அரசி புவனு கூறினளன்றோ! அவ்வாக்கு இதுகாலை பலிதமாகிவிட்டது. நான் எனது கிராமத்திற்குச் சென்றதும் இளவரசியிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இதுகாலை நடக்கும் நிகழ்ச்சியை விபரமாக தெரிவிக்கவேண்டும். ஆம். அவ்விதமே செய்வேன். நான் பரிகசித்ததற்கு இதுகாலை மன்னிப்புக் கேட்கவேண்டும்.

ஏ! சுந்தரவாலிபா! உனது அழகில் ஈடுபட்டு பெண் பேதையாகிய நான் காதல் என்னும் உணர்ச்சியினால் தாக்கப்பட்டு அல்லலுறுவதை நீ அறிவாயா? நித்திராதேவியினின்றும் விலகி என்னிடம்வந்து எனக்கு மனநிம்மதியை யளிக்கமாட்டாயோ! யௌவனவாலிபனாகிய நீ மணம் முடித்திருந்தாலும் என்னை உனது காதலியாக ஏற்றுக்கொள்வாயோ? நாமிருவரும் காதலன் காதலியைப்போன்று ஒன்றி வாழலாமோ! உமக்கு மணமுடிக்காதிருந்தால் என்னைப்போலும் ஓர் அதிர்ஷ்டசாலி இவ்வுலகிலிருக்க முடியாது. ஆஹா! முழங்கால் வரையும் நீண்டிருக்கும் உமது கரங்கள் எப்புனிதவதியைக் கட்டியணைக்கப் போகின்றனவோ! ஏன் என்னையே கட்டியணைக்கப்போகின்றன. "காதலி!" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது வாயால் கூறி என்னைக் கட்டியணைக்கப்போகும் நீர் ஏன் இவ்வாறு துயில் கொள்ளவேண்டும்? என் மனதை அப்படியே கொள்ளைகொண்டு விட்ட உம்மை நான் இப்போதே என் பிராணநாதராக ஏற்றுக்கொண்டேன். இதற்கு நீர் உடன் படுவீரோ? ஏன்? உடன்படத்தான் வேண்டும். ஐயோ! என்னுல் இருக்க முடியவில்லையே! அனலில் என்னை நிறுத்தியிருப்பதைப் போன்றல்லவா இருக்கிறது? நித்திராதேவி வசமிருந்தும் விலகி காதல் என்னும் சக்தியை என்மீது பாயும்படி பிறப்பித்த நீர் என்னை—என் அவாவைப் பூர்த்திசெய்யத் தயங்குவதேன்? நான் உம்மருகில் வந்த பின்தான் நித்திராதேவி உம்மைவிட்டு விலக நிச்சயிக்கிறுள் போலும்" என்றெல்லாம் நமது அசுவத்தினின்றும் கீழிறங்கி வாலிபர் பக்கலில் சென்ற இளஞ் சிறுமி எண்ணமிட்டுக்கொண்டு அவனது தலைப்பக்கத்தில் மெதுவாக அமர்ந்தாள்.

அமர்ந்தபெண் சயனித்திருந்த வாலிபரின் சிரசை மெதுவாக தன்னிருகரங்களாலும் தூக்கி மெல்லிய தனது தொடைகளின் மீது வைத்துக்கொண்டாள். அவனது உடலைத் தொட்டதும் அம்மங்கைக்கு முன்னையிலும் பன்மடங்கதிகமான உணர்ச்சி உண்டாகியது. "நீண்டு உருண்டு உன்கைகளால் கதவுபோல் விரிந்த உன்மார்பில் என்னை அணைத்துக்கொள். சரத்காலத்து விளங்கும் மதிபோன்ற உன்முகத்தை உயர்த்திச் சோகத்தால் தவிக்கும் என் உடம்பைக் குளிரச்செய்" என்று குயிலினுமினிய குரலால் கூறியவாறே அவனது கரங்களைப்பற்றி முத்தினுள். இதைக் கண்ணுற்று நித்திராதேவியும் மெதுவாக அவனிடமிருந்தும் சென்றுவிட்டாள். உடனே நமது வாலிபன் நித்திரை கலைந்தான். கண்களைத் திறந்ததும் தான் ஒரு அணங்கின் மடியில் படுத்திருந்ததைக் கண்டான். ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஒருங்கே எழுந்து அவனை பிரமிக்கும்படி செய்து விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. "இதென்ன? கானகத்தில் நான் தன்னந் தனியாக படுத்திருந்தேன். ஓர் இளம்மங்கை என்னருகில் அமர்ந்து முன்பின் அறிமுகமில்லாத என்னை தன்மடியின் மீது வைத்திருக்கக் காரணம் யாதாயிருக்கலாம்? இவள் களைப்பையில் உழும்போது தரையினின்றெழுந்த ஒளியாம் பெண்ணுருவம். இவள் எவ்விதம் இக்கானகத்தில் வந்து என்னை சந்தித்திருக்கக்கூடும்?" என்று தன்னுள் வினவிக்கொண்டான். இவ்வித நிலைமையில் அவளது முகத்தையே உற்று நோக்கினன். ஆவனது மனம் படீரென வெடிப்பதைப் போன்றிருக்கிறது. அவளது தோற்றம் அவனை பிரமிக்கச்செய்தது. கண்ணிமை கொட்டாமல் அவளையே நோக்கினன். களங்கமற்ற அவளது அழகிய வதனம் சந்திரனையும் வெட்கும்படி செய்யாநின்றது. அம்மடயிலாளின் கண்களின் பிரகாசமான ஒளி அவனது மனதை ஊடுருவிப் பாய்ந்தது. அந்தமின்னல் கொடியாளின் துல்லியமான விசாலமான மானைப்போன்று மருண்டு மருண்டு சுழலமிடும் கண்கள் அப்படியே அவனது மனதில் பதிந்து விட்டன. தான் எங்கேயோ இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இந்த மாறுதலான உணர்ச்சியை அவன் ஆயுளில் இந்த நிமிடம்வரையில் அனுபவித்ததேயில்லை. கண்டதுமில்லை. காதல், அன்பு, அந்தரங்கப்ரீதி, தெய்வீகமாக உதிக்கும் உவமை இல்லாத காதல் எப்படி இருக்கும் என்பதை இதுபரியந்தம் சற்றும் அறியாத கட்டைபோலிருந்த அவ்விருவரின் இருதயத்தில் திடீரென்று காதல் விதையொன்று விழுந்து முளைக்கத் தொடங்கி விட்டதென்றால் அதையவர்கள் இதற்கு முன் எவ்விதம் கண்டிருக்கக் கூடும்?

இருவரது கண்களும் ஒன்றாகச்சந்தித்து ஆனந்தமடைந்தன. ஒருவரது அழகை ஒருவர் பருகினர். நேரஞ் செல்லச் செல்ல அவனால் பொறுமையை பொறுக்க முடியவில்லை. அப்படியே எழுந்து அவளை ஆலிங்கனஞ் செய்துகொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்று எண்ணினன். மறுவினடியில் அவளது மடியினின்றெழுந்து அப்படியே வாரியணைத்து முத்தமாரி பொழிந்தான். அது நிமிஷம் வரையிலும் ஆண்களின் சேர்க்கையை வெறுத்த அம்மாது அவனது முத்தத்தைப் பெற்றதும் பேருவகை கொண்டாள். நாணமேலீட்டினல் கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவளது மதிமுகம் முன்னையிலும் பன்மடங்கதிகமான பிரகாசத்துடன் காக்ஷியளித்தது. மறுவினடியில் அவளை வாரிஎடுத்து தனது மடியில் வைத்துக்கொண்டு நமது வாலிபன் பேசலானன்.

வாலிபன்:—"பெண்ணே! நீயார்? எதற்காக இக்கானகத்திற்கு வந்தாய்? என்னைத்தூக்கி ஏன் உனது மிருதுவான தொடைகளின் மீது வைத்துக்கொண்டாய்? பெண்கள் திலகமே! முன் பின்னறியாத நான் உன்னிடத்து விபரீதமாக நடந்துவிட்டேன். அதையிட்டு மன்னித்துக்கொள். நான் எனது வாழ்நாளில் அனுபவித்தறியாத ஓர்சக்தி இதுகாலே உன்னைக்கண்டதும் என்னை வாட்ட ஆரம்பித்து விட்டது! இதற்கு நான் ஜவாப்தாரியல்ல. நீ ஏன் இவ்வளவு அழகாயிருக்கிறாய்? என்னை ஏன் நீ தீண்டினாய்? மதிமுகத்தினளே! பிரமதேவன் தனது முழுத்திறமையையும் உன்னை சிருஷ்டி செய்வதிலேயே காண்பித்திருக்கிறான். நான் எத்தனையோ அழகுள்ள மங்கையரைக் கூடிக் கலந்திருக்கிறேன். என்றும் உன்னிடத்து ஈடுபட்டதுபோன்று எனது மனம் ஒருபெண் மகளிடத்தும் ஈடுபடவில்லை. என்னைக் கூடிக் கலந்த பெண்கள் கேவலம் பணப்பேராசையினல் தூண்டப் பட்டவர்கள். நானும் அவர்களை இல்வாழ்க்கைத் துணைவிகளாகக் கருதியதே கிடையாது. எனது காம இச்சையை இழிந்த நோக்கத்தைத் தணிக்கத்தக்க ஓர் கருவியாகவே அவர்களைக் கருதி நடத்திவந்தேன். தெய்வீகத் தன்மையான காதலை உன் மூலமாகத்தான் நான் இப்போது கண்டேன்—உணர்ந்தேன். இன்று நான் அனுபவித்ததுபோன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டா இன்பத்தை நான் ஒருகாலத்திலும் அனுபவித்ததேயில்லை. காதல் மனோஹரீ! உன்னை நான் எனது இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்கிறேன்—ஏற்றுக் கொண்டேன். இதற்கு நீ சம்மதிக்கத்தான் வேண்டும் என்று எனது மனம் சாற்றுகின்றது. உனது அபிப்பிராயமென்ன?" என்று வினவினான்.

வாலிபன் கூறிய மொழிகள் அவளுக்கு மனநிம்மதியையுமன்றி மட்டற்ற மகிழ்ச்சியையுமளித்தன. எனினும் அவளால் பதில்கூற இயலவில்லை. என் செய்வாள் பாவம்! இன்பக்கடலில் மூழ்கி ஆனந்தமாய் நீந்திவிளையாடுகின்றாள். அவளால் என்னதான் பதில் கூறமுடியும்? இவள் மௌனஞ் சாதிப்பதைக்கண்ட வாலிபனுக்கு சந்தோஷமுண்டாகியது. மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியாகுமன்றோ! புலி பதுங்குகிறது பாய்ச்சலுக்கு அடையாளமென்ற பழமொழியைப் போன்று அவள் மௌனஞ் சாதிப்பது—விடை பகராமலிருப்பது பெண்களுக்கு இயற்கையாக யமைந்துள்ள நாணமிகுதியினாலென்றும், தன்னை அவள் காதலனாக ஏற்றுக்கொள்ள மனமில்லாவிடில் தான் அவளை கட்டியணைத்திருக்கும் போது பொறுமையுடன் இசைந்திருக்கக்கூடாதென்றும், இதினின்றும் தனது வேண்டுகோளுக்கு அவள் இணங்குவாள் என்பது திட்டமாக தெரிகிறதென்றும் நமது வாலிபன் தன்னுள் எண்ணிக்கொண்டான். என்றாலும் தன்னை அவள் காதலனாக—கணவராக ஏற்றுக்கொண்டதாய் அவள் வெளிப்படையாக அவனை தெரிவிக்கவேண்டுமென்று விரும்பி மீண்டும் பேசலானான். பனி நீர் நிறைந்த நீலத்தாமரை இதழ்போன்ற கண்களினின்று ஆனந்தக்கண்ணீர் பெய்த வண்ணம் அப்பெண்கள் திலகம் இவ்வாலிபன் என்ன பேசப் போகிறானென வெகு ஆர்வமுடன் இவனையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள்.

வாலிபன்:—"பெண்ணே! நீ மௌனஞ் சாதிப்பதின் நோக்கம்தானென்ன? நான் என்ன அழகில் தாழ்ந்தவனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்தில் குறைந்தவனு? நான் யாரென்பதை நீ அறிய மாட்டாய். அரசன் என்ற ஸ்தானத்தில் அமர்ந்திருப்பவன் யான். ஓர் மகத்தான பொறுப்பை வகித்திருக்கும் ஒருவன். மாதர் திலகமே! என் மனதைக்கொள்ளை கொண்ட உன்னை நான் எனது இல்வாழ்க்கைத்துணைவியாக்கி நான் உன்னுடன் இல்லறத்தை நடத்தவேண்டுமென்ற பேரவா இதுகாலை எனக்கு உதயமாகிவிட்டது! மதிமுகத்தினளே! என் இன்பக்கிளியாகிய உன்னிடம் நான் பொய் கூற விரும்பவில்லை. நான் ஒரு வழியில் மிகவும் தாழ்ந்தவன். மகா கொடியவன். பெண் வேட்டையாடும் பித்தன். கொலைக் கஞ்சாபாதகன். பொது ஜனங்களின் நீங்கா வெறுப்புக் கிலக்காகியவன். இவ்வித அக்கிரமங்களை நெஞ்சுபதருமல் இயற்றிய அரக்கனுகிய எனக்கு எல்லாம் வல்ல இறைவன் தகுந்த கூலியைக் கொடுத்துவிட்டான். பெண்ணே! நான் எனது சரித்திரத்தை சுருங்கக்கூறுகிறேன். கேள். எனது வாழ்க்கைச் சரிதையில் நான் எவ்வளவு கேவலமாக நடந்துகொண்டுவிட்டேன் என்பதை நீ அறிந்துகொள். எனது பெயர் தர்மபாலா. சிறுவயது முதற்கொண்டே நான் பேராசை என்ற கொடிய பேய்வசம் அகப்பட்டுக் கொண்டேன். தர்மம் என்ற வாக்கியத்தின் அர்த்தமென்ன என்பதைத் திட்டமாக அறியாத எனக்கு என் பெற்ருேர் வெகு அலங்காரமான தர்மபாலா என்ற பெயரை எனக்கு சூட்டிவிட்டனர். கொடிய விஷத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் நாகப்பாம்புக்கு நல்லபாம்பு என்று அழகாக அழைப்பதைப் போன்றிருக்கிறது எனது பெயரும். பேராசைப் பித்தனுகிய நான் என் தகப்பன் ஸ்தானத்தில் அதாவது ஆள்வார் தேசத்தின் 'அரசன் என்ற உயர்ந்த பதவியில் ஒய்யாரமாக நானே வீற்றிருக்க வேண்டுமென்று விரும்பினேன். ஈசனும் எனது விருப்பத்தை நிறைவேற்றுவான்வேண்டி எனது பெற்ருேரை எவ்விதமாகவோ மறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துவிட்டான். என் பெற்ருேர் இதுகாலை எங்கு வசித்து வருகின்றனரோ? அன்றி இவ்வுலக மாயையிலிருந்தும் விடுதலையாகிவிட்டனரோ? அறியேன். பெண்ணே! உனது மாமன் மாமிமார்கள் சாந்தமே உருவெடுத்து வந்தவர்கள். தர்மசீலர்கள், தியாக மூர்த்திகள், பொதுஜன அன்பிற்கு உரித்தாகியவர். அத்தகைய புனிதவான்கள் வயிற்றில் மகா பாதகனுகிய நான்—பசுவின் வயிற்றில் கொடிய விலங்கினங்களில் ஒன்ருகிய புலி பிறந்ததைப்போன்று—பிறந்துவிட்டேன். எனது பெற்ருேர் மாயமாய் மறைந்த அன்றே நான் அரசனுகிவிட்டேன். விதம்விதமான சட்டங்களையியற்றினேன். வரிகளை நியமித்தேன். எனது அரண்மனையில் நடனக்கச்சேரிகள் அனுதினமும் நடைபெறும். ஒரு நாள் தவறினுலும் நடனக் கச்சேரி மாத்திரம் தவருது. அவ்வூரிலுள்ள அழகுள்ள மங்கையர் யாவரையும் எனது காம இச்சையைத் தணிக்கத்தக்க ஓர் கருவியாகவே உபயோகிக்க வேண்டுமென்று விரும்பினேன். எனது இழிந்த நோக்கத்திற்கு உடன்படாத பல பெண்டிரை நான் சற்றும் இரக்கமின்றி தூக்கிலிட்டேன். பலரை சித்திரவதை செய்தேன். அநேகர் மகா கொடிய அரக்கனுகிய என் கையால் அவர்களைத் தொடக்கூடாதென்று தற்கொலை புரிந்துகொண்டனர். மானத்தையே ஆபரணமாகக்கொண்ட கற்பரசிகள் தங்களது உயிர்போவதை அன்புடன் முகமலர்ச்சியோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆஹா! அவர்களின் உயிர் மாய உடலினின்றும் பிரிந்து போகும்போது அவர்கள் கூறிய மொழிகள் இன்னும் எனது செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. "ஹா! கடவுளே! எமது அரசரின் பாவங்களை மன்னித்து அவரது விபரீத புத்தியை மாற்றி நல்வழிப்படுத்துவதற்காக நான் எனது உயிரை முகமலர்ச்சியுடன் தியாகஞ் செய்கிறேன்! தர்மபாலா மோக்ஷலோகமடைய கிருபைசெய்யும்!" என்று கூறியவாறே உலகவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினின்றும் விடுதலையாகி விட்டன. ஆஹா! என்ன தியாக உணர்ச்சி! அரசன் எவ்விதமோ அவ்விதமே குடிகளும் என்பது போன்று எனது பெற்றோரைப் போன்றே அவரது தேசமக்களும் தியாக மூர்த்திகள்.

எனது கொடுமையைக் கண்டித்த பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டிடப்பட்டன. எனது சகோதரன் ஒருவன் எனக்கு வேண்டிய புத்திமதிகளைக்கூறியும் நான் செவிசாய்க்காமலே போய்விட்டேன். எனக்கு நற்புத்தி புகட்டிய அவனை நான் எட்டி காலால் உதைத்துத் தள்ளினேன். கொடூரமான வார்த்தைகளைப் பிரயோகித்தேன். எவ்வும் அவன் என்மீது வெறுப்புக்கொள்ளவில்லை. எனது வெகுமதிப்பூசைகளை அன்புடன் ஏற்றுக்கொண்டு என்னுடனேயே வாழ்ந்து வந்தான். என்னை—எனது செய்கையைக் கண்டித்து அவன் பலகூட்டங்களில் பேசினுன். இதையறிந்த நான் அவனுக்கு தடையுத்தரவுகளைப் பிறப்பித்தேன். அதற்கும் மீறி நடந்தஅவனை நான் சிறையிலடைத்தேன். குதிரைச்சவுக்கால் அவனை அடித்தேன். ஹா! என் நெஞ்சம் எவ்வளவு கொடியது! அவனது பொறுமையை என்னென்பது! "அண்ணு! அக்கிரமத்திற்கும் ஓர் எல்லை வேண்டுமன்றோ! பெண்கள் உயிராகிய கற்புநிலையைக்காக்க தமது உயிரையும்கூட தியாகஞ்செய்த நமது குடும்பத்தில் துர்அதிர்ஷ்டவசமாக நீங்கள் பிறந்துவிட்டீர்கள்! நமது கண்ணியமான குடும்பத்திற்கு என்றும் நீங்காத இழுக்கைத் தேடிக்கொண்டதோடு நில்லாது ஜனங்களையும் வதைக்கின்றீர்கள்! சுறுங்கக் கூறுமிடத்து நமது நாட்டிற்கே தாங்கள் ஓர் கூற்றுவஞக வந்திருக்கிறீர்கள். இவ்வித பயங்கரமான அட்டூழியங்களை நெஞ்சுபதராமல் இயற்றும் ஓர் அரசன்—குடிஜனங்களின் நீங்கா வெறுப்பிற்கு இலக்கான ஓர் மன்னன் நீண்டகாலம் இராஜ்ஜியபரிபாலனம் செய்ய முடியாதென்பதை மாத்திரம் நான் தங்களுக்கு திட்ட

மாக அறிவிக்கின்றேன்." என்றுகூறி, எனது சவுக்கடியைப்பெற்ற எனது சகோதரன் என் முன் விழுந்து நமஸ்கரிப்பான். அப்போதாவது என் கன்னெஞ்சு இளகக்கூடாதோ! மீண்டும் அவனை உதைப்பதுதான் என் ஜீவகாருண்யம். அந்தோ! அக்கொடுமைகளையெல்லாம் இப்போது எண்ணும்போது என்மனம் படீரென வெடிப்பதைப்போன்றிருக்கிறது. (இவ்வாறு கூறிக்கொண்டிருக்கையில் தர்மபாலா என்ற நமது வாலிபனின் கண்களினின்றும் நீர்ததும்பி கீழ்நோக்கி வடிகின்றது. அப்போது அவனுடைய மடியில் அமர்ந்திருக்கும் இளமங்கை தனது நீலநிறப் பட்டாடையால் அவனது கண்ணீரைத் துடைக்கிருள்) எனது அட்டூழியங்களைக்கண்டு மனம் சகிக்காத எனதருமை சகோதரனும் எங்கேயோ மாயமாய் மறைந்துபோய்விட்டான். அவன் மறைந்தவுடன் நான் ஆனந்தக்கூத்தாடினேன். எனது ஜென்மப்பகைவன் தொலைந்தான் என்று மகிழ்ந்தேன். அதற்குப் பின்பு எனது நித்திய செலவினங்கள் கூடிவிட்டன. சில ஆண்டுகளுக்குள் பொக்கிஷம் முழுவதும் காலியாகிவிட்டது. வரவு செலவு கணக்கை சரிக்கட்ட முடியாமற் போய்விட்டது. விதம் விதமான வரிகளையியற்றியும் கணக்கை நேர்செய்ய முடியாமல் போய்விட்டது. வரிப்பளுவினுல் குடியானவர்கள் அனைவரும் தாக்கப்பட்டனர். ஏனையோரும் கூக்குரலிட்டனர். கால் வயிற்றுக்குக்கூட வழியில்லாது திண்டாடினர். வரிகொடா இயக்கம் தலைவிரித்தாடத் தொடங்கியது. எனது செய்கையைக் கண்டித்து பற்பலவிதமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு எனக்கு அனுப்பப்பட்டன. என்றுலும் என் செலவு தொகை மாத்திரம் சிறிதுகூடக் குறைந்தபாடில்லை. எனது கொடுங்கோன்மைக்கஞ்சி பலர் எனது நாட்டைவிட்டு வெளியேறினர்.

இவ்வித அலங்கோலமான நிலைமையிலிருந்த நான் அந்நாட்டை இன்னும் சிலமாதங்களும்கூட பரிபாலனஞ்செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதென்பதைக் கண்டேன். நடுநிசியில் நான் மாறு வேடத்துடன் வெளிப்பட்டேன். நான் செய்தவை யாவும் கொடுமை அநியாயம் என்பதை நான் உணர இவ்வளவு நீண்டநாள் சென்றது. மடமயிலே! எனது வாழ்க்கையின் கோலத்தை யறிந்தாயோ! "கையிலே ஜெபமாலை கட்கத்திலே கன்னக்கோல்" என்ற பழமொழிப்பிரகாரம் பொது ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி உழைக்கவேண்டிய—இராஜன் என்ற பதவியிலிருந்துகொண்டு அவர்களை நேர் விரோதமாக வதைத்தேன். காதலீ! என்னைப் பார்த்தவுடன் நான் உயர்குடியிற் பிறந்தவனென்றும் நீ நினைத்திருக்கக் கூடும். அது உண்மையே, என்றாலும் நான் அந்த ஒழுக்கத்தின் படி நடக்கவில்லையன்றோ! மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது ஆன்றோர் பழமொழி. அதைப் போன்று உயர்குடியில் பிறந்தவரெல்லாம் மேன்மையான குணங்களையுடையவர்களல்ல. நான் செய்த பழிபாதகங்கள் யாவும் இப்போது எனது மனதில் சினிமாப்படத்தைப் போன்று ஒவ்வொன்றாகத் தோன்றி என்னை வதைக்கின்றது. இவ்வித துர்நடத்தையுடைய என்னை நீ வாழ்க்கைத் துணைவனாக ஏற்றுக்கொள்கிறாயா? பெண்ணே! எனக்காக—எனக்கு அஞ்சி நீ யாதொன்றையும் கூறவேண்டுவதில்லை. உனது எதிர்காலம் உன் விவாகத்தையே பொறுத்திருக்கின்றது அதில் தலையிட எனக்கு எவ்விதமான உரிமையும் கிடையாதென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். உனது மனதிற்கு முற்றிலும் மாறான ஒருவனை மணந்து அதன் மூலமாக உலக இன்பத்தை அனுபவிக்க முடியாதென்பதை முதற் கண் உனக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன். காதல் என்னும் உணர்ச்சியை பலாத்காரத்தினாலேயோ அன்றி வற்புறுத்தவினாலேயோ ஒருவருடைய மனதில் புகுத்துதல் முடியாத காரியம். தானாகவே பழுத்த பழம் எவ்விதமிருக்கும்? காயாகவுள்ளதை ஊத்தம்போட்டும் பிறவழியாகவும் பழுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த பழம் எப்படி இருக்கும்? ஆதலால் நீ உனது அபிப்பிராயத்தை திர்க்கலோசனை செய்து தாராளமாக வெளியிடலாம்.'' என்று தர்மபாலா கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

நமது வாலிபன் கூறியவற்றையெல்லாம் பொறுமையோடு வெகு கவனமாக நமது சிறுமி கேட்டுக்கொண்டிருந்தாள். அவளது மனம் சிறிதும் மாற்றமடையவில்லை. இதற்குமாறாக அவன்மீது கொண்டுள்ள அன்பு நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ந்துகொண்டே யிருந்தது. சிறிதுநேரஞ் சென்றபின் மெதுவான குரலில் பேசலானாள்.

சிறுமி:—"தர்மபாலா! தாங்கள் கூறியவற்றை நான் வெகு கவனத்துடன் தான் கேட்டுக்கொண்டிருந்தேன். தாங்கள் எவ்வளவு கொடியவராக தென்பட்டபோதிலும்—நடந்துகொண்டபோதிலும் எனதுமனதை முற்றிலும் கொள்ளை கொண்ட தங்களையே நான் என் பிராணநாதராக ஏற்றுக் கொள்வேன். தாங்கள் இனிமேல் அவ்வித அட்டூழியங்களை—பாவங்களை இயற்ற தங்களுடைய ஆருயிர்க்காதலி ஒருநாளும் இடங்கொடாள். தங்களுக்கு அவள் நற்புத்தியைப் புகட்டி நன்னிலைக்குக் கொண்டுவந்து விடுவாள். பிறரது மனதை எளிதில் திருப்பிவிடக்கூடிய—மாற்றக்கூடிய ஓர் அபூர்வ சக்தி தங்களது காதலியிடம் அமைந்துளது. ஏதோ சிறுவயது முதற்கொண்டே துஷ்டர்களின் சகவாசத்தினால் ஏதேதோ செய்துவிட்டீர்கள். இறந்தகால நடவடிக்கைகளைப்பற்றி வருந்துவதால் பயனில்லை. கவலையை விட்டொழியுங்கள். காதலா! தாங்கள் எனது கிராமத்திற்கு எழுந்தருளவேண்டும்'' என்று சிறுமி கொஞ்சும் கிளியைப்போன்று கேட்டுக்கொண்டாள்.

இவளது கூற்று தர்மபாலாவை ஆச்சரியப்படும்படி செய்தது. அவள் இனியகுரலில் கூறிய தேறுதல் அவனுக்கு சங்கீதத்தைப் போன்றிருந்தது. தன்னைச் சந்தித்த இப் பெண்கள் நாயகம் தனக்கு—தன் வரலாற்றை யறிந்தும்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குக்காதலியாகச் சம்மதித்துவிட்டது அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை யளித்தது. உடனே அவன் அவளது தோளில் ஒரு கையும் தொடையில் மறுகையுமாகத் தூக்கித் தன்மார்போடு அணைத்து அவளது முகத்தில் முத்தமாரி பொழிந்து அதரபானமும் பருகினான். சற்றும் எதிர் பாராதவிதமாக தனக்கு ஏற்பட்ட உணர்ச்சியையும் வாலிப னிடத்தில் நடந்துகொண்ட விதமும் அவன் தன்னைப் படுத்தும் கோலத்தையுங்கண்டு ஆனந்தமெய்திய நமது சிறுமி புன்முறுவல் பூத்த முகத்துடன் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அவ்வளவுதான் அவளால் அந்நிமிஷம் செய்யமுடிந்தது. வேறொன்றும் பேசுவதற்கு நாவெழ மறுத்துவிட்டது. பின்பு நமது தர்மபாலா பேசலானான்.

தர்ம:—தெவிட்டாத இன்பப் பொக்கிஷமாகிய உன்னை என்னிடத்து சேர்த்த எல்லாம் வல்ல இறைவனை நான் நித்தியமும் துதிக்கவேண்டும். உலக ஜனங்களின் பாவங் களை நீக்குவதற்காக இயேசுகிறிஸ்து இவ்வுலகில் கன்னிமரி யம்மாளின் வயிற்றில் உற்பவித்ததைப் போன்று நீயும் எனக்கு சன்மார்க்கத்தைப் போதிக்க ஜெகதீசனால் அனுப் பப்பட்டிருக்கிறாய். பெண்ணே! நான் நீ கூறுகின்றபடியே நடக்கின்றேன். எழுந்திரு. உனது கிராமத்திற்கு செல் வோம் வா'' என்று தர்மபாலா கூறினான். பின் இருவரும் எழுந்து குதிரையின்மீது சவாரிசெய்துகொண்டு மனோஹர புரம் என்ற அதியற்புதமான கிராமத்திற்கு வந்தனர்.

அக்கிராமத்தின் இயற்கை வனப்பைக்கண்டு தர்மபாலா ஆச்சரியமடைந்தான். என்றாலும் அவ்வூர் மனிதசஞ்சார மில்லாத இச்சிங்கவனத்தில் அமைக்கப்பட்டிருக்கவேண் டியதின் காரணம் யாது? அதன் அரசன் யாவன்? அவ்வூரின் பெயரென்ன? என்பனபோன்ற கேள்விகளை அவன் அப்பெண்மணியிடத்தில் கேட்கவேயில்லை. ஒரு நாளும் அனுபவித்தறியாத இன்பத்தை அன்று இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தனர். தெவிட்டாத இன்பத்தை அனுபவித்து இனிமையாகச் சம்பாஷணைசெய்துகொண்டு இருக்கும் தர்மபாலாவின் மனதில் அப்பெண்மகளின் அழகு உருவமே குடிகொண்டிருந்ததால் பிற எண்ணங்கள் அவன் மனதில் பிரவேசிக்க சிறிதும் இடமில்லை. இப்பெண் யாரென்பதை யறிய நமது வாசக நேயர்கள் விருப்புவார்கள். இப்பெண் நமது ஞானியாகிய ஜெயசீலரைப் பின்தொடர்ந்த பர்வதவர்த்தினி என்ற பெண்ணேயாவள். தன் மனதைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை இழந்த அந்நிமிஷமே பர்வதவர்த்தினி கன்னி கழிந்தாள். அவள்தான் என்னசெய்வாள்? தெய்வீகத் தன்மையான காதல் கொழுந்துவிட்டெறிகின்றது. அவளே அறியாமலே அன்று அவள் ஓர் ஆண் மகனிடம் விபரீதமாக நடந்துகொண்டாள். அதன் பலனை இப்போது அனுபவித்துவிட்டாள். நள்ளிரவில் திடீரென ஒரு விளக்கை ஏற்றிவிட்டால் இருளை நாம் எங்கேயாவது சென்று ஒளித்துக்கொள்ளச் சொல்லவும் வேண்டுமா? தானகவே போய் விடுமன்றோ!

## அரக்கனின் பூவுலக வாழ்வு முடிவு.

இது இவ்வாறிருக்க நாம் இனி மனோஹரனைப்பற்றி ஆராய்வோம். ஞானி கூறிய விதமாகவே நமது இளவல் மலையினுள்சென்று பார்த்தான். அங்கு முன் ஞானி கூறியபடியே ஒருவன் நீங்கலாக மற்றவர்கள் விலங்கிடப்பட்டிருந்தனர். ஒருவன் விலங்கிடப்படவில்லையாதலால் அவன் ஏணிமூலமாக ஏறி தப்பி ஓடிவிடலாமென்று நமது நண்பர்கள் நினைத்துவிடக்கூடாது. இவ்விதம் நடைபெற்றாலும் நடைபெறக்கூடுமென்று எண்ணியே அவ்வரக்கன் மலையின் மேலுள்ள துவாரத்தில் மாட்டப்பட்டிருந்த பலகையில், உள்ளேயிருந்து தட்டினல் பலகை நீங்காதவாறு ஓர் கம்பியை மாட்டியிருந்தான். நமது மனோஹரன் அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பியை நீக்கிவிட்டுத்தான் உள் நுழைந்தான். இவன் உள்ளே வருவதைக்கண்ட ஜனங்கள் திடுக்கிட்டனர். அரக்கனே வருவதாக எண்ணிக்கொண்டனர். விலங்கிடப்பட்டிருந்த மனிதன் முகமலர்ச்சியுடன் அங்குபோடப்பட்டிருந்த ஓர் நாற்காலியின்முன் வந்து நின்றான். மற்றவர்களும் சிறிது திகிலடைந்தனர். இயற்கையிலேயே பலவீனமுற்றிருந்த அநேகர் மூர்ச்சையாகி வீழ்ந்தனர். எப்போதும் இருளிலேயே அவர்கள் அடைக்கப்பட்டிருந்ததால் எல்லோரும் ஸ்நானஞ்செய்து பல மாதங்கள் கடந்துவிட்டதால் அங்கு ஒருவித தூர்நாற்றம் வீசியது. மலஜலங்கழிப்பதும் அக்குகையில்தான். அதன் நாற்றமும் நெஞ்சையடைத்தது மறுநாள் பலியாகவேண்டிய மனிதனே அந்நரகலே வெளியில் கொண்டுபோய் அப்புறப்படுத்திவிட்டு மீண்டும் அந்த வாளியை கொண்டுவந்து உள்ளே சேர்ப்பிக்கவேண்டும். அவன் வெளியில் வரும்போதும் அரக்கன் கூடவே வருவான், ஆதலால் அவன் தப்பிவிடவும் முடியாது.

அவர்களுக்கு போஜனம் மாமிச வர்க்கமே முக்கியம். மாமிசம் உட்கொள்ள மனமில்லாதவர்கள் கனிவகைகளை உட்கொள்ளலாம். அதுவும் சிறிதுதான் கொடுக்கப்படும். பெரிய ஒரு பீப்பா நிறைய ஜலம் அந்த அரக்கனே கொண்டு வருவான். அதையே அவர்கள் பருகவேண்டும். மழைக்காலங்களில் சிறிய பள்ளங்களிலும் பெரிய குழிகளிலும் கெட்டியிருக்கும்—தங்கியிருக்கும் ஜலமே நமது அரக்கனால் கொண்டுவரப்படுவது. அது ஓர்வித வெண்மையும் மஞ்சளும் கலந்த நிறமாயிருக்கும். இவ்வித விசேஷ சௌகரியங்களைக் கொண்டுள்ள அவர்களில் அநேகர் அரக்கனது போஜனத்திற்கு தாங்களே முந்திக்கொள்ளவேண்டுமென்று விரும்பினர். அந்தோ! அவர்களின் பரிதாபகரமான காக்ஷியை எவ்விதம் கண்கொண்டு காண்பது! என்ன கொடுமைகளை இயற்றியதின் பயனோ தாங்கள் இவ்வித கொடுமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகியது! என்று ஒவ்வொருவரும் வருந்தியவாறு கருணை வள்ளலான கடவுளை துதித்தவண்ணமாக பொழுதைப் போக்கி தமது தண்டனையை எதிர்நோக்கிக் கொண்டிருந் தனர். தாம் எவ்விதத்திலும் அக்குகையினின்றும் வெளி யேறவே முடியாதென்று தீர்மானித்துக்கொண்டனர். நம்பியவர்க்கபயம் நயந்தளிக்கும் சர்வேஸ்வரன் தமது விஷயத் தில் மாத்திரம் இவ்விதம் நடந்துகொண்டதை எண்ணி எண்ணி வருந்திக்கொண்டனர்.

அங்கு விலங்கிடப்பட்டு தவித்துக் கொண்டிருக்கும் ஜனங்களின் அலங்கோலத்தைக்கண்ட, தயாள குணசீல னாகிய நமது மனோஹரன் எவ்வித நிலைமையிலிருந்திருப் பான் என்பதை நாம் வரையவும் வேண்டுமா? அவனது மனம் படீரென வெடிப்பதைப் போன்றிருக்கிறது. துக் கம் நெஞ்சையடைக்கின்றது. சரேலென அவர்களின் முன் போய் நின்றான். தன்னைக் கண்டதும் தான் அரக்கனென் றெண்ணி அவர்கள் படும்பாட்டை அதி புத்திசாலியான மனோஹரன் தெரிந்துகொண்டான். "சகோதரர்களே! பெரியோர்களே! நான் அரக்கனென்று எண்ணவேண் டாம். நான் உங்களுக்கு என்னாலான உதவியைச் செய்ய வே வந்துள்ளேன். ஆதலால் நீங்கள் அச்சத்தை விட்டு விடுங்கள். இன்னும் சில மணி நேரங்களுக்குள் உங்களுக்கு நேரிடப்போகும் விடுதலையை எண்ணி இப்போது சந் தோஷமடையுங்கள். உங்களுக்கு ஈசனால் உதவியளிக்க கோரப்பட்டிருக்கிறது. நான் அவரது கட்டளையை நிறை வேற்றவே இங்கு வந்திருக்கிறேன்." என்று தேறுதல் கூறினான்.

சற்றும் எதிர்பாராத விதமாக ஓர் இளைஞன் தமக்கு தேறுதல் கூறுவதைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர். அவ னது அன்புததும்பும் வார்த்தைகள் அவர்களுக்கு போதிய நிம்மதியை யளிக்கவில்லை. என்றாலும் அவனது வீரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதும்பும் சொற்களை பின்பு நம்பிக்கொண்டனர். தமக்கு நேரிடப்போகும் விடுதலையை அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். வெகுதாராளமாக ஆகாயக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டனர். தமது குடும்ப ஜனங்களைக் கண்டுகொள்ளப் போவதைஎண்ணி ஆனந்த பாஷ்பத்தைச் சொரிந்தனர். தமது வேண்டுகோளுக் கிணங்கி இறைவன், தமக்கு விடுதலை கொடுக்குமாறு அவ்விளைஞனை அனுப்பியிருக்கக் கூடுமென்றே அவர்கள் நம்பியிருந்தாலும் ஒருவழியில் அவர்களுக்கு சிறிது அதைரியம் உண்டாகியது. ஒரு மனிதனை அப்படியே எடுத்து ஒரேயடியாக புசித்துவிட்டு ஏப்பம்விடும் ஒருகொடிய அரக்கனுடன், இளம் வயதான சிறுவன் ஒருவனால் யாதொரு ஆயுதமுமின்றி அவனுடன் எதிர்த்தால் எவ்விதம் ஜெயம்பெற முடியும்? ஒருவேளை அவனும் நம்மைப்போன்று விலங்கிடப்பட்டால் என் செய்வது? தங்களை விடுவிக்க வேண்டுமென்ற காருண்ய எண்ணத்தோடு தன் உயிரையும் கூட திரணமாத்திரமாக எண்ணிவந்துள்ள சிறுபாலகனுக்கு அவ்வரக்கனால் இறுதிகாணப் பட்டுவிட்டால் என்செய்வது? என்பனபோன்ற பலவினாக்கள் அவர்களது மனதில் எழலாயிற்று. உடனே அவர்களது கண்களில் நீர்ததும்பிற்று. கல்லெல்லாம் காற்றாலடித்துக் கொண்டு போகப்படும்போது இலவம்பஞ்சு எம்மாத்திரம் என்ற முதுமொழியைப்போன்று தமது கூட்டத்திலிருக்கும் மகா பராக்கிரமசாலிகள் கூட அந்த அரக்கனுடன் போர்செய்து வெல்லமுடியாமலிருக்கும்பொழுது இவ்விளவனுக்கு அவனுடன் போர்செய்து வெல்லும் ஆற்றல் இருக்கின்றதா? என்ற ஒரு கேள்விமாத்திரம் அவர்கள் கட்டிய பெரிய—விசாலமான ஆகாயக்கோட்டையை தகர்த்தெறிந்து விட்டது.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் என்பதற்கிணங்க அக்கூட்டத்தினரின் முக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்திலிருந்தும் அவர்களது மனப்பான்மையை ஒரு வாறு மனோஹரன் அறிந்துகொண்டான். கலகலவென்று நகைத்தவாறு அவர்களை நோக்கி வீரமும் அன்பும் ததும்பும் சொற்களில் சில சொல்லலானான். "ஐயா! நீங்களனைவரும் சிறுவனாகிய என்னால் இந்த அரக்கனைக் கொல்லமுடியா தென்று நினைக்கின்றீர்கள் போலும்! அது இயல்பே. உங்களது ஸ்தானத்தில் நான் இருப்பினும் அவ்விதமே எண்ணக் கூடும். ஆனால் என்விஷயத்தில் நீங்கள் சிறிதும் கிலேசங் கொள்ளவேண்டாம். வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு என்பதை நீங்கள் மறந்தாபோய் விட்டீர்கள். அவ்வரக்கனது உயிர் இருக்கும் ஸ்தலத்தை ஓர் ஞானி எனக்கு அறிவித்திருக்கிறார். ஆதலால் கிலேசத்தை ஒழியுங்கள். ஒரு கொடியில் அவனது உயிரை வாங்கிவிடலாம்' அவ்விதமான தைரியத்தை சர்வலோக சரண்யன் எனக்கு அளித்திருக்கிறான், இன்னும் சிறிதுநேரம் பொறுமையோடிருங்கள்." என்று நமது மனோஹரன் அவர்களுக்கு சமாதானங் கூறினான்.

இவ்வாறு மனோஹரன் கூறியதும் அவர்களுக்கு மனோதைரியமுண்டாகிவிட்டது. இதுகாலை அவர்களுக்கு ஓர் சம்பவம் நினைவிற்குவந்து மேற்காட்டியதை உறுதிப்படுத்தியது. அதாவது:—மனிதரை இரட்சிக்கும்பொருட்டு கிறிஸ்துபெருமான் மனுஷ அவதாரம் எடுத்து பாலகனாகப் பிறந்திருக்கிறார் என்ற சுப செய்தியை தேவதூதர்கள் மண்ணுலகோருக்கு அறிவிக்க விரும்பினர். பெத்லேஹம் ஊருக்கு அப்பாலுள்ள மைதானத்தில் தங்களுடைய ஆட்டு மந்தைகளுடன் நித்திரை செய்துகொண்டிருந்த ஏழை மேய்ப்பாருக்கு தேவதூதர்கள் காட்சியளித்தனர். பாமர ஜனங்களாகிய மேய்ப்பர்கள் திடுக்கிட்டு எழுந்து பீதியடைந்திருந்த காலத்தில் சம்மனசுக்கள் அவர்களுக்கு தேறுதல் அளித்து, "பயப்படாதிருங்கள். மனிதருக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வந்திருக்கிறேரும். உலக இரக்ஷகராகிய யேசுகிறிஸ்து நாதர் பரஞக தாவீதின் ஊரிலேயே பிறந்திருக்கிறுர். திருக் குழந்தை கந்தைத்துணிகளால் போர்க்கப்பட்டு மாட்டுத் தொழுவத்தில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்” என்று கூறி மறைந்தனர். இம்மகிழ்ச்சிக்குரிய செய்தியைக் கேட்டதும் மேய்ப்பர்கள் சந்தோஷத்தினுல் மனம் பூரித்தனர். என்பதே நமது நண்பர்களது நினைவிற்கு வந்த செய்தி. மேற்காட்டிய நிகழ்ச்சிக்கும் தமது நிலைமைக்கும் அநேகமாக ஒன்றுபோலவே இருந்தது. தேவதூதர்கள் காக்ஷியளிக் கும்போது மேய்ப்பர்கள் பீதியடைந்ததுபோன்று தாம் முதலில் பயந்ததும், பின்பு சம்மனசுக்கள்தேறுதல் கூறிய தைப்போன்று இளைஞன் தேறுதல் கூறுவதும் அநேகமாக ஒத்திருந்தது அவர்களது தைரியத்தை பன்மடங்கு அதிகரி க்கச்செய்தது.

நாம் சற்று முன்பு தெரிவித்தவண்ணம் பாலகன் மனேஹரன் அம்மனிதரை நோக்கி தேறுதல் மொழிக்கூறிக் கொண்டிருக்கையில் அக்கூட்டத்தின் மத்தியிலிருந்த ஓர் மாது மெதுவாகக் குதித்துக்குதித்து ஓடிவந்து ஆர்வத் துடன் நமது இளவலைக் கட்டியணைத்துக்கொண்டு, “மனே ஹரா! நீ வந்துவிட்டாயா? என் கண்ணே! உன்னை நாங்கள் இதுநாள்பரியந்தம் பார்க்காமலிருந்தது எங்களின் உயிரையே பிரிந்து இருப்பதைப்போன்றிருந்தது. அப்பா! குழந்தாய்! நீயா எங்களை விடுவிக்க வந்துவிட்டாய். மனே ஹரா! நல்ல க்ஷேமந்தானே! நமது நாட்டு மக்கள் யாவரும் க்ஷேமந்தானே! குழந்தாய்! அப்பா மகனே! நாங்கள் இவ் வரக்கனிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேரும் என்பதை எவ்வாறு அறிந்துகொண்டாய்! கண்மணி! உன்னைப் பெற்ற தின் பலனை நான் இன்றுதான் கிடைக்கப்பெற்றேன். உனது தந்தையவர்களும் என்னுடனேயே இருக்கிறுர்கள். உன்னைப் பெற நாங்கள் முன்காலத்தில் எவ்வளவு மகத்தான தியாகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை செய்தோமோ. அப்பா! பாலகா! என்னை விட்டுப் பிரிய சற்றும் மனம் சகியாத நீ எவ்வாறு இவ்வளவு காலம் இருந்துவிட்டாய்? அண்ணாவை எங்கே? பாலகா! எங்களுக்கு நீ என்றும் நீங்காத புகழை உண்டாக்கிவிட்டாய். செய்தற்கரிய பெருங்காரியத்தைச்செய்து நீ எங்கள் நன்மதிப்பைப் பெற முற்பட்டுவிட்டாய். கருணை வள்ளலான கடவுள் உனக்கு சகல பாக்கியங்களையும் அளிப்பாராக!" என்று பலவாருகக் கூறி ஆனந்தக்கண்ணீர் வடித்தாள்.

தன்னைப்பெற்ற அன்னையை—நீண்ட நாள் தன்னை விட்டுப் பிரிந்திருந்த மாதாவைக்கண்டதும் மனோஹரனுக்கு உண்டான மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமா? அவன் தான் தெய்வலோகத்திலிருப்பதாகவே எண்ணினன். தனது தாயின் அணைப்பிலிருந்தும் விடுவித்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஆனந்த சாகரத்திலாழ்ந்திருந்த அவனுல் தன் மாதா மனங்குளிர விடையளிக்கும் ஆற்றல் அந்நிமிஷம் அவனிடத்திலில்லை. தனது மகிழ்ச்சியை தனது முகத்தின் மூலமாக தெரிவித்துக்கொண்டான். இவ்வித நிலைமையில் அவனது தந்தையும் அவனைக் கட்டியணைத்துக்கொண்டார். அவரும் புகழ்மாலையை அள்ளிச்சொரிந்தார். ஏககாலத்தில் தனது பெற்றோரைக் கண்டதும் அவர்களுடைய புகழ் மாலையைப்பெற்றதும் மனோஹரனது வாழ்க்கைச் சரிதையில் முக்கியமான—எல்லையற்ற மகிழ்ச்சியை நல்கக்கூடிய ஓர் ஸ்தானத்தைப்பெற்றுவிட்டது அவனுக்கு ஓர் அதிசயமாகவேயிருந்தது. சிறிது நேரஞ்சென்றபின் தனது பெற்றோரினதும் மற்றவைவரினதும் வேண்டுகோளுக் கிணங்கித்தான் இந்த இரகசியத்தை அறிந்த விவரத்தை சுருங்கக்கூறி விளங்க வைத்தான். தனது வரலாற்றைக்கூறுகையில் அவன் புவனேசுவரி என்ற தனது காதலியையும் குறிப்பிட்டதைக் கேட்ட புவனேசுவரியின் பெற்றோரும் அக்கூட்டத்தினின்றும் குதித்துக்குதித்து வந்து தமது மருமகனைக் கட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். தியாக புருஷனொருவன் தமக்கு மருமகனாகக் கிடைத்த பாக்கியத்தை அவர்கள் கொண்டாடினார்கள். மற்றவர்களும் இவர்களுடன் சேர்ந்துகொண்டு ஆனந்தக் கூத்தாடினர். சிவபூசையில் கரடி திடீரென புகுந்துவிட்டதைப்போன்று நமது நண்பர்களும் மனோஹரனும் ஆனந்தக் கடலில் மூழ்கி விளையாடும்போது அரக்கன் வந்துவிட்டான்! திடீரென உயரே வெளிச்சம் உண்டாக்கியதைக்கண்ட அம் மனிதர்கள் மேலே நோக்க, மதயானையைப்போன்றிருந்த அரக்கன் ஏணிவழியாக இறங்குவதைக் கண்டனர். உடனே மனோஹரனிடம் செய்தியை அறிவிக்க அவன் "சரி, நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் எந்நாளும் இருப்பதைப் போன்றிருங்கள்" என்று கூறினான். அவர்களும் அவ்விதமே இருக்கவும் நமது மனோஹரன் ஓரிடத்தில் மறைந்துகொண்டான். தான் பிடித்திருந்த தீவட்டியை ஒருவாறு அணைத்துவிட்டான் நமது புத்திசாலியான மனோஹரன். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

மலையின் உச்சியில் மாட்டப்பட்டிருந்த கம்பி இன்று நீக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் அரக்கன் திடுக்கிட்டான். கண்கள் கோவைப்பழம் போன்று சிவந்தது. பல்லை நெறுநெறவென்று கடித்தான். கோபாக்கினி சுவாலையை வீசி எறிந்தான். இரத்தம் துடிதுடிக்கின்றது. "இதில் இந்தக் கம்பி இன்று இயற்கைக்கு மாறாக இவ்விதம் நீங்கி இருக்க வேண்டியதின் காரணம் யாதாயிருக்கலாம்? இது நீங்கி இருப்பதால் எவரேனும் இக்குகையிலுள்ளவர்கள் இதை உடைத்துவிட்டு தப்பியிருக்கவும் கூடாதோ? இல்லாவிடில் வெளியிலிருந்தும் எவரேனும் இம்மலைக்கு வந்திருக்கவும் கூடுமா? அவ்விதம் இருந்தால் எனது உத்தரவின்றி பிரவேசித்த அந்தப்பயலை நான் ஒரே வாயில் பக்ஷித்துவிடுகிறேன். நான் யாரென்பதை அவன் அறியான்போலும். நல்லது நான் உட்சென்று பார்க்கிறேன்..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விதமுமிருக்கமுடியாது. பிறிதொருவர் இம்மலைக்கு எளிதில் வரமுடியாது. வந்தாலும் இதன் மேலே ஏறமுடியாது. அவ்விதமும் ஏறக்கூடிய ஓர் மானிடன் இவ்வுலகிலிருக்கிறனே? இருக்கமுடியாதன்றோ! நான்தான் ஒருவேளை இன்று கம்பியை மாட்டாமல் போயிருக்கவேண்டும்.'' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டு படியின் வழியாக கீழே இறங்கினன்.

உள்ளே தீவட்டியின் வெளிச்சம் தெரிந்ததும் சிறிது ஐயமுற்றான். என்றாலும் பின்பு சமாதானப்படுத்திக் கொண்டான். "தான் வெய்யிலில் அலைந்து திரிந்து களைப்புடன் வந்திருப்பதால் தான் நான் கீழேபார்த்ததும் மஞ்சள் நிறத்தைப்போன்று தோன்றுகிறது. இங்கு யார் தீவட்டியை கொளுத்தப்போகிறார்கள். அவ்விதம் செய்ய அவர்களுக்கு உரிமையில்லையன்றோ!" என்று அவன் தீர்மானித்தவாறே கீழிறங்கி தனது சாய்மான நாற்காலியில் அமர்ந்தான். மதயானை படுத்ததைப்போன்று ஓர் பெருமூச்சு விட்டவாறு சாய்ந்தான்.

இவைகளையெல்லாம் பூனைபோல் பதுங்கிக்கொண்டிருக்கும் தியாகமூர்த்தி மனோஹரன் கண்ணிமைகொட்டாமல் கவனித்துக்கொண்டிருக்கிறன். அவனுக்கு ஆச்சரியமும், திகிலும், சினமும் ஒருங்கே உண்டாகி அவனை வாட்டியது. அவனது பயங்கரமான தோற்றம் நமது இளவலை சிறிது கிலேசம் உண்டாகும்படி செய்துவிட்டது. என்றாலும் தைரியலெக்ஷ்மி அவனிடம் அடைக்கலம் புகுந்து ஊக்கத்தைப் பிறப்பித்தாள். தனது பெற்றோரையும் மாமன் மாமியாரையும் காண்பதற்கு காரணகர்த்தாவாகிய ஞானி ஜெயசீலரை தன்னுள் துதித்துக்கொண்டான். "பாலகா! நீசற்றும் அஞ்சாதே! ஊக்கமது கைவிடேல். தியாக பாலா! நான் கூறியபடி நீ செய்து ஜெயபேரிகையை வானமளாவமுழக்கிக்கொண்டு உனது பெற்றோருட்னும் எனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோருடனும் நமது கிராமம் வந்துசேர்வாயாக!" என்று நமது ஞானி தேறுதல்கூறி ஆசீர்வதிப்பதைப்போன்று மனோஹரனுக்கு தோன்றுகிறது. "காதலா! ஏன் பதுங்கு கிறீர்கள்! பார்த்தால் பூனை பயந்தால் புலி என்ற நமது பாட்டி சொல்லை மறந்தா போய்விட்டீர்கள். வீரகேசரி யாகிய தாங்கள் இவ்விதம் வாளாவிருக்கலாமா? நாதா! காதல் மனோஹரா? நமது எதிர்காலம் மாக்ஷியுற நாம் நமது பெற்றோரைக்கண்டு அவர்களது ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமன்றோ! இன்பநாதா! எழுங்கள்! நமது ஞானியை மனதில்கொண்டு தைரிய லெக்ஷ்மியின் உதவியினால் கொடிய அரக்கனை ஒருநொடியில் வீழ்த்துவீர்களாக! நமது பெற்றோ ருடனும் எனையோருடனும் ஜெயக்கொடியுடன் மீளுவீர் களாக! காதலனின் நல்வரவை, அன்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்று தியாகமூர்த்தியின் காதலி யாகிய செல்வி புவனேசுவரி அவருக்குத்தேறுதல் கூறுவதைப் போன்றிருக்கிறது. இவ்வித நிலைமையில் மனோஹரன் மனந் தேறி தனது காதலியின் சொல்லை நிறைவேற்றும் சமயத்தை ஆர்வமுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அரக்கன் அறையினுள் பிரவேசித்த சிறிது நேரத்தில், அவ்வறை வெளிச்சமாயிருக்கவேண்டி சில கம்புகளை அடுக்கி தீ மூட்டினான். ஆதலால் அறைமுழுவதும் வெளிச்சமா யிருந்தது. இது மனோஹரனுக்கும் ஒருவழியில் அனுகூல மாயிருந்தது. சிறிது நேரஞ் சென்றதும் திடீரென புலி யைப்போன்று ஓரே பாய்ச்சலில் பாய்ந்துவந்து அரக்கனது பெரும்விரலை தனது காலால் மிதித்து விட்டான். அரக்கன் மலைக்குகையினுள் வந்ததும் தனது காலில் மாட்டப்பட்டி ருந்த இரும்புசப்பாத்தை கழற்றிவிட்டு யாதொன்றையும் அணிந்து கொள்ளாமலிருந்தது மனோஹரனின் வெற்றிக் கறிகுறி. சற்றும் எதிர்பாராதவிதமாக புலிகிளம்பியதைப் போன்று மனோஹரன் தோன்றியதும், அவன் தன் உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலேயாகிய பெருமவிரலே மிதித்ததையும் கண்டு அரக்கன் கோபமும் ஆச்சரியமும் திகிலும் அடைந்தான். அவனது முகத்தில் சிறிது கோபக்குறி தோன்றியது. நமது மனோஹரன் அஞ்சினனில்லே. தனது கைகளினல் அவனது கழுத்தையும் கைகளேயும் பற்றிக் கொண்டான். இதுகாலே அங்கு அடைக்கப்பட்டிருந்த ஜனங்களடைந்த பேராச்சரியத்தை வரையும் வேண்டுமோ? அரக்கன் சிறிது சாந்தமானன். தனது உயிர்நிலேயை இச் சிறுவன் எவ்வாறு அறிந்துகொண்டான் என்ற வினு அவனே ஆழ்ந்த யோசனேயிலாழ்த்தியது. இனி அவனுக்கு பணிந்து நடப்பதைப்போன்று பாசாங்குசெய்து தனது பெருமவிரலே மெதுவாக இழுத்துவிட்டு பின்பு அவனுக்கு இறுதிக்காலத்தை தானே முடித்துவிடவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு அரக்கன் பேசலானன்.

அரக்கன்:—"நண்பா! நீ ஏன் என்மீது இவ்வளவு சினங்கொள்ளவேண்டும்? உன்னே நான் ஒன்றும் செய்யவில்லேயே. உன்னே நான் சிறைபிடிக்கவுமில்லேயே. தயவு செய்து பெருமவிரலேவிட்டு விடு. விரல்நோவுகிறது. நான் உன்னே வெளியில் அனுப்பிவிடுகிறேன்."

மனோஹரன்:—"ஓஹோ! அப்படியா? தவறுதலாக மிதித்துவிட்டேனே. இப்போதென்ன கெட்டுப்போய் விட்டது. அது ஒரு பிரயோஜனத்திற்குத்தான். தாங்கள் ஏன் இங்கு இம்மலேயில் வசிக்கவேண்டும்? இந்த ஜனங்கள் யார்? தங்களது தொழில் என்ன?"

அர:—"—இவர்கள் எனது தோழர்கள்தான். நாங்கள் யாவரும் ஒரு ஊரிலிருந்து புறப்பட்டோம். இக்கானகத்தில் வேட்டையாடி மிருகங்களேக் கொன்றுதின்றுதான் பிழைக்கிறோம். தாங்கள் எனது விரலே பலமாக இறுத்துகிறீர்களே! அதை விட்டுவிட்டு பேசுங்கள்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ:—"சரி, பின்னால் அதை விட்டுவிடுகிறேன். உங்களது விரல் எனக்கு எதற்கு? என்னை நீங்கள் பெரியமதிப்பாக "நீங்கள்" என்ற சொல்லால் அபிஷேகம் பண்ண வேண்டாம். சிறு குழந்தையாகிய என்னை "நீ" என்றழைப்பதே போதுமானது. இவர்கள் உங்கள் தோழர்களா? நல்லது. இவர்களை தாங்கள் ஏன் இங்கு இவ்விதம் அடைத்துவைத்திருக்கவேண்டும்? இவர்களையும் தங்களுடன் அழைத்துக்கொண்டு செல்லலாகாதோ?"

அர:—'செல்லலாம்தான். ஆனால் பிறர் கஷ்டப்படுவது எனக்குப்பிரியமில்லை. ஆதலால் நானே சென்று வேட்டையாடி இவர்களுக்கு உண்ண இறைச்சியும் காய்கனிகளையும் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம்"

மனோ:—"ஆஹா! என்ன அருமை! என்ன ஜீவகாருண்யம்! தாங்கள் எவ்வளவு தயாளகுணமுடையவர்களாயிருக்கிறீர்கள்! பிறர் கஷ்டப்படுவது தங்களுக்கு பிரியமில்லாததால்தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரையும் வேலை பார்த்து விடுகிறீர்கள் போலும்! அதுவும் சரிதான். அவர்களும் அதற்குப்பின்பு இவ்வுலகில் கஷ்டப்படவேண்டாம். பூமாதேவிக்கும் சிறிது பாரம் குறையலாம்."

அர:—"இல்லையே. ஒருவரையும் நான் வேலை பார்க்கும்படி சொல்வதில்லையே. வேணுமென்றால் அவர்களிடம் கேட்டுப்பாருங்கள். அவ்விதம் நான் பொய் பேசுபவனல்ல"

மனோ—"அது உண்மையாயிருக்கலாம். ஹரிச்சந்திர மஹாராஜனின் அண்ணாதான் தாங்கள்போலும். தாங்கள் பொய்சொல்ல மாட்டீர்கள். ஆனால் உண்மைக்கு மாறானதைக்கூறும் வழக்கம்தான் தங்களிடம் முழுவதும் அமைந்திருக்கிறது. பேஷ். தங்களுடைய பேச்சு கேட்பதற்கு வெகு அழகாகத்தானிருக்கிறது. அவ்வளவும் செயலளவில் உண்மையா அல்லவா என்பதை நான் அறிந்துகொண்டேன். சரி. இப்போது இவர்களனைவரும் என்னுடன் வரவிரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். இவர்களை வெளியில் அனுப்ப ஏதேனும் ஆக்ஷேபனையுண்டா?"

அர:—"இல்லை. அவர்கள் என்னைவிட்டுப் பிரியமனம் சகிக்கமாட்டார்கள். ஆதலால் அவர்களை தங்களுடன் அனுப்ப முடியாததையிட்டு வருந்துகிறேன். தாங்கள் வேண்டுமானால் இங்கேயே என்னுடன் வாழ்ந்துவாருங்கள். அவர்கள் தங்களுடன் வரவிரும்பமாட்டார்கள்."

மனோ:—"அவர்கள் விரும்பினால்....................."

அரக்:—"விரும்பினாலும் முடியாது. விரும்பாவிட்டாலும் முடியாது. அவர்களின் சுகதுக்கங்களைக் கவனிக்க வேண்டிய மகத்தான பொறுப்பு என்னைச்சார்ந்தது. ஆனதால் அவர்களின்மனம்போல நடக்கும்படிவிட்டு அவர்களைக் கெடுக்க நான் முற்படமாட்டேன். இது நிச்சயம்."

மனோ:—"இவர்களின் க்ஷேமலாபங்களைக் கவனிக்கத்தான் பிரம்மா உங்களை சிருஷ்டிசெய்து இங்கு அனுப்பியிருக்கிறீர்போலும்! பேஷ் நன்றாயிருக்கிறதே! ஒருவனுடைய உயிரை வாங்கிவிடுவதுதான் அவனுக்கு இயற்றும் நன்மைபோலும்! நரமாமிசத்தை உட்கொள்ளுவதுதான் ஜவகாருண்யம்போலும். இவ்வளவு நாளும் தங்களுடைய மனம்போல நடந்துகொண்டீர்கள். இனிமேல் அவ்விதம் நடந்துகொள்ளமுடியாதென்பதைக் கண்டிப்பாய்க்குறித்துக் கொள்ளுங்கள். அக்கிரமத்திற்கும் ஓர் எல்லை வேண்டுமன்றோ! நூற்றுக்கணக்கான ஜனங்கள் தங்களுக்கு இரையாக பலியிடப்பட்டனர். இன்று தான் உங்களுக்கு இறுதிக் காலம். நீங்கள் இவர்களைக் காப்பாற்றியதுபோதும். உங்களது வண்டவாளங்கள் எனக்குத் தெரியும். உங்களது உயிரை வாங்கவே நான் தேவனால் இங்கு அனுப்பப்பட்டிருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்:—"ஐயா! என்னை விட்டுவிடுங்கள். நான் இனி மேல் ஒருவரையும் ஒன்றும் செய்யவில்லை. எல்லோரையும் நீங்கள் கூட்டிக்கொண்டு போங்கள். என்னை விட்டுவிடுங்கள். கோடி புண்யமுண்டாகும். என்மீது இரக்கம் காட்ட வேண்டும்!"

மனோ:—"அதெல்லாம் சரிதான். பாம்புக்கு பால் வார்த்து வளர்த்தாலும் அதன் கொடிய விஷத்தை அது உபயோகிக்காமலிருந்துவிடாதன்றோ! நான் இந்த பிடியை விட்டுவிட்டால் முதலாவது என்னைத்தான் தாங்கள் புசித்து விடுவீர்கள். இந்த ஜனங்களனைவருக்கும் விடுதலை அளிக்கு முன்பு நான் தங்களுக்கு விடுதலையளிக்க விரும்புகிறேன். தாங்கள் இன்று இவ்விதம் தினமொன்றுக்கு ஒரு நபர்வீதம் புசிக்கவேண்டியதின் காரணம் தாங்களே. தங்களது நோக்கம் மிகமிக உயர்ந்ததேயாகும். ஆனால்துர் அதிர்ஷ்டவசமாக எல்லாம் நிகழ்ந்துவிட்டன. கரணம் தப்பினால் மரணமன்றோ சம்பவிக்கும். இது தங்களது வாழ்க்கையில் கிரியாம்சத்தில் நிரூபிக்கக் காண்பிக்கப்பட்டது. தாங்கள் இன்று ஓர் அரக்கனாக திகழவேண்டியதின் அதிருசிகரமானதும் ஆச்சரியமானதுமான ஓர் இரகசியத்தை இதுகாலை வெளியிடுகிறேன். எல்லோரும் கவனமாகக் கேளுங்கள்." என்று கூறி முன்பு ஞானிகூறிய இவ்வரக்கனின் முன்ஜென்ம நடவடிக்கைகளைக்கூறினான். இதைக்கேட்டதும் அனைவரும் ஆச்சரியமடைந்தனர். பின்பு அரக்கன் மிகவும் தாழ்மையுடன் பேசலானான்.

அரக்:—"மனோஹரா! எனது வாழ்க்கையின் இரகசியத்தை எனக்குத் தெரிவித்ததற்காக நான் தங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு மோக்ஷத்தையளிப்பதற்காகவே சர்வேசுரனால் நீங்கள் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வுலகில் மரிக்கும் எவரும் மரிக்கும் வரையிலும்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் முன் ஜென்மத்தில் எவ்விதமிருந்தோம் என்பதை யறியமுடியாது. ஆனால் நான் கொடிய அரக்கனாக இப்பிறவியில் பிறந்தும் தங்களின் தயாளசிந்தையினால் எனது முன் ஜென்ம வரலாறுகளை யறியும்பாக்கியம் பெற்றேன். தியாகச் செல்வா! சிலநிமிஷங்களுக்கு முன்புங்கூட நான் என்னுடைய முரட்டுத்தனத்தை தளர்த்தினேனில்லை. எனது விரலை அழுத்தமாக இறுத்திய உன்னிடமிருந்தும் எவ்விதமாவது எனது விரலை விடுவித்ததின்பின்பு உன்னை ஒரேயடியாக உட்கொண்டுவிடவேண்டுமென்று தீர்மானித்தேன். பிறவிக்குணத்திற்கு யாரால்தான் பட்டைவைத்துக்கட்ட முடியும். தேவகுமாரா! நீ நீடுழி வாழவேண்டும். அதிக நேரமாய்விட்டது! என்னால் சிறைப்படுத்தப்பட்டதில் உயிருடன் இருக்கும் பெரியவர்களே! நான் இந்நாள்வரையும் உங்களை இக்குகையில் அடைத்து வைத்த பயங்கரமான குற்றத்தை மன்னிக்கவேண்டும். எனது முன் ஜென்ம வரலாற்றை சற்றுமுன்பு இவ்விளஞ்சிங்கம் கூறியதைக்கேட்டிருக்கலாம். நான் நீண்டநேரம் சம்பாஷித்து உங்களின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. எனது வரலாற்றை அறிந்து உங்களிடம் கூறிய ஞானி ஜெயசீலருக்கு எனது வந்தனம் உரித்தாகுக. நான் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொள்கிறேன். மனோஹரா! என் உயிர் என் உடலைவிட்டுப் பிரிந்ததும் எனது உடலை இக்காட்டு மிருகங்களின் இரைக்காக வீசிவிடுங்கள். இந்தச் சதையில் வனமிருகங்களுக்கு பாத்தியதையுண்டு. செல்வக்குமாரா! நான் உன்னிடம் விடைபெற்றுக்கொள்கிறேன். உனது கீர்த்தி உலகமெங்கும் பரவி பொதுமக்களின் அன்புக்குரியவனாக திகழு. சரி, உன்னிடமும் விடைபெற்றுக்கொள்கிறேன். எனது விரலை சீக்கிரம் அறுத்துவிடு. எனக்கு விடுதலையை விரைவில் அளிப்பாயாக!" என்று அரக்கன் ஏதேதெல்லாமோ பேசிக்கொண்டே போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் (மனோஹரன் உட்பட) பேராச்சரியமடைந்தனர். அரக்கனது குணம் முற்றிலும் மாறிவிட்டதைக் கண்ணுற்று அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். இனிமேல் ஒழுங்காக இருப்பானென்று நம்பினர். ஆதலால் அவ்வரக்கனை விடுவிக்க முற்பட்டனர். என்றாலும் ஞானி கூறியமொழிகள் அவனுக்கு நினைவுவரலாயிற்று. "ஞானியைக் கொன்று ஜெயபேரிகை முழக்கிக்கொண்டுவா" என்று கூறியது அவர்களின் தீர்மானத்தை தகர்த்துவிட்டது. முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகாதன்றோ! அதைப்போன்று அரக்கன் எவ்விதமும் தனது தொழிலை விட்டுவிடுவது அபூர்வமே. அவனை தங்களுடன் வைத்திருப்பது நெருப்பையள்ளி மடியில் வைப்பதற்கொப்பாகும் என்று தீர்மானித்து அவ்வரக்கனது பெருவிரலை மனோஹரன் துண்டாக வெட்டிவிட்டான். "மனோஹரனுக்கு மங்களமுண்டாகுக! நான் செல்கின்றேன்" என்று அக்குகை அதிரும் வண்ணம் பலத்த சப்தத்தில் கூறியவாறே உயிர் பிரிந்தான். அரக்கனது உயிர் உடலைவிட்டுப் பிரிந்ததும் அனைவரும் மனோஹரனைக் கட்டியணைத்துக் கொண்டனர். அவர்களிடமிருந்தும் விடுதலையடைய நீண்ட நேரம் சென்றுவிட்டது.

பின்பு யாவருக்கும் விலங்கு அவிழ்க்கப்பட்டது. தமது வாழ்க்கையில் இதுவரையும் அனுபவித்தறியாத ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் இதுகாலை அனைவரும் அனுபவித்தனர். பின்பு அவ்வரக்கனை வெளியில் கொண்டுவந்து வனவிலங்குகளுக்கு இரையாக வீசிவிட்டனர். பின்பு யாவரும் மலையினின்றும் வெளியாகி மனோஹரபுரத்திற்கு பயணமாகினர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்—15

## சந்தோஷகரமான முடிவு—மங்கள வைபவம்.

“ஈசா! எனது காதலர் சென்றிருக்கும் பயங்கரமான யுத்தத்திற்கு நீர் உடன் துணையாக செல்லவேண்டும். எமது எதிர்கால வாழ்க்கை இந்நிகழ்ச்சியையே பொறுத்திருக்கிறது. கருணை வள்ளலான நீர் எமக்கு ஜெயசீலரின் மூலமாக எமது பெற்றோரிருக்கும் இடத்தை தெரிவித்தவர் எமது குறையையும் நிவர்த்திக்காது வாளாவிருந்து விடுவீரா! ஆபத்பாந்தவா! உலகத்திற்கு ஒளியை நல்கும் கடவுளே! என்னுடைய பிரஜைகள் சந்தோஷமாக வாழவேண்டும். குளிர்காலத்தின் கொடுமைகளை அவர்கள் தாங்குவதற்குவேண்டிய சக்தியை நீ அவர்களுக்கு அளிக்கவேண்டும். பிணியாலும் வறுமையாலும் எமது பிரஜைகள் வருந்தாமல் காத்துக்கொள்ளவேண்டும். அவர்களிடத்து நீ மிகுந்த கருணைகொண்டு காப்பாற்றவேண்டும். பொதுஜனங்களின் அபிப்பிராயத்திற்குக் கட்டுப்பட்டு நாங்கள் இக்கிராமத்தை ஆண்டு வருகின்றோம். நாங்கள் பிழைசெய்பினும் நீ எங்களைப் பொறுத்தருளல் வேண்டும்! எ! பூமாதேவியே! உன்னைத்தவிர எங்களுக்கு வேறுகதியில்லை. நீ சந்தோஷப்பட்டாலொழிய நாங்கள் சந்தோஷப்படமுடியாது. உன்னுடைய செழிப்பே எங்களுடைய செழிப்பாகவிருக்கின்றது. பசுமையான நீண்ட புற்களை நீ எமது ஆடுமாடுகளுக்குக் கொடுக்கவேண்டும். இனிமையான கனிவர்க்கங்களை எமக்கு நீ அளிப்பாயாக! காலைச்சூரியனே! உனது வரவு நல்வரவாகட்டும். மாலைச் சூரியன் எமக்கு கவலையற்ற நித்திரையை நல்குவானாக! கடவுளே! எம்மையும் எமது குழந்தைகளையும், சிநேகிதர்களையும் விருந்தாளிகளையும் நீ காப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்றுவாயாக! தீர்க்காயுளை எமக்கு நல்கு! நோயற்ற வாழ்வு நாங்கள் வாழவேண்டும். நாங்கள் யாவரும் உம்முடைய குழந்தைகள். எம்மைக் காப்பாற்றவேண்டியதும் எமது மனோரதத்தை நிறைவேற்ற வேண்டியதும் நின் கடமையன்றோ! நின் கடமையைச்செய்ய நீ பின்வாங்கமாட்டாயன்றோ! என்காதல் மனோஹரர் எமது பெற்றோரை மீட்கச் சென்றவர் ஏன் இன்னும் வரவில்லை? எனது பெற்றோரை—மாமன் மாமியை எங்கே? நான் அவர்களைத்தொழ வேண்டுமன்றோ! காதலா போனவிடத்தில் என்ன செய்கிறீர்கள்! நெருப்பில் விழுந்த புழுப்போல நான் துடிப்பதை அறியமாட்டீர்களா? கடுகிவந்த காதலியிடம் சந்தோஷகரமான செய்தியை அறிவிக்க தயங்குவதேன். நான் ஞானியரிடம் சென்று என் நாதரின் இருப்பிடத்தை யறிகிறேன்'' என்றெல்லாம் பலவாறாக. செல்வி புவனேசுவரி எண்ணிட்டவாறு ஞானியரை அணுகினாள்.

இவளது நோக்கத்தைக்கண்ட ஞானி நடந்தவைகளையெல்லாம் கூறினார். "இப்போது தான் மலையினின்றும் வெளிவரப்போகின்றனர். நீ எதிர் கொண்டழைத்து வருவாயாக! என்று விடையளித்ததும் புவனேசுவரி ஆனந்தமெய்தினாள். எற்கனவே இவள் தெரிவித்ததைப்போன்று அவ்வூரிலுள்ள வில்வண்டிகள் யாவும் மனோஹரவிலாஸ் மாளிகையின் முன்பு வந்துநின்றன. புவனேசுவரி தனது அசுவமேறி பயணமாகினாள். அவளுடைய உத்தரவுப்படி வண்டிகள் எல்லாம் அவளைப் பின்தொடர்ந்து சென்றன. புவனேசுவரியின் அசுவம் அவளது மனோகத்துடன் போட்டிபோட்டு பறந்து சென்றது. வண்டிகளும் பின்தொடர்ந்தே சென்றன. மாடுகளின் கழுத்திலணியப்பட்டிருந்த வெங்கல மணிகளின் ஓசை வானமளாவ எழும்பி ஜெயபேரிகை முழக்குவதைப் போன்றிருந்தது. வழியிலுள்ள மண்கட்டிகளெல்லாம் தூளாகி காற்றின் வேகத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் குதிரை, மாட்டுவண்டிகளின் வேகத்தாலும் புகையைப்போன்று கிளம்பி கண்களை யடைக்கின்றது.

இவ்விதமாகசென்று சில நிமிஷநேரங்களிலேயே அரக்கன் வாழ்ந்துவந்த மலையினருகில் சென்றுவிட்டது. சென்றதும் புவனேசுவரி அவசரம் அவசரமாக அசுவத்தினின்றும் இறங்கி மான்குட்டியைப்போன்று துள்ளிக்குதித்து ஓடி தனது காதலனை கட்டிக்கொண்டாள். தோகைமயில் போல், முன்றானை காற்றிற்பறக்க அவள் குதிரையினின்றும் இறங்கிவந்த அற்புதக்காக்ஷி விண்ணுலகினின்றும் பறந்து வந்தாளோ வென்னும்படி தோன்றிற்று. "காதலி! உனது வேண்டுகோளை நிறைவேற்றிவிட்டேன்! உன் மனமகிழ ஜெயத்துடன் மீளப்போகிறேன். எல்லோரும் விடுதலையாகிவிட்டனர். இனி உன்மனம் சந்தோஷமடையுமல்லவா" என்று அன்பொழுகக்கூறி அவளைத் தழுவினான். பின்பு தனது தாய் தந்தையரையும் மாமன் மாமியாரையும் வணங்கினாள். அவர்களும் அவளைத்தழுவி வாழ்த்தினர். "புவனா! உன்காதலரால்தான் நாங்கள் இன்று விடுதலையானோம். மனோஹரருடைய உயர்ந்த குணவிசேஷங்களையும் தயாள சிந்தையையுங் கண்டு நாங்கள் மெச்சினோம். இவ்வித தியாக புருஷனின் காதலைப்பெற்றது நீ செய்த தவப்பயனேயாகும். நீயும் உனது காதலரும் நீடூழிவாழ்க!" என்று ஒவ்வொருவரும் வாழ்த்தினர். அந்நிமிஷம் புவனேசுவரியின் நிலையைக் கூறவும் வேண்டுமோ?

"என் பெற்றோர்களே! எனது காதலர் விசேஷமாக யாதொன்றையும் செய்துவிடவில்லை. மனிதர் செய்து முடிக்கவேண்டிய ஒருகாரியத்தையே அவர்கள் செய்திருக்கிறார்கள். மனிதராக பிறந்த எவரும் பிறரது நலன்களுக்காக தமது உயிரையும்கூட முகமலர்ச்சியுடன் தியாகஞ் செய்ய வேண்டுவது ஒவ்வொருவரின் முக்கிய கடமையன்றோ! எல்லாம் வல்லஇறைவனின் திருவிளையாடலை யாரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிட்டறிய முடியும்" என்று புவனேசுவரி யாவருக்கும் விடையளித்தாள். பின்பு யாவரும் வண்டியிலேறியதும் மனோஹரபுரத்திற்கு பிரயாணமாகினர். புவனேசுவரியும் மனோஹரனும் தமது பெற்றோருடன் ஏறிக்கொண்டனர். வழிநெடுக ஊர்விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டே சென்றனர்.

இவ்விதமாக ஊர் வந்து சேர்ந்ததும் தமது விடுதலைக்கு காரணமாயிருந்த ஞானியை யாவரும் தொழுதபின், ஸ்நானஞ்செய்து சுத்தக் கதராடையணிந்து போஜனமருந்தினர். தர்மபாலாவின் செய்கையைப் பற்றியும் தற்கால நிலைமையையும், தான் மனோஹரபுரத்தை ஸ்தாபித்ததையும் ஆகிய யாவற்றையும் அதாவது மனோஹரனின் பெற்றோர் பிரிந்தது முதல் நடந்துள்ள சம்பவங்களைக்கூறினான். இதைக் கேட்ட அனைவரும் துக்கமும் சந்தோஷமுமடைந்தனர். தர்மபாலாவின் விபரீத செய்கையைப்பற்றி மனம் வருந்தினர். மனோஹரனின் உதார குணத்தையும், தீர்க்காலோசனையையும், குடிஜனங்களின்பால் கொண்டுள்ள அன்பையும் யாவரும் மெச்சினர்.

இதுகாலை நமது தர்மபாலா செல்வி பர்வதவர்த்தினியுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தான். ஸ்நானஞ்செய்த பின் உணவருந்திவிட்டு இருவரும் மற்ற விஷயங்களைப்பற்றி சம்பாஷித்தனர். அப்போது தர்மபாலா தனது சகோதரனைப்பற்றியும் சிலவற்றைக் குறிப்பிட்டான். பர்வதவர்த்தினி தனது கிராமத்தின் வரலாற்றையும் அரசனது நவீன ஆக்ஷியின் திறமையையும் கூறினாள். தனது சகோதரனின் திறமையையும் புத்திசாலித்தனத்தையும் கண்டு வியந்து தனது குற்றத்திற்கு தனது சகோதரனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தர்மபாலா கூறினான்.

இதுசமயம் வெளியில் பலத்த சப்தம் உண்டாவதைக் கேட்டான். அது என்ன கூக்குரல் என்று பலகணியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக எட்டிப்பார்த்தான். ஒரு பெரிய—நூற்றுக்கணக்கான பேர்களின் மத்தியில் நின்று மனோஹரன் ஒய்யாரமாக பேசிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றனர். உடனே தர்மபாலா மகிழ்ச்சியடைந்தான். தான் செய்த அட்டூழியங்களுக்கு உடனே அவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று தீர்மானித்து சரேலென மாடியிலிருந்தும் இறங்கினுன். இவனது நோக்கத்தை பார்வதவர்த்தினி ஒருவாறு அறிந்துகொண்டனள்.

கூட்டத்தின் மத்தியில் சென்று "மனோஹரா! நீ கூறிய புத்திமதிகளைக் கேளாமல் அநியாயமாக கெட்டுப் போனேன். நமது இராஜ்ஜியம் அனேகமாக தனது சிறப்பை இழந்துவிட்டது. நமது வம்சத்திற்கே நான் ஓர் வைரியாக ஜனித்துவிட்டேன். குடிஜனங்கள் கால்வயிற்றுக்குக்கூட கரணமடிக்கின்றனர். உனது இதோபதேசங்களுக்கு நான் செவி சாய்த்திருந்தால் இன்று நான் இவ்வித அலங்கோலமான நிலைமைக்கு வந்திருக்கமாட்டேன். எனக்கு நற்புத்தியைப் புகன்ற உன்னை நான் எட்டியுதைத்தேன் அதையெல்லாம் இப்போது மறந்துவிடு. நான் செய்த அட்டூழியங்களை நான் இப்போது தான் அறிகிறேன். நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்பதற்குமுன்பு நீயே என்னை மன்னித்துவிடுவாயென்றே நம்புகிறேன்." என்று கூறியவாறே தர்மபாலா மனோஹரனைக் கட்டிக்கொண்டான்.

தர்மபாலாவின் எதிர்பாராத மாற்றத்தைக்கண்ட மனோஹரன் திகைத்துப்போனுன். அவனுல் ஒன்றும் கூற முடியாமற்போய்விட்டது. தர்மபாலாவைக் கண்ணுற்ற அவனது பெற்றோரும் தமது குமாரனைக் கட்டியணைத்துக் கொண்டனர். தன்னை வேற்றிருவர் கட்டியதும் தர்மபாலா திரும்பிப்பார்த்தான். தனது பெற்றோரே தன்னைக்கட்டியது என்று அறிந்ததும் அவர்களது பாதங்களில் விழுந்து தனது குற்றங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் மனோஹரனுக்கும் தனது குடிஜனங்களுக்கும் செய்த கொடுமைகளைக் கூறி மனம் வருந்தினான்.

தர்மபாலாவைப் பின்பற்றி பர்வதவர்த்தினியும் அக்கூட்டத்திற்கு வந்தனள். இவள் வந்ததும் கூட்டத்தினின்றும் ஓர் வயதுசென்ற மனிதர் எழுந்து வந்து பர்வதவர்த்தினியை ஆர்வமுடன் அணைத்துக்கொண்டார். இதையறிந்து திடுக்கிட்டு அப்பெண் திரும்பிப்பார்க்க தனது தந்தையைக் கண்ணுற்றவுடன், "அவரிடம் தான் யாதொன்றையும் கூறுமல் வந்த குற்றத்தை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அவர்களுடைய சரித்திரமும் அங்கு கூறப்பட்டது. (இதை முன்பு ஞானிஜெயசீலரிடம் பர்வதவர்த்தினி ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதை முன்பு வெளியிட்டிருக்கிறோம்) இவ்விதமாக பிறிந்த தமது புத்திர புத்திரிகளை ஏககாலத்தில் சந்தித்தனர். தர்மபாலாவின் பெற்றோர்கள் தமது குமாரனிடம் அவன் முன்பு நடந்தவைகளைப்பற்றி வருந்துவதாகவும் இனிமேலாகிலும் ஒழுங்காய் நடந்து பொது ஜனங்களின் அன்பை சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் புத்திமதிகள் கூறினர்.

இவ்வாறாக, எங்கும்—அவ்வூர் முழுவதும் இதே பேச்சாகவே இருந்தது. மனோஹரனைப் புகழாதாருமுண்டோ? அவனை எல்லோரும் உச்சிமேற்றூங்கிக் கொண்டாடினர். எங்கும் சந்தோஷத்தினம் கொண்டாடப்பட்டது. கண்ணைக் கவரும்படி மனோஹர விலாஸ் பங்களா அலங்கரிக்கப்பட்டது. வீதிகளினிருமருங்கிலும் தோர்க்கொடிகள் பல கட்டப்பட்டிருந்தன. இயற்கை யன்னை தாண்டவமாடிக் கொண்டிருந்த மனோஹரபுரத்தில் செயற்கை அன்னையும் சேர்ந்துவிடவே அவ்வூர் தேவருலகமோ! என்று சந்தேகிக்கும்படி இருந்தது. வீரவாளும் ஆண்சிங்கமும் ஒருபுறமும், இன்றுள்ள உலவுகோலும் பசுவும் மற்றோர் புறமும்வைத்து எழுதப்பட்ட பல கொடிகள் ஆங்காங்கு அசைந்துகொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்ததானது "மனோஹரன் நீடூழி வாழ்க! தியாகச் செல்வனின் தீரச்செயல் உலகமெங்கும் பரவுக! அவனது ஆக்ஷியில் குடிஜனங்கள் யாதொரு குறைவுமின்றி வாழ்வார்களாக!" என்று வாழ்த்துவதைப் போன்றிருந்தது. மனோஹரனை ஊர்வலமாக அழைத்தேகவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிறுவர்கள் அன்று உற்சாகமாகக் காணப்பட்டனர். ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கோ எதற்கும் சிறுவர்களின் ஊக்கமன்றோ பிரதானமாக வேண்டியது. சுருங்கக்கூறுமிடத்து அந்நாட்டின் பிற்கால க்ஷேமலாபங்கள் சிறுவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

முன்னேற்பாட்டின்படி அவ்வூர் ஜனங்கள் மனோஹரனை ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். அவனுடன் புவனேசுவரியும் சென்றனள். ஒவ்வொரு வீட்டின் முன்பு சென்றதும் சிறுவர்கள் இனிமையாக மங்களவாழ்த்துப் பாடி மனோஹரனுக்கும் புவனேசுவரிக்கும் அழகிய—நறுமணங்கமழ் புஷ்பமாலைகள் இரண்டை அணிவித்தனர். தம்பதிகளிருவரும் அன்புடன் அதை ஏற்றுக்கொண்டு சிறிதுநேரஞ் சென்றதும், மங்களம் பாடிய சிறுவர்களில் முதன்மையானவனுக்கு அம்மாலையை சூட்டிவிடுவார்கள். தனது குமாரனின் செல்வாக்கையும், குடிஜனங்கள் அவன்பால் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையையும் ஆழ்ந்த அன்பையும் கண்ணுற்ற மனோஹரனின் பெற்றோர்களிபேருவகை கொண்டனர். இவ்விதமான மைந்தனைப் பெற தாம் எவ்வளவு கோடி புண்யஞ்செய்திருக்க வேண்டுமோவென தங்களுடைய மனதில் வினவிக்கொண்டனர். தர்மபாலனும் தனது தம்பிக்கு பொது ஜனங்களினிடம் இருக்கும் செல்வாக்கைக்கண்டு மனம் பூரித்தான். தான் மனோஹரனது புத்திமதிகளுக்கு செவிசாய்த்து நடந்திருந்தால் தன்மீதும் குடிஜனங்கள் இவ்விதம் அன்பை செலுத்துவார்களன்றோ! யானை தன் தலையில் மண்ணைவாரிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டாற்போல் தனது வாழ்க்கையை தானே கெடுத்ததை அவனது மனம் அவனை வருத்தியது. தான் எவ்வளவு கொடுமைகளை யியற்றியும் தனது சகோதரன் தனது முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்ததை அவன் மெச்சிக்கொண்டான். புவனேசுவரியின் தந்தையும் தாயாரும் இருக்கும் நிலையை செப்பத்திறமன்று. தனது புத்திரியின் எதிர்காலத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். தமது மருமகனின் தீரச்செயலை கண்டானந்தித்தனர். தமதுகுமாரத்தியின் மனதிற்குகந்த மணாளனை யாதொரு சிரமுமின்றி நியமித்த சாக்ஷாத் எம்பெருமானை தம்முள் வணங்கினர். ஊர்வலமும் இனிதே முடிவுற்றது. தமது அரசரின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டு அவ்வூர் ஜனங்களனைவரும் அன்று விசேஷ தினத்தைக்கொண்டாடினர்.

மறுதினம் தர்மபாலாவும் மனோஹரன் தம்பதிகளும் அவர்களது பெற்றோரும் பர்வதவர்த்தினியும் அவளது தந்தையும் மனோஹரனின் மாமன் மாமியும் ஆள்வார் தேசத்திற்கு பயணமாகி சென்றனர். அவ்வூரின் அலங்கோலமான நிலைமையைக்கண்டதும் தர்மபாலாவின் தந்தை குருகுலசேகரா மனம் வெதும்பினான். அவர்களின் பரிதாபகரமான வாழ்க்கையைக் கண்டு கண்ணீர்வடித்தான். "தமது அரசர் குருகுலசேகரர் வந்துவிட்டார்!" என்ற செய்தி நாடெங்கெங்கும் பரவியதும் ஜனங்கள் உற்சாகமாக காணப்பட்டனர். சூரியனைக்கண்ட பனிபோல் அவர்களது துக்கம் மறைந்தோடிவிட்டது. தமக்கு இன்றே நற்காலம் பிறந்துவிட்டதென்று தீர்மானித்துக் கொண்டனர். திருச்செல்வன் மனோஹரனும் வந்துவிட்டானென்ற செய்தி அவர்களை பன்மடங்கு சந்தோஷசாகரத்தில் மூழ்கும்படி செய்தது. வயதில் சிறியவனாக தென்பட்டாலும் அறிவிற்சிறந்த மனோஹரன் தங்களின் பால்கொண்டுள்ள அன்பையும், தங்களால் அவன் தனது சகோதரனின்—அரசனின் கோபத்திற்கிலக்காகியதையும் அவர்கள் மறந்துவிடவில்லை. ஆண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் விரைந்துசென்று மனோஹரனைக் கட்டிக்கொண்டனர். எல்லோருக்கும் விடையளிக்க—பதில்கூற—தான் நாட்டைவிட்டுச் சென்றதுமுதல் நடந்தவற்றைக் கூறமுடியாதாதலால் மறுநாள் ஒரு கூட்டம் கூட்டப்படுமென்றும், அதுகாலை பலமுக்கிய சம்பவங்களை குறிப்பிடுவதாகவும், தற்போது யாதொன்றையும் வெளியிட முடியாததைப்பற்றி வருந்துவதாகவும் மனோஹரன் பலத்த குரலில் கூறினன். பின்பு யாவரும் தமது அரசரை—நீண்டகாலம் காணமற்போன குருகுலசேகரரை வணங்கினர். அவரும் மனோஹரன் கூறியதைப்போன்றே கூறிவிட்டார். மனோஹரனுடனிருந்த செல்வி புவனேசுவரி தன் காதலனிடத்து பொதுஜனங்கள் கொண்டுள்ள அன்பைக்கண்டு வியப்புற்றாள்.

"காதலா! தங்களிடம் ஏதேனும் மாயாசக்தி யமைந்துள்ளதா? தாங்கள் யாருடைய அன்பைத்தான் பெறவில்லை? பொதுஜனங்களின் அன்பிற்கு தாங்களே முழுவதும் அருகராகிவிட்டீர்கள்போலும்! தங்களை நான் வாழ்க்கைத்துணைவராக கிடைக்கப்பெற்றது எனது நல்லதிர்ஷ்டமன்றோ! காதல் மனோஹரா! அவ்விதம்தானே!" என்று கிள்ளைமொழியில் புவனேசுவரி தன் காதலனைநோக்கி வினவியவாறு அவனது தோளின்மீது சாய்ந்தாள்.

"புவனு! எல்லாம் வல்லஇறைவனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று என்பதை நீ அறியாமலா போய்விட்டாய். நாம் இரண்டு தினங்களுக்கு முன்பு, நாம் இன்று இவ்வித நிலைமையிலிருப்போம் என்று நாம் எதிர்பார்த்ததுண்டா? எல்லாம் அவன் செயல். என்னால் ஒன்றும் செய்யமுடியாது. என்னை நீ காதலனகப் பெற்றது உனது நல்லதிர்ஷ்டமென்று எண்ணுகிறாய்? நானும் உன்னைக் காதலியாகப் பெற்றது என் நல்லதிர்ஷ்டமென்றே கருதுகிறேன்" என்று கூறியவாறே அவளைத்தழுவினன் மனோஹரன்—இருவரும் இவ்விதமே சம்பாஷித்துக் கொண்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். பின்பு இருவரும் அசுவமேறி அந்நாட்டின் அலங்கோலத்தைக்காணபிரயாணமாகினர். மனோஹரன் ஒவ்வொரு இடங்களையும் சுட்டிக்காட்டி அது முன்னிருந்த செழிப்பையும் தற்போதிருக்கும் நிலைமையையும் கூறியவாறே அந்நாட்டை சுற்றிப்பார்த்தனர். இவர்களைப் பின்தொடர்ந்து குருகுலசேகரரும் அவரது மனைவி லீலாவதிதேவியும் அந்நாட்டைச் சுற்றிப்பார்த்தனர். அவ்வவ்விடங்களிலுள்ள ஜனங்கள் அவர்களுக்கு தமது மரியாதையையும் அன்பையும் தெரிவித்துக் கொண்டனர்.

அன்று மாலைப்பத்திரிகைகளெல்லாம் தலையங்கங்கள் வரைந்தன. அரசகுடும்பத்தினரை அன்புடன் வரவேற்றன. அவர்களின் உருவப்படத்தை வெகு அழகாக பிரசுரித்தன. மறுநாள் காலைப்பத்திரிகைகளும் தலையங்கங்கள் வரைந்தன. தங்களுடைய நாடுமீண்டும் சிறப்புற்றோங்கி யாவரும்கவலையின்றி சந்தோஷமாக வாழலாமென்றும் அரசகுடும்பத்தினரின் வரவு நல்வரவாகட்டும் என்றும் வாழ்த்தி பத்திரிகைகள் தலையங்கம்வரைந்து ஆனந்தக் கூத்தாடின.

மறுநாள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் கூட்டம் ஆரம்பமாகியது. அந்நாட்டு மக்களில் அநேகமாக யாவரும் கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தனர். ஆள்வார் தேசத்திலேயே இந்நாள் வரையிலும் இவ்விதம் பிரமாண்டமான ஓர் கூட்டம் நடைபெறவில்லை. அரசகுடும்பத்தினரை யாவரும் கண்குளிர பார்ப்பதற்காக அவர்களுக்கு அந்த இடத்தில் ஓர் உயரமானமேடை அமைக்கப்பட்டிருந்தது. எங்கும் ஒலிபரப்பும் கருவிகள் பரப்பப்பட்டிருந்தன. மன்னர் குடும்பத்தினர் வந்து சேர்ந்ததும் யாவரும் கரகோஷம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர். எங்கும் "ஜே" முழக்கம் வானமளாவ கிளம்பியது.

இவர்களுடன் கொடுங்கோலரசன் தர்மபாலாவும் வந்தான். இவனைக்கண்டதும் ஜனங்கள் பலத்தசப்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளியேபோங்கள்! எங்கள் முன்பு தோன்றவேண்டாம்"; என்று கூக்குரலிட்டனர். தர்மபாலா அக்கூட்டத்தினின்றும் வெளிக்கிளம்பாவிடில் கூட்டத்தில் எளிதில் சமாளிக்க முடியாத குழப்பம் ஏற்பட்டு விடுமென்பதை யறிந்த புத்திசாலி மனோஹரன் எழுந்து, யாவரையும் அமைதியாயிருக்கும்படி வேண்டிக்கொண்டான். ஆகவே யாவரும் அமைதியாக அமர்ந்தனர்.

பின்பு தர்மபாலா தனது குற்றத்திற்காக மன்னிக்கும்படி பொதுமக்களிடம் தயவாக கேட்டுக்கொண்டும், கூட்டத்தினின்றும், "மனிதவர்க்கத்தால் மன்னிக்கமுடியாத ஓர் பழியை நீண்டகாலம் இயற்றிவிட்டீர்கள். கொடுமை! கொடுமை!!" என்ற குரலே கூட்டத்தினின்றும் கிளம்பியது. பின்பு மனோஹரனும் குருகுலசேகரர் தம்பதிகளும் எழுந்து முறையே சொற்பொழிவு நிகழ்த்தி, தர்மபாலா தற்போது முற்றிலும் மாறிவிட்டானென்றும், தான் இயற்றிய கொடுமைகளுக்கு த ற் போ து கழிவிரக்கப்படுவதாக அவன் தெரிவிப்பதாகவும், ஆதலால் இனிமேல் நன்னெறியில் நடப்பானென தாங்கள் திட்டமாகக் கூறக் கூடுமென்றும் ஆதலால் அவனது சார்பாக தாங்களும் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகவும், பொதுஜனங்கள் அவருக்குமன்னிப்பு அளிப்பார்களென தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டனர்.

இவர்களின் சொற்பொழிவை அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள், இவரது வேண்டுகோளுக்கிணங்கி தர்மபாலாவை மன்னிப்பதுமன்றி அவர் இயற்றிய பழிபாதகங்களுக்காக தாம் ஈசனிடம் மன்றாடுவதாகவும் வெளியிட்டனர். பின்பு குருகுலசேகரர், மனோஹரன், தர்மபாலா ஆகியவர்கள் தாம்பிறிந்தது முதல் தற்போது கூட்டம் கூடினதுவரையும் நிகழ்ந்த சம்பவங்களைக் கூறினர். மனோஹரன் சொற்பொழிவு நிகழ்த்துகையில் இடை யிடையே கரகோஷம்செய்து தமது மகிழ்ச்சியை சபையோர் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துக் கொண்டனர். மனோஹரனின் தீரச்செயலை சபை யோர் புகழ்ந்து கொண்டாடினர். பின்பு கூட்டமும் இனி தே முடிவெய்தியது. கூட்டத்தில் பலதீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அவைகளில், முக்கியமானவை. மனோ ஹரன் குடிஜனங்களினிடம் செலுத்திய அன்பைப்பற்றியும் அவனது வீரதீரச்செயலை புகழ்ந்தும், அவனது விசாலமான நுண்ணிய அறிவைப்பாராட்டியும் ஒருதீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

மற்றொன்று தர்மபாலா இயற்றிய அட்டூழியங்களை தாம் கண்டிப்பதாகவும், ஆனால் தற்போது அவர் நேர்மை யானவழிகளில் திருந்திவிட்டதாக தெரியவருவதால் அவரை மன்னித்துவிடுவதாவும், இனிமேலாவது தர்மம், நியாயம் முதலிய உயர்ந்த லக்ஷியங்களைப் பின்பற்றி நடந்து, பொது ஜனங்களின் ஆழ்ந்த அன்பைப் பெற்றுக்கொள்ளவேண்டு மென்றும், அவரது பாவவிமோசனத்திற்காக தாம் சர்வ லோக சரண்யனை மன்றாடிக்கேட்டுக் கொள்வதாகவும் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

பிறிதொன்று தாம் பல்லாண்டுகளாக பிரிந்திருந்த குருகுலசேகரர் அவர்களையும் மனோஹரனையும் அன்புடன் வரவேற்பதாகவும், ஆள்வார் நகரின் அரசர் பதவியை மாஜி அரசர் குருகுலசேகரர் உடன் ஏற்று ராஜ்ய பரிபாலனஞ் செய்து தமது வறுமைப் பிணியை யகற்றவேண்டுமென்றும், மனோஹரபுரத்தை மனோஹரருக்கே அளித்துவிடவேண்டு மென்றும் இருநாடுகளுக்கும் நீங்காத தொடர்பு இருக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

ஆள்வார் நகருக்கு தியாகச்செல்வன் மனோஹரன் அடிக்கடி விஜயஞ்செய்து மக்களுக்கு உற்சாகத்தை யளிக்க வேண்டுமென்றும், முக்கியமான விஷயங்களை மாக்ஷிமை தங்கிய அரசர் குருகுலசேகரர் மனோஹரரிடம் கலந்தாலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தே முடிவுசெய்யவேண்டுமென்றும், அவர் சம்பந்தப் படாத எந்தத் தீர்மானத்தையும் சிற்சில சமயங்களில் நிரா கரிக்கவேண்டியது நேருமென்றும், அதற்கு இடங்கொடா மல் அரசர் பெருமான் நடந்துகொள்ளவேண்டுமென்றும் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேறின. மேடி தீர்மா னங்களை தாம் ஒப்புக்கொள்வதாகவும், அதில் குறிப் பிட்டுள்ளபடியே தாம் நடக்க தீர்மானித்திருப்பதாகவும் அரசர் குருகுலசேகரர் சபையோருக்கு உறுதிமொழி கூறி னார். மனோஹரனும் அவ்விதமே கூற கூட்டமும் கர கோஷத்தினிடையே கலேந்தது.

இது இவ்வாறாக பூனாவில் "கிருஷ்ண விலாஸ்" பங்க ளாவில் ஒருநாள் மங்கையர்க்கரசி ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந் திருந்தாள். அவளது மனம் ஒரு நிலையிலில்லை. ஏதோ ஓர் சம்பவத்தைக்குறித்து மனக்குழப்பமடைந்திருந்தாள். அதுசமயம் அவளுடன் ஒருவரும் இருக்கவில்லை. அவளு க்கு முன்பு ஓர் புஸ்தகம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் பாலகிருஷ்ணனின் ஜீவிய வரலாற்றை அவனே கையெழுத் தால் எழுதியிருந்தான். மங்கையர்க்கரசியின் முன்பு அந்த புஸ்தகம் விரிக்கப்பட்டிருந்தபோதினும் அவள் அதை வாசிக்கவேயில்லை. ஆனால் அப்புஸ்தகம் "உனது காதல ரால் எழுதப்பட்ட அவரது ஜீவிய சரித்திரத்தை நீ ஏன் பார்க்காமலிருக்கிறாய். அதை நீ அவசியம் பார்க்கவேண்டு மன்றோ! ஆம்! ஆதலால் தான் நான் உன்முன்பு பிரசன்ன மாகி இருக்கிறேன்" என்று கூறுவதைப்போன்று அதன் இதழ் சிறிது காற்றாலசைய விரிக்கப்பட்டிருந்தது.

இவ்விதம் மங்கையர்க்கரசி விசனத்துடன் வீற்றிருக் கும் இடத்திற்கு அவளது தந்தை ஜெயராமரும் காதலன் பாலகிருஷ்ணனும் தற்செயலாக வந்துவிட்டார்கள். அவர் களைக்கண்டதும் இவள் மரியாதை செய்யும்வண்ணமாக எழுந்திருந்தாள். வந்த இருவரும் இவளது மாற்றத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு திகைத்து அவளை அமரும்படி கேட்டுக்கொண்டு அங்கு போடப்பட்டிருந்த நாற்காலிகளில் இருவரும் அமர்ந்தனர். பின்பு ஜெயராமர் பேசலானார்.

ஜெய:—"குழந்தாய்! இன்று உனது முகம் ஏன் இவ்விதம் மாற்றமடைந்து விசனத்துடன் காக்ஷியளிக்கிறது. காரணம் என்ன? என்னிடம் கூறலாகாதா?"

மங்:—"அப்பா! நான் உங்களிடம் கூறி என் மனக்கவலையைத் தீராமல் நண்பர் பாலகிருஷ்ணனைத்தவிர வேறு யாரிடம் கூறப்போகிறேன். நேற்றுமுதல் எனது மனம் சிறிது குழப்பமுற்றிருக்கிறது. அதாவது என் அன்னை என் அகக்கண்ணின் முன்புதோன்றி என்னை ஆர்வமுடன் அணைத்து முத்துகிறாள். இது என்ன விபரீதம்! எனது அன்னை இறந்துபோய்விட்டதாக என்னிடம் தாங்கள் கூறினீர்களே! அதை நான் இச்சமயம் நம்பமுடியாமலிருக்கிறேன். எனது அன்னையைப்பற்றிய மர்மம் என்ன?"

ஜெய:—"குழந்தாய்! நீ உன் அன்னையை நினைத்திருக்கக்கூடும், ஆதலால் உனக்கு அவ்விதம் தோன்றுகிறது. உனது அன்னையைப்பற்றி யாதொரு மர்மமுமில்லை. அவள் இறந்துதான் போயிருக்கவேண்டும்."

மங்:—"தாங்கள் கூறுவதைப்பார்க்கும்போது எனது அன்னையின் கதியைப்பற்றி நிச்சியமாகத் தெரியவில்லை போன்றல்லவோ தோன்றுகிறது. அவள் இறந்துதான் போயிருக்கவேண்டுமென்று அனுமானப் பிரமாணத்தின் மீது கூறுகிறீர்கள் போலும்! ஆனால் திட்டமாக யாதொன்றும் தெரியவராதுபோலும்! பாலகிருஷ்ணரே! தங்களது அபிப்பிராயமென்ன?"

பால:—"நானும் மங்கையர்க்கரசியைப்போன்று தான் அபிப்பிராயப்படுகிறேன். மாமா! அத்தையவர்கள் இறந்திருந்தால் தாங்கள் திட்டமாக இதுகாலை கூறலாமன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவிஷயத்தில் ஏதோ ஒரு பெரிய மர்மம் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிடில் அதற்கு தகுந்த காரணங்களுடன் அத்தை இறந்துவிட்டதாக வெளிப்படுத்துங்கள். இதில் என்ன பயம்? பெண்ணே! உனது தந்தையவர்கள் இந்த இரகசியத்தை எக்காரணங்கொண்டோ நம்மிடம் கூருமல் மறைத்துவைக்க முயலுகின்ருர்கள்."

மங்:—"ஆம்! அப்பா' தாங்கள் நடந்ததைக் கூறத்தான் வேண்டும். எனது அன்னை இறந்திருக்கவே முடியாது. இதன் உண்மையான நடவடிக்கைகளைக் கூருவிட்டால் என் மனம் புண்படும். இவ்விதம் உண்மையை மறைக்க முயலுவது தங்களைப் போன்றுள்ள பெரியார்களின் செய்கைக்கு—நடத்தைக்கு—ஒழுக்குக்கு முற்றிலும் முறண்பாடுடையது. ஆதலால் நடந்ததைக் கூறிவிடுங்கள். அப்பா! தங்களது தலைக்கு வாள் வந்தாலும் நான் எனது தலையைக் கொடுத்து தங்களைக் காப்பாற்றுகிறேன். தாங்கள் ஏன் இவ்விதம் பின்னடையவேண்டும்? தைரியமாகக் கூறுங்கள்"

பால:—"இனிமேல் தாங்கள் மௌனஞ்சாதிப்பது நன்றன்று. தங்களது பெயருக்கு இழுக்கைத் தேடிக் கொள்வதுமன்றி, எங்களிருவருக்கும் மகத்தான கொடுமைகளை இயற்றிய பழிக்கு ஆளாகிவிடுவீர்கள். ஆதலால் வீண் காலதாமதஞ்செய்யாது இதன் இரகசிய வரலாற்றைக்கூறி அவளைத் தேற்றுங்கள்."

ஜேய:—"குழந்தாய்! இந்நாள்வரையும் இந்த இரகசியத்தைக் கூருததையிட்டு என்னைக் கோபியாதே. உனது க்ஷேமத்தைக் கருதியே நான் நடந்தவற்றைக் கூருது, உனது அன்னை இறந்து போய்விட்டதாகக் கூறினேன். ஏனெனில் இளஞ்சிறுமியாகிய உன்னிடம் "உனது அன்னை மாயமாய் மறைந்துவிட்டாள்" என்று கூறினல் நீ அதே நினைவுகொண்டு மனம் வருந்தவும் கூடுமன்ருே! அவ்விதமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நானும் சந்தோஷமற்ற—நிம்மதியற்றவனுகவே காலங் கழிக்கவேண்டியது நேரிட்டுவிடும். உனது சுகதுக்கங்களே எனது சுகதுக்கங்கள். உன் க்ஷேமத்தைக் கருதியே நான் மறுமணம் புரியாது வாழ்ந்துவருகிறேன் என்பதையும் இப்போது தெரியப்படுத்திக்கொள்கிறேன். உனது எதிர் கால சுகவாழ்விற்காக எனது சுகவாழ்வை வெறுத்து உன் க்ஷேமலாபங்களிலேயே கண்ணுங்கருத்துமாக காலங்கடத் தும் நான், நீ உனது அன்னையைப்பற்றி சதா சிந்தித்துக் கொண்டு உனது உடலை நீ கெடுத்துவிடில் அதனுல் நான் எவ்வளவு மனம் வருந்துவேன் என்பதை நான் கூறி நீங்கள் அறிய வேண்டுமென்பதில்லை. நீங்களே யூகித்தறிந்து கொள்ளலாம். நான் தற்போது கூறிய விசேஷகாரணங் களை முன்னிட்டே உன்னிடம் இதை நான் கூருமலிருந் தேன். நீ இப்போதாவது எனது மனப்பான்மையை ஒரு வாறு அறிந்திருக்கக்கூடும். என்மீது கொண்டுள்ள அவ நம்பிக்கையையும் இதற்குமுன்பு நீங்களிருவரும் நீக்கியிருக் கக்கூடும். இனி நான் உனது அன்னையின் மாயமறைவைக் கூறுகிறேன் கவனமாகக் கேளுங்கள்.

குழந்தாய்! நீ பத்துவயதுச் சிறுமியாயிருக்கும் பொழுது உனது அன்னை சிற்சில விசேஷமான இடங்களைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்று விரும்பினுள். ஆதலால் நீயும், உனது அன்னையும், நானுமாக மூவரும் பிரயாண மாகினேம். வழியில் ஓர் ஆற்றங்கரையில் சென்றதும் உனது அன்னை அதில் ஸ்நானஞ்செய்யவேண்டுமென்று விரும்பினுள். அவளிஷ்டப்படி முதலாவது நான் ஸ்நானஞ்செய்தேன். உன்னையும் ஸ்நானஞ்செய்வித்துவிட்டு சற்று அப்பாலுள்ள ஓர் மரத்தடியில் நாமிருவரும் தாமதித்தோம். உன் அன்னை பின்பு ஸ்நானஞ்செய்யச் சென்ருள். நான் உன்னிடம் பற் பல சிறுவேடிக்கையான கதைகளைக் கூறிக்கொண்டேயிருந் தேன். இதற்கிடையில் நீண்ட நேரமாய்விட்டது. நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்டேன். உனது அன்னை இவ்வளவு நேரமாகியும் ஏன் வந்து சேரவில்லையென்று என்னுள் வினவியவாறு நதியினருகில் சென்றேன். என் அருமையான மனைவி சுசீலாதேவியைக்காணோம். அந்தோ! நான் என் உயிரையே பறிகொடுத்தவன் போலானேன். அங்குள்ள ஓர் கல்லின் மீது அவளது சில நகைகள் வைக்கப்பட்டிருந்தன. ஆகலால் அங்கு வெகுநேரம் காத்திருந்தேன். அவள் மீண்டும் வரவேயில்லை. அவள் தண்ணீரால் அடித்துக்கொண்டு போயிருக்கக்கூடுமென்று எண்ணவும் இடமில்லை. நதியில் தண்ணீர் மெதுவாகவும் கொஞ்சமாகவுமே சென்றது. அவ்விதம் அடித்துக்கொண்டு போயிருப்பினும் அந்நிமிஷம் அவள் நம்மைக் கூவியழைத்திருக்கக் கூடுமன்றோ! பின்பு நான் அவ்விடமெங்கும் தேடித்திரிந்தேன்! என் மூளை புரண்டுவிட்டது. இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. உயிரற்ற எனது உடலைச் சுமந்துகொண்டு உன்னையும் கூட அழைத்துக்கொண்டு இவ்வூர்வந்து சேர்ந்துவிட்டேன். பல பேர்களை அந்நதியையடுத்துள்ள இடங்களில் அனுப்பித் தேடிப்பார்த்தும் பயனில்லை. எனது விசனம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துகொண்டே சென்றது. இதன்றி உனது தொந்தரவும் ஒருபக்கம் அதிகரித்தது. உன்னிடம் ஒவ்வொருநாளும் ஒவ்வொருபொய்யைக்கூறி விட்டேன். உனது அன்னை பட்டணத்திற்கு சென்றிருப்பதாகவும் உனக்கு விளையாட்டு சாமான்களையும் தின்பண்டங்களையும் வாங்கிவருவதாகக் கூறி ஏமாற்றினேன். லண்டனுக்குச்சென்றிருப்பதாகவும் சிலநாள் கடத்தினேன். இறுதியாக என்கண்மணி சுசீலாதேவி இறந்துவிட்டதாக உன்னிடம் கூறிவிட்டேன். நீ அழுது புரண்டாய். அநேக நாட்கள் நீ அன்ன ஆகாரம் உட்கொள்ள மறுத்துவிட்டாய். பின்பு ஒருவிதமாக உனதுகவலையைத்தொலைத்துக்கொண்டே சென்றேன். எறிகிறகொள்ளியில் எண்ணெய் வார்த்தார் போல், ஏற்கனவே பரிசுத்தவதி சுசீலாவின் பிரிவால்வாட்ட

முற்றிருக்கும் எனக்கு உன் விசனம் என்னை துன்பக்கடலில் அப்படியே ஆழ்த்திவிட்டது. நான் என்னதான் செய்ய முடியும்! என்னால் கூடியமட்டும் பிரயாசைப்பட்டும் கருணை வள்ளலான கடவுள் என்மீது பராமுகமாகவே இருந்துவிட்டார். பின்பு உன் அன்னையின் நினைவை ஒருவாறாக அந்த ஜெகதீசன் உன் மனதிலிருந்தும் வேரோடு பிடுங்கிவிட்டான்.

குழந்தாய்! என் குல விளக்காகிய சுசீலாதேவி என்ற கற்பரசி என்னைவிட்டுப் பிரிந்தபின்பு நான் இந்த உலகில் வாழ்ந்தாலென்ன? வாழாமற்போனாலுமென்ன? என்று மனமுடைந்து ஒரு சந்தர்ப்பத்தில் தற்கொலையும் புரிய முற்பட்டேன். அதுகாலை மந்தகாசமான உனது அழகிய மதிமுகம் என் மனதில்தோன்றி, "அப்பா! நான் இருக்கும்போது நீங்கள் ஏன் இவ்விதம் செய்யத்துணியவேண்டும். தாங்கள் இவ்வுலகைவிட்டு மறைந்தால் சின்னஞ் சிறுமியாகிய என் கதிஎன்னவாகும்! என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்! தாங்கள் என் பொருட்டேனும் உயிருடன் இருக்கவேண்டியது அவசியமன்றோ!" என்று இரங்கியகுரலுடன் கேட்டுக் கொள்வதுபோல் தோன்றியது. மறுநிமிஷம் எனது முயற்சி தோல்வியடைந்துவிட்டது. நானும் இறந்துபடின், நீ தாயும் தந்தையுமில்லாத அனாதையாகி தனிக்கவேண்டி வருமென்று என் மனம் கூறியது. உன்பொருட்டேனும் நான் உயிருடன் இருக்கவேண்டியது அவசியமாகிவிட்டது. அன்று முதல் நான் உன்விஷயத்தில் அதிகக்கவலை கொண்டிருந்தேன். சிற்சில சமயங்களில் உனது அன்னையின் நினைவுவரவே என் கண்களினின்றும் நீர்வடிய ஆரம்பித்துவிடும். அவளது நினைவை எனது மனதிலிருந்தும் களையமுயன்றும் எனது முயற்சிதோல்வியடைந்தது. உன் அன்னையின் நினைவு என் மனதிலிருந்தும் சிறிதும்மறைய நீண்டநேரஞ் சென்றுவிடும். அப்போது நான் நரகவேதனையினின்றும் தப்பியவனாவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமாக இப்போது பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் உன் அன்னையைப்பற்றி யாதொன்றும் தெரியவில்லை. அவள் வெகு சாமர்த்தியமானவள். அருங்குண பூஷணி. என்னிடத்து அபாரமான அன்புடையவள். என் விஷயத்தில் அதிகக் கவலையெடுப்பவள். அத்தகைய மாதரசி உயிருடனிருப்பின் இதுவரையிலும் எவ்விதமாகிலும் என்னிடம் வந்துசேராமலிருந்திருக்க மாட்டாள். ஆதலால் அவள் இவ்வுலகவாழ்வினின்றும் விடுதலையாகி செல்லுகையில், அவளிடத்து மட்டற்ற அன்பு செலுத்திவரும் என்னிடம் விடைகேட்டால் நான் தாமறுக்கக் கூடுமென்றெண்ணி என்னிடம் கூறாமலே சென்றிருக்கக்கூடும். அல்லது கொள்ளையரிடம் அகப்பட்டிருப்பினும் உன் அன்னை சுசிலா முகமலர்ச்சியுடன் தனது மேலணிந்திருக்கும் ஆபரணங்களில் மாங்கல்யம் நீங்கலாக யாவற்றையும் கொடுத்திருக்கக்கூடும். அவ்விதமாயினும் அவளை அவர்கள் விடுவித்திருக்க வேண்டும். அவ்விதம் நிகழ்ந்தால் நான் அவர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவளைப் பற்றி யாதொரு தகவலும் இந்நாள்வரை கிடைத்திலது!” என்று பேசிக்கொண்டேபோனார். இவைகளையெல்லாம் பாலகிருஷ்ணனும் மங்கையர்க்கரசியும் கவலைதேங்கிய முகத்துடன் கேட்டுக்கொண்டேயிருந்தனர். மூவரது கண்களினின்றும் நீர் ததும்புகின்றது. சிறிதுநேரம் யாவரும் மௌனமாக வீற்றிருந்தனர். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஆனால் மங்கையர்க்கரசி வெகு அன்புடன் தன் உயிரைப்போன்று எண்ணி வளர்த்துவந்த பஞ்சவர்ணக்கிளி ஓடோடியும் வந்ததால் சிறிது இரைச்சல் உண்டாகியது. மங்கையர்க்கரசி தனது உள்ளங்கையில் மோவாய்க்கட்டையை வைத்து சாய்ந்துகொண்டு ஏதோ ஆழ்ந்தசிந்தனையிலாழ்ந்திருந்தாள். அந்த இடத்திற்கு பறந்துவந்த பஞ்சவர்ணக்கிளி மங்கையர்க்கரசியின் கரத்திலமர்ந்து “அக்கா! ஏன் விசனத்துடனிருக்கிறீர்! அம்மா வெகு விரைவாக வருகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். நாம் இருவரும் எதிர்கொண்டழைப்போம். எழுந்திரு அக்கா" என்று சற்றும் எதிர்பாராதவிதமாக மொழிந்தது. இதைச்செவியுற்ற மூவரும் திடுக்கிட்டு அந்த கிளியிடம் ஏதோவினவ முயன்றனர்.

இக்கிமிஷம் "நாதா! மங்கையர்க்கரசி!" என்று மெல்லியகுரலில் அழைத்தவாறே ஓர்மாது இவர்கள் மூவரும் வீற்றிருந்த இடத்திற்கு வந்தனள். இக்குரலைகேட்ட மூவரும் திகைப்படைந்தனர். ஜெயராமர் எழுந்து இக்குரல் யாருடையது என்று பார்ப்பதற்காக ஓரடி எடுத்துவைத்தார். இக்கிமிஷம் மேற்குறிப்பிட்ட மாதும்வரவே நமது ஜெயராமர் "கண்ணே! சுசிலா! இவ்வளவுநாளும் எங்கு சென்றனை! என்னைவிட்டுப் பிரியவும் உன்மனம் துணிந்துவிட்டதா! சுசிலா! உன்னைக்காணாது நானும் நமது அருமைக்குழந்தையும் படும்பாட்டை என்னென்று கூறுவேன்! என்குலவிளக்கே! நீ மீண்டும் திரும்பிவந்துவிட்டது எனது நல்லதிர்ஷ்டமன்றோ!" என்று கூறியவாறே அம்மாது சிரோன்மணியை தமது மார்புடன் அணைத்துக்கொண்டு தடவினர். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

"நாதா! நான் சென்ற இடத்தைக்கூறுகிறேன். நமது இன்பவடிவான மங்கையர்க்கரசி எங்கே? அவள் க்ஷேமந்தானே! பிரிவாற்றாமை என்ற கொடுமையை சிறுமியாகிய என்குழந்தை எவ்வாறு சகித்துக்கொண்டிருந்தாள்? நாதா! செல்வியை எங்கே?" என்று சுசிலா என்ற அம்மாது ஆர்வமுடனும் ஆத்திரத்துடனும் தனது கணவராகிய ஜெயராமரிடம் வினவினள். இதற்குள் மங்கையர்க்கரசியும் அங்கு வரவே "அம்மா! என்னை ஏமாற்றிவிட்டு எங்கு சென்றுவிட்டாய்? இப்போதுதான் உன்னைப்பற்றி நாங்கள் மூவரும் வருந்திக்கொண்டிருந்தோம். அம்மா! என்னைவிட்டுப் பிரிய நீ எவ்விதம் துணிவுகொண்டாய்?" என்று அவளைக் கட்டிக்கொண்டே கொஞ்சியவாறு கேட்டுக்கொண்டாள். அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிஷம் சுசீலா எவ்வித நிலைமையிலிருந்திருப்பாள்! வருஷக் கணக்காக பிரிந்திருந்த தனது ஏகபுத்திரியை அப்படியேவாரி யணைத்து முத்தமிட்டுக் கொண்டாள். இதற்கிடையில் பால கிருஷ்ணனும் வந்துசேரவே அவனும் தனது அத்தையை நமஸ்கரித்தான்.

பின் அனைவரும் அமர்ந்தனர். நீண்டநாளாக பிரிந்திருந்த தனது அன்னையின் மடியிலேயே மங்கையர்க்கரசி அமர்ந்துகொண்டாள். கண்ணிமைகொட்டாமல் அன்னையின் வதனத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். இதைக்கண்ணுற்ற ஆடவர் இருவரும் பேராச்சிரியமடைந்தனர். "அம்மா! நீ மிகவும் களைப்பாகத் தோன்றுகிறாய். நான் காப்பிகொண்டு வருகிறேன். அதையருந்தி ஆயாசம் தீர்ந்தபின்பு நீ பேசலாம். கொஞ்சம்இரு. நான் இதோ கொண்டுவருகிறேன்" என்று கூறியவாறே சிறு மான்குட்டியைப்போன்று துள்ளிக்குதித்து சமையலறைப்பக்கம் சென்றாள். சுசீலாவும் அவளைப் பின்தொடர்ந்துசென்றாள். "குழந்தாய்! நான் காப்பி தயாரிக்கிறேன். நீ வெளியில் சென்று அங்கு என்னைப் பின்தொடர்ந்துவந்த மூன்று ஆடவர்கள் நிற்பார்கள். அவர்களை இங்கு அழைத்துவந்து அமரச்செய்வாயாக! அவர்கள் எனக்குத்துணையாக ஓர் புண்ணிய புருஷரால் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களை அழைத்துவா" என்று சுசீலா மங்கையர்க்கரசியிடம் கூறினாள்.

இதுசமயம், பூந்தோட்டத்திற்கு புஷ்பம் பறிக்கச் சென்றிருந்த தோழியும் சமையலறை வந்துசேர்ந்தாள். சுசீலாவைக்கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அவளை வணங்கினாள். பின்புதானே காப்பி தயாரிப்பதாகக்கூறினாள். ஆதலால் தாயும் மகளும் முன்பக்கம்சென்று முன் குறிப்பிட்ட மூவரையும் அழைத்துவந்து முகம், கை, கால்களை சுத்தம் செய்வித்து அமரச்செய்தனர். மறுநிமிஷம் காப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பலகாரமும் கொண்டுவரப்பட்டது. அதை அனைவரும் புசித்தனர்.

பின்பு சம்பாஷணை ஆரம்பமாகியது. சுசீலா தான் ஆற்றில் ஸ்நானஞ்செய்து கொண்டிருக்கும்போது மதயானை யைப்போன்ற ஓர் அபூர்வமான மனிதன் வந்ததாகவும், திடீ ரென தன்னை தூக்கி கை கால்களைக் கட்டியதாகவும், தான் சப்தமிட முயற்சித்தும் பயன்படவில்லையென்றும், தன்னை ஓர் மலைக்குகையில் போட்டு அடைத்ததாகவும், தன்னைப் போன்றே அங்கும்பலர் அடைக்கப்பட்டிருந்தனரென்றும், அவன் ஓர் அரக்கனென்றும்" நாள் ஒன்றுக்கு ஒருநபரை புசிப்பது அவனது வழக்கமென்றும், சில தினங்களுக்கு முன்பு மனோஹரன் என்ற ஓர் அரசகுமாரன் வந்து அரக் கனைக்கொன்றதாகவும், அரக்கனது உயிர் பிரியுமுன்பு முன் ஜென்மவரலாற்றை மனோஹரன் வெளியிட்டதாகவும் இதைக் கேட்டு அரக்கன் மனங்கசிந்து மன்னிப்புக்கேட்டதாகவும், அவனது முன்ஜென்ம வரலாற்றையும், அரக்கனது உயிர் நீங்கியபின்பு அவனது உடலை மிருகங்களுக்கு வீசிவிட்டதாக வும், மனோஹரன் தனது சொந்த முயற்சியால் மனோஹர புரமென்ற நவீன விதமான கிராமத்தை ஸ்தாபித்து ஆக்ஷி புரியுந் திறத்தையும் தற்போது அவன் இருக்கும் நிலையை யும், அவனது புகழ்ச்சியையும் மற்றும் யாவற்றையும் விபர மாக கூறிமுடித்தாள்.

இதைச்செவிமடுத்த மற்றவர்கள் ஆச்சரியமடைந்தனர். கட்டுக்கதைகளில் கூடபடித்திராத இத்தகைய சம்பவத் தைக்கேட்ட மங்கையர்க்கரசி பன்மடங்கு அதிகமாக ஆச் சரியமடைந்தனள். பின்பு பேசலானாள்:—"அம்மா! தங் களது உயிரைக் காப்பாற்றிய அத்தியாக புருஷசிகாமணி யை நானும்—நாங்களும் காணவேண்டுமென்றே! அம்மா! நீ சிலசமயங்களில் கூறும் கட்டுக்கதைகள்கூட இவ்வளவு அதிசயமாக வில்லையே!" என்று மங்கையர்க்கரசி கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம்! அம்மா! அவ்விதம் தான் இருக்கிறது, ஈசனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று." என்று சுசீலா கூறினாள்.

இதற்கிடையில் இராஜேந்திரனும் இராமநாதரும் அவ்விடம் வந்துசேர்ந்தனர். இதைக்கேட்டு அவர்களும் ஆச்சரியமடைந்தனர். நமது இராஜேந்திரன் மாத்திரம் சுசீலாதேவி கூறியதை வெகுகவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். ஜெயசீலரின் பெயரைக்கேட்கும் பொழுதெல்லாம் அது இராஜேந்திரனின் முழுகவனத்தையும் இழுத்துவிடும். ஆதலால் இதன் அதாவது ஜெயசீலரின் வாழ்க்கைச்சரிதையை நன்கு அறியவேண்டுமென்று விரும்பினான் ஆனால் அவனது துர்அதிர்ஷ்டம் சுசீலாதேவிக்கு ஞானி ஜெயசீலரின் சரிதை நன்கு தெரியவராமலே போய்விட்டது. ஆதலால் தான் நேரிற்சென்று அந்த ஞானியிடம் சம்பாஷிக்கவேண்டுமென்றுவிரும்பினான். அதற்குத்தகுந்த சமயம் என்று வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இவ்வாறாக அன்று முழுவதும் இதே விஷயத்தைப்பற்றி பேச்சு நடந்தது. அவ்வூர்முழுவதும் இதே சமாச்சாரத்தைப்பற்றியே பிரபல்யமாய் பேச்சு உலவியது. சில தினங்கள் கழித்து ஆள்வார் காட்டிற்கு செல்லவேண்டுமென்று நமது நண்பர்கள் தீர்மானித்துக்கொண்டனர். இனி நாம் பம்பாய் கப்பலில் பிரயாணப்பட்ட குணசேகரன், சீதாலெக்ஷ்மி, சுந்தரி ஆகியவர்களைப்பற்றி ஆராய்வோம்.

குறிப்பிட்டநாளில் கப்பல் பம்பாய் வந்துசேர்ந்தது. முன் கடிதத்தில் குறிப்பிட்டவண்ணம் இராஜேந்திரனும், இராமநாதரும், ஜெயராமரும், வேணுகோபாலரும் பம்பாய் துறைமுகத்திற்கு வந்து இவர்களை எதிர்நோக்கிக்கொண்டிருந்தனர். இம்மூவரைக்கண்டதும் அவர்களடைந்த சந்தோஷத்திற்குமோர் எல்லையுண்டோ? வந்த மூவரும் இவர்களை முறையே வணங்கினர். பின்பு க்ஷேமலாபங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்துக்கொண்டே பிரயாணமாகி பூனு வந்துசேர்ந்தனர். வழிநெடுக ஒவ்வொருவரும் தாம் பிரிந்ததுமுதல் தற்போது கூடினதுவரையும் நடந்தவைகளைக்கூறினர். அவர்களும் ஆச்சரியமடைந்தனர். இவ்விதமாக கிருஷ்ணவிலாஸ் பங்களாவை யடைந்தனர். இவர்களை பாலகிருஷ்ணனும் மங்கையர்க்கரசியும் எதிர்கொண்டு வரவேற்றனர். மங்கையர்க்கரசி, சீதாலெக்ஷ்மியையும் சுந்தரியையும் தனது அறைக்கு அழைத்துச்சென்றனள். மங்கையர்க்கரசியை அவர்கள் முதன்முதலாக யாரென்பதை அறியவில்லையென்றாலும் பின்பு தெரிந்துகொண்டனர். ஒவ்வொருவருடைய க்ஷேமங்களையும் வெளியிட்டனர். ஜெயராமரும் சுசீலாம்தனியும் வந்தவர்களை வெகு அன்புடன் வரவேற்றுபசரித்தார்கள்.

பின்பு யாவரும் மனோஹரபுரத்திற்கு மறுநாளை பிரயாணமாகிச் சென்றனர். மனோஹரனைக் கண்டதும் அவனது வீரச்செயலைப்புகழ்ந்து, தத்தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். பின்பு இவர்களது விருப்பப்படி மனோஹரன் இவர்களை ஜெயசீலரிடம் அழைத்துச் சென்றான். புவனேசுவரி மற்ற மாதர்களுடன் ஜெயசீலரிடம் வந்து சேர்ந்தாள். (மற்ற மாதர்கள் என்றால் பூனுதேசத்திலிருந்து பிரயாணமாகிய பெண்களேயாவர்.) இவர்களை ஞானி உள்ளன்புடன் வரவேற்றார். இராஜேந்திரனது வேண்டுகோளுக்கிணங்கி அவர் தமது வரலாற்றைக் கூறினார்.

இதைக்கேட்டு இராஜேந்திரன் மனம் வருந்தினான். ஆனால் அவரது உறுதியான கொள்கையையும் துறவிக்கோலங்கொண்ட வாழ்க்கையையும் தம்முள் மெச்சிக்கொண்டான். பின்பு இராஜேந்திரன் தான் சரோஜினியை அறிவதாகவும், அவளது மனப்பான்மையையும், அவளது கற்பின் மகிமையையும், நாடுசுற்றித் திரிந்ததையும், ஜெயசீலரை ஓர் ஆலயத்தில் சந்தித்ததாக தனக்கு ஓர் கடிதம் வரைந்ததாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், தன் சகோதரி சீதாலெக்ஷ்மிக்கு உதவி செய்ததையும், பின்பு அவளது முடிவையும் விவரமாகக் கூறி முடித்தான். இதைக்கேட்ட ஞானி சரோஜினியை தாம் மெச்சிக்கொள்வதாகவும் ஆனல் ஈசன் தங்களிருவரின் நட்புக்குசிறிதுகாலத்தினுலேயே முடிவு கணித்துவிட்டானென்றும், தமக்கு சந்யாசமே சன்மார்க்கமாகத் தோன்றுவதாகவும் கூறினர். பின்பு இரண்டொருநாள் தாமதித்துவிட்டு பூனு வந்துசேர்ந்தனர்.

பின்பு பூனுவில் யாவரும் கூடி ஆலோசித்தபின்பு ஓர் முடிவு செய்யப்பட்டு முகூர்த்தநாளும் நியமிக்கப்பட்டது. ஸ்ரீமுக ஞு ஆனி மீ 27-ம் உ திங்கட்கிழமை சுபயோக சுபதினத்தில் பூனு கிருஷ்ண விலாஸ் மாளிகையிலேயே திருமண வைபவம் நடைபெற்றது. முகூர்த்தப் பத்திரிகைகள் வெகு அழகாக அச்சிடப்பெற்று பல திக்குகளிலும் பறந்தன. ஒவ்வொருவரும் தாம் விரும்பியவர்களையே மணஞ்செய்துகொண்டனர். இராஜேந்திரன் செல்வி சுந்தரியையும்; குணசேகரன் சீதாலெக்ஷ்மியையும்; பாலகிருஷ்ணன் மங்கையர்க்கரசியையும் மணந்துகொண்டனர்.

மணவைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பட்டணப்பிரவேசத்தில் மண தம்பதிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இரத்தினங்களாகவே காணப்பட்டனர். இவர்களது அழகைக் கண்ணுற்ற ஆண் பெண் இருபாலாரும் இது ஓர் அழகுப்போட்டிக் காக்ஷியென்றும், தெய்வலோகத்திலிருந்து அவ்வறுவரும் எவ்விதமாகவோ வழிதப்பி வந்துவிட்டனரென்றும் ஐயங்கொண்டனர். ஆதலால் அப்பெண் ரத்தினங்கள் அழகுப்போட்டியில் யாவர் வெற்றியடைந்தனர் என்பதை தாம் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனரென்றும் கருதினர். ஆனல் செயலனவிலோ முடியாதகாரியம் என்று வெட்கமடைந்தனர்.

மணத்தம்பதிகள் ஒவ்வொருவரின் வதனத்திலும் புன்முறுவல் பூத்திருந்ததானது அவர்களது இயற்கையழகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மடங்கு அதிகரித்தது. பட்டணப் பிரவேசத்தில் பற்பல அற்புதமான வேடிக்கைகள் நடத்தப்பட்டன. நாகசுரக்காரரைச்சுற்றி ஒரு குழுவினரும், பாண்டுவாத்தியக்காரரைச்சுற்றி ஒரு குழுவினரும், சதுர்க்கச்சேரியைச் சுற்றி ஒரு குழுவினரும், மணத்தம்பதிகளைச்சுற்றி ஒரு பெருங்கூட்டமும் இவ்விதமாக நீண்ட தூரம் ஜனக்கும்பலாகவே தோன்றியது. அன்று அவ்வூரில் ஒருநாளுமில்லாத திருநாளாகவே காக்ஷி யளித்தது. அவ்வூரில் இவ்விதமான ஜனக்கும்பல் கூடியது இதுவே முதற்தடவை என்று கூறலாம். பற்பலவிதமான தர்மங்களும் அன்று நடைபெற்றது. ஆயிரக்கணக்காக ரூபாய் செலவழித்தால் அதன் சிறப்பை வரையவும் வேண்டுமா? நீண்டநேரஞ்சென்றபின்பே பட்டணப்பிரவேசம் முடிந்து கிருஷ்ணவிலாஸ் பங்களாவை யடைந்தனர்.

இதே தினத்தில் ஆள்வார் தேசத்திலும் மனோஹரனுக்கு புவனேசுவரியையும், தர்மபாலாவுக்கு பர்வதவர்த்தினியையும் பெரியோர்களால் மணமுடிக்கப்பட்டது. கொடிய வறுமை வாய்ப்பட்ட அத்தேசத்து மக்கள் இம்மண வைபவத்தில் ஊக்கத்துடன் உழைத்து வந்தனர். எங்கு நோக்கினும் அன்று வெகு அழகாகப் பந்தலிடப்பட்டிருந்தது. அரசகுடும்பத்திற் பிறந்த அரசிளங்குமாரருக்கு மணவைபவம் நடைபெறின் அதன் சிறப்பை நாம் வரைந்து நண்பர்கள் அறியவேண்டுமென்பதில்லை. ஒவ்வொருவரும் யூகித்தறிந்துகொள்ளலாம். அம்மண வைபவத்திற்கு பிரதேசங்களினின்றும் பல்லாயிர ஜனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். பூனவும், ஆள்வாரும் அன்றையதினம் சொர்க்கலோகமோ மென்னத்தக்கவிதமா யிருந்தது என்று மாத்திரம் பொதுவாகக் குறிப்பிட்டாலே போதுமானதாகும்.

மணம் முடிந்தபின்பு மனோஹரன் தம்பதிகளும் மற்றவர்களும் மனோஹரபுரத்திற்குப் பிரயாணமாகினர். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வந்ததும் அவ்வூர் மக்களால் அன்புடன் வரவேற்கப்பட்டனர். பின்பு அவ்வூரிலும் பட்டணப்பிரவேசம் நடைபெற்றது. பின்பு சில நாள் அங்கு தங்கியிருந்துவிட்டு மனோஹரன் தம்பதிகள் நீங்கலாக மற்றவர்கள் ஆள்வாருக்கு சென்றனர். மனோஹரனும் மனோஹராபுரத்தை முன்னைவிட மேலாக ஆக்ஷி புரிந்தான். நாளடைவில் ஆள்வாருக்கும் மனோஹரபுரத்திற்கும் நீங்காத தொடர்பு ஏற்பட்டு சகோதரநாடுகளாகத் திகழ்ந்தன. இருநாட்டு அரசர்களும் "பொது ஜனங்களின் ஏகோபித்த அபிப்பிராயம்" என்ற அஸ்திவாரத்தின்மேல் அரசாண்டு வரலாயினர். நமது ஞானி ஜெயசிலரை அனுதினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வந்து தெரிசித்தனர். இவரது புகழ் நாடெங்கும் காட்டுத்தீ போன்று பரவியது. மனோஹரன் தம்பதிகள் ஞானி ஜெயசிலரிடம் வெகு பயபக்தியுடனும் அந்தரங்க சுத்தியுடனும் நடந்துகொண்டனர்.

தேனும் பாலும்போன்ற தம்பதிகளின் காதல்விருக்ஷத்தில் சில வருடங்களிலேயே சுவர்ணபிம்பம்போன்ற ஆண், பெண் குழந்தைகளாகிய கனிவர்க்கங்கள் கிடைத்து விட்டன. இராஜேந்திரனுக்கும் சுந்தரிக்கும் ஆண்மகவொன்று எல்லாம் வல்லஇறைவனால் அளிக்கப்பட்டது. குணசேகரருக்கும் சீதாலெக்ஷிமிக்கும் அழகே உருவெடுத்து வந்தாற்போன்ற ஓர் பெண்மகவு ஈசனால் அளிக்கப்பட்டது. பாலகிருஷ்ணனுக்கும் மங்கையர்க்கரசிக்கும் தங்கவிக்கிரகம் போன்ற ஒரு பெண்மகவு ஜெகதீசனால் அளிக்கப்பட்டது. நீண்டநாளாக ஓர்மகவைப் பெறவேண்டுமென்ற அவாவுடனிருந்த மனோஹராபுரத்தின் இளவரசன் மனோஹரனுக்கும் தியாகச் செல்வி புவனேசுவரிக்கும் கருணைவள்ளலான கடவுள், மனோஹரனைப்போன்ற அழகுடைய ஓர் ஆண் மகவை அளித்துவிட்டான். தர்மபாலாவுக்கும் பார்வதவர்த்தினிக்கும் ஓர் பெண்மகளைச் சர்வேசுவரன் அளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள்யாவும் மழலை மொழியாகிய மதுவை அள்ளி இறைக்கின்றன. இதை வெகு ஆர்வமுடன் உட்கொண்ட பெற்ரோர் மதிமயங்கி அவர்களை தம்மிடமிருந்தும் பிரியவிடாது அன்புடன் வளர்ந்துவந்தனர். தம் விருப்பத்தின்படி தாம் காதலித்த பெண்களையே தமக்கு மணம்செய்வித்து, தம்மனத்திற்குகந்த மக்களையும் ஈந்த கருணைவள்ளலான கடவுளையாவரும் அந்தரங்க சுத்தியுடன் துதித்து வரலாயினர். நம்பியவர்க்கபயம் நயந்தளிக்கும் விஸ்வாசன் இத் தம்பதிகளுக்கும் குறைவற்ற செல்வத்தையும், தீர்க்காயுளையும், நோயற்ற வாழ்க்கையையும் மனமுவந்தளித்தான். தம்பதிகள்யாவரும் இணைபிரியாது சதையும் நகமும்போன்று ஒற்றுமையுடன் இல்லறதருமத்தை நீதிநெறி வழுவாது நடத்திவரலாயினர்.

சுபம்! சுபம்! சுபம்!

இராஜேந்திர சுந்தரி

அல்லது

தியாகச்செல்வனின் தீரச்செயல்.

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்டான்லி பிரஸ்"
நிர். 63, மலிபான் தெரு,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு எங்கும் புகழ்பெற்றவரும்

தங்கப் பதக்கங்கள் பரிசு பெற்றவருமான

# வடுவூர். கே. துரைசாமிஐயங்கார் B. A.

அவர்களால் தித்திக்கும் நடையில் எழுதப்பட்ட

## அற்புதமான நாவல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பூர்ண சந்திரோதயம் (4 பாகமும்) | 7 | 8 | 0 |
| 2 | சௌந்தர கோகிலம் (3 பாகமும்) | 6 | 0 | 0 |
| 3 | மாயா விநோதப் பரதேசி (2 பாகமும்) | 5 | 0 | 0 |
| 4 | திகம்பரசாமியார் பால்ய லீலை (2 பாகமும்) | 5 | 0 | 0 |
| 5 | மதன கல்யாணி (3 பாகமும்) | 4 | 8 | 0 |
| 6 | மேனகா (2 பாகமும்) | 3 | 0 | 0 |
| 7 | கும்பகோணம் வக்கீல் (2 பாகமும்) | 8 | 0 | 0 |
| 8 | விலாசவதி | 3 | 0 | 0 |
| 9 | கனகாம்புஜம் | 2 | 12 | 0 |
| 10 | பாலாமணி | 2 | 8 | 0 |
| 11 | வசந்தமல்லிகா | 1 | 8 | 0 |
| 12 | வித்யாசாகரம் | 1 | 4 | 0 |
| 13 | வஸந்தகோகிலம் | 1 | 4 | 0 |
| 14 | இராஜேந்திர மோகனா | 1 | 4 | 0 |
| 15 | திலோத்தமா | 0 | 12 | 0 |
| 16 | மாயாசுந்தரி | 0 | 12 | 0 |
| 17 | திவான் லொடபடசுங் பகதூர் | 0 | 12 | 0 |
| 18 | மாணிக்கவாசகர் | 0 | 8 | 0 |
| 19 | காட்டு ராஜன் | 0 | 3 | 0 |

**சரஸ்வதி புத்தகசாலை,**

175, செட்டித்தெரு,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமுலு புதிய ஸங்கீத பிரசுரங்கள்.

ஸங்கீத ஸாஹித்ய பரத சாஸ்திர வித்வான்
பிரம்மஸ்ரீ கெ. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களால்
அனேக சீர்திருத்தங்களுடன் புதியதாய் தயாரித்த புத்தகங்கள்.

1. ஸங்கீத சிந்தாமணி ரூபாய் **3.**

இதில் மகான்களாகிய ஜயதேவர், புரந்தர விட்டலர், தியாகராஜ ஸ்வாமிகள் முதலிய வித்வான்களாலியற்றப்பட்டு பிரசித்தி பெற்றிருக்கிற தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், கன்னடம், முதலிய பாஷைகளிலுள்ள கீர்த்தனைகளும் ராகமாலிகைகளும், பற்பல அரிய ராகங்களை வாசிப்பதற்குரிய அனேக குறிப்புகளும் மற்றும் ஸ்வரதாளங்களுடன் அடங்கியிருக்கின்றன. எல்லாம் புதிய விஷயங்கள்.

2. திராவிட கானம். ரூபாய் **3.**

இப்படிப்பட்ட புத்தகம் இதுவரையில் வெளிவந்ததே இல்லை இதில் அடங்கி இருக்கிற எல்லாப் பாட்டுகளும் தமிழே. தமிழ் நாட்டில் பிரசித்திபெற்ற அனேக வித்வான்களுடைய கீர்த்தனங்களும் மற்றும் ஸ்வர தாளங்களுடன், இதில் அகப்படுமென்றால் இப்புத்தகத்தைப் பற்றி வேறென்ன சொல்வது? இப்புத்தகத்தைப் பார்த்தவர்கள் தமிழ் நாட்டில் இவ்வளவு அரிய பாட்டுகள் இருந்தனவோ என்று ஆச்சரியப் படாதிருக்க முடியாது.

3. ஸங்கீத சில்லறைக் கோர்வை ரூபாய் **3.**

இதில் பல்லோர் கீர்த்தனங்கள், சிந்துக்கள், தெம்மாங்குகள், சித்தர் பாட்டுகள், அருட்பா, முத்துவீராயி பாட்டு, பரிகாசப் பாட்டு, பூசாரிப் பாட்டு, முதலிய பற்பல சில்லறைப் பாட்டுகள் ஸ்வர தாளங்களுடன் அடங்கியிருக்கின்றன. இதைபோலொரு புத்தகம் இதுவரை வெளிவந்ததே இல்லை.

4. ராமுலு கீர்த்தனரத்னங்கள் ரூபாய் **1-4-0**

இதில் மகான்களாகிய ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீஜயதேவர் முதலாக 50 பூர்வீக வித்வான்களாலியற்றப்பெற்ற கீர்த்தனங்களும், ஜாவளிகள், பதங்கள், சித்தர் பாட்டுகள் முதலியனவும், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், பாரதக் கீர்த்தனைகள், ராமாயணக் கீர்த்தனைகள் இன்னும் தேவாரங்கள், காவடிச்சிந்து, திருப்புகழ், அருட்பா, பூசாரிப் பாட்டுகள் முதலியனவுமாக 300 கீர்த்தனங்கள் ராகதாள குறிப்புகளுடன் அச்சிடப் பட்டிருக்கின்றன.

சரஸ்வதி புத்தகசாலை,
**175,** செட்டித் தெரு,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச ரோ ஜி னி

அல்லது

இருபதாம் நூற்றுண்டின்

## இணையிலா விநோதங்கள்.

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நாவல்.

அழகே ஓர் உருவமாய் அமைந்த பத்துச் சித்திரப் படங்கள் அடங்கியது.

புஸ்தகம் அச்சிட்டு வெளிவந்த பத்து நாட்களுக்குள் 1500 பிரதிகள் செலவாய்விட்டனவென்பது தமிழ் நாட்டில் இதுவரையிலும் கேட்டறியாத ஆச்சரியமல்லவா?

இருபத்திரண்டு அழகிய அத்தியாயங்களைக் கொண்ட இவ்வற்புத நாவலின்

ஒவ்வொரு அத்தியாயமும் மெஸ்மரிசம் போல மனத்தைக் கவருமென்பது நிச்சயம்,

சுத்தமானகடிதம். நேர்த்தியானஅச்சு. 400பக்கங்கள். கைவசம் இருப்பவை கொஞ்சம் பிரதிகளே !

ஆகையால் மறந்துவிடுமுன் இன்றே ஒன்று வரவழைத்துப்படித்து அதினிலுள்ளஇன்பத்தையறிந்து களிகூறுங்கள்.

---

| | | |
|---|---|---|
| சரோஜினி | தமிழ் பதிப்பு | 2—0—0 |

**சரஸ்வதி புத்தகசாலை,**

175, செட்டித் தெரு,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர மா ம ணி

அல்லது

## காதலால் கட்டுண்ட காதலர்கள்!

---

விலை ரூபாய் இரண்டே!

நாவல்களுக்குளெல்லாம் சிறந்தது—படிக்கப் படிக்கப் பரவசமுறச்செய்வது—ஒருமுறை படிப்பின் சதா மறவாமல் நினைத்து நினைத்து உள்ளம் மகிழத்தக்கது—ஓயாத நகைப்பும் ஆனந்தக் கண்ணீரும் பெருகும் அற்புத நாவல்.

இந்நாவலுக்கு இடப்பட்டிருக்கும்

"ர மா ம ணி" என்னும்

பெயரின் அழகையும் அதன் அறுபத்துநான்கு அத்தியாயங்களுக்கு இடப்பட்டிருக்கும் பெயரையும் வாயால் உச்சரிக்கும் பொழுதே மனம் பூரித்துச் சந்தோஷ நிறைவையடையுமென்பது முக்காலும் தி ண் ண ம்.

நீங்கள் இதைப் படிக்க ஆரம்பித்தவுடன் மந்திரத்தால் கட்டுண்டவர்போல மயங்கி, படித்து முடியமட்டும் ஊணுறக்கம் முதலிய எவ்வித தேகபாதைகளு மற்ற தேவர்கள் போல ஆநந்தசாகரத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்திருப்பீர்களென்பதை நாம் இவ்விடத்தில் முக்கியமாய் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

**சரஸ்வதி புத்தகசாலை,**

175, செட்டித் தெரு,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 50 |
| பத்மசுந்தரன் | 2 | 50 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 50 |
| சாருலோசனா (2 பாகங்கள்) | 2 | 50 |
| காதலின் கனி | 2 | 50 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 00 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 00 |
| சாமளநாதன் | 2 | 00 |
| சண்பகவிஜயம் | 1 | 75 |
| கௌரீமுகுந்தன் | 1 | 75 |
| ஸாரமதி | 1 | 75 |
| சோதனையின் கொடுமை | 1 | 50 |
| பரிமள கேசவன் | 1 | 25 |
| உத்தமசீலன் | 1 | 25 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 00 |
| கதம்பமாலை | 1 | 00 |
| கோபாலரத்னம் | 0 | 88 |
| நளினசேகரன் | 0 | 50 |
| வீரவஸந்தா | 0 | 50 |
| மூன்று வைரங்கள் | 0 | 50 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 50 |
| பக்ஷமாலிகா | 0 | 38 |
| ஜெயசஞ்சீவி | 0 | 25 |

**சரஸ்வதி புத்தகசாலை,**

175, செட்டித்தெரு,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

# "ஜெயசீலன்"

என்னும் இனிய தமிழ் நாவல்

வெளியிடப்படும் தினத்தையே எதிர்பாருங்கள்.

திரு. ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியாரவர்கள்

எழுதியது.

---

இந்நாவலில் ஜெயசீலன் என்னும் இளஞ்சிறுவன் தன் சிற்றப்பனால், ரப்பர் தோட்டக் கங்காணிக்கு விற்கப்படுவதை படிக்குந்தோறும் மனம் இளகும். பின் ஜெயசீலன் சென்னை ஜெயலெக்ஷ்மி பத்திரிகையின் பத்திராதிபராயிருக்கையில் ஒரு கல்விகற்ற பெண் காதலித்தும், பலர் முன்னிலையில், மனைவியாக ஏற்கும்படி அவளின் தந்தைகூறி காலஞ்சென்றதும் இவன் அதற்கிணங்காதபோது அப்பெண் பிரலாபிப்பதை வாசிக்கையில் கல்லுங் கரையும். ஈற்றில் தன் சிற்றப்பனாலேயே இவன் கொலைக் குற்றஞ்சாட்டி விசாரணை செய்யப்படுவதும், முன் காதலித்த பெண் பல ஆதாரங்களுடன் இவனை விடுதலைசெய்வது ஆச்சரியமாயிருக்கும். ஜெயசீலன் தன் மனைவிமீது சந்தேகங்கொண்டு துறவியாக செல்லுகையில் தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தை ஆண் பெண் இருபாலரும் அவசியம் படிக்கவேண்டியது, ஜெயசீலனின் மனைவி தன் நாயகன் பிரிவாற்றாமையால் பலவருடம் சுகவாழ்வை வெறுத்து அன்ன ஆகாரமின்றி தவிக்கையில் அவள் பரிதாபகரமான நிலைமையை இந்நாவலை படித்தால் தான் நன்குதெரியும். தர்மபாலா என்ற உற்ற நண்பனின் உபதேசம் படிக்கப படிக்க மனஞ்சலியாது. இன்னும் பல நீதிமொழிகளையும், உலக அனுபவங்களையும் தன்னகத்தேகொண்டு வெளிவரும் இந்நாவல் சொற்பகாப்பிகளே அச்சடிக்கப் படுமாதலால் முந்திக்கொள்க.

எக்கவுண்டன்ட், லெக்ஷ்மி அன் கம்பேனி.,
89, கோவில் தெரு,
கும்பனித் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைந்த விலை! சிறந்த நாவல்!

# "உண்மைக் காதல்"

அல்லது

# "பரிமளா ராகவன்"

என்னும் இரு காதலர்

## ஓர் இனிய தமிழ் நாவல்.

திரு. ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியாரவர்கள்

எழுதியது.

தான் கோரின பெண்ணை மணக்கமுடியாதென்று ராகவன் துறவியாகச் செல்வதும், இதை யறிந்த காதலி பரிமளாவும் துறவியாகச் செல்வதும், பரிமளா தரும வைத்திய சாலையில் இருவரும் சந்திப்பதும், ஒருவரை யொருவர் தெரியாது தூஷிப்பதும் வெகு விநோதமாயிருக்கும். சகுந்தலா என்ற ஓர் பெண்ணால், ராகவன் சிறைத்தண்டனை யடைவதும், குமாரசாமி வசம் அகப்பட்டுப் பரிமளா தத்தளிப்பதும் படிப்பவர் மனதை இளகச்செய்யுமென்பது திண்ணம். பணச்செருக்கால் அட்டூழியங்களை நெஞ்சு பதறுமல் இயற்றும் பேர்வழிகளுக்கு இந்நாவல் ஓர் புத்தியைப் புகட்டக் கூடியதாயிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் வாங்கிப் படித்தின்புறவேண்டியது மிகமிக அவசியம். இன்றே ஆர்டர் செய்க.

**விலை சதம் 50 தான்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமளாவின் மதிப்புரைகள்.

இந்நூல், திரு. ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியார் அவர்களால் எழுதப்பெற்றதாகும். பலவித இடையூறுகள் ஏற்படினும், உண்மைக்காதல் வெளிப்பட்டே நிலவுமெனவும், காதலருக்கேற்படும் தடைகளைத் தகர்ப்பதற்கோர் ஏற்ற கருவியாகவே அக்காதல் துணைபோகின்றதென்றும் அந்நூலின் கண் விளக்கப்பட்டிருக்கிறது.

"தமிழன்." 4-10-1933

இது ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியாரவர்களால் எழுதப்பட்டது.

உண்மைக் காதலுக்கு அழிவில்லையென்றும், பதிவிரதா தர்மமும் சன்மார்க்கமும் சிறந்ததென்றும், இந்தக் கதையில் ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். பாமரரும் படித்தறியக் கூடிய எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டு அழகான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

"ஜெயபாரதி" 5-11-1933

இது ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியாரவர்களால் எழுதப்பட்டது.

உண்மைக்காதல் இத்தன்மைத்தென்று விளங்குவதோர் அரிய நவீனகம். நடைமிக எளிது. படிப்போருள்ளத்தைப் பரவசமடையச் செய்யும் பான்மையது. திரு. ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியாரவர்களால் எழுதப்பட்டது.

"ஈழகேசரி" 12-11-1930

இது ராகவன், பரிமளா எனுமிருகாதலரின் கதை. ராகவன் என்னும் கதாநாயகன் படித்தவனாயிருந்து முரட்டுக்கதரை யுடுத்து ஏழை ஜனங்களுடன் பிரியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து தேசிய கீதம் பாடிக்கொண்டு போலீஸ் அடக்கு முறைக்காளாகும் ஒரு தேசபக்தன். பரிமளா அவனைக் காதலிக்கும் அவனுடைய காதலி. பரிமளாவின் பெற்றோர்கள் அவளுடைய இஷ்டத்திற்கு மாறாக அவளைப்படிப்பு வாசனை யறியாத பணக்காரனாகிய கேசவனுக்கு மணமுடிக்க முயலுகிறார்கள். ராகவன் சன்னியாசிபோல் தேச சஞ்சாரியாகத் திரிகிறான். அவனைச் சகுந்தலா எனும் ஸ்திரீயொருத்தி காதலிக்கிறாள். பரிமளா தன் பெற்றோர் எண்ணத்திற் கிடமளிக்காமல் வெளியேறிக் கள்வர் கையில் சிக்கிக்கொள்ளுகிறாள். இவ்விதக் கஷ்டங்களைச் சமாளித்து உண்மைக்காதலர்கள் கடவுளருள் பெறுவதாக எளிய தமிழ் நடையில் இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. இடையே சுந்தரவேணி, குமாரசாமி, முத்தம்மாள், பவானிபாய் முதலிய சில்லரையாட்கள் புகுத்துக் கதையில் சுவாரசிய முண்டு பண்ணப்பட்டிருக்கிறது.

"தினகரன்" 9-12-1933

---

பருத்திப்பாடு. 8-12-33

ஐயா!

குசலம். அவாவுற்று விரும்புவதும் அஃதே.

தங்கள் வித்வம் பரிமளிக்கா நிற்கும் "பரிமள ராகவன்" வரப்பெற்றுக் கொண்டேன். பரிமளாவும் ராகவனும் எய்திய இன்பப்பேற்றை ஆசிரியரும் எய்தப் பெறுவதாக. எங்கும் வசன நடை வனப்புடன் திகழும் தங்கள் நாவல் யாவருக்கும் இன்பம் பயக்கத்தக்கதே.

தாங்கள் எளிமையும் தூய்மையும் ஒருங்கே அமையப் பெற்று, வெகு மதுரமான நடையில் எழுதியுள்ள இனிமை ததும்பும் இந்நவீனத்தை வாசகர்கள் வாசித்து இன்புறுவார்களாக! வாசகர்களின் இன்பம் தங்களுக்குப் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோர் ஊக்கத்தை யளித்து, இத்துறையின் கண்ணுள்ள தங்களின் போற்றல் மற்றப் புத்தக ரூபங்களாக வெளிவர வேண்டும் என்பது எனது மனப்பூர்வமான எண்ணம்.

இங்ஙனம்,

தங்கள் அன்புள்ள நண்பன்,

மு. துரைராஜ்.

**M. Thurai Raj, B. A.,**
**Head Master, Board Boys' School, M. P.**

---

True Love or Parimala Raghavan
By
**P. M. R. Muthuswamy Reddiar.**

The story of this Novelette reminds one of Goldsmith's Poem on Angelina and Edwin. Parimala and Raghavan love each other intensely. When, however, Raghavan comes to learn that Parimala is to be given away in marriage to some one whom she detests, he takes the yellow robe and disappears. The distracted Parimala determines to follow her lover, after experiencing many difficulties, she rejoins her lover and the two get themselves married without a moment's delay.

It is a simple story told.

"**Hindu**" March 12, 1934

---

இது கொழும்பிலுள்ள திரு. ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியாரவர்களால் எழுதப்பெற்றது.

சகித்தற்கரிய துன்பங்களை யெல்லாம் சலிப்பின்றிச் சகித்துக்கொண்டு கடமையைக் கைவிடாது செய்துகொண்டிருப்பவர்கள் பிறகு இன்பத்தை யடைவார்கள் என்பதை அறிவுறுத்துவதற் கேற்றதொரு நவீனக்கதையா யிருக்கின்றது. எல்லோரும் கடைப்பிடித்தொழுகவேண்டிய பல நீதிகளும் இதில் இடையிடையே சமயத்திற்கேற்றவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. இதைப் படிப்போர் மனோவெழுச்சியடைந்து நன்னெறிக்குத் தூண்டப்படுவர் என்பதிலையமில்லை.

"தினத்தபால்" 25-6-34

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துசாமி ரெட்டியாரவர்கள் எழுதியது.

துன்பங்களைப் பொறுமையாகப் பொறுத்துக்கொண்டு கடமையைச் செய்பவர்கள் பிறகு இன்பத்தை யடைவார்கள் என்பதுபோன்ற பல நீதிகளைப் புலப்படுத்திக்கொண்டு விளங்குவது இச்சிறிய நாவல்.

"கலைமகள்" மே மீ 1934

சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல: CC 46
A.M. 02-10-1948
பண்டிகுப்பு 01, கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நாவல்! புதிய நாவல்!!

சிறந்த பதிப்பு! உயர்ந்த மதிப்பு!!

அற்ப விலை! பிரமாத விஷயம்!!

சரஸ்வதி புத்தகசாலையார்
சமீபத்தில் புதிதாய் வெளியிட்ட

# சித்ராங்பரி - - -
அல்லது
# - - - சிம்ஹவீரன்.

என்ற இனிய செந்தமிழ் நாவலைப்
பார்த்தோரும் படித்தோரும் படிக்கப்பக்கின்ற
கேட்டோரும் கேட்டோர் சொல்லக் கேட்டோரும்
எல்லோரும் பரமானந்தமடைகின்றனர்.

இத்தகைய இனிய செந்தமிழ் நாவலை நீங்கள்
வாசித்துவிட்டீர்களா?

இன்றேல் இன்றே வாங்கி வாசித்து
இன்புறுங்கள்.

விலை ரூபாய் ஒன்றுதான்

சரஸ்வதி புத்தகசாலை,
ஜிந்துப்பிட்டித்தெரு
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org